வெளியீடு—29—11—1974]
Issued—29—11—1974]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1974 ஆகஸ்ட் 19

Monday 19th August 1974

தொகுதி LVIII—எண் 1

Volume LVIII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9,

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V2:11,31'N74
31N74.58;2
61673

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

ELEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

19*th* to 22*nd* August 1974.

VOLUME LVIII—(Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

*Monday,* 19*th August* 1974.

| | Pages. |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 1—35 |
| 2. Announcements— | |
| (*a*) Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 ... ... ... | 35 |
| (*b*) Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 .. .. .. .. | 35 |
| 3. Government Bills— | |
| (*a*) Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 ... ... ... | 35 |
| (*b*) Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974. | 36—50 |
| (*c*) Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 .. | 50—82 |
| (*d*) Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974. (L.A. Bill No. 29\|1974) .. ... | 83 |
| (*e*) Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) (L.A. Bill No. 26\|74) ... | 83—84 |

PAGES

Monday, 19th August 1974—*Cont.*

4. Government Resolution—
Ban on setting up of Private Allopathic Medical Colleges and regulation of such colleges already set up by an act of Parliament ... ... 84—109

5. Papers laid on the Table ... ... ... ... 109—110

*Tuesday, 20th August* 1974.

1. Questions and Answers .. .. .. .. 111—151
2. Privilege Matter—
Alleged leakage of Supplementary Budget for 1974-75 ... ... ... ... ... 151—160
3. Point of Order—
(*a*) Incorrect information given by Thiru Kovai Chezhian to the House ... ... ... 160—169
(*b*) Budget leakage of Pondicherry State .. 169—171
4. Demands for Supplementary Grants (First) 1974-75—General Discussion .. .. 171—238
5. Demands for Supplementary Grants 1974-75—Voting:

*A. Expenditure on Revenue Account.*

Demand No. 9—Head of State, Ministers and Head-Quarters Staff ... ... ...
Demand No. 11—District Administration ... ...
Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 239
Demand No. 13—Administration of Justice ...
Demand No. 16—Fire Service ... ... ...
Demand No. 17—Education ... ... ...
Demand No. 18—Medical ... ... ... 246
Demand No. 19—Public Health ... ... ...
Demand No. 20—Agriculture ... ... ...
Demand No. 28—Community Development Projects 241



PAGES

Tuesday 20 th August 1974—*Cont.*

5. Demands for Supplementary Grants 1974-75—Voting.—*cont.*

*A. Expenditure on Revenue Account.*—cont.

Demand No. 33—Urban Development ... ... 242
Demand No. 38—Roads and Bridges ... ...
Demand No. 39—Road Transport Schemes ... ...
Demand No. 40—Relief on account of Natural Calamities ... ... ...
Demand No. 41—Pensions and other Retirement Benefits ... ... ... 243
Demand No. 42—Miscellaneous ... ... ... 244
Demand No. 44—Forest Department ... ...

*B. Capital Expenditure outside the Revenue Account.*

Demand No. 50—Capital outlay on Irrigation ...
Demand No. 51—Capital outlay on Public Works—Buildings ... ... ...
Demand No. 53—Capital outlay on Road Transport Schemes ... ... ... 244
Demand No. 55—Miscellaneous Capital Outlay ... 239—245

*C. Disbursement of Loans and Advances and Repayment of Debt*

Demand No. 56—Loans and Advances by the State Government ... ... ... 256

6. Announcements—
Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 ... 245
7. Government Bill—
Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 ... 245—246
8. Papers laid on the Table ... ... ... ... 246—247

*Wednesday, 21st August* 1974.

1. Questions and Answers ... ... ... ... 253—284
2. Adjournment Motions—
(*a*) Acute scarcity of essential drugs and the exorbitant increase of prices of all drugs ... 284—289
(*b*) Boat tragedy in Cooum River ... ... 289—293
(*c*) Strike by Technical employees and Junior Engineers of Neyveli Lignite Corporation. 293—298

PAGES

Wednesday, 21st August 1974—*Cont.*


3. Calling Attention—
   Scarcity of drinking water in Madras ore particularly in Saidapet area .. .. 298—301

4. Points of Order—
   (*a*) Ministers' making statements then and there in response to Call Attention Notices ... 301—302
   (*b*) Need for discussion on Appropriation Bill ... 303—305
   (*c*) Non-introduction of Appropriation Bill in proper way ... ... ... ... 306—308
   (*d*) Constitutional propriety of discussion on Katchathivu by a Government Resolution. 308—310

5. Statement by Minister—
   Correction of answer to a supplementary question by the Local Administration Minister ... ... 302

6. Government Bill—
   Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 (L.A. Bill No. 41|74) ... ... ... ... 305—306

7. Government Resolution—
   Reconsideration and modification of Katchathivu Accord by Central Government ... .. 310—367

8. Papers laid on the Table ... ... ... ... 367—369


*Thursday, 22nd August* 1974.


1. Questions and Answers ... ... ... ... 371—399

2. Adjournment Motions—
   (*a*) Failure to take steps for the early release of Cauvery water from Krishnarajasagar ... 400—402
   (*b*) Strike by students in Stanley Medical College and closure of College and Hostel ... 402—405

3. Calling Attention—
   (*a*) Scarcity of drinking water in villages in Muthurangampatti panchayat, Kulithalai taluk ... ... ... ... ... 405—406
   **(*b*) Scarcity of drinking water in Uppidamangalam panchayat in Karur division ... ... 406—408**




PAGES

Thursday, 22nd August 1974—*cont.*


4. Points of Order—
   (*a*) Non-submission of a file to Hon. Speaker by Hon. Chief Minister as promised during the discussion on the Supplementary Demands for Grants ... ... ... 408—409
   (*b*) Properiety of expunction of entire discussion after a lapse of an hour and a half contrary to the earlier ruling to expunge only a word ... ... ... ... ... 464—465

5. Government Bills—
   (*a*) Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1974 ... .. ... ... 409
   (*b*) The Payment of Wages (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... ... 409—410
   (*c*) The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) as passed by the Legislature ... ... ... 410—432
   (*d*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No 33 of 1974) .. .. .. 433—444
   (*e*) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 35 of 1974) ... ... ... ... ... 444—464
   (*f*) The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974) ... ... ... ... ... 465—470
   (*g*) The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974) .. .. .. .. 470—471
   (*h*) The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No. 38 of 1974) ... ... 471—510

6. Papers laid on the Table ... ... ... 511—512

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், மூகம்மதியர் அறக் கட்டளைகள்.

8. **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்** : (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட மாநில, மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. **மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்** : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

10. **மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி** : (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

11. **மாண்புமிகு திரு. க. இராசாராம்** : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



12. **மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை** : (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள்.

13. **மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. **மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்** : (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப் படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language; Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes), in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Progamme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.



8. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees of Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. செ. கந்தப்பன்.
2. புலவர் சி. பழனிச்சாமி.
3. திரு. கே. பி. கந்தசாமி.
4. திரு. சி. வே. வேலப்பன்.
5. திரு. ஜே. ஜேம்ஸ்.
6. திரு. சோ. அழகர்சாமி.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி.

திரு. பால். கு. கந்தசாமி.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 | அபுசாலி, திரு. எம். எ. | புவனகிரி. |
| 3 | அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 | அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 | அரங்கநாயகம், திரு. செ. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 6 | அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 8 | அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 9 | அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 10 | அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 | அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 12 | ஆண்டி அம்பலம், திரு. எம். | மேலூர் வடக்கு. |
| 13 | ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 | ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 | ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 16 | ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர் |
| 17 | ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 18 | ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 19 | ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 20 | இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திகுளம். |
| 21 | இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 22 | இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. |
| 23 | இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 24 | இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 25 | இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 | இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 | இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ. |
| 28 | இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராமபட்டு |
| 29 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. . | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி.. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ் |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. . | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. அ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ. |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர் |
| 61 கார்த்தீசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ ) |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டிணம் |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன். திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்–1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோலையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணாயபுரம் (செ. |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை–மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி |
| 159 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கூ. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 191 மதியழகன், திரு. கே. எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. கீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

திங்கட்கிழமை, 1974 ஆகஸ்ட் 19.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில், காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

*Survey on incidence of Cancer and Leprosy.*

*** 147** *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether any survey has been conducted recently in Kanyakumari district on the incidence of Cancer and Leprosy ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்த ஆய்வுரையில் என்னென்ன முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன ? அவற்றிலே விசேஷமாக, தனியார்த் துறையில் இயங்கும் நிறுவனங்களுக்கு அதிக உதவி அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நெய்யூரிலுள்ள அனைத்து நாடுகள் புற்று நோய் நிலையம் இந்த ஆய்வுப் பணிகளை நடத்தி வருகிறது. அப்படி நடத்திய முறையில் நெய்யூர், பேரூராட்சியில் 1,743 வீடுகளைப் பார்வையிட்டு 5,984 பேர்களைப் பரிசோதனை செய்திருக்கிறது. கிள்ளியூர் பேரூராட்சியில் 1,395 வீடுகளைப் பார்வையிட்டு, 4,530 பேர்களைப் பரிசோதனை செய்தது. பரிசோதனை செய்யப்பட்ட 10,514 பேர்களில் 2,131 பேர் ஆடவர்; 4,052 பேர் பெண்டிர்; 4,331 குழந்தைகள். இந்த ஆய்வின்போது வாய்ப்புற்று நோய் பீடிக்கப்பட்டவர் எவருமில்லை என்று தெரிய வந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆயிரம் பேர்களில் 4-2 பேருக்குத் தொழுநோய் பீடித்திருந்தது. மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது குறித்து பதிவேடுகளைப் பார்க்கும்போது, தொழுநோய் பீடிப்பது குறைந்து வருவதாக, பரிசோதனை செய்ததில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, நெய்யூரில் இயங்கி வரும் புற்று நோய் இன்ஸ்டிட்யூட்டுக்கு அரசாங்கம் மானியமாக ஆண்டு தோறும் எவ்வளவு தொகை வழங்கி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

*Leprosy Hospital at Colachel.*

* 148 *Q.* THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether the Government are offering any financial assistance and technical assistance to the Leprosy Hospital at Colachel ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். நிதியுதவி அளிக்கப்படுகிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கொளச்சலில் இருக்கும் தொழுநோய் ஆஸ்பத்திரியில் உள் நோயாளிகளாக தொழு நோய் பிடித்து அனுமதிக்கப்படுகிறார்களே அவர்களுக்கு நபரொருவருக்கு அரசாங்கம் எவ்வளவு மானியம் வழங்குகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கெனவே, விதித்துள்ள முறைப்படி, பெரியவர்களுக்கு 25 ரூபாய் வீதமும், குழந்தைக்கு 12 ரூபாய் வீதமும் மாதமொன்றுக்கு வழங்கப்படுகிறது. இதை உயர்த்த வேண்டுமென்று அரசாங்கத்தினுடைய இந்தத் துறை ஆலோசனை வழங்கியிருக்கிறது. ஆனாலும், இது உதவித் தொகையே தவிர, முழுச் செலவுத் தொகை அல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நெய்யூரிலிருக்கும் இந்த தொழுநோய் ஆஸ்பத்திரியினர் அரசாங்கத்திலிருந்து தங்களுக்குக் கிடைக்கின்ற மானியம் போதாது என்று பல்லாண்டுகளாக அரசாங்கத்தை அணுகி வந்தும், இதுவரையிலும் அரசாங்கம் அவர்களுக்கு தரும் மானியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை, அந்த மருத்துவ நிலையத்தை தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்ற நெருக்கடியான நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழு நோய் ஆஸ்பத்திரி நின்றுபோகாதபடி, அதற்குத் தேவையான மானியத்தை ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது கொளச்சலில் உள்ள சார்லஸ் பீஸ் மெமோரியல் லெப்ரசி ஆஸ்பத்திரியைப் பற்றியது. இதைப் போல், தமிழ்நாட்டில் 25, 30 நிலையங்கள் இருக்கின்றன. எல்லா நிலையங்களுக்கும் ஏற்கெனவே வகுக்கப்பட்ட ஒரு



விகிதாசார அடிப்படையில் 'Infective cases, reconstructive cases and non-Lepromatous cases for tropic ulcer போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்டு உள்ளே சேர்க்கப்படுகிற நோயாளிகளுக்கு ஏற்கெனவ உரிய தொகை வழங்கப்பட்டு வருகிறது. பெரியவர் ஒருவருக்கு 25 ரூபாய் வீதமும், சிறுவருக்கு 12 ரூபாய் வீதமும் அளிக்கப்படுகிறது. அதை அதிகப்படுத்தலாம் என்று நலத்துறை ஆலோசனை கூறியிருக்கிறது. பொதுவாக இதைப் போன்ற எல்லாத் தொழு நோய் மருத்துவ நிலையங்களுக்கும் அந்த விகிதாசாரத்தில் வழங்க வேண்டும். அந்த ஆலோசனை நிதித் துறையின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோய் சிகிச்சை நிலையம் மாவட்டந்தோறும் இயங்கிவருகிறதா ? இல்லையென்றால், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அதை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தொழு நோய் சிகிச்சை நிலையங்கள் பல்வேறு வகையாக இன்றையதினம் செயல்பட்டு வருகின்றன. ஒன்று—தனியார் நடத்தும் தொழு நோய் மருத்துவ நிலையங்கள், இரண்டாவது—அரசாங்க மருத்துவ மனைகளில் தொழு நோய்க்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. மூன்றாவது—தொழு நோய் சிகிச்சை பரவலாக கிராமங்கள் தோறும் வழங்குவதற்கு யூனிட்டுகள் அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில், ஏறத்தாழ முக்கால் பங்கு இன்ஸிடென்ஸ் ஆப் லெப்ரசி எங்கு அதிகம் இருக்கிறதோ அந்த வட்டாரங்களில் படிப்படியாக பரவலாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமங்களிலேகூட மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் ஒரு முறையும் இருந்து வருகிறது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தொழு நோய் சிகிச்சைக்காக மறுவாழ்வு இல்லங்கள் பல நகரங்களில், பல முக்கியமான நகரங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், மதுரை போன்ற நகரங்களில் இருந்தும்கூட தொழு நோய் நோயாளிகள் அதிகமாக வெளியே உலாவுகிறார்கள். எனவே, அவர்களை எல்லாம் இந்த மறுவாழ்வு இல்லங்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? எல்லோரையுமே அப்படி மறு வாழ்வு இல்லங்களில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மறுவாழ்வு இல்லங்கள் என்ற பெயரால் நடைபெறுவது தொழு நோய் காரணமாக பிச்சை எடுக்கிறவர்கள், அப்படி பிச்சை எடுக்கிற நேரத்தில் மக்களிடையே அவர்கள் புழங்குவதால் அது பிறருக்கு நல்லதல்ல. எனவே அவர்கள் தனியாக தங்கி சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பளிக்கிற விதத்தில் தொழு நோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஏறத்தாழ பத்து இடங்களில் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் 450, 500 பேர்கள் தங்க இடவசதி செய்யப்பட்டிருக்கிறது. அவை

[1974 ஆகஸ்டு 19

களில் அந்த தொழு நோய் பிச்சைக்காரர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மற்ற தொழு நோய் பிடித்தவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு இன்றையத் தினம் ஓரளவு ஏற்பாடு இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தொழுநோய்க்காரர்களை வெளியே விட்டால் அது பரவும் என்ற காரணத்தால் உள்ளே கொண்டு வந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் உள்ளே இருக்கிற தொழு நோய்க்காரர்கள், உள்ளே ஜெயிலில் இருப்பது போன்ற விதத்தில் நினைத்துக்கொண்டிருப்பதாக கருதுவதுபோல் வெளியே கூறுகிறார்கள். அது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சிலபேர்கள் வீட்டில் இருப்பதைப் பார்த்துக் கூட அவர்கள் உள்ளே சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். மனைவியின் ஆணைக்கு அடங்கி சிறையில் வாழ்வது போல் கணவன் வாழ்கிறான் என்று சொல்லக்கூடும். ஆனால், தொழு நோய் பீடித்து பிச்சை எடுக்கிறவர்களுக்கு இதைத் தவிர வேறு என்ன வழி செய்யமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உள்ள படியே எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் இந்த அளவிற்கு வசதி செய்வது என்பதே ஒரு வியப்பான காரியம்.

**THIRU K. S. KOTHANDARAMIAH: A leprosy hospital was sanctioned for Hosur at a cost of Rs. 8 lakhs. Construction work was going on. But suddenly the work has been stopped; the reason said is that some business people have purchased surrounding lands and so the work has been stopped. Will the Hon. Minister see that the work of construction of the hospital is continued?**

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு விவரமோ, செய்தியோ எனக்குக் கிடைக்கவில்லை. ஒரு வேளை அப்படி தர்மபுரியில் ஒரு மருத்துவமனை கட்டக்கூடும். அது அவர்களுக்கு இருக்கிற நிதிவசதியைப் பொறுத்தது. அரசாங்கச் சார்பில் தனியாக எட்டு இலட்சத்தில் ஒரு மருத்துவமனை கட்டுவதாக என்னிடம் எந்தக் குறிப்பும் இதுவரையில் வரவில்லை.

கழுகுமலை, எட்டயபுரம் நீர் வழங்கு திட்டங்கள்.

*149 வினா—திரு. எம் முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கழுகுமலை, எட்டயபுரம் குடி தண்ணீர் திட்ட வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

கழுகுமலை குடிதண்ணீர் திட்டம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கழுகுமலை பேரூராட்சிக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தலைமைப் பொறியாளர், திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார்.



1974 ஆகஸ்டு 19]

திட்டத்திற்கான மொத்த அமைப்புச் செலவு ரூ. 22,50,000 எனவும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 87,500 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. வாரியத்தில் பரிசீலித்த பின்னர் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, அரசு அனுமதி கிடைத்தபின், விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதன் பின் வேலைகள் மேற்கொள்ளப்படும்.

எட்டயபுரம் குடிதண்ணீர் திட்டம்.

எட்டயபுரம் குடி தண்ணீர் திட்டத்திற்கான உத்தேச மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 25,26,000-க்கும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 66,120க்கும் அரசு 23—10—1973-ல் அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த விரிவான மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப அனுமதி கிடைத்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்படிப்பட்ட நீர் வழங்கு திட்டங்களை நிறைவேற்றுவதில் நீண்ட காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. காரணம், இன்வெஸ்டிகேஷனுக்குண்டான கட்டணத்தை ஊராட்சி மன்றங்கள் கட்ட வேண்டுமென்று நம்முடைய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதைக் கட்டுகிறோம் என்று அவர்கள் தீர்மானம் போட்டு அனுப்பிய பின்னரும் கூட திரும்பத் திரும்ப அதே கேள்வியை பல அதிகாரிகள் கேட்பதால் இவ்விதம் காலதாமதமாகிறது. உதாரணத்திற்கு, என் தொகுதியைச் சார்ந்த தென்திருப்பேரை ஊராட்சி மன்றத்தில் அந்த பைலையே பார்த்தேன். பல அதிகாரிகள் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் தீர்மானம் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். ஊராட்சிமன்றம் கட்டுகிறேன் என்று சொன்னவுடன் இன்வெஸ்டிகேஷன் வேலை உடனடியாகத் தொடர்ந்து கூடிய விரைவில் அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது ஒரு பொதுவான கேள்வி. இன்வெஸ்டிகேஷன் செய்வதில் காலதாமதமாகிறது என்று சொன்னார்கள். ஒரு இடத்திலிருந்து அந்த இடத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு பொதுவாக அதில் சில தடைகள் ஏற்படுகின்றன. தண்ணீர் கொண்டு வருவதில் எஸ்டிமேட்படி மிக அதிகம் செலவாகும் என்று தோன்றினால் அந்த ஊராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி மன்றம் அந்தத் தொகையை திருப்பி இருபத்தைந்து ஆண்டுகளில் கடனைத் திருப்பிக் கட்டமுடியாத சூழ்நிலை ஏற்படுமானால் அதனால் கூட தாமதம் ஏற்படுகிறது. ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்ட சிலயிடங்களில் கூட மக்கள் திரும்பச் செலுத்தவேண்டிய தொகை மிக அதிகம் என்பதால் மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி எங்கேயாவது இன்வெஸ்டிகேஷன்கூட ஆரம்பமாகவில்லை என்றால் ஏற்பாடு செய்யலாம்.

திரு. மு. இரத்தினசபாபதி : இந்த கழுகுமலை, எட்டயபுரம் குடிதண்ணீர் திட்டம் கோவில்பட்டி குடிதண்ணீர் திட்டத்திலிருந்து பிரித்து எடுப்பதாகத் தெரிகிறது. இடையிலுள்ள கிராமங்களையும் சேர்த்து அவைகளும் இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் விதத்தில் திட்டம் இருக்கிறதா அல்லது கழுகுமலை, எட்டயபுரம் மட்டும் இந்தத் திட்டத்தால் பயன் பெற இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒவ்வொரு திட்டமும் ஒரு குறிப்பிட்ட வேண்டுகோளின் அடிப்படையில் தொடங்கப்படுகிறது. இந்தத் திட்டம் கழுகுமலை, எட்டயபுரம் மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்காகும் செலவு 25 லட்சம் ரூபாய். இடையில் உள்ள கிராமங்களையும் சேர்த்து திட்டம் தீட்ட வேண்டுமென்றால் அது பெரிய திட்டமாகக் கூடும். அப்படியானால் கோவில்பட்டி திட்டமே பாதிக்கக் கூடும் ஒரு நிலை ஏற்படுகிறது. கோவில்பட்டி திட்டம் ஒரு கோடி ரூபாய் செலவிலான திட்டமாகும். அது எந்த வகையிலும் பாதிக்காமல் கழுகுமலை, எட்டயபுரம் போன்ற இடங்களுக்கு தண்ணீர் கொடுப்பதுதான் இப்போது பரிசிலனையில் இருப்பதாக அறிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா, கழுகுமலை, எட்டயபுரம் நீர் வழங்கு திட்டங்கள் பற்றியது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கழுகுமலை எட்டயபுரம் குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகிற காலத்தில் இடையில் உள்ள ஊர்களுக்கு தண்ணீர் கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் முடியாது என்ற கருத்தோடு பதில் சொன்னார்கள். ஆனால் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு டாப் வைத்தால்கூட அங்குள்ள மக்கள் ஒரு குடம் குடிநீர் எடுத்துக் கொள்வார்கள். அந்த வட்டாரம் பூராவும் உப்புத் தண்ணீராக இருக்கிறது. முன்பு குளத்திலிருந்து தண்ணீர் பிடித்து வந்தார்கள். இப்போது மழை இல்லாததால் குளங்களிலும் தண்ணீர் இல்லை. எனவே, நாலைந்து மைல்கள் சென்று உப்புத் தண்ணீரை எடுத்து வருகிறார்கள். மொத்தச் செலவு 25 லட்சம் ரூபாய் ஆகிறது என்று சொன்னார்கள். நடைமுறைச் செலவு 60,000 ரூபாய் ஆகிறது என்றும் சொன்னார்கள். பைப்ஸ் எல்லாம் கொண்டு வந்து போட்டிருக்கிறார்கள். எனவே, அத்திட்டத்தை நிறைவேற்றும் போது இடையில் உள்ள ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு டாப் வைத்து குடிதண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிச் செய்யமுடியுமா என்பது தான் பிரச்னை. எந்த நல்ல காரியத்தையும் செய்யலாம் என்று ஆசைப்படுவது இயற்கையே. இடையிலே இருக்கிற கிராமங்கள் என்று சொன்னால் எவ்வளவு இடங்களில் குழாய்கள் வைக்கும்படி ஏற்படும், எவ்வளவு தண்ணீர் வேண்டி இருக்கும். அந்தத் தண்ணீரையும் சேர்த்து நீரேற்றும் குழாயில் ஏற்றமுடியுமா ? அப்படியானால் கோவில்பட்டிக்கு வரும் தண்ணீர் பாதிக்கப்படுமா என்றெல்லாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு 25 லட்சம் ரூபாய் என்பது 45 லட்சம் ரூபாயாகி அதை அங்குள்ள





மக்கள் தருவார்களா அல்லது இடையில் உள்ளவர்கள் தருவார்களா என்பதெல்லாம் பிரச்னைக்குரியனவாகும். பொருளாதார வசதி மிகுதியாக இருக்குமானால் இவற்றையெல்லாம் அரசே தானாகவே செய்யலாம். இருக்கிற பொருளாதார வசதியைக்கொண்டு எதிர்காலத்தில் எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் திட்டங்கள் தீட்ட வேண்டியிருக்கிறது.

பொன்பரப்பி, சிருகளத்தூருக்கு நீர் வழங்கல்.

*150 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், பொன்பரப்பி, சிருகளத்தூர் முதலிய கிராமங்களுக்கு பக்கத்திலுள்ள வெள்ளாற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) and (இ) : இல்லை. ஆனால் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாமல்லபுர வளர்ச்சித்திட்டம்.

*151 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாமல்லபுரத்தைச் சுற்றி நகரை அழகுபடுத்தும் திட்டம் (Master Plan) ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : மாமல்லபுரத்தைச் சுற்றிலும் மாஸ்டர் பிளான் என்ற அடிப்படையில் ஒரு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். தொன்மைவாய்ந்த இந்த மாமல்லபுரத்தை யொட்டியே இப்போது இருக்கிற நகரம் அதன் தூய்மையைக் கெடுப்பதாக வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் கூறுகிறார்கள். தொன்றுதொட்டே அதில் ஐக்கியமாகிவிட்ட அந்த நகரத்தை என்ன செய்ய இருக்கிறது அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்ன செய்ய இருக்கிறது என்றால் அழகுபடுத்த இருக்கிறது என்று சுருக்கமாகப் பதில் சொல்ல முடியும். அழகுபடுத்துவது என்று சொன்னால் நகரத்தின் எதிர்கால வளர்ச்சி அமைப்பும், எந்தெந்தப் பகுதி எப்படி பாதுகாக்கப்பட வேண்டு மென்பதும் நகர அமைப்புத் திட்டத்தின் நோக்கம். ஆகவே, ஆர்ச்செய

லாஜிகல் பகுதியாக—பழம்பொருள் சின்னங்களாக இருக்குமானால் அந்தப் பகுதியாகவே அதைப் பாதுகாக்கப்பட வேண்டும். நகர வளர்ச்சிப் பகுதியாக ஏற்படுமானால் வீடு கட்டும் பகுதியாக அமைக்கப்பட வேண்டும். டூரிஸ்ட் தங்கக்கூடிய பகுதியாக இருக்குமானால் அதற்கேற்ற பகுதியாக அமைக்க வேண்டும். இதற்கு ஆலோசனை வழங்க வேண்டுமென்ற முறையில் ஆர்க்கியலாஜிகல் டிப்பார்ட்மெண்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு என்னென்ன துறைகள் சம்பந்தப்பட்டிருக்கிறதோ அவற்றின் ஆலோசனைகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கேள்விக்குக்கூட, நானே பதில் சொல்லுவது பொருத்தமானதா என்பது சந்தேகத்திற்குரியது. இதிலே ஆர்.டி.எல்.ஏ. சம்பந்தப்பட்டிருக்கிறது; டூரிஸ்ட் டிப்பார்ட்மெண்ட் சம்பந்தப்பட்டிருக்கிறது. நிர்வாக முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நகர வளர்ச்சி பற்றிக் கவனிப்பார். ஆலோசனை வழங்குபவர் டைரக்டர் ஆப் டவுன் பிளானிங். இப்படி பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

திரு ஆலடி அருணா: மாமல்லபுரத்தின் கலைச் சிறப்பைப் பயன்படுத்தி தனியார் சிலர் பணம் சம்பாதிக்க முற்படுகிறார்கள்.. பல நிறுவனங்கள் இப்படிச் சம்பாதிக்கின்றன. சென்னையில் அப்படி ஒரு நிறுவனம் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. அப்படிப் பணம் சம்பாதிக்க முற்படுவது சுற்றுலாத் துறையின் வருவாயைப் பாதிக்கும். ஆகவே, தனியார் இப்படிச் சுரண்டுவதைத் தடுக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: யார் யார் சுரண்டுகிறார்கள் என்று எனக்கு அவ்வளவாகத் தெரியாது. சுரண்டுவது என்பது எத்தனையோ வகையில் எங்கெங்கோ நடை பெறுகிறது. இரண்டாவது, இது டூரிஸ்ட் டிப்பார்ட்மெண்ட் நோக்கத்தைப் பற்றியதாகும். சுற்றுலாத் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் இதற்குப் பதில் அளிக்க வேண்டும். ஒரு அவுட்லைன் டெவலப்மெண்ட் நகர வளர்ச்சி சம்மந்தப்பட்ட வகையிலே ஆலோசனை வழங்கக்கூடிய இடத்திலே நான் இருக்கிறேன்.

திரு மா. வெ. நாராயணசாமி: மாமல்லபுரத்திற்கு ஏராளமான வெளிநாட்டுப் பயணிகள் வருகிறார்கள். அங்கு பெரியதொரு மாஸ்டர் பிளான் தயாரித்து பணிகளைத் தொடங்க காலதாமதமானாலும் மழைக் காலத்தில் ஊர் மத்தியில் தண்ணீர் தேங்கி நகரத்தின் மையப் பகுதி அசுத்தமான நிலைமையில் இருப்பது போன்ற குறைபாடுகளையாவது உடனடியாகக் களைந்து சுத்தமாக வைத்துக் கொள்ளத் தக்க அளவுக்கு மக்கள் நல்வாழ்வுத் துறையும் உள்ளாட்சித் துறையும் சேர்ந்து உடனடியாக நடவடிக்கை எடுத்து இதுபோன்ற வசதிகளை அந்தப் பகுதியில் செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: அதற்காக டவுன்ஷிப் கமிட்டி இருக்கிறது. அதனுடைய தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருக்கிறார். எனவே, அவருக்கு இந்தக் கேள்வியின் கருத்து தெரிவிக்கப்படும்.



திரு. எம். தேவராசன்: சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையே உல்லாசக் கப்பல் விடும் திட்டம் இருந்தது என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்வி இதிலே வராது.

திரு. கோவை செழியன்: அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி இந்தக் கேள்வி சிக்கலானது. டூரிஸ்ட் டிப்பார்ட்மெண்டும் இருக்கிறது, நலத் துறையும் இருக்கிறது. சென்னை மாநிலத்தில் இருப்பவர்களுக்குப் பொழுது போக்குக்கு இடம் கிடையாது. மாமல்லபுரத்தை நல்ல முறையில் அழகு படுத்தி ஒலி, ஒளி காட்சிகளை எல்லாம் அமைத்து டூரிஸ்டை அட்ராக்ட்பண்ணும் வகையில் அமைக்க முன்வருவார்களா? அதே போல் எண்ணூரில் ஒரு மர்மத் தீவு இருக்கிறது. அதை ஹவாய்த் தீவுமாதிரி அபிவிருத்தி செய்தால் வெளி நாட்டுக்காரர்கள் எல்லாம் வருவார்கள். அதற்கு வசதி வாய்ப்புகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அந்த மர்மத் தீவை ஹவாய்த் தீவு போல ஆக்க வேண்டுமென்றால் ஹவாய்த் தீவில் உள்ளவர்கள் இங்கு வரவேண்டும். கோவை செழியன் ஹவாய்த் தீவில் உள்ளவர்களை மர்மத் தீவுக்குக் கொண்டுவர வேண்டும். அது சற்றுக் கடினமாக இருக்கும். சுற்றுலா வளர்ச்சித் துறைக்குக் கிடைக்கக் கூடிய பொருளாதார உதவிகளைப் பொறுத்து இவற்றைச் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது.

## *New Radio Stations.*

* 152 Q. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :—

(*a*) whether the State Government have requested the Central Government recently to start new Radio Stations in this State; and

(*b*) if so, the places selected by the State Government?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(ஆ) தற்போது மதுரையில் ஒரு புதிய வானொலி நிலையம் துவக்குவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்திவருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இது எப்போது துவங்கும்? இந்த கரெஸ்பான்டென்ஸ் என்ன நிலைமையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நிதி நிலை இப்போதுள்ள நிலைபோல் தொடர்ந்து இருக்குமானால் உடனடியாக ஆரம்பிக்க முடியாது.

திரு. அ. தேவேந்திரன் : திருச்சிக்குப் போனால் சென்னை வானொலி எடுப்பதில்லை. சென்னைக்கு வந்தால் திருச்சி அதற்கு அப்பாலுள்ள வானொலி எடுப்பதில்லை. தமிழகம் பூராவும் கேட்கக்கூடிய அளவுக்கு வானொலி நிலையத்தை அமைக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போது நீங்கள் சொன்ன கருத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவது கஷ்டம். மத்திய அரசிடத்திலிருந்து அனுமதி பெற வேண்டும். கூடுமான அளவு விரைவில் செய்ய ஆவன செய்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாம் தொடங்குகிற ரேடியோ ஸ்டேஷனுக்கு மத்திய அரசு எவ்வளவு தொகை தருகிறது? மாநில அரசு எவ்வளவு செலவு செய்கிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதியும், நிதி பங்கீடும் பெற வேண்டியிருக்கிறது.

## தூத்துக்குடி உரத்தொழிற்சாலை.

*153. வினா : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலை அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் உற்பத்தி தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி : உற்பத்தியின் இறுதிக் கட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அளவுக்கு எத்தனை டன் உரம் உற்பத்தியாகும் என்று அரசாங்கம் எஸ்டிமேட் போட்டிருக்கிறது.? இதனால் உரப் பற்றாக் குறை எந்த அளவுக்குப் போகும்?

The Hon. Thiru S. MADHAVAN :

Ammonia 1,100 per day.

Urea 1,500 per day

DAP/NPK 600 per day.

Sulphuric Acid 420 per day.

Phosphoric Acid 165 per day.

தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு இவை கொடுக்கப்படும்.





திரு எ. சுவாமிதாஸ் : இந்த உரத் தொழிற்சாலைக்கு அரசாங்கம் கூடுதல் பகுதி மூலதனம் போட்டிருக்கிறது. உரத் தொழிற்சாலை நிர்வாகம் சிக்கனமான முறையில் நடந்தால் உரத்தைக் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால் தூத்துக்குடியில் இருந்து தினசரி ஒரு எ. சி. கோச் அவர்களுக்காக கன்னியாகுமரி எக்ஸ்பிரசில் சேர்க்கப்படுகிறது. அதற்காக நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு இந்தக் கணக்கை மட்டும் பார்க்கும்போது 7 லட்சத்திற்கு மேல் வருகிறது. இப்படிப்பட்ட வீண் செலவுகளைக் குறைத்தால் உரத்தின் விலை ஏறுவதைத் தவிர்க்க முடியும். இதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வீண் செலவு செய்யப்படுவதாக ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அந்தத் தொழிற்சாலையில் வெளி நாட்டுக்காரர்கள் ஏராளமாகப் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துதான் ஆக வேண்டும். அந்தத் தொழிற்சாலை வளர்ந்து வரும் விதமானது ஆசிய நாட்டிலேயே இந்தத் தொழிற்சாலை மிக விரைவாக உற்பத்தியைத் தொடங்குகின்ற முறையில் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது என்று எல்லோராலும் பாராட்டப் படுகிறது.

திரு. எ. எம். இராஜா : இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகக் கூடிய உரம் தனியாருக்குக் கொடுக்கக்கூடிய சட்டங்களை மாற்றி உரம் முழுவதும் நம்முடைய அரசாங்கத்திற்கே கொடுக்கிற முறையில் ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய முடியும். அரசு அதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த அருமையான யோசனையை நம்முடைய அரசு ஏற்கெனவே ஏற்று அறிவித்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் தயாராகும் உரம் முழுவதையும் தனியாருக்குக் கொடுக்காமல் அரசாங்கத் துறைக்கே கொடுக்க அந்த நிறுவனம் தயாராக இருக்கிறது. அரசு குறிப்பிடுகிற கூட்டுறவுத் துறை மூலமாகவும், ஸ்பிக் நிறுவனத்தின் சொந்த டெட்போ மூலம் கார்டு அடித்து ஆங்காங்கு தாசில்தார்கள் சர்டிபிகேட் கொடுத்து விவசாய உற்பத்தி செய்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதிலே கஷ்டம் என்னவென்றால், நாம் திட்டம் போட்டாலும் உற்பத்தியை யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை மத்திய அரசுதான் போட வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்கு உர உற்பத்தி செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உற்பத்தி செய்தாலும் விநியோக அதிகாரம் நம்மிடம்

[திரு. கே. கந்தசாமி] [1974 ஆகஸ்டு 19

இல்லை. அந்த உரிமை இல்லை என்பதை நாம் அத்தனைபேரும் உணருகிறோம். அப்படி போதிய அதிகாரத்தைப் பெற நம்முடைய அரசு முயற்சிக்குமா? உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தச் சட்டம் குறுக்கே நின்றாலும் அதை எதிர்த்து தீர்க்கமான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமது சட்டம் குறுக்கிட்டால் திருத்திவிடலாம். மத்திய அரசின் கொள்கை தடையாக இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதற்காகத்தான் 140 கோடி ரூபாயிலே ஸ்பிக் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியோடு கடலூரிலே பிரம்மாண்டமான உரத் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். அதற்கும் மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறோம்.

[முற்பகல் 9-30]

THIRU K. M. SUBRAMANIAM : Apart from these two Institutions of distribution, namely, the Government and the SPIC. Branches is there a proposal to distribute this product through other private institutions ? If so, are there applications coming for such appointments ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் விளக்கம் அளித்தேன். டிஸ்ட்ரிப்யூஷன் தனியார்கள் மூலம் செய்யப்பட்டால் தவறுகள் நடக்கும். ஆகவே, தனியார்கள் கூடாது என்று நம்முடைய அரசாங்கம் அறிவித்தது. அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரையில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ? இது முடியும்பொழுது செலவிடப்போகின்ற தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செலவு விவரம் இல்லை. ஆனால், மொத்தமாக எவ்வளவு ஆதரைஸ்ட் கேபிடல் என்று பார்க்கும் பொழுது சுமார் 35 கோடி என்று இருக்கிறது. இந்த எஸ்கலேஷன் பிரைஸஸ் அபரிமிதமாக ஏற்பட்டிருக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நாப்தா மூலப் பொருளை இறக்குமதி செய்கிறோம். அதன் விலையும் ஏறியிருக்கிறது. ஜப்பான், யு. கே. இரண்டு நாடுகளும் ஏராளமான உதவிகளைச் செய்கிறார்கள். ஆனால் எஸ்கலேஷன் காரணமாக விலை ஏறி இருக்கிறது. மொத்தமாக காஸ்ட் ஆஃப் புராஜக்ட் அதிகமாகியிருக்கிறது என்பது உண்மை. அப்படியிருந்தும் உற்பத்தி செய்யும் உரம் மிகவும் நல்ல முறையில் பயன்படும் என்று தெரிகிறது.



1974 ஆகஸ்டு 19]

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, மத்திய அரசிடமிருந்து எவ்வளவு உரம் பெறுவது, எந்த அடிப்படையில் பெறுவது என்பதற்கான அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு முன்பாக கார்டுகள் மூலம் கொடுப்பது, கன்ஸ்யூமர்ஸ் சொசைட்டி அமைப்புகளை ஏற்படுத்துவது ஆகியவைகளைச் செய்துவிட்டால் நாளைக்கு மத்திய அரசு மறுத்தால்................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொள்கைகளைப்பற்றிச் சொல்லாதீர்கள்.

திரு. ஆலடி அருணா : மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறுவதற்கு முன்னால் கன்ஸ்யூமர்ஸ் சொசைட்டிகளை அமைப்பது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி போட வேண்டுமே தவிர, அமைச்சர் சொன்ன விடைக்கு விளக்கம் என்று இப்படிச் சொன்னால் எப்படி அனுமதி கொடுக்க முடியும் ?

திரு. ஆலடி அருணா : உர சம்பந்தமாக மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்கு முன்னால் கார்டு முறை, கன்ஸ்யூமர்ஸ் சொசைட்டி அமைத்தல் போன்றவைகளைச் செய்துவிட்டால் பிறகு மத்திய அரசு மறுத்து விட்டால் தமிழக அரசுக்குக் கெட்ட பெயர் வராதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நல்ல கருத்துக்களை ஏற்கெனவே ஏற்றுக்கொண்டிருக்கிறது. அட்டைகள் தயாரிக்க ஒவ்வொரு விவசாயியைப் பற்றிக் குறிப்பெடுத்து நாமே தயாரிக்க வேண்டும். அதற்குப் பிறகு மத்திய சர்க்கார் அதற்கு அனுமதி மறுத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். நம்மைப் பொறுத்த வரையில் ஸ்பிக் நிறுவனத்தோடு அந்தப் பகுதி விவசாயிகளெல்லாம் இணைந்து செயல்படும் முறையைப் பரிசீலிக்க வேண்டுமென்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதற்கு 35 கோடி மூலதனம் என்று சொன்னார்கள். இதில் அரசாங்கத்தின் மூலதனம் எவ்வளவு சதவிகிதம் ? தனியார் மூலதனம் எந்த அளவில் இருக்கிறது ? அதே நேரத்தில் மத்திய சர்க்கார் இதில் மூலதனம் போட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே இந்த மன்றத்திலே விரிவாக விளக்கம் தரப்பட்டிருக்கிறது. நாம் போடும் மூலதனம் 5 கோடிக்கும் குறைவு. பப்ளிக் இன்ஸ்டிடியூஷன் என்ற முறையில் மத்திய அரசுக்குச் சொந்தமான இன்ஸ்டிடியூஷனாக இருந்தாலும் நமக்குப் பங்கிருக்கும் முறையில் நாமும், மத்திய அரசும் சேர்ந்தால் நாம்தான், அரசாங்கம்தான் அதிகம். அரசுப் பொறுப்புதான் அதிகம்.

[1974 ஆகஸ்டு 19

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தத் தொழிற் சாலையிலே உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்யும் நேரத்தில் 500 ரூபாய் சம்பளத்திற்கு மேற்பட்டவர்கள் பிராந்திய பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற கருத்தை நல்கியிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கூட்டுத் துறையிலே இது ஒரு லாபம். நடைமுறை எப்படி எப்படி இருக்க வேண்டுமென்று விதி நிர்ணயம், எந்தெந்த மாவட்டத்தில் எவ்வளவு பேர் சேர்க்கப் பட்டார்கள், பின் தங்கிய மக்கள் எவ்வளவு என்று ஏற்கெனவே இந்த மன்றத்திலே பதில் கூறும்பொழுது கூறப்பட்டிருக்கிறது. முறைப் படி நடக்கிறது. நாம் இப்போது 80 சதவிகிதம் தமிழக மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவையும் போட்டிருக்கிறோம். நம்முடைய செயலாளர் அவர்கள் ஸ்பிக் நிறுவனத்திற்குச் சென்று 80 சதவிகிதம் என்பது பின் பற்றப்படுகிறதா என்பதைப் பற்றிப் பார்த்து வந்து நேற்று சொன்னார்கள். முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது என்று அறிக்கை தரப் போகிறார்கள்

## தூத்துக்குடியில் உப்பு உற்பத்தி.

* 154 வினா—திரு. இரா. இராமலிங்கம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடியிலும், அதைச்சுற்றிலும் நெல்லை மாவட்டத்தில் எத்தனை ஏக்கரில் உப்பு உற்பத்தியாகிறது ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு உப்பு உற்பத்தியாகிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சுமார் 12,870 ஏக்கர் நிலங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

(இ) சுமார் 10,70,000 டன்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, தூத்துக்குடியில் பலப் பல தொழிற்சாலைகள் உப்பை வைத்துத் தொடங்கியிருப்பதை இந்த அரசு உணர்ந்தும் அங்கே கெமிகல் சால்ட் அதிகமாக உற்பத்தி செய்யப்படாமல், காமன் சால்ட்தான் அதிகமாக உற்பத்தி செய்யப்படு கிறது. தொழிற்சாலைகளுக்கு கெமிகல் சால்ட் வெளியிலிருந்து இறக்கு மதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. எனவே, கெமிகல் சால்டை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உப்பு உற்பத்தியைப் பற்றிய கேள்வி. இரசாயன உப்பைப் பற்றி என்னிடத்தில் கேள்வியில்லை.



1974 ஆகஸ்ட் 19]

## புதுக்கோட்டையில் ரேயான் பட்டுத் தொழிற்சாலை.

* 155 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ரேயான் பட்டுத் தொழிற் சாலை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), and (இ) புதுக்கோட்டை மாவட் டத்தில் ரேயான் தொழிற்சாலை ஒன்று அமைக்க மத்திய அரசுக்கு இசைவு கடிதம் தருமாறு " டிட்கோ " விண்ணப்பித்திருக்கிறது. மத்திய அரசின் முடிவுக்காக காத்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பல தொழிற்சாலைகள் பலயிடங்களில் உருவாக்கப்பட்டாலும் தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக மாயூரத்தில் எந்தத் தொழிற்சாலையும் உருவாக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது. எனவே அங்கே ஒரு பட்டுத் தொழிற்சாலையை உருவாக்க முடியாவிட்டாலும் ஒரு ரெட்டுத் தொழிற்சாலையையாவது உருவாக்க அமைச்சரவர்கள் ஆவன செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ரெட்டுத் தொழிற்சாலை என்பது என்ன என்று தெரியவில்லை. அங்கே ஏற்கெனவே ஒரு நூற்பாலை இருக்கிறது. புதிதாக சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு முடிவு எடுத் திருக்கிறோம்.

திரு. கு. திருப்பதி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில், ரயான் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கும் திட்டம் இருந்ததே, அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தொழிற்சாலைக்கு 10 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டோம். ஜப்பானின் தொழில் நுட்ப அறிவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் கடைசிக் கட்டத்தில் மத்திய சர்க்கார் அனுமதி மறுத்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know, Sir, from the Hon. Minister for Industries whether raw materials and other facilities are available in Pudukkottai to start Rayon Factory there ?

The HON. THIRU S. MADHAVAN : That point was examined. The Forest Department has promised to supply raw materials for this industry.

அகில இந்திய கைத்தறிக் கழகம்.

* 156 வினா—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

All India Handloom Board -ன் தலைமைச் செயலகத்தினை தமிழ்நாட்டிற்கு மாற்றுவது குறித்து தமிழ்நாடு அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

*Candidates for Survey Training.*

* 157 *Q*— THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) whether some persons have been selected for Survey Training by the Assistant Director of Survey at Nagercoil in October-November 1973 in Kanyakumari district;

(*b*) whether that selection was made through Employment Exchange ;

(*c*) whether any notification for selection was made ;

(*d*) the number of persons from the Backward Classes selected ; and

(*e*) whether the ratio for Backward Classes has been strictly adhered to, and if no, whether a fresh selection will be made through the Employment Exchange by cancelling the previous selection ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். நேரிட அளவையாளர்கள் பயிற்சிக்காக 11 பேரும், வரைபட வரைவாளர் பயிற்சிக்காக 10 பேரும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

(இ) இல்லை.

(ஈ) இல்லை.



(ஏ) நேரிட அளவையாளர்கள் பயிற்சிக்காக பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த நான்கு பேரும் வரைபட வரைவாளர் பயிற்சிக்காக பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மூன்று பேரும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

(ஒ) இந்த தேர்வில், பின்தங்கிய வகுப்பினர்களுக்கான விகிதாச்சாரம் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டது. எனவே, முன்னர் செய்ததை ரத்து செய்துவிட்டு, புதிதாக நபர்களைத் தெரிந்தெடுக்கும் பிரச்சினை எழவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் :—தலைவரவர்களே, இரகசியம் இரகசியமாக இந்தத் தேர்வு நடந்திருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் இதற்கு நோட்டிபிகேஷன் கொடுக்கவில்லை என்ற ஒரு புகார் இருக்கிறது. இனிமேலாவது இம்மாதிரி தேர்வு நடக்கும் நேரத்தில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக அபேட்சகர்களை வரவழைக்க அரசு உத்தரவு நல்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :—As the training imparted is at the cost of the candidates without guarantee or assurance to their employment after the successful completion of the training, this procedure has been adopted.

வேலைக்கு உத்தரவாதம் இல்லை. அந்த டிரெயினிங்குக்கு வரக்கூடியவர்கள் தங்கள் சொந்தச் செலவிலே டிரெயினிங் எடுக்க வேண்டும். வேலைக்கு எடுக்கும் பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் தான் எடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு இது போன்ற நிலைமைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் :—தலைவரவர்களே, அங்கே வெளி மாவட்டங்களிலிருந்து பெரும்பான்மையான அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். அதிலும் அங்குள்ள உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டியவர்களை எடுத்திருக்கிறார்கள் என்ற புகார் எனக்கு வந்திருக்கிறது. மேலும் இம்மாதிரி தவறுகள் நடக்காமல் அரசாங்கம் பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :—அப்படிப்பட்ட புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படிப் புகார் ஏற்படாமல நடக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ்:—தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் வழியாகத்தான் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருப்பதாகக் கூறினார்கள். இந்த அதிகாரி அந்த உத்தரவை மீறி செயல்பட்டிருக்கிறார்களே, அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கையை மே, கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்டு 19

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொன்னதுபோல, டிரெயினிங் மட்டும்தான், வேலைக்கு உத்தரவாதம் இல்லை. அந்த காண்டிடேட் சொந்தச் செலவிலே டிரெயினிங் எடுக்கவேண்டுமென்று இருக்கிறது. வேலைக்கு நியமிக்கும்பொழுது எம்ப்ளாய்மெண்ட் எக்ச்சேஞ்ச் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது விதிமுறை. அந்தச் சட்டத்தை மீறவில்லை. இந்த வகையிலே டிரெயினிங்கிற்காக 11 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

*Assistance for Renovation of Mosques.*

* 158 *Q*.:— THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) whether any financial assistance has been given by the State Government for the renovation of Mosques in this State in recent times ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டிலுள்ள வருமானமில்லாத, வசதி குறைந்த வக்பு நிறுவனங்களை பழுது பார்த்தல், புதுப்பித்தல் முதலியவற்றுக்காக அரசு ஒரு லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இந்த தொகை வக்பு வாரியத்தால் 23 வக்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு மேலும் மூன்று லட்ச ரூபாய் இதே நோக்கத்திற்காக அரசு வழங்கியுள்ளது. இத்தொகையை வக்பு வாரியம் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

கிராம அதிகாரிகள்

* 159 வினா— திரு. கு. இராசமாணிக்கம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழ் புலவர் தேர்வு பெற்றவர்கள் எவரேனும் கிராம அதிகாரிகளாகப் பணியாற்றி வருகின்றனரா ?

(இ) ஆமெனில், அவர்களுக்கு அதிகப்படி ஊதியம் தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) இல்லை.



1974 ஆகஸ்டு 19]

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்

* 160 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் :
திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டிலுள்ள பெரிய பஞ்சாயத்து யூனியன்களை பிரித்து மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) ஊராட்சி ஒன்றிய எல்லைகளைப் பெருவாரியாக மாற்றவேண்டிய அவசியமில்லையென்று, நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு, அதன் ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம் பற்றிய அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. இதனை அரசு ஏற்று, அதற்கேற்ப ஆணைகளை பிறப்பித்துள்ளது. இருப்பினும் பரந்த அளவிலுள்ள எந்த வட்டாரத்தையும் பிரிக்கவேண்டிய தேவையை அரசு ஆய்வு செய்யும். இது போன்ற வட்டாரங்களை ஆய்வு செய்து, அரசிற்கு அறிக்கை அனுப்புமாறு ஊர் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளபட்டு இருக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சில ஊராட்சி ஒன்றியங்கள் 50 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக்வும், சில ஒன்றியங்கள் 25 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாகவும், இப்படி பல நிலைமைகளில் இருக்கின்றன. இப்படி பெரிய ஒன்றியங்களாக இருப்பதால் திட்டப்பணிகளும், ஆக்கப்பணிகளும் நிறைவேற்றப்படுவது சிரமமாக இருக்கிறது. ஆகவே, அவற்றை விரைவில் ஆய்வு செய்து பிரிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 375-க்கு மேல் இருக்கக்கூடாது என்று மத்திய சர்க்கார் ஒரு வரம்பு நிர்ணயித்துள்ளது. அதன்படி கல்ராயன் மலை தவிர மற்றப் பகுதிகள் 374 ஒன்றியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் பல 60 ஒன்றியங்களாகவும், 14 ஒன்றியங்களாகவும் இருக்கின்றன. இவைகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் அனுப்பியபோது, அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 374–ஐ எப்படி வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு தமிழக அரசே சமீபத்தில் பரிசீலித்து, தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் எவையெவை என்பதைக் கேட்டு, அதைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பை அனுப்புமாறு ஊராட்சி வளர்ச்சி இயக்குனர்

[1974 ஆகஸ்டு 19

அவர்களைக் கேட்டு, அவர்களும் இப்போது 10-க்கு அனுப்பிருக்கிறார்கள். அவைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இனி நாம் அதைப் பிரிப்போமானால் அதற்கான செலவையும் நாம் ஏற்கவேண்டும். மத்திய சர்க்கார் இதற்கு பொறுப்பு இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் 375 ஊராட்சி ஒன்றியங்களில் சில ஒன்றியங்கள் பரப்பளவில் பெரியனவாகவும், சிறியனவாகவும் இருக்கின்றன. அவற்றைப் பிரித்து தகுந்த பரப்பளவில் செய்கின்ற வகையில், பெரிய ஒன்றியங்களாக உள்ளவைகளில் கொஞ்சம் பிரித்து, சிறிய ஒன்றியங்களுடன் இணைத்து, எல்லா ஒன்றியங்களும் சீரான பரப்பளவும், மக்கள் தொகையும் உள்ள வகையில் செய்வதற்கு அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பிரிப்பதற்கான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. சமீபத்தில் கும்முடிப்பூண்டி, உத்திரமேரூர், திருவரங்குளம் போன்ற ஒன்றியங்கள் மிகப் பரந்த அளவில் இருக்கின்றன என்பதால் அவைகளைப் பிரிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அது சம்பந்தமாக ஊராட்சி வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

திரு. மூனா ஆதி : தலைவரவர்களே, நாம் சட்ட மன்றத் தொகுதிகளை அதிகப்படுத்தவேண்டும், 280 தொகுதிகளுக்குக் குறையக்கூடாது என்று ஒரு தீர்மானமே சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றி அனுப்பி வைத்து இருக்கிறோம். அதுபோன்று மத்திய அரசுக்கு இந்த ஊராட்சி ஒன்றியங்களையும் அதிகப்படுத்தவேண்டுமென்று வலியுறுத்தி சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பலாம். அதற்கு அத்தனைக் கட்சிகளைச் சார்ந்தவர்களும் போராடத் தயாராக இருக்கிறோம். அந்த வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மத்திய அரசாங்கம் அனுமதி வழங்காமல் இருந்தும் கூட, இப்போது பரப்பளவில் பெரியதாக இருக்கும் ஒன்றியங்களைப் பிரிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது. கனம் உறுப்பினரின் யோசனையும் சரியான யோசனை. அதைப் பற்றியும் பரிசீலிக்கலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, பஞ்சாயத்து யூனியன்கள் பெரியதாக இருப்பது போல், சில பெரிய பஞ்சாயத்துக்களும் இருக்கின்றன. அவைகளைப் பிரிக்கவேண்டுமென்று மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களைப் பிரிக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் ஏதேனும் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறதா ? அப்படியில்லையென்றால், பிரிக்கக் கோரி வந்த மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?



1974 ஆகஸ்டு 19]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பெரிதாக உள்ள ஒன்றியங்களைப் பிரிக்கவேண்டுமென்று அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் சிலவற்றைப் பிரிக்கலாம் என்று பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அவைகளுடைய குறிப்புகளும் இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் "டி-லிமிடேஷன் கமிட்டி" விரைவில் வர இருக்கிற காரணத்தால் 31—12—1974 வரையில் அப்படிப்பட்டவைகளைப் பிரிக்கக்கூடாது என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. 31—12—1974-க்கு மேல் அவைகளைப் பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 10 ஒன்றியங்கள் என்று சொன்னார்கள். மாவட்ட வாரியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த ஒன்றியம் வரும் என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அது மாவட்ட அளவிலே இல்லை. எவையெவை எடுக்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபாரிசு செய்கிறார்கள். அவைகளைப் பற்றி அரசு பரிசீலிக்கிறது. அது மாவட்ட வாரியாகப் பிரிக்கப்படுவது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் 10 ஒன்றியங்கள் பிரிக்க இருப்பதாகச் சொன்னார்கள். பெரிதாக இருக்கின்ற ஒன்றியங்களை மீண்டும் தனித்தனியாக தகுந்த அளவிலுள்ள ஒன்றியங்களாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 10 ஊராட்சி ஒன்றியங்கள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவரமான குறிப்பு என்னிடத்தில் இப்போது இல்லை. பிறகு தெரிவிக்கப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, பெரிய பரப்பளவு பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதற்கு அரசு அது சம்பந்தமான உத்தரவு பிறப்பித்து இருப்பதாகச் சொன்னார்கள். 3—4 மைல் தொலைவிலுள்ள சிறு சிறு கிராமங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, ஊராட்சிகள் அமைக்கப்பட்டு இருப்பதால் குடிதண்ணீர் போன்ற வசதிகள் சில கிராமங்களுக்குச் செய்யமுடியாமல் போய்விடுகிறது. இதனால் முழு கிராமமுமே வளர்ச்சி அடையாமல் போய்விடுகிறது. ஆகவே, இப்படி ஊராட்சிகள் அமைப்பதற்கு ஏதேனும் தூரக்கட்டுப்பாடு—அதாவது 2 மைல் மாத்திரம் இருந்தால் போதும்—வைத்து அந்த கிராமங்கள் இணைக்கப்படவேண்டுமென்று ஆலோசனை கூறும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

[1974 ஆகஸ்டு 19

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பதிலையே மாற்றிச் சொல்கிறார்கள். பெரிய ஊராட்சி ஒன்றியங்களைத்தான் பிரிப்பதாகச் சொன்னேனேயல்லாமல் ஊராட்சிகளைப் பிரிப்பதைப் பற்றிச் சொல்ல வில்லை. அது பெரிய பிரச்னை. அதற்காக ஒரு தனிக் குழு நியமிக்கப் பட்டு, அது இதைப் பற்றி பரிசீலனை செய்து வருகிறது. பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்குத்தான் அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று சொன்னேன். பெரிய ஊராட்சிகளைப் பிரிப்பது பற்றி நான் சொல்லவில்லை.

### *Daily allowance for Panchayat Union Council Members.*

* 161 Q. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal to increase the daily bata of Panchayat Union Council Members for attending the meetings of the Panchayat Union Councils?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தற்போது வழங்கப்படுகிற நாள் படி எவ்வளவு? எப்போது நிர்ணயிக்கப்பட்டது? எவ்வளவு உயர்த்துவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்கிற ஊராட்சி மன்றத் தலைவருக்கு, அவருக்கு வருகிற பயணப்படி போக, சிட்டிங் பீஸ், அதாவது அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டதற்கு என்று தனியாக ரூ. 5 அளிக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதைப் போலவே இதுவரையில் ரூ. 100 பெற்று வந்த ஒன்றியத் தலைவர்களுக்கு படி ரூ. 200 வழங்கலாம் என்று இப்போது ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

திரு. மா. வே. நாராயணசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு இங்கே அலவன்ஸ் வழங்கப் படுவது பற்றிச் சொன்னார்கள். அதைப்போலவே நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் இந்த சிட்டிங் பீஸ் அளிக்கவேண்டுமென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறதே, அது குறித்து எடுத்த நடவடிக்கை என்ன? மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் கூட அளித்தார்கள். நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. ஆகையால், இதை இனி யாவது அரசு பரிசீலிக்குமா?



1974 ஆகஸ்டு 19]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஊராட்சிமன்றத் தலைவர்கள் பல கிராமங்களிலிருந்து வரவேண்டிய கட்டாயம் உள்ளது. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. நகர மன்ற உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமையில்லை. அதை கௌரவமாக அவர்கள் கருதுகிற காரணத்தால், அது தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. கு. பெரியசாமி: தலைவரவர்களே, இப்போது படி வழங்கு வது ரூ. 5 என்று சொன்னார்கள். அந்த ரூ. 5 எவ்வளவு தூரம் போதும்? எத்தனை மைல் டிராவல் செய்தாலும் அந்த ரூ. 5 தானா? டிராவலிங் அலவன்ஸ், சிட்டிங் பீஸ் ஒட்டுமொத்தமாக எவ்வளவு கொடுக்க லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அவர் களுக்கு டிராவலிங் அலவன்ஸ் என்பது சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு 3 மைல், 4 மைல், 5 மைல், 12 மைல் தூரத்திலிருந்து வரவேண்டி யிருப்பதால் கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு அதற்கு தனி அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அது அன்னியில் சிட்டிங் பீஸ் ரூ. 5 கொடுக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு சட்டப் பேரவை உறுப்பினர்களும் போகிறார்கள். சில இடங்களில் 15—20 மைல் கூட போகவேண்டி யிருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது படி கொடுக்க அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இந்த ஊராட்சி மன்றத் தலைவருக்கு சிட்டிங் அலவன்ஸ் கொடுப்பது போக, தனி யாக பிரயாணப்படி கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எத்தனை மைல் தூரத்திலிருந்து வருபவர்களுக்கு என்ற தூர நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162 ஒத்திவைக்கப் படுகின்றது.

[1974 ஆகஸ்டு 19

*Linking of Palavilai and Vellivilai roads.*

* 163 *Q.* THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) whether there is any proposal to construct a bridge at the Alench Vaikal to connect the Palavilai road with the Kattukadai Vellivilai road in Karunkal Town Panchayat in Killiyoor Panchayat Union under the village road development scheme or link roads or under any other scheme ;

(*b*) whether the construction of this bridge has been recommended by the Karunkal Town Panchayat ; and

(*c*) when the work will be taken up for execution ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) தேவைப்படுகிற பட்டா நிலத்தை சம்பந்தப்பட்ட ஊராட்சி வழங்கி இப்பணிக்காக ஊராட்சி தனது பங்குத் தொகையைச் செலுத்திய பிறகு இப்பணி ஊராட்சி ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இது சம்பந்தமாக பஞ்சாயத்தி லிருந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பியிருப்பதாக நான் அறிகிறேன். அது சம்பந்தமாக துரிதமாக நடவடிக்கை மேற் கொள்வதற்கு இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது குறித்து தலைமைப் பொறியாளரைக் கலந்தாலோசித்தபொழுது, அவர், இப்பாலம் மிடாளம் சாலையின் 1/6 கி. மீட்டரில் பிரிந்து சென்று அலஞ்சி வாய்க்காலில் முடிவடைகின்ற பாலவிளைச்சாலையின் (கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்) 0/8 ஆவது கிலோ மீட்டரில் உள்ளது என்று கூறியுள்ளார். இதற்கு மறுபுறத்தில், கரிங்கல் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்ற ஆலங்குளம் சாலை என்னும் பெயரில் ஊராட்சி சாலை ஒன்று உள்ளது. இச்சாலை, 1·00 கி. மீட்டர் நீளமுள்ளது. இச்சாலையானது, காட்டுக்கடை—சித்தாலங்குளம் சாலையின் 0/4-வது கி. மீட்டரில் பிரிந்து அலஞ்சி வாய்க்காலில் முடிவடைகிறது. இந்தப் பாலத்தைக் கட்டி முடிக்க சுமார் ரூ. 50,000 செலவாகும். இச்செயற்குறிப்பு ஏற்பளிக்கப்பட்ட



1974 ஆகஸ்டு 19]

எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. இந்தப் பாலம் கட்டுவதற்குத் தேவையான மூன்று செண்ட் பட்டா நிலம் இன்னும் கிடைக்கப் பெற வில்லை. ஊராட்சி தேவையான பட்டா நிலத்தை வழங்கிய பின்னரும், இப்பணிக்கான தொகையைச் செலுத்திய பின்னரும்தான் இப்பணி ஊராட்சி ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

*Representations from Beedi Workers.*

* 164 *Q.* THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(*a*) whether the representatives of the Madras City Beedi Workers met him about the 23rd January 1974 ;

(*b*) if so, the details of representations made by them ; and

(*c*) the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) ஆம்.

(இ) இவ்விண்ணப்பத்தில் 11 கோரிக்கைகள் உள்ளன. முக்கிய மான கோரிக்கை தென் பிராந்தியத்தில் 1,000 பீடி சுற்றுவதற்கு ரூ. 5·50 வீதம் அடிப்படை கூலி நிர்ணயம் செய்வது. மற்ற முக்கிய கோரிக்கைகளாவன : பஞ்சப்படி வழங்குதல், பண்டிகை விடுமுறை நாட்கள், குறைந்த பட்ச போனஸ், ஆண்டு விடுப்பு வழங்குதல், பெண் களுக்கு பேறுகால விடுப்பு வழங்குதல் முதலியவை.

(உ) இக்கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. க. உரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இது பற்றி அந்த பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற உரிமையாளர்களையும், அரசாங்கத்திலே இருக்கிற தொழில் துறையின் அதிகாரிகளையும் கூப்பிட்டு கலந்து பேசுவதற்கு ஏதாவது உத்தேசம் இந்த அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் பொழுது பேச்சு வார்த்தைகள் மூலமாகப் பல கோரிக்கைகள் பேசப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. சில கோரிக்கைகள் பற்றித் தான் இன்னும் முடிவு ஏற்பட வேண்டும் என்ற நிலைமைகள் இருக் கின்றன. அவை பற்றியும் கலந்து பேசி ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வர முடியும் என்று இந்த அரசு கருதுகிறது.

[1974 ஆகஸ்டு 19

திரு. கே. என் குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பீடித் தொழிலாளர்களுடைய கோரிக்கையைப் பற்றி ஏற்கனவே பேசி பல அம்சங்களில் அமுலாக்கப்படவில்லை. இப்பொழுது பீடி விலையை முதலாளிகள் உயர்த்தியிருக்கிறார்கள். இன்றைக்கு அதனால் பீடி முதலாளிகளுக்கு நல்ல வருமானம் வருகிற இந்த நேரத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு கூலி, போனஸ், லீவ் போன்ற பிரச்சினைகளை உடனடியாகப் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் எதிர்பார்க்காத அளவுக்கு பேச்சு வார்த்தைகள் மூலமாக நல்ல கூலியைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பேச்சுவார்த்தைகளின் பொழுதே இந்தக் கூலி கொடுத்தால் பீடி விலையை உயர்த்த வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை வரும் என்பதைத் தொழிலாளர்களும் நன்கு அறிவார்கள். ஆகவே, அப்படி அறிந்த பிறகு தான் இரு தரப்பினர்களும் ஒத்துக்கொண்டதன் காரணமாகத்தான் பீடி விலை உயர்த்தப் பட்டிருக்கிறது. இதிலே பிரச்சினை என்னவென்றால் நம்முடைய மாநிலத்திலுள்ள பீடிகள் வெளி மாநிலங்களுக்குப் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. அடிக்கடி பீடி விலையை உயர்த்திக்கொண்டு போனால் மார்க்கெட்டைப்பிடிக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் இம்மாதிரி சுமுக நிலை நீடித்திருப்பதற்கு உண்டான வகையில் இந்தத் தொழிற் சங்கங்கள் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது 11 கோரிக்கைகள் இந்தப் பீடித் தொழிலாளர்களினால் வைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். அதிலே இதுவரையில் அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிற கோரிக்கைகள் யாவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வேலை நிறுத்தத்தின்போது நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் மூலமாக, 1,000 சாதா பீடிகள் சுற்றுவதற்கு கூலி ரூ. 4.05 என்று நிர்ணயிக்க வேண்டும் என்றும், ஜாதி பீடி 1,000 சுற்றுவதற்கு ரூ. 4.30 என்றும் முடிவெடுக்கப்பட்டது. இதெல்லாம் அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகள். மேலும் போனஸ் தரவேண்டும் என்று கேட்டார்கள். போனஸ் 1,000 பீடிகளுக்கு 20 பைசா என்ற தொகை கொடுக்க வேண்டும் என்று அவர்களோடு கலந்து பேசி முடிவெடுக்கப்பட்டது. அந்தத் தொகையை ரம்சான், தீபாவளி போன்ற நாட்களில் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

பீடித் தொழிலாளர்களின் வேலை நிர்ணயச் சட்டத்தை அமல் படுத்துவதில் உள்ள சங்கடங்கள் நீக்கப்பட்டு, பிற மாநிலங்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு அப்படிப்பட்ட சங்கடங்கள் இல்லாத சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது. போனஸ் பாக்கித் தொகைக்காக பீடித்



1974 ஆகஸ்டு 19]

தொழிலாளர்கள் சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். அந்த வழக்கை வாபஸ் பெறத்தக்க ஏற்பாடு செய்து அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டது. பாக்கி போனஸுக்காக ரூ. 40, தென் ஆற்காடு, திருச்சி போன்ற மாவட்டங்களில், சேலம் மாவட்டம் தவிர, மற்ற மாவட்டங்களில் தரப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே 1,000 பீடிக்கு போனஸ் தந்திருக்கிறார்கள். இந்தக் காரியங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

அவர்களுக்காக ஒரு வெல்பேர் பண்டு உருவாக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்த வெல்பேர் பண்டு உருவாக்குவதற்கு சட்டத் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு மத்தியப் பேரரசுக்கு இந்த அரசு சிபார்சு செய்திருக்கிறது.

மற்றும் தங்களுக்கென்று ஒரு க்ஷயரோக ஆஸ்பத்திரி தனியாகக் கட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அவர்களுக்கென்று தனியாக ஒரு க்ஷயரோக ஆஸ்பத்திரி கட்ட வேண்டியதில்லை என்று இந்த அரசு கருதுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை தற்பொழுது இல்லை. அவர்களுக்கு க்ஷயரோக நோய் ஏற்பட்டால் அதைக் கண் காணிப்பதற்கு இப்பொழுது க்ஷய ரோக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அவர்களுக்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரி தேவை இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

அவர்களுடைய நல்வாழ்வுப் பிரச்சினையைப் பற்றி வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. அவர்களுக்கென்று நல நிதி சம்பந்தமாக மத்தியப் பேரரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருந்து விடை வந்தவுடன் இந்த அரசு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

திரு. ஆலடி அருணா : பீடித் தொழிலாளர்களுக்கும் பீடி முதலாளிகளுக்கும் சென்னையில் இப்படிப்பட்ட உடன்பாடு ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த உடன்பாட்டின் அடிப்படையில் இந்த முடிவுகளை நெல்லை மாவட்டத்திற்கும் விரிவுபடுத்துவதற்கு நெல்லை மாவட்டத்தில் இருக்கிற பீடித் தொழிலாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா? சென்னையில் ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தத்தை நெல்லை மாவட்டத்திலும் அமல் நடத்துவதற்கு அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்துமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கூலி நிர்ணயம் நாடு பூராவுக்கும் பொதுவாக ஏற்படுத்தப்பட்டது. இந்தக் கூலி நிர்ணயம் நெல்லை மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவில்லை என்ற செய்தி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படிப்பட்ட முறையீடு ஏதாவது செய்திருப்பார்களேயானால் அதை அமுல்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, கடந்த 3, 4 ஆண்டுகளாக மத்திய அரசு குறுக்கிட்டு சிகரெட், சுருட்டு போன்ற பொருள்களுக்கு விலையை அதிகப்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே இருந்த விலையை விட 10 அல்லது 20 சதவிகிதம் விலை கூடியிருக்கிறது. பீடி விலை அந்த அளவுக்கு உயர்த்தப்படவில்லை. அப்படி விலை உயர்த்தப்படாததினால் பீடித் தொழிலாளர்களுக்கு ஓரளவுக்கு நியாயமான அதிக கூலி கிடைக்கவுமில்லை. எதிர் காலத்திலாவது அரசு இது பற்றி பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்டு சமரசம் செய்துவைக்கும்பொழுது, பீடி விலையைக் கூட்டி தொழிலாளர்களுக்கு கூடுதலாக கூலி கிடைப்பதற்குண்டான வழிவகைகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மற்ற மாநிலங்களின், அதாவது மத்தியப் பிரதேசத்தில் அதிகமாகப் பீடி சுற்றுகிறார்கள் வங்காளத்தில் அதிகமாகப் பீடி சுற்றுகிறார்கள். இந்த இரண்டு இடங்களிலும் விலையை அதிகப்படுத்தவில்லை. அங்கெல்லாம் குறைந்த கூலிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் விலை ஏறினால் தான் நம்முடைய மாநிலத்தில் ஏறும். நம்முடைய மாநிலத்தில் தயாராகின்ற பீடி, வட ஆற்காடு மாவட்டத்தில் தயாராகின்ற பீடி ஆந்திரம், வங்காளம், பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குப் போகிறது. பக்கத்திலுள்ள ஆந்திர மாநிலம் இது வரையில் மத்திய அரசின் நேரடி ஆட்சியில் இருந்துகொண்டிருந்தது. ஆந்திர மாநிலத்தில் இன்றைக்கும் கூலி ரூ. 3. நம்முடையு மாநிலத்தில் கூலி ரூ. 4½. ஆந்திர மாநிலத்தில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டால் தான் நம்முடைய மாநிலத்திலும் இந்தத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான கூலி நிர்ணயிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அன்றாடம் கூலி வேலை செய்யக்கூடிய அந்த பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீட்டு வசதி செய்து கொடுக்க இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்த பீடித் தொழிலாளர்கள் பணம் சேமித்துத் தந்தால் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

## ஈரோட்டில் புதிய 'பால்பண்ணை.

*165 வினா திரு சு. துரைசாமி.—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஈரோட்டிற்கு அருகில் அமைய உள்ள பால்பண்ணையில் வேலை எப்போது துவக்கப்படும் ?

(இ) அதன் விவரம் என்ன ?



மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் :

(அ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் ஈரோட்டில் குழந்தை பாலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க இந்த அரசு செயற் குறிப்பு அனுப்பியது. இந்திய அரசு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

(முற்பகல் 10-00)

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இந்திய அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற வளத்தை வைத்துக் கொண்டு அதற்கு வேண்டிய முயற்சிகளைத் திரட்டி ஈரோட்டில் ஒரு பால் பவுடர் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இப்போது தமிழ்நாட்டில் இருக்கிற பால் வள வாரியத்திற்கு இந்திய பால்வள வாரியத்தின் மூலமாக நிதி உதவி செய்கிறார்கள். அந்த வசதியை வைத்து இப்படிப்பட்ட அமைப்பு மேற்கொள்ளும் வகையில் மேலும் மத்திய அரசை வற்புறுத்தி இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிற்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இந்தியாவில் வேறு மாநிலங்களில் இப்படிப்பட்டத் தொழிற்சாலையை அமைக்க மத்திய அரசு அனுமதிக்கவில்லை. ஆகவே, தொடர்ந்து வலியுறுத்திக் கேட்கலாம். இல்லையென்றால் ஈரோட்டில் அமைப்பதுபற்றி பின்னர் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய காங்கேயம் தொகுதியில்தான் தமிழ் நாட்டிலேயே அதிகமாக பால் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால், இப்போது அங்கே பால் உற்பத்தி குறைந்து விட்டது அதற்குக் காரணம் இப்போது அங்கே இருக்கிற மேய்ச்சல் நிலம் (கிரேசிங்லாண்ட்) பெருமளவிற்கு குறைந்து விட்டதால் மாடுகளின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது. மேய்ச்சல் நிலங்களை அரசு எடுத்து விட்டதால் மாடு வைத்திருந்தவர்கள் விற்றுவிட்டார்கள். விவசாயிகள், 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம்தான் வைத்துக் கொள்ளலாம் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதால் சிறிய விவசாயிகள் கிரேஸிங் லாண்ட் வைத்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர்களுக்கு பத்து ஏக்கர் கிரேஸிங் லாண்ட் வைத்துக்கொள்ளுவதற்கு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் இப்படிப்பட்ட காரணங்களையும் யோசனைகளையும் சொல்லக் கூடாது. பால் பண்ணை எப்போது தொடங்கப்படும் என்பதுதான் கேள்வி. அதற்குத் தொடர்புடைய துணைக் கேள்விகளை தகவலுக்காக கேட்கலாமே தவிர மேய்ச்சல் நிலம் வேண்டும்; மாடுகளை விற்றுவிட்டார்கள் என்று எல்லாம் சொல்லக்கூடாது. யோசனைகளை கேள்வி நேரத்தில் சொல்லக்கூடாது. தகவல்தான் கேட்கலாம்

<u>திரு. கோவை செழியன்:</u> மத்திய அரசு அங்கே தேவையான அளவுக்குப் பால் உற்பத்தி இல்லை என்று சொல்லுவதற்கான காரணத்தை நான் சொன்னேன் இந்தக் காரணங்களால் பால் உற்பத்தி குறைந்து இருக்கிறது. ஆகவே, மீண்டும் அங்கே முன்போல் பால் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> தலைவரவர்களே, அங்கே பால் உற்பத்தி இல்லாமையால் குழந்தைகளுக்கான பால் தொழிற்சாலை தர மறுக்கவில்லை. தேவையான பாலைப் பெறுவதற்கு அங்கே எல்லாவித மான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த 3, 4 ஆண்டுக் கால முயற்சிகளின் மூலம் ஈரோடு, கோவை வட்டாரங்களிலிருந்து சென்னை மாநகருக்கு ஒரு லட்சம் லிட்டருக்குமேல் பால் அனுப்பப்பட்டு வருகிறது. அதனால் அங்கே பால் உற்பத்தியாகவில்லை என்று கூற முடியாது.

## *Mobile Milk Bar in Madras City.*

***166 *Q*. THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—**

**(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has opened a number of mobile milk bars in Madras City; and**

**(*b*) if so, the details thereof ?**

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:—</u>

(அ) ஆம்.

(இ) பல்வேறு இடங்களுக்குச் சென்று குளிர்பதனப்படுத்தப்பட்ட பால், சூடான பால், நெய், கோவா ஆகியவற்றை விற்பனை செய்வதற்காக இயங்கும் பால் விற்பனை வண்டி ஒன்றை சென்னை மாநகரில் 14-1-1974 லிருந்து தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் கொண்டு வந்துள்ளது.

<u>திரு. எ. சி. நரசிம்மன்:</u> தலைவரவர்களே, இந்த நடமாடும் பால் வினியோக வண்டி நம்முடைய சட்டமன்ற விடுதிக்கும் வந்து, பால் வினியோகம் நடை பெறுகிறது. ஆனால் இங்கே இரவு 7-00 மணிக்குமேல் பால் கிடைப்பதில்லை. தீர்ந்துவிடுகிறது. $2\frac{1}{2}$ மணிக்கு வந்து 7-00 மணிக்குள் தீர்ந்து விடுகிறது. இரவிலே பால் குடித்து பழக்கப்பட்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இரவு 9-00 மணி வரையிலுமாவது பால் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகமாக பால் சாப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன்; மிக்க மகிழ்ச்சி. பால் வினியோக வண்டிகள் மூலம் சட்டமன்ற விடுதிக்குப் பால் வழங்கப்படவில்லை. மூர்மார்க்கட் பகுதி, கடற் கரை ரயில் நிலையப் பகுதி, அண்ணா சதுக்கம் ஆகிய இடங்களில் மட்டும்தான் வண்டிகள் மூலம் பால் வினியோகம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை ஏற்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரவு 9-00 மணி வரையில் பால் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

<u>திரு கு. பெரியசாமி:</u> தலைவரவர்களே, பால் உற்பத்தி குறைந்ததற் குக் காரணம் கேரளத்திற்கு அடித்துச் சாப்பிடுவதற்காக பசு மாடுகள் கடத்தப்படுவதுதான் என்று கூறப்படுகிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்:</u> தலைவரவர்களே, அதனால் பால் உற்பத்தி குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அதுவும் ஒரு காரணமாக நினைக்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மாடுகள் வாரம்தோறும் கடத்தப்படுவதை இந்த அரசு கணக்கெடுத் துள்ளது. அது பற்றி விரைவிலே ஒரு சட்டம் கொண்டுவர ஏற்பாடுகளை இன்றைக்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண்கள் 167-ம் 168-ம் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படும்.

## *Madurai Milk Project.*

***167 *Q*. THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the quantity of surplus milk that was sent to the Madhavaram Dairy in Madras by the Madurai Dairy during the year 1973 ?**

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> 1973-ஆம் ஆண்டில் மதுரை பால்பண்ணை மத்திய பால் பண்ணைக்கு மொத்தம் 731,900 லிட்டர் உபரி பால் வழங்கியது.

*168 <u>வினா திரு கே. கந்தசாமி:</u> மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

அரசுக்குச் சொந்தமான மதுரைப் பால் பண்ணையில் ஏராளமான பொருட்கள் திருடு போவது உண்மையா ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> அரசாங்கத்திற்குச் சொந்தமான பொருட்கள் எவையும் மதுரை பால் பண்ணையில் திருடு போகவில்லை.

[1974 ஆகஸ்டு 19

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இன்றைக்கு மதுரையிலிருந்து மாதவரம் பால்பண்ணைக்கு பால வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலும் உபரியாக இருக்கின்ற பாலை மட்டும் மாதவரம் பால்பண்ணைக்கு அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்களா? அல்லது அரசாங்கம் கடன் கொடுத்திருப்பதால் உற்பத்தியாகின்ற பாலை எல்லாம் அனுப்ப வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்களா? அங்கே இருக்கிற மக்களுக்கு முன்பு போல், குறிப்பாக கோடைக் காலங்களில் பால் கிடைப்பதில்லை. ஆகவே, இனிமேலாவது உபரி பாலை மட்டும் அனுப்ப வேண்டுமென்று உத்தர விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஏற்கெனவே மதுரையிலிருந்து சென்னைக்கு லட்சக்கணக்கான லிட்டர் பால் வந்து கொண்டிருப்பதை நம்பித்தான் நகரில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் பால் கிடைக்கும் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். கோடைக்காலங்களில் எல்லாப் பகுதிகளிலும் பால் பற்றாக்குறை ஏற்படுகிறது; மதுரையில் மட்டுமல்ல. ஆகவே தான் அந்த நேரங்களில் பால் விநியோகம் தடைபடுகிறது. உற்பத்தியாகின்ற பாலை உள்ளூர் தேவைக்குப் போக எஞ்சியதைத்தான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, மதுரை பால்பண்ணையில் திருட்டு எதுவும் போகவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் அங்கே பால், பால் பாட்டில் போன்றவை திருட்டுப்போனது உண்மை என்று நான் அறிகிறேன். நிரூபிக்கப்படவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அங்கே சேல்ஸ் டிப்போக்களில் விற்பனைக்கு வருகின்ற பாலில் அங்கே பணியாற்றும் கடைநிலை ஊழியர்கள் வேண்டுமென்றே சேதம் ஏற்படுத்துகிறார்கள். நான் அடிக்கடி அங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகளுடன் அதுபற்றி கலந்து பேசியிருக்கிறேன். சேதம் ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் கம்யூனிஸ்டு கட்சியின் தலையீடுதான் என்றும் அவர்களின் தலையீட்டைத் தவிர்க்க வேண்டுமென்றும் உயர் அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பிரச்னையில் தலையிட்டு, விசாரணை செய்து, அரசியல் குறுக்கீடுகள் இல்லாமல், கடைநிலை ஊழியர்கள் நேர்மையாக, நாணயமாகப் பணியாற்ற ஏற்பாடுகளை செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அப்படி திருட்டுப் போயிருந்தால் எந்தக் கட்சியாக இருந்தாலும் கவலைப்படாமல் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏதாவது தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக என்னிடம் எழுதி கொடுத்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. திருப்பதி: தலைவரவர்களே, மதுரையில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்ற அந்த அமைப்பு இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இன்னும் சுமார் 6 மாத காலத்தில் அங்கு பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை வேலையைத் தொடங்கும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, மேய்ச்சல் தரை அதிகமாகவுள்ள எல்லா மாவட்டங்களிலும் பால் பண்ணை ஆரம்பிப்பதாகச் சொல்லப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மேய்ச்சல் நிலம் அதிகம் இருக்கிறது. ஆகவே, அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு சிறந்த கால்நடைகளை வாங்குவதற்கு கடன் உதவி செய்ய பால்பண்ணையிடம் செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா? இல்லை என்றால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பால் வளத் துறையின் மூலம் சில ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அதனுடைய நடவடிக்கைகள் பல பகுதிகளில் விரிவாக்கப்பட்டுள்ளன. தர்மபுரி மாவட்டம் முழுவதும் பால் பண்ணை வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு, வெகு விரைவில் செயல்படுத்தப்படும்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, மதுரையில் மாடுகள் வைத்திருக்கிறவர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. மாடு வைத்திருக்கிறவர்கள் எல்லாம் பாலை சென்னைக்கு ஏற்றுமதி செய்துவிடுகிறார்கள். அதனால் அங்கே இருப்பவர்களுக்குப் புதிதாக பால் வழங்க கூப்பன் கொடுப்பதில்லை. ஆகவே உபரி பாலை மட்டும் அனுப்பினால் போதும் என்ற முறையில் உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மதுரை நகரில் பால் விநியோகம் செய்தது போக மீதி இருக்கின்ற பாலைத்தான் சென்னைக்கு அனுப்ப ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். மதுரை நகரில் தான் சென்னை மாநகரை விட அதிகமான மாடுகள் வைத்திருக்கிறார்கள் என்று அதிகாரிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள். ஆகவே, சென்னையை விட மதுரையில் அதிக மாடுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. வெ. நாராயணசாமி: சென்னை நகரத்திலே இப்போது வழங்கப்படும் பால் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இந்தப் பாலும் 3% கொழுப்பு சத்துள்ள டோண்ட் மில்க் தான். அதே நேரம் மதுரை, ஈரோடு போன்ற இடங்களில் ஓரளவு அதிக அளவுக்குப் பால் உற்பத்தியாகிறது. அதோடு ஈரோடு போன்ற நகரங்களில் இருந்து ஸ்கிம்டு மில்க் என்பதாக கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. அங்கு அமல் "பேட்டர்ன்" என்று—தேசீய பால்வள வங்கி நிறுவனம், சொசைடிகள் அமைத்துக் கொண்டிருக்கின்றன. அப்படி அதிகமான சொசைடிகள் அமைத்து அதிக அளவு பால் சென்னைக்குப் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சென்னை நகர மக்களுடைய தேவை ஒரு நாளைக்கு சுமார் 3 லட்சம் லிட்டராகும். நாம் இத்துறையின் மூலம் $1\frac{1}{4}$ லட்சம் லிட்டர் பாலைத்தான் விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே சென்னைக்கு அருகில் அம்பத்தூரில் மற்றுமொரு பால் பண்ணையை ஆரம்பித்து—அது இன்னும் 6 மாத காலத்தில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. உணவுப் பண்டங்களைப் போல—பாலும் வெளி மாநிலங்களுக்குப் போய்க்கொண்டிருப்பது உண்மையாகும். அப்படி வெளியே போகாமல் தடுப்பது எப்படி என்பது பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. கந்தசாமி : மதுரை பால் பண்ணையில் அரசு எடுக்கும் பல விதமான முயற்சிகளுக்கும் பலன் அளிக்காமல் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வருவதற்குக் காரணம் அரசியல் கட்சிகளின் திட்டமிட்ட குறுக்கீடு தான் என்று குறிப்பிட்டேன். அதை லாபகரமாக நடத்த—தவறு செய்பவர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை தம்முடைய பதிலில் தெளிவாகத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அரசியல் கட்சிகளின் குறுக்கீடு காரணமாக நட்டம் வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கான தக்க ஆதாரங்களைக் கொடுத்துச் சொன்னால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : மதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பால் பவுடர் தொழிற்சாலை இன்னும் 6 மாதங்களில் செயல்படத் துவங்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான மூலதனம் என்ன? அதில் மத்திய அரசாங்கத்தின் பங்கு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : மதுரையில் இருந்து குறைந்த விலையில் வாங்கக்கூடிய பாலை, இங்கே அதிக விலை வைத்து டோன்ட் மில்க்காகக் கொடுக்கிறார்களே, இப்படி இங்கே பாலின் விலையை அதிகபடுத்துவதினால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களே, இதைத் தடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மதுரை வட்டாரத்தில் வாங்கப்படுகிற பால் இங்கே கொண்டுவரப்படுவதற்கான செலவு, பக்குவப்படுத்துவதற்கான செலவு ஆகியவற்றையும் சேர்த்துத்தான் இங்கே விநியோகப்படுத்துவதற்கான விலை நிர்ணயிக்கப்படுகிறது.





மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள் 169, 170, 171 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்புகள்.

### (அ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : இச் சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 27/74) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1948-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழித்தல்-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1948) 3(பி) பிரிவின்கீழ், ஏனையவற்றுடன், ஏரிகள், பாசனப் பணிகள் உட்பட எஸ்டேட்டு முழுவதும் அரசுக்கு மாற்றப்பட்டு, வில்லங்கம் எதுமின்றி அவை அரசிடம் நிலை பெறும். நிலச் சொந்தக்காரரின் தனி உடமையாகிய ஏரி ஒன்று அரசிடம் நிலைபெறாது என்று மாநில அரசுக்கும், பழனியாண்டிக்கும் ஏனையோருக்கு மிடையேயான வழக்கில் (அரசுமேல் முறையீடு எண் 1645/1966) உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. தனியார் ஏரிகள் உட்பட ஏரிகளை னைத்தும் அரசிடம் நிலைபெற்றிருக்க வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது. அப்போதுதான் பொதுமக்களின் பயனுக்காக அவற்றை அரசு பராமரிக்க முடியும். எனவே, எஸ்டேட் ஒன்றில் உள்ள தனியார் ஏரிகள் உட்பட ஏரிகளனைத்தும் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அரசிடம் நிலைபெற்றுள்ளதாகக் கருதப்படவேண்டும் என்றும், அத்தகையதனியார்ஏரி குறித்து ரயத்துவாரிப் பட்டா எதுவும் வழங்கப்படக்கூடாது என்றும், அத் தகைய தனியார் ஏரி குறித்து முன்னர் வழங்கப்பட்ட பட்டா ரத்தாகு மென்றும், அத்தகைய எஸ்டேட் குறித்து இழப்பீட்டுத் தொகை மாற்றி வரையறுக்கப்படவேண்டுமென்றும் அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழை கிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்கள் இதையே கொஞ்சம் விளக்கிச் சொன்னால் திருத்தத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது சாதாரண திருத்தம். எஸ்டேட் அபாலிஷன் சட்டத்திலே—இருக்கிற ஏரிகளை அரசாங்கத்தில் எடுத்துக் கொள்வது பற்றி ஏற்பட்ட வழக்கில் சிவகங்கை ராஜாவுக்குச் சாதகமாக உயர்நீதி மன்றம்—அவர்கள் 70 ஆண்டுக் காலமாக அந்த ஏரி களை அனுபவித்து வந்த காரணத்தினால் அவை அவர்களுக்கே சொந்த மானது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இதனால் ஏற்படுகிற சிக்கல்

* 14—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



களை அகற்றி பொது மக்களுக்குப் பாசன வசதிக்கு தடை ஏற்படாதிருக்க இந்தத் திருத்தத்தின் மூலம் அந்த ஏரிகளையும் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்றாக்குவதற்கு இந்தத் திருத்தம் வந்திருக்கிறது. இதில் விவாதத்திற்கே இடம் கிடையாது. இதை ஏகமனதாக அவை நிறை வேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : இந்தத் திருத்தத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இதற்கு முன்னால் குளங்கள் பூராவும் இனாம்தாரர்களிடம் இருந்து பலவிதமான சிக்கல் ஏற்பட்டு அவர்கள் 48-ல் இருந்து 74 வரை பல விதமான பலன்களை அனுபவித்திருக்கிறார்கள்.

எங்கள் நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான இனாம் கிராமங்களில் நான்குநேரி போன்ற இடங்களில், திருக்குறுங்குடி ஜீயர் மடத்திற்குச் சொந்தமான உச்சிகுளம் போன்ற இடங்களில் அவர்கள் ஏராளமான மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றுக்கு அவர்களிடம் இருந்து நட்டஈடு பெறவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களிடம் உள்ள குளங்களை எடுத்துக் கொள்கின்றபோது நட்டஈடு எதுவும் தரக் கூடாது என்றும் வலி யுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேமாதிரி இனாம் கிராமங்களில் கோயில், மடங்களுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருக்கிறவர்களுக்கு எல்லாம் அந்தந்த நிலங்களையே சொந்தமாக்க வேண்டும். அது சம்பந்தமாக தொடர்ந்து பல சிவில் வழக்குகள் நடந்து கொண்டு வருகின்றன. இவற்றுக்கு இடமில்லாது ஒரு திருத்தச் சட்டத்தையாவது கொண்டுவந்து அவர்களுக்கு அந்தந்த நிலங்களில் குடியிருக்கிற விவசாயிகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிப் பதற்கு முன்வரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதில் வீடு கட்டி, குடியிருக்கிற இடத்தைக் கூட, சின்ன நிலம் கூட, இனாம்தாரருக்கு என்று பட்டா கொடுக்கப்படுகிறது. யாருடைய அனுபவத் தில் அந்த நிலம் இருக்கிறதோ அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டுமென்று இனாம் சட்டத்திலே இருந்தாலும்கூட, இனாம்தாரருக்கும் சேர்த்து ஜாயிண்ட் பட்டா கொடுக்கப்படுகிறது. இன்னும் சில இடங்களிலே இனாம்தாரருக்குக் கொடுக்கப்படுகிறது. அவற்றைப் பெற கோர்ட்டுக்குச் சென்று வாதாட முடியவில்லை. இனாம்தாரர்கள், மடம், கோயிலைச் சார்ந்தவர்கள் பல கோர்ட்டுகளுக்கு இழுத்தடித்து இந்த மாதிரி காரியங்களைச் செய்கிறார்கள். அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். இனாம்தாரர்களிடமிருந்து அவற்றைப் பெறவும் பாதுகாக்கவும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் கண்மாய்களை எடுத்துக் கொள்வது நல்லது. இருபதுவருஷ காலமாகஅனுபவித்துவந்த பல்லாயிரக் கணக்கான ஏரிகளை சமீபத்திலே வெட்டியிருக்கிறார்கள். ஆகவே, அதற் கான நஷ்ட ஈட்டை அவர்களிடத்திலே பெற ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I would like to offer a few remarks regarding this Bill which is the subject-matter of discussion before this House.

This Bill is only a formal amendment to the parent Act, brought forward consequent on the decision rendered by the High Court regarding private tanks and their uses. So far as tanks are concerned, some of them are in possession of land owners, over which other tenants have got right for getting water for irrigation and also for using them for communal purposes. But this has been prevented by the big estate-holders and so this is a welcome legislation.

But there are certain inherent mistakes which have entered into our revenue records. Some of the public tanks are wrongly classified and entered as private tanks in the revenue records. So much so, the landlords put foreward certain untenable claims and they say that the ryots who have got right for irrigation, are not entitled to use the water which is stored in these tanks. So, provision may be made for taking stringent action and the decision that has been rendered by the High Court is to be rectified by bringing in suitable amendments.

So far as tanks are concerned, riparian rights of the ryots to use water should be promptly considered in the matter of determining the rights which will have to be worked out as per the Estates (Abolition and Conversion into Ryotwari) Act.

Sir, similar mistakes have occurred in other districts as well. There are certain public tanks which have been wrongly classified as private tanks and the ryots are experiencing considerable difficulty in getting water from the water source. They say that because it is a private tank, the other tenants who are really cultivating the lands are not entitled to use water. In this connection, I may inform the House that I have presented a petition to the Hon. Minister with regard to a similar matter where difficulty has cropped up. So far as the records are concerned, it is clear that the ryots have got the right to use the water. The unscrupulous people who are unnecessarily preventing the use of water should be dealt with appropriately and action taken against them.



Then, there are certain other private tanks which have been wrongly classified as public tanks. Those mistakes should be rectified and the revenue records should be brought uptodate so that there may not be any hardship for the ryots who are actually cultivating the land. There is one clause which deals with re-determination of compensation in certain cases. Clause 4 says—

> "Where any compensation has been determined under the principal Act for an estate as a whole before the date of the publication of this Act in the Tamil Nadu Government Gazette, the amount of such compensation shall be re-determined in accordance with the provisions of the principal Act as amended by this Act."

Whether we should have such a provision for re-determination of compensation that has to be paid, is a matter which will have to be considered. If we re-value it, there would be escalation of the compensation which will have to be paid.

The HON. THIRU S. MADHAVAN: It is not re-valuation but it is only re-determination.

THIRU R. PONNAPPA NADAR: If that is the case, there may not be difficulty. If it is a case of re-valuation the present market value will have to be given..........'

The HON. THIRU S. MADHAVAN: Let the hon. Member go through sub-clause (2) of Clause 3 which clearly says—

'............. for purposes of compensation under this Act, the private tank shall be deemed to be land in respect of which neither the landholder nor any other person is entitled to ryotwari patta........'

THIRU R. PONNAPPA NADAR: Another point that has been advanced by the learned Member from Koilpatti is with regard to cutting of trees. In the matter of valuation of these trees, there would be further difficulty. The questions like, what is the value of trees that have been cut down, who cut them down and when they were cut down, will have to be determined. All these things

[Thiru R. Ponnappa Nadar] [1974 ஆகஸ்ட் 19

have happened in the distant past and I think there would be difficulty in regard to this matter. So much so, it is better that this aspect of the matter is taken serious note of.

Then in the matter of improvement of the tanks which have been silted up for long, special action should be taken because we are facing acute shortage of food. There are certain tanks which are now in possession of private landholders and they may be renovated and repaired so that there may be further augmentation of water supply and also easing of the food position. With these observations, I conclude my speech.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரவைத் தலைவரவர்களே, மன்றத்தின் முன் இருக்கக்கூடிய இந்தத் திருத்தத்தைப் பற்றி சுருக்கமாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

சிவகங்கை ராஜா அவர்களுடைய குளத்தை அரசாங்கம் தேசியமயமாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு திருத்தம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்மொழிந்து பேசுகிற நேரத்திலே சொன்னார்கள். ஆனால், இப்படிப்பட்ட சிக்கல்கள் பல தடவை நம்மிடத்திலே வந்து அதற்காக மீண்டும் திருத்தங்கள் இங்கே கொண்டுவரக்கூடிய நிலையை, பல ஆண்டுகளாக நாங்கள் பார்க்கிறோம். ஆகவே, இந்தக் குளங்களைப் பொறுத்த வரையிலே, இந்த மாதிரி இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குத் திட்ட வட்டமான கொள்கையை அரசாங்கம் கடைப்பிடிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

குறிப்பாக இன்று, தமிழகத்திலே இருக்கக்கூடிய குளங்கள், ஏரிகள் எத்தனை என்று சரியான வகையிலே கணக்கிட்டு, எந்த நீர்ப் பாசனத்திற்கு எந்த ஏரி, எந்த அளவிற்குப் பயன் படுகிறது, அவைகளுடைய கப்பாசிட்டி என்ன என்று புரிந்துகொண்டு, அதற்காக நல்ல வகையிலே சட்டம் தீட்டி, அந்தக் குளங்களைப் பழுது பார்க்கக்கூடிய ஒரு உத்தரவைப் போட்டுவிட்டால் இந்தக் குழப்பங்களை நம்மிடத்திலே இருக்காது என்று கருதுகிறேன்.

இன்று பல குளங்கள், பல ஏரிகள் நாட்டிற்குப் பயன்படாத வகையிலே இருக்கின்றன. அவற்றை ஆழப்படுத்தி, விஸ்தரித்து, பயன்படுகிற அளவுக்குச் செப்பனிட எவ்வளவு செலவாகும் என்று திட்டமிட்டு, சரியான வகையிலே திட்டமிட்டால் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். இந்த மசோதா திருத்தத்திலே இந்த மன்றத்திலே யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்காது. ஏனென்றால், நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிற நேரத்தில் அதோடு சம்பந்தப்பட்ட குளங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது தான் திருத்தம். ஆனால், இப்படி அடிக்கடி நாங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்ற காரணம், பொதுமக்களுக்குப் பயன்படாமல்



1974 ஆகஸ்ட் 19] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

போகின்ற நிலைமைதான். ஆகவே, அதற்கு, ஒரு முற்றுப் புள்ளி வைத்து சரியான வகையிலே என்னென்ன ஏற்பாடு செய்ய இருக்கிறார்கள், அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் இந்த நேரத்திலே சொன்னால், அவைக்கும், பொது மக்களுக்கும் நன்மை தருவதாக இருக்கும் என்று சொல்லி, நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இந்த எஸ்டேட் ஒழிப்பு மசோதாவிலே ஒரு சில திருத்தங்களை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தது வரவேற்கத்தக்கது.

தனிப்பட்டவர்களுடைய டாங்குகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வது என்பது சாலச் சிறந்ததுதான். காரணம், தனிப்பட்டவர்கள் தாங்கள் குளங்கள் அமைத்துக் கொண்டு மற்ற மக்களுக்கு அதிலே எந்தவிதமான உரிமைக்கும் உபயோகத்திற்கும் விடாமல் இருப்பது தேசியக் கொள்கைக்கு முரணானதாகக் கருதப்படும். இந்தத் திருத்தத்திலே தனியார் டாங்குகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்று வந்து விட்டால், டாங்குகளுக்குப் போவதற்கான வழியையும் அரசாங்கம் உரிமையுள்ளதாக ஆக்க வேண்டும். ஏனென்றால், சில இடங்களிலே குளங்கள் நடுவிலே இருக்கலாம். அவற்றிற்குப் போவதற்கு வழி பட்டா லேண்டிலே இருக்கும், அப்போது சிக்கல்கள் ஏற்படும், ஆகவே, அமைச்சர் அவர்கள் அதையும் பார்த்து நடைபாதைக்கும் உரிமை இருக்கக்கூடிய வகையில் திருத்தத்தைக் கொண்டுவந்தால் நல்லதாக இருக்கும்.

அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கிற டாங்குகளுக்கான தடம் வேறு ஒருவருடைய பட்டா லேண்டிலே இருக்குமானால், அவர்கள் அதை அடைப்பார்கள். அங்கே போய் விவசாயம் செய்ய முடியாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அதையும் கவனிக்க வேண்டும். பல பண்ட்ஸ் நாம் போட்டிருக்கிறோம், பலருடைய சொந்தமான நிலங்களை அரசாங்கம் வாங்கியிருக்கிறது, ஆனால் அவற்றிற்கு நடைபாதை இல்லாமல் இருக்கிறது.

அது மட்டுமல்ல, அங்கே மண் எடுக்கிற உரிமை, மரம் வளர்க்கிற உரிமை கிடையாது என்ற சிக்கல் எல்லாம் வந்திருக்கிறது, அது மட்டுமல்ல, அரசாங்கமே சொந்தமாக வாங்கியிருக்கக்கூடிய நிலங்களிலே கூட சிக்கல்கள் இருக்கின்றன, மண் எடுக்கிற உரிமை, மரம் வளர்க்கிற உரிமை அவர்களுக்குத் தேவை என்று சொல்கிற அளவுக்குச் சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது. குளங்களைப் பொறுத்த வரையில் மண் எடுக்கிற உரிமை, மரம் வளர்க்கிற உரிமை ஆகியவற்றையும் அரசாங்கம் தன்னுடைய பொறுப்பிலே கொண்டுவர வேண்டும். அதுமட்டுமல்ல, அங்கே போவதற்கான போக்குவரத்துத் தடத்தையும் உரிமைப்படுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல, நம்முடைய சட்டத்திலே குளத்தடியிலே பட்டா கொடுக்கக் கூடாது என்று இருந்தாலும் கண்டிஷன் பட்டா என்ற முறையிலே பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன பல இடங்களிலே. குளத்தடியில் 100 அடிக்கு அப்பால்தான் பட்டா கொடுக்க முடியும்,

[திரு. கே. என். குமாரசாமி] [1974 ஆகஸ்ட் 19

அதற்குள்ளாக பட்டா கொடுக்க முடியாது என்று இருந்தாலும்கூட கிராமங்களிலே உள்ள கர்ணங்கள கண்டிஷன் பட்டா என்ற முறையிலே டாங்குகளுக்குள்ளேயே கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் சட்டத்தை நிறைவேற்றுகிறது, ஆனால், அந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மீறி பட்டாக்கள் வழங்குவதை அரசாங்கம் தடுக்க வேண்டும். அப்படித் தடுக்கா விட்டால் எந்த நோக்கத்திற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாத நிலையில் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். அதற்காகவும், இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டுவருகிறபோது தெளிவாக அரசாங்கத்தினுடைய பாதுகாப்பிலே இருக்கிற டாங்குகள், இப்போது புதிதாக தனியார்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட இருக்கிற டாங்குகள் இவற்றில் சிக்கல்களைப் போக்க தெளிவான கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தத்தின்மீது சில யோசனைகளைக் கூற முன்வருகிறேன். இந்தத் திருத்தம் மிக அத்தியாவசியமான திருத்தமாகும். இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிறபோது இன்றைய தினம் சபையிலே நாம் மசோதாவை நிறைவேற்றுகிறோம், ஆனால் நிறைவேறுவதற்கு முன்னாலேயே இனாம்தாரர்கள் குளக்கரைகளிலே உள்ள பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மரங்களை வெட்டி அகற்றிக்கொண்டிருக்கிறார்கள், அதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் ரெவின்யூ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு எந்த எந்தக் குளங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறதோ அந்தக் குளக்கரைகளிலே உள்ள மரங்களை வெட்டி அகற்றக்கூடாது, என்று தடைவிதிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரி அரசாங்கம் எடுக்க இருக்கிற குளங்கள், குட்டைகள், ஏரிகள் இவற்றை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைப்பதின் மூலமாக பஞ்சாயத்துகளுக்கு வருவாய் வரக்கூடிய நிலைமை ஏற்படும் அது தனி நபர்களுக்குப் போவதைவிட ஊராட்சி மன்றங்களுக்கே போகச் செய்வது சிறந்த நன்மையாக இருக்க முடியும், ஆகவே அதையும் அரசாங்கம் செய்யவேண்டும். அம்மாதிரிப் பல மாவட்டங்களிலே இனாம், ஜமீன் ஒழிப்புக் கிராமங்களிலே குளங்கள் நிறைய இருக்கின்றன. அவை விடப்பட்டிருக்கின்றன, இனாம்தாரர்கள் குடிமக்களை ஏமாற்றி தாங்களே அவற்றிற்குப் பட்டா போட்டுக்கொண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள், அதை மீண்டும் பரிசீலனை செய்து மற்றொரு இனாம் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அவர்கள் ஏமாற்றி பட்டா பெற்றுக்கொண்ட நிலங்களையெல்லாம் எடுத்து விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ரயத்வாரி கிராமங்களிலே இம்மாதிரி குளங்கள் இருக்கின்றன, அவற்றையெல்லாம் தனி நபர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள், இந்தக் குளங்கள் எல்லாம் சர்க்கார் புறம்போக்கிலே உள்ள குளங்கள் ஆகும் அவர்கள் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள், அந்தக் குளங்களை எல்லாம் அரசு மேற்கொள்வதின் மூலமாக அவற்றை மராமத்து செய்யவும் நீர் தேக்கவும் காலத்திலே தண்ணீர் தேக்கி விவசாயிகளுக்குக் கொடுக்கவும் முடியும். அப்படிப்பட்ட முறையிலே ரயத்வாரி கிராமங்களிலே உள்ள நிலங்களை சிலர் தங்களுக்கு சுவாதீனம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குளங்களையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன், வணக்கம்.



1974 ஆகஸ்ட் 19] [திரு. ஆ. கு. சுப்பையா]

திரு மா. வெ. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்தம் வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது.

அதே சந்தர்ப்பத்திலே ஒரு சில விளக்கங்களைப் பெறவேண்டுமென்ற முறையிலே சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏற்கெனவே ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு காலத்திலே குளங்கள், ஏரிகளாக இருந்திருக்கும், அவற்றையெல்லாம் தனிப்பட்ட ஜமீன்தார்கள் அல்லது இனாம்தார்கள் பட்டாப்போட்டு வாங்கிக்கொண்டு நில அபிவிருத்தி என்ற முறையிலே அதை அபிவிருத்தி செய்து பயிர் செய்து இருப்பார்கள், ஆகவே பட்டா நிலம், ரயத்வாரி நிலம் என்று கிராமக் கணக்குகளிலே இருந்தாலும்கூட அவைகள் எல்லாம் நல்ல ஏரிகளாக பயன்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தற்போது இருக்கும். அந்த நிலையிலே உள்ள நிலங்களை எடுத்துக்கொள்ள இந்தத் திருத்தத்திலே வகை இருக்கிறதா, வழியிருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கினால் நலமாக இருக்கும். "ஆன் கிரவுண்ட்" என்று சொல்வார்கள், ஸ்தலத்தைப் பார்க்கிறபோது அங்கே ஒரு குளமோ அல்லது ஏரியோ இருக்கும், ஆனால் வருவாய்த்துறை கணக்குகளிலே பட்டா நிலம் என்றும் ரயத்வாரி நிலம் என்றும் இருக்கும்.

என்னுடைய தொகுதியிலே பாப்பாரப்பட்டி என்ற நகராட்சிக்கு மேற்குப் பக்கத்திலே ஒரு சிறிய கிராமம் இருக்கிறது, அங்கே ஒரு நல்ல குளம் அமையக் கூடிய விதத்திலே நிலைமை இருக்கிறது, அதற்கு ஏரியினுடைய சாயல் இருக்கிறது, மழைநீரைத் தேக்கிவைக்கின்ற நீர்ப்பிடிப்புப் பகுதியாக இருக்கிறது, ஏற்கெனவே ஏரியாக இருந்தது அங்கே இருந்த பட்டாதாரர் பழைய மாஜி ஜமீன்தார் அப்படியே அதற்கும் சேர்த்து பட்டா பெற்று இருப்பார், 20, 25 ஆண்டுகளாக கடந்த 1948-ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலும் ஏறக்குறைய 25 ஆண்டுக்காலமாக அங்கிருக்கின்ற ரயத்துகள் அது ஏரியாக இருக்கிறது, விவசாயம் செய்ய முடியாது, ஆகவே அதை ஏரியாகப் பயன்படுத்த வேண்டுமென்று பல கோரிக்கைகளை பல அமைச்சர்களிடத்திலே கொடுத்திருந்தும்கூட இன்னும் அந்த ரயத்வாரி பட்டாவை ரத்துசெய்ய முடியவில்லை, ஏரியாகப் பயன்படுத்த முடியவில்லை. ஸ்தலத்தைப் பார்க்கிறபோது குளமாக இருக்கும் ஆனால் கணக்குகளிலே ரயத்வாரி பட்டா நிலமாக இருக்கும், ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்புக் காலங்களிலே அந்தச் சட்டங்களின் மூலமாக அதைப் பட்டாபோட்டுப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் அந்த ஏரிகளையும் எடுத்துக்கொள்ளக்கூடிய வகையிலே இந்தத் திருத்தம் வகை செய்கிறதா என்பது ஒன்று. ஜமீன் ஒழிப்பு, எஸ்டேட் ஒழிப்பு வருகிறபோது ஒரு குறிப்பிட்ட காலம் என்று வைத்து 1 வருடம் 6 மாதம் என்று காலம் கொடுத்து அதற்குள்ளாக

சர்வே செய்யப்பட வேண்டும், செட்டில்மெண்ட் செய்யப்பட வேண்டும் என்று பணிகள் விரைவாக முடிக்கப்படவேண்டுமென்ற முறையிலே கால வரையறை வைத்ததால் ஒரு சில இடங்களிலே ஒரு சில கோளாறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஓடை புறம்போக்கு என்று இருக்கும். ஆனால் அங்கே ஓடையும் இருக்காது, புறம்போக்கும் இருக்காது. ஓடை புறம்போக்கு என்று, பட்டா கொடுக்க வேண்டிய நிலத்திற்கே ஓடை புறம்போக்கு என்று இருக்கும். ஆகவே, பல ஆண்டுகளாக விண்ணப்பங்கள் கொடுத்தால், ரிக்கார்டுகளிலே ஓடை புறம்போக்கு அல்லது பாதை புறம்போக்கு அல்லது மேய்ச்சல் தரை என்று இருக்கிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்வதால் பல்லாண்டுகளாக மனுக் கொடுக்கப்பட்டதே தவிர நிவாரணம் கிடைக்கவில்லை.

எஸ்டேட் ஒழிப்பு அல்லது இனும் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் ஓடை புறம்போக்கு அல்லது பாதை புறம்போக்கு என்று ரிக்கார்டுகளிலே பதிவு செய்யப்பட்டிருந்தால் மீண்டும் மனுக் கொடுத்தால் அதைப் பரிசீலித்து ஸ்தலத்திலே அது பாதை புறம்போக்காகவோ அல்லது ஓடை புறம் போக்காகவோ இல்லாமல் இருந்தால் அத்தகைய நிலங்களை இரயத்துக்களுக்குப் பட்டா வழங்க திருத்தத்திலே ஏதாவது சொல்லியிருந்தால் சிறந்ததாக இருந்திருக்கும். அது இதில் அடங்கியுள்ளதா என்பது தெரியவில்லை. அமைச்சரவர்கள் இத்தகைய விளக்கங்களைத் தந்தால், இது முடியும் அல்லது முடியாது என்ற அளவிற்கு விளக்கம் தந்தால் நல்லது. ஸ்தலத்திலே ஓடை புறம்போக்கு அல்லது நடைபாதை புறம்போக்கு என்று இல்லாத நிலங்கள் பட்டா கொடுக்கத்தக்க நிலங்களாக இருந்தால், ரிக்கார்டுகளிலே ஓடை புறம்போக்கு என்று இருந்தாலும்..........................

<u>மாண்புமிகு திரு செ. மாதவன்</u> : அப்படிப்பட்ட பிரச்னைகளை ஆராய்ந்து நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடன் அப்படி தவறான கிளாசிஃபிகேஷன் செய்யப்பட்டிருந்தால் **outside the purview of the Act**-இல் மனுப்போட்டு பட்டா பெற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். அப்படி ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. **wrong classification** நடந்திருந்தால் அதை எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

<u>திரு மா. வெ. கரிவேங்கடம்</u> : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. இந்தக் குளங்களைப் பொறுத்தவரையில் ரிக்கார்டுகளில் இனும் ஒழிப்புச் சட்டத்தின் கீழோ அல்லது எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் கீழோ பட்டா பெற்றிருப்பார்கள். அவைகளில் வருஷத்திலே 6 மாதங்களுக்குத் தண்ணீர் இருக்கும், மற்ற ஆறு மாதங்களுக்குத் தண்ணீர் இருக்காது; எஸ்டேட் ஓனர்களோ அல்லது மாஜி இனும்தாரர்களோ தங்கள் செல்வாக்கின் காரணமாக ரிக்கார்டு இப்படி வரப்போகிறது என்று தெரிந்து, எங்களுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று சொந்த நிலமாக சுவாதீனம் செய்து



கொண்டு இருக்கிறார்கள். பல பேர் ஏரி, குளங்களுக்கு என்று பட்டா பெற்றிருக்கிறார்கள். ரயத்துவாரி என்று ரிக்கார்டிலே இருக்கும். ஆனால் நிலமாகவோ, குளமாகவோ அமையக்கூடிய இலாயக்கான நிலங்களாக இருக்கும். அத்தகைய நிலங்களை எடுப்பதற்கு இந்தத் திருத்தத்திலே இடம் இருக்கிறதா என்று அமைச்சரவர்கள் அறிவித்தால் சந்தேகம் கிளம்பினால் அந்த விளக்கத்தை மற்றவர்களுக்குக் காட்டி அமைச்சரவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே இவைகளெல்லாம் அடங்கும் என்ற வகையில் இருப்பதற்கு விளக்கம் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கருத்தை நான் சொன்னேன். அதற்கு விளக்கம் அளிப்பார்கள் என்று நினைக்கிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம், நன்றி.

*<u>திரு எ. ஆர். மாரிமுத்து</u> : தலைவரவர்களே, அரசு இந்த எஸ்டேட் அபாலிஷன் ஆக்டின் கீழ் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்தத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

இனும்தாரர்கள், ஜமீன்தாரர்கள் பலயிடங்களிலே பாசனக் குளங்களாக இருந்தாலும், பாசனம் அல்லாத குளங்களாக இருந்தாலும் தங்கள் சொந்த அனுபவத்தில் அவைகளை நீண்ட நாட்களாக அனுபவித்து வந்திருப்பதால் ரிக்கார்டுகளைக் காண்பித்து பலயிடங்களில் பட்டா வாங்கி இருக்கிறார்கள். அப்படி வாங்கியது, பாய்ச்சல் குளமாக இருந்தாலும் சரி, பாய்ச்சல் அல்லாத சமுதாய உபயோகத்திற்காக உள்ள ஊருணிகளாக இருந்தாலும் சரி அதனால் பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுகிறது என்பது உண்மை. இதிலே அம்மாதிரி குளங்களெல்லாம் அரசாங்கத்திற்கு "வெஸ்ட்" ஆகிறது என்று போடப்பட்டிருக்கிறது. ஒரிஜினல் ஆக்டில் "டேங்க்" என்பதற்கு என்ன 'டெஃபனெஷன்" போட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நான் அதைச் சரியாகப் பார்க்கவில்லை. டேங்க் என்பதற்கு இர்ரிகேஷன் டேங்க் என்று மட்டும் இருந்தால் போதாது. இர்ரிகேஷன் டேங்காக இல்லாத குளங்களையும் இந்தச் சட்டத்திற்குள் உட்படுத்த வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. ஏதோ சாதாரணமாக பொது மக்கள் நீண்ட நாட்களாக அனுபவித்து வந்த குளங்கள் இர்ரிகேஷன் டேங்காக இருக்கலாம், அல்லது மக்கள் பயன்படுத்துகின்ற ஊருணி போன்றவைகளாக இருக்கலாம். அப்படி அனுபவித்து வந்த ஊருணி போன்ற குளங்கள் பலயிடத்திலே இனும்தாரர்களுக்கு அல்லது ஜமீன்தாரர்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலே அந்தக் குளங்களையும் உட்படுத்த வேண்டும்.

இதிலே பலயிடங்களிலே உள்ள சிக்கல் என்னவென்றால் பல பஞ்சாயத்துக்கள் பஞ்சாயத்துக் குளம் என்று கோர்ட்டுக்குப் போய், இனும் தாரர்கள் சொந்தக்குளம் என்று போய், எப்படியோ தனியார்களுக்கு குளம் சொந்தம் என்று உத்தரவுகூடப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தத்தின் மூலம் அம்மாதிரி குளங்களையும் அரசாங்கத்திற்கு "வெஸ்ட்" ஆகக்கூடிய நிலைமையிலே இருக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்டு 19

பட்டாவுக்குக் கூட மனுச் செய்து கொள்ளாமல் இதுவரையில் இருந்திருக்கிறார்கள். நான் சொல்வது எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட் அமலுக்கு வந்ததற்குப் பிறகு சொல்கிறேன். அந்த நிலங்களை அனுபவித்துக் கொண்டு வந்தவர்கள் சிறு நிலக்காரர்கள். குறிப்பிட்ட காலத்தில் மனுச் செய்து கொள்ளாமல் இருந்த நிலங்களையெல்லாம் புஞ்சைத் தரிசாக சர்க்கார் புறம்போக்கு கணக்கிலே எழுதப்பட்டிருக்கிறது. 10 செண்ட், 50 செண்ட், 70 செண்ட் என்று வைத்திருந்தவர்களின் நிலமெல்லாம், பலபேர் தெரியாமல் மனுக் கொடுக்க முடியாமல் இருந்தவர்களின் நிலங்கள் சர்க்கார் புறம்போக்கு கணக்கில் எழுதப்பட்டுவிட்டதால் அப்பொழுதிருந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தபொழுது அவுட்சைட் தி பர்வியூ ஆஃப் தி ஆக்ட்-இல் பர்மிஷன் கொடுத்தார்கள், வெளியிலேயிருந்து மனுக் கொடுத்தால் பட்டா கொடுக்கலாம் என்று. ஜமீன்தார்கள் இதிலே புகுந்து விளையாடிவிட்டார்கள். கடைசியாக சொந்தமாக அனுபவத்தில் இருந்த மாதிரி ரிகார்டு செய்து பட்டா வாங்கி இருக்கிறார்கள். அம்மாதிரி பட்டா வாங்கி இப்பொழுது அனுபவத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் சிறு நிலக்காரர்களை, ஒரு எக்கர், அரை எக்கர் வைத்திருப்பவர்களைச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட சிறு நிலக்காரர்கள் மனுக் கொடுத்து வாங்குவதற்குத் தெரியாமல் அதனால் வாங்க முடியாமல் இருந்தால் அவர்களுக்கு நிலங்களைக் கொடுப்பதற்கு இந்த அனுமதியைத் தரலாம். ஆனால் இதைப் பயன்படுத்திக் கொண்டு நூற்றுக்கணக்கான எக்கர் நிலங்களை அவுட்சைட் தி ஸ்கோப் இந்த உத்தரவின் கீழே பட்டா வாங்கியிருக்கிறார்கள். அதிலே எவ்வளவு பேர் பட்டா வாங்கியிருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் கணக்கெடுக்க வேண்டும். ஒரு எக்கர், அரை எக்கர் வைத்திருப்பவர்களைச் சொல்லவில்லை, 40 எக்கர், 50 எக்கர் உள்ளவர்கள் இனாம்தாரர்கள் பட்டா வாங்கியிருக்கிறார்களா என்று பார்த்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். சர்க்காரை ஏமாற்றி வாங்கி இருக்கிறார்கள் என்பது என்னுடைய கருத்து. அம்மாதிரி நிலங்களை எடுத்து நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

சீலிங் என்பது டிரஸ்டின் பெயரால் வாங்கப்பட்டிருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்கு வழியிருக்கிறது என்று சட்டத்தில் புகுந்து விளையாடிக் கொண்டு வருகிறார்கள். நம்மைப் போன்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அந்த நிலங்கள் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கணக்கெடுத்து அதையும் அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும் இதை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இந்தத் திருத்தத்திற்கான அவசியத்தை நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். நீதிமன்றத்திற்குச் சென்ற வழக்கிலே தனியாருக்கு அந்தப் பட்டாவைக் கொடுக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் வழக்கிலே முடிவு செய்ததால், குறிப்பாக இந்த வழக்கில்,....



1974 ஆகஸ்டு 19] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

The village of Keelapadavoor in Sivaganga taluk of Ramanathapuram district was taken over as an Inam Estate under the Estates Abolition Act, 1948 on 7th September 1949 and ryotwari settlement introduced in fasli 1367. A suit was filed against the State on the file of the District Munsif Court, Paramakudi claiming title for the suit land classified as Oorani poramboke at settlement. The suit was opposed by the State but was decreed against it. An appeal was filed by the State in the District Court, Ramanathapuram, which too was dismissed. Against these concurrent findings, a Second Appeal was filed by the State in the High Court. The High Court has found the suit property consisting of Oorani and Thidal belonged to the Raja of Sivaganga as his private property relying on the possession of the defendants for the period of 70 years and not a communal property. Hence the High Court has upheld the concurrent findings of the lower courts and dismissed the second appeal.

இந்த வழக்கிலேகூட ஊருணியைப் பொறுத்துத்தான் வழக்கு நடந்திருக்கிறது. ஐந்து எக்கர் ஊருணி தனிப்பட்டவர்களுக்குச் சொந்தம் என்று உயர்நீதி மன்றம் முடிவு செய்த பிறகு அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது என்று கருதி இப்போது திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்திலே—

**Any ryotwari patta granted in respect of any private tank under this Act, before the date of the publication of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1974 in the Tamil Nadu Government Gazette, shall stand cancelled, and for the purposes of compensation under this Act, the private tank shall be deemed to be land in respect of which neither the landholder nor any other person is entitled to ryotwari patta under this Act.**

தனிப்பட்ட ஏரிகள் எல்லாம் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்ற திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் ஊருணியும் சேருமா என்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள்.

With effect on and from the notified date and save as otherwise expressly provided in this Act—

(b) the entire estate (including all communal lands, poramboke**s** : other non-ryoti lands ; waste lands; pasture lands; lanka lands; forests; mines and minerals; quarries rivers and streams; ***tanks (including private tanks) and irrigation works.***

"டாங்க்ஸ் அண்டு இரிகேஷன் ஒர்க்ஸ்" என்று இருக்கிற காரணத்தால் ஊருணியும் அடங்கும். அதுதான் இண்டர்பிரட்டேஷன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அவசியம் என்று கருதுகிற காரணத்தால், அரசாங்கத்தின் சார்பாக ஒரு திருத்தம் கொடுப்பதாக இருக்கிறோம். "ஊருணியும் சேர்த்து" என்ற திருத்தத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே நம்பர் ஆப் பிரைவேட் டாங்க்ஸ்—திருச்சி மாவட்டத்தில் 109; சேலம் 368; மதுரை 6; தஞ்சாவூர் 18; கோவை 7; செங்கற்பட்டு 7. ஆக 500-க்கு மேற்பட்ட தனியார் ஏரிகள் இருக்கின்றன. இதை எல்லாம் பரிசீலித்துதான் இப்போது திருத்தம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. டாங்க் என்று எடுத்துக் கொள்ளும்போது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை. இதுவரை தனியார் ஏரியாக இருந்த காரணத்தால், அந்த ஏரியின் மூலம் பாய்கின்ற நிலங்கள் வெட் லாண்ட்ஸ்-ஆகக் கருதப்படுகிற நேரத்தில் ஏற்கனவே ட்ரை லாண்ட்சுக்குக் கொடுக்கப்பட்ட காம்பன்சேஷனைவிட வெட் லாண்டுக்கு ஏன் அதிகமாகக் காம்பன்சேஷன் கொடுக்கும் அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. இந்தத் திருத்தம் சாதாரணமான திருத்தம், அவசியமான திருத்தம்.

திரு. அழகர்சாமி அவர்களும், திரு. மாரிமுத்து அவர்களும் ரயத்துவாரி பட்டா கிராமங்களிலே இருக்கின்ற தனியார் குளங்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள்? சில கிராமங்களில் அரசாங்க ஏரிகளைப் பராமரிப்பதற்காக என்று தனியாருக்கு விட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தனியார்கள் தங்களுடைய செல்வாக்கை, கிராமத்திலுள்ள செல்வாக்கைத் தவருகப் பயன்படுத்துகின்ற காரணத்தால், சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். கோவை மாவட்டத்திலே, ஈரோடு தாலூக்காவிலே பழைய கோட்டை பட்டக்காரர் உறவினர்—மாமனார் என்று நினைக்கிறேன். அவருக்கு—அரசாங்க ஏரியைப் பாதுகாக்கின்ற உரிமை கொடுக்கப்பட்டிருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் அதுபற்றி பல விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். அதை ரெஸ்யூம் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. என்னுடைய தொகுதியான உடுமலைப்பேட்டை வட்டத்தில் ராமகுளம் எஸ்டேட் என்று ஒரு எஸ்டேட் இருக்கிறது. அங்கு ராமகுளம் என்ற தனியார் குளம் இருக்கிறது. அதிலிருந்து ராமகுளம் வாய்க்கால் வழியாகத் தண்ணீர் கொண்டு போகும் நிலைமை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. அந்த எஸ்டேட்டைப் பல பேருக்கு விற்று விட்டார்கள். விலைக்கு வாங்கியவர்களுக்கு முறையாகத் தண்ணீர் பாயவில்லை. அந்தக் குளம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. விவசாயிகள் சார்பாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்ட பிறகு அந்த ராமகுளத்தை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : திருநெல்வேலி மாவட்டம் போன்ற பல மாவட்டங்களில் பல தனியார் குளங்கள் இருக்கின்றன. பரம்பரையாக நாமினல் டாக்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் மீன்





பிடிக்க பத்தாயிரத்திற்கு மேல் ஏலம் விடுகிறார்கள். இது பரம்பரையாக நடந்து வருகிறது. இதை ரத்து செய்ய வேண்டும். அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானம் நஷ்டம் அடைகிறது. அந்த முறையை ரத்து செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிப்பட்டவர்களுடைய குளங்களை அவசியம் என்று கருதினால் அரசாங்கம் எடுத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. எங்கெங்கு அந்த மாதிரி குறைபாடு இருக்கிறது என்று சொல்லி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். "எங்கெங்கு டாங்க் என்று வருகிறதோ அந்த இடத்தில் ஊருணி என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்று திருத்தம் அரசாங்கத்தின் சார்பில் வருகிறது. அந்தத் திருத்தத்தை விவாதம் இல்லாமல் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு–ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பிரிவு 2.

MR. SPEAKER : The question is : "That Clause 2 do stand part of the Bill."

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir I move the following amendment :—

"In Clause 2, for the words and brackets "tanks (including private tanks)", *substitute* the words and brackets "tanks and Ooranies (including private tanks and Ooranies)".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2 திருத்தப்பட்டபடி பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3

MR. SPEAKER : The question is —

"That Clause 3 do stand part of the Bill".

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I move the, following amendment :—

"In Clause 3, in the new Section 14-A, for the words "private tank" wherever they occur, *substitute* the words "private tank or oorani".

திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 3, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 4, 5 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sri I move :—

"That the Tamil Nadu Estates (Abolition and Conversion into ryotwari) Amendment Bill, 1974 (L.A. Bill No. 27 of 1974), as, amended, be passed."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(முற்பகல் 11-00)

(இ) [1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தம்—பதவிக் காலத்தை நீட்டித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு.]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே,

"1974 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்—பதவிக் காலத்தை நீட்டித்தல்) மூன்றாவது திருத்த சட்ட முன்வடிவு*" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். என்று நான் முன்மொழிகிறேன்.

*14—8—74 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



நகராட்சி உறுப்பினர்களின் பதவிக்கால அளவு தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு 19-வது சட்டத்தின் மூலம் 1974ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல்நாள் வரை கடைசியாக நீட்டிக்கப்பட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். நகராட்சிகளுக்கும், மதுரை மாநகராட்சிக்குமான சாதாரண தேர்தல்கள் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் கடைசி வாரத்தில் நடத்தப்படும் என்று நான் இந்த அவையில் அறிவித்ததை மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் நினைவு கூறலாம். ஆனால் இதற்கிடையில் நகராட்சித் தேர்தல்களில் பயன்படுத்துவதற்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடை முறைபற்றி முக்கியமான முடிவு ஒன்று எடுக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு பிப்ரவரியில் கோயம்புத்தூர் மேற்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கும் கோயம்புத்தூர் நாடாளுமன்றத் தொகுதிக்கும் நடைபெற்ற இடைத்தேர்தலில் வாக்குச் சிட்டுகள் இணைப்புச் சீட்டுடன் அச்சடிக்கப்பட்டன. நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை நடத்தும் போதும் இணைப்புச் சீட்டுடன் கூடிய வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடைமுறையைப் பின்பற்றுவதென முடிவு செய்யப்பட்டது. அப்போதுதான் சட்டமன்றத்திற்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் நடத்தப்படும் தேர்தல்களில் பயன்படுத்துவதற்காக வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஒரு சீரான நடைமுறை நிலவ முடியும்.

அதற்கிணங்க, மாநகராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு நடைபெறும் தேர்தல்களிலும் இணைப்புச் சீட்டுடன் கூடிய வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நடைமுறையைப் பின்பற்றுவதென முடிவு செய்யப்பட்டது. வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதில் ஏற்பட்ட இந்த முக்கியமான மாற்றம் காரணமாக மாநகராட்சிகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் விதிகளில் விரிவான திருத்தம் செய்யவும், கூடுதலாக வாக்குச் சாவடிகளை ஏற்படுத்தவும், வாக்குப் பதிவு பணியாளர்களைக் கூடுதலாக நியமிக்கவும், கூடுதலாக வாக்குப் பதிவு பொருள்களை வாங்கவும், கூடுதலாக காவலர் பாதுகாப்பை ஏற்படுத்தவும் வேண்டியிருந்தது.

இந்த முடிவின் விளைவாக ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ஒதுக்கப் படும் வாக்காளரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டி யிருந்தது. அவ்வாறே வாக்குச் சாவடி ஒன்றுக்கு ஒதுக்கப்படும் வாக்காளர் களின் உயர்ந்தளவு எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டுமென்று திருத்தக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. அதன் விளைவாக நகராட்சிகளுக்கு நடை பெறவிருக்கும் சாதாரண தேர்தல்களில் பயனுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநரால் ஏற்கனவே ஏற்பளிக்கப்பட்ட வாக்குச் சாவடிகளின் பட்டியல் ரத்து செய்யப்பட்டு நகராட்சி ஆணையாளர்களிடமிருந்து புதிய செயற்குறிப்புகள் ஆய்விற்காகவும் ஏற்பளிப்புக்காகவும் கேட்கப்பட வேண்டி யதாயிற்று. இணைப்புச் சீட்டுடன் கூடிய வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக அரசு அச்சகத்திற்கு போதுமான கால அளவு அனுமதிக்கப்பட வேண்டிய தாயிற்று. இது காரணமாக 1974 ஜூலையில் தேர்தல்களை நடத்தும் வகையில் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முடிக்க இயலவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

[ திரு. அ. பெ. தர்மலிங்கம் ] [1974 ஆகஸ்டு 19

அரசு நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவை மேற்கொண்டும் நீட்டிக்க வேண்டியிருந்தது. ஆனால், தமிழ்நாடு 1971-ம் ஆண்டு 22-வது சட்டத்தைத் திருத்தாமல் நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் கால அளவை 1974 ஆகஸ்டு முதல் நாளுக்குப் பிறகு நீட்டிக்க முடியவில்லை. ஜூன் 1974-ல் சட்ட மன்றக் கூட்டம் நடைபெறாததால், 1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்,பதவிக்கால அளவு நீட்டித்தல்) மூன்றாவது திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்ட எண். 2/1974) ஜூன் திங்களில் சாற்றுரைக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த அவை முன் உள்ள சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த சட்டமுன் வடிவை நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வலிமையாகக் கண்டிக்கிறேன்.

இந்தத் திருத்தத்தை மூன்றாவது முறையாக இந்த மன்றத்திலே இதே அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு முறை கொண்டுவரும்போதும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்கிறார்கள். மார்ச் மாதத்தில் அமைச்சர் அவர்கள் ... .. . . . . ......

**Act 11/74—An Act to further amend the madras Municipal Corporation and Tamil Nadu District Municipaltiies Act (Extension of Terms.)**

என்ற மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இப்போது கூறப்பட்டிருக்கும் காரணங்கள் அப்போது கூறப்படவில்லை. நமது அமைச்சர் அவர்கள் தன் திறமையைப் பயன்படுத்திக் கொண்டு தன் கற்பனையை பயன்படுத்திக் கொண்டு இப்போது ஒரு புதிய காரணத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

**He wants us to swallow this.**

இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எலக்ஷன் கமிஷன் புதிதாக ஒரு முறையைக் கையாள்கிறார்கள். கையெழுத்து போட்ட ஒரு கவுண்டர் பாயில் கொடுக்க வேண்டும் என்பது புதிய முறை. கோவை மேற்குத் தொகுதியிலும், பாராளுமன்றத் தொகுதியிலும் நடைபெற்ற இடைத் தேர்தல்களின்போது ஒரு புதிய முறையைப் புகுத்தியிருக்கிறார்கள்.



1974 ஆகஸ்டு 19] [டாக்டர் எச்.வி. ஹாண்டே]

அதை நாம் இங்கே பயன் படுத்துகிறோம், என்பது அவர்களுடைய வாதம். கோவை மேற்குத் தொகுதித் தேர்தல் எப்போது நடந்தது? பெப்ரவரியில் நடந்தது. பிறகு ஒரு திருத்தம் வந்திருக்கிறது. அதில் இந்தக் காரணம் குறிப்பிடப்படவில்லை. அது மொட்டையாக இருக்கிறது. பல பணிகள் செய்யவேண்டும் என்று கூறி எதையும் குறிப்பாகக் குறிப்பிடாமல் எக்ஸ்டென்ஷன் கேட்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒரு காரணத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது ஜனநாயகத்தை முடக்கி பங்க்ஷன் செய்யாமல் ஆக்குவதுதான் என்றுதான் நான் கூறுகிறேன். பல காரியங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. ஒரு வாரத்திற்கு ஒரு காகிதம் வருகிறது. சிவகாசி முனிசிபாலிட்டி, அந்த முனிசிபாலிட்டி. இந்த முனிசிபாலிட்டி என்றெல்லாம் வருகின்றன. நான் கேட்பது, இதை எப்பேபது செய்திருக்கவேண்டும் ? இவருக்கு முன்பிருந்த அமைச்சரே செய்திருக்ககூடாதா? இதைல்லாம் ரொட்டீன் வொர்க். ஒரு ஆண்டுக்கு முன்பே இதையெல்லாம் செய்திருக்கக்கூடாதா? ஏன் முன்பே முடிக்கவில்லை? புதிய காரணங்களைக் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். முன்பேயே ஏன் செய்து முடிக்கவில்லை.

**What was the difficulty ?**

பெரிய எஸ்டாப்ளிஷ்மென்ட் இருக்கிறது, அதிகாரிகள் இருக்கிறார்கள். ஏன் இந்த டிலிமிட்டேஷனை முன்பே முதலிலேயே செய்யவில்லை? ஒரு வாரம் ஒரு முனிசிப்பாலிட்டி, இன்னொரு வாரம் இன்னொரு முனிசிபாலிட்டி என்று தொடர் கதை மாதிரி செய்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

**A Bill further to amend the Madras city Mu icipal Corporation and Tamil Nadu District Municipalitie Act.**

இது ஒரு காம்ப்ரிஹென்ஸிவ் ஆக்ட். மதராஸ் ஸிட்டி கார்ப்பரேஷன் விவகாரங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. மதராஸ் கார்ப்பரேஷன் நிலை என்ன? குற்றச்சாட்டு போட்டிருக்கிறார்கள். அவை என்ன முடிவிற்கு வந்திருக்கின்றன? ஸ்டேல்மாட்டாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அத்தனை பேர்களையும் பார்க்கிறேன். அங்கங்கே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு யார் பேரிலும் தனிப்பட்ட முறையில் விரோதம் இல்லை. நடவடிக்கைகள் எடுப்பதைபோல் ஒரு தோற்றத்தைக் கொடுத்து, கடுமையான தண்டனை கொடுப்பது மாதிரி மக்களிடையே ஒரு பரபரப்பான நிலையை உருவாக்கி பிறகு படிப்படியாக ஒவ்வொருவரும் சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்து வெளியே வரும் ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு யாரை நான் கண்டிப்பது? அரசாங்கத்தை கண்டிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் ? அதற்கு ஒரு முற்றுப் புள்ளி இந்தத் திருத்தத்தில் உண்டா?

மதுரை மாநகராட்சி பற்றி அடுத்து ஒரு மசோதா வருகிறது மதராஸ் கார்ப்பரேஷனைப் பொறுத்த வரையில் எப்போது தேர்தல் வைக்கப் போகிறோம் என்பது பற்றி ஒரு பிரஸ்தாபமோ, பேச்சோ கிடையாது.

**Public memory is short. your are relying on pnblic memory being short,**

பொதுமக்களின் மெமரி ஷார்ட். மக்கள் மறந்து விடுவார்கள் என்ற எண்ணத்தில்தான் தொடர்ந்து இம்மாதிரிக் காரியங்களில் ஈடுபடுகிறார்கள்.

முனிசிப்பாலிட்டி அப்கிரேடிங் எல்லாம் இருக்கிறது. அதைப் பற்றி என்ன சொல்லப் போகிறார்களோ. எனது குற்றச்சாட்டு என்னவென்றால், திட்டமிட்டு வேண்டுமென்றே பொது மக்களிடம் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தேர்தலை தள்ளி வைப்பதற்கான ஏற்பாட்டை செய்திருக்கக்கூடிய ஒரு சதித் திட்டம் இது. தமிழகத்தின் அரசியல் சூழ்நிலை மாறவில்லை என்றால் நிச்சயமாக இதற்கு முன்பே கொண்டு வந்திருப்பார்கள். சென்ற ஒன்றரை வருடங்களாகப் பார்க்கிறோம். பல இடைத் தேர்தல்கள் வந்திருக்கின்றன. அதில் பொதுமக்களின் தீர்ப்புகளைப் பார்க்கிறோம். அதைப் பார்த்துவிட்டு அடுத்து முனிசிபல் தேர்தல் வைத்துவிட்டால் தி.மு.க. விற்குச் சாதகமாக இருக்காது என்பது அமைச்சர் அவர்களுக்கு என்னைவிட நன்கு தெரியும். அவர்கள் சரியாக எடை போடக்கூடிய சக்தி உள்ளவர்கள். அவர்கள் நல்ல சாமர்த்தியசாலி, நல்ல கெட்டிக்காரர், என்ன செய்யப் போகிறார்கள் என்று சொல்கிறேன்.

**You are going to postpone it piecemeal.**

ஆகவே, படிப்படியாக தள்ளிவைத்து தள்ளிவைத்து—ஜெனரல் எலக்ஷன்ஸ் 76 பெப்ரவரியில் வருகிறது. அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு இந்த மாதிரி தேர்தல்கள் நடைபெற முடியாது. 1975 ஜுன்-க்குப் பிறகு பொதுத் தேர்தல் வருகிறது என்பதால் இதைத் தள்ளிவைத்திருக்கிறது என்று இன்னொரு திருத்தத்தைக் கொண்டு வரலாம். இன்னொரு அரசாங்கம் வந்து செய்யட்டும் என்று செய்யவில்லை என்றால் பார்க்கட்டும். ரொம்ப கெட்டிகாரத்தனமாகச் செய்கிறார்கள். தி.மு.க. விற்கு பர்தர் டிமாரலை சேஷன் ஆகப் போகிறதே என்று இப்படிச் செய்கிறார்கள்.

அந்த சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன். அதைத்தான் நிச்சயமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.



ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். இதற்குப் பிறகு இன்னும் அடுத்து ஒத்தி வைக்கும் நிலைமை எப்போது வரும் என்பதை முன்கூட்டியே சொல்லிவிட்டால், எத்தனை முறை வரும் என்பதை முன் கூட்டியே சொல்லவிட்டால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு) அமைச்சருக்கே தெரியாது, உங்களுக்கு எப்படிச் சொல்ல முடியும்? 1976-க்குப் பிறகு கூட செல்லுமா என்று சொல்லுங்கள்.

இதைப்பொறுத்த வரையில் நான் சொல்ல விரும்புவது, இது ஜனநாயகத்தை முழுக்க முழுக்க உடைத்து வைக்கும் ஒரு செயலாகும். இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பலவீனத்தை எடுத்துக் காட்டக் கூடிய ஒரு திருத்தமாகும் என்று சொல்லி, எங்கள் கட்சியின் சார்பாக வலிமையாக, கடுமையாக, எவ்வளவு சொற்கள் கடுமையான சொற்கள் பயன்படுத்த முடியுமோ—அதைச் சொல்வது நாகரீகமாக இல்லை என்று சிலபேர் சொல்வார்கள்—அவற்றைப் பயன்படுத்தி, என்னுடைய சொற்கள் கடுமையாக இல்லாவிட்டாலும், எவ்வளவு கடுமையாக இதை எதிர்க்க வேண்டுமோ அவ்வளவு கடுமையாக இதை எதிர்க்கிறேன் என்று சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன்.

திரு எஸ். வடிவேல்: துணைத் தலைவரவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது மாநகராட்சி, நகராட்சி, தேர்தல்களை ஒத்தி வைப்பது என்று இங்கே ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு மனதில் பட்டதை தைரியமாகச் சொல்லும் அமைச்சர். அப்படிப்பட்ட ஓர் அமைச்சர், இப்போது இந்தத் தேர்தலை மூன்றாவது தடவையாக ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை நாம் பார்த்தாக வேண்டும். இது ஒரு ஜனநாயக முறைக்குச் சரியான முறை அல்ல என்று நான் அரசுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, தேர்தலில் மக்களை சந்திக்க இந்த அரசு பயப்படுகிறது. நடந்து முடிந்த தேர்தல்கள் அத்தகைய குறிப்புகளை வழங்கியிருக்கிறது. இந்தத் தேர்தலை இன்று நடத்தினால், இன்று மக்கள் உணவுக்காக ஆலாகப் பறக்கும் நிலையில் நிச்சயமாக இந்த அரசுக்கு நாமம் போடுவார்கள் என்று தெரியும் அமைச்சருக்கு. அதன் காரணமாகத்தான் இந்த மாநகராட்சித் தேர்தலையும், நகராட்சித் தேர்தலையும் ஒத்தி வைக்க இன்று முனைந்து இருக்கிறார் என்று நான் சேர்ந்து இருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

என்ன இருந்தாலும், இதை இடையிடையே நிறுத்தி, அரசு மீது மாசுமருவில்லாமல் காட்டி மக்களிடம் ஓட்டுப் பெறுவது என்பது இனி முடியாத காரியம். தமிழ்நாட்டில் இருக்கும் $4\frac{1}{2}$ கோடி மக்களும் இந்த அரசின் சாதனைகளை, வேதனைகளை பொறுமையோடு பார்த்துக்

கொண்டிருக்குகிறார்கள். நீங்கள் இன்றைக்கு நல்லது செய்து இருந்தால் நிச்சயமாக நாட்டு மக்கள் உங்களுக்கு நல்ல தீர்ப்பு அளிப்பார்கள். அதைத்தான், "நல்லறம் பாடிய மன்னனை வாழ்த்தி, நலம் புரிவாள் எங்கள் தாய். அல்லவராயின் அவரை விழுங்கிப் பின் ஆனந்தக் கூத்திடுவாள்" என்று பாரதி பாடினார். நல்லறத்தோடு ஆட்சி நடத்தி, மக்களின் நலனுக்காக நல்லாட்சி நடத்தினால் எந்தத் தேர்தலுக்கும் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. தைரியமாகத் தேர்தலை நடத்தலாம். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டியது போல், அந்தத் தேர்தலை நடத்த உடனடியாக திட்டமிட வேண்டுமென்று உங்களை பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகையால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் சரியான முறையல்ல என்று கூறி, இதை பலமாக எதிர்க்கிறேன் என்று சொல்லி என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Hon. Deputy Speaker Sir, I never expected that the Madras City Municipal Corporation election would be coupled with the general Municipal Elections. Anyhow, since it has been done and since there is lot of speculation, I wish to clarify certain things.

Firstly, everybody knows that the City Municipal Corporation has been superseded and it is more than 9 or 10 months since the case had been taken up for investigation and investigation is going on and nobody knows who are guilty. People have been accused, some have been found to be accused, but the case has not gone to the Court. Unless the matter goes to the court and the fault is pinpointed on certain people, the public are at a loss to know who are the real culprits.

Dr. Hande found it wrong that people were going about. There is nothing wrong if people go about the country, because they are on bail. I do not find anything wrong in it. If they are not on bail, that is wrong. Unless the case goes to the court, and the fault is pinpointed on certain people, nobody can say who is the accused. A number of councillors are involved. I do not want to go into the details because it is *sub judice*. I want to say that the power of management of the Corporation rests with the executive and the council is only an approval body. The Executive Head is the Commissioner and his subordinates. If anything goes wrong, and if it is found that some councillors had colluded



with the executive, then there is a case. But now it is said many councillors are involved : not only councillors of the D.M.K. but people belonging to the Congress, to the A.D.M.K. and also Swathanthra, if I am not wrong. Unless the thing goes to court, one cannot say who is guilty.

I think Dr. Hande should help us to let it go to the Court immediately. My only accusation is that this Government is allowing a lot of delay in investigation. That should not be there. If I am an accused and if I am given bail, I live in suspense for 9 or 10 months. I may not survive to go to the court. Think of the mental agony of these people. Some of them may even commit suicide and they do not know what is going to happen to them in the end. So what I request the Government is to expedite the prosecution. I may say with my 22 years of experience in this Corporation . . . .

THIRU B. VENKATASWAMY : The hon. Member was saying that some people are going to commit suicide. How does he know it ?

THIRU K. M. SUBRAMANIAM : I meant that some people are likely to commit and if that is wrong, I shall withdraw it. But I know the agony of the people, the mental agony . . . .

MR. DEPUTY SPEAKER : Have you at any time experienced such an agony ?

THIRU K. M. SUBRAMANIAM : Fortunately not. But when I see my friends with whom I have had contacts, it is not joke for ordinary citizens to see friends in agony and that is my lot. For 22 years I had been with the Corporation Council. I am able to see their agony and I feel agonised. I am not saying this for the sake of the Assembly. Therefore, there must be quickness in dealing with the case. You cannot go on investigating. You and I know the position of politicians today. He is the most hated person ; one party M.L.A. says the other party man is corrupt and this M.L.A. says that the other party man is corrupt. The public think that everybody is corrupt. To-day,

the M.L.As. are the worst people living on earth and this is said by the M.L.As. themselves. This is the politics of our Country.

Every party is involved in this Corporation scandal. There is no use in one party accusing the other party. People are aware of it.

So far as the separation of the Corporation affairs is concerned, I entirely agree with the hon. Member Dr. Hande. There are two things. They should be separated from the other.

As far as the voters lists are concerned, I do not know whether they have been finalised, whether they have been published or whether they have been completed. So far as the City is concerned, there is a delimitation proposal. I have not seen the order with regard to this on the Table of the House uptills now. What has happened to that delimitation proposal? People are very much interested in the delimitation proposal. To-day I am telling with great mental agony, that the Madras citizen feels that he is an orphan. He has nobody to represent him in the Madras Corporation. If you go to the Rippon Buildings, the corridors are clean and there is no crowd. Nobody is there because there is no people's representative. Why such a position is there? People used to go there to represent their grievances to the elected representatives and have them redressed in a democratic way through their representatives in the democratic institution. Nobody is dare enough to go there to-day. There is only a Special Officer. The Special Officer has come from outside and he is not even guided by a Committee. I am not accusing the Special Officer.

To-day all the M.L.As. are in Madras City. Let them go and see the streets of Madras. If there is small showers, what will be the fate of these streets and roads? Nobody is there to look after these streets. All the streets will be in knee-deep water The cleaning of public latrines, the painting of public latrines and repairs to school buildings are only attended by the Corporation staff. What about the roads and streets?



What about the construction and maintenance of markets? Even the M.L.As. are not aware of the Budget proposals of the Corporation. What are the proposals they have got, etc., are not known even to M.L.As. I agree with the hon. Member Dr. Hande on this point.

But I do not agree with him that it is a deliberate or wanton attempt on the part of the Ruling party to postpone or adjourn the elections. One day or other they have to face the public. I do not think the ruling party has done anything wrong or worse than the non-ruling or opposition party in the Council. It is crystal clear. I know what the ruling party has done. They have done much better than the Congress. I can compare with greater authority the work done by the ruling party with the Congress regime. I have got a right to complement the people who have done good to the people. The D.M.K. has done wonderful work during the last 10 years. When I say this, some people think that I am going to be a D.M.K. Councillor next time. I may tell the House that I am not going to stand for the election.

How many important improvements have taken place in the City with regard to water supply, drainage, etc. I would say that they are not enough. How we are having a benign dictatorial rule in the Corporation. It appears as if people are losing faith in democracy. People talk that politicians are useless and that democracy is not good for our country and if the Government is abolished, everybody will be happy and that everything will be good. We should not give room for such a thinking.

Therefore, I request the Government to hurry up with the delimitation proposal and publish the delimitation map so that the Government can, hurry up with the elections. Whatever may be the astrological calculations of political parties, I can tell you, if you do good, the people will elect you and if you have done wrong, you will not be elected. People know the Congress mistakes, D.M.K. mistakes, A.D.M.K. mistakes and Swatantra Party's mistakes.

THIRU R. PONNAPPA NADAR: His mistakes also.

THIRU K. M. SUBRAMANIAM : I am sure the Government will publish delimitation map as early as possible. Let the public understand who is wrong and who is right. I do not want to forecast the judgement because it will be wrong to say so.

I would definitely say that the mental agony the Councillors are experiencing for the past 9 months is a sufficient punishment for them, even if they have done anything wrong. I think that attitude the Politicians should take. I do not say that the cases should be withdrawn. The cases need not be withdrawn. I request the Hon. Minister to hurry up the prosecution and see that, judgement is given so that the people may have the chance to decide to whom to vote. If that chance was given to the people, I think the people will prefer to vote for Independents like me and not any other party people.

THIRU R. PONNAPPA NADAR : May I ask the hon. Member one question ? Will it be possible to have a Corporation consisting of Independents, as the hon. Member contemplates ?

THIRU K. M. SUBRAMANIAM : I am very greatful to the hon. Member for his question. This question has come from a responsible leader of a responsible party. I welcome this question with folded hands. If all the parties connected with the Elections decide not to have party politics in the Corporation elections and Panchayat elections, if the hon. Member R. Ponnappa Nadar decides if the Congress and other parties decide not to have party politics and if the D.M.K. also decides not to have porty politics in the Corporation, it will be an ideal day for the Corporation. What is happening to-day ? The Corporation Committees are manned by majority party. The people who are involved in the Corporation scandal are talking much about it. I cannot help it. Let the hon. Member need not think that I am seeking any-body's help. I may inform the hon. Member by the by that I am not standing for election.

As far as the administration of the Corporation is concerned, there are three wings in the Corporation, the Mayor, the Corporation Council and the Committees of the Council. All the three are administrative bodies. . .



MR. DEPUTY SPEAKER : I want to know whether the hon:. Member is answering a question or making another speech.

THIRU K. M. SUBRAMANIAM : Since the hon. Member has raised a question. . .

MR. DEPUTY SPEAKER : Please resume your seat. Thiru A. Subramaniam.

*திரு அ. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட திருத்தத்தை என்னுடைய கட்சியின் சார்பிலே கடுமையாக எதிர்த்து ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இந்த சட்ட திருத்தத்திற்கான நோக்கங்களை சொல்லும்போது பல காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் காரணங்களையெல்லாம் பார்க்கும்பொழுது சிரிப்பதா, அழுவதா என்று எனக்குத் தெரியவில்லை. அவ்வளவு "ஃபிலிம்ஸி" யான மிகச் சாதாரணமான காரணங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள் இந்த மசோதாவிலே.

(முற்பகல் 11-30)

ஒரு காரணம் கவுண்டர்ஃபாயில் அச்சடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த கவுண்டர்ஃபாயில் அச்சடிக்க வேண்டுமென்பது கடந்த பிப்ரவரியிலே முடிவாயிற்று. அதை அமுல்படுத்த வேண்டுமென்று சொல்வதற்குப் பல மாதங்களுக்கு முன்னால் தேர்தல் கமிஷனில் முடிவு செய்யப்பட்டு விட்டது. இந்த முடிவு ஏறத்தாழ ஓராண்டு காலத்திற்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. அப்படி இருக்கும்போது கவுண்டர்ஃபாயில் அச்சடிப்பதற்கு என் காலதாமதமாகிறது என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்த காரணம் விதிகளைத் திருத்த வேண்டுமென்பது. போலிங் ஸ்டேஷன்களை அதிகமாகப்போட வேண்டும், அப்படிப் போடும்போது அதற்கு போலிங் பர்சானல் அதிகப்படுத்தப்பட வேண்டும். போலீஸ் பந்தோபஸ்து அதிகம் போட வேண்டும் என்று எல்லாம் சொல்கிறார்கள். இது வேடிக்கையாக இருக்கிறது. இவையெல்லாம் மிகச் சாதாரண விஷயங்கள். போலீஸ் பந்தோபஸ்து போடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? பெரிய குழப்பங்கள், கிளர்ச்சிகள் நடைபெறுவதாகத் தெரிந்தால், அந்தக் கிளர்ச்சிகள் நடைபெறுவதற்கு ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்ளாகவே வேண்டிய பந்தோபஸ்துகள் செய்யப்பட்டு விடுகின்றன. சீ.ஆர்.பி. இருக்கிறது. அண்டை மாநிலங்களில் போலீஸ் இருக்கிறது. அவர்களை உடனடியாக அழைத்துக் கொள்ளலாம். பல சந்தர்ப்பங்களில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது இதை ஒரு காரணமாகச் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், போலிங் மெட்டீரியல்ஸ் தயாரிக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தையும் கூறியிருக்கிறார்கள். போலிங் மெட்டீரியல்ஸ் என்றால், என்ன? காகிதம், நூல், அரக்கு இவைகள்தான் போலிங் மெட்டீரியல்ஸ். இவைகளைத் தயாரிப்பதில் என்ன தாமதம் ஏற்பட்டுவிடப் போகிறது? 400 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகின்ற ஒரு மாநில அரசு சட்டமன்றத்திலே இந்தக் காரணங்களைச் சொல்லலாமா? இது என்ன வேடிக்கை? ஏதாவது கதை சொல்கிறார்களா அல்லது தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சொல்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. கடைசியாக இன்னொரு வேடிக்கை.—

"It would also be necessary to allow sufficient time to the Government Press for printing of ballot papers with counter-foils"

என்று சொல்லியிருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் பிரசில் எவ்வளவோ அச்சடிக்கிறார்கள். எங்களுக்குக் கூட எத்தனையோ புத்தகங்கள் கவர்ன்மெண்ட் பிரசில் அச்சடித்து அனுப்புகிறார்கள். சில சமயங்களில் ஒவ்வொரு இலாகா பற்றி 100 பக்கங்கள் கொண்ட புத்தகமாகக்கூட அச்சடித்து அனுப்புகிறார்கள். இவைகளை எல்லாம் அச்சடிப்பதற்கு அரசாங்க அச்சகத்திற்கு நேரம் இருக்கிறது. ஆனால் ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் நடத்துவதற்கு மிக முக்கியமானவற்றை அச்சடிப்பதற்கு நேரம் இல்லை என்று சொன்னால் இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. இந்த அரசாங்கம் என்ன செய்கிறது என்பதையே என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. எல்லாம் வேடிக்கையாகவே இருக்கிறது.

இப்படிப்பட்ட வேடிக்கையான காரணங்களைச் சொல்வதற்குப் பதிலாக சுருக்கமாகச் சொல்லிவிடலாமே. எங்களால் தமிழ்நாட்டு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை. பல தவறுகளைச் செய்திருக்கிறோம். மக்கள் எங்கள் மீது ஆத்திரப்படுகிறார்கள். கோபப்படுகிறார்கள். அதனால் மக்களைச் சந்திக்க பயப்படுகிறோம். மக்களைச் சந்திப்பதற்கு வெட்கப்படுகிறோம், கூச்சப்படுகிறோம்; ஆகையால் தேர்தலைத் தள்ளிப் போடுகிறோம் என்று சொன்னால் அது உண்மை. அதை விட்டுவிட்டு, ஏதோ சின்னப் பிள்ளைகள் காரணம் சொல்வதைப்போல காரணம் சொல்வது முறையல்ல. ஏற்கெனவே இரண்டு முறை தேர்தலைத் தள்ளி வைத்திருக்கிறீர்கள் சென்ற சட்டமன்ற கூட்டத்திற்கு முன்னமேயே கோவைத் தேர்தல். முடிந்துவிட்டது. அதற்குப் பின்னால் உறுதியாகச் சொன்னார்கள். இந்த அமைச்சருடைய வார்த்தையில் சாதாரணமாக எனக்கு நம்பிக்கை உண்டு. நிச்சயம் ஜூலை மாதத்தில் தேர்தலை நடத்துவோம் என்று உறுதியாகச் சொன்னார்கள். அதற்கான வேலைகளைச் செய்வதற்கு கவர்ன்மெண்ட் பிரஸ் இருக்கிறது. அலுவலர்கள் இருக்கிறார்கள்; தேவையான மெட்டீரியல்ஸ் எப்போதும் இருக்கிறது. ஆகவே, எதிர்பாராத பிரச்சினைகள் எதுவும் புதியதாகத் தோன்றிவிடவில்லை. அப்படி இருக்கும்போது இந்த மாமன்றத்தில் கொடுத்த உறுதி மொழி என்னவாயிற்று.





ஏற்கெனவே இரண்டு முறை தேர்தலைத் தள்ளி வைத்துவிட்டு, இப்போது மூன்றாவது முறையாக 2 மாதம் தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மேலும் இரண்டு மாதம் தள்ளிவைப்பதற்கு மசோதாவில் அதிகாரம் கேட்கிறார்கள். இருக்கிறது என்று சொல்வார்கள். இதிலிருந்து எனக்கு ஒரு உண்மை புலனாகிறது. 1976 தேர்தலுக்கு முன் நீங்கள் நகராட்சி தேர்தல்களை நடத்தப் போவதில்லை. இப்போது பத்திரிகைகளில் பல செய்திகள் வருகின்றன. ஏதோ கண்ணன் தூது, மாதவன் தூது என்றெல்லாம் வருகிறது. ஒருவேளை இந்த தூது வெற்றி பெற்றால் தேர்தலை நடத்துவீர்கள்; இல்லை என்றால் நீங்கள் தேர்தலை நடத்தப்போவதில்லை. தூது வெற்றி பெறுமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. வெற்றிபெறவில்லை என்றால் 1976 தேர்தலுக்கு முன் நடத்தமாட்டீர்கள். இன்னும் எத்தனையோ காரணங்கள் உங்களுக்கு வரும். உங்கள் கட்சிக்காரர்கள் தலைவர்கள் இருக்கின்ற இடங்களில் யாரையாவது இரண்டு பேரை விட்டு, "எங்கள் பகுதியில் வார்டுகள் பிரிவினை சரியாக இல்லை; ஆகவே திருத்தி அமைக்க வேண்டும் அல்லது எண்ணிக்கையை கூட்ட வேண்டும் அல்லது புதியதாக எதையாவது சேர்க்க வேண்டும்" என்று பெட்டிஷன் போடச் சொல்வீர்கள். அவர்கள் அப்படிச் செய்வார்கள். அதை வைத்து, பரிசீலனையில் இருக்கிறது. ஆகையால் அதுவரையில் தேர்தலை தள்ளிப் போடுகிறோம் என்று சொல்வீர்கள். அவர்களுடைய கோரிகைக்காக மீண்டும் தள்ளிப் போடுகிறோம் என்று காரணம் சொல்வீர்கள். ஆகவே, இந்தமாதிரி தேர்தலை ஒத்தி வைப்பதற்கு ஆளும் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் மக்களை தேர்தலில் சந்திப்பதற்குத் தயாராக இல்லை என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு காரணம் எதுவும் இல்லை.

என்னுடைய தொகுதியாகிய சிங்காநல்லூர் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அங்கே ஒரு நகரசபை இருக்கிறது. அதுபற்றி பல புகார்கள் சொல்லியாயிற்று. அமைச்சரிடம் சொல்லியாயிற்று; எழுதியும் கொடுத்தாயிற்று. நகராட்சி உறுப்பினர்களே புகார் கொடுத்திருக்கிறார்கள் முன்பு கேட்டபோது இன்னும் ஒரு சில நாட்களில் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தி சொன்னார்கள். பல நாட்கள் போய், பல வாரங்கள் போய், பல மாதங்கள ஆகியும் இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி என்னென்ன செய்யப் போகிறார்கள், என்று அங்கே இருக்கின்ற நகரசபை உறுப்பினர்களுக்கும் தெரியாது"; சட்டமன்ற உறுப்பினருக்கும் தெரியாது; மக்களுக்கும் தெரியாது. அதற்குப் பின்னால் இருக்கிற நகரத்தைப் பிரித்து சில பகுதிகளை கோவை டவுனுடன் சேர்க்கப் போகிறார்கள் என்றும், சில பகுதிகளை டவுன் பஞ்சாயத்துக்களாகவும் வேறு சில பகுதிகளை டவுன்ஷிப்பாக ஆக்கப்போகிறார்கள் என்றும் ப்ரொப்போசல் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். இவை எல்லாம் நான் கேள்விப்பட்டதுதான். அது உண்மையா இல்லையா என்பதை அமைச்சரவர்கள்தான் சொல்ல வேண்டும். யாரையுமே கலக்காமல் இந்த அரசாங்கம் செய்கின்ற பல காரியங்களில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். அப்படியெல்லாம் ஒன்றும் செய்யாமல் எந்த முடிவெடுப்பதாக

இருந்தாலும் சம்பந்தப்பட்ட நகராட்சி உறுப்பினர்களையும் சட்டமன்ற உறுப்பினரையும் மற்றவர்களையும் கலந்த பின்னால் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை கார்ப்பரேஷன் கலைக்கப்பட்டு 7, 8 மாதங்கள் ஆகிவிட்டன, மஸ்டர் ரோல் ஸ்கான்டல் நடைபெற்றது இன்வெஸ்டிகேஷன் நடத்தி, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று உறுதியாகச் சொன்னார்கள். மாதங்கள் பல உருண்டோடி விட்டன. சிலரைப் பிடித்தார்கள், பாதுகாப்பில் வைத்தார்கள், சிலரை வெளி ஊர்களுக்கு அனுப்பினார்கள், ஜாமீனில் விட்டார்கள், பிறகு ஜாமீன் தளர்த்தப் பட்டது. இப்போது எல்லோரும் வெளியே வந்துவிட்டார்கள். வழக்கு என்ன ஆயிற்று என்பது யாருக்கும் தெரியாது. அதிலும் ஐயப்பாடு இருக்கிறது.

கார்ப்பரேஷன் தேர்தல் வரும்போதுதான் சார்ஜ் ஷீட் போடுவார்கள் என்று நினைக்கிறேன். அப்போதுதான் யார் யார் மீது போட்டு, யார் யாரை தேர்தலில் நிற்கவிடாமல் செய்வது, யார் யாரை மிரட்டுவது என்று திட்டமிட்டுச் செய்வார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கே. எம். எஸ். அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவ்வளவு சீக்கிரத்தில் முடியாது. தேர்தல் வரும் வரையில் புலன் விசாரணை நீண்டு கொண்டே போகும்.

இறுதியாக நான் அமைச்சர்களைப் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவை சட்டமாக்குவதன் மூலம் மக்களைச் சந்திப்பதற்கு நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று உங்கள்மீது மக்கள் ஐயப்பாடு கொள்வார்கள். அந்த ஐயப்பாட்டுக்கு இடம் இல்லாமல் செய்ய வேண்டுமானால் நீங்கள் தேர்தலை உடனே நடத்துவதுதான் முறை, தேர்தலிலே மக்களைச் சந்திப்பதுதான் முறை என்று சொல்லி, நகரசபைத் தேர்தல்களை உடனே நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எங்கள் கட்சியின் சார்பில் இந்த மசோதாவை எதிர்க்கிறேன் என்று சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திருமதி ஜோதி வெங்கடாசலம் :</u> தலைவரவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நகர மன்றம், மாநகராட்சி தேர்தலையொட்டிய மசோதா நம்முடைய சென்னை மாநகராட்சி 1—12—1973-ல் கலைக்கப்பட்டது. அதன் பிறகு மறுபடியும் மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு இரண்டு முறை திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இது மூன்றாவது திருத்தமாக வைக்கப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் கூறியதுபோல இந்தத் திருத்தம் வருவதற்கு அவசியம் என்ன என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை.





எல்லா டிவிஷன்களிலும், மாநகராட்சி நிர்வாகத்தில், கவுன்சிலர்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருந்த போதே அந்தந்த டிவிஷன்களின் தேவைகள் எல்லாம் செய்யப்படாமல் இருந்தன. சாதாரண மக்களுக்கான வசதிகள், குடி தண்ணீர். விளக்குகள் மற்றும் வீதிகளைச் சுத்தப்படுத்துதல், ரோடுகள் போடுதல் போன்ற பணிகளைச் சரியாகச் செய்யவில்லை. இப்படிப்பட்ட மிக முக்கியமான தேவைகளைக் கூட செய்ய இயலாத நிலைமை இருந்தபோது, இன்றைக்கு 9 மாதங்களுக்கு மேல் டிவிஷன்களில் கவுன்சிலர்கள் இல்லாமல் மக்கள் குறைகளைக் கூறவும், முக்கிய வசதிகளைப் பெறப்படுகின்ற பாடு அரசுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

இந்தத் திருத்தம் வருவதற்குக் காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர் வெஸ்ட் அசெம்பளி தேர்தல்—பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் கைப்பற்றி நடத்திய முறையை இந்த நகர மன்றம், மாநகராட்சி தேர்தலுக்கு நடத்த வேண்டுமென்று ஒரு கருத்தை அரசு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது ஒன்றும் பெரிய விசேஷமான கருத்தாக இல்லை. திரு. ஹாண்டே அவர்களே ஒரு டாக்டர். அவராலேயே இந்த மாத்திரையை விழுங்க இயலவில்லை என்று கூறுகிறார். எங்களாலும் இதை ஏற்க முடியவில்லை. இதிலே குறிப்பாக—மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டிருப்பதுபோல்—தேர்தல் நடத்த அடிஷனல் போலிங் பர்சனல், அடிஷனல் போலிங் ஸ்டேஷன்—போலீஸ் பந்தோபஸ் போட வேண்டியிருக்கிறது பாலட் பேப்பர் Counterfoil உடன் அச்சடிக்க வேண்டியிருக்கிறது—என்கிற காரணங்கள் எல்லாம் கூறப்பட்டிருக்கிறது. இவைகள் தேர்தலை ஒத்திவைப்பதற்குச் சரியான காரணங்களாகப் படவில்லை. இப்போது அச்சகங்களை அரசு அதிகப் படுத்தியிருக்கிறார்கள். அச்சடிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. எத்தனையோ மாதங்களாக கவுன்சில் இல்லாமல் —மாநகராட்சி நகரமன்ற தேர்தல் நடைபெறாமல் இருக்கிற காரணத்தால் நடைபெற வேண்டிய பல வேலைகள் நடைபெறவில்லை. மூன்று மாதம் ஒத்திவைக்க வேண்டிய அவசியம் என்ன? இங்கு குறிப்பிட்டபடி 'It is extended for a further period of three months from 1st August 1974' என்பதோடு இல்லாமல் அரசு இந்தத் திருத்தத்தில் முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை. காரணம் 1-11-74 க்குப் பிறகும் இரண்டு மாதம் தாமதித்துப் போட அரசுக்கு வாய்ப்பு உண்டு என்பதாக மேலும் இதை ஒத்திவைக்க முன்வருவது—அந்தத் தேர்தலைச் சந்திப்பதற்கு இவர்கள் தயங்குகிறார்கள் என்றே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதனுடைய உள்நோக்கத்தை வைத்துப் பார்க்கிறபோது—இந்த உள்நோக்கத்திற்கும் அவர்கள் சொல்லியிருக்கிற காரணங்களுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதை நாங்கள் உணர்கிறோம். அதுமாதிரி 'The term so extended may be further extended for a period not exceeding two months or be reduced by the Government for sufficient cause' என்று இந்த 3 மாதங்களுக்கு நீடிப்பது கூட சிரமமாக இருப்பதற்கு இல்லை. அதன் பிறகும் மறுபடியும் ஒத்திவைத்துக்கொள்ள அதிகாரம் எடுத்துக் கொள்வதற்குக் காரணம் என்ன? இதற்கு அவசியம் என்ன என்பதை நான் அரசைக் கேட்கவிரும்புகிறேன்.

அதுமாத்திரம் அல்ல. இன்றிருக்கக்கூடிய நிலைமையில் மாநகராட்சிகள் நகராட்சிகள் ஆகியவற்றுக்கு தேர்தல் உடனடியாக நடத்தப்படுவது மிகவும் அவசியமாகும் என்பதை உணர்ந்து—அரசு இனியும் இவற்றைத் தள்ளிப்போடக்கூடாது. ஒரு வேளை குறுவை அறுவடைக்குப் பிறகு அரிசி நிலைமையில் முன்னேற்றம் இருந்தால் அப்போது நடத்தலாம் என்று உள்நோக்கத்தோடு நினைத்தாலும்—இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிற காரணங்களை ஏற்றுக் கொள்ள இயலாது—திருப்தி இல்லாத காரணங்களைச் சொல்லி முக்கியமான தேர்தலை ஒத்திவைப்பது சரியல்ல என்று கூறிக்கொண்டு இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதா. இவை விவாதிக்கும்போது 183 பேர்கள் கொண்ட ஆளுங்கட்சியில் 13, 14 பேர்களே உட்கார்ந்து இதை நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்த்தால்—தேர்தல்களுக்கு இவர்கள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்று தெரிகிறது.

அடுத்தபடியாக, தேர்தலை ஒத்திவைப்பதற்கு இவர்கள் என்ன காரணங்களை எல்லாம் சொன்னாலும்—அடிப்படைக் காரணம் அரசியல்தான் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதுபோக, மூன்று மாதம், மூன்று மாதம் என்று நீட்டிக் கொண்டே போகிற காரணத்தினால் கவுன்சிலர்களும் அக்கறை இல்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். இப்படி 3 மாதங்கள் என்று ஒவ்வொரு முறையும் தள்ளிவைப்பதற்குப் பதிலாக ஒரேயடியாக 2 வருடம் தள்ளிவைத்து விடலாம். அப்போது நிர்வாகமாவது ஒழுங்காக நடக்கும். இதுபோலச் செய்வது நிர்வாகச் சீர்குலைவதைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தலை நடத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் 71-வது சென்ஸஸை வைத்தே நடத்தலாம். போலிங் அபிஷியல், பந்தோபஸ்து பணி, பாலட் பேப்பர் அச்சிடுவது போன்றவைகள் எல்லாம் ஒன்றும் பெரிய சிரமமளிக்கக்கூடியவை அல்ல. ஒத்திவைப்பதற்கு அடிப்படைக் காரணம் அரசியல்தான் என்பது எல்லோருக்கும் தெரியும். இதுபோலச் செய்கிற காரணங்கள் நிர்வாகச் சீர்குலைவைத்தான் ஏற்படுத்துகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டவுன்ஷிப் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்டது. வால்பாறை, மேட்டூர் டவுன்ஷிப் போன்றவைகள் இருக்கின்றன. 45 லட்சம் ரூபாய் வரை வருமானம் வரக்கூடிய டவுன்ஷிப் தலைவர் கலெக்டர். அவர் கோயம்பத்தூரில் இருக்கிறார். அங்கு செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. செய்யாததற்கு யார் பொறுப்பு? இதுபோன்ற



டவுன்ஷிப்புகளை எல்லாம் என் முனிசிபாலிட்டிகளாக ஆக்கக் கூடாது? ஜனங்களுடைய பிரதிநிதிகள் இருந்து நிர்வாகம் செய்கிறபோதுதான் பல நல்ல காரியங்களை உடனுக்குடன் கவனிக்க முடியும். அந்தமாதிரி முறையில் டவுன்ஷிப்புகளை முனிசிபாலிட்டிகளாக மாற்றத் திட்டம் கிடையாது. அந்தமாதிரி திட்டம் கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, சென்னை மாநகராட்சிக்கு ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட்டது நல்லது. அதன் காரணமாகத்தான் வேலைகள் திறமையாக நடக்கின்றன. திரு. கே. எம். எஸ். சொன்னமாதிரி சர்வாதிகார முறையில் நடக்கவில்லை. நடந்திருந்தால் 3 கோடி மிச்சத்தைக் காட்டியிருக்க முடியாது. ஆயினும் ஒரு ஸ்பெஷல் அதிகாரியினால் என்ன செய்ய முடியும்? நகரத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள, மற்ற சுகாதாரப் பணிகளைச் சரிவர செயல்படுத்தத்தான் முடியும். 1972-இல் போடப்பட்ட திட்டங்கள் ஒரு வருஷமாகியும் நிறைவேற்றப்படவில்லை. ஸ்பெஷல் ஆபீசர் இருந்து கொண்டிருந்தால் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. ஆகவே தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு வகை செய்ய வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் மின்சாரத் துறையில் ஊழல் கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல வாட்டர் சப்ளை துறையிலும் ஊழல் இருக்கிறது. விசாரிக்க வேண்டுமென்று சொன்னோம். அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. மதுரை மாநகராட்சியிலும் ஊழல் இருக்கிறது. இல்லையென்று சொன்னால் பரவாயில்லை. என் விசாரிக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது? ஆகவே, இம்மாதிரி முறையில் தயக்கம் காட்டுவது என் என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல. கைது செய்யப்பட்டவர்களை காஷ்மீருக்கு என் அனுப்புகிறார்களோ தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது கோர்ட் அனுப்பியது அதைப்பற்றி நாம் பேசுவது முறை அல்ல.

திரு. என். கே. பழனிசாமி: ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. சார்ஜ்ஷீட் போடுவதில் என் தாமதம் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சர்க்கார் சென்னையில் எட்டு இடங்களில் எண்ணூறு எண்ணூறு ஏக்கரா—கழிவு நீரைப் பயன்படுத்திக் கொள்ள—சாகுபடி செய்ய நிலம் வாங்கியது. ரெட்ஹில்ஸ், சைதாப்பேட்டை போன்ற இடங்களில். வாங்கி இரண்டு மூன்று வருஷங்களாகிறது. ஒரேஒரு இடத்தில்தான் பயன்படுத்தப்படுகிறது. மற்ற இடங்கள் அப்படியே இருக்கின்றன. கூவத்தைத் திருத்தி அமைத்து—படகு விட 3 கோடி செலவிட்டது. கூவம் ரிப்பேர் செய்யப்பட்டது. 2 வருஷம் நாற்றம் இல்லை. இப்போது திரும்ப நாற்றம் அடிக்க ஆரம்பித்துவிட்டது. இதுவும் வேஸ்ட்தானே.

அடுத்து, வீராணம் ஏரித் திட்டம். சென்னை மாநகருக்குத் தண்ணீர் வசதி செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம். மைசூரிலே கிருஷ்ண சாகர் பக்கத்திலே ஒரு அணை கட்டியாயிற்று. அந்நிலையில் சென்னைக்குத்

தண்ணீர் வரும் என்பதற்கு யார் உத்தரவாதம் கொடுப்பது ? அதற்காக, ரூ. 18 கோடி திட்டம் போட்டு, ரூ. 1 கோடி செலவு செய்தாயிற்று. இந்தப் பணம் வீண்தானே. ஆகவே, அப்படிப்பட்ட முறையிலே செலவு செய்வது சரியா என்று கேட்க விரும்புகிறேன். சர்க்கார் இதிலும் வீணான, விரயமான செலவு செய்கிறது. அது மாத்திரமல்ல. கார்ப்பரேஷன் தேர்தலை ஒத்தி வைப்பது, ஜனங்களுடைய நன்மைக்குப் பாதகமாகும். ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மசோதாவை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்தத்தின்பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில், ஜனநாயக முறைக்கு முரணான முறையிலோ, அல்லது ஜனநாயகம் சீர் கெட்டு விடுகின்ற அளவிலோ ஏதாவது நடவடிக்கை எடுத்தால், அந்த நடவடிக்கைகளைக் கண்டிக்க வேண்டியது அவசியமாக இருக்கும். ஆனால், ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கும் மக்களுடைய வசதிகளைச் சீர்படுத்தவும் சில திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன என்றால், நிச்சயமாக அவற்றை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கே நகராட்சியினுடைய ஆட்சிக் காலத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிப்பதற்காக அனுமதி கேட்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையிலே இதிலே ஒரு கருத்துச் சொல்ல வேண்டுமென்றால், இன்று நாட்டிலே உள்ள முக்கியமான பிரச்னை அரிசிப் பிரச்னை. அந்த அரிசிப் பிரச்னைதான் அரசியல் பிரச்னையாகப் பொதுமேடைகளிலும் சட்டமன்றத்திலும் பேசப்படுகிறது. மக்களுடைய முக்கியமான பிரச்னையான, அரிசிப் பிரச்னையிலே எல்லோருடைய நாட்டமும் இருக்க வேண்டுமென்ற அடிப்படைக் காரணத்திலே, அவர்களுடைய எண்ணங்களை வேறு திசையிலே திருப்பாமலிருக்க, 3 மாதம் மட்டுமல்ல, அரிசி கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தேர்தலை நடத்தாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன். இன்னும் கொஞ்சம் காலக் கட்டமானாலும் பரவாயில்லை. இன்றையதினம் மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்லலாம். மற்ற கட்சிகளுக்குப் பயந்து கொண்டு செய்கிறார்கள் என்று. 3 மாதங்களுக்குப் பின்பும், 6 மாதங்களுக்குப் பின்பும் இந்தப் பிரச்னை வரத்தான் போகிறது. மக்கள் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. எல்லாவற்றையும் உணர்ந்துதான் இருக்கிறார்கள். ஆகவே, மக்களை வைத்து அரசியலாக்குவதைவிட இப்படிப்பட்ட பிரச்னைகளிலே இன்றையதினம் தீவிரமாக இருக்க வேண்டுமென்பதைக் கவனித்துச் செயல்பட வேண்டும். இன்றையதினம் அத்தியாவசியத் தேவையான அரிசியிலே நாடும், நாட்டிலே இருக்கிற மக்களும், அமைச்சர்களும் ஈடுபட்டிருக்கிற நேரத்திலே, இப்படித் தேர்தல்களைத்தான், நடத்தித்தான் ஆகவேண்டுமென்று அரசை வற்புறுத்துவது எந்த விதத்திலே பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை.



என்னுடைய மதிப்பிற்குரிய ஸ்தாபனக் காங்கிரஸைச் சேர்ந்த முனிசிபாலிட்டி தலைவர்கள் சிலர் கூட, மனு கொடுத்திருப்பதைப் பத்திரிகையிலே பார்த்தேன். (குறுக்கீடு). அது சொந்தப் பிரச்னையாக இருந்தாலும், கூட உங்களுடைய கட்சிக்காரர்கள் நகரசபைத் தலைவர்களாக இருக்கிறார்கள். (குறுக்கீடு). இங்கே கட்சி ரீதியிலே சொல்கிறீர்கள் என்றால் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அந்தத் தலைவரும் கட்சிக்காரர்தான். கட்சி, பதவி எல்லாம் மக்களுக்காகத்தான் இருக்கிறது. அவர் நிலைமையை உணர்ந்திருக்கிறார். இப்பொழுது தேர்தல் வைத்தால் மக்களுக்குப் பாதகமாக முடியும் என்ற அடிப்படையிலேதான் ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த (முனிசிபாலிட்டி) தலைவர்கள் மனு கொடுத்திருக்கும்போது, ஸ்தாபனக் காங்கிரஸ் இங்கே அதை எதிர்க்க என்ன நோக்கம் இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். கவுன்சிலர்கள் அக்கறையோடு இருக்கமாட்டார்களென்று. இப்பொழுதுதான் கவுன்சிலர்கள்—இன்னும் 3 மாதங்கள் தான் இருக்கின்றன. அக்கறையோடு செய்யவேண்டுமென்று செய்கிறார்கள்........

**THIRU R. PONNAPPA NADAR** : Sir, the hon. Member has been saying that certain persons belonging to the Congress(O) Party have represented to the Government that the election should be postponed further. What is the basis for making such a statement ? Is it hearsay or whether he has got information in his hand ? He shall not make such a sweeping remark and we emphatically protest against such wild and sweeping allegations against our party which will tarnish the good name of our party. This sort of side-tracking and hitting below the belt should be avoided.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சமீபத்திலே நான் ஸ்ரீரங்கம் நகராட்சியினுடைய தலைவர். இப்படிப்பட்ட கோரிக்கையிலே கையெழுத்திட்டு, அரசாங்கத்திடம் மனு கொடுத்திருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அந்தத் தலைவரும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அது உண்மையா, உண்மைக்குப் புறம்பானதா என்பதை அமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

ஸ்தாபனக் காங்கிரஸைத் தாழ்த்தவோ, அல்லது அதன் மதிப்பினைக் குறைக்கவோ இதனைச் சொல்லவில்லை. அவர் மேல்சபையிலே உள்ள பொறுப்புமிக்க தலைவர். அவரே சொல்லியிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்திருக்கிறோம். ஸ்தாபன காங்கிரஸைக் குறை கூற வேண்டுமென்பதற்காக இதனைச் சொல்லவில்லையென்பதை மதிப்பிற்குரிய பொன்னப்ப நாடார் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒன்றும் குறையல்ல. நடந்த உண்மையைக் கூறுகிறோம். உண்மைக்குப் புறம்பாக எதையும் சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

கவுன்சிலுடைய காலகட்டம் இன்னும் 3 மாதம் என்ற காரணத்திஞல், வேகமாக வேலை நடக்க வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் என்னுடைய தாழ்மையான எண்ணம். சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டிலே இங்கே சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஜனநாயகத்திற்குப்புறம்பான முறையிலே இங்கே ஸ்பெஷல ஆபீஸர் ஆட்சியை நடத்துவதும், கவுன்சிலர்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பில்லாத முறையும் இருக்கிறது. சென்ற முறையே நான் ஒரு யோசனை சொன்னேன். குறைந்தபட்சம் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் அல்லது அந்தந்த வார்டுகளிலே இருக்கிற கவுன்சிலர்கள் அல்லது பிரதிநிதிகளை அரசாங்கமே நியமித்து, கமிஷனரை சில்லறைப் பிரச்னைகளுக்காக எல்லோரும் போய்ப் பார்க்கக்கூடிய அவசியம் இல்லாமல், இந்த அட்வைசரி போர்டைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அதைச் சொல்லலாம். சென்னை மாநகராட்சித் தேர்தல் எப்பொழுது நடக்கும் என்று தெரியாத நிலையில், அட்வைசரி போர்டு வைப்பது நல்லது என்று கூறிக் கொள்கிறேன்.

டவுன்ஷிப்பை ஜனநாயக முறையிலே அமைப்பதை நாங்களும் வரவேற்கிறேம். அங்கே இருக்கிற மக்களுக்குப் பிரநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வார்டிலே இருக்கின்றவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படலாம் என்று கூறுகின்ற நேரத்திலே—இராணிப்பேட்டை வளர்கின்ற தொழில் நகரமாக ஆகிக்கொண்டிருக்கிறது—அங்கே ஒரு டவுன்ஷிப் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே பல கோடி ரூபாய் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்திஞல், அந்த இராணிப்பேட்டையிலே ஒரு டவுன்ஷிப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அரிசிப் பிரச்சினை தீர்ந்ததற்குப் பின்ஞல் இந்தத் தேர்தல் பிரச்சினையைப் பற்றி யோசிக்கலாம் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Thiru B. VENKATASWAMY**: Mr. Deputy Speaker, Sir, I strongly oppose this Bill because it is against natural justice and feelings of the people of our State. By passing this Bill, we are depriving the people the right of selecting their own representatives to represent them and they are able to do it because they have got steam -roller majority.

Coming to the other points, the Hon. Minister has brought forward this Bill to postpone the elections by three months and the reasons given are printing of ballot papers with counterfoils, setting up of additional polling stations, drafting of additional polling personnel etc. After all, these are small matters which the Government can tackle in no time. The Tamil proverb says—

" மனமிருந்தால் மார்க்கமுண்டு ".



So, I think if the Government have 'manam' they could conduct elections urgently but they want to delay elections. As pointed out by the previous speakers, this Government are afraid to face elections and that is also what I strongly feel. In this connection, I may point out that last time they conducted the elections to the State Assembly after the completion of only four years though the life of the Assembly is five years. They thought that at that time they would be able to come to power with steam-roller majority. According to their calculations, they came to power with steam-roller majority, and they are sitting on the other side of the House.

[நண்பகல் 12-00]

I charge this Government for that. They are waiting for a particular opportunity when it would be easy for them to order election and win.

I can understand the postponment of election if there is any national emergency. But, there is no such national emergency now. So, I hope that this Government will not ask for postponement of municipal elections and elections to the City Corporation.

Coming to elections to the Corporation of Madras, one independent member complained that Swantantra Party is also included in corruption charges. I say that Swantantra Parry is a clean party and no member of our party is involved in corruption charges I wish that Mr. K. M. Subramaniam corrects his statement.

With these words, I conclude my speech.

**Thiru K. M. SUBRAMANIAM**: By way of personal explanation. At this distance of time, I do not remember the name of the person. If I recollect, I will give the name.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தேர்தலை எப்போது நடத்துவது என்றும் அதுவரையிலும் அதனுடைய பீரியடை எக்ஸ்டன்ட் செய்வது என்றும் திருத்தம் கொண்டுவந்து இருக்கிருர்கள்.

முதலில் தேர்தல் ஜூன் மாதத்திலே நடைபெறும், கட்டாயம் நடைபெறும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சட்டசபையை முடியவுடனே ஆர்டினன்ஸைப் போட்டு இன்னும் நீடிக்க வேண்டுமென்ற முறையிலே சட்டசபையைக் கூட்டியவுடனே ஒரு மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. நவம்பரில் கூட தேர்தல் நடக்குமா நடக்காதா என்று அமைச்சர் அவர்கள் ஜூன் மாதத்தில் நிச்சயமாக நடக்கும் என்று உறுதி கொடுத்தார்கள், அவர்கள் கொடுத்த உறுதியெல்லாம் காற்றிலே பறக்கிறது, இவ்வளவு மலிவான உறுதியைக் கொடுத்தால் மக்கள் உங்களை நம்பவே மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலை நடத்தாமல் நீடிப்பதற்கு நொண்டிச் சாக்குகளைச் சொல்கிறார்கள். கோயம்புத்தூரில் நடத்தின தேர்தலைப் போன்று இந்தத் தேர்தலிலேயும் பேலட்பேப்பரில் கவுண்டர்ஃபாயல் தயாரிக்கப் படவேண்டும் அதற்காகத்தான் நீடிக்கிறோம் என்று சொல்கிறார்கள். கவுண்டர்ஃபாயல் போடுவதற்கு எவ்வளவு நாட்களாகும்? கவர்ன்மெண்ட் பிரஸ்ஸிலே கொடுத்தால் உடனே போட்டுவிடுகிறார்கள். கவர்ன்மெண்ட் பிரஸ்ஸால் முடியவில்லையென்றால் பிரைவேட் பிரஸ்ஸிலே கொடுக்க வேண்டியதுதானே, பிரைவேட் பிரஸ்ஸிலே கொடுப்பது ஆபத்து என்றால் கவர்ன்மெண்ட் பிரஸ்ஸிலே மாத்திரம் என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. பேலட்பேப்பர் அடிப்பது என்பது முழுக்க முழுக்க நொண்டிச் சாக்கு என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அவர்களுடைய் தோழமைக் கட்சியைச் சேர்ந்த திரு. வகாப் அவர்களே, சொல்லிவிட்டார்கள், அரிசி விலை குறைகிற வரைக்கும் தேர்தல் நடக்காது என்று, நீங்கள் ஆட்சியிலே இருக்கிற வரையிலும் அரிசி விலை குறையப் போவதில்லை, ஆகவே தேர்தலும் நடக்கப்போவதில்லை என்று அர்த்தமா தோழமைக் கட்சியல்லவா உண்மையைச் சொல்லியிருக்கிறார், தேர்தலை நீட்டிப்பதற்குக் காரணம் பேலட் பேப்பர் என்ற காரணம் கிடையாது, மக்களுக்கு 5 ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுகிறோம் இப்போது தேர்தலை வைத்தால் மக்கள் என்ன சொல்வார்களோ என்ற பயத்திலேதான் நீங்கள் ஒத்திப் போட்டிருக்கிறீர்கள்.

இன்றைக்கு கார்ப்பரேஷனிலே இருக்கிற நிலைமை என்ன? குடிக்க குடிநீர் கிடையாது, 21 கோடி ரூபாய் போட்டு வீராணம் திட்டத்தைப்பற்றி போட்டு தண்ணீர் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னீர்கள். சென்ற வாரம் திரு. அன்பழகனாரே பேசினார்கள், தண்ணீர் வருமா வராதா சந்தேகம்தான் என்று. 21 கோடி ரூபாயை மண்ணிலே போட்டு புதைத்து விட்டு இன்றைக்கு அமைச்சரே சந்தேகமாகச் சொல்கிறார் என்றால்......

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தண்ணீர் வருமா என்று சந்தேகமாகச் சொல்லவில்லை. தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்தத் தேதியிலே நிறைவேற்றப்படமுடியாமல் போகலாம், குழாய்கள் போன்ற சாதனங்கள் கிடைப்பதிலே கஷ்டம்



ஏற்பட்டிருப்பதால் அது தள்ளிப்போகலாம் என்றுதான் சொன்னேனே தவிர சந்தேகமாக எதுவும் சொல்லவில்லை, அம்மையார் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்குமா என்ற சந்தேகம் வேண்டாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மேட்டூரிலேயே தண்ணீர் இல்லை, விவசாயமே தள்ளிப்போகிறது என்றால் வீராணத்திலே எங்கே தண்ணீர் வரப்போகிறது, நீங்கள் எங்கே தண்ணீர் வந்து கொடுக்கப்போகிறீர்கள் பட்டணத்தைப் பாழடிக்கக்கூடிய திட்டமாகத்தான் இருக்கிறதே ஒழிய உருப்படியாக பட்டணத்திற்காக என்று நீங்கள் திட்டம் போட்டதே இல்லை.

100 முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. எத்தனை முனிசிபாலிட்டிகளில் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்? முனிசிபல் நகரங்களோடு பில்கிரிமேஜ் சென்டர்ஸ், டூரிஸ்ட் அட்ராக்ஷன்ஸ் இருக்கக் கூடிய இடங்களையும் சேர்த்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து சாக்கடை வசதிகள் குடிதண்ணிர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று எத்தனையோ முறைகள் நான் இந்தச் சட்ட மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன், செய்தீர்களா?

450 கோடி ரூபாய்க்கு வருமானம் வருகிறது, வரியைப் பெருக்கிக் கொண்டே போகிறீர்கள், துணை மானியக் கோரிக்கையிலே கூட புதிய வரிகளைப் போடுகிறீர்கள், மத்திய அரசு போடுகிறது என்றால் நாடு இருக்கிற தனி நிலைமையை உணர்ந்து போடுகிறது, ஆனால் நீங்களும் போடுகிறீர்கள், வசதிகளைச் செய்யவில்லை பழனியிலே எத்தனை யாத்திரிகர்கள் வருகிறார்கள், அங்கே நாற்றம் தாங்கமுடியவில்லை சென்னையிலே காசிமேடு பகுதிக்குப் போய்ப்பாருங்கள், அமைச்சர்கள் எல்லாம் ஒரு நாள் இராத்திரி அங்கே போய்ப் பாருங்கள் சாக்கடைத் தண்ணீர் நாற்றம் தாங்க முடியவில்லை. பழனியிலே, கோயிலில் சொல்லவில்லை, டவுனில் சொல்கிறேன், சாக்கடை நாற்றம் தாங்கமுடியவில்லை. இது ஹெல்த் ஹஸார்ட் இல்லையா? பல்வேறு பக்தியான்கள் வருகின்ற இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டுமா இல்லையா இப்படிப்பட்ட இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செய்ய வேண்டும்.

புதிதாக முனிசிபாலிட்டியாக்கினாலும், டவுன்ஷிப் ஆக்கினாலும் சரி— வேண்டாம் என்று ஜனங்கள் பயப்படுகிறார்கள், வரியை உயர்த்திவிடுவார்கள் வசதிகள் செய்யமாட்டார்கள் என்று மக்கள் பயப்படுகிறார்கள். வரிகளைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்று சொல்லித்தானே, நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். வரியைப் பெருக்கிக்கொண்டீர்கள் வசதிகளைப்பெருக்கவில்லை என்ற நிலைதானே இருக்கிறது, இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் அங்கே வேண்டாமா? இந்த முறையாவது அமைச்சர் அவர்கள் சொல்கிறபடி நவம்பரில் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும், இல்லாவிட்டால் எங்களால் முடியவில்லை எங்களால் தேர்தல் நடத்தமுடியாது பயமாக இருக்கிறது என்று சொல்லி ராஜிநாமாச் செய்துவிட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளிடம் போய்க் குறைகளைச் சொல்ல வாய்ப்பில்லை, எல்லாவற்றையும் ஆபீஸர்களிடத்திலே சொல்லிவிட முடியுமா

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்டு 19

நிதி ஒதுக்குகிறீர்கள் 10 கோடி ரூபாய் இதற்கு அதற்கு என்றெல்லாம் ஒதுக்குகிறீர்கள், ஆனால் அதிலே ஒவ்வொரு கோடியும் எங்கே போகிறது என்று கண்காணிப்பதில்லை, மஸ்டர்ரோல் ஊழல் நடந்திருக்கிறது, நீங்கள் கவனிக்கவே இல்லை, கணக்கு நோட்டிலே தான் இருக்கிறதே தவிர எம். புக்கிலேதான் அந்த ரோடு, இந்த ரோடு என்று இருக்கிறதே தவிர ஆக்சுவலாக ரோடு போடுவதில்லை. சட்டசபையிலே இதற்கு 30 கோடி அதற்கு 40 கோடி என்று கோடி கோடியாகக் கொடுக்கிறீர்களே ஆனால் ஒழுங்காக நடக்கிறதா என்று பார்ப்பதில்லை. குடிதண்ணீர்த் திட்டம்போட்டால் கனக்ஷன் கொடுக்க 3 வருஷம், 6 வருஷம் ஆகிறது, இதையெல்லாம் கவனிக்கிறீர்களா ? ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்கிறீர்கள், பணத்தைச் சரியாகச் செலவழிப்பதில்லை, கவுன்சிலர்கள் ஒரு சிலர் தவறாக நடந்தால் ஒரு சிலர் சரியாக நடப்பார்கள் அதற்கு வாய்ப்பில்லாமல் செய்துவிடுகிறீர்கள். பணம் கொடுக்கிறீர்களே தவிர அதற்கு பாலோ அப் ஆக்ஷன் எடுக்கிறீர்களா ? Do you follow it up ? கிடையாது. ஒழுங்காக நடைபெறுகிறதா என்று பார்ப்பது இல்லை திட்டத்திற்காகக் கொடுத்த பணத்தைச் சம்பளத்திற்குக் கொடுக்கிறார்கள், அதை பார்க்கிறீர்களா? தேர்தலைச் சீக்கிரம் நடத்தி பொது மக்கள் பணம் கொள்ளையடிக்கபடக்கூடிய நிலைமையைத் தவிர்க்க வேண்டும்.

கார்ப்பரேஷனில் 8 கோடி ரூபாய்க்கு ஊழல் செய்யப்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது ? முழுக்க முழுக்க அரசாங்கத்தின் நிர்வாகத் திறமைக் குறைவுதான் இதற்குக் காரணம் என்டதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கார்ப்பரேஷன் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அரசாங்கத்திடம் பணம் கேட்கிறார்கள் என்றால் ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் எங்கே போயிற்று? தலைநகரிலே இருக்கிற கார்ப்பரேஷனில் நடைபெறுகிற ஊழலையே உங்களால் பார்க்கமுடியவில்லை என்றால் வேறு இடங்களில் என்ன செய்யப்போகிறீர்கள்? கோட்டையிலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள ரிப்பன் மாளிகையில் நடப்பதை உங்களால் கவனிக்க முடியவில்லையென்றால் பல நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள இடங்களை எப்படி நீங்கள் கவனிக்கப் போகிறீர்கள் ?

பொதுப்பணம் நன்றாகச் சூறையாடப்படுகிறது, அவரவர்க்கு என்ன சாமர்த்தியமோ அதற்குத் தகுந்தபடி அடிக்கிறார்கள். இதையெல்லாம் கண்காணிக்க வேண்டும், தேர்தலைச் சீக்கிரமாக நடத்த வேண்டும், அப்படிச் செய்தால்தான் நிர்வாகம் வேகமாகவும் ஒழுங்காகவும் நடைபெறும், சட்டசபையிலே தேர்தலை நடத்துகிறேன் என்று சொல்வது சட்டசபை முடிந்தவுடன் கவர்னரிடம் ஓடிப்போய் ஆர்டினன்ஸ் வாங்கி நீட்டித்துக் கொள்வது என்றால் அது சரியல்ல. நேரடியாக மக்களைச் சந்தியுங்கள், அப்போதுதான் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள், ஜனநாயகம் எங்கே இருக்கிறது என்று உங்களுக்குப் புரியும், என்று சொல்லி இதைச் சவாலாக ஏற்று அமைச்சர் அவர்கள் நவம்பரில் தேர்தலை நடத்தவேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.,



1974 ஆகஸ்டு 19]

THIRU R. PONNAPPA NADAR : Mr. Deputy Speaker, Sir, I oppose this Bill with all the energy at my command. In opposing this Bill, I would raise three objections to the Bill which is now the subject-matter of discussion.

My first objection, I would submit for the consideration of this august House is that this Bill is an undemocratic one and it stifles the democratic process. There is no Corporation Council now. So much so, it is a long interval since dissolution has been made by the Government. Why not they have the elections ? Many reasons had been advanced. But I think this Government is feeling shy, feeling touchy about the conduct of elections to the corporations. If they are touchy, and if they cannot come up in the Corporation elections, why not allow the demorcatic process to work itself out ? Why should they stifle democracy, why should they kill democracy and democratic institution ? So much so, this Bill is opposed on that ground.

Sir, this Bill is only a post-mortem ; an ordinance had been promulagted by the Government under Article 213 of the Constitution. That ordinance is replaced by this Bill. What is the urgency for the ordinance ? The Legislature could have been summoned earlier. On the other hand, in order to promula gate the ordinance, the Legislature was prorogued by the Governor on the advice tendered by this Ministry. Why should this Ministry tender that advice ? It is a well-known fact that there is acute food scarcity and there is utter confusion in the rank and file of their party and that is the reason why you were timid, you were not prepared to face the people and that is the main reason why this legislation has been just brought forward.

Another objection which I make is regarding the colourable exercise of legistaive powers. In this connection, I may refer to a Clause which is being sought to be introduced and the proviso which is being substituted for the existing proviso and the following proviso is substituted :

'Provided that the Government may, by notification, for sufficient cause direct, that the term so extended be further extended for such period not exceeding two months or be reduced

by such period as may be specified in the notification and the Government, may, in the like manner, cancel or modify any such notification.'

Sir, even now I venture to say that the powers that are vested in the Legislature are being sought to be abridged or taken away by this provision. Either the Government should say, we want to postpone the election for five months, or for what period. Instead of that, they adopt a clever method, a dubious method a doubtful method and they say that the elections shall be postponed for three months and then if the Executive feels that they want to postpone the election further, they arrogate to themselves or assume for themselves powers through the legistative process. That is the reason why I say it is a colourable exercise of legislative power. Such colourable exercise of legislative power is abhorred and hated. We do not want to abdicate our powers to the executive. This is a valid objection which the Law Department may very well take into consideration.

My third point is there is excessive délegation. For, the Legislature gives certain powers to the executive and that power is being further delegated to the executive, because they are given the option to postpone or cancel. It may be argued that along with power to cancel the period can also be reduced. Such an argument is not valid or plausible. Such an exercise of power would amount to excessive delegation of legislative power and so on that ground also, this legislation will have to be thrown out.

It may be that the ruling party has a brute majority in this House. But people are suspecting and I am very sure that this legislation is likely to be struck down by the High Court, for it infringes the rules and the decisions that have been rendered by the High Court; and in various cases excessive delegation of powers to the executive has been condemned not only by the High Court, but the Supreme Court also. So, there is no necessity for any delegation of powers. On that score also, there is a lacuna, there is a flaw in this Bill and on that ground also I object to the Bill.

Sir, I would like to make some more observations. So far as the election to the Municipal Councils are concerned, it will have to be conducted. So far as the Assembly is concerned, our life



or duration is for five years, unless sooner dissolved and if there is an emergency, it can be postponed, failing which the House will stand automatically dissolved. That is the Constitutional provision. Now, in the Municipal Act there is no such provision and power is given to the legislature to extend the life of the Municipal Councils piecemeal, invoking these powers. Is it necessary, is it fair ? Is it an account of the food scarcity that the elections are postponed or is it because of the lame excuses that have been put forth in the explanation given to the Bill is a matter to be considered.

So far as printing of the ballot papers and setting up additional polling station, drafting additional polling personnel, posting additional police bandobust are concerned, all these things are at the command of the State Government and Tamil Nadu is not lacking in that facility. It is only a dubious argument, a clever device to postpone election so that it is a device to hoodwink the public. That is the reason why this legislation has to be scrapped and no further extension should be granted by the House. Twice, the House granted permission, for the third time the Government has come now. Not only that, they want the executive to postpone it still further by another two months. Is it just, is it fair and are we to abdicate all our powers to the executive ?

Sir, on all these grounds, I oppose the Bill with all the emphasis at my command and because it is faulty, it should be thrown out. With these observations, I conclude, Sir.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தைப்பற்றி இங்கே 10 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு, ஏதோ தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு தயங்குவதாகவும், பயப்படுவதாகவும், அதற்காகவே தள்ளிப்போடப்படுவதாகவும் பெரும்பாலும் அனைவரும் குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் தேர்தலைச் சந்திப்பதுதான் தங்களுடைய கொள்கை என்று இல்லாமல் சந்திக்க வேண்டிய நேரத்தில் யாரையும் சந்திப்பதற்கு மறுத்தது கிடையாது. அவர்களுக்கே நன்றாகத் தெரியும் 1972-ஆம் ஆண்டு நடைபெற வேண்டிய தேர்தலை 1971-ஆம் ஆண்டிலேயே சந்தித்து வெற்றி பெற்றதையும் அவர்கள் நினைவுப்படுத்தினார்கள்,

காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்து தள்ளிப்போடுகிறார்கள் என்றும், நொண்டிச் சாக்கு சொல்வதாகக்கூடக் குறிப்பிட்டார்கள்.

இனனொன்று, அரிசிப் பிரச்சினையைப்பற்றிச் சொல்லி அதற்காக சொல்லியிருக்கலாம் என்று சொன்னார்கள். அரிசிப் பிரச்சினை என்பது இப்பொழுது ஏற்பட்டதே தவிர, இந்த ஆர்டினன்ஸ் போட்டபொழுது எந்தவிதமான பிரச்சினையும் தமிழகத்தில் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். எனவே அதைச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஒரு சட்டம் கொண்டு வரப்படும் நேரத்தில் எதிர்கட்சியினர் தங்கள் கருத்துக்களைச் சொல்வது என்பது அவசியமும், அவசரமுமானது என்பதை நான் மறுக்கவில்லை. ஏன் நான்கூட எதிர்க்கட்சியிலே இருந்தபொழுது இதே மன்றத்தில் ஊராட்சி மன்றங்களின் காலத்தை மூன்றாண்டுக் காலத்தை ஐந்தாண்டுக் காலம் என்று நீடிப்பதற்காகக் கொண்டு வந்தபொழுது இதே காரணத்தைச் சொல்லி எதிர்த்துத்தான் இருக்கிறேன். எனவே, எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இப்படிச் சொல்கிறார்களே என்பதற்காக எனக்கு நிச்சயமாக வருத்தம் இல்லை.

நிர்வாகத்தில் இருக்கும்பொழுது அந்த நிர்வாகத்தைச் சீராகவும், சிறப்பாகவும், சரியாகவும் நடத்த வேண்டுமென்பதற்காக சில அவசரச் சட்டங்கள் அவசியமாகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

சாதாரணமாக, நாம் நடத்துகின்ற, கட்சி நடத்துகிற சில மாநாடுகள், மற்றவற்றில்கூட திடீர் திடிரென்று அவசியமான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. காலதேச வர்த்தமானத்தை உத்தேசித்துச் செய்யப்படுகின்றன. அவற்றிலேயே அவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்றால் 100 நகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவதிலே எவ்வளவு கஷ்டங்கள் இருக்கும் என்பது இங்குள்ள அத்தனை பேரும் உணராதது அல்ல. சென்ற முறை தேர்தல் நடைபெற்றபோதுகூட சரியாக தொகுதிகள் பிரிக்கப்படவில்லை என்று உயர்நீதிமன்றத்திலே அதற்குத் தடை விதிக்கப்பட்ட நேரத்தில் பாதித் தேர்தல் முடிந்து பாதிப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டது நினைவு இருக்கலாம். அவர்கள்கூட ஐந்தாண்டுக் காலம் தேவை என்று சொன்னபோதுகூட, அரசாங்கம் சரியல்ல என்று கூறி மறுப்புத் தெரிவித்தது. ஒரு தேர்தல் நடத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன.

மூன்றாவது முறையாக இது திருத்தப்படுகிறது என்று சொன்னார்கள். அவ்வப்போது ஏற்படுகிற மாற்றங்களை உத்தேசித்து நிர்வாகத்தில் இதனைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு பேசியவர்கள் அனைவரும் சென்னை மாநகராட்சியைப் பற்றியும் பேசினார்கள். கொண்டு வரப்பட்டுள்ள சட்ட முன்வடிவில் சென்னை மாநகராட்சி சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, தனைசொன்



மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள் சட்டம் என்றுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சென்னைக்கு என்று தனியாகச் சட்டம் கொண்டு வரப்படவில்லை.

சென்னை மாநகராட்சியைப் பற்றிப் பலரும் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். சென்னை மாநகராட்சியின் பணிகளைப் பொறுத்த வரை செம்மையாக நடைபெற்று வருகிறது என்று பெருமையோடு கூடச் சொன்னார்கள். நம்முடைய முன்னாள் நகராட்சி உறுப்பினர், இன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் மாநகராட்சி இப்போது அனாதையாக இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பலமுறை நானே வார்டுகளுக்குச் சென்று ஆங்காங்கு எப்படி வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைக் கண்காணித்து வருகிறேன் என்பது அவர்களுக்கே தெரியும். அமைச்சராக இருந்தாலும்கூட நகராட்சி மன்ற உறுப்பினர் பணிகளைச் செய்கிறேன் என்று அவர்களே பாராட்டியதை மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். சுகாதாரம், குடி தண்ணீர் வசதி, சாலை வசதிகள் ஆகியவற்றுக்கெல்லாம் இப்போது எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக உணருவார்கள் என்று கருதுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I know what he can do as Hon. Minister. People like me who are in-charge of wards know every nook and corner in the wards. Therefore, we should be given that privilege of discharging our duties as a Councillor. The Hon. Minister cannot discharge the duties of a Councillor.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருமதி அனந்தநாயகி அவர்கள் மாநகராட்சியைப் பற்றி மிகத் தெளிவாகப் பேசுவதாகச் சொல்லிக் குறிப்பிட்டார்கள். மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் கைக்கு வந்த பிறகுதான் பெரிய ஊழல்கள் நடந்துவிட்டது போலவும் அதற்கு முன்னால் ஊழலே இல்லாதது போலவும் குறிப்பிட்டார்கள்.

எனக்கு நன்றாகத் தெரியும். இதே சட்டசபையில் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஒன்றைச் சொன்னார்கள். "இதிலே கட்சி வித்தியாசம் இல்லாமல் எப்படி ஊழல்கள் செய்கிறார்கள் என்பது தெரிகிறது" என்று இதே சட்டமன்றத்தில் குறிப்பிட்டதை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அப்போது என்ன நடைபெற்றது என்று தெரியும்.

துணிச்சலோடு திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சியைக் கலைக்க உத்தரவிட்டது. இப்போது அங்கு எந்த வேலையும் நடைபெற வில்லை என்று குறிப்பிட்டார்கள். எல்லா வேலைகளும் ஒழுங்காக நடை பெற்றுக் கொண்டு வருகின்றன என்பதைத் தமிழகத்திற்கு வருபவர்கள், மாநகரத்திற்கு வருபவர்கள் எல்லாம் சிறப்பாக நடைபெற்றுக் கொண டிருக்கிறது என்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு ஒளி மயமாக இருக்கிறது. எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்று பாராட்டி சென்றிருக்கிறார்கள். அவர்கள் இருந்த காலத்தில் நடைபெற்றதைவிட, நல்ல வேலைத் திட்டங்கள் எல்லாம் இன்றைய தினம் நடை பெற்றுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநகராட்சியைப் பொறுத்தவரை தேர்தல்கள் நடை பெறுவதில் பல சிக்கல்கள் இருந்தன. மதுரை மாநகராட்சி சட்டத் திருத்தம் கூட வருகிறது. வார்டுகள் பிரிப்பதில் உள்ள கஷ்டங்கள் தெரியும். ஜனத் தொகை அடிப்படையிலும், வாக்காளர்கள் அடிப் படையிலும் பிரித்தால் 150 வார்டுகளாக ஆக்கப்பட வேண்டுமென்ற முறை வகுக்கப்பட்டு அதுவும் இப்போது பரிசீலனையில் இருந்து வரு கிறது. எனவேதான் தள்ளிப் போடப்பட்டிருக்கிறதே தவிர, அச்சத்தின் காரணமாக அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் உள்ள 100 நகராட்சிகளோடு புதிதாக சில நகராட்சிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சில நகராட்சிகளின் அந்தஸ்து உயர்த்தப் பட்டிருக்கின்றது. செகண்ட் கிரேடு ஃபஸ்ட் கிரேடாகவும், ஃபஸ்ட் கிரேடு செலக்ஷன் கிரேடாகவும் ஆகின்ற இப்படிப்பட்ட உயர்வுகள் நடைபெற்று வருகின்றன. சீராக எல்லா இடத்திலும் தேர்தல் நடைபெற வேண்டு மென்பதற்காக இந்த 3-வது திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. திருத்திக் கொண்டே போக வேண்டுமென்பதற்காக அல்ல. திருத்துவது பாவகரமானது என்று அங்கத்தினர்கள் எண்ணமாட்டார்கள். இப்படிப் பல முறை திருத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. பழனிச்சாமி அவர்கள் தள்ளிப் போடுவது தான் போடுகிறீர்கள், இரண்டாண்டு காலத்திற்கு ஒத்திப் போடுங்கள் என்று சொன்னார்கள். கேரளாவில் ஒத்திப் போட்டதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் வேறு சில காரணங்களைச் சொன்னார்கள். அவர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலே 14 ஆண்டு காலமாகத் தேர்தல் நடைபெறாத மாநகராட்சி கள் இருக்கின்றன என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். 16, 17 இடங் களில் தேர்தல்கள் நடைபெறவில்லை. அவர்கள் இப்போது தேர்தலுக்கு என்ன அவசியம் என்று கேட்கிறார்கள். அதைக் காட்டி நான் தப்பித்துக்





கொள்ள விரும்பவில்லை. ஏற்கெனவே, குறிப்பிட்டது போல் சில அவசிய அவசரங்களை உத்தேசித்துத் தள்ளிப் போடப்படுகின்றன ; தப்பித்துக் கொள்வதற்காக அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : முன்பு கொடுத்த காரணம் வேறு. வாக்குச் சீட்டில் கவுண்டர்ஃபாயில் வைப்பது பற்றிச் சொல்லுகிறார்கள். அது பிப்ரவரியிலே வந்த சிஸ்டம். மார்ச் மாதத்திலே திருத்தம் கொண்டு வந்த நேரத்திலே அந்தக் காரணத்தைச் சொல்லவில்லை. அது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட காரணமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தேர்தல் ஆணைக் குழு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களுக்குத்தான் கவுண்டர்ஃபாயில் வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நகராட்சிகளுக்கு அப் படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. அந்த முறையை நகராட்சித் தேர்தல்களுக்கும் கையாளலாமா என்று பிறகு பரிசீலித்துப் பார்க்கப் பட்டது. அதனால் பல தவறுகள் குறையும், போலி வாக்காளர்களைத் தடுக்கலாம். அவர்களிடத்தில் கையெழுத்து வாங்கலாம் என்றெல்லாம் பரிசீலித்து முடிவு எடுத்த பிறகுதான் இந்த முடிவை அறிவித்திருக் கிறோமே தவிர வேறல்ல. முன்கூட்டியே அறிவிக்க அப்போது உத்தரவு எதும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களே சொன்னது போல நகராட்சித் தேர்தல்களை 1976— தேர்தலுக்குப் பிறகுதான் நடத்தப் போகிறோம் என்று எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். நிச்சயமாக இல்லை. குறிப்பிட்ட காலத்தில் நிச்சயமாகத் தேர்தல் நடைபெறும். அதற்கு மேல் ஒத்தி வைக்கப்படமாட்டாது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் இப்போதே இன்ன மாதத்தில் தேர்தல்கள் நடைபெறும், அதற்கு மேல் ஒத்திப் போடப்பட மாட்டாது என்று டெபனிட்டாகச் சொல்லுவார்களா ? அதைக் காப்பாற்றவில்லை என்றால் அதற்கு என்ன தண்டனை என்று உங்களுக்கு நீங்களே வகுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பல பேர் நாங்கள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். இரண்டு பேரையும் ராசி செய்வதில்தான் கெட்டிக்காரனே தவிர, ராஜிநாமா செய்வதில் கெட்டிக்காரன் அல்ல. இப்போது தேர்தல்கள் எப்படி நடைபெறுகின்றன என்று தெரியும். இப்படிப்பட்ட தேர்தல் முறைகளை மாற்றுவது மட்டு மல்ல. சில விதிமுறைகளையும் கண்டிப்பாக மாற்ற வேண்டும். நிர்வாகத்தில் எப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரியும். நாங்கள் இரண்டாண்டுக் காலத்திற்குத் தேர்தல்களைத் தள்ளிப் போடமாட்டோம். நிச்சயமாக நகராட்சி மன்றத் தேர்தல்கள் குறிப்பிட்ட தேதியில் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட மாட்டாது என்று சொல்லுகிறார்கள். கொண்டு வரப்பட்டிருக்கிற சட்ட முன்வடிவிலேயே அரசாங்கம் நினைத்தால் மேலும் இரண்டு மாத காலத்திற்கு இந்தத் தேர்தல்களை மீண்டும் ஒத்தி வைக்கலாம் என்று கிளாஸ் எதற்காகப் போட்டிருக்கிறீர்கள். ஏதோ மனத்திற்குள் வைத்துக் கொண்டுதானே அதைப் போட்டிருக்கிறீர்கள். அந்தச் சந்தேகத்தை நிவர்த்திக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறுவார்களா?

[நண்பகல் 12-30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மூன்று மாத காலம் என்று சொன்னேன். இரண்டு மாதத்திற்குப் பிறகு உங்களைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அதற்குள் முடித்துவிடலாம் என்று நீட்டிக்கப் படுகிறதே தவிர அதற்குமேல் நீட்டிப்பதற்கு அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடி விற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, '1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/74) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

* 14—8—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



(ச) 1974-ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 291/74).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, "1974-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்," என்ற தீர் மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, "1974-ம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 29/74) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்ட மாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந் தாம் திருத்த) சட்ட முன்வடிவு. (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 26/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழி கிறேன்.

* 13—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, " தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (ஐந்தாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 26/74) நிறைவேற்றப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (4) அரசினர் தனித் தீர்மானம்.

தனியார் அலோபதிக் மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்படுவது குறித்து தடை விதிப்பதும் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கல்லூரிகள் தமிழ் நாட்டில் நாடாளுமன்ற சட்டத்தால் முறைப்படுத்தப் படவேண்டும் என்பதும் குறித்து.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முதலில் படித்துவிட்டு விளக்கம் கூற விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவருவதற்கான மிக முக்கியமான காரணம் கடந்த ஆண்டு மத்திய நலத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டிய மாநில நலத்துறை அமைச்சர்களுடைய மாநாட்டில் பொதுவாகவே மருத்துவக் கல்வியின் தரத்தைப் பாதுகாப்பதற்காகவும் வேறு சில மாநிலங்களில் தோன்றியிருக்கிற சில தனியார் கல்லூரிகள் ஏராளமான நிதியைப் பெற்றுக்கொண்டு மாணவர்களை அந்த நிதியின் அடிப்படையில் சேர்க்கிற முறை அளவு கடந்து வளர்ந்து வருவதால் எதிர்காலத்தில் மருத்துவக் கல்வி பாதிக்கப்படுவதன்றி மருத்துவப் பட்டம் பெற்றவர் களின் தரம் மிகப் பெரிய அளவிற்கு பாதிக்கப்படும் என்று அஞ்சுவத ற்கு இடமிருப்பதால் இவற்றை முறைப்படுத்தவேண்டும் என்று எல்லா அமைச்சர்களும் ஒருமனதாகத் தெரிவித்தார்கள். அப்படி ஒழுங்குபடுத்து வதற்கு, ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள அமைச்சர்களும் தங்கள் தங்கள்



மாநிலத்தில் ஒழுங்குபடுத்துவதில் அதிக அக்கறை காட்டுவதற்கான சூழ்நிலை அவ்வளவு தெளிவாக இல்லை. ஆகவே மத்திய அமைச்சர் அதை ஒழுங்குபடுத்துவதாக இருந்தால் மத்திய பாராளுமன்றத்தில் மருத்துவக் கல்வியை முறைப்படுத்துவதற்கு இன்றையதினம் அரசியலமைப்புச் சட்டப்படி அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அப்படி ஏதாவது ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்றால் இரண்டு மூன்று மாநிலங்களில் உள்ள மாநில சட்ட சபையும் மாநில சட்டமன்ற மேலவையும் தீர்மானித்து அனுப்புகிற தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு சட்டத்தை, ஒழுங்குமுறைப்படுத்தக்கூடிய ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். அப்படி நிறைவேற்றுமாறு கேட்கிறபோது கூட கேட்கிறவர்கள் தங்கள் மாநிலத்திற்குத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். தமிழ்நாடு அல்லது வேறு ஒரு மாநிலம் இப்படி ஒரு தீர்மானம் போடுமானால் இந்தத் தீர்மானம் நம் மாநிலத்தைத்தான் கட்டுப்படுத்தும். ஆனால் நம் மாநிலத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்மானத்தைக் கொடுத்து அதேபோல் இனி இன்னும் இரண்டொரு மாநிலங்கள் இதேவகையில் தீர்மானத்தை அவர்களும் நல்லெண்ணத்தோடு நிறைவேற்றி மத்திய அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால் இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதின் மூலம் அதற்குப் பிறகு மற்ற மாநிலங்கள் யார் யார் அதற்காக தீர்மானம் போடவில்லையோ அவர்களையும் ஏற்றுக்கொள்ளுமாறு மத்திய அரசு தூண்ட முடியும். அந்த மாநிலங்கள் கூட தீர்மானம் போட்டு ஏற்றுக்கொண்டால் தான் அந்தச் சட்டம் அங்கு நடைமுறைக்கு வரும். ஆனால் மத்திய அமைச்சர் இதில் ஆர்வத்தோடு இருப்பதால், இந்தத் தனியார் கல்லூரிகள் —ஒன்றிரண்டு கல்லூரிகள் மிகத் திறமையாக நடைபெற்றாலும்—பல மருத்துவக் கல்லூரிகள் தரக் குறைவுக்கு இடம் கொடுத்துவிடுவதால், குறிப்பிட்ட எண்ணிக்கையை விட அதிகப்படியான எண்ணிக்கை உள்ள மாணவர்களை அவர்களால் தரப்படுகிற நிதியின் அளவு காரணமாக சேர்த்துக்கொள்வதால், இவற்றையெல்லாம் முறைப்படுத்துவதற்கு, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட கல்லூரிகள் அதிகமாகி விடக்கூடாது என்று மத்திய நலத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி எல்லா மாநிலங்களிலும் அப்படி ஒரு கருத்தை உருவாக்கி அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை ஏற்றுக்கொள்ள நம் மாநிலம் உறுதுணையாக அதற்கு வழி செய்வதற்காக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவது நல்லது என்ற கருத்து ஏற்பட்டதால் இந்தத் தீர்மானத்தை இந்த அவையின் முன் நான் கொண்டு வந்திருக்கிறேன்.

இது மற்ற மாநிலங்களின் விவகாரத்தில் தலையிடுவது அல்ல. நமக்குள்ள அதிகாரங்களை நாம் மத்திய அரசுக்குத் தந்துவிடுவதாக சந்தேகப்படத் தேவை இல்லை. நம் மாநிலத்தில் " Capitation fee grant colleges " இன்றையதினம் இல்லை. தமிழக அரசைப் பொறுத்தவரையில் அரசாங்கக் கல்லூரிகளாகவே நடத்தப்படுகின்றன. வேறு சில மாநிலங்களில் அந்த நிலை இருக்கிறதா என்றால் இல்லை. அங்கு பயிற்சி பெற்றவர்கள்

[திரு க. அன்பழகன்] [1974 ஆகஸ்ட் 19

அதற்குப் பின் அந்தப் பட்டத்தைக் காட்டி இங்கு வேலைதேடுவதற்கான
வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அனுவசியமான போட்டி உண்டாகிறது.
அப்படிப் பட்டம் பெற்றவர்கள் தரமுள்ள பட்டங்களைப் பெற்றிருக்கிறார்களா
என்றால் இல்லை என்ற நிலை இருக்கிறது. எனவே, மருத்துவக்
கல்லூரியை, நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்பிற்கு அவசியமாகிறது
என்ற நிலையில், முறைப்படுத்த வேண்டும். அதை மத்திய அரசு
செய்வதற்கு நம் அரசு ஏதாவது ஒரு வகையில் அதற்கு உதவிகரமாக
இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது.
தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்தக் கொள்கையை ஏற்றுக்
கொண்டிருக்கிறோம் என்ற அடிப்படையில் தனியார் கல்லூரிகள் பெரும்
பாலும் தேவை இல்லை தமிழ்நாட்டில். அப்படி மருத்துவக் கல்லூரி
வருவதானாலும் இருக்கிற சட்ட திட்டத்தின் அடிப்படையில் வரவேண்டு
மென்ற நோக்கம் நமக்கு இருக்கிற காரணத்தாலும், நம்முடைய நோக்கத்
திற்கு மாறுபாடு இல்லாத வகையில் இதை அகில இந்திய அரசுக்கு, அந்த
நோக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்துவதற்கு ஒரு துணையாகவும், இருக்
கும் வகையில்—எடுத்துச் சொல்லி, பாராளுமன்றத்தில் அந்தச் சட்டம்
நிறைவேற்றப்படுமானால் அதன் மூலமாக, ஆளும் காங்கிரஸ் ஆளுகின்ற
மாநிலங்களிலும் மத்திய அமைச்சர் அந்தத் திட்டத்தை வைத்து, அவர்
களும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற வாய்ப்பு
ஏற்படும் என்கிற காரணத்தாலும், இதை ஆதரித்து நிறைவேற்றித்தர
வேண்டுமென்று அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களையும் கேட்டுக்கொள்
கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : எல்லாவற்றிற்கும் மாநில சுயாட்சி என்று கேட்கிறீர்களே, இதற்கு மத்திய சர்க்காருக்கு உறுதுணையாக தீர்மானம் போடுகிறீர்களே!

மாண்புமிகு திரு க. அன்பழகன் : கல்யாணம் பண்ணிக்கொண்டிருக்கிறபோது டைவர்ஸ் ஏற்பாடு கேட்கக்கூடாது. டைவர்ஸ் என்ற உரிமையை வாதிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவையின் முன்னுள்ள இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இந்திய அரசியல் சட்டப் பிரிவினை 249, 250-ன் கீழ் மாநில அரசுகள் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பினால் தான் மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியும் என்ற நிலையில் இங்கே முன் மொழிந்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி குறிப்பிட்ட மாதிரி மாநில சுயாட்சி கேட்கின்ற நாம் மத்திய அரசாங்கம் கேட்டுக்கொண்ட உடனே இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றப் போகிறோம்.



1974 ஆகஸ்டு 19] [திரு. கோவை செழியன்]

பொதுவாக, இந்தத் தீர்மானம், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பிரச்னையாக உள்ள தீர்மானமாக இல்லை. காரணம் என்னவென்றால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி தமிழகத்திலே இத்தகைய தனியார் கல்லூரிகள் எதுவும் இல்லை. ஆனால் மற்ற மாநிலங்களிலே வியாபார நோக்கத்தோடு மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கிறார்கள். ரூ. 10,000, ரூ. 15,000 நன்கொடை கொடுத்தால் அவர்களுக்கு இடம் கிடைக்கிறது. அதே போல் ரூ. 20,000, ரூ. 30,000 கொடுத்தால் பஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் என்று மார்க் போட்டு அவர்களையெல்லாம் டாக்டர் என்று அனுப்புகிறார்கள். பலபேர் நம்முடைய மாநிலத்திலே வந்து கூட வேலைக்குச் சேருகிறார்கள்.

சமீபகாலத்தில், மேல்நாடுகளுக்குக் கூட இங்கிலாந்து அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட இத்தகைய டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பலபேர் சென்று இருக்கிறார்கள். டாக்டர் என்பதற்கான பேசிக் எலிமெண்ட், அடிப்படை மருத்துவக் கல்வி உணர்வு கூட இல்லாமல், எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் வெளிநாடுகளில் சென்று இந்த நாட்டின் மானத்தை வாங்கியிருக்கிறார்கள். எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் அடிப்படை மருத்துவக் கல்வி அறிவு கூட இல்லாமல் வந்திருக்கிறார்கள் என்ற செய்தி இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு, பின்பு அவர்கள் எந்தக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பரிசோதனை செய்து பார்த்தார்கள்.

நம்முடைய கல்வி முறை அமைப்பு எப்படியிருக்கிறது என்றால், ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படுகிறது என்றால், அந்தக் கல்லூரி தனியாகப் பட்டங்களைத் தந்து விட முடியாது. அது தனியார் கல்லூரியாக இருந்தாலும் சரி, அரசாங்கக் கல்லூரியாக இருந்தாலும் சரி, அந்தக் கல்வியின் தரத்தை நிர்ணயம் செய்யும் பொறுப்பு அங்கேயிருக்கிற பல்கலைக் கழகங்களின் பொறுப்பில் தான் இருக்கின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்று வசதி படைத்தவர்கள் அல்லது நிதி அதிகம் வைத்து இருக்கிற ஸ்தாபனங்கள் தனியாக மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று நினைத்தால், அதற்கு வாய்ப்புத் தரவேண்டும். ஏனெனில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம், ஆகியவற்றின் தரம்குன்றாமல் இருக்கிறது. ஆக, எவ்வளவு தான் தனியார் கல்லூரிகளிலே மருத்துவ பட்டம் பெற்றாலும், அந்தப் பல்கலைக்கழகங்கள் அவர்களைச் சோதனை செய்யும் போது சரியாகச் செய்ய வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், இன்று இருக்கும் மருத்துவக் கல்லூரிகள் போதாத நிலையில் இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஜூன் மாதத்தில் பார்த்தால், எங்கே போனாலும் மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்காக யார் யாரைப் பிடிக்கலாம், யாருடைய தயவை நாடலாம், எந்த அமைச்சரைப் போய்ப் பார்க்கலாம், கேட்கலாம் என்று அலைகிற காட்சியைப் நாம் பார்க்கிறோம்.

நான் இங்கே அமைச்சர்களையோ, வேறு யாரையோ குற்றம் சொல்ல வில்லை. ஆனால் அமைச்சருக்கே தெரியாமல், மந்திரி சபைக்கே தெரியாமல் அது ஒரு பிசினஸ் போல் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பெரிய ஓட்டல்களில் சில பேர்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். வெளியிலிருந்து யாராவது வருகிறார்கள் என்றால், வா, மெடிகல் காலேஜ் அட்மிஷனா, எனக்கு அவரைத் தெரியும், இவரைத் தெரியும் ரூ. 25,000, ரூ. 20,000 கொடுங்கள் என்று பணம் வாங்கும் காட்சியைப் பார்க்கிறோம். நான் அமைச்சரைக் குறை சொல்லவில்லை. அவருக்குத் தெரியாமல் கூட இது நடக்கலாம். அப்படிப்பட்ட ஒரு முறை இங்கே நடைபெறுகிறது.

நான் திராவிட முன்னேற்றக்கழக பொதுக்குழு உறுப்பினராக இருந்த போது, பொதுக் குழுவில் பலர் சொல்லி இருக்கின்றார்கள் என்னிடத் தில் அவர் பணம் வாங்கினார், பணம் கொடுத்த பின்னாலும் சீட் கிடைக்கவில்லை. என்னிடத்தில் ரூ. 25,000 வாங்கினார் என்று சொல்லி யிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர், முதலமைச்சர், பெயரைக் கூடக் கேட்டார்கள். இப்படி எல்லாம் நடைபெற்றது என்று சொன்னார்கள்.

அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இப்போது கூட இரண்டு நாளைக்கு முன்னால்—பேரவைத் தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வில் முறைகேடு நடந்து இருப்பதாகப் பத்திரிகையில் வந்து இருக்கிறது. தவறா, சரியோ, அரசாங்கம் இதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும். பத்திரிகையில் போடுகிறார்கள் என்றால், எப்படி அந்தத் தைரியம் அவர்களுக்கு வந்தது ? ஏதோ ஒரு உண்மை அவர்களுக்கு கிடைத்து இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அவர்கள் போட்டு இருக்கிறார்கள். ரிசர்வ்ட் லிஸ்ட்டிலே, பாக்வார்ட் லிஸ்டிலே தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவன் ஜெனரல் லிஸ்டிலும் வந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> தலைவரவர்களே, அப்படி ஏற்பட்ட தவறு அந்த லிஸ்ட் டைப் செய்தபோது ஏற்பட்டது. அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டு, ரிசர்வ் லிஸ்ட்டில் யார் 1—2 போடப்பட் டிருக்கிறார்களோ அவர்கள் தேறியவர்களாக அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பு ரிசர்வ் மாணவனுக்குப் போட வேண்டும். தவறு டைப்பில் ஏற்பட்டது. அந்தக் குழுவின் தவறோ அல்லது வேண்டுமென்று ஏற்பட்ட தவறோ அல்ல. அந்த இரண்டு இடங்களுக்கும் வேறு யாரேனும் போட்டுக் கொள்ளும் வாய்ப்பு யாருக்கும் கிடையாது.

<u>திரு. கோவை செழியன் :</u> அமைச்சரின் நேர்மையைச் சந்தேகிக்க வில்லை. காரணம் சொல்கிறேன், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடை பெறுவதால் தமிழ்நாட்டில் மெடிகல் காலேஜில் சேருவது என்பது பெரிய காரியமாகப் போய் இருக்கிறது. ஓரளவு வசதி உள்ளவர்கள், ஓரளவு மார்க் வாங்கியவர்கள் அந்த இடம் கிடைக்காமல் திணறுகிறார்கள்.





ஆகவே தான், தனியார் கல்லூரிகள் இப்படி ஆரம்பிக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு வாய்ப்புத் தந்து, அதே நேரத்தில் அவை களின் தரம் குன்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதற்காகப் பல்கலைக் கழகங்களுக்கு கல்வி அமைச்சர் மூலமாகவும், மற்றும் அரசாங்கத்தின் மூலமாகவும் தெளிவாகச் சொல்ல வேண்டும். அந்த ஸ்டான்டர்ட் குறையாமல் இருக்கவேண்டுமென்று சொல்ல வேண்டும்.

மெடிகல் காலேஜ் ஸ்டான்டர்ட் குறைந்தால் எத்தனை ஆயிரம் உயிர் கள் பாதிக்கப்படும் என்று நமக்குத் தெரியும். ஆக, இன்றைக்கு நாட்டிலே பல பேர் மெடிகல் காலேஜில் சேரவேண்டுமென்று ஆசைப் படுகிறார்கள். மெடிகல் காலேஜில் அட்மிஷன் கிடைத்த உடனே, பெண் தர பல பேர் தயாராக இருக்கிறார்கள். அதற்கு ஒரு லட்சம் இரண்டு லட்சம் என்று டௌரி தரத் தயாராக இருக்கிறார்கள். மெடிகல் காலேஜில் சேர்ந்து விட்டால் வாழ்க்கை வசதியாக வந்து விடும் என்று நினைக்கிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் நிறைய மருத்துவக் கல்லூரிகள் திறந்து வைத்தால் கிராமப் பகுதி களில் போய் அவர்கள் வேலை செய்வதற்கும் அது நல்ல வாய்ப்பாக அமையும்.

ஆகவே, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்னாலே, மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு உறுதியை நாம் வாங்கிக்கொள்ள வேண்டும். தகுதியுள்ள பல்கலைக் கழகம், திறமையுள்ள பல்கலைக் கழகம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு வாய்ப்புத் தருவதற்கு இடம் தரவேண்டுமென்று சொல்லி என்னுடைய கருத்தை இங்கே வலியுறுத்தி அமைகிறேன்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> உதவி சபாநாயகர் அவர்களே, தனியார் மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்படுவது குறித்துத் தடை விதிப்பதும், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள அத்தகைய கல்லூரிகளையும் அதனோடு தொடர்புள்ள, அதற்குத் துணையான இடை நிகழ்வான பொருள்களையும், நாடாளுமன்றச் சட்டத்தால் தமிழ்நாட்டில் முறைப் படுத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-வது பிரிவைச் சேர்ந்த (1)-வது பகுதியை யொட்டித் தீர்மானிக்கிறது என்று ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருக் கிறார்கள். எனக்கு மெத்த மகிழ்ச்சி. இந்த அளவுக்காவது நல்ல பிரச்னைகளில், முக்கிய அம்சங்களில் தன்னுடைய சுயகௌரவத்தைப் பார்க்காமல், இப்படிப்பட்ட பிரச்னைகளில் மத்திய அரசோடு ஒத்துப்போக வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு வந்ததில் மகிழ்ச்சி. தனி யாரால் நிறுவப்பட்டுள்ள கல்லூரிகளில் தமிழகத்தில் எந்த விதமான சங்கடமும் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் இதைக் கொண்டு வந்திருக்

கிறோம். இது எதைக் காட்டுகிறது என்றால், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் நிலைமைகளை முறைப்படுத்த வேண்டுமென் பதில் அக்கறை காட்டி, மத்திய அரசுக்கு ஏதோ ஒத்தாசை செய்வது மாதிரி இதைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது மிகமிக பாராட்டுதற் குரியது. ஆகவே, அவர்கள் மூநில சுயாட்சி என்று சொல்வதெல்லாம் சும்மா அரசியல் கோஷம் என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதிலும் மத்திய சர்க்காரைத் தான் ரொம்பப் பணிவாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானத்தைப் போட்ட மாதிரி தான் மத்திய அரசு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இங்கேயிருக்கிற உறுப்பினர்களைத் தரவேண்டு மென்று கேட்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இங்கே இருக்கிற உறுப்பினர் களுக்கு தெரியப்படுத்துகிறீர்களோ, இல்லையோ அதை மறுப்பதற்கு எல்லா வேலைகளையும் செய்வதற்கு எங்களுக்கு சக்தி இருக்கிறது. இங்கே இருக்கிற உறுப்பினர்கள் ஒன்றுமில்லை, நாம் நேரடியாக வாங்கிக் கொண்டு விடலாம் என்று நினைத்துவிடாதீர்கள்.

இதைக் கொண்டு வந்தவரைக்கும் பெருத்த மகிழ்ச்சி. தமிழக அரசு இவ்வளவு நல்ல தேசிய பிரச்னையில் அக்கறை காட்டி இந்தத் தீர்மானம் கொண்டுவந்தது பற்றி அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தனியார் துறையிலே அப்படி ஏதாவது ஆரம்பிக்கப் பட்டால், தரம் கெடாத அளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கவேண்டும். தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம் பித்தால் அதிலே என்ன தவறு ? இங்கே இருக்கும் மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் எவ்வளவு அவதிப்படு கிறார்கள் என்பதைப்பற்றி நான் சொல்லவேண்டியதில்லை. நாடு அறிந்த உண்மை அது.

We get 'letters to the Editor' day-in and day-out எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், எவ்வளவு செலவு செய்யவேண்டியிருக் கிறது, எவ்வளவு செலவு செய்தும் ஏமாந்துபோக வேண்டியிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் "லெட்டர்ஸ் டு தி எடிட்டர்" நிறைய வந்துகொண்டிருக்கிறது. அதற்கு மேல் சொன்னால் அமைச்சர் அவர்கள் ஆதாரம் உண்டா என்று கேட்பார்கள். என்னால் ஆதாரம் தேட முடியாது. நான் எங்கே போவது ஆதாரத்திற்கு ? இம்மாதிரியான எண்ணங்கள் தமிழ் நாட்டில் பரவலாக இருக்கின்றன என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இங்கே தமிழர்களுக்குத்தான் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றால், "ஸன்ஸ் ஆஃப் தி ஸாயில் தியரி" என்றால் வெளி மாநிலங்களில் தமிழ் மாணவர்கள் இருக்கிறார்கள், உலகத்தில் பல பகுதிகளிலும் தமிழர்கள் பரந்துகிடக்கிறார்கள். அப்படிப்பட்ட தமிழ் மாணவர்களுக் கெல்லாம் ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் அப்படிச் சொன்னால் அவர்கள் தோசையை திருப்பிப் போடமாட்டார்களா ? அங்கே இருக்கும் தமிழர்களுக்கு ஆபத்து ஏற்படாதா ? இங்கே இருக்கிற மாணவர்களுக்கே இடம் கிடைக்கவில்லை. சிலோன், மலேஷியா, பர்மா, சவுத் ஆப்ரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பலர் ரொம்ப அவஸ்தைப்படு கிறார்கள். நீங்கள் "ஸன்ஸ் ஆஃப் தி ஸாயில் தியரி" என்று சொல்லும்பொழுது மலேஷியாவில் "பூமி புத்ரா" என்று சொல்லி மலேஷியாவில் இருக்கக்கூடிய தமிழ் பையன்கள் மிக்க அவஸ்தைப்படு கிறார்கள். அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. இங்கே மலேஷியா விலிருந்து வருபவர்களுக்கு இரண்டு ஸீட்கள் கொடுக்கிறோம். மூன்று ஸீட்கள் கொடுக்கிறோம். சவுத் ஆப்ரிகாவிலிருந்து வருகிறவர்களுக்கு ஒரு ஸீட், இலங்கையிலிருந்து வருகிறவர்களுக்கு ½ ஸீட் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அவர்களுக்கு இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார் கள். தனியார் கல்லூரி வைத்து, அவர்கள் டொனேஷன் கொடுத்துச் சேருவ தில் என்ன நஷ்டம்? தரம் உள்ள கல்லூரியாக இருக்குமேயானால் நாட்டிற்கு என்ன நஷ்டம் ? ஏன் மாணவர்கள் இவ்வளவு கஷ்டப்படவேண்டும் ? தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வளவுதானே ? யாராவது ஒரு தனியார் நல்ல எண்ணத்தோடு தரமுள்ள கல்லூரியாக ஏற்படுத்தி, அதில் சேருவதற்கு டொனேஷன் கொடுத்தால், அதை வாங்கிக்கொண்டு ரசீது கொடுத்தால் அதிலே என்ன தவறு ? மேலும் அந்தக் கல்லூரியை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு அந்த நன்கொடைத் தொகையை பயன்படுத்திக்கொள்ளலாம். பணக்காரப் பையன்களாக இருந்தால் டொனேஷன் கொடுத்தால் என்ன ? ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மார்க்குகள் வாங்கியிருந்தால்தானே அங்கே போய்ச் சேர முடியும். சம தர்ம அடிப்படையில் அப்படிச் செய்வது சரியில்லை. பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் டொனேஷன் கொடுத்து சேரட்டுமே ?

திரு. என். கே. பழனிசாமி : வந்திருக்கக்கூடிய தீர்மானத்தை அரசியல் சட்டபிரகாரம் முறையாக நிறைவேற்ற வேண்டும். அம்மையார் அவர்கள் அந்தத் தீர்மானத்தை முறையாக ஆதரிக்கிறார் களா, அல்லது எதிர்க்கிறார்களா என்பது தெரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இவ்வளவு நேரம் நான் தமிழில்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் தமிழ் புரியாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களா? முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். ரொம்ப மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன் என்று சொன்னேன். ஒரு வேளை அவர் ரஷிய பாஷையைப்பற்றி ஆலோசித்துக்

கொண்டிருக்கிறார்களா? (சிரிப்பு). நான் தமிழிலேதான் பேசினேன். what does the hon. Member mean ? நான் ஆதரிக்கிறேன், ரொம்ப சந்தோஷப்படுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

தனியார் நல்ல தரமுள்ள கல்லூரியாக ஆரம்பித்தால், அதற்கு வேண்டிய அனுமதியை மத்திய அரசு கொடுப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். You are not able to increase the number of seats. இங்கு இருக்கக்கூடியவர்களுக்கே ஸீட்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்தும், சிலோன் சவுத் ஆப்பிரிக்கா, மலேஷியா போன்ற நாடுகளிலிருந்தெல்லாம் வரும், தமிழர்கள் முன்னுக்கு வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். மேலும் அதிகமான ஸீட்களை அவர்களுக்கு கொடுக்கவேண்டும். ஒரு தனியார் கல்லூரி ஏற்படுத்தினால், அதற்கு டொனேஷன் கொடுத்து சேர்ந்துகொள்ளட்டுமே. அதையாவது செய்யுங்களேன். அதிலே என்ன தவறு? வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கு இங்கே 3 ஸீட்கள், 5 ஸீட்கள்தான் என்றால் அவர்கள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். அங்கேயும் ஸீட் கிடைக்கவில்லை. இங்கேயும் வந்து கஷ்டப்படுகிறார்கள். ஸீட் கிடைப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. டொனேஷன் கொடுப்பதை ஏன் தப்பு என்று நினைக்க வேண்டும்? அதற்கு ஒரு வரைமுறையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு சக்தியிருந்தால் டொனேஷன் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளட்டும். அதை வைத்து மேலும் இரண்டு பையன்களுக்கு இடம் கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்துங்கள். பணக்காரர்கள் கொடுக்கட்டுமே. அதைக் கொண்டு "கபாஸிடியை" "இன்கிரீஸ்" பண்ணுங்கள். அதிலே என்ன தப்பு? ரசீது கொடுக்கவேண்டும் என்று சொல்லிவிடுங்கள். அப்பொழுதுதானே பணக்காரர்களிடமிருந்து பணம் வெளியே வரும்? சமதர்மக் கொள்கை என்று சொல்லும்பொழுது இதை ஏன் நழுவவிட வேண்டும். தாராளமாகப் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் நன்கொடை கொடுத்துவிட்டு போகட்டுமே. அதை வைத்து இரண்டு ஏழை, எளிய மாணவர்கள் படிப்பதற்கு வசதியைப் பெருக்குவதற்கு இடம் ஏற்படுமே. அந்த அளவுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி, அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதை விட்டு விட்டு ஏதோ பெரிய "ஸின்" மாதிரி தனியார் கல்லூரியே கூடாது என்று ஏன் சொல்ல வேண்டும்? தரத்தை வேண்டுமானால் பார்த்துக்கொள்ளுங்கள், வாய்ப்புகள் அதிகமாக ஏற்படுத்திக்கொடுப்பதற்கு, வசதிகள் செய்துகொடுப்பதற்கு ஏன் தயங்கவேண்டும்?

மருத்துவக் கல்லூரியிலிருந்து டாக்டர் பட்டம் பெற்று வெளிவந்த மாணவன் ஒரு வருஷம் கழித்தும் வேலை கிடைக்காத நிலையில்தான் இருக்கிறான். செழியன் அவர்கள் பேசும்பொழுது டாக்டர் பட்டம் பெற்றால் லட்ச ரூபாய் வரதட்சிணை கொடுத்து பெண்ணைக் கொடுப்பார்கள் என்று சொன்னார். வரதட்சணை கொடுத்து பெண்ணையும் கொடுத்துவிட்டு



வேலையில்லாமல் மருத்துவ பட்டதாரி சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறான். அதனால் அம்மா, அப்பாவுக்கும் கஷ்டம், மாமியார் மாமனாருக்கும் கஷ்டம், மருத்துவக் கல்லூரியிலிருந்து படித்து வெளிவந்து ஒரு வருஷம் ஆனாலும்கூட, அந்த மாணவனை பயன்படுத்திக்கொள்வதில்லை. அவர்களுக்கு "ஜாப் ஆப்பர்சூனிடீஸ்" கொடுக்கப்படவில்லை. மருத்துவ கல்லூரியிலிருந்து படித்து பட்டம் பெற்று வெளிவருகிற மாணவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

எம்.டி., எம்.எஸ். படிப்பு என்றால் அதற்கும் இடம் கிடைப்பதற்கு பெரிதும் கஷ்டமாக இருக்கிறது. எம்.டி., எம்.எஸ். என்றால் மேலும் மாமனார் லட்ச ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது........

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எம்.டி., எம்.எஸ். ஸீட் வாங்குவதற்கு லட்சம் ரூபாய் வைத்தால்தான் முடியும் என்பதெல்லாம் அம்மையாரின் கட்சியின் ஆட்சி இருந்த காலத்தில் இருந்திருக்கலாம். இப்படி ஒரு தவறான கருத்தை ஒரு பொறுப்புள்ள எம்.எல்.ஏ., வக்கீலாக இருப்பவர் கூறுவது பெரிய தவறு. எம்.டி., எம்.எஸ்.-க்கு சர்வீஸ், மார்க் அடிப்படையில்தான் ஸீட்கள் வழங்கப்படுகின்றன. லட்சம் ரூபாய் கொடுப்பதாக அம்மையாருக்குத் தெரிந்திருந்தால் அதைப்பற்றிப் புகார் சொல்லியிருக்கவேண்டும். அப்பொழுது அதன் பேரில் விசாரணை நடத்தலாம். இப்பொழுதும் அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அதைப் பற்றி புகார் கொடுக்கலாம். நான் விசாரிக்கிறேன். மாமனார் கொடுக்கிறார். மருமகன் வாங்கிக் கொள்கிறார் என்றால் என்னென்னவோ பெயரைச் சொல்லி வாங்கிக் கொள்ளலாம். எம்.எஸ்., எம்.டி. என்று பெயரைச் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எம்.எஸ்., எம்.டி. ஸீட்கள் வாங்குவதற்கு கஷ்டம் இருக்கின்றது என்பதற்காகத்தான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எம்.எஸ்., எம்.டி., படிப்பதற்கு அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கேட்பவர்களுக்கு இடம் கிடைக்கிறது. ஆனால் "ஸ்பெஷாலிடி"-க்கு அதிக பயிற்சி வேண்டியிருக்கிறது. அதிலே போஸ்ட் கிராஜுவேட் படிக்கவேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேல் பயிற்சி தர முடியாது. 10, 20 மாணவர்களுக்கு மேல் சரியான பயிற்சி அளிக்கமுடியாது. அதிலெல்லாம் பயிற்சிதான் முக்கியம். போஸ்டு கிராஜுவேட் கோர்ஸுக்கு பயிற்சி மிக அவசியம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எம்.எஸ்., எம்.டி.-க்கு ஸீட்கள் கிடைப்பது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ரொம்ப செல்வாக்கு படைத்தவர்களுக்கும், அதுவும் வசதி படைத்தவர்களுக்கும்தான் கிடைக்கிறது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்டு 19

கல்விக்கு மாத்திரம் தடைபோடக்கூடாது. படிப்பதற்கு அதிக வாய்ப்பு கொடுக்கவேண்டும். வளர்ந்து வருகிற சமுதாயத்தில் படிப்பதற்கு வாய்ப்பு கொடுக்காமல் இருப்பது நாகரிகம் அல்ல, அழகு அல்ல. இங்கே படிக்க வாய்ப்பு, வசதியில்லாததினால்தான் ரொம்பப் பையன்கள் லண்டன், அமெரிக்கா என்று போய்க்கொண்டிருக்கிறார்கள்.

There is a brain-drain in thē countrig because you do not give opportunities.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நாட்டில் இல்லாத சில துறைகளில் மேல் படிப்பிற்காக சில பேர்கள் போகிறார்கள். ஆனால் பல பேர்கள் படிப்பிற்கு என்று சொல்லிக்கொண்டு சம்பாதிக்கப் போகிறார்கள். இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை அம்மையார் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : வளர்ந்து வருகிற சமுதாயத்தில் மருத்துவ பட்டதாரிகளுக்கு இங்கேயே சம்பாதிக்க வசதி செய்து கொடுத்தால் அவர்கள் ஏன் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள்? அங்கே போய் 500 டாலர் சம்பாதிப்பதற்குப் பதிலாக இங்கேயே ரூ. 500 சம்பாதித்துக்கொண்டு நிம்மதியாக இருப்பார்கள். அந்த நிம்மதி கூட இப்பொழுது அவர்களுக்குக் கிடையாது. இங்கு மருத்துவதுறையில் இருக்கக்கூடிய சங்கடங்கள் என்ன என்பதை உணர்ந்து, அந்த சங்கடங்களைப் போக்குவதற்கு எல்லாவிதமான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். போஸ்டு கிராஜுவேட் கோர்ஸுக்கு, எந்தக் கோர்ஸுகள் அதிகமாக பாபுலராக இருக்கிறதோ அவைகளுக்கு அதிகமான இடங்கள் ஒதுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாபுலர் போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ் என்பது அவர்கள் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு எதில் அதிகமாக இருக்கிறதோ அது பாபுலர். எது அதிகமாக சமுதாயத்திற்கு தேவைப்படுகிறதோ, அதாவது ஸ்கின் டிஸீஸ் கோர்ஸுக்கு இப்பொழுதுதான் வர ஆரம்பித்திருக்கிறார்கள். டி.பி. கோர்ஸ் என்றால் அதிகம் பேர்கள் வருவதில்லை. "செஸ்டு டிஸீஸ்" கோர்ஸ் என்றால், இரண்டொருவர் வர ஆரம்பித்திருக்கிறார்கள். "ஸ்பெஷாலிடீஸு"க்கு அரசாங்கமே சம்பளம் கொடுத்து படிக்க வைக்கிறார்கள். ஏனென்றால் அவைகளுக்கு ஆட்கள் அதிகம் வருவதில்லை. சில கோர்ஸுகளுக்கு ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன. தேவையான அளவுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இவ்விதமான கஷ்டங்கள் இருப்பதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு தனி கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவக் கல்லூரியில் ஸீட்கள்



1974 ஆகஸ்டு 19] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அதிகம் கொடுக்கவேண்டும். நல்ல நிலையிலே உள்ள யாராவது ஒரு தனியாரைப் பிடித்து ஒரு கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசாங்கமே ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்கத்திற்கு மேலும் கல்லூரிகளை ஆரம்பிக்க முடியவில்லை என்றால், ஒரு தனியாரைப் பிடித்து வசதி செய்து கொடுத்து, கல்லூரி ஆரம்பிக்கும்படி செய்ய வேண்டும். தமிழ் மக்களுக்கு அதிகமான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். மத்திய அரசு "தரத்தை வேண்டுமானால் பார்த்துக்கொள்ளட்டும்" தரம் இல்லாத பல காலேஜ்களை மத்திய அரசு "டீ-ரெகக்னைஸ்" செய்யவில்லையா? தரம் குறையாமல் பார்த்துக்கொண்டு, அதே சமயத்தில் அதிகமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இங்கே தமிழர்களுக்குத்தான் இடம், தமிழர்கள்தான் வாழவேண்டும் என்று சொன்னால், பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலுமுள்ள தமிழர்களுக்கு இதே ஆபத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வாய்ப்பு தரக்கூடிய அளவுக்கு உங்கள் சக்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எ. சி. நரசிம்மன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று ஓரிரண்டு கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தனியார் கல்லூரிகளும் இயங்கவேண்டும் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் தமிழர்களுக்கே இடம் கிடைக்காமல் வெளி மாநிலங்களிலிருந்து வருகிறவர்களுக்கு இங்கே இடம் கிடைக்கிறது. வேலூரில் ஒரு மருத்துவக் கல்லூரி இருக்கிறது. வேலூர் கல்லூரியில் தமிழர்கள் யாரும் சேர்க்கப்படுவதில்லை. அது ஆரம்பித்த காலத்திலிருந்து அந்தக் கல்லூரியில் கேரளத்தைச் சேர்ந்த "சிரியன் கிறிஸ்டியன்ஸ்" தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது வரையிலே சேர்க்கப்பட்டிருப்பவர்கள் "சிரியன் கிறிஸ்டியன்ஸ்" தான். ஒன்றிரண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் இந்தக் கல்லூரியில் சேர்க்கப்படுவதில்லை. அந்த அளவுக்கு முழுக்க முழுக்க தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லாமல், கேரளத்தைச் சார்ந்த "சிரியன் கிறிஸ்டியன்ஸுக்கு"த்தான் அந்தக் கல்லூரியில் இடம் கொடுக்கிறார்கள்.

[பிற்பகல் 1-00]

அதுமட்டுமல்ல. அந்தக் கல்லூரி ஆஸ்பத்திரியில் இருக்கின்ற ஹவுஸ் சர்ஜன்களில் ஒரு தமிழர் கூட இல்லை. அவ்வளவு பேரும் சிரியன் கிறிஸ்டியன்ஸ்தான். அந்த ஆஸ்பத்திரியில் எல்லா இடங்களிலும் அவர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு காலமாக அந்த ஆஸ்பத்திரி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ந்யூரோ சர்ஜன்கள் அத்தனை பேரும் சிரியன் கிறிஸ்டியன்ஸ்தான். தமிழ்நாட்டைச் சேர்ந்த யாரும் அந்தப் பிரிவில் இல்லை. ஆகவே, இந்த அரசாங்கம் அந்த வேலூர்

சி.எம்.சி. ஆஸ்பத்திரியையாவது முதலில் முறைபடுத்த எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற மூல தீர்மானத்திற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்றே புரியவில்லை.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, the Resolution before the House is fairly clear and it wants that the State of Tamil Nadu should recommend to the Central Government that no medical college should be started by a private party. My only apprehension is, how is it that the Health Minister of the Government of Tamil Nadu was called upon by the Central Health Minister to pass this Resolution. This is something which passes my comprehension. Why is it that the Central Health Minister did not ask or request other State Health Ministers belonging to the ruling Congress Party, to pass this Resolution? These are questions which I am sure the Hon. Minister for Health will be able to answer in this House.

It is a well-known fact that the Karnataka State has nearly five or six private medical colleges and the Andhra Pradesh has two or three private medical colleges. Also quite a number of other States all over India have private medical colleges. Apart from the Medical College at Vellore—which we cannot call as private college —all the other colleges in our State are run by the Government of Tamil Nadu. When that is the case, why should this Government come forward to pass this Resolution and why is it that the Karnataka State has not been asked to pass this Resolution?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the matter was discussed at the Central and State Health Ministers' Conference and the Central Minister made an appeal that some of the Legislatures of the States might pass such a resolution so that the Centre may sponsor a Bill to regulate such private colleges which are mainly run on the capitation fees.





DR. H. V. HANDE: I have followed it. My point is that the Karnataka State should have been the first State to pass this Resolution and the Party running the Government there belongs to the same party at the Centre. So, instead of trying to be a good boy of the Central Government, we should have waited for some more time to see whether they also would pass this resolution and then only we can know where we stand. Actually Article 252 (1) still disturbs us. It says—

> 'If it appears to the Legislatures of two or more States to be desirable that any of the matters withrespect to which Parliament has no power to make laws for the States except as provided in articles 249 and 250 should be regulated in such States by Parliament by law, and if resolutions to that effect are passed by all the Houses of the Legislature of those States, it shall be lawful for Parliament to pass an Act for regulating that matter accordingly, and any Act so passed shall apply to such States and to any other State by which it is adopted afterwards by resolution passed in that behalf by the House.......'

In other words, there is a grave risk of certain other States refusing to adopt it. We are unnecessarily falling a victim to these Articles..

THE HON. THIRU K. ANBAZHAGAN: Now the Central Minister has no authority to speak about under-graduate education in any State. So in the interest of the country or in the interest of the Medical Education itself, the Central Minister requests the help of such of those States which would come forward to pass such a resolution so that he may be able to bring the other States also through a Bill to regulate such education..........

DR. H. V. HANDE: That is exactly the point. In the resolution it has been sought to be made that the moment the resolution is passed, the Central Government will have mandatory power to ask other State Governments to pass such a resolution or to abolish capitation fees. This is not so. They could only make a request to the other States and they cannot pass an order. They can

only say that Tamil Nadu has passed such a resolution and so the other States also should pass it. Supposing a State refuses to pass it what can the Central Government do ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Now the blame rests on the States. The Central Government will say that the States have not come forward to pass the resolution and so they are not able to implement anything in that regard. As Tamil Nadu had agreed to pass such a resolution, the blame will not be on this State Government. If we pass this resolution, it will enable the Central Health Minister at least to persuade the other States which are not coming in line to pass the resolution.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் எவ்வளவுதான் சொல்லுங்கள். ஆளும் காங்கிரஸ் கையில் பல மாநிலங்கள் இருக்கின்றன. மத்தியிலே ஆளுகின்ற காங்கிரஸ்தான் பல மாநிலங்களில் ஆண்டு கொண்டிருக்கின்றன. அப்படி இருப்பதினால் அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களை சென்ட்ரல் மினிஸ்டர்ஸ் கூப்பிட்டு இந்த ரெஸல்யூஷனை நிறைவேற்றுங்கள் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை. அதனால் நாம் மட்டும் ஏன் இப்படிப்பட்ட ஒரு ரெசலூஷனை பாஸ் பண்ணவேண்டும் ? மத்திய அரசாங்கத்திடம் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்பதற்காக நாம் ஏன் பாஸ் பண்ண வேண்டும்? அதனால் ஏற்படுகின்ற பின் விளைவுகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களால் செய்ய முடியாததை நாம் ஏன் செய்ய வேண்டும் ?

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இதற்குப் பின்னால் நாம் பிரைவேட் காலேஜஸ் ஸ்டார்ட் செய்ய முடியாது. ஆனால் மற்ற மாநிலத்தவர்கள் ஸ்டார்ட் செய்யலாம். அதற்காகத்தான் அவர்கள் இந்தமாதிரி ரிசலூஷனை பாஸ் பண்ணாமல் இருக்கிறார்கள். இப்போது மற்ற மாநிலங்களில் பல பிரைவேட் காலேஜஸ் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நாம் பாஸ்பண்ணிய பின்னாலும் அவர்கள் பாஸ்பண்ண மாட்டோம் என்று சொல்லலாம். அவர்கள் பாஸ் பண்ண மாட்டோம் என்று சொன்னால் அவர்களை ஒன்றும் கேட்க முடியாது. ஆர்டிகிள் 251, 252-ல் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். எந்த மாகாணம் தீர்மானத்தை பாஸ் பண்ணுகிறதோ அவர்கள் இனிமேல் பிரைவேட் காலேஜ் ஆரம்பிக்கக்கூடாது. ஆனால் பாஸ் பண்ணாதவர்கள் ஆரம்பிக்கலாம். அவர்களை நடத்தக்கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவேதான் நான் சொல்கிறேன் ஆளும் காங்கிரஸ் கட்சியின் கையில் இருக்கிற மாநிலத்தவரே இதை நிறைவேற்றாதபோது நாம் ஏன் நிறைவேற்ற வேண்டும்? அது சரியல்ல. இந்த மாதிரியான ஒரு நிலைமை வந்தால் நம்முடைய மாநிலத்தின் நிலைமை என்னவாகும் ? எல்லா மாநிலங்களிலும் ஒரு நிலைமை, இங்கே வேறொரு நிலைமை இருக்கும்.





சென்ற ஆண்டிலே கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது சென்ட்ரல் கமிட்டி 8 பிரைவேட் காலேஜஸ் சரியாக நடக்கவில்லை என்று சுட்டி காட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அப்போது இந்த விஷயத்தில் எல்லா கட்சிகளின் கருத்து என்ன என்றும் கேட்டார்கள். கல்லூரிக்கு எத்தனை சீட் வைக்கவேண்டுமென்றுகூட கேட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் இப்போது இந்தத் தீர்மானத்திற்கு அவசியமில்லை. இதை நிறைவேற்றுவதினால் தமிழ்நாட்டிற்கு பல விஷயங்களில் தொல்லைகள் வரும். அந்தமாதிரியான ஒரு நிலைமையை நாமே உருவாக்கிக்கொள்ள வேண்டாம்.

மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறீர்கள். நமக்கு தனிப்பட்ட சில சலுகைகள் வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் இருக்கிற சுயாட்சியை கொண்டுபோய் அவர்களிடம் ஏன் கொடுக்க வேண்டும்? இந்த ரெசலூஷனை பாஸ் பண்ணுவதின் மூலம் நிர்மாணச் சட்டத்திற்குள் நுழைந்து இருக்கிற அதிகாரத்தை இழந்து விடுவது சரியாக இருக்குமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமைச்சரவர்கள் அதற்கு விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றேன். இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் ஏற்கெனவே எனக்கு முன்பு பேசிய திரு நரசிம்மன் குறிப்பிட்டதைப் போல தனிப்பட்டோர் நடத்துகின்ற காலேஜ்களைப் பொறுத்த வரையில்—சர்க்கார் ஓரளவிற்கு அவற்றுக்கு உதவி செய்கிறது என்றாலும் —அவர்களுக்கு நாம் எந்தவிதமான உத்தரவோ—கட்டுப்பாடோ விதிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் இந்தமாதிரி ஒரு சட்டம் கொண்டு வந்தால் நல்லதாக இருக்கும். இதுபோன்ற தனியார் கல்லூரிகளில் தரக் குறைவாகப் படித்துவிட்டு வந்து சிலர் இங்கே பிராக்டீஸ் செய்வதைப் பார்க்கிறோம். அவற்றை எல்லாம் ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வருவது மிகவும் அவசியமானதாகும். ஆனால் இந்தத் தீர்மானத்தில் எந்த சிஸ்டம் என்பது சொல்லப்படவில்லை. அலபதியா, ஓமியோபதியா, சித்தமா? இவை எல்லாவற்றுக்கும் இவை பொருந்துமா ?

சர்க்கார் ஏற்கனவே 3 லட்சம் ரூபாய் ஹோமியோபதிக்காக ஒதுக்கியும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கெனவே பலபேர்கள் கூடக் கூறினார்கள். ஹோமியோபதி மோசமாக இருக்கிறது. அங்கங்கே பலர் பலவிதமாகச் சொல்லிக்கொடுக்கிற காரணத்தினால் தரம் மோசமாக இருக்கிறது என்கிறார்கள். சர்க்காரே ஹோமியோபதி கல்லூரியை ஏற்படுத்தி நல்ல முறையில் சொல்லித் தருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். அதே மாதிரி சித்தவைத்தியம்—இவற்றை எல்லாம் அரசாங்கமே ஒழுங்கு படுத்த வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம்—ஹோமியோபதி முறையில் இன்ஜெக்ஷன் போடலாமா என்பது. போடக் கூடாது என்று கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் சென்டிரல் ஆக்ட் படி தடைவிதித்திருக்கிறார்கள். அதுவும் அலபதி டாக்டர்கள் வருமானம் குறைந்து விடுகிறது என்கிற அடிப்படையில் அந்தத் தடையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். தடை இருக்கிறது. அங்கெல்லாம் இன்ஜெக்ஷன் போட்டுத்தான் வருகிறார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தில் இது எந்தமுறைபற்றியது என்பதைத் தெளிவுப்படுத்துவதோடு கூட—இவற்றைப் போன்ற தனியார் கல்லூரிகளை எல்லாம் ஒழுங்குபடுத்த—தரம் உயர—மத்திய சட்டம் வரும்படியாக ஹோமியோபதி, சித்தம் போன்ற முறைகளைச் சேர்த்துக்கொள்வது நலம் என்று சொல்லிக் கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கின்றேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறை மருத்துவக் கல்லூரிகளைக் 'கட்டுப் படுத்துவது தடை செய்வது வரவேற்கக் கூடிய ஒன்றுதான். ஆயினும் மாண்புமிகு அங்கத்தினர்கள் எழுப்பிய பலவிதமான சந்தேகங்களும் நமக்கு வரத்தான் செய்கின்றன. இருந்தாலும் கூட இங்கே மாண்புமிகு சகோதரி பேசியது போல மத்திய அரசாங்கத்தோடு எல்லா விதத்திலும் பிணங்கிக் கொண்டிருக்க—இதிலே மாத்திரம் இணைந்து விட்டது போல அவர்கள் சொன்னார்களே—நல்ல பிரச்சினைகள் வரும்போது நம் அரசாங்கம் ஒத்துப் போகும் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இது 'போன்ற கட்டுப்பாடு' தனியார் கல்லூரிகளுக்கு வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த அளவில் அது வரவேற்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகள் என்கிறபோது சில தனியார் கல்லூரிகள் அரசாங்கக் கல்லூரிகளை விடத் தரத்தில் உயர்வாக இருப்பதையும் நாம் பார்க்கிறோம். தரம் மிக உயர்வாக உள்ள அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு நாம் ஒரு சலுகை கொடுத்தாக வேண்டும். தனியார் துறையில் ஏற்படுத்தப்படுகின்றன என்றாலும்கூட தர உயர்வாக அப்படிப்பட்ட கல்லூரிகள் நம் மாநிலத்தில் வருவதானால் அதற்கு நாம் வழிவகை செய்தாக வேண்டும்.

அதுமட்டுமல்ல, மருத்துவக் கல்லூரிகளில் டொனேஷன் என்ற முறையில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். அதில் என்ன தவறு? அதுபோல அரசாங்கமே கூட டொனேஷன் என்ற முறையில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதாக திருமதி அம்மையார் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கு இல்லை. இந்த நிலை வந்து விடுமானால் திறமைமிக்க ஏழை மாணவர்கள் கூட வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முடியாத நிலைமை வந்துவிடும். பணக்காரர்கள், மிராசுகள், மிட்டாக்கள், தொழிலதிபர்களுடைய குழந்தைகளைத்





VAII, 31 'N74
31 N74 . 5[illegible]2

தவிர மற்றவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காது போய் விடும். அரசாங்கமே அதைச் செய்யலாம் என வஞ்சகப் புகழ்ச்சியில் அவர்கள் சொல்லியிருந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளில் இன்றைய தினமே டொனேஷன் என்று வாங்கப்படுவது—எந்தவிதமான சிக்கல்களை, மக்களுக்குத் துன்பங்களை அளிக்கிறது என்பதை நாம் அட்மிஷன் நேரங்களில் பார்த்திருக்கிறோம். இந்தக் கொள்கையை நான் அடியோடு எதிர்க்கிறேன்.

குறிப்பாகவும், சுருக்கமாகவும் சொ[illegible] வேண்டுமானால் மற்றவர்களால் குற்றம் குறை காணமுடியா[illegible] அளவில் கடந்த [illegible]காண்டுகளாக—மருத்துவக் கல்லூரிகளில் [illegible]வர்கள் சேர்க்கப்பட்டு வருகிற நிலையிலேயே—எப்படியாவது குறை [illegible]ல வேண்டுமென்று ஏதேதோ பேசுகிறார்கள். நன்கொடை வாங்கு[illegible] என்று வேறு வைத்துவிட்டால் கேடான விளைவுதான் ஏற்படும்.

61673

எங்கள் மாவட்டத்தில் [illegible]ப்பாகப் பணியாற்றி வருகிற ஸி. எம். ஸி. மருத்துவ மனை[illegible] பொறுத்தவரையில்—செலவு அதிகமாகத்தான் செய்கிறது [illegible] மக்களுக்கு [illegible]வர்கள் செய்து வருகிற சிறப்பான சேவையைப் [illegible]த்தான் வேண்டும். அதோடு இணைந்த மருத்துவக் கல்லூரியைப் பொ[illegible]வரையில் அவர்கள் ஒரே சாதியினரைத்தான் சேர்க்கிறார்கள் என்கிற [illegible] இருக்கத்தான் செய்கிறது. அதுவும் நம்முடைய மாநிலத்திற்குச் சம்பந்தப்படாதவர்களை எல்லாம் சேர்த்துக் கொள்கிறார்கள். இதற்கு அரசாங்கம் ஒரு கட்டுப்பாடு போடவேண்டும்—அரசாங்கத்தில் தொடர்பு இருக்கிற காரணத்தினால். ஆயினும் தரமான கல்லூரிகள் தனியார் துறையில் வருவதற்கு வாய்ப்பு வசதிகளை இந்தக் கட்டத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குறிப்பாக அறக்கட்டளைகள் கிறிஸ்துவர்கள்—இஸ்லாமியர்கள்—கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அப்போதுதான் தரம் பாதுகாக்கப்படும் அளவில் இருக்கும் என்கிற என்னுடைய கருத்துக்களைக் கூறி இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்தத் தீர்மானத்தின் மிக முக்கியமான நோக்கம் அலபதி முறையில் கல்லூரிகளை முறைப்படுத்துவது—பிற மருத்துவ கல்லூரிகளைப் பற்றி ஒரு பிரச்சினை எழுப்பப்படவில்லை—விவாதிக்கப்படவில்லை. இந்தத் தீர்மானத்தில் வர இருக்கிற ஒரு திருத்தத்தை நான் ஆங்கிலத்தில் படித்துவிட்டால் அது தமிழிலுள்ள தீர்மானத்தின் திருத்தமாகவும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் கருதுகிறேன்.

**I move the following amendment to the Government Resolution :—**

**" The word 'allopathic' shall be inserted before the words 'medical colleges' wherever they occur in the Resolution ."**

இந்தத் தீர்மானத்தில் மெடிக்கல் காலேஜஸ் என்று வருகின்ற இடத்தில், அலோபதி மெடிக்கல் காலேஜஸ்......

Dr. H. V. HANDE : I think instead of saying 'allopathy' the word 'allopathic, would be more appropriate.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இது மாநிலத்திற்குள்ள அதிகாரத்தை மத்திய அரசுக்குத் தருவது அல்லவா என்ற கேள்வியை 6 மாதகாலமாக நாங்கள் ஆலோசித்தோம். தருவது, தராமலிருப்பது என்பது எப்போது என்று கேட்டால், நம்மைக் கட்டுப்படுத்தக் கூடிய காரியங்களில் நாம் கட்டுப்படுத்தினால் நாட்டினுடைய நிலைமை நன்றாகிவிடும் என்று சொன்னால், அல்லது பிற மாநிலங்களிலே உள்ள பிரச்சினைகள் காரணமாக, நம்முடைய மாநிலத்திலே எந்தவிதமான பாதகமும் ஏற்படாது என்ற நிலைமையிருந்தால், நமக்குள்ள அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுக்கத் தேவையில்லை. நாம் ஏற்படுத்துகிற கட்டுப்பாடுகள் பிற மாநிலங்களுக்குப் பாதகம் ஏற்படுத்தாது என்றால், அப்போது நம் அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுக்காமல் நாமே சரி செய்து கொள்ளலாம்.

பல்வேறு மாநிலப் பிரச்சினைகளைத் தீர்க்க, மத்திய அரசு, சட்டத்தை எப்படியாவது ஒழுங்குபடுத்த முடியுமா என்று முயற்சிக்கின்ற கட்டத்திலே இருக்கிறது. மத்திய அரசு சொல்வதை மற்ற மாநில அரசுகள் ஒத்துக் கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று கேட்டார்கள். மற்ற மாநிலங்களிலே அதே காங்கிரஸ் கட்சிதானே ஆட்சி நடத்துகிறது. ஏன், அதுவே கேட்கவில்லையென்று கேட்டார்கள். மாநிலங்களுக்குள்ள அதிகாரத்தை, மத்திய அரசுக்கு விட மனம் வராது என்ற சூழ்நிலை காங்கிரஸ்காரர்களிடத்திலே இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

அம்மையார் அவர்கள்கூட அமைச்சராக இருந்தால், வேறு விதத்திலே பேசுவார்கள். ஆனால், அதே அமைச்சர்கள், இன்னொரு பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து விட்டால், தங்களது மாநிலத்திலே தவறாகப் போகக் கூடும். அதனால் சில வெறுப்புகள் ஏற்படும் என்ற முறையில் அங்கே "வெஸ்டட் இண்டரட்ஸ்" இருக்கிறது. அதை நாம் ஏன் கட்டுப்படுத்த வேண்டும். மத்திய அரசு கட்டுப்படுத்தட்டும் என்ற நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால், இங்கே குழப்பம் இல்லாத நிலைமை இருக்கிறது. நல்ல வேளை, நாம் இந்திரா காங்கிரஸில் இல்லை. அவர்கள் சொல்வதற்குள்ளாகச் செய்வதா என்ற நிலைமை நமக்கு இல்லை.



மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்தவரை, எல்லா கல்லூரிகளும் நமது மாநிலத்தில் அரசு மூலமாக நடத்தப்பட்டு வருகிற காரணத்தால், தனியாரிடம் இல்லாத காரணத்தால், குழப்பம் ஏற்படவில்லை. அரசு நடத்துகிற கல்லூரிகளில் உள்ள ஒழுங்கு தனியார் நடத்துகிற கல்லூரிகளில் இல்லை. மற்ற மாநில விவகாரங்களுக்குள் நாங்கள் தலையிடவும் விரும்பவில்லை. மற்ற மாநில விவகாரங்களில் தலையிடலாமா, வேண்டாமா என்பது மத்திய அரசைப் பொறுத்தது. அதற்கு முன்னால், இப்படிப்பட்ட ஒரு கருத்தை உருவாக்க வேண்டியுள்ளது. தனியார் நடத்துகிற மருத்துவக் கல்லூரிகளை முறைப்படுத்துகிற அதிகாரம் இருந்தால்தான் தலையிட முடியும். எனவே, முறைப்படுத்துகிற அதிகாரம் மத்திய அரசுக்கு இல்லாத காரணத்தினால், வியாபார முறையிலே அக்கல்லூரிகள் நடத்தப்படுகின்றன.

மற்ற மாநிலங்களிலே ஒன்றிரண்டு தனியார் மருத்துவக் கல்லூரிகள் நல்ல முறையில் நடத்தப்படுகின்றன. அவர்களுடைய ஸ்டாண்டர்டு, நம்முடைய அரசுக் கல்லூரிகளின் தரத்தைவிடக் குறைவு என்று சொல்ல முடியாது. ஆனால், மற்ற தனியார்கள், ஏராளமான மாணவர்களைச் சேர்த்தால் வருமானம் வருகிறது என்ற விதத்தில் 100 பேர் சேர்க்க வேண்டிய இடத்தில் 200 பேரைச் சேர்த்துவிடுகிறார்கள். தேர்வைத் தவறாக நடத்துகிறார்கள். "போகஸ்"-ஆக நடத்துகிறார்கள். அந்தக் கல்லூரிகளிலே பட்டம் பெற்று வருபவர்களுடைய தரம் குறைவாக இருக்கிற காரணத்தினால், நம்முடைய மாநிலத்திலே பட்டம் பெறுபவர்களுக்கு நம்முடைய மாநிலத்திலே முன்னுரிமை இருக்க வேண்டுமென்று

Priority may be given to our own medical graduates for admission in our State.

என்ற கருத்தை நான் அமைச்சர் பொறுப்பை ஏற்ற ஓராண்டுக்கெல்லாம் துறையினருக்குத் தெரிவித்தேன். அது அரசியல் சட்டப்படி முறையல்ல என்று தெரிவித்திருக்கிறார்கள்.

You cannot give priority to graduates of your own State. Every graduate from other States is also equally entitled to apply. You cannot prevent him because he is educated in another State or in another medical institution.

என்ற கருத்து இருக்கிறது. ஆகவே, விண்ணப்பிக்கிற உரிமையை நாங்கள் அனைவருக்கும் பொதுவாக வைத்திருக்கிற காரணத்தால் தரக் குறைவான கல்லூரிகளிலே இருந்து வருகிற பட்டதாரி மாணவர்களைத் தடுக்க எங்களுக்கு வாய்ப்பில்லை.

நம்முடைய மாணவர்களுக்குத் தேர்ச்சி இருந்தாலும் கூட அவர்களை இந்தப் போட்டியிலே பாதுகாக்க வழியில்லாத நிலைமையிலே, எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் தரத்தை உயர்த்த ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதில் ஒழுங்குபடுத்த, மத்திய மருத்துவ ஆலோசனைக் குழுவுக்கு ஓரளவு அதிகாரம் இருக்கிறது.

ஆனால், மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துகின்ற பொழுது, இருக்கிற அடிப்படைத் தேவைகளைக் காட்டி, அங்கீகாரம் பெற்றுவிடுகிறார்கள். பிறகு, அந்தக் கல்லூரிகளை நிறுத்த அதிகாரம் இல்லை. அப்படி இருந்தால் மாநில அரசால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, ஒரு ஒழுங்கை மத்திய அரசு உருவாக்க வேண்டும். அப்படி ஒரு முயற்சியை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால், மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளா விட்டாலும், மத்திய அரசுக்கு இருக்கிற இயல்பான செல்வாக்கைப் பயன்படுத்திச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம். அதனாலே, மருத்துவக் கல்லூரிகளின் தரம் பாதிக்கப்படாமலிருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம்.

இந்தத் தீர்மானம், ஓமியோபதி, இந்திய மருத்துவக் கல்லூரிகளைக் கட்டுப்படுத்துமா என்று கேட்டார்கள். இந்தத் தீர்மானம் கொண்டுவந்த "காண்டெக்ஸ்டில்" அந்தக் கல்லூரிகளைப் பற்றி அதுமாதிரி பிரச்னை வரவில்லை. நம்முடைய மாநிலத்திலே சித்த மருத்துவக் கல்லூரிகளைத்தான் நாம் வளர்க்கிறோம். மற்ற மருத்துவங்களைப் பொறுத்தவரையிலே வேலை வாய்ப்புகளை வளர்க்கிறோம். இங்கு ஒரு ஓமியோபதி கல்லூரி ஏற்படுத்த முயற்சி இருக்கிறது. அதை ஏற்படுத்துகிற பொழுதே, முழுவளர்ச்சியுடன் உள்ள சூழ்நிலை உருவாகிற நிலையில் ஏற்படுத்த வேண்டுமென்று ஆந்திராவிலுள்ள ஓமியோபதி கல்லூரி முதல்வர் அவர்களை அழைத்து, ஆலோசனைகள்; வழங்கச் செய்திருக்கிறோம். எனவேதான் இந்தத் தீர்மான அடிப்படையிலே விவாதிக்கப்பட வேண்டியவை அல்ல அவை.

மற்றொன்று, தனியார் கல்லூரிகள் ஏற்படுத்துவதை ஊக்கப்படுத்த வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதிலே 3 பிரச்னைகள் இருக்கின்றன. அதிலே முக்கியமான, பெரிய பிரச்னை, ஏராளமான நோயாளிகளைக் கவனிக்கிற முறை, பெரிய மருத்துவ மனைகளில் கூட—தனியார் மருத்துவ மனைகளில்—இல்லை. வேலூரிலுள்ள மருத்துவ மனையில் ஏராளமான நோயாளிகளை அவர்கள் கவனிக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு எப்பொழுதும் பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன்.

அந்தக் கல்லூரியில், அவர்கள், மாணவர்களைத் தேர்ந்தெடுக்கப் போட்டித் தேர்வு நடத்துகிறார்கள். பம்பாய் போன்ற இடங்களிலே கூடத் தேர்வு நடக்கிறது. அதிலே, தமிழ்நாட்டு மாணவர்கள், அதிகம் வெற்றி பெறும் வாய்ப்பு இல்லையென்று கலந்துகொள்ளவில்லை. அந்தச் சூழ்நிலையிலே ஒரு குறிப்பிட்ட வகுப்பினர், அல்லது பகுதியினர் அதிலே அதிகம் இடம் பெறுகிறார்கள். அது பிரச்னை அல்ல யார் அதிகம் இடம் பெறுகிறார்கள் என்று அதிலே குறுக்கிடத் தேவையில்லை. ஆனால், வேறு சில கல்லூரிகளிலே அதிக எண்ணிக்கையுள்ள நோயாளிகளைச் சந்திக்காத வகையிலே பள்ளிக்கூடத் தேர்வுபோல், வெறும் புத்தக அறிவை வைத்து தேர்வு எழுதுகிற காரணத்தால், அதில் தேர்ச்சி பெறுபவர்கள் சிறந்த டாக்டர்களாக இருக்க முடியவில்லை. பெரிய மருத்துவ மனைகளுக்கு அருகில் கல்லூரி வைக்கும் தனியார்கள், பெரிய மருத்துவ மனைகளுக்கான செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மாண்புமிகு அனந்தநாயகி அவர்கள்



மிகுந்த செல்வாக்கு பெற்றவர்கள். அவர்கள் எந்தப் பெரியவரிடமிருந்தாவது ரூபாய் 50 இலட்சம், ரூபாய் 70 இலட்சம் நன்கொடைப் பெற்றுத் தருவார்களானால்—யார் கிழவனாக இருக்கிறான். எப்பொழுது காலமாகப் போகிறான், வாரிசு இல்லாமல் இருக்கிறானா என்று பார்த்து, அவர் இறப்பதற்கு முன்னாலே அவருடைய சொத்தை இதற்குப் பெற்றுத் தருவார்களானால் — அந்தப் பெரியவருடைய பெயரை வைக்கக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம் . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் ஒரு எதிர்கட்சி எம். எல். ஏ., நான் போய்க் கேட்டால் யாரும் செய்யமாட்டார்கள். ஆளும் கட்சியிலே இருக்கிற அமைச்சர் சொன்னாலாவது வாரிசு இல்லாத சொத்துக்காரன் கேட்பான். எதிர்கட்சி எம். எல். ஏ. கேட்டு யார் செய்யப் போகிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாணவர்களிடத்திலே ரூபாய் 10,000, ரூபாய் 50,000 வாங்கலாம் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். மாணவர்களில் யார் ரூபாய் 10,000 ரூபாய் 50,000 தரக் கூடியவர்கள் என்று தெரிந்திருக்கும்போது, இப்படிப்பட்டவர்களைப் பார்த்து செய்ய சொல்லக் கூடாதா? அந்தக் கல்லூரிக்கு அவருடைய பெயரையே கூட வைக்கிறோம். ரூபாய் 1 கோடி இல்லாமல், ஒரு மருத்துவக் கல்லூரியை வைப்பது தவறான காரியம். ரூபாய் 2 கோடி, ரூபாய் 3 கோடி வைத்தால்தான் தரமாக இருக்கும். நமது பொது மருத்துவ மனை—மருத்துவக் கல்லூரி உட்பட, மொத்த மதிப்பீடு ரூபாய் 15 கோடி இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ரூபாய் 8 கோடி மதிப்பு பெறும். அவையெல்லாம் நீண்ட காலமாகச் சேர்க்கப்பட்ட செல்வம். செங்கற்பட்டிலே தொடங்கிய கல்லூரிக்குக் கட்டிடம் கட்டியது உட்பட அமைப்புகளுக்கு ரூபாய் $1\frac{1}{2}$ கோடி செலவாகியிருக்கிறது. இன்னும், நோயாளிகள் போதுமான அளவிலே இல்லை என்ற குறை இருக்கிறது. அங்கே கூடத் தொடங்கலாம். அதற்கு வேண்டிய அட்மாஸ்ஃபியர், ஃபெஸிலிட்டீஸ், கிளினிக்கல் மெட்டீரியல்ஸ், ஆகியவை கிடைக்கத்தக்க வகையில் ஏற்படுத்த வேண்டும். அறநிலையங்கள்தான் தொடங்க வேண்டுமென்ற அவசியமில்லை, தனியார்கள் கூடத் தொடங்கலாம். அப்படி வகாப் அவர்களுக்குத் தெரிந்தவர்கள் இருந்தால், முஸ்லீம் அறநிலையங்கள், யூனானி மருத்துவக் கல்லூரிகளைத் திறக்கலாம். இந்து அறநிலையத்தைச் சேர்ந்தவர்கள் நன்கொடைத் தரக்கூடியவர்கள் இருந்தால், சித்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்கலாம்.

[பிற்பகல் 1-30]

இன்னும் வேறு ஏதாவது நல்ல நன்கொடை தரக்கூடிய அறநிலையம் இருக்குமானால் ஹோமியோபதி கல்லூரிகூட தொடங்கலாம். இன்றையத் தினம் 1,015 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக, மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக 5, 6 ஆண்டுக்காலம் வரையிலும் 1964-ஆம் ஆண்டிலிருந்து 1,125 மாணவர்கள் சேர்க்கபபட்டார்கள். 1,125 மாணவர்கள் சேர்க்கப்பட்ட காலத்திலே தகுந்த பயிற்சி எல்லோருக்

கும் கிடைக்கவில்லை என்ற குறையை அவர்களே தெரிவித்தார்கள், பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது, வசதி குறைவாக இருக்கிறது என்ற கருத்தை அவர்களே தெரிவித்தார்கள்.

**Proportionate attentiop to wards each student** இல்லையென்றார்கள்.

**1,015** மாணவர்கள் பயிற்சி பெற்று வெற்றி பெற்று வருகிறார்கள். இந்த ஆண்டு வரையிலும் வேலைவேண்டுமென்று கேட்டு ஆயிரம் மாணவர்கள் பட்டதாரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஆண்டுக்கு **100** பேர்களுக்கு வேலை கொடுத்தோம், ஆனால் இப்போது ஆண்டுக்கு **250, 300** பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம். மேலும் மத்திய அரசுக்கு ஒரு திட்டத்தை அனுப்பினோம், ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் ஒரு டாக்டரை சேர்ப்பது என்று ஆரம்பித்தால் இன்னும் ஏறத்தாழ **375** பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கலாம். தமிழக அரசு தன்னுடைய சக்திக்கு ஏற்றவாறு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் எல்லா டாக்டர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்பது தவறான எண்ணம் ஆகும். டாக்டர்கள் என்பவர்கள் வாழ்க்கையிலே தங்களுடைய திறமையைப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கையிலேதான் படிக்க முன்வருகிறார்களே தவிர வேறல்ல, நாமும் முடிந்த அளவிற்கு வேலைவாய்ப்புக்களைக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு உதவி செய்கிற ஒரு தீர்மானமேயொழிய மத்திய அரசு இப்படித்தான் சட்டம் கொண்டுவர வேண்டும்மென்று வரையறை செய்கிற ஒரு தீர்மானமல்ல. **This is only a resolution to enable the Centre to sponsor certain Bill to regulate medical education in as many States as possible.** அவர்கள் சட்டம் கொண்டுவருகிறபோது இருக்கிற பிரச்சினைகளைத் தெளிவாக ஆராய்ந்து பார்த்து முறையான தீர்மானத்தை அல்லது சட்டத்தைக் கொண்டுவர உதவுகிற தீர்மானமாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிற முறையிலேதான் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கே நான் சொல்கிறேன் என்றால் ஏற்கெனவே ஏற்படுத்திவிட்ட தனியார் கல்லூரிகளை மூடவேண்டுமென்பதல்ல. மத்திய அரசின் பொறுப்பு மூலமாக நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற கல்வியின் தரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவோ மாணவர்கள் இடம் கேட்டு அலைகிறார்கள் என்று. ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குக் கூட அமைச்சர்களின் சிபாரிசுகளைக் கேட்டு அலைகிற காலம் இது. நாம் சிபாரிசு செய்தால்கூட **26** மாணவர்கள் சேர்க்கப்பட்டாகிவிட்டது; **30** மாணவர்கள் சேர்க்கப்பட்டாகிவிட்டது என்று சொல்வார்களானால் வேறு பள்ளிகளுக்கு அவர்களை அனுப்புகிறோம். திருமண காரியங்களைத் தவிர வேறு எல்லாக் காரியங்களுக்கும் சிபாரிசு தேவைப்படுகிற கால கட்டத்திலே நாம் இருக்கிறோம். மருத்துவக் கல்லூரிகளிலே சிபாரிசுகள் இருப்பது குற்றமாகாது தவறான முறைகளிலே



இடம் வாங்கிக் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லாமல் செய்வதற்கு மாணவர்கள் பெற்றிருக்கின்ற எண்கள் அடிப்படையில் இண்டர்வியூலே நினைத்த அளவிற்கு எண்களைக் கொடுக்காமல் அதையெல்லாம் இப்போது ரெகுலேட் செய்திருக்கிறோம். அதன் மூலமாக ஓரளவிற்கு நாம் நியாயம் வழங்கிவருகிறோம்.

**Capitation fees** வைத்து வெளிநாட்டிலிருந்து வருகிற மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது என்பது பரிசீலிக்கப்படவேண்டும். மொத்த எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதை மாற்றுக் கட்சியினர் மனமார ஏற்றுக் கொள்ளவில்லையென்பதால் அப்படியே விட்டுவைத்து விட்டோம். ஆகவே, மலேஷியாவிலிருந்து **5** மாணவர்கள் இடம் பெறுகிறார்கள் என்றால் **20** பேர்களாக அதிகமாக்க வேண்டுமென்றால் அதன் மூலமாக நமக்கு இடம் குறையும். வெளிநாடுகளிலிருந்து மாணவர்கள் வருகின்ற போது அவர்களிடம் நாம் பணம் வாங்குவது தவறல்ல, **50** ஆயிரம் **1** இலட்சம் என்று பெற்றுக் கொண்டு சேர்க்கலாம், அங்கேயும் **10** ஆயிரம் ரூபாய் என்று சொன்னால் அதற்கு பத்துப் பேர்கள் வந்துவிடுவார்கள், போட்டி வந்துவிடும். ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு கல்லூரிச் செல்வு என்ற வகையிலே **65** ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறோம். இன்னும் கிளினிக்கல் எக்ஸ்பீரியன்ஸ் செய்து தருகிற செலவு எல்லாம் சேர்த்தால் ஒரு மாணவனுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகும். ஒரு லட்சம் ரூபாய் செலவழித்து வெளிநாட்டிலிருந்து வருகிற மாணவனைப் படிக்க வைத்து அனுப்புவதை விட நம்முடைய கிராமத்திலே இருக்கிற மாணவனைப் படிக்க வைத்து அனுப்புவதே நியாயமாகும்.

வெளிநாட்டு மாணவர்களைப் படிக்க வைப்பது என்பது சட்டப் பிரச்னை, அவர்கள் அதை ஆலோசிக்கலாம். மத்திய அரசு தாங்கள் மேற்கொள்கிற முறையை ஒழுங்குபடுத்தக்கூடிய வகையிலும் அவர்கள் ஒழுங்குபடுத்த முடியாத நிலையிலிருந்து அவர்கள் மீள்கிற வகையில் அவர்களுக்கு கை கொடுக்கிற வகையிலும் இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றுகிறோம். மத்திய அரசு சட்டம் நிறைவேற்றினால் அதை இந்திரா காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் நிறைவேற்றவில்லையென்றால் அப்போது வேண்டுமானால் நாம் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கு சிபாரிசு செய்து அவர்கள் மூலமாக அவர்களும் ஏற்றுக் கொள்ளச் செய்வோம். நன்மை செய்யாவிட்டால் கூட தீமை செய்யாமலாவது இருப்போம் என்ற முறையிலே இருக்கலாம்.

ஏனென்றால் இன்றைக்கு பல பேர்கள் அரசியலில் சேருவது நல்லது செய்வதற்காக இல்லாவிட்டாலும் மற்றவற்றைச் செய்யலாம் என்றுதான் அரசியலில் இடம் பிடித்திருக்கலாம்.

மாநில சுயாட்சி கேட்கிற நீங்கள் இந்த அதிகாரத்தை ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார்கள். நாம் என்றைக்குமே ஆட்சிக்கு வரமாட்டோம், மாநில சுயாட்சி வந்து நானா வாழப்போகிறேன், வேறு

[திரு. க. அன்பழகன்] [1974 ஆகஸ்டு 19

யாரோ தான் அமைச்சராகப் போகிறார்கள், காங்கிரஸ் (ஓ) ஆகத்தான் இருக்கும் என்று நினைத்து அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கலாம். நாங்கள் மாநில சுயாட்சி கேட்பது கடைசி வரையிலும் கேட்போம். அதோடு மத்திய அரசோடு ஒத்துழைப்போம் என்ற மனப்பான்மையோடு தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே இதை நிறைவேற்றிக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>MR. DEPUTY SPEAKER</u> : I shall now put the Government amendment to the vote of the House—

The word 'allopathic' shall be inserted before the words "medical colleges" wherever they occur in the Resolution"

The amendment was put and carried.

MR. DEPUTY SPEAKER : I shall now put the Government Resolution, as amended, to the vote of the House—

The question is—

"தனியார் நிறுவனங்களினால் நிறுவப்படும் தரங்குறைந்த அலோபதிக் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் இடம் பெறுவதற்குரிய தகுதி, அவர்கள் பெற்றிருக்கும் கல்வி திறமையாக இல்லாமல், முன் கூட்டிக் கட்டும் கல்விக் கட்டணங்களாகவும், தலைவீத நன்கொடைகளாகவும், பெருந் தொகைகளைக் கட்டுவதற்குள்ள திறமையைப் பொறுத்ததாக இருப்பதால், அத்தகைய கல்லூரிகள் நிறுவப்படுவதைத் தடை செய்ய நாடெங்கிலும் ஒரு சீரான சட்டம் இருக்க வேண்டுமென்றும், தற்போதுள்ள தனியார் அலோபதிக் மருத்துவக் கல்லூரிகளை, இயலக்கூடிய விரும்பக்கூடிய முறையில் முறைப் படுத்துவதற்கான அவசியம் உள்ளது என்று இப்பேரவை கருதுவதாலும், பட்டப் படிப்பு மருத்துவக் கல்விக்கான அலோபதிக் மருத்துவக் கல்லூரிகள் மீது அத்தகைய தடை விதித்தல் தொடர்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 249, "50-ம் பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறன்றி, மற்றபடி மாநிலங்களுக்கான சட்டங்களியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் எதும் இல்லையாதலாலும்,

மேற்சொன்னவை நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் முறைப்படுத்தப்பட வேண்டுவது விரும்பத்தக்கது என இப்பேரவைக்குத் தோன்றுவதாலும்,

தனியார் அலோபதிக் மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்படுவது குறித்துத் தடை விதிப்பதும், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள அத்தகைய கல்லூரிகளையும், அதனோடு தொடர்புள்ள, அதற்குத் துணையான இடைநிகழ்வான பொருள்களையும், நாடாளுமன்றச் சட்டத்தால் தமிழ் நாட்டில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ம் பிரிவைச் சேர்ந்த (i)-வது பகுதியை யொட்டி தீர்மானிக்கிறது."

**The Government Resolution, as amended, was put and carried.**



1974 ஆகஸ்டு 19]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவுடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் **1-37** மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## <u>(5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.</u>

### *A. Statutory Rules and Orders.*

@89. Notification issued with G.O. Ms. No. 644, Rural Development and Local Administration dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Kovilpatti Local Planning area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

90. Notification issued with G.O. Ms. No. 641, Rural Development and Local Administration, dated the 16th March 1974, in regard to declaration of the areas forming the Villupuram Local Planning area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act,* 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972.]

91. Notification issued with G.O. Ms. No. 1286, Rural Development and Local Administration, dated the 20th May 1974, in regard to extension of the period within which the Special Officer shall cause arrangements for elections to be conducted for a further period of 6 months from the 1st June 1974. [*Laid on the table of the House under section* 348 (d) *of the Madras City Municipal Corporation Act,* 1919 (*Tamil Nadu Act IV of* 1919.]

### *B. Reports, Notifications and Other Papers.*

**@44. Notification issued with G. O. Ms. No. 1616, Revenue, dated the 10th April 1974, in regard to Amendment to the Revenue Department Notification II-2 No. 276 of 1974, dated the 9th January 1974 published at page 26 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette, dated the 9th January 1974.**

@45. Notification issued with G.O. Ms. No. 1528, Revenue, dated the 4th April 1974, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the gift deed to be executed by the Trustees of the "Willington" in favour of the Tamil Nadu Educational Trust, Madras.

46. Errata issued with Memo. No. 9085/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th March 1974, in regard to Notification No. II (2)/RUL/100 (*h*)/74, published at pages 11 to 14 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 4th January 1974.

47. Errata issued with Memo. No. 12289/ME/74-1, Rural Development and Local Administration, dated 1st March 1974, in regard to Notification No. II (2)/RUL/100 (*o*)/74, published at pages 29 to 32 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 4th January 1974.

48. Errata issued with Memo. No. 32643/ME/74-1, Rural Development and Local Administration, dated the 18th April 1974, in regard to Notification No. II (2)/RUL/787 (*y*)/74, published at pages 25 to 30 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 9th February 1974.

49. Errata issued with Memorandum No. 29731/ME/74-1, Rural Development and Local Administration, dated the 7th March 1974, in regard to Notification No. II (2)/RUL/877/(*ag*)/74, pullished at pages 40 to 44 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 9th February, 1974.

%50. Annexure to the Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A. Bill No. 38 of 1974).

%51. Annexure to the Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 (L.A. Bill No. 39 of 1974).

@52. Booklet, about the work done by Food Cell (C.I.D.).

---

* Laid on the table of the House on 17th August 1974.
@ Despatched to Members on 16th August 1974.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### செவ்வாய்க்கிழமை, 1974 ஆகஸ்ட் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 172 முதல் 175 வரை பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

*Television set for Madras General Hospital.*

*176 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether a closed Circuit Television set has been installed in the Government General Hospital; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

**திரு. என். கே. பழனிசாமி:** நமது நாட்டில் மருத்துவ முறை அதிகமான முன்னேற்றம் அடைந்திருக்கும்போது, இம்மாதிரி டெலிவிஷன் செட் வைப்பதன் காரணமாக டாக்டர் ஆபரேஷன் போன்றவைகளைச் செய்வதை மக்கள் பார்ப்பதற்கும் வசதியாக இருக்குமாதலால், டெலிவிஷன் செட் அமைக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

[1974 ஆகஸ்ட் 20

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த முறையில் சர்க்யூட் டெலிவிஷன் ஏற்படுத்த வேண்டும் என்று அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, 1972 பிப்ரவரியில் இதைப்பற்றி ஆராயும்படியாகக் கேட்டுக்கொண்டது. அதற்குப் பிறகு அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது. டைரக்டர் ஆப் மெடிகல் சர்விஸஸ்; ப்ரின்சிபால், மெட்ராஸ் மெடிகல் காலேஜ்; ப்ரின்சிபால், டெக்னிகல் டீசர்ஸ் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட், அடையார்; அஸிஸ்டென்ட் டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் (செயலாளர்) ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு குழு ஏற்படுத்தப்பட்டது. சர்க்யூட் டெலிவிஷன் ஏற்படுத்துவதற்குத் தகுந்த முறையில் அமைப்புகளைச் செய்ய எந்த எந்தவிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் அதிலே எந்தக் கருவி நீண்ட காலத்திற்குப் பயன்படும் என்பதையும் அந்தக் குழு ஆராய்ந்து பார்த்துச் சொல்லி, அதற்குப்பின்னர் வாங்க வேண்டும். வாங்கியதற்குப் பின்னர், அது பயன்படுவதில் குறை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சில முன்னெச்சரிக்கையான நடவடிக்கையாக ஆராய்ந்துபார்த்துச் செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் இன்னும் ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்து அதை வாங்குகிற ஏற்பாட்டைச் செய்யவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இதற்காக எவ்வளவு செலவாகும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சரியான விலை விவரம் இப்பொழுது இல்லை. இரண்டாண்டுகளுக்கு முன்னால் இரண்டு இலட்ச ரூபாய் அளவில் அதை ஏற்பாடு செய்யலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்பொழுதுள்ள மார்க்கெட் நிலவரம் தெரியாது.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் 1972-ம் ஆண்டில் குழு அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏறத்தாழ இப்பொழுது இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள் அவர்கள் அறிக்கை கொடுக்கவேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முயற்சிக்கப்படும். காலம் வரையறுத்துச் சொல்ல இயலாது.



1974 ஆகஸ்ட் 20]

திருவொற்றியூருக்கு மருத்துவ மனை

*177 வினா—திரு. மா. வே. நாராயணசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் அரசு மருத்துவமனை ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

*Mental treatment wings in Hospitals*

*178 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is a proposal under the consideration of the Government to open a separate wing for mental treatment in all the District Headquarters Hospitals in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது கீழ்ப்பாக்கத்திலிருக்கக்கூடிய ஆஸ்பத்திரியில் அதிக நெருக்கடியாக இருக்கிறது. மன நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒன்றிரண்டு மாவட்டங்களிலாவது இவற்றைத் திறக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வியினுடைய கருத்தைக் கருதி, 'இல்லை' என்று பதில் அளிக்கப்பட்டது. 'செபரேட் விங்' என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. 'செபரேட் விங்' ஏற்படுத்துவதாக இல்லையென்றாலும், ஒவ்வொரு இடத்திலும்

அதற்காக ஒரு சைகியாட்ரிக் க்ளினிக் (மருத்துவ சிகிச்சைப்
பிரிவு) ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்
பட்டிருக்கிறது. 'விங்' என்றால், படுக்கைகள் அமைப்பு இருக்க
வேண்டும். சைகியாட்ரிக் க்ளினிக் ஏற்படுத்துவது என்ற அடிப்
படையில், மருத்துவக் கல்வி மருத்துவ மனைகளில் இந்த க்ளினிக்
பெரும்பாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, செங்கற்பட்டு
ஒன்றைத் தவிர. கடலூர், திருச்சி ஆகிய இடங்களில் ஏற்படுத்து
வதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.
திண்டுக்கல், நாகைப்பட்டினம் ஆகிய இடங்களில் இப்பொழுது
ஏற்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.
தொடர்ந்து ஆண்டுக்கு ஒன்றிரண்டு இடங்களில் இதற்காக
டி. பி. எம். தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு, இத்தகைய
க்ளினிக் ஏற்படுத்தும் முயற்சி இருந்து வருகிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** இன்றைய சமுதாயத்தில்
மக்கள் பல்வேறு பிரச்னைகளைச் சிந்திக்கவேண்டிய நிலையில்
இருக்கிறார்கள். ஆனால், மன நோயினால் பாதிக்கப்பட்டிருக்கி
றார்களா இல்லையா என்று தெரிந்து கொள்ளாமல் மற்ற சிகிச்சை
என்னதான் அளித்தாலும், உடல் நிலையில் தேர்ச்சி ஏற்படுவ
தில்லை. நிச்சயமாக இந்த மன நோய் சிகிச்சைப் பிரிவினை ஒவ்
வொரு மருத்துவ மனையிலும் ஏற்படுத்தினால் நிச்சயமாக நல்ல
பலன் கிடைக்கும். மற்ற துறைகளில் ஏற்படும் செலவு கூட
நிச்சயமாக மிச்சப்படக்கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.
ஒவ்வொரு மாவட்ட மருத்துவ மனையிலும் இப்பொழுது கன்ஸல்
டேஷன் மட்டும் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் ஏதோ
ஒரு பத்து பேருக்குக்கூட சிகிச்சை அளிக்க முடியாது. ஆகவே,
'விங்' ஏற்படுத்தி, ஒரு சில படுக்கைகளை, குறைந்தது ஐந்து
படுக்கைகளாவது அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மன
நோய் மருத்துவத்திலேகூட, அவர்களுக்கு சில மருந்துகளை
வழங்கி, அவரவர்களுடைய இல்லங்களிலேயே இருந்து—அவர்கள்
இருக்கிற சூழ்நிலையிலேயே இருந்து சிகிச்சை பெறுவதுதான்
அதிகப் பயனுள்ளது என்ற கருத்தும் நிலவுகிறது. மருத்துவ
மனைகளில் தங்கி சிகிச்சை பெறுவதென்றால், மற்றவர்கள்
தங்களை மன நோயாளிகள் என்று கருதிவிடுவார்களோ என்று
சைகலாஜிகல் ரிஃப்ளெக்ஷன் ஏற்பட்டுவிடுகிறது. அதனால், மன



நோயாளிகள் தங்களுக்கு ஏதோ மன நோய் இருக்கிறதோ என்ற
சந்தேகம் ஏற்பட்டு, சிலருக்கு அதனால் பாதகமும் ஏற்படுகிறது.
ஆனால், குறிப்பாக இப்பொழுது தொடக்க நிலையில் ஒவ்வொரு
மாவட்ட மருத்துவமனையிலும் இந்த க்ளினிக் ஏற்படுத்தப்
படுகிறது. டி.பி.எம். படித்தவர்கள் ஆண்டுக்கு இரண்டு மூன்று
பேர் கிடைக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்தி, எதிர்
காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வளர்ச்சியினை
வசதிக்கேற்ப ஏற்படுத்தலாம்.

**திரு. கே. என். குமாரசாமி:** மன நோயினைத் தீர்ப்பதில்
சித்த வைத்திய முறையும், ஆயுர்வேத முறையும் நல்ல பலனை
அளிப்பதாகச் சொல்கிறார்கள். அத்தகைய ஒரு பிரிவை தலைமை
மருத்துவமனைகளில் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அதைப்
பற்றி விரிவான பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு எனக்கு இல்லை.
மன நோய், சித்த மருத்துவ முறையின் மூலமும் தெளிகிறது.
ஆயுர்வேத மருத்துவ முறையிலும் கூட தெளிகிறது. சூழ்நிலையைப்
பொறுத்து, எண்ண ஓட்டத்தைப் பொறுத்து, அவர்களுக்கு
ஏற்படுகிற மன ஆறுதலைப் பொறுத்து தெளிகிற நிலையும் இருக்
கிறது. மன நோய் என்பது, உடலோடு கலப்பு இல்லாத ஒரு
நோய் என்று சொல்கிற நிலையும் இல்லை. உடல்நிலையைப் பக்குவப்
படுத்தும் மருந்துகளைக் கொடுப்பதாலும் மன நோய் தெளிவு
அடைகிறது. ஆகவே, இந்த நோய் ஏற்பட்டவர்களுக்கு பல்
வேறு நிலைகளில், வெவ்வேறுவிதமான சிகிச்சைகளுக்கு வாய்ப்பு
இருக்கிறது. அவர்களுக்கு ஏற்ற முறைகளைப் பின்பற்றுவது
நல்லது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** ஒரு குடும்பத்தில்
யாருக்காவது மன நோய் ஏற்பட்டால், அந்தக் குடும்பத்தி
லுள்ளவர்கள் எல்லோருக்குமே மன நிம்மதி இல்லாமல்
போய்விடுகிறது. வேலையில் மனம் சரியாகச் செல்லாமல் போய்
விடுகிறது. ஆகவே, மனநோய் உள்ள குழந்தைகளினுடைய
பெற்றோர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாக இருந்தால்,
அவர்களை மன நோய் மருத்துவ வசதியுள்ள ஊருக்கு மாற்றி
போஸ்டிங் கொடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தனிப்பட்டவர்களுடைய விண்ணப்பத்தைப் பொறுத்து அந்தந்த துறை பரிசீலிக்க வேண்டும், எந்த இடத்திலே பணியாற்றச் செய்வது என்று. மனநோய் மருத்துவமனையில் பணியாற்றுகின்ற டாக்டர் வீட்டிலே உள்ள ஒரு குழந்தைக்குக்கூட மனநோய் ஏற்படக்கூடும். மனநோய் ஏற்படுவதற்கும் வேலை பார்க்கும் இடத்திற்கும் தொடர்புபடுத்தக்கூடாது. சிலயிடங்களில் வாய்ப்பிருந்தால் அந்த வசதியை வழங்கலாம்.

### திருப்பத்தூரில் வடிகால் அமைப்புத் திட்டம்.

*179 வினா—**திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு, திருப்பத்தூர் நகரத்தில் வடிகால் அமைப்புத் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) தற்சமயம் வடிகால் திட்டத்திற்கான ஆய்வு எதுவும் இல்லை.

**திரு. ஜி. ராமசாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தற்பொழுது இல்லை என்று கூறினார்கள். அடுத்த ஆண்டிலாவது மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து வடிகால் அமைப்புத் திட்டம் ஒன்று வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வரவில்லை என்ற கருத்துதான் பதிலில் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட வேண்டுகோள் வந்தால் அந்த வடிகால் அமைப்புத் திட்டத்தைப்பற்றி ஆய்வு நடத்த அவர்கள் தொகையைக் கொடுக்கும்பொழுது அதை ஆய்வு செய்ய மேற்கொள்வார்கள்.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, நகர்ப்புறங்களில் வடிகால் திட்டத்தை அமல்படுத்தாத காரணத்தினால் தொற்று நோய்கள் பரவுவது அதிகமாக இருக்கிறது. ஆகவே, எல்லா நகரங்களிலும் குறிப்பிட்ட காலத்திற்குள் வடிகால் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று அரசு வலியுறுத்த முற்படுமா?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, திட்டங்களுக்கே இப்பொழுது பொருளுக்கு என்ன வழி என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. திட்டத்தை மறுபடியும் மாற்றியமைப்பது பற்றியே அங்கே பெரிய பிரச்னையாக இருக்கிறது; குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை தந்து இரண்டாவது பிரச்னையாக வடிகால் திட்டங்களை எடுக்க வேண்டுமென்ற கருத்து நிலவுகிறது. குடிநீர்த் திட்டங்களுக்கு பல கோடிக்கணக்கில் நிதி வசதிகள் தேவைப்படுகிறது. ஆகவே, இவைகளில் எந்தெந்த இடத்தில் மிகவும் அவசியமாக இருக்கிறதோ அதையொட்டி முன்னுரிமை தந்து இந்த வடிகால் திட்டங்களைப் பரிசீலிக்க வேண்டும்.

### கன்னிமாரா நூல் நிலையம்.

*172 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னிமாரா நூல் நிலையத்தில் இடப்பற்றாக்குறையைப் போக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 12.7 இலட்ச ரூபாய் செலவில் கன்னிமாரா நூலகத்தின் இணைப்பாகக் கட்டிடம் ஒன்று கட்ட அனுமதி அளிக்கப்பட்டது. கன்னிமாரா நூலகத்திற்குத் தேவையான மரச் சாமான்கள், புத்தக அடுக்கம் முதலியனவற்றிற்காக ரூ. 2.5 லட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் அண்மையில் கட்டிமுடிக்கப்பட்டு சில பிரிவுகள் செயல்படத் துவங்கியுள்ளன.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்று இருக்கும் பொது நூலகங்களுக்கு தமிழகத்தில் இட நெருக்கடியாக இருக்கிறது. அந்தப் பொது நூலகங்களுக்கு ஐந்து அல்லது பத்தாண்டுகளுக்குள்ளாக சொந்தமாக கட்டிடம் கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாவட்டங்களில் உள்ள கிளை நூலகங்களுக்கு கட்டிடம் கட்டும் பொறுப்பை மாவட்ட நூலக ஆணைக்குழு மேற்கொண்டிருக்கிறது. அதற்கான திட்டங்களை அவர்கள் ஆங்காங்கே செய்து

வருகிறார்கள். பலயிடங்களில் பொதுமக்கள் நன்கொடையாகத் தரும் கட்டிடங்களில் பொது நூலகங்களை அமைக்கும் ஏற்பாடு களும் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்தின் தேவை யையும் கணக்கிட்டு எந்த அளவிற்கு நிறைவேற்ற வேண்டு மென்பதைப்பற்றி நாம் ஆராய்ந்தான் வேண்டும்.

*Libraries getting grants.*

*173 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of Libraries in the State as on this date which receive grant from State funds ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

| | |
|---|---|
| நூலக ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் கிளை நூலகங்களின் எண்ணிக்கை | 1,452 |
| உதவி பெறும் நூலகங்கள் | 143 |
| நூலகங்களின் எண்ணிக்கை. | 1,595 |

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இவைகளுக்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது? இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தில் ஒன்றிரண்டு பேப்பர்களைத் தவிர புதிய புத்தகங்களை வாங்குவதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே, புதிய புத்தகங்களை வாங்குவதற்கான மானியத்தை அதிகப்படுத்து வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவற்றிற்கு வழங்கப்படும் மொத்தத் தொகைபற்றிய தகவல் இல்லை. ஆனால் அரசாங்கம் ஏற்கனவே ஓரளவிற்கு, செஸ் வரி எவ்வளவு வசூலிக்கிறார்களோ அதற்கு ஈடான தொகையை நாம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அளித்துவருகிறோம். ஏற்கனவே 3 காசு வசூலித்தபொழுது நாமும் 3 காசு கொடுத்து மொத்தம்



6 காசு என்ற அளவில் நிதியை அவர்களுக்குக் கொடுக்கும் சூழ்நிலை இருந்தது. பிறகு 3 காசு என்பது 5 காசாக செஸ் வரி உயர்ந்த பொழுது அதற்கு ஈடாக அரசாங்கமும் 5 காசு தருவதன் மூலம் ஓரளவு கூடுதலாகி இருக்கிறது. இந்த ஆண்டு 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நூல்கள் வாங்கும் அளவிலும், மேலும் என்ன முயற்சிகளை எடுக்கலாம் என்பதற்கான வழிவகை களையும் நூலக பொதுத் துறை மேற்கொண்டு இருக்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த நூலகங்களிலே போடப்படும் பத்திரிகைகளில் சில பத்திரிகைகள் நிறுத்தப்படு கின்றன அல்லது குறைந்துகொண்டு வருகின்றன. ஆகவே, பழையபடியே பத்திரிகைகளைப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா? இல்லையென்றால் நூலகங்களின் பலனே இல்லாமல் போகிறது. எனவே பத்திரிகைகளை திரும்பவும் 'ரெஸ்டோர்' செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பத்திரிகையின் விலையும் மிகவும் அதிகமாகியிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கும் பணமும் குறைந்த அளவில் தான் இருக்கிறது. ஆகவே, பத்திரிகைகளை ஒரேயடியாகக் குறைக்க வேண்டாமென்றும், ஆனால் எல்லாப் பத்திரிகைகளையும் வரவழைக்க இயலாத நிலையில் இருக்கும்பொழுது எந்தெந்தப் பத்திரிகைகளை வரவழைப்பது என்பதை அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் முடிவு செய்கின்றன. ஆகவே, பலயிடங்களில் ஓரளவிற்கு நிதிப்பற்றாக் குறை இருப்பதால், மக்களுக்குப் பயன்படும் அளவில் அன்றாட நாளிதழ்களில் மிக முக்கியமானவற்றையும், வார இதழ்கள், கிழமை இதழ்களில் மிகவும் முக்கியமானவற்றையும் வரவழைப் பதற்கான திட்டத்தை வகுக்கும்படியாக பொது நூலக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இம்மாதிரி நூலகங் களுக்கு மத்திய அரசு ஏதேனும் மானியம் வழங்குகிறதா? இல்லையென்றால் அந்த வகையில் மானியம் பெறுவதற்கு அரசு ஏதாவது செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மத்திய அரசிடமிருந்து மானியம் எதுவும் வரவில்லை.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே, மாவட்ட நூலகங்களுக்கு போதுமான நிதியில்லாத காரணத்தினால், முகவை போன்ற மாவட்டங்களில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அவ்வப்பொழுது வெளியாகும் புத்தகங்கள், பத்திரிகைகள் போன்றவைகளை வாங்க முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு செல்வரியும் போதுமான அளவில் இல்லை. எனவே தமிழக அரசே அதிக நிதியை ஒதுக்கீடு செய்து எல்லா மாவட்ட நூலகங்களுக்கும் தேவையான பத்திரிகைகள், புத்தகங்கள் போன்றவைகளை வாங்குவதற்கு நிதி வசதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நூலகங்களைச் சீர்படுத்தவும், செம்மைப்படுத்தவும் வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு குழு டாக்டர் வி. என். சுப்பராயன் தலைமையில் ஏழெட்டு திங்கள்களுக்கு முன்னால் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவினர் பலயிடங்களுக்கும் சென்று ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். நூலகங்களை எந்தெந்த வகைகளில் சீர்படுத்தலாம் என்பதுபற்றி மட்டுமல்லாமல், நிதி வசதியைப் பெருக்கவும் அதனைக் கண்காணிக்கவும், அதனைச் சிறப்பாக நடத்தவும் என்னென்ன வழிமுறைகளைக் கையாளலாம் என்பதற்கான அறிக்கை அந்தக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு அதை ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை எடுப்பதால் இந்த நிலைமைகள் சீர்படுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, மாவட்டங்களில் புதிதாகத் துவக்கப்படும் நூலகங்களைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு 3, 4 நூலகங்களை புதிதாகத் துவக்குகிறார்கள். அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே அந்தந்த மாவட்ட நூலக ஆணைக்குழுவில் இருப்பவர்கள் நிதி வசதியைப் பொறுத்து புதிய நூலகங்களைத் துவக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள். அந்த நிதி வசதியை எப்படிப் பெருக்கலாம் என்பதை அரசு ஆராய்ந்து வருகிறது.





**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, மத்திய நூலகக் குழுவிலோ அல்லது மற்ற நூலகக் குழுக்களிலோ படித்தவர்களைப் போட்டால் அவர்கள் நூலகங்களைச் சீர்திருத்தம் செய்யவும், எத்தகைய புத்தகங்களை வாங்கலாம் என்று முடிவெடுப்பதற்கும் வசதியாக இருக்கும். ஆனால் இதுவரையில் படிக்காதவர்களையே வேண்டுமென்று இந்த நூலகக் குழுத் தலைவர்களாகப் போட்டிருக்கிறார்கள். இதனுடைய உட்கருத்து என்ன? இப்படிச் செய்தால் நூலகங்கள் எப்படி முன்னுக்கு வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதுவரையில் படிக்காதவர்களையே போட்டு இருக்கிறார்கள் என்ற பொதுவான குற்றச்சாட்டை கூறுவது தவறு. படித்தவர்கள், படிக்காதவர்கள் என்றால் படிப்புக்கு என்ன எல்லையை வகுப்பது என்பது கடினமான ஒன்று. ஆகவே, இதில் படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று இல்லாமல் நூலகங்களை வளர்ப்பதிலே யார் யாருக்கு அக்கறை இருக்கிறதோ, யாருக்கு தங்களுடைய அதிக நேரத்தைச் செலவழிக்க முடியுமோ, இதில் யாருக்கு ஆர்வமும் அக்கறையும் இருக்கிறதோ அவர்களைப் போடுவதால் நூலக இயக்கங்கள் வளர்கின்றன. பல்வேறு இடங்களில் பட்டதாரிகளும் இருக்கிறார்கள், பத்தாவதுவரை படித்தவர்களும் இருக்கிறார்கள், அதற்குக் குறைந்து படித்தவர்களும் இருக்கிறார்கள். மிக முக்கியமாகக் கவனம் செலுத்தப்படுவது அவர்கள் ஆர்வமுடையவர்களாகவும், அக்கறை உடையவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதில்தான்.

### தட்டெழுத்து, சுருக்கெழுத்து தேர்வுகள்.

*174 வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு முதல் இன்றைய நாள் வரை தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்ட தட்டெழுத்து, சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளில் கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

(இ) அவர்களில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை பாடவாரியாக எவ்வளவு?

(உ) தேர்ச்சி பெறுபவர்களின் சதவிகிதத்தில் கூடுதல் அல்லது குறைவு ஏற்பட்டுள்ளதா?

(எ) தேர்ச்சியில் குறைவு ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் யாவை?

(ஐ) அதன் மேல் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) முதல் (உ) வரை: விபரம் அடங்கிய அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(எ) தேர்ச்சிபெற்ற மாணவர்களின் விழுக்காடு முன்னால் நடந்த தேர்வினை ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது. ஆனால் தேர்வில் மாணவர்களுடைய செயல்திறன் பாராட்டத்தக்க வகையில் இல்லை.

(ஐ) மாணவர்களின் தேர்ச்சி விழுக்காட்டினை அதிகரிக்க கீழ்க்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:—

(1) முழுத் தகுதியுடைய ஆசிரியர்களையும் இப்பயிற்சிக்குத் தேவையான வசதிகளையும் கொண்ட வணிகப் பள்ளிகளுக்கே ஆண்டு அனுமதி வழங்குதல்.

(2) தட்டச்சுப் பாடங்களுக்கு மாதிரி பயிற்று முறைகளும், பிரிவு வரைப்படங்களும் தயாரிக்கப்பட்டு, அரசினரால் ஏற்கப்பட்ட பயிலகங்களுக்கு அனுப்புதல்.

(3) இப்பாடங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருக்கும்பொருட்டு பாடங்களை திட்டமிட்டு நடாத்தும் குறிப்புகளும் பயிலகங்களுக்கு அனுப்புதல்.

---

@ 248–251-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





*175 வினா—திரு. நா. வீராசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சுருக்கெழுத்து மற்றும் வணிகவியல் தேர்வுகளின் முடிவுகள் உரிய நேரத்தில் வெளியிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வணிகவியல் தேர்வு முடிவுகள் தற்போது 2 திங்கள் 20 நாட்களுக்குள் வெளியிடப்படுகின்றன. இக்குறைந்த அவகாசத்தில் தேர்வு முடிவுகள் வெளியிட ஏறக்குறைய 2 லட்சம் விடைத்தாள்களை திருத்த அதிக மாணவர்களை நியமித்தும், அவர்களுக்கு அதிகமான ஊதியங்கள் நிர்ணயித்தும், மதிப்பெண்களை பட்டியல்படுத்தி தேர்வுகளை முடிவு செய்ய அதிக மாணவர்களை நியமித்தும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. இதற்கும் குறைந்த அவகாசத்தில் தேர்வு முடிவுகள் வெளியிட நடைமுறையில் இயலாது.

**திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் நவம்பர் 1971-ல் தட்டெழுத்து ஆங்கில கீழ்நிலையில் தேர்ச்சி 64 சதவிகிதம் என்று இருந்தது மே 1974 தேர்வில் 40.4 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. அதே போல் ஆங்கிலச் சுருக்கெழுத்து, கீழ்நிலை, நவம்பர் 1971-ல் 22 சதவிகிதமாக இருந்தது மே 1972 தேர்வில் 13.1 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. ஆங்கிலச் சுருக்கெழுத்து மேல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் 5.2 சதவிகிதம் என்ற அளவுக்குத் தான் இருக்கிறது. இப்படி திடீரென்று ஆறு மாத காலத்தில் இந்த விழுக்காடுகள் குறைய அடிப்படைக் காரணம் என்ன? இப்போது புதிய முறைகளைப் பின்பற்றுவதால் இப்படி விழுக்காடு குறைந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாணவர்களுடைய தரக்குறைவுதான் காரணமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைச் சீர்படுத்த வேறு என்ன முறைகளைக் கையாளலாம் என்பதற்கு மூன்று வழிமுறைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஏற்கனவே சொன்னபடி தகுதியுடைய ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கின்ற வணிகப் பள்ளிகளுக்கே

[1974 ஆகஸ்ட் 20

அனுமதி வழங்குதல் போன்ற ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் இத்தகைய குறைபாடுகளைப் போக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** இப்படித் திடீரென்று தேர்ச்சிபெறுபவர்களுடைய விழுக்காடு குறையக் காரணம்—இதற்கு முன்னால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் கூடங்கள் மூலந்தான் மாணவர்களை அனுப்ப வேண்டுமென்ற விதிமுறை இருந்தது. இப்போது அவ்வாறு பயிற்சிக் கூடங்களில் சேர்ந்து பயிற்சி பெறாமலே இத் தேர்வுகளை எழுதலாம் என்ற முறையைக்கொண்டு வந்த காரணத்தால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் நேரடியாகத் தேர்வுக்குப் போகிறார்கள். அதன் காரணமாகத்தான் விழுக்காடு குறைந்திருக்கிறது. ஆகவே, அதைத் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி அனுபவம் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை தெரிவிப்பார்களானால் அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவது எப்படி என்று அரசு ஆராயலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இப்போது டைப்ரைட்டிங் ஷார்ட்ஹாண்ட் போன்ற கமர்ஷியல் சப்ஜெக்ட்ஸ் படித்தவர்களுக்குத்தான் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. ஆகவே, மாணவர்கள் இந்தப் பாடங்களைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளுக்கு நாள் இந்தத் தேர்வில் வெற்றி பெறுகிற மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கல்வியைப் பயிற்றுவிக்கக்கூடிய நிறுவனங்கள் செம்மையாகச் செயல்படவில்லை என்பது இதிலிருந்து விளங்குகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் சீர்படுத்த இந்தத் துறையில் அதிக அனுபவம் வாய்ந்த நண்பர் வீராசாமி அவர்களைத் தலைவராகப் போட்டு ஒரு அட்வைசரி போர்டு அமைத்து தேவையான ஆலோசனைகளை அரசு பெற்றுக்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வணிக இயல் பள்ளிகளில் பயிற்சி பெற்று தேர்வு எழுதுகிறவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுதுகிறார்கள்; ஒரு தகுதியை நிர்ணயித்து அவர்கள் எல்லாம் நேரடியாகவே தேர்வு எழுதலாம் என்று



1974 ஆகஸ்ட் 20]

செய்ததன் காரணமாகத்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு திரு. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுதான் உண்மை. அதைத்தான் அவர்கள் தெரிவித்தார்கள். முறையான பயிற்சியை எங்கு பெற்றாலும் கட்டாயமாக சிறந்த வெற்றியைப் பெறுவார்கள். வணிக இயல் பாடத் தேர்வு எழுத விரும்புகிறவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாது என்ற கோரிக்கையும் இருந்தது. அந்த முறையில்தான் எல்லோரும் அனுமதிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. தகுந்த முறையில் பயிற்சி பெற்று தேர்வில் வெற்றி பெறக்கூடிய தன்மையை எல்லோரும் பெறவேண்டும். இதிலே குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான வழிமுறைகளை அரசு அவ்வப்போது கையாண்டு வருகிறது. அந்த முறைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

**திரு. கே. எ. வகாப்:** தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்றுவிக்கின்ற தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற அந்தப் பயிற்சி நிலையங்கள் குறைபாடுகள் உடையனவாக இருக்கின்றன என்று சொன்னார்கள். அரசாங்கமே அதற்கான ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்து நாடெங்கிலும் அரசாங்கமே தனிப் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த முயற்சி செய்யுமா? அந்த நிலையில் தனிப்பட்டவர்கள் ஸ்தாபனங்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனிப்பட்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகிறவர்கள் தோல்வியுறுகிறார்கள் என்று கூறவில்லை. அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகிறவர்கள் சிறப்பான முறையில் தேர்ச்சியுறுகிறார்கள். ஆனால் அத்தகைய பயிற்சியைப் பெறாமலே தாங்களாகவே வீட்டிலோ. பக்கத்திலே இருப்பவர்களைப் பயன்படுத்திக் கொண்டோ எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் நேரடியாக இந்தத் தேர்வுகளை எழுதுவதன் மூலமாகத்தான் இந்தக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

இப்போது காம்ப்ரெஹென்சிவ் ஸ்கீம் என்று ஏற்படுத்துகிற வகையிலே கூட 9, 10, 11-வது வகுப்புகளில் கூட தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கும் வழிமுறைகளை மேற்கொள்ளலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

எந்தெந்தப் பள்ளிகளிலே வாய்ப்பு, வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் இதனைச் சிறப்பாகப் புகுத்தலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை அரசு தனியாக நடத்த வேண்டிய அவசியமில்லை. போதுமான அளவுக்கு இத்தகைய பயிற்சி நிலையங்களை நடத்துகிறவர்கள் பல பேர் இருக்கிறார்கள். அதிலே குறைபாடு இல்லை. தேர்வு நடத்துகிற முறை நம்மிடம் இருக்கும் காரணமாக, தேர்வு அளிக்கும் வாய்ப்பு நம்மிடம் இருக்கும் காரணமாக யார் பயிற்சி அளித்தாலும் அதிலே குறைபாடு இல்லாமல் பாதுகாக்க, கண்காணித்துக் கொள்ள வகை இருக்கிறது. அந்த அடிப்படையில் செம்மையாக இதனைக் கவனிக்க இயலும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பள்ளிகளை ஆய்வு செய்ய ஆய்வாளர்கள் இருப்பது போல் கமர்ஷியல் இன்ஸ்டிட்யூட்சை ஆய்வு செய்கின்ற ஏற்பாடுகள் இருக்கின்றனவா? அப்படி இல்லை என்றால் ஆய்வு செய்து தரம் சரிவரக் காப்பாற்றப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரக்குறிப்புகள் இல்லை. ஆய்வு செய்வது பற்றியும், என்னென்ன தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன்.

**திரு. ஆலடி அருணா :** தேர்ச்சி பெற்றவர்கள் விழுக்காடு குறைவாக இருக்கிறது என்றாலும் தேறியவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் காரணத்தால், நேரடியாக எல்லோரையும் அனுமதிக்கின்ற அளவுக்கு நிலைமை இருந்தால்தான் ஏழைகளுக்கு வசதியாக இருக்கும். ஆகவே, அரசு அதுபற்றி ஆராய்ந்து அந்த முறையையே பின்பற்ற ஊக்குவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எண்ணிக்கை அதிகமாக ஆகவேண்டுமென்ற எண்ணத்திலேதான் நாம் இருந்து வருகிறோம். தனிப் பயிற்சி பெற்றவர்கள் சிறந்த முறையில் தேர்வு எழுத வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யாராக இருந்தாலும் இந்தத் தேர்வு எழுதுவதிலே தடை இருக்கக் கூடாது என்ற காரணத்தால்தான் தகுதியை நிர்ணயித்து இந்தத் தேர்வை எழுதலாம் என்று வகுத்திருக்கிறோம்.





**திரு. நா. வீராசாமி :** இரண்டு லட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் பங்கு கொள்ளுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி இரண்டு லட்சம் மாணவர்கள் பங்கு கொள்ளுகின்ற இந்தக் கல்வி முறைகளைக் கவனிக்க தனி இயக்குநரை நியமித்து அந்த இயக்குநரகத்தின் கீழ் இந்தப் பயிற்சிக் கூடங்கள் கொண்டுவரப்படுமா? மேலும் இதிலே மாணவர்களை ஊக்குவிக்கக்கூடிய முறையில் சிறந்த முறையில் தேர்வு எழுதி முதல் வகுப்பில் முதல் மார்க் வாங்கக்கூடியவர்களுக்கு முதலமைச்சர் கோப்பை போன்ற பரிசுகளைக் கொடுக்க அரசு வழி வகுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதிலே ஏற்படுகிற ஒருசில குறைபாடுகள் மற்றவைகளுக்கு தனி இயக்குநர் இல்லாமை காரணம் அல்ல. இப்போது இருக்கும் இயக்குநரே போதுமானது. அந்த இயக்குநரே கண்காணித்துக் கொள்ள முடியும். கீழே இருக்கும் முறைகளில் சீர்திருத்தம் செய்வது, அதற்கான முறைகளை வகுப்பது, தேர்வுகளைச் சிறப்பாக நடத்துவது, கலந்து கொள்ளுகிற மாணவர்களின் தரம் உயர வழிவகைகள் செய்வது ஆகியவற்றைக் கவனித்துச் செய்யலாம். வேறுபல கல்லூரிகள், பள்ளிகளைக் கவனிக்க வேண்டிய பொறுப்பில் இயக்குநர் அவர்கள் இருந்தாலும், இதைப் பொறுத்தவரை முழுப் பொறுப்பு அவர்களுக்கு இல்லை. தேர்வு நடத்துகிற பொறுப்புத்தான் இயக்குநரகத்துக்கு இருக்கிறதே தவிர, வேறு வேலைகள் ஒன்றும் அதிகமாக இல்லை. இதுபற்றிய பரிந்துரைகளைத் தெரிவித்தால் அரசு அதுபற்றி விவாதித்து முடிவெடுக்க ஆயத்தமாக இருக்கிறது.

## மல்லசமுத்திரம் கால்வாய்

*180 வினா—திரு. வ. முத்து : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம் கால்வாய் வெட்டும் பணி முடிவடையாமலிருப்பதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மல்லசமுத்திரம் ஏரிக்கு நீர் வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டத்திற்கு நில எடுப்பு

நடவடிக்கைகள் சரிவர முடிவடையவில்லை. ஆகவே இத்திட்ட வேலையானது முற்றுப் பெறாமல் இருக்கிறது.

**திரு. வ. முத்து:** ஆரம்பத்தில் கால்வாய் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு இடையில் தடைபட்டிருக்கிறது. ஐந்து வருஷத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கால்வாயை உடனடியாக இந்த ஆண்டு எடுத்து முடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட திட்டந்தான் இது. இடையிலே உள்ள நிலங்களை அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக அரிசன நலத் துறையினர் எடுத்திருக்கிறார்கள் என்பது பின்னால் தான் தெரிய வந்தது. அதன் பிறகு மாற்று நிலம் வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்பட்டு இந்த நிலம் பொதுப் பணித் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜித வேலைகள் முழுவதும் முடிந்த பிறகு இந்த வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

### *Bye-pass road near Virudhunagar*

* 181 Q.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal for the formation of a bye-pass road to the National Highway at Virudhunagar town: and

(*b*) when the work will be started and proposed to be completed?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் இவ்வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9.30)

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த வேலையானது துவங்கப் பெற்று பல்லாண்டுகளாக அது தேங்கிக் கிடக்கிறது. அதிலும் குறிப்பாக இன்றிருக்கிற ரோடானது மிக நெரிசலாக இருக்கிறது. ஆதலால் அதைத் துரிதமாக முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ரெயில்வே அதிகாரிகள் அந்தப் பாதைக்குண்டான அலைன்மென்ட்க்கு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை. அதனால் தாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் தாற்காலிகமாக ஒரு ரோடாவது வேண்டுமென்று ரூ. 42,000-ல் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அநேகமாக டிஸம்பர் 74-க்குள் அந்த வேலை முடிவடையும்.

### பரமக்குடி–சாயல்குடி சாலை

* 182 வினா—**திரு. தொ. க. சிறைமீட்டான்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலிருந்து முதுகுளத்தூர் வழியாகச் சாயல்குடி செல்லும் சாலையை விரிவுப் படுத்தும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** முதுகளத்தூர், கட்லாடி போன்றவற்றிற்குச் செல்லும் இந்தச் சாலை நீண்டநாட்களாகவே அகலப்படுத்தப்படாமல் இருக்கிறது. மழைக் காலத்தில் ஒரு பஸ் அல்லது ஒரு வண்டி கூட போவதற்கு வாய்ப்பில்லாமல் அவதிப்பட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அந்தச் சாலையை விரிவு படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது ஏற்கனவே 12 அடி தார் போடப்பட்ட சாலை. மேற்கொண்டு விரிவுபடுத்துவது என்று சொன்னால் 25 லட்சம் ரூபாய் தேவைப்படும். இப்போதுள்ள நிதிநிலைமையில் அதைச் சரிவரச் செய்ய இயலாத நிலைமை இருக்கிறது. நிதி நெருக்கடி தீர்ந்த பிறகு பார்க்கலாம்.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** தார் போடவில்லை என்றாலும் ஸைடில் களிமண் தரை இருப்பதால் களிமண்ணை வெட்டிப் போடுகிறார்கள். மழை காலத்தில் அப்படியே சேறு அடைந்து

பஸ், ஆட்கள் கூட நடக்க முடியாத நிலை இருப்பதால் அங்கு மெட்டல் க்ராவலிங்க்-ஆவது போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நிதி நெருக்கடி என்று சொன்னேனே தவிர பாதை அவசியமில்லை என்று சொல்லவில்லை. நிதி நெருக்கடி தீர்ந்தபிறகு அது ஆலோசிக்கப்படும்.

**கூத்தன் கால்வாயின் குறுக்கே பாலம்.**

* 183 வினா—**திரு. தொ. க. சிறைமீட்டான்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி முதுகுளத்தூர் பெருந்து சாலையிலிருந்து பிரியும் விளத்தூர்-அபிராமம் பெருந்து சாலையில் கூத்தன் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. தொ. க. சிறைமீட்டான்:** இந்தப் பாலமானது பொது மக்கள் செல்கிற பாலமாகும். கூத்தன் கால்வாயில் 12½ லட்சம் ரூபாய் செலவில் திட்ட வேலை நிறைவேற்றி முடியும் தருவாயில் இருக்கிறது. மழைக் காலங்களில் இந்தப் பாலத்தைக் கடந்து பஸ்கள் செல்வதற்கு கஷ்டமாக இருப்பதால் உடனடியாக ஒரு பாலத்தை அங்கு கட்டித் தர உத்தேசிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தப் பாலத்திற்காக அநேகமாக ஒரு லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது சேர்க்கப்பட்டிருக்கிற திட்டங்களில் சேர்க்கப்படவில்லை என்றாலும் இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

***Co-operative Tea Factories***

*** 184 *Q*.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—**

**(*a*) the number of tea factories in the State under Industrial Co-operatives as on this date; and**

**(*b*) the number among them which run on profit?**



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) எட்டு.

(இ) ஒன்று.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்போது இந்தக் கூட்டுறவு டீ பாக்டரிகள் இரண்டு மூன்று இடங்களில்தான் இருக்கின்றன. ஏராளமான சிறு விவசாயிகள் தங்கள் டீயை பதம் செய்யக்கூடிய நிலையில் இல்லை. அவைகளை எல்லாம் பியர்ஸ் ஆண்ட் லெஸ்லி போன்ற கம்பெனிகள் குறைந்த விலைக்கு வாங்குகிறார்கள். ஆகவே இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** புதிதாக மூன்று கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கு விவசாயிகள் முன்வருகிறார்களோ அங்கெல்லாம் இந்த உதவி செய்யப்படும்.

**திரு. எம். தேவராசன்:** நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலூகாவில் இருக்கும் பந்தலூரில் இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலை ஆரம்பித்து பல மாதங்களாக செயல்படுத்தப் படாமல் இருப்பதாக அங்குள்ள தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள் எல்லாம் என்னிடம் முறையிடுகிறார்கள். அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு முயற்சிக்குமா? அது செயல்படாததற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அந்த ஊரில் இப்போது முடிவுறுகிற நிலையில் இருக்கும் அதன் திறப்பு விழா பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அனேகமாக விரைவில் உற்பத்தி தொடங்கும்.

**திரு. கு. அ. பொம்மன்:** அந்தத் தொழிற்சாலை இயங்காததற்குக் காரணம் தண்ணீர் கஷ்டம் என்று சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படியானால் அந்த தண்ணீர் கஷ்டத்தைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூடலூர் தொழிற்சாலை பற்றி கலெக்டர் அவர்கள் என்னிடம் பேசினார்கள். நல்ல முறையில் அது தொடங்கப்பட்டிருக்கிறது. விரைவில் உற்பத்தி தொடங்கும் என்று நான் அங்கு சென்றிருந்தபோது அவர்கள் சொன்னார்கள். சிரமம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

[1974 ஆகஸ்ட் 20

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இருக்கிற எட்டு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் ஒன்றுதான் லாபகரமாக நடக்கிறது. ஏழு லாபம் இல்லாமல் நடக்கின்றன. இதற்கு என்ன காரணம்? இவற்றையும் லாபகரமாக ஆக்குகிற வகையில் அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மொத்த உற்பத்தியைக் கணக்கெடுக்கும்போது லாபத்தில் நடைபெறுகிறது. ரிசர்வ்ஸ் ஒதுக்கும்போது நஷ்டக் கணக்கு வருகிறது. அக்யூமுலேட்டட் லாஸ்-ம் இருக்கிறது. இப்போது செல்கிற முறையைப் பார்த்தால் விரைவில் அதிக லாபத்தில் நடைபெறும் வாய்ப்பு இருக்கிறது.

## *Madras Fertilizers*

* 185 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Government have offered any financial and other assistance to the Madras Fertilizers at Manali; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) மணலியில் உள்ள சென்னை உரத் தொழிற்சாலைக்கு தமிழக அரசு எல்லா அடிப்படை வசதிகளும் கொடுத்து உதவி உள்ளது.

திரு. மா. வே. நாராயணசாமி: மணலியில் இருக்கக்கூடிய இந்த மதராஸ் பெர்டிலைசேர்ஸ் என்ற மத்திய அரசாங்க நிறுவனம் அந்த வட்டார மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில்லை என்ற குறை நெடுநாட்களாகவே இருந்து வருகிறது. எனவே நம் தமிழக அரசு அதில் கவனம் செலுத்தி அது மத்திய அரசின் நிறுவனமானாலும் அது தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை அந்த நிறுவன நிர்வாகிகளிடம் வலியுறுத்தி அங்கு அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க நம் அரசு அவர்களை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசினுடைய தொழிற்சாலைகள் பற்றி இப்படி ஒரு குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. நம் அரசின் சார்பில், புதிதாக நாம் கொண்டு வந்திருக்கும் திட்டத்தை, தமிழ்நாட்டு மக்களுக்கு முதல் இடம்



1974 ஆகஸ்ட் 20] [திரு. செ. மாதவன்]

கொடுக்க வேண்டும், தொழில் வாய்ப்புகளில் என்ற ஒரு திட்டத்தை அவர்கள் அமல்படுத்துவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

திரு. ஆ. கு. சுப்பையா: இந்த நிறுவனம் மத்திய அரசு, மாநில அரசினுடைய கூட்டுப் பொறுப்பில் நடத்தப்படுகிறதா? அப்படியானால் மாநில அரசினுடைய நிர்வாகிகள் அதில் பங்கேற்றிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது மத்திய அரசின் தொழிற்சாலை.

THIRU B. VENKATASWAMI: May I know from the Hon. Minister how much percentage of the fertilizer produced in Manali is allotted to Tamil Nadu?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுவாக எவ்வளவு உரம் நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று மத்திய அரசு நிர்ணயிக்கிறது. மணலி தொழிற்சாலையில் இருந்து எவ்வளவு கொடுக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது நம் மாநிலத்தில் பணப் பயிர்களுக்கான உரம், ரப்பர், காபி, தேயிலை போன்ற பயிர்களுக்கான உரம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. எனவே, சென்னை உரத் தொழிற்சாலையில் பணப் பயிர்களுக்கான உரத்தைத் தயாரிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்தப் பயிர்களுக்கு எந்தெந்த உரம் என்பதை வேளாண்மைத் துறையினிடம் கேட்க வேண்டும்.

திரு. கே. எ. வகாப்: மத்திய அரசினுடைய தொழிற்சாலைக்கு அடிப்படை வசதிகளைத்தான் நாம் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையைக் கொண்டு, நாம் செய்து கொடுக்கிற வசதிகளை அடிப்படையாகக் கொண்டு, நம் மாநிலத்திற்கு உரத்தேவை அதிகம் என்பதையும், உரப்பற்றுக்குறை மிகுதியாக இருப்பதை எடுத்துக் காட்டியும் நமக்குப் போகத்தான் மீதி உரத்தை கொடுக்க வேண்டுமென்றளவில் அதை ஒரு போராட்டமாகக்கூட

[திரு. கே. ஏ. வகாப்] [1974 ஆகஸ்ட் 20

நடத்தி நம் ஊரில் தயாரிக்கும் உரத்தை நமக்குத் தேவையான அளவை நாமே வைத்துக் கொள்ளக்கூடிய விதத்தில் நிவ்ட நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது மணலித் தொழிற்சாலை மட்டுமல்ல. தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற பொருளை நம்முடைய தேவையை மாநில அரசிடத்தில் ஒப்படைத்து விடுங்கள், நாங்கள் அதை விநியோகிக்கிறோம் என்று எடுத்துக் கூறி வருகிறோம். ஆனால் இது மத்திய சர்க்காருடைய கொள்கைப் பிரச்னை.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்தத் தொழிற்சாலையில் ஏறத்தாழ 700 பேர்களைக் காண்ட்ராக்ட் லேபராக தொடர்ந்து வைத்துக் கொண்டிருப்பதாக சொல்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக தேவைப் படுகிறார்கள். எனவே, அவர்களை நிரந்தரமாக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா? அரசிடம் அதற்கான விண்ணப்பம் வந்திருப்பதாகத் தெரிகிறது. என்வே, இந்த முயற்சியை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர் நலத் துறையிடத்தில் கேட்க வேண்டும்.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த மணலி தொழிற்சாலையில் உற்பத்தியாகிற உரம், நமக்குத் தேவை எந்தளவிற்கு இருக்கிறதோ அந்த அளவிற்கு மத்திய அரசு ஒதுக்காவிட்டாலும் அதில் உற்பத்தியாகிற உற்பத்தியில் 30 சத விகிதம் ஆப் தி ஓவர் ஆல் ப்ராட்யூஸ்-ஐ அவர்கள் தனி வியாபாரிகளுக்குக் கொடுக்கிறார்கள். அதையாவது நம் அரசாங்கத்திற்குக் கொடுக்கும்படி நம் அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றி ஏற்கனவே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் விளக்கியிருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த உர உற்பத்திக்கான மூலப்பொருளாகிய நாப்தா குறைந்த விலையில் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறதே, அது இப்போது நமக்குப் போதிய அளவில் கிடைக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?



1974 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாப்தாவிற்கு மொத்தத்தில் அகில இந்தியாவில் பற்றாக்குறை என்ற ஒரு கட்டம் இருந்தது. இடைக்காலத்தில் சில தொழிற்சாலைகள் திட்டமிட்டபடி வட பகுதியில் வராத காரணத்தால் இப்போது சர்ப்ளஸ் போல் தோன்றுகிறது. ஆனால் எண்ணெய் விலை ஏற்றம்—நெருக்கடி இருப்பதால்—காரணமாக நிச்சயமாக நாப்தாவின் விலை ஏறுமுகத்தில்தான் இருக்கும் என்று நினைக்கிறோம்.

## *Sago Research Laboratory, Salem.*

* 186 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of tests conducted on Sago and Starch by the Sago Reasearch Laboratory at Salem during 1973–74 ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சேலத்தில் உள்ள ஜவ்வரிசி ஆய்வுக்கூடத்தில் 1-4-1973-ல் இருந்து 28-2-1974 முடிய 65 ஜவ்வரிசி, மாவு (Starch) மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, அந்த ரிசர்ச்சின் முடிவு என்ன? அதன் மீது என்ன நடவடிக்கை சர்க்கார் எடுத்து இருக்கிறது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முடிவு இல்லை. ஒவ்வொரு ஜவ்வரிசி தொழிற்சாலைக்கும் உதவி செய்வதற்கு நாம் லாபரட்டரி பெசிலிடீஸ் செய்து கொடுத்தோம். அது அதிகத் தேவையில்லாது போல் தோன்றுகிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் அந்த லாபரட்டரிகளை பயன்படுத்திக்கொள்கிறோம் என்று கேட்டு இருக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்வதாக முடிவு செய்து இருக்கிறோம்.

## ஈரோட்டில் சாயத் தொழிற்சாலை

* 187 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :

ஈரோட்டில் சாயத் தொழிற்சாலை ஒன்று நிறுவிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சாயத் தொழிற்சாலை அமைப்பதற்காக தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் பெற்றுள்ளது. இத் தொழிற் சாலைக்கான இடம் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, ஈரோடு பகுதி கைத்தறி, பவர்லூம் ஏராளமாக இருக்கும் பகுதி. ஆகவே, அந்தத் தொழிற்சாலையை விரைவில் துவங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விரைவில் தொடங்கப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, கைத்தறிக்குத் தேவையான சாயம், ரசாயனப்பொருள்களின் விலை அதிகமாக இருக்கின்றது. மேலும் மேலும் அதிகமாகி வருகின்றது. ஆகவே, அந்த விலையைக் குறைத்து, குறைவான விலைக்குக் கொடுக்க அரசுக்கு எண்ணம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இது பாராளுமன்றத்தில் கேட்கப்படவேண்டும். இந்த விலைக் கட்டுப்பாடு செய்வது நம்மிடத்தில் இல்லை. இருந்தபோதிலும், நாம் கைத்தறிக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, ஹைட்ரோ-சல்பேட்-இந்த மூலப்பொருள் கிடைக்காமல் அடிக்கடி பாதிக்கப் படுகிறார்கள்—தொழிற்சாலை ஒன்றை ஜப்பான் உதவியோடு தொடங்க ஏற்பாடு செய்து இருக்கிறோம். அதேபோல், டைஸ் அண்டு கெமிகல்ஸ் தொழிற்சாலையையும் நாமே தொடங்குவது என்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பேரவைத் தலைவரவர்களே, ஈரோடு பகுதியில் சாயத்தொழிற்சாலை தொடங்குவதற்கு தனியார் யாரேனும் மனு போட்டார்களா? அல்லது தனிப்பட்ட பொது மக்களை சேர்த்துக்கொண்டு தொழிற்சாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதுபற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. ஆனால் அரசாங்கத்தின் நோக்கம் இந்தப் பொருள்களை உபயோகிப்பவர்கள் பங்கு பெற்று—இடையிலே டிரேடர்ஸ் வந்து எக்ஸ்பிளாயிட் செய்ய வழியில்லாமல்—



கன்ஸ்யூமர்ஸ் பங்கு பெற்று ஒரு நிறுவனத்தைத் துவங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம்.

### *Taking over of Inam Estates*

*188 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of inams which have not been taken over by the Government so far?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 30-7-1974 அன்றுள்ளபடி, தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/63) கீழ் 70 கிராமங்களும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு-ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/63) கீழ் 11 கிராமங்களும், நீதிமன்றம் பிறப்பித்த தடையாணைகளாலும் வேறு சில தடைகளாலும் அரசு மேற்கொள்ள முடியவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, there are one or two Inam Villages in Hosur taluk which have not yet been taken over by the Government and it is understood that correspondence is going on between the Government and the Inamdar. May I know from the Hon. Minister for Revenue whether the Government has taken action already or whether it is going to take action to take over the villages?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தருமபுரி மாவட்டத்தில் ஹொசூர் தாலூக்காவில் 5.24 ஸ்கொயர் மைல் எடுக்க வேண்டியிருக்கிறது. தடையாணைகளால் அதை எடுக்க முடியவில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, as per the answer given by the Hon. Minister, it is found that due to the stay, the Government could not take over the village. But people are suffering, they are not able to get loans for agricultural development. May I know whether urgent steps would be taken to take over the village urgently?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Any Zamin under tenure notified to be taken over, the entire estate stands transferred to the Government and vests with them free from all encumbrances

and the land-holders cannot collect melwaram. If the notification by the Government is stayed, the estate will continue in the possession of the land-lord and it will not be possible to prevent the land-holder from collecting melwaram due to him. The Government would take steps to vacate the stay and they have asked the Government Pleader to expedite the matter.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, இந்த இனும் சட்டங்கள் பல இருக்கின்றன. அந்த இனும் சட்டங்களை சரியாக அமல் நடத்தமுடியாமல் பாதிக்கப்படுகிற அளவிலே பல விதமான கேஸ்கள் கோர்ட்டுகளிலே, சிவில் கோர்ட்டுகளிலே கொண்டுசெல்லப்பட்டு, தடைகள் எல்லாம் விதிக்கப்பட்டிருக்கின்றன. இது சம்பந்தமாக, இதுவரையில் வந்துள்ள எல்லாச் சட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரு சட்டமாகக் கொண்டுவந்து, எந்தக் கோர்ட்டும் அதில் தலையிடமுடியாத அளவுக்குக் கொண்டு வந்து, நிறைவேற்ற இருப்பதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. அந்தச் சட்டத்தை சீக்கிரமாகக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. இனும் சட்டங்களால் ஏற்படும் கஷ்டங்கள் பரிசீலிக்கப்பட்டு, அது கோர்ட்டுகளுக்கு வழக்குச் செல்லும்போது, அரசாங்கத் தரப்பில் வழக்கறிஞர்களை நியமித்து உதவி செய்யலாமா என்று பரிசீலனை செய்து வருகிறோம்,

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த இனும் நிலங்களைப் பொறுத்தவரையிலும், மேஜர் இனும், மைனர் இனும் என்று இரண்டு வகை இனங்களில் சில சிக்கலான சட்டப் பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றின் காரணமாக, ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இதை ஒரு ஒழுங்குமுறை செய்வதற்காக அரசாங்கம் உடனடியாக ஒரு செலக்ட் கமிட்டி ஒன்றைப் போட்டு, அதனுடைய பரிந்துரையின் மீது ஒரு சட்டத்தைக் கொண்டு வருமா என அறிய விரும்புகிறேன் ? பல ஆயிரக்கணக்கான ஏழை விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்,





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் இருக்கும் இனும் பிரச்னை பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அது பற்றி பரிசீலிக்கப்பட்டு, ஒரு சப்-கமிட்டி, நான், சட்ட அமைச்சர், அறநிலையத் துறை அமைச்சர் ஆகியவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டு, சில முடிவுகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த முடிவுகள் அந்த விவசாயிகள், நிலத்தை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாக இருக்கும் என்ற நிலையில் அந்த சிபார்சுகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. அ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இனும் சட்டங்கள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒரு சட்டம் கொண்டு வர வேண்டுமென்று ஒரு மசோதா ஒன்றை நான் தாக்கல் செய்து அதன்மீது விவாதம் வந்தபோது, அந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்கள் அந்த மாதிரி ஒரு சட்டம் கொண்டு வருவதாக வாக்களித்தார்கள். ஆகவே, அந்தச் சட்டங்களில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதால் எல்லாச் சட்டங்களையும் ஒருங்கிணைத்து ஒரு நல்ல சட்டம், ஒருங்கிணைந்த சட்டமாகக் கொண்டு வர அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நியமிக்கப்பட்டு இருக்கின்ற, சப்-கமிட்டியின் சிபார்சை அனுசரித்து அதுபற்றி பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Collection of rents from Inam villages.*

*13[illegible] Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government are aware that Thiru Thiruvavaduthurai Adheenam has been collecting rents from the tenants from lands taken over by the Government under the Inams Abolition Acts in Kodarankulam village in Tirunelveli district ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Thiruvavaduthurai Adheenam, has been collecting waram from the tenants of Kodarankulam village as per the contract entered into between them prior to the take over of the estate. There were suits between the tenants and certain others and the landholder—Adheenam regarding payment of waram which went up to the High Court.

[1974 ஆகஸ்டு 20

The High Court has decreed that pending disposal of the application filed by the Adheenam under section 9 of the Act before the Settlement Officer, the Adheenam would be entitled to be paid waram, as it was done prior to 7th February 1972. The High Court has further ordered that if the settlement authorities decide that the Adheenam is not entitled to ryotwari patta in respect of any lands, the tenants of these lands will not be liable to pay any waram or rent to the Adheenam from that date and that further they would be entitled to get back either in kind or the value of the produce paid as waram subject to the deduction of any land revenue paid by the Adheenam to the Government for the period subsequent to 7th February 1972 for the lands. Having subjected themselves to the proceedings of the Courts they will have to abide by it. Steps will be taken to safeguard their interests in terms of the provisions of the Abolition Act as soon as the legal impediments are cleared.

THIRU R. PONNAPPA NADAR: Sir, has the notification been made by the Settlement Authorities so that the vesting of the land will be with the Government ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I do not know if the notification has been made. But the Adheenam has taken the matter to High Court and it is pending. What I read just now had the consent of both the parties. A common decree has been passed by the High Court after consent of both the parties.

### ஆத்தூர் தொகுதியில் புதிய பாலங்கள்.

*190 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, பட்டிவீரன் பட்டிக்கும், அய்யன்கோட்டைக்கும் இடையே உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்து மதுரை மேற்கு மாவட்ட அபிவிருத்தி மன்றம் பரிந்துரை ஏதேனும் கூறியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம்.



1974 ஆகஸ்டு 20]

(இ) இவ்வேலை இதர சாலைகள் திட்டத்தின்கீழ் எடுத்துச் செயல்படுத்தப்பட வேண்டியது. ஆனால் இதற்கான நிதி ஒதுக்கீடு ஏதுமில்லாததால் இது பொறுத்திருக்கப்பட வேண்டியதாக உள்ளது.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** பட்டிவீரன் பட்டிக்கும், அய்யன்கோட்டைக்கும் இடையே உள்ள மருதா ஆற்றில் மழை காலத்தில் அதிகமாக தண்ணீர் வந்தால் அய்யன்கோட்டையிலுள்ள ஏழை அரிசன மக்கள் கூலி வேலை செய்து வாழ்கின்ற மக்கள் பட்டிவீரன்பட்டிப் பகுதிக்குப் போக வேண்டுமென்றால் தண்ணீர் எப்பொழுது குறைகிறதோ அப்பொழுது தான் கூலி வேலைக்குப் போக முடியும். இந்தத் திட்டம் மிகவும் முக்கியமான திட்டமாக இருப்பதால் அதை அரசு எடுத்துச் செயல்படுத்த ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அய்யன்கோட்டைக்கும் பட்டிவீரன்பட்டிக்கும் இடையே ஓடும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு 16—8—71 நாளிட்ட தீர்மானம் ஒன்றை மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றம் (மேற்கு) போட்டு அரசுக்கு அனுப்பியது. அதைப் பரிசீலனை செய்யச் சொல்லி தலைமைப் பொறியாளர்க்கு அனுப்பப்பட்டபொழுது தற்பொழுது இந்தப் பாலத்தைக் கட்ட சுமார் ரூ. 3 இலட்சம் தேவைப்படும் என்றும், இந்த வேலை ஒப்புக்கொள்ளப்பட்ட எந்தத் திட்டத்திலும் இதுவரையில் சேர்க்கவில்லையென்று அறிவித்ததன் காரணமாக, இந்தப் பால வேலை இதர சாலைகள் திட்டத்தின்கீழ்தான் செயல்படுத்தப்பட வேண்டும் என்று யோசனை கூறியதாலும், வருகிற ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் எடுத்துச் செய்ய நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை என்ற காரணத்தினாலும், வளமான காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** நான் ஏற்கனவே இது முக்கியமான வேலை என்று சொன்னேன். ஆகவே, அந்த இடத்தில் பாலம் கட்டுவதற்கு, ஒரு ஓடு பாலமாவது அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்பொழுது அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

[1974 ஆகஸ்டு 20

*191 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, அம்மாபட்டிக்கும் நடுப்பட்டிக்கும் இடையே உள்ள மரங்கரை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: அம்மாப்பட்டிக்கும் நடுப்பட்டிக்கும் இடையே ஒரு ஓடை ஓடுகிறது. அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டாமல் இருப்பதினால், அந்த இரண்டு பகுதி மக்களுக்கும் தொடர்பு ஏற்படவேண்டுமென்றால், மழைக்காலம் வந்தால் அதிகமாக தண்ணீர் வருகிறபொழுது அந்தப் பகுதி மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு பாலம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சென்ற கேள்விக்குப் பதில் கூறும்பொழுதே குறிப்பிட்டேன். வரும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதர சாலைகள் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு எந்தப் புதிய வேலையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படவேண்டிய அவசியம் ஏற்படும்பொழுது இதைக் கவனிக்கலாம்.

### *State Transport Department.*

*192 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the Government propose to decentralise the Tamil Naud State Transport Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது இருக்கக்கூடிய ஒவ்வொரு கழகத்திலும் இப்படிப்பட்ட செண்டரில் டெப்டி டைரக்டர் போன்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு



1974 ஆகஸ்டு 20]

டெப்போவிலும் இம்மாதிரி டெப்டி டைரக்டரைப் போட்டால், அந்த மாதிரி இடங்களில் 'எஃபக்டிவாக' கண்காணிப்பதற்கு சௌகரியமாக இருக்குமே? இதுபற்றி சர்க்கார் யோசனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற யோசனை ஒரு நல்ல யோசனை. இந்த அடிப்படையில்தான் அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் 200 கிலோ மீட்டருக்கு மேலான வழித்தடங்களையெல்லாம் அரசுப் போக்கு வரத்துத் துறை இயக்குவது என்றும், 200 கிலோ மீட்டருக்குக் குறைந்த வழித் தடங்களை ஆங்காங்கு இயங்குகின்ற போக்கு வரத்துக் கழகங்கள் மேற்கொள்வது என்றும் அண்மையில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் அத்தகைய விரைவுப் பேருந்துகளை மட்டும் இயக்கும் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆங்காங்கு இருக்கிற பணிமனைகளை ஒரு கிளை அலுவலகமாக மாற்றி முழு அதிகாரத்தைத் தருவது என்றும் அரசுக் குறிப்பு ஒன்றை பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இடையிலே இருக்கிற ஜாயிண்ட் டைரக்டர் என்கின்ற அந்த அமைப்பினை ரத்து செய்வது என்றும் அரசு முடிவெடுத்திருக் கிறது.

### *Sale of bus tickets*

*193 Q.—Thiru N. DENNIS:

Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pltased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to introduce licensing system for canvassers for bus tickets in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்திடமிருந்து அல்லது அதன் செயலாளரிடமிருந்து உரிமம் பெற்றிருந்தாலன்றி மற்றபடி எவரும், தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளைச் சேர்ந்த 49-ZZZ விதியின்படி முகவராகவோ அல்லது

பயணச்சீட்டு விற்பனை முனைபவராகவோ செயலாற்றக்கூடாது, பொதுப்பணி வண்டி உரிமையாளர் எவரும் அத்தகைய நபர் ஒருவரை முகவராகவோ அல்லது பயணச்சீட்டு விற்பனை முனைபவராகவோ செயல்பட நியமிக்கக் கூடாது. மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிராமலும், தனிப்பட்டவராயின் 18 வயது முடிவடையாமலும், VIII-வது வகுப்பு வரையில் படிக்காமலும் இருக்கும் எவருக்கும் அத்தகைய உரிமம் வழங்கப்படமாட்டாது. இந்த உரிமம் ஓராண்டுக் காலம் செல்திறனுடையதாகும். இந்த உரிமம் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

**திரு. என். கே. பழனிசாமி :** இம்மாதிரி அநௌன்ஸர் என்று சொல்லக்கூடிய இன்னென்ன வண்டிகள் இன்னென்ன ஊர்களுக்குப் போகின்றன என்று சொல்லக்கூடியவர்களுக்கு கமிஷன் கொடுத்து, அவர்களுக்கு இம்மாதிரி ஏற்பாடுகள் செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இன்னென்ன ஊர்களுக்கு இன்னென்ன வண்டிகள் போகின்றன என்று பஸ் நிலையங்களில் அழைக்கின்றவர்களுக்கு இந்தத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்த விதி ஆம்னிபஸ்களை ஓட்டுவதற்காக ஏற்பாடு செய்து டிக்கெட்டுகளை கான்வாஸ் செய்து ஏற்றிக்கொள்கிறார்கள். அவர்களுக்கு என்று விசேஷ தகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

### சென்னை நகரில் இரவுநேரப் பேருந்துப்பணி

***194 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் இரவு 11 மணிக்கு மேல் 2 மணிவரை தனியாக இரவுநேர பஸ் விடவேண்டும் என்று சென்னை பஸ் பிரயாணிகள் சங்கம் அண்மையில் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம். பாடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்காக அங்கிருந்து ஹாமில்டன் பாலம் சைதாப்பேட்டை, தியாகராயநகர், தங்கசாலை ஆகிய இடங்களுக்கு இரவு நேரப் பேருந்துப் பணி ஒன்றை இயக்குமாறு சென்னை மாநகரப் பேருந்துப் பயணிகள் சங்கக் கூட்டுக் குழு பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தது.

(இ) பாடிப் பகுதியில் இரவு முறைப் பணிபுரியும் தொழிலாளர்களின் வசதிக்காக, சோதனை அடிப்படையில் அம்பத்தூருக்கும் பிராட்வேக்குமிடையில் இரவு நேரப் பேருந்துப் பணி ஒன்றை இயக்கக் கருதப்பட்டுள்ளது. இவ்வழித் தடத்தில் இயக்கப்படும் பேருந்துப் பணி செயல்படுவதைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர், சென்னை மாநகரத்திலுள்ள பிற இடங்களுக்கும் பேருந்துப் பணி இயக்கப்படுவது குறித்து கருதிப் பார்க்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தற்பொழுது எந்தெந்த வழித்தடங்களில் இரவு நேரப் போக்குவரத்து பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை ஏதாவது மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தற்பொழுது கீழ்க்காணும் வழித்தடங்களில் இரவு நேரப் பேருந்துப் பணிகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகின்றது :

56-ஏ—என்னூர்—வள்ளலார் நகர்
56-ஈ—என்பீல்டு—சென்டிரல்
21-பி—அண்ணாசாலை—அடையாறு
11-ஏ—அண்ணாசாலை—சைதாப்பேட்டை
38-வி—விவேகானந்தர் இல்லம்—மூலக்கடை
38-ஏ—அண்ணாசாலை—மூலக்கடை
71—டி.வி.எஸ்.—அம்பத்தூர் தொழிற்பேட்டை
36-பி—வள்ளலார் நகர்—சைதாப்பேட்டை
44—ஐ.ஓ.ஸி.—பாரீஸ்

மேற்கூறிய வழித்தடங்களில் 12 பேருந்துகளைக் கொண்டு 38 நடவை இந்த வசதி தொழிலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[1974 ஆகஸ்டு 20

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நெடுந்தூர பஸ்கள் உணவிற்காக நிறுத்தப்படுகின்ற இடங்களில் நேரம் கழித்து நிறுத்தப் படுகின்றன. மிக மோசமான கடைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவைகள் எங்கே இருக்கின்றனவோ அங்கே நிறுத்திவிடுகிறார்கள். நான் பல வழித்தடங்களில் பார்த்திருக்கிறேன். கேட்டால், மேலிடத்து டிபார்ட்மெண்டு உத்தரவு என்று சொல்கிறார்கள். இந்தக் கடைகளில் சாப்பிட்டால் காலரா, பிளேக் முதலிய வியாதிகள் வருகின்ற மோசமான அளவுக்கு இருக்கின்றன நிலைமைகள். ஆகவே, இதை மாற்றி முறையான நேரத்தில் நல்ல கடைகள் இருக்கும் இடங்களில் நீண்ட தூர பஸ்களை நிறுத்து வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வி இந்தக் கேள்வியோடு தொடர்பு கொண்டதாக இல்லாவிட்டாலும் நான் இதற்குப் பதில் கூறுவது கடமை என்று கருதுகிறேன். விரைவுப் பேருந்துகளில் செல்லும் பயணிகளுக்கு ஏற்ற உணவு வசதிகள் அமையவில்லை என்ற குறையை அரசு ஏற்கனவே கருதியிருக்கிறது. நல்ல கடைகளாகப் பார்த்து பஸ்களைக் கொண்டு போய் நிறுத்தச் சொல்வதைவிட, முக்கியமான இடங்களில் நாமே கட்டடங்களைக் கட்டி நல்ல சுத்தமான தரமுள்ள உணவு போன்றவைகளை வழங்குவதற்கு அவைகளை ஏலத்தின் மூலம் விடலாம் என்று அரசு தீர்மானித்திருக்கிறது. மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்த யோசனையின்படி அண்மையில் மாமண்டூரில் குறிப்பாக அத்தகைய ஒரு நிறுவனம் சீக்கிரம் அமைய இருக்கிறது என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## கோயம்புத்தூர்-திருப்பூர் பேருந்துப்பணி

***195 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும் திருப்பூருக்குமிடையே கூடுதலாக சேரன் போக்குவரத்துக் கழக பஸ்கள் விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?



1974 ஆகஸ்டு 20]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) சமீப காலம் வரை கோயம்புத்தூர்-திருப்பூர் வழித்தடத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் 3 பேருந்துகள் விடப்பட்டு வந்தன. 12—6—1974 முதல், மேலும் 2 பேருந்துகள் விடப்படுகின்றன. இதை மேலும் அதிகரிக்க அவசியம் இல்லை எனக் கருதப் படுகின்றது.

**திரு. சு. துரைசாமி:** திருப்பூருக்கும் கோயம்புத்தூருக்கும் இடையே நிறைய போக்குவரத்து இருப்பதன் காரணமாக தனியார்கள் இடையே டெம்பரரியாக நிறைய பஸ்களைப் போட்டிருக்கிறார்கள். சேலம் போக்குவரத்துக் கழகம் மேலும் பஸ்களைப் போட்டு அதிக வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும். அரசாங்கம் இதைச் செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** போதுமான அளவுக்கு ஏற்கனவே பயண வசதி சேரன் போக்குவரத்துக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருப்பூர்-கரூர் பேருந்துப்பணி

***196 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூருக்கும் கரூருக்குமிடையே கூடுதலாக சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) திருப்பூருக்கும் கரூருக்குமிடையே 19—6—1974 முதல் மூன்று பேருந்துகள் விடப்படுகின்றன. தற்போது அதை மேலும் அதிகரிக்க அவசியம் இல்லை எனக் கருதப்படுகின்றது.

(முற்பகல் 10.00)

**திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, திருப்பூருக்கும் கரூருக்கும் இடையில் தனியார் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்தினர் சேரன் போக்குவரத்துக் கழகத்தைச்

சேர்ந்த பஸ்களை ஓட்டுவதற்குத் தடையாக இருக்கின்றனர். ஆகவே, அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, அதிக பஸ்களை விட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசாங்கம் விடும் பஸ்களை யாரும்—தனிப்பட்ட நிறுவனம்—தடுத்துவிட முடியாது. ஏனென்றால் அரசு ஆங்காங்கே வழித் தடங்களை மேற்கொள்வதற்கு ஏற்கனவே வழிவகைகளைச் செய்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஐயத்திற்கு இடமளிக்கத் தேவையில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இப்போது கோவையிலிருந்து திருப்பூருக்கு வரக்கூடிய சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பஸ்களை அல்லது திருப்பூரிலிருந்து கரூருக்கு வரக்கூடிய பஸ்களை—பள்ளிப்பட்டு வரையில் ஒன்றிரண்டு பஸ்களையாவது விடவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இரண்டு, மூன்று ஆண்டுகளாக அந்தத் தொகுதி உறுப்பினர் வலியுறுத்தி வருவது குறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? முன்பு கேட்டபோது வெகு சீக்கிரம் ஒரு தடம் ஏற்படுத்தப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அந்த வாக்குறுதி இப்போது எந்த அளவில் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்தத் தொகுதி உறுப்பினர் வலியுறுத்துகிறாரோ என்னவோ தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்துவது எனக்குத் தெரியும். அது சம்பந்தமாக ஏற்கெனவே இலாகாவுக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இலாகாவில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அரசு நிச்சயம் அறிவிக்கும்.

### சேலம் கூட்டுறவு பால் வழங்கு சங்கம்

***197 வினா—திரு. கி. செயராமன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**சேலம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்திற்குச் சென்ற இரண்டு ஆண்டுகளாக அரசு அளித்துள்ள உதவிகள் யாவை?**



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 1972–73 நிதியாண்டில் சேலம் சிறு உழவர்கள்—வேளாண்மைத் தொழிலாளர் வளர்ச்சி நிறுவனம் சேலம் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்திற்கு ரூ. 48,750 உதவித்தொகை வழங்கியது. தயார்நிலை பால் குளிரூட்டும் சாதனத்திற்கான செலவில் ஒரு பகுதியை ஈடு செய்ய இத்தொகை வழங்கப்பட்டது. லாரி ஒன்று வாங்க, சேலம் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி ரூ. 1,42,650 கடன் வழங்கியுள்ளது.

### அரிசன மாணவர் விடுதிகள்

***198 வினா—திரு. ஜி. ராமசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஜோலார்பேட்டை, நாட்டராம்பள்ளி ஆகிய இடங்களில் அரிசன மாணவர் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) & (இ) ஜோலார்பேட்டை, நாட்டரம்பள்ளி ஆகிய இடங்களில் அரிசன மாணவர் விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு இல்லை. அரிசன நல இயக்குநர் மாவட்ட நல அதிகாரியை இவ்விடங்களில் விடுதிகள் திறப்பதற்குச் செயற்குறிப்பு அனுப்புமாறு கோரியுள்ளார். செயற்குறிப்பு வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஜி. ராமசாமி :** தலைவரவர்களே, ஜோலார்பேட்டை, நாட்டரம்பள்ளி ஆகிய இடங்கள் ரொம்பவும் பிற்பட்ட பகுதிகள். அங்கே அரிசன மாணவர்கள் அதிகமாகப் படிக்கின்ற காரணத்தால் அரிசன மாணவர் விடுதிகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குப் பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்கப்பட்டு, அவர்களும் தன்னுடைய விசாரணையை இயக்குநருக்கு அனுப்பியுள்ளார்கள். இயக்குநர் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அவரிடமிருந்து பதில் வந்தவுடன் அதுபற்றி பரிசீலனைச் செய்யப்படும்.

[1974 ஆகஸ்டு 20

*199 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நல்லம்மாள்புரத்தில் உள்ள அரிசன நல உயர்நிலைப்பள்ளிக்கு விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். இராசசாங்கம் :** திருநெல்வேலி மாவட்டம் நல்லம்மாள்புரத்தில் தாழ்த்தப்பட்ட மாணவியர்க்கான அரசு விடுதியொன்று தொடங்கும் செயற்குறிப்பு அரிசன நல இயக்குநரின் ஆய்விலுள்ளது.

*200 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பவானி வட்டம், அந்தியூரிலுள்ள அரிசன மாணவர் விடுதிக்கு நடப்பு நிதியாண்டில் நிலையான விடுதி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** இல்லை.

*201 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973–74-ல் திருச்சி மாவட்டத்தில், அரிசன மாணவர் விடுதி கட்டுவதற்காக எவ்வளவு ரூபாய் ஒதுக்கப்பட்டது?

(இ) அதில் செலவிடப்படாமல் அரசுக்கு திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** (அ) அம்மாதிரித் தனியாக ஏதும் நிதி ஒதுக்கப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, 1973–74-ல் திருச்சி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிக்காக எவ்வளவுதான் பணம் செலவிடப்பட்டது என்பதை அறியலாமா?



974 ஆகஸ்டு 20]

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம் :** தலைவரவர்களே, விடுதி ராமரிப்புக்காக 2,71,350 ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் விடுதி ட்டுவதற்கு என்று ஒதுக்கப்படவில்லை. இப்போதுதான் அரிசன ல வீட்டுவசதி வாரியத்தின் மூலம் விடுதி கட்டுவதற்கான திட்டம் ருக்கிறது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் லைவருடைய குறிப்பு வந்தவுடன் பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் டிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையில் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி டப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது ன்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைப் பிரச்சினைகள்

அ) 1974–75 ஆம் ஆண்டுக்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் இரகசியம் முன் கூட்டியே வெளியாகிவிட்டதாகக் கருதப்படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, செழியன் அவர்கள் ரு உரிமைப் பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். அது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

***திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் 14-ந்தேதி அன்று துணை பட்ஜெட் ஒன்றை இந்த மன்றத்தில் சமர்ப்பித்தார்கள். அந்தத் துணை பட்ஜெட்டில், அவர்கள் என்னென்ன முடிவெடுத்திருக்கின்றார்களோ அந்த முடிவுகள் அனைத்தும் இந்த மன்றத்தில் வெளியிடுவதற்கு முன்பே வெளியாகிவிட்டது என்பது என்னுடைய குற்றச்சாட்டின் ருவாகும்.

சாதாரணமாக பட்ஜெட்டுகளில் இருக்கக்கூடிய முக்கிய அம்சங்கள், ரகசியங்கள் யாவும் காப்பாற்றி வைக்கப்படக்கூடிய வையாகும். அந்த பட்ஜெட்டினுடைய ரகசியம் கொஞ்சம் வெளியே போனாலும் அரசாங்கத்திற்குப் பாதகம் ஏற்படுவதோடு அந்த பட்ஜெட்டினால் வியாபாரிகளே அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருமளவில் பாதிக்கச் செய்துவிடுவார்கள் என்பதை

[திரு. கோவை செழியன்] [1974 ஆகஸ்டு 20

அனைவரும் அறிவார்கள். அப்படி அந்த பட்ஜெட் வெளியானது நிரூபிக்கப்படுகின்றபோது, அந்த பட்ஜெட்டை சமர்ப்பிப்பதற்கு காரணமாக இருப்பவர்கள் ராஜிநாமா செய்வது மரபாகும்.

இன்றைக்கு நான் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பட்ஜெட்டினுடைய ரகசியத்தைக் காப்பாற்றி வைக்கத் தவறிவிட்டார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறேன். அதற்கு ஆதாரமாக இரண்டு ஆதாரங்களை என்னால் காட்ட முடியும். பட்ஜெட்டிலே மிக முக்கியமான கரு இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது என்பது ஒன்று. ஆனால் முதல்வர் அவர்கள் 14-ந்தேதி அன்று துணை பட்ஜெட்டிலே அந்தக் கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தைப்பற்றி ரேஸ் கிளப்பைச் சேர்ந்த திரு. எம். ஏ. சிதம்பரம் என்பவர் 13-ந்தேதி ஆகஸ்டு 1974 அன்று அவர்களுடைய அங்கத்தினர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதிலே இந்த அரசாங்கம், குறிப்பாக . . .

" If there is any uncertainty in the decision of the Government the owners ............"

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த அறிக்கையை ஆரம்பத்திலிருந்து படித்தால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு). திரு. சிதம்பரம் அவர்கள் வெளியிட்டதாகச் சொல்லும் அறிக்கையை தயவுசெய்து ஆரம்பத்திலிருந்து படித்தால் நன்றாக இருக்கும்.

**திரு. கோவை செழியன் :** பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருப்பதைப்பற்றி அந்த அறிக்கையிலே அவர்கள் குறிப்பிடுகையில் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அறிக்கையைப் படிக்கும்போது தயவுசெய்து ஆரம்பத்திலிருந்து படியுங்கள்.

**திரு. கோவை செழியன் :** என்னுடைய குற்றச்சாட்டுக்கு பொருத்தமானவற்றை நான் படிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒரு அறிக்கையைப் படிக்கும்போது அதனுடைய முழு விபரத்தையும் படிக்க வேண்டும் ஆகவே, தயவுசெய்து ஆரம்பத்திலிருந்தே படியுங்கள்.



1974 ஆகஸ்டு 20]

**திரு. கோவை செழியன் :** எனக்குத் தேவையானவற்றை அறிக்கையிலிருந்து நான் படிக்கிறேன். நீங்கள் பதில் சொல்லும் போது மற்றவைகளைச் சொல்லிக்கொள்ளுங்கள். எனக்குத் தேவையானவற்றை மட்டும் படிக்கிறேன்.

" If there is any uncertainty in the decision of the Government, **the owners and trainers will make other arrangements to race in other Centres with the result that horse racing in Madras will** automatically come to a standstill...... "

என்ற கருத்தை வலியுறுத்தி, பத்திரிகைகளுக்கும் மற்றவர்களுக்கும் வெளியிட்ட ஸ்டேட்மெண்டில் தயார் செய்திருக்கிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் அவர் இந்த அறிக்கையை வெளியிட்டது, உங்களுடைய பட்ஜெட் வெளியானதற்கு முன்னாலோ பின்னாலோ என்பது தெரியாது. அவர் தயாரித்தது 13-ந்தேதி. அதற்கான ஆதாரம் இங்கே இருக்கிறது. அதை மறுக்க முடியாது. ஏனென்றால் கையெழுத்துப் போட்டதற்கு இதையே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதில் குறிப்பிட்டிருக்கிற தேதி 13 என்று சொல்கிறீர்களா அல்லது 14 என்று சொல்கிறீர்களா ?

**திரு. கோவை செழியன் :** 13-ந்தேதி. ஆகவே, அவர்கள் பட்ஜெட்டை வெளியிட்ட பிறகு அந்த அறிக்கை வந்தாலும் முன்னாலே தயாரித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதனால்தான் செழியன் அவர்களை திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொள்கிறேன், அந்த அறிக்கையின் வாசகத்தை ஆரம்பத்திலிருந்தே படியுங்கள் என்று.

**திரு. கோவை செழியன் :** என்னுடைய வாதம் எல்லாம் எப்போது அறிக்கை தயாரிக்கப்பட்டது என்பதுதான். அவர்கள் சொல்லும்போது, " எனக்கு பட்ஜெட் ரகசியம் தெரிந்துவிட்டது ; ஆகவே எழுதுகிறேன் " என்று எந்த பைத்தியக்காரனும் எழுத மாட்டான். நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் என்பதைத்

தெரிந்து வைத்து, அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. டைப் அடிக்கிறபோது உண்மையான தேதியைப் போட்டுவிட்டார்கள். உங்கள் பட்ஜெட் வெளியானவுடன் இதை அனுப்பியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அதற்கு முன்னாலே இதைக் கூட நீங்கள் சொல்லலாம்—டைப் அடிக்கிறவர்கள் தவறாக அடித்துவிட்டார்கள் என்று சொல்லலாம்.

சென்னையில் இருந்து வருகிற 'மக்கள் குரல்' என்ற பத்திரிகையில் புதிய வரிகள் என்ற தலைப்பில் ஆகஸ்டு 9 ஆம் தேதி—நீங்கள் இன்றைக்கு என்னென்ன வரிகளைக் குறிப்பிட்டிருக்கிறீர்களோ அந்த வரிகள் அனைத்தையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

"மத்திய சர்க்காரைப் பின்பற்றி தமிழக அரசும் புதிய சில வரிவிதிப்புகளைக் கொண்டுவர உத்தேசித்திருப்பதாக நம்பகமாகத் தெரிகிறது. திங்களன்று 12-ம் தேதி ஆரம்பம் ஆகும் சட்டசபைக் கூட்டத் தொடரின்போது இதற்காகத் துணை பட்ஜெட் ஒன்று சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. செப்டம்பர் முதல் தேதியில் இருந்து தமிழ்நாட்டில் பரிபூரண மதுவிலக்கு அமுலுக்கு வருவதால் அதன்காரணமாக ஏற்படக்கூடிய 56 கோடி ரூபாய் வருமான இழப்பைச் சரிக்கட்ட தமிழக அரசு சில புதிய வரிகளை விதிக்கவும் இதற்காக துணை பட்ஜெட் ஒன்றை சட்டமன்றத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறவும் முடிவு செய்துள்ளது. இதுகுறித்து நேற்று நிதி இலாக்கா பொறுப்பை நிர்வகிக்கும் முதல்வர் கருணாநிதியும் நிதி இலாக்கா செயலாளர் எஸ். குகனும் சென்னை நகருக்கு வெளியே புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு விருந்தினர் விடுதியில் கூடி ஆலோசனை நடத்தினார்கள். டெல்லி சென்றிருந்த நிதி இலாகா செயலாளர் குகன் நேற்று காலைதான் சென்னை திரும்பினார். உடனே அவரும் கருணாநிதியும் ஆலோசனை நடத்தினார்கள்."

துணை பட்ஜெட்டில் கீழ்க்கண்ட புதிய வரிகள் விதிக்கப்படலாம் என அறியப்படுகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.



**திரு. கோவை செழியன் :** நான் பேசி முடித்துவிடுகிறேன், பின்னர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புங்கள்.

ரேடியோ, குளிர்சாதனப்பெட்டி போன்ற ஆடம்பரப் பொருள்கள் உள்ளிட்ட பல இனங்களுக்கு விற்பனை வரி விகிதம் அதிகரிப்பு, மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர், மோட்டார் கார் உள்ளிட்ட மோட்டார் வாகன வரி விகிதங்களை உயர்த்துவது, புதிய கட்டிடங்கள், மனைகள் வாங்கும்போது செலுத்தும் வரி, நிறுவனங்கள் செலுத்தும் சொத்து வரி போன்றவற்றை அதிகரிப்பது, பெட்ரோல், டீசல் போன்ற எண்ணை உபயோகத்தின் மீது வரி ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்குப் புதிய வரி விகிதங்கள் அமையும் என்றும் சினிமாவுக்கு வரி விதிக்கப்படும் என்றும் அறியப்படுகிறது. அதோடு சினிமாக் காட்சி வரி, தமாஷா வரி ஆகியவை உயர்த்தப்படும் என்றெல்லாம் சொல்லியிருப்பதோடு—நாங்களே எதிர்பார்க்காத—தியேட்டர் வரி என்ற புதிய வரியும் விதிக்கப்படலாம்—என்று அந்தப் பத்திரிகையில் முன்கூட்டியே செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இதை நாங்களே எதிர்பார்க்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சினிமா தியேட்டர்கள் மீது என்ன புதிய வரி போடப்பட்டிருக்கிறது ?

**திரு. கோவை செழியன் :** தியேட்டர்கள் மீது காட்சி வரியைப் போட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் கேட்பதற்குச் சரியாகப் பதில் சொல்ல வேண்டும். என்ன புதிய வரி போடப்பட்டிருக்கிறது ?

**திரு. கோவை செழியன் :** சினிமாத் தியேட்டர்கள் மீது முன்பு 6 ரூபாய் வரி இருந்ததால் புதியதாக நீங்கள் அதிக வரிகளைப் போட்டிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அது அதிக வரியா ? புது வரியா ?

திரு. கோவை செழியன் : புதியதாகப் போடப்பட்ட அதிக வரி 6 ரூபாய் என்ற நிலைமையைமாற்றி 200 ரூபாய், 300 ரூபாய் என்று போடுவதாக இருந்தால் அது புது வரிதான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் செழியன் அவர்கள் இந்த வரியை உயர்த்தலாம், அந்த வரியை உயர்த்தலாம் என்று சொல்லி வந்து, தியேட்டர் வரி என்ற புதிய வரியும் விதிக்கப்படலாம் என்று அழுத்திச் சொல்லி, கோடிட்டுக்காட்டி—புதிய வரி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். புதிய வரி போடப்படவில்லை. ஏற்கெனவே இருந்த காட்சி வரிதான் அதிகப்படுத்தப்பட்டது. அவ்வளவு தான்.

திரு. கோவை செழியன் : தியேட்டர்கள் மீது காட்சி வரியை எட்டு பங்கு, பத்து பங்கு போட்டிருக்கிறீர்கள் என்றால், இது புதிய வரி போலத்தான்—இதுபோல போடுவீர்கள் என்று தியேட்டர்காரர்கள் எதிர்பார்க்கவில்லை. இதுவரை தமாஷா வரியை உயர்த்தியிருக்கிறீர்களே தவிர, தியேட்டர் வரியை உயர்த்துவது இல்லை. இந்த முறை இப்படி தியேட்டர் வரியை உயர்த்துவீர்கள் என்று நாங்களே எதிர்பார்க்கவில்லை. இந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே பட்ஜெட் லீக்காகியிருக்கிறது என்று நான் உறுதியாகச் சொல்வேன். இது போல பட்ஜெட் இரகசியம் வெளியான காரணத்தினால், நீங்கள் ராஜிநாமாச் செய்துவிட்டு, வெளியேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைச் செழியன் அவர்கள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 14—8—1974 அன்று இப்பேரவையில் அளித்த துணை மானியக் கோரிக்கையில் கண்டுள்ள விவரங்கள், அதற்கு முன்பே வெளியாகிவிட்டன என்றும், ஆதலால் அது இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும் என்றும் ஒரு உரிமைப் பிரேரணை அறிக்கையை 16—8—1974 அன்று கொடுத்துள்ளார்கள்.

அதற்கு முதல் ஆதாரமாக 9—8—1974, 'மக்கள் குரல்' இல் வெளிவந்த செய்தி காட்டப்பட்டுள்ளது. 'புதிய வரிகள்' என்ற தலைப்பில் (1) ரேடியோ குளிர் சாதனப் பெட்டி போன்ற



ஆடம்பரப் பொருள்கள் மீதும், (2) மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் உள்ளிட்ட மோட்டார் வாகனங்கள் மீதும், (3) பெட்ரோல், டீசல் போன்ற எண்ணெய்கள் மீதும் உள்ள வரிகள் அதிகரிக்கப்படும் என்றும், (4) புதிய கட்டடங்கள், மனைகள் வாங்கும்போது செலுத்தும் வரி கூட்டப்படும் என்றும், (5) சினிமாக் காட்சி வரி, தமாஷா வரி ஆகியவை உயர்த்தப்படும் என்றும், (6) தியேட்டர் வரி என்ற புதிய வரியும் விதிக்கப் படலாம் என்றும் அச்செய்தித்தாளில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கூறிய அனைத்தும் துணை மானியக் கோரிக்கையில் விதிக்கப்பட வில்லை. (1) துணை மானியக் கோரிக்கையில் பல முனை விற்பனை வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. (2) மோட்டார் எண்ணெய்கள் வரியும், மோட்டார் வாகனங்கள் மீதுள்ள வரியும் கூட்டப்பட்டுள்ளன. (3) சினிமாக் காட்சி வரி விதிக்கப் பட்டுள்ளது. இது தவிர கரும்பின் மீதான கொள்முதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. எனவே, 'மக்கள் குரல்' இல் கூறப்பட்ட எல்லா வரிகளும் விதிக்கப்படவில்லை. அது மட்டுமன்று. அதில் கூறப்படாத வரிகள் சிலவும் விதிக்கப்பட்டும் உள்ளன.

உண்மைநிலை இதுவாக, துணை மானியக் கோரிக்கையில் குறிப் பிட்டுள்ள விவரங்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன என்று அச்செய்தித்தாள் செய்தியை ஆதாரமாகக் கொண்டு கூறுவது தவறாகும். 'மக்கள் குரல்' இல் வெளியிடப்பட்ட செய்தியை பொதுவாக ஊகிக்கப்பட்ட செய்தியாகத்தான் கொள்ள முடியுமே தவிர, துணை மானியக் கோரிக்கையில் உள்ள இரகசியங்கள் வெளி யிடப்பட்டதாகக் கொள்ளுவதற்கில்லை.

இதுபோன்ற ஓர் உரிமைப் பிரச்னை 3—7—1962 ஆம் ஆண்டு இப்பேரவையில் எழுப்பப்பட்டபோது "'வரி வரலாம்' அல்லது 'வரும்' என்று சொன்னதை மட்டும் வைத்துக்கொண்டு உரிமைப் பிரச்னை கொண்டுவர இயலாது என்று நான் முடிவு செய்கிறேன்" எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் 2—3—1970 அன்றும் இதுபோன்ற தீர்ப்பு இப்பேரவையில் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே 'மக்கள் குரல்'இல் வெளியிடப்பட்ட செய்தியை வைத்து பட்ஜெட் இரகசியங்கள் வெளியாயின என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் அளித்துள்ள இரண்டாவது ஆதாரம், திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்கள் கையெழுத்திட்டுள்ள ஒரு அறிக்கையாகும். இது குதிரைப் பந்தய ஒழிப்புச் சம்பந்தப்பட்டது. அந்த அறிக்கையின் நகலொன்றையும் உறுப்பினர் அவர்கள் என்னிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையில் கையெழுத்துக்குக் கீழேயுள்ள தேதி 13—8—1974 ஆ அல்லது 14—8—1974 ஆ என்று ஐயப்படும் விதத்தில் தட்டச்சு காணப்படுகிறது. உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் அந்த அறிக்கையை என்னுடைய அறையில் கொடுக்கும்போதே இந்த ஐயப்பாட்டினைத் தெரிவித்தேன். தாம் கொடுத்த உரிமைப் பிரச்சினையின் நிலைபற்றி அறிந்துகொள்ள பேரவையில் 17—8—1974 அன்று திரு. செழியன் அவர்கள் முயன்றபோதும், அந்த அறிக்கை 13—8—1974-ம் தேதி வெளியிடப்பட்டதா என்பதில் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்திருக்கிறேன்.

திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்களிடம் தொடர்புகொண்டு கேட்டதில் அவரிடம் இருந்து வந்த கடிதம் இதுதான்.

" Dear Mr. Shanmuga Subramaniam,

In pursuance to the telephonic conversation you had with me this morning, I have to state that the Press statement I issued in connection with the banning of horse racing in Madras was issued by me only on the 14th August 1974 at 3-30 p.m. The P.T.I. representative rang me up that afternoon and told me about the proposals made by the Hon'ble Chief Minister on the floor of the Assembly and wanted my reaction. It was only after that I issued the press statement. I have not issued any statement on the 13th August 1974. "

என்பதாக அந்த அறிக்கையை அவர் 14—8—1974 அன்றுதான் வெளியிட்டதாகவும், அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பேரவையில் துணை மானியக் கோரிக்கையை அளித்த பின்





அதுபற்றி பி.டி.ஐ. நிருபர் மூலமாக பிற்பகல் மூன்றரை மணி அளவில் தான் கேள்விப்பட்டதற்குப் பின்னர், அந்த அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதாகவும் 13—8—1974-ல் எந்தவித அறிக்கையையும் தாம் வெளியிடவில்லை என்றும் திட்டவட்டமாகத் தமது கடிதத்தில் அவர் கூறியுள்ளார். எனவே அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை 14-ம் தேதிதான் வெளியிட்டுள்ளார்கள். அதுவும் பேரவையில் துணை மானியக் கோரிக்கை அளிக்கப்பட்ட பிறகுதான் வெளியிட்டுள்ளார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயம் இல்லை.

மேலும் அந்த அறிக்கையின் வாசகமே

I am surprised to hear the Chief Minister's announcement என்றுதான் தொடங்குகிறது. Chief Minister's announcement என்பது தெளிவாக, பேரவையில் கனம் முதலமைச்சரவர்கள் அளித்த துணை மானியக் கோரிக்கைதான் என்பது தெளிவாகிறது. ஆதலால், இரண்டாவது ஆதாரமாகக் கொடுக்கப்பட்டுள்ள திரு. எம். ஏ. சிதம்பரம் அவர்கள் கையெழுத்திட்ட அறிக்கை 14—8—1974 அன்றுதான் வெளியிடப்பட்டது என்பது தெளிவாகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து, துணை மானியக் கோரிக்கையிலுள்ள விவரங்கள் எதுவும் 14—8—1974-க்கு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

மேலும் பட்ஜெட் விவரங்கள் வெளியாகி இருந்தாலுமே அது அவையுரிமையை மீறிய செயலாகாது. இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் இவ்வாறு பட்ஜெட் இரகசியங்கள் வெளியாகியுள்ளன என்று கூறப்பட்ட வேளைகளில் எல்லாம் அது அவையுரிமையை மீறிய செயல் ஆகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி, இந்திய நாடாளுமன்றத்திலும், நமது அவையிலும் அப்படிப்பட்ட தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை செழியன் அவர்கள் கொண்டுவந்துள்ள உரிமைப் பிரச்சினையை நான் தள்ளுபடி செய்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1974 ஆகஸ்ட் 20

இந்தச் சந்தர்ப்பத்தில் 14—8—1974 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையொன்றை, அது 13—8—1974 அன்று வெளியிடப் பட்டதாகக் கொண்டு, தேதி பதின்மூன்றா, பதினான்கா என்பதில் ஐயப்பாடு உளது எனப் பேரவைத் தலைவர் தம் அறையிலும், இந்த அவையிலுமாக இரு முறை கூறிய பிறகும், அது 13—8—1974-ல் வெளியிடப்பட்டதாகவே கூறி, அந்தத் தவறான கூற்றின் மீது உரிமைப் பிரச்சினையை இந்த அவையில் திரு. கோவை செழியன் எழுப்பியது உரிமை மீறிய செயலாகும் எனவும், உரிமைப் பிரச்னை எழுப்பும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தகைய உண்மைக்கு மாறான ஆதாரங்களை அடிப்படையாகக் கொள்வது முறையாகாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** தயவு செய்து அதைச் சொல்லாதீர்கள். நீங்கள் உங்கள் ஜட்ஜ்மெண்டைச் சொல்லிவிடுங்கள்.

### 3. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) திரு. கோவை செழியன் உண்மைக்கு மாறான தகவலை பேரவைக்கு அளித்தார் என்பது குறித்து.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். நம்முடைய சட்டமன்ற விதி 186-ன்படி நான் இப்பொழுது ஒரு பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பிலிருந்து, ஏற்கனவே இந்த மன்றத்தில் பட்ஜெட் எதுவும் லீக் ஆகவில்லை என்று தெரிந்திருந்தும், இதற்கு முன்னால், நீங்கள் எடுத்துக் கொள்வதற்கு முன்னாலே கூட, கோவை செழியன் இதைச் சட்டமன்றத்திலே எழுப்பினார்கள். இப்படி வேண்டுமென்றே, தனக்குத் தெரிந்திருந்தும் தவறான தகவலைக் கொடுத்து, அவையினுடைய நடவடிக்கைகளை திசைதிருப்புவதன் மூலம் . . . (குறுக்கீடு) இப்படி தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இது அவையினுடைய உரிமையை மீறிய செயலாகும். இதை இந்த மன்றம் ஆராய்ந்து பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்டு 20]

***திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் இந்த அவையின் முன்னாலே கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்னை பற்றி தாங்கள் கொடுத்த திர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இங்கு, அவை உரிமை மீறல் பிரச்னை மீது எந்தத் தீர்ப்பும் அளிக்க சபாநாயகர் அவர்களுக்கு உரிமையிருக்கிறது. நீங்கள் கொடுக்கின்ற தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், கொடுக்கப்பட்ட உரிமை மீறல் பிரச்னை மீது தீர்ப்பு அளிக்கும் போது, கொண்டு வந்த அவர் மீதே, சபாநாயகர் அவர்கள் இன்னொரு உரிமை மீறல் பிரச்னையைக் கிளப்புவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமை மீறிய செயல் ஆகும் என்று நான் கூறியது It is mere observation.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அந்த ஆப்சர்வேஷன் கூடக் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்கிறேன். ஆனால், நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்கின்ற நேரத்திலே கூட, ஆகஸ்டு 13-ம் தேதி எழுதியதாகக் கொடுத்தார். நான் கூட இது 13-ஆ, 14-ஆ என்று கேட்டேன். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் நீங்கள் சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. கோவை செழியன் கொண்டுவந்த உரிமை மீறியப் பிரச்னை கடிதத்தைப் பெற்ற தலைவர் அவர்கள் கருத்து சொல்கிற நேரத்தில், உறுப்பினர் 13-ம் தேதி என்று சொன்னார் என்றும், அது 13 ஆக இருக்குமா, 14 ஆக இருக்குமா என்று சந்தேகப்பட்டுக் கேட்டதாகவும், இப்பொழுது 14 என்றும் வலியுறுத்திச் சொல்கிறீர்கள். அப்படி 14 என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செழியன் கொடுத்த உடனே, இந்தத் தேதி 13 ஆகத் தெரியவில்லையென்று சொன்னேன். கொஞ்ச நேரம் கழித்துக் கூட அல்ல. அவர் உட்கார்ந்திருக்கும் பொழுதே அப்பொழுதே சொன்னேன். அந்தத் தேதியிலே டிஸ்பியூட் இருக்கிறது என்று சொன்னேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தேதியிலே ஏதாவது குழப்பம் இருந்தால் அதற்குக் காரணம் அவர் அல்ல.

[1974 ஆகஸ்டு 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர் தேதியைத் திருத்தினார் என்று நான் குற்றம் சொல்லவில்லை. அதிலே, 13 அல்ல என்பது என்னுடைய கருத்து. அவர் 13-லே வெளியிட்ட அறிக்கை என்று கருதி உரிமைப் பிரச்னை கொண்டுவந்தார்கள். 13-ம் தேதி என்பதிலே சந்தேகம் இருக்கிறது என்று நான் அப்பொழுதே சொன்னேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தீர்ப்பின் பின்பகுதி, அவரை பாதிக்கத் தக்கதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான், 13-லே சந்தேகம் இருக்கிறது என்று அறையிலே சொன்னேன்; இந்த அவையிலே சொன்னேன். இப்பவும் நான் கேட்டேன். 13-ஆ, 14-ஆ என்று கேட்டேன். இப்பவும் சொல்கிறார் 13 என்று.

**திரு. கோவை செழியன் :** அப்பொழுதும் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** 13-ஆ, 14-ஆ என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால், அந்தக் கடிதத்தை யார் எழுதினார்கள் என்று விசாரிக்கவேண்டும். அவர் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தால், அதை இந்தச் சபை எப்படி எடுத்துக் கொள்ளமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த ஸ்டேட்மெண்ட் கொடுத்தவர் அவர். அவரையே, நீங்கள் அந்தத் தேதியிலே கொடுத்தீர்களா என்று கேட்டேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** எனவேதான் இது, உரிமைப் பிரச்னை, உரிமை மீறல் குழுவின்மூலம் வரவேண்டும். அங்கு வந்து கூறவேண்டுமேயொழிய, நீங்கள் அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு இவ்வாறு செய்வது, மன்றத்திலே உள்ள ஒரு பொறுப்புள்ள உறுப்பினரை அவமதிப்பதாகும். செட்டியாரோடு துறையினுடைய செயலாளர் தொலைபேசியிலே என்ன பேசினார் என்பது எப்படித் தெரியும்? அவர் கடிதத்தைப் படித்தீர்கள். அவர் வாய்மூலம் வாக்குமூலம் கொடுக்கவேண்டும்



1974 ஆகஸ்டு 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் தவறாகக் கொண்டு வரக் கூடாது என்றுதான் ஒரு முறைக்கு 3 முறை இதிலே 13 என்று சொல்கிறீர்கள். 13 ஆகத் தெரியவில்லையென்று அறையிலே சொன்னேன், இங்கும் சொன்னேன். இப்பொழுதும் கேட்டேன், 13-லே சந்தேகம் இல்லையா, 14 அல்லவா என்றேன். அவர் 13-ம் தேதி என்று சொல்கிறார்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவந்த உறுப்பினர் மீது உரிமை மீறல் கூறுகிற பேரவைத் தலைவர் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் 14-ம் தேதி என்ற முடிவிற்கு வந்தார்கள். செட்டியாருடைய ஆதாரக் கடிதத்தை வைத்தா சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்ற பத்திரிகைகளிலே, கொடுத்திருக்கிற அறிக்கைகளை எல்லாம் பார்த்தேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, அவர் கொடுத்ததாகச் சொல்லப்படுகின்ற அந்த அறிக்கையில் 'முதலமைச்சருடைய இந்த அறிவிப்பைப் பார்த்து நான் ஆச்சரியம் அடைந்தேன்' என்றுதான் அறிக்கையை ஆரம்பித்திருக்கிறார். ஆகவே, அறிவிப்புக்குப் பிறகு ஆச்சரியம் அடைந்ததாகச் சொல்லியிருக்கிறார். 'அனவுன்ஸ்மென்ட்' செய்ததற்கு ஆச்சரியம் அடைந்ததாகச் சொல்லியிருக்கிறார். மற்ற பத்திரிகைகளுக்கும் எழுதி அனுப்பிய அறிக்கையில் 14-ம் தேதி என்றுதான் போட்டிருக்கிறார். இதற்குப் பிறகும் 13-ம் தேதி கொடுத்தார் என்று சொல்வது வேண்டுமென்றே செய்யப்படுகிற காரியம்.

**திரு. ஆலடி அருணா:** அந்த அறிக்கை 13-ம் தேதி விடப்பட்டிருப்பதாக திரு. கோவை செழியன் சொன்னார். அது 13-ஆ, 14-ஆ என்று உங்களுக்கே சந்தேகம் ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகச் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டு, அவர்கள் கடிதம் எழுதினார்கள். பிறகு, சம்பந்தப்பட்டவர்கள் தெளிவுபடுத்தித் தெரிவித்தார்கள். அவர் கடிதம் கொடுத்தவுடன், உங்களுக்கே ஐயம் தோன்றியிருக்கிறது. இது 13-ஆ, 14-ஆ என்பதில் தெளிவு இல்லை. உங்களுக்கும் மறுபடியும் ஆராயவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்டு 20

உங்களுக்கே அந்த நேரத்தில் 13 அல்ல, 14 என்றுதான் நிச்சயம் இருந்திருந்தால், இந்தப் பிரச்னையையே கொண்டுவராமல் இருந்திருக்கலாம். சிதம்பரம் செட்டியாரிடத்திலே கேட்டு, உங்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது( உங்களுக்கு ஏற்பட்ட அந்தச் சந்தேகம் கோவை செழியனுக்கு வந்திருக்கக் கூடாதா? அந்தச் சந்தேகத்தினுடைய அடிப்படையில் அவர்'' செயல்பட்டால் என்ன தவறாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்தச் சந்தேகத்தை நான் எழுப்பிய நேரத்திலே அவர் சந்தேகப்படவில்லை. திரு. செழியனுக்கு அந்தச் சந்தேகமே உண்டாகவில்லை.

**திரு. ஆலடி அருணா :** அவர் வாதப்படி அது'13. உங்களுடைய வாதப்படி அது 13-ஆ, அல்லது 14-ஆ என்பது சந்தேகத்திற்குரியது. உங்களுக்கே சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. தெளிவில்லை. ஆகவே, உங்களுடைய சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள பிறகு விளக்கம் கேட்டு, 14 என்று தெரிந்தபிறகு, அவர் உரிமை மீறியிருக்கிறார் என்று கூறுவது நியாயம்தானா என்பதைப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் 13-ந் தேதி கொடுக்கப்பட்டதாக நம்பி, அதன்மூலமாக, வரவு-செலவுத் துணை மானியக் கோரிக்கையினுடைய செய்திகள் வெளிவந்துவிட்டதாகச் சொன்னார்கள். அது 13-ந் தேதியா, அல்லது 14-ந் தேதியா என்று பேரவைத் தலைவரவர்கள் கேட்டார்கள். யாரிடத்திலிருந்து அந்தக் கடிதம் வந்ததோ, அவர்களையே, பேரவைத் தலைவர், தனக்கு எற்பட்ட சந்தேகத்தைப் போக்கிக்கொள்ள, 13-ந் தேதியா, அல்லது 14-ந் தேதியா என்று அந்தச் சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் 13-ந் தேதியா, அல்லது 14-ந் தேதியா என்று யார் அவரிடத்திலே கொடுத்தார்களோ, சிதம்பரம் செட்டியாரிடத்திலேயே விசாரித்திருப்பார்களானால், அவர் கோவை செழியனுக்கும் தெரிவித்திருப்பார். 3½ மணிக்குத்தான் தெரிந்தது என்று சொல்லி, அதன்மூலம் கோவை



1974 ஆகஸ்டு 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

செழியன் உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வராமல் இருந்திருப்பார். கோவை செழியன் 13 தான் என்று அறிக்கைவிட்ட சிதம்பரம் செட்டியாரைக் கேட்காமலேயே சிதம்பரம் செட்டியார் 14 என்று சொல்கிறார்—13 என்று வாதாடுகிறார். சிதம்பரம் செட்டியாரோ, 14-ந் தேதிதான் எழுதினேன் என்றும், அதைப் பற்றி பத்திரிகைகளுக்கு வெளியிட்டேன் என்றும் எழுதிய சிதம்பரம் செட்டியாருடைய கடிதத்தைப் படித்துக் காட்டினார்கள் பேரவைத் தலைவரவர்கள். ஆகவேதான் இதைக் கூறவேண்டியிருக்கிறது. பொறுப்புள்ள உறுப்பினராக இருக்கிற திரு. கோவை செழியன் அவர்களே, அவரிடத்திலே அப்பொழுதே கேட்டிருப்பார்களானால் 14 என்று சொல்லியிருப்பார். 14-ந் தேதி என்பதில் தெளிவு ஏற்பட்டிருக்கும். சொல்லியிருந்தால், இதைக் கொண்டு வந்திருக்க மாட்டார்.

(திரு. ஆலடி அருணா எழுந்தார்)

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏதோ பட்ஜெட் ரகசியம், பாண்டிச்சேரியிலே ஆயிற்றே, அதைப் போல இங்கேயும் கற்பனை செய்துகொண்டு ஏதாவது சட்டசபையிலே செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். 14-ஆம் தேதி துணை மானியக் கோரிக்கை அளிக்கப்பட்ட பிறகு திரு. சிதம்பரம் அந்த அறிக்கையில் 14-ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருப்பது கண்டு திடுக்கிட்டேன், அதிர்ச்சியுற்றேன் என்று கூறியிருக்கிறார். ஆகவே 13-ஆம் தேதி எழுதியதாக சொல்லி யார் யாரோ எழுதிய கடிதத்தை வைத்துக்கொண்டு அவர்களுடைய கட்சியை வளர்த்துக்கொள்வதற்காக ஸ்டண்ட் செய்வதற்காகப் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE :** Mr. Speaker, Sir, without trying to instil heat into the discussion, I just want to elucidate one particular point by way of a point of order. In Rule 189 of the Assembly Rules, it is clearly said that ' if the Speaker holds that

[Dr. H. V. Hande] *[1974 ஆகஸ்டு 20*

*a prima facie* case existe, he may allow a motion to be made...... " Now, the technical point on which I want clarification from the Speaker is this. He has in his statement made mentiou that the motion brought forward by the hon. Member Mr. Chairman is incorrect and therefore he is also directly or indirectly liable and he comes within the purview of privilege.

'உரிமைக்குரிய செயலாகும்'

My only request to the Hon. Speaker is this. Many hon. Members bring forward privilege motions before the House and they are given to the Speaker. If every time the Hon. Speaker were to question the *bona fide* intention, it will be difficult. Only we bring before the House our apprehensions which are genuine. In this particular context, there are two paragraphs. There is confusion—even for the Hon. Chief Minister I say this. The second paragraph in the letter is entirely different from the first paragraph. The first paragraph mentions about the Chief Minister's announcement. In the second paragraph it is said ' Other arrangements............

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *இப்பொழுது அந்த அறிக்கை 13-ஆம் தேதியில் விடப்பட்டதா இல்லையா என்பதற்கு நீங்கள் வரவேண்டாம். உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதைச் சொல்லுங்கள்.*

DR. H. V. HANDE : My point of order is this. I am trying to raise a very very valid point and the Speaker will uphold, my point of order. Because the second paragraph is different. The substance of it gives an indication that this particular idea might have been given earlier (Interruption). Kindly allow me one minute. ' other arrangements will have to be made ; horse racing in Madras will automatically come to a standstill '...........

*நீங்கள் சொல்கிற தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், ஆனால் மாலனபடி இன்டன்ஷன் திரு. செழியனுக்கு நீங்கள் ஏற்படுத்தக்கூடாது.*

The question is yourself questioned Mr. Chidambaram and you have his answer. Based on it..............



*. 1974 ஆகஸ்டு 20]*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *திரு. சிதம்பரத்தைக் கேட்கக் கூடிய நிலைமை உண்டானதற்குக் காரணம், திரு. செழியன் கொடுத்த அந்த நேரத்திலேயே நான் சொன்னேன், நீங்கள் 13-ஆம் தேதி என்று சொல்கிறீர்கள், ஆனால் 13 ஆகத் தெரியவில்லை, திருத்தப்பட்டதுபோல் சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னேன். உறுப்பினர் அதற்குப் பிறகு இந்த அவையிலே நான் கொடுத்த உரிமைப் பிரச்னை என்ன ஆயிற்று என்று கேட்டபோது 13-ஆம் தேதியா 14-ஆம் தேதியா என்று பார்த்துச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறேன்.*

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** *நான் சொல்வதைக் கொஞ்சம் எல்லோரும் கவனிக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கவனம் செலுத்தவேண்டும். திரு. சிதம்பரம் அவர்களிடத்திலே லெட்டர் வாங்கினீர்கள். திரு. செழியனுக்கு அவருடைய கருத்தைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது.*

It is his opinion; his judgment and his *bona fide* intention....... *அவருக்கு 13-ஆம் தேதி என்று தெரிந்திருக்கிறது, எனக்கும் அப்படித்தான் தெரிகிறது.*

If you ask an outsider, he will only defend himself ; Will he allow himself to be the subject-matter of a privilege of the House? So, an hon. Member of this House will his *bone fide* intention on one side and the reply of somebody else who is not a member of the House is on the other.

*நேச்சுரலாக அந்தப் பதிலைத்தான் அதைக் கொடுக்கும்போது யாரும் சொல்வார்கள், அப்படித்தான் நினைக்கிறேன் என்றுதான் சொல்வார்கள். வெளியே இருப்பவர் சொல்வதற்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுத்து உறுப்பினருடைய ஆனரபிள் நிலையை, போனபைடியை தள்ளிவிட்டு நீங்கள் மாலபைடி பண்ணுகிறீர்கள். இப்படி நீங்கள் பண்ணுவீர்களானால் யாரும் இதுபோன்ற உரிமைப் பிரச்னையைக் கொண்டுவரமுடியாத நிலைமை ஏற்படும். வெளியே ஒருவரைப்பற்றிய பிரச்னை வருகிறது என்றால், அவர் அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், மெம்பர் வெர்ஸஸ் வெளியே ஒருவர் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டால், மெம்பருக்கு எப்படி பாதுகாப்பு இருக்கும்?*

[1974 ஆகஸ்டு 20

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : மெம்பர் தவறான ஒரு கருத்தைச் சொன்னால் அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்க உரிமை வேண்டுமென்று சொல்ல முடியாது. வெளியே இருப்பவர் சொல்வதையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தள்ளிவிடவும் முடியாது.

*டாக்டர் எச். வி. ஹாண்டே* : நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தக் கமிட்டியிலே சிதம்பரம் அவர்களைக் கூப்பிட்டு விசாரணை செய்யுங்கள் அப்போதுதான் தெரியும்.

In the interests of all members, I say this.
அதைத்தான் நான் சொல்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : நான் சொன்னதெல்லாம் இப்படி கொண்டுவருவது பிரிவ்லேஜ் நிகழ்ச்சியாகும், என்று ஆப்சர்வேஷன்தான் கொடுத்திருக்கிறேன்.

*திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்* : ஸ்பீக்கர் சார். இந்த விஷயத்திலே முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமா செய்யவேண்டுமென்று உறுப்பினர் குற்றஞ்சாட்டினார்கள். அப்படி குற்றஞ் சாட்டுவதாக இருந்தால் அந்தப் பிரச்னையினுடைய முழுத் தன்மையை உணர்ந்து சொல்லக்கூடிய முழுப் பொறுப்பும் அவருக்கு உண்டு. அப்படிச் செய்யாமல் ராஜிநாமா செய்ய வேண்டுமென்று கருதினால், அது அசிங்கமான விஷயமாக இருக்கும். சபாநாயகர் அவர்கள் சந்தேகமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். உடனே சபாநாயகர் கூறுகிறார்களே, அதை விசாரித்துச் சொல்வோம் என்ற பொறுப்பு அவருக்கு உண்டு. சபாநாயகர் விசாரித்தது சபாநாயகருக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்குவதற்காகத்தானே தவிர, இந்தச் சட்டசபைக்கு உண்மையான குற்றமல்ல என்று தெரிந்து சொல்வதற்கு அவர்கள் விசாரித்திருக்கிறார்களே தவிர, திரு. கோவை செழியனுக்காகத் தெரிந்துகொள்ளவில்லை. திரு. ஆலடி அருணா, சந்தேகப்பட்டார்கள் என்று சொன்னார்கள், அசெம்பிளிக்கு உண்மை நிலையைத் தெரிந்து சொல்வதற்கு சபாநாயகருக்குப் பொறுப்பு இருக்கிறது, அந்த முறையிலே செய்திருக்கிறார்கள். . .



1974 ஆகஸ்டு 20]

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள், பிரசங்கம் பண்ணுகிறீர்களே.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு அளித்துவிட்டீர்கள், தாங்கள் தீர்ப்பு அளித்த பிறகு மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லையென்று சொல்லி இத்தோடு இந்தப் பிரச்னையை முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : இந்தப் பிரச்னை இதோடு முடிகிறது. அடுத்து துணை நிதி நிலை அறிக்கைமீது விவாதம். .

**(ஆ) பாண்டிச்சேரி பட்ஜெட் இரகசியம் வெளியானதாகக் கூறப்பட்டது குறித்து**

*திரு. க. உரொ. எட்மண்ட்* : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், வேறு பிரச்னை, இது அல்ல. . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : ஒரு மணிக்குள் இன்றைக்கு விவாதத்தை முடித்து வாக்கெடுப்பு நடத்தவேண்டும். பெயர்களைக் கொடுத்துவிட்டு பிறகு பேசுவதற்கு நேரம் இல்லையென்று சொல்லக்கூடாது.

*திரு. க. உரொ. எட்மண்ட்* : Sir, I am on a different point of order.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாண்டிச்சேரி நம்முடைய சட்டமன்றத்திலே. . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : அது வேண்டாம், பழைய கதைக்கே போகிறீர்கள் . . . .

*திரு. க. உரொ. எட்மண்ட்* : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : பழைய விவாதத்தை பற்றி என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? அது வேண்டாம்.

THIRU G. R. EDMUND : No, this is something that is concerned with the Hon. Chief Minister's statement.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது அதையொட்டி வந்ததுதான்.

[1974 ஆகஸ்டு 20

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இல்லை. திரு. கோவை செழியன் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்னைபற்றியோ அதற்கு நீங்கள் அளித்த தீர்ப்பு பற்றியோ அல்ல. முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையின் மீது தன் கருத்தைச் சொல்லும்போது பாண்டிச்சேரியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும்போது பட்ஜெட் வெளியானது என்று சொன்னார்கள். ஆனால் பாண்டிச்சேரி ஆளுநர் அவர்களே பட்ஜெட் வெளியாகவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஆளுநர் அவர்களுடைய கருத்தை மீறி முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டசபையில் சொல்லியிருப்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தனிப்பட்ட களங்கத்தைச் சுமத்துவதாக இருக்கும். அப்படி அவர்கள் இங்கே பேசியது முறைதானா, முறை யில்லையென்றால், சட்டசபை நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கி விட வேண்டும். ஆளுநர் சொன்ன கருத்தை மீறி ஒரு தவறான கருத்தை இந்தச் சட்டசபையிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது தவறான கருத்து மட்டுமல்ல, ஆட்சிப் பொறுப்பை நடத்திய ஒரு கட்சியின்மீது சேற்றை வாரி வீசுவதாக இருக்கிறது, புழுதியை வாரி வீசுவதாக இருக்கிறது. எனவே அதைச் சபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அதற்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னதைப்போல் புதுவை ஆளுநர் அவர்கள் அறிவித்திருப்பதைப்பற்றி எனக்கு எந்தத் தகவலும் இல்லை. ஒருவேளை அப்படிக் கொடுத்திருக்கலாம். (குறுக்கீடு) அதை நான் பார்க்கவில்லை. அவர் சொன்னது எனக்குத் தெரியாது. ஆனால் பட்ஜெட் திருடப்பட்டு விட்டது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே பலமான பிரச்சாரத்தைச் செய்திருக்கிறது. அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மந்திரிசபை சமர்ப்பித்த பட்ஜெட் திருடப்பட்டு விட்டது என்று ஏற்கனவே உங்கள் கட்சியாலேயே சொல்லப்பட்டிருக்கிறது.



1974 ஆகஸ்டு 20]

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் எழுதியிருக்கிறார்களா இல்லையா என்று தெரியாது என்று கூறினார்கள். அதற்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய பொதுச் செயலாளர் அவர்கள் ஆளுநர் அவர்களுக்கு எழுதினார்கள். அவர்கள் சார்பாக தலைமைக் கழகத்திற்கு சீஃப் செக்ரட்டரி அவர்கள் லெட்டர் எழுதியிருக்கிறார்கள். அந்த லெட்டர் எங்கள் கையில் இருக்கிறது. நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ராங்க் இன்பர்மேஷன், எனக்குத் தெரியாது என்று சொன்னதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உங்களுக்குக் கடிதம் வந்தால் எனக்கு தெரிய வேண்டுமென்ற அவசியமில்லை. நான் சொல்வது, ஆளுநர் சொல்லியிருக்கலாம், ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த புதுவையிலே இருப்பவர்களும், சென்னையிலே இருப்பவர்களும், பட்ஜெட்டைத் திருடி விட்டார்கள் என்று அவர்களே பிரசாரம் செய்தார்கள். பத்திரிகையிலும் அது வந்திருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எப்படி சிதம்பரத்திடமிருந்து லெட்டர் வந்திருக்கிறது என்று சொன்னார்களோ, அதைவிட முக்கியமானவரிடமிருந்து லெட்டர் வந்திருக்கிறது.

## (4) 1974—75-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவு குறித்து முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கின்ற 1974—75-ம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீட்டின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அரசியல் சட்டம் பிரிவு 205-ன் கீழ் துணை மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுகிறது. அரசியல் சட்டம் 205-வது பிரிவின் அடிப்படையில் ஏற்கனவே இருக்கின்ற நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் ஒரு பணிக்குப் போதவில்லை என்ற கட்டத்தில் வரும்போது துணை மதிப்பீடு அடிப்படையில் கூடுதல்

*[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 ஆகஸ்டு 20*

பணம் கோரலாம். அதோடு நியூ சர்வீஸ் என்ற தலைப்பிலே கூடுதல் பணம் கேட்க வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கின்ற துணை மதிப்பீட்டைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே! ஏற்கனவே இந்த மன்றத்தில் இந்த அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டை இங்கே சமர்ப்பிக்கின்றபொழுது இந்த அரசுக்கு ஏற்கனவே ஒதுக்கிய பணத்தில் எந்த அளவிற்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்ற ஒரு அறிக்கையைக்கூட சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் இன்றையதினம் அம்மாதிரி ஒரு கணக்கு இல்லாத முறையில் மேலும் பணம் வேண்டுமென்று கேட்பது முறைகேடாக இருக்கிறது.

ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒதுக்கிய பணத்தில் சில வேலைகளை அரசு இன்னும் ஆரம்பிக்கக்கூட இல்லை, அரசாங்கத்தின் அனுமதிகூட வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கூட இருக்கிறது. குறிப்பாக ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பிரதேசத்தில் பல ஆண்டுகளாகக் காத்திருந்த ஒரு பாலத்தைக் கட்டித் தருவதாக வாக்களித்தார்கள். மாண்புமிகு முதல்மைச்சரவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் அந்தப் பாலத்தின் கல்நாட்டு விழாவிற்கு வர இருக்கிறோம் என்ற வாக்குறுதியையும் அளித்தார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அதற்காக டெண்டரெல்லாம் கூப்பிடச் சொல்லியிருக்கிறோம். டெண்டர் செட்டில் ஆனதற்குப் பிறகு அதைப்பற்றி யோசித்து வரலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நான் கூறுவதெல்லாம், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தங்களுடைய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நெல்லை மாவட்டம் வரையில் வந்து அதுவரையில் எல்லாக் கல்நாட்டு விழாக்கள், திறப்பு விழாக்களை நடத்துகிறார்களே தவிர, குமரி மாவட்டத்திற்கு வந்து



*1974 ஆகஸ்டு 20]*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இப்பொழுது நடந்த கலெக்டர் மாநாட்டிற்கு வந்த கலெக்டரிடம் 4-ஆம் தேதி, 9-ஆம் தேதி இரண்டு தேதிகளில் தியாகிகளுக்குப் பாராட்டு விழா நடத்துவதைப்பற்றிக்கூடச் சொல்லப்பட்டது. ஆனால் பெருமழை பெய்ததன் காரணமாக, வர வேண்டாமென்று கன்னியாகுமரி மாவட்டத்து நண்பர்களே சொல்லிவிட்டார்கள். விரைவிலே, மழை ஓய்ந்தபிறகு வருவதாக இருக்கிறேன்.

**திரு. ஜே ஜேம்ஸ்:** நானும் அதைக் கேள்விப்பட்டேன். வர விருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் நிகழ்ச்சி நிரலைப் பார்க்கும்பொழுது இம்மாதிரி கல்நாட்டு விழா இடம்பெறவில்லை என்பதைக்கண்டு எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஆகவே, அங்கு வரும்பொழுது இந்தப் பாலத்திற்கான கல்நாட்டு விழாவையும் முதலமைச்சரவர்கள் மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் துணை மதிப்பீட்டைப் பார்க்கும்பொழுது ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவும், 14 கோடி ரூபாய்க்கு வரியும் வரும் முறையில் காணப்படுகிறது. உண்மையிலேயே பட்ஜெட் என்றால் ஏறத்தாழ செலவும் வரவும் ஒத்திருக்க வேண்டும். துண்டு விழுந்தாலும் சரி, சர்ப்ளஸ் ஆக இருந்தாலும் சிறு வித்தியாசம்தான் இருக்க வேண்டும். ஆனால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருந்த மானியக் கோரிக்கைகளைப் பார்க்கும்பொழுது இரண்டிற்கும் எந்தவிதமான ஒற்றுமையும் காணப்படவில்லை என்று நான் கருதுகிறேன். இதைத் துணை மதிப்பீடு என்று கூறுவதற்குப் பதிலாக, ஏதோ இந்த அரசாங்கத்திற்குப் பணம் கூடுதலாகத் தேவைப்படுகிறது, அதற்காகப் புதிய வரிகளை விதிக்கும் அவசியம் ஏற்படுகிறது, ஆகவே வரி விதிப்பதற்காக இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் முறைதான் இது என்று நான் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக மதுவிலக்கைக் கொண்டுவருவதால் அரசுக்கு 56 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. அந்த இழப்பைச் சரிக்கட்டுவதற்காக பல புதிய வரிகளை இங்கே சுமத்தி இருக்கிறார்கள். திரைப்படக் காட்சிகளுக்குச் சுமத்தியிருக்கும் வரியைப் பார்க்கும்பொழுது இதுவரையிலே ஷோ ஒன்றுக்கு [illegible] வரி 12½ ரூபாயாக இருந்ததை ஒரு கணக்கும் இல்லாமல் 150 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 ஆகஸ்டு 20

என்றால், நிச்சயமாக இது மக்களால் விரும்பக் கூடியது அல்ல,
வரவேற்கக் கூடியது அல்ல என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். இந்த வரி விதிப்பின் காரணமாகக் கழிந்த பல
நாட்களாக திரைப்படங்கள் ஓடாமல் இந்த மாநிலத்தில்
என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை அறிவோம்.
இன்றைய தினம் செய்தித் தாள்களைப் பார்க்கும்பொழுது ஏதோ
ஒருமுறையில் சமரசம் ஏற்பட இருப்பதைப் பார்க்க நேரிடுகிறது.
ஆகவே, இந்த அளவிற்கு அரசாங்கத்திற்கும் திரைப்பட அதிபர்
களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பேசித் தீர்த்தாக
வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் துணை மதிப்பீட்டைப் பார்க்கும்பொழுது
தாழ்த்தப்பட்ட மக்களின் இலாக்காவிற்காகப் பணம் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. இதுவரையிலே தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்
பட்டோருக்கும் சேர்ந்து ஒன்றாக இருந்த இலாக்காவைப் பிரித்து
இரண்டாகப் பிரித்து தனி அதிகாரிகளை நியமிக்கும் முறையில்
செலவு காட்டப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அந்த
அதிகாரிகளை நியமிப்பதற்காகப் பணம் செலவிடப்படுகிறதே தவிர
தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு அர
நிச்சயமாக எதுவும் செய்யவில்லை என்பதை முதலமைச்சரவர்கள்
நன்கு உணர்வார்கள்.

கழிந்த சில நாட்களுக்கு முன்னால் முதலமைச்சரவர்களுக்கும்
முன்பு அரிசன நல இலாக்கா அமைச்சராக இருந்தவர்க்கும்
ஏற்பட்ட சண்டை சச்சரவுகளைப் பார்க்கும்பொழுது, நிச்சயமாக
இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போதிய அளவில்
காரியங்களைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்பு
கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஒரு
கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல்வேறு
இடங்களில் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் காலனி
களுக்குப் போதிய ரோடு வசதிகள் இல்லாமல் இருக்கிறது.
ஆங்காங்கு உள்ள மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு
சொந்தமான நிலங்களாக இருப்பதால் தாழ்த்தப்பட்ட மக்கள்
வசிக்கும் காலனிகளுக்குப் போதுமான ரோடுகள் இல்லாமலிருக்



1974 ஆகஸ்டு 20] [திரு. ஜே. ஜேம்ஸ்]

கிறது. அதற்காக இந்த அரசாங்கம் போதுமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அரசாங்கம் இதற்கான நில ஆர்ஜிதத்தைச் செய்யும்பொழுது மற்றவர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுவதால் காலதாமதம் ஆகிறது என்று கூறலாம். ஆனால் டி.ஐ.ஆர். சட்டத்தின்படி உடனடியாக நில ஆர்ஜிதம் செய்ய வழிவகை இருக்கிறது. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறைந்தபட்சம் போக்கு வரத்திற்கான ரோடுகளை அமைத்துக் கொடுக்க இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய பகுதியில் கழிந்த சில மாதங்களுக்கு முன்னால்; இரண்டு கிராமங்களில் நூற்றாண்டுக்காலமாக அரிசன மக்கள் சென்று கொண்டிருந்த ரோட்டை மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மூடிவிட்டார்கள். அதனால் அங்குள்ள அரிசன மக்கள் வீடுகளுக்குப் போகக்கூட வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு இதுவரையில் அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. அதற்கான மனுக்களை மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு, வட ஆற்காடு, திருச்சி, சேலம், தர்மபுரி, கோவை போன்ற மாவட்டங்களுக்குத்தான் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதிலே கூட பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. குடிநீர் வழங்குவதிலே மாண்புமிகு முதலமைச்சர் என் பாரபட்சம் காட்ட வேண்டும்? குடிநீர் தென் மாவட்டங்களுக்குத் தேவையில்லையா? குறிப்பாக, இராம நாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங் களில் குடி தண்ணீர்ப் பிரச்னை அதிகமாக இருக்கிறது. கன்னியா குமரி மாவட்டத்திலே கருங்கல், புதுக்கடை போன்ற பகுதி களிலே கோடை காலத்தில் ஒரு குடம் தண்ணீர் எட்டணா கொடுத்து வாங்கிச் சாப்பிடக்கூடிய நிலை இருக்கிறது. அந்தப் பிரதேசங்களில் இந்தத் திட்டம் இல்லையென்பதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்து இலாக்காவுக்காக நிதி உதவிக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் எக்ஸ்பிரஸ் பஸ் ஸ்டாண்டு ஒன்று அமைக்க வழிவகைச் செய்யப்பட்டிருக்கிறது. போக்குவரத்து இலாகா பல்வேறு கழகங்களாகச் செயல்படுகிற நிலையில் தொழிலாளர்களுக்கு நேர்மையாக நீதி வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை அரசாங்கப் போக்குவரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்குப் போக்குவரத்துக் கழகத்தில் அவர்கள் ஏற்கனவே பெற்றுவந்த பல சலுகைகள் மறுக்கப்படுகின்றன. குறிப்பாக, போனஸ் கொடுப்பதிலே ஏற்பட்ட தாவாவில் கழிந்த ஆண்டு வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் போனஸ் டிஸ்ப்யூட்டில் வேலைநிறுத்தம் நடைபெறாத முறையில் அனைத்து தொழிலாளர் சங்கங்களை அழைத்துப் பேசி தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு பாசனத் திட்டங்களுக்காக 12 திட்டங்களுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பட்டணங்கால் பிரதேசத்தில் மழை இல்லாத காரணத்தால் பயிர் வைக்கவில்லை. அந்தப் பகுதியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியை வறட்சிப் பிரதேசம் என்று பிரகடனம் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு ரேஷன் கார்டு வழங்கவேண்டும். 25 சென்ட் நிலம் உள்ளவர்களுக்கு ரேஷன் கார்டு கிடையாது என்ற நிலை இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு வறட்சி நிலை ஏற்பட்டுவிட்டபடியால் அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடியவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்க உணவு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நிலங்களுக்கு வரி வஜா செய்து கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கும், குமரி மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பதற்காகப் போராடிய தியாகிகளுக்கும் பென்ஷன் கொடுக்க துணை மதிப்பீட்டில் வகை செய்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மூன்று மாதம் வரையில் சிறையில் இருந்தால்





தான் பென்ஷன் கிடைக்கும் என்று வரையறுத்திருக்கிறார்கள். குமரி மாவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பலர் மூன்று மாதம் சிறையில் இருந்ததற்கு ரெக்கார்டு இல்லாமல் இருக்கிறார்கள். அன்றைய ஆட்சியிலிருந்த போலீசார் பல பேர்களை லாக்கப்பில் வைத்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். ஆனால் ரெக்கார்டு இல்லாமலே வெளியே அனுப்பியிருக்கிறார்கள். அதனால் பல குடும்பங்கள் வாழ்விழந்து இருக்கிறார்கள். உண்மையில் தியாகம் செய்திருந்தும் ரெக்கார்டு இல்லாதபோனாலும் அந்தத் தியாகிகள் அனைவருக்கும் பென்ஷன் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கை ரத்து செய்யும்போது மிகவும் மன வேதனையோடு புண்பட்ட நிலையில் மதுவிலக்கை ரத்துச் செய்ததாகவும், இப்போது திரும்பவும் மதுவிலக்கைக் கொண்டு வருவதாகவும் அறிக்கையில் காணப்படுகிறது. 1971 ஆம் ஆண்டு இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கை ஒத்தி வைத்தபோது நாங்கள் வன்மையாக எதிர்த்தோம். அன்று நாங்கள் கூறியதைக் கேட்டிருந்தால் இந்த அரசாங்கத்திற்கு இத்தனை தொல்லைகள் நிச்சயமாக வந்திருக்காது. அன்று அவர்கள் கூறினார்கள்-- தமிழகம் ஏதோ நெருப்பு வளையத்திற்குள் மாட்டிக்கொண்ட கற்பூரம் போல் இருந்ததாகவும், ஆகவே, தமிழகத்தைக் காப்பாற்ற மதுவிலக்கை ஒத்தி வைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்றும் கூறினார்கள். அன்று இருந்த கற்பூரமானது கழிந்த மூன்று ஆண்டுகளில் அழிக்கப்பட்டு தமிழகமே சிதைந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணருவார்கள். அதுவரை குடி என்றால் என்னவென்று தெரியாத இளைஞர்கள், மதுவின் பக்கம் போகாத குடும்பங்கள் எல்லாம் இதிலே சிக்கி இன்று குடும்பத்திற்கு ஒரு நபர் பாக்கியில்லாமல் அனைவரும் குடிக்கப் பழகிவிட்டார்கள். அப்படிப் பழகிவிட்டு இன்று அந்தக் குடிப் பழக்கத்தை நிறுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இது தமிழ்நாட்டிலுள்ள 4½ கோடி மக்களையும் இழிவுபடுத்தும் பேச்சாகும். குடும்பத்தில் ஒருவர் பாக்கி இல்லாமல் குடிக்கப் பழகுகிறார்கள் என்று

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 20

சொல்லுவது நல்லது அல்ல. 1971-ல் மதுவிலக்கு ஒத்தி வைக்கப் படுவதற்கு முன்பே இலட்சக்கணக்கானவர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சி வந்தார்கள் என்பது தெரிந்த விஷயம். ஆகவே, யாருக்கும் தெரியாத விஷயம் அல்ல இது.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** சமுதாயத்தில் அன்றைக்கு இருந்த நிலையும் இன்று இருக்கும் நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக் கிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல.

இந்தக் குடிப் பழக்கத்தை இந்தச் சமுதாயத்திற்குக் கொண்டு வந்தது இளைஞர்களைப் பாழாக்கிய குற்றத்தை நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மது விலக்கை ஒத்தி வைக்காமல் இருந்திருந்தால், இலட்சக்கணக்கான மக்களுக்கு குடி என்றால் என்ன என்றே தெரிந்திருக்க மாட்டார்கள். மதுவிலக்கை ஒத்தி வைத்ததால் ஏற்பட்ட தீமையை முதலமைச்சர் அவர்கள் நன்கு உணருவார்கள். இனியாகிலும் மதுவிலக்கைப் பூரணமாக அமல் நடத்தவேண்டும்.

இன்றிருக்கும் பர்மிட் வழங்கும் முறையில்கூட அதிக கவனம் இருக்க வேண்டும். பர்மிட் வாங்கி பிராந்தி குடித்தால் தான் வியாதி தீரும் என்ற நிலை நிச்சயமாக இல்லை. அதற்காக எந்த டாக்டரும் சர்டிபிகேட் கொடுக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அரசு யாருக்கும் பர்மிட் இல்லை என்று சொன்னால் கூட தவறில்லை. அப்படி யாருக்காவது கொடுக்க வேண்டு மென்று விரும்பினால் அந்த எண்ணிக்கையை அதிகமாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பர்மிட் வழங்குவதில் வேறு என்ன விதிமுறைகளைச் செய்யலாம் என்று சொன்னால் நல்லது. கேள்வி கேட்பதாக எடுத்துக் கொள்ளக்கூடாது கண்டிப்பான விதிமுறைகளை வகுக்க வேண்டுமென்ற எண்ணத் துடன்தான் கேட்கிறேன். அப்படிப்பட்ட அரிய யோசனைகளைச் சொன்னால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நான் கூறுவது—சர்டிபிகேட் முறை என்று சொன்னால் சாதாரணமாக டாக்டர்களுக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தினால் சர்டிபிகேட் வாங்குவது எளிதாக வாங்குகிற நிலை



1974 ஆகஸ்ட் 20] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நாட்டில் இருக்கிறது. (டாக்டர் ச. மு. பழனியப்பன்—குறுக்கீடு) இந்த விவகாரத்தில் நான் புகுந்தால் பல்வேறு திசைகளில் இருந்து அட்டாக் வருகிறது.

DR. H. V. HANDE: As far as possible, it is better to refrain from passing stringent remarks against Doctors or Lawyers, so that they may not feel hurt.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** உண்மையிலேயே ஜாக்கிரதையாகக் கூறினேன். எந்த டாக்டரையும் குறைத்துக் கூற வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. பொதுவாகச் சில காரியங்களைச் சொன் னேனே தவிர வேறல்ல. இந்த விவகாரத்தில் அரசு அதிக அக்கறை எடுத்து எந்த அளவுக்குக் குடிப்பழக்கத்தைக் குறைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையில் பர்மிட் வழங்குவதில் தாராளமாக இல்லாமல் குறைத்து வழங்க அரசு கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐம்பத்தாறு கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று அறிக்கையில் காணப்படுகிறது. 1966 ஆம் ஆண்டு வரையிலும் இந்த 56 கோடி ரூபாய் அரசுக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ராஜாஜி அவர்கள் மதுவிலக்கைக் கொண்டு வந்தபோது ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்ட சேல்ஸ் டாக்சைக் கொண்டுவந்தார்கள். இன்றையதினம் சேல்ஸ் டாக்ஸ் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமது மாநிலத்தின் வருவாயில் நான்கில் ஒரு பகுதி சேல்ஸ் டாக்ஸ் மூலமாக வருகிறது. 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருகிறது. இதற்கு மேல் மதுவிலக்கில் ஏற்படக்கூடிய இழப்பைச் சரிக்கட்ட வரி விதிக்கத் தேவையில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

இன்றையதினம் எங்கள் மாவட்டத்தில் பொதுவாக தனியார் பள்ளிகளில் சில முறைகேடுகள் இருக்கின்றன. அதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மலையாளிகளின் நிர்வாகத்தில் இருக்கிற அந்தப் பள்ளிக்கூடங்களில் தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 ஆகஸ்ட் 20

டதிலாக தங்களுக்கு வேண்டிய மலையாள ஆசிரியர்களை நியமிப்பதால் தமிழ் படிக்கக்கூடிய தமிழ் மாணவர்களுக்கு வசதிகள் குறைந்துகொண்டேயிருக்கின்றன. ஆகவே, சர்க்கார் இதில் கவனம் செலுத்தி தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய இடத்தில் தமிழ் ஆசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும். அதற்குத் தேவையான அளவிற்கு தமிழ் ஆசிரியர்கள் அந்த மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழர் படை என்ற ஒரு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஒருவேளை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே இருக்கிற அரசியல் என்று விட்டுவிட்டால் கூட இதனால் ஏற்படுகிற தீமைகளைப் பற்றி நான் இங்கே கூறிக்கொள்ளவிரும்புகிறேன். தமிழர் படை என்ற ஒன்று தமிழ்நாட்டுக்குத் தேவையா? தமிழ்நாட்டில் இருக்கிற தமிழர்களைப் பார்த்துக் கொள்ள நாம் இருக்கிறோம்; பார்த்துக் கொள்வோம். ஆனால் இதனால் விளைந்திருக்கிற பலாபலன்களைப் பார்த்தால், பத்திரிகைகளில் பார்க்கிறோம், பம்பாயில் சிவசேனையால் தமிழர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கேரளாவில் தேவிகுளத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். திருவனந்தபுரத்தில் சாலையில் தமிழர்கள் வைத்திருந்த கடைகள் எல்லாம் சூறையாடப்பட்டன. அதற்கெல்லாம் இந்த அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏதோ ஒரு மலையாளி டெல்லியில் தாக்கப்பட்டார் என்பதை வைத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் கூட அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு பிரதமர் அவர்கள் தமிழ் நாடு அரசிடம் அதுபற்றி விளக்கம் கேட்கும் ஒரு சூழ்நிலை கூட ஏற்பட்டது. அது மட்டுமல்ல, கேரளா மாநில முதல் அமைச்சர் அவர்கள்கூட இதில் தலையிட்டு அதற்கான காரியங்களை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலையில் இங்கு ஆட்சி செய்கிற தி.மு.க. அரசு தமிழர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் தாக்கப்பட்டபோது கூட அவர்களைக் காப்பாற்றுவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 20] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஆக, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய தமிழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற சிறுபான்மையினராக இருக்கிற தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை இருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான துணை மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

துணை மானியக் கோரிக்கைகள் என்ற தலைப்பில் 14 கோடி ரூபாய்க்கான புது வரிகளைப் போடுவதாகவும் வசதி பெற்றவர்களுக்குத்தான் அந்த வரியே தவிர அது ஏழைகளின் தலைகளில் விழாது என்றும் முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள்.

இந்த மோட்டார் எண்ணெய் வரி காரணமாக நடுத்தர வர்க்கத்தினர்தான் பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

அதோடுகூட கேளிக்கை வரி பத்து மடங்கு உயர்த்தியிருந்தாலும் கூட முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிற சமாதானம் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்கிற வகையில் இருந்தாலும், அவர்கள் வாரந்தோறும் 10,000, 12,000 ரூபாய் என்று மொத்தத் தொகையாக வைத்துக்கொண்டு வசூலிக்கிறார்கள், 60-40 என்ற முறையில் வசூலிப்பதில்லை அப்படி லாபம் பெறும்போது அரசாங்கத்திற்கு ஏன் தரக்கூடாது என்று கேட்கிறார்கள். கடைசியில் அது வந்து விழப்போவது டிக்கட் வாங்குகிற சாதாரண சினிமா பார்க்கப் போகிறவர்கள் மீதுதான் விழப்போகிறது என்ற அச்சம் மக்களிடைய இருந்துகொண்டிருக்கிறது.

இந்தக் கூட்டத் தொடரில் முதல் அமைச்சர் அவர்கள் மதுவிலக்கை அமல்படுத்துவது, மற்றொன்று குதிரைப் பந்தயத்தை ஒழித்து விடுவது என்பது. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது என்பது கொள்கை அளவில் எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்கிற, விரும்புகிற ஒன்றாகும்.

ஆனால், குதிரைப் பந்தயத்தை திடீரென்று எடுத்துவிடுவது என்று வரும்போது அல்லது அதைத் திடீரென்று ஒழித்து விடுவது என்று வரும்போது அங்கு 2,500 தொழிலாளர்கள் வேலை

செய்கிறார்கள். அவர்களில் 40, 45, 50 வயது உள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நிவாரணம் என்பதை முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்லும்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ரேஸை ஒழிப்பதை எதிர்க்கிறது என்று சொல்வதில் அர்த்தமில்லை. 45, 48, 50 வயது உள்ளவர்கள் அதில் வேலை செய்கிறார்கள். அவர்கள் வேறு எங்கு போய் வேலை செய்வார்கள், அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு என்ன செய்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

திரு. ஏ. எம். இராஜா: திரு. முனு ஆதி அவர்கள் ரேஸ் கோர்ஸில் 2,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அங்கு அப்படி ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் கிடையாது. 152 பேர்கள்தான் இருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி: திரு. ராஜா அவர்கள் சொல்வதால் உடனே அதை நான் ஏற்றுக்கொண்டதாகக் கருதுகிறீர்களா? அங்கு 2,500 பேர் வேலை செய்கிறார்கள், டெம்பரரி வொர்க்கேர்ஸையும் சேர்த்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதனால் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டாம் என்று சொல்கிறீர்களா? அல்லது அதை ஒழிப்பதை கொஞ்ச நாட்களுக்கு தள்ளி வைக்கலாம் என்று சொல்கிறீர்களா?

திரு. முனு ஆதி: குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதை எல்லோரும் வரவேற்கிறோம். அதில் சந்தேகமில்லை. எல்லாக் கட்சியினரும் அதை வரவேற்கிறார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதை, பேரறிஞர் அண்ணா அவர்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று நினைத்ததையொட்டி அதை அமல்படுத்துவதை நாங்கள் வரவேற்கிறோம். அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, உங்கள் கோரிக்கை, குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடுங்கள், தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளியுங்கள், அவ்வளவு தானே?





திரு. முனு ஆதி: அந்தத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று ஒரு ரிக்வஸ்டை முதல் அமைச்சர் அவர்களிடம் கேட்கிறோமே தவிர கொள்கை அளவில் இந்த ரேஸை ஒழிப்பதை வரவேற்கிறோம். அதில் சந்தேகமில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும். அதைச் செய்ய வேண்டும். 45, 48 வயது உள்ள க்ளார்க்ஸ், மற்ற சிப்பந்திகள், பாவம் என்ன செய்வார்கள்? அவர்கள் மாதந்தோறும் சம்பளம் வாங்கி குடும்பத்தை நடத்தக் கூடியவர்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட்: இந்தக் குதிரைப் பந்தயத்தை தமிழ்நாட்டிலிருந்து எடுக்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இதைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் நீங்கள் இன்றையதினம் குதிரைப் பந்தயத்தை ஒழித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம், அதை வரவேற்க நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதை யார் கொண்டுவந்தாலும் சரி, வரவேற்கிறோம். எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கொள்ளாமல் அதை வரவேற்கிறோம்.

எங்களது வேண்டுகோள் எல்லாம்—குற்றச்சாட்டாக சொல்லவில்லை—இதை ஆறு மாதங்களுக்கு முன்பு அறிவித்து, பட்ஜெட் கூட்டத்தின்போது, மார்ச் மாதத்தில் அதை அறிவித்து விட்டு ஆறு மாதங்கள் கழித்து தமிழ்நாட்டில் இருந்து குதிரைப் பந்தயத்தை ஒழிக்கப் போகிறோம் என்று அன்று அறிவிப்பு கொடுத்துவிட்டு இன்று நீக்கியிருந்தால் சரி. 2,000 நிரந்தர தொழிலாளிகள் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தாற்காலிகமாக ரேஸ் நடக்கும்போது 500 தொழிலாளர்கள் வேலை பார்க்கிறார்கள். இன்றையதினம் திடீரென்று குதிரைப் பந்தயத்தை ரத்து செய்துவிட்டார்கள், ஒழித்துவிட்டார்கள். அப்படி குதிரைப் பந்தயத்தை ரத்து செய்திருக்கும்போது அதை நம்பிப் பிழைத்து வந்த அந்த 2,000 தொழிலாளர்கள் எங்கே போவார்கள்? பந்தயம் நடக்கும் போது தாற்காலிகமாக 500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 20

அவர்களுக்கெல்லாம் என்ன நிவாரணம்? அவர்களுக்கு அரசாங்கம் மாற்று வேலை கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அல்லது இதை ஆறு மாதத்திற்கு ஒத்தி வைத்தால் அதற்குள் அவர்கள் வேறு வேலைகளில் சேர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கும் என்று சொல்கிறோமே தவிர இதை நீக்கியது தவறு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** குதிரைப் பந்தய மைதானத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர் களுக்கு நிவாரணம் அளிப்பதில் நிச்சயமாக அரசாங்கம் புறக்கணிக்காது. இப்படிப்பட்ட ஒரு கொள்கை முடிவு எடுக்கும்போது அதனால் யார் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதையெல்லாம் அறிந்துதான் அதற்கேற்ற வகையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. மாண்புமிகு நண்பர் எட்மண்ட் அவர்கள் ஆறு மாத காலம் தங்களைத் தயாராக்கிக் கொள்ள—குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு—நேரம் தர வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது மூன்று மாத காலம் கொடுத்திருக்கிறோம். மேலும் மூன்று மாத காலம் கொடுக்க வேண்டுமென்று எட்மண்ட் அவர்கள் சொல்கிறார்களா?

**திரு. க. உரோ. எட்மண்ட்:** மூன்று மாத காலத்திற்குள் அவர்கள் வேலை தேடிக்கொள்வார்கள் அல்லது மூன்று மாதக் காலத்தில் அந்தத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஏதாவது மாற்று வேலை கொடுக்கும் என்ற உறுதிப்பாட்டை அரசாங்கம் கொடுக்குமேயானால் மூன்று மாதத் தவணை கொடுப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** முதல் அமைச்சர் அவர்கள் மேலும் மூன்று மாத காலம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்களா என்று கேட்கிறார்கள். இந்த அரசாங்கம் 1976 ஆம் ஆண்டு வரை நடத்த லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். இதுதான் அவர்கள் கோர்ட்டுக்கு கொண்டு போகப் போகிறார்கள். இதுதான் துக்ளக் ஆட்சி என்பது. ஒரு லைசென்ஸை 1976 வரை கொடுப்பது, டகார் என்று நிறுத்துவது. . . .



1974 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கோர்ட்டுக்குப் போனாலும் வேறு வக்கீலை வைத்துத்தான் நடத்துவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அதை ஒத்திவைப்பது என்பது அது ஒரு ஜீ.ஓ. தான். ஆகவே, கோர்ட்டுக்குப் போகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். அப்படியெல்லாம் போக மாட்டார்கள். ஆனால் அம்மையாரைப் போன்றவர்கள் எல்லாம் குதிரைப் பந்தயத்திற்காக வாதாடுவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குதிரைப் பந்தயத்திற்காக நான் வாதாடவில்லை. நீங்கள் போடுகிற உத்தரவுகள் எப்படியிருக்கின்றன என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். நீங்கள் ஒரு ஜீ.ஓ. போடுவது பிறகு நீங்களே அதை எடுத்து விடுவது, திரும்பப் போடுவது என்று தஞ்சாவூர் அரிசி வியாபாரம் மாதிரியே எல்லாம் இருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசாங்கம் இப்போது அந்த உத்தரவைப் போட்டு இருக்கிறது. இந்த உத்தரவு போட்டதன் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் இப்படிக் கொண்டு வர வேண்டிய எண்ணம் 1 ஆண்டு, 1½ ஆண்டுகளுக்கு முன்பே வந்திருந்தால், அந்த 1½ ஆண்டு காலத்திற்கு மட்டும் அனுமதி தந்திருந்தால்—பலர், ஆயிரக்கணக்கான ரூபாய் பேங்கி லிருந்து குதிரைக்காக கடன் வாங்கியிருக்கிறார்கள், அவர் களெல்லாம் கோர்ட்டுக்குப் போகப் போவதாகச் சொல்கிறார்கள்—பல சிக்கல்கள் இருந்து இருக்காது. ஒரு நல்ல கொள்கையை நிறை வேற்றுகிற நேரத்தில் அதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலை ஏற்படாமல் இருந்து இருக்கும். மேலும் அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை போன்ற பிரச்னைகள் எழுந்து இருக்காது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்படிப்பட்ட பேச்சுக்கள் மூலம் அப்படிப்பட்டவர்களெல்லாம் கோர்ட்டுக்குப் போவதற்கு நம்முடைய பேச்சுக்கள் தூண்டுகோலாக அமைந்து விடக்கூடாது. ஒரு நல்ல கொள்கையை நிறைவேற்றப் போ கிறோம். ஏதோ பேச வேண்டுமென்ற அடிப்படையில் அதை போன ஆண்டு கொண்டுவந்திருக்கக்கூடாதா, முன்பே செய்திருக்கக்

கூடாதா என்று சொல்வது சரியல்ல. அப்படி எல்லாவற்றிற்கும் சொல்லலாம். மதுவிலக்குப் பிரச்னையில் கூடச் சொல்லலாம். இரண்டாவது கட்டமாக சாராயக் கடையை மட்டும் தானே மூடுவதாகச் சொன்னீர்கள். பிறகு ஐ.எம்.எப்.எல். ஐயும் ஏன் சேர்த்து விட்டார்கள் என்றும் கேட்கலாம். ஒரு நல்ல எண்ணத்தை, செயல்படுத்துகிறபோது ஏன் முன்பே செய்யவில்லை என்று கேட்டுக்கொண்டிருப்பது அவ்வளவு சரியாகாது.

**திரு. முனு ஆதி:** இந்த அரசு அந்தந்தத் தொகுதிகளில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளுக்கு அந்தத் தொகுதி எம்.எல்.ஏக்களை அழைப்பது இல்லை. எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களை அழைப்பது இல்லை; இதை ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்கள் பண்பாடு உள்ள அரசு இது, பேரறிஞர் அண்ணா வழி வந்த அரசு என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் மீதுள்ள எரிச்சல் காரணமாக நிகழ்ச்சிகளுக்குக் கூட அழைக்கக்கூடாதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்களுடைய தொகுதியில் நானே வேளாண்மைக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தபோது, அவர்களுடைய பெயரையும் போட்டு, அவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்தும் வரச் சொன்னேன். அவர்கள் அப்போது இல்லை. அவர்கள் பெயர் போடப்பட்டு இருக்கிறது. இப்போது வேண்டுமானாலும் கொண்டுவந்து காண்பிக்கிறேன்.

**திரு. முனு ஆதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்வது ஏதோ அரசாங்க நிகழ்ச்சி. ஏதோ செக்ரடேரியட்டில் ஏற்பாடு செய்து இருப்பார்கள். இப்போது கார்டு கூட அனுப்புவது இல்லை. எங்கள் கிராமத்தில் நான்கு நாட்களுக்கு முன்னால் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்து குடிநீர் திட்டமொன்றை ஆரம்பித்து வைத்தார்கள். அதற்கு எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. அங்கே என்ன நடந்தது என்றால், அங்குள்ள மக்கள் சொல்வது, 30,000 ரூபாய் எஸ்டிமேட் போட்டு ஒரு ரோடு போட வேண்டுமென்று சொல்லி, 5,000 ரூபாய் மட்டும் செலவழித்து இருக்கிறார்கள், மீதி ரூ. 25,000-ஐ எடுத்து இருக்கிறார்கள்.



அதில் ரூ. 1,000 செலவழித்து அமைச்சருக்கு விருந்து தந்து இருக்கிறார்கள். படியரிசி 6 ரூபாய் விற்கும் இந்த நேரத்தில், மக்கள் அரிசி வாங்கிச் சாப்பிடக்கூட முடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், அமைச்சருக்கு உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தில் தனி சமையல்காரர் வைத்து விருந்து செய்து இருக்கிறார்கள். நாளைக்கே கூட இதை நிரூபிக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் வரட்டும், அவர்களுக்குத் தகவல் தருகிறேன், அந்த ஜல்லி எப்படி போடப்பட்டிருக்கிறது என்று. மக்கள் அரிசிக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விருந்து சாப்பிட்டு வந்திருக்கிறார்கள். அங்குள்ள மக்கள் பேசிக் கொள்கிறார்கள். உள்ளூர் எம்.எல்.ஏ. வைக் கூப்பிடவில்லையே என்று என்னைக் கூப்பிடாததைப் பற்றி அல்ல. அது வேறு விஷயம். பண்பாடுள்ள அரசு, பேரறிஞர் அண்ணா வழி வந்த அரசு இப்படி நடந்து கொள்ளலாமா?

தாம்பரம் பகுதியில் இன்றைக்கு 5,000 கல் உடைக்கும் தொழிலாளர்கள் நான்கு மாதங்களாக பட்டினி கிடக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை எல்லாம், லீசை ரினியூ செய்யுங்கள், அல்லது விரைவில் ஏலம் போடுங்கள். இப்படி அந்தக் காரியத்தை நான்கு மாதங்களாகச் செய்யாமல் இருப்பதால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் போய்விட்டது. அங்குள்ள தொழிலாளர்களுக்கும் வேலையில்லாமல் போய்விட்டது. அவர்களும் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக ஏலம் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அல்லது அவர்களுக்கே லீஸ் ரினியூ செய்து கொடுங்கள். அதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. எனக்குள்ள கவலையெல்லாம் அங்குள்ள ஊழியர்களுக்கு வேலை கிடைக்க வேண்டும் என்பது தான். அவர்கள் நான்கு மாதங்களாக பட்டினியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்கிறபோது அவர்கள் எப்படி இந்த அரசு ஏழைகளுக்காகப் பாடுபடுகிற அரசு என்று எடுத்துக்கொள்ள முடியும்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக அவர்களிடமிருந்து ரூ. 30,000-க்கு டிக்கெட் விற்று பணம் பெற்று இருக்கிறார்கள். அவர்களாகவே விரும்பிக் கொடுப்பது வேறு, இதை வாங்கினால்

[திரு. முனு ஆதி] [1974 ஆகஸ்ட் 20

தான் நீடித்துத் தருவோம் என்று நிர்ப்பந்தித்து விற்பது வேறு. இப்படி நிர்ப்பந்தித்து வாங்குவது நியாயமா என்பதைப் பார்க்க வேண்டும். அரிசி விலையேற்றத்திற்குக் கூட அந்தக் காரணத்தைச் சொல்லலாம்.

முதலமைச்சர் அவர்கள் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். இந்த கண் இல்லாத குருடர்களுக்கும் புனர் வாழ்வு செய்து கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை முதலமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கண் தெரியாதவர்களுக்கும் வேலை அளிக்கப் படுகிறது. அவர்கள் டிரான்ஸ்போர்ட்டிலே, பிரஸ், பைண்டிங் போன்ற இடங்களில் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு ரீடர் அசிஸ்டென்ட் இருக்கிறார்கள். அவர்கள் தவறு செய்தாலும் இவர்களுக்குத் தான் தண்டனை கிடைக்கிறது. அவர்களுக்குக் கூட ஒரு அசிஸ்டென்ட் வர வேண்டியிருக்கிறது. இவர்களுக்கும் சேர்த்து அவர்கள் டிக்கெட், சாப்பாடு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த கண் தெரியாத குருடர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டும். அவர்கள் கொடுத்துள்ள கோரிக்கை நியாயமானது, அவற்றை அரசு ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு எதிர்க்கட்சிகள் என்றால் ஒரு மாதிரியாகவும், ஆளும் கட்சி என்றால் ஒரு மாதிரியாகவும் பாரபட்சமான முறையில் நடந்து கொள்கிறது. அப்படியில்லாமல், யாராக இருந்தாலும் அரசாங்க நிகழ்ச்சிகளில் எந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அவர்களுக்கும் அழைப்பு அனுப்பி, அவர்களையும் கலந்து கொள்ள செய்ய வேண்டும். அந்தப் பெருந்தன்மையை வளர்த்துக்கொள்ளுங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பண்பாடுள்ள அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்தவர்கள் அரசு என்று சொல்லுகிற நீங்கள் இப்படிப் பட்ட சூழ்நிலைகள் தவிர்ப்பதற்காக ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லி, எங்கள் ஊரில் எனக்கு அழைப்பு அனுப்பாததால், அந்த ஊரில் இருக்கும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள், இங்கே



1974 ஆகஸ்ட் 20] [திரு. முனு ஆதி]

இருக்கும் சட்டமன்ற உறுப்பினரைக் கூப்பிடவில்லை, இது ஒரு ஆட்சியா என்று கேட்கிறார்கள். அழைப்பு அனுப்பாததால் எனக்குத்தான் லாபம். உங்களுக்கு ஓட்டு வராது.

இப்படிப்பட்ட பாரபட்சமான முறையில் இருக்கக்கூடாது என்று சொல்லி, கல் உடைக்கும் தொழிலாளர் பிரச்னை குறித்து முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கூறி, அந்த 5,000 தொழிலாளர்கள் 4 மாதங்களாக பட்டினி இருப்பதால் ஒன்று அந்த லைசென்சை ரினியூ செய்யுங்கள் அல்லது ஏலத்தை உடனடியாக நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** கல் உடைக்கும் தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே 13 கூப்புகளுக்கு ஏலம் விடப்பட்டு இருக்கிறது. அதை பிரித்து பிரித்து போட வேண்டியிருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் போட்டால் பல கல் உடைக்கும் கான்டிராக்டர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அதிக ஏலம் போகாமல் செய்கிறார்கள். ஆகவே, பிரித்து பிரித்துப் போட வேண்டுமென்று திட்டம் வைத்து இருக்கிறோம். 13 கூப்புகள் ஏலம் போட்டாகிவிட்டது. இன்று 20 ஆம் தேதி 4 கூப்புகளுக்கு ஏலம் போடுவதற்கு ஒப்பந்தம் கூப்பிட்டு இருக்கிறோம். தனிப்பட்ட யாருக்கும் கூப்பு ரினியூவல் கொடுப்பதாக இல்லை. எல்லா கூப்புகளும் ஏலத்தில் தான் விடுவதாக இருக்கிறோம்.

**திரு. முனு ஆதி:** 4 மாதத்திற்கு முன்பே இப்படி செய்து இருக்கலாமே? ஒவ்வொரு கூப்புக்கு தனியாக விடுவது என்றால், 6 மாத காலமாக நஷ்டம் ஆவது அரசாங்கப் பணம் இல்லையா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** 6 மாதம் என்பது அல்ல. கூப்புகள் ஏலம் போடுகிற நேரத்தில் வியாபாரிகள் ஒன்று சேர்ந்துகொண்டு சதி செய்து அரசாங்கத்திற்கு வரும் அதிகப் பணத்தை தடுக்கிறார்கள். ஏற்கனவே ஏலம் இவ்வளவு தொகைக்கு மேல் போக வேண்டுமென்று குறிப்பிட்டு விடுகிறோம். அவர்கள் சரியாகக் கேட்கவில்லை, அரசாங்கம் நிர்ணயித்துள்ள அந்தத் தொகைக்கு மேல் கேட்கவில்லை என்றால், அந்த ஏலத்தை

ரத்து செய்துவிட்டு, மீண்டும் ஏலம் போடப்படுகிறது. ஒவ்வொரு கூப்பாக போட்டால் தான் அரசாங்கத்திற்கு தொகை அதிகமாக வரும். ஆகையால் பிரித்துத்தான் போடப்படும்.

*** திரு. காதர்பாட்சா என்கின்ற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது பேரவையிலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற துணை மானிய நிதிக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கையில் ஏறத்தாழ ரூ. 6 கோடி செலவாகும் என்றும், வரியின் மூலமாக ரூ. 14 கோடி கிடைக்கும் என்றும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உரையிலே கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 400 கோடி ரூபாய் செலவழிக்கின்ற ஒரு மதிப்பீட்டில் ரூ. 6 கோடி துணை மதிப்பீடு கேட்பது ஒன்றும் அதிகத் தொகை இல்லை என்று தான் கருதுகிறேன். 14 கோடி ரூபாய் வரையில் புதிய வரிகளின் மூலம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாலும் பல கட்டத்தில் மாற்றி அமைக்கக்கூடிய வரிகளும் உண்டு, தள்ளுபடியாக்கூடிய வரிகளும் உண்டு, குறைத்து வாங்க வேண்டிய வரியும் இருக்கிறது. எனவே அத்தகைய வரிகளின் மூலம் 14 கோடி ரூபாய்கள் கிடைக்கும் என்ற நிலை இல்லாவிட்டாலும், அந்த வரிகள் அவசியம் என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம்.

இந்தத் துணை மதிப்பீடு அறிக்கை விவாதிக்கின்ற நேரத்தில் என்னுடைய தொகுதியான முதுகளத்தூர் நீண்ட நெடுங்காலமாக பின்தங்கியிருக்கிற காரணத்தினால் அங்கே பல திட்டங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அவைகள் செயல்படாத முறையில் இருக்கின்றன. பொறி இயல் அதிகாரிகள் சுணக்கம் காட்டுகின்ற நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எனது தொகுதி மக்கள் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, நீர்ப்பாசன திட்டங்கள் பல ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன; நாராயணக் காவேரி அணைக்கட்டுத் திட்டம், கஞ்சம்பட்டிக் கால்வாய் திட்டம், பரளையாறு திட்டம்,





கிருதமால் திட்டம், கூத்தங்கால் திட்டம், மலட்டாறு திட்டம், பழைய நாராயணக் காவேரி திட்டம் ஆகிய திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கோருகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன் மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் நாராயணக் காவேரி அணைக்கட்டுத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும், அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இருக்கிறது. அதிலே இருக்கக்கூடிய சுணக்கத்தைத் தவிர்த்து அதைத் துரிதமாக செயல்படுத்தி பின்தங்கிய மக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். பழைய நாராயணக் காவேரி திட்டம் பாதியில் வேலை நின்றுகொண்டிருக்கிறது. அதனால் அந்தத் தண்ணீர் மலட்டாறு என்ற பெயரில் வீணாக கடலில் போய் ஓடிக்கொண்டிருக்கிறது. மதிப்பீடு தயாராகி பல ஆண்டுகள் ஆகியும், அரசாங்க அனுமதிக்கு அனுப்பப்பட்டு பல ஆண்டு ஆகியும் இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

எல்லா கண்மாய்களும் ஜமீன்தார்கள் காலத்தில் மராமத்து செய்யப்பட்டது தான். பின்னாலே அரசாங்கம் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாக சில கண்மாய்களை மராமத்து செய்திருக்கிறதே தவிர, பல கண்மாய்கள் நீண்டநெடுங்காலமாக மராமத்து செய்யப்படாததால், கண்மாய்களில் உடைப்பு ஏற்படுகிறது. அத்தகைய கண்மாய்களை மராமத்து செய்வதற்கென்று ஒரு தனிக் கோட்டத்தை ஏற்படுத்தி, அதற்கென்று தனி சிப்பந்திகளை நியமித்து, மராமத்து செய்து விவசாயிகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டு கோடி ரூபாய் திட்டத்தில் எங்கள் பகுதியிலே அதிகமாக சாலை வேலைகள், கண்மாய்கள், குளங்கள் வேலைகள் எடுத்துச் செய்து தற்சமயம் நிதிவசதி இல்லாத காரணத்தினால் இடையே நிறுத்தப்பட்டிருக்கிறது. பின்தங்கிய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அளிக்கப்பட்ட இரண்டு கோடி ரூபாய் திட்டம் நீக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. இது பின்தங்கிய மாவட்டம். பல வேலைகள் செய்த ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் வேலை சுணக்கம்

அடைந்திருக்கிறது. அந்த வேலைகளையெல்லாம் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய அதிகப் பணத்தை ஒதுக்கிதர அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் பகுதிகளில் சாலைகள் அமைக்கின்ற திட்டம் நல்ல திட்டம். 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது. அரசாங்க ரெகார்டில் கிழக்குத் தெரு ஒரு ஊராகவும், மேற்குத் தெரு ஒரு ஊராகவும் இருக்கிறது. ஆகவே, இரண்டையும் ஒரு கிராமமாகச் சேர்த்து அவைகளிலுள்ள ஜனத்தொகையை மொத்தமாக கணக்கில் எடுத்துக்கொண்டால் 1,500 மக்கள் தொகை என்ற கணக்கு வரும். அப்படியில்லாமல் ஒரு கிராமத்தில் 1,200 ஜனத்தொகை என்று இருக்கிற காரணத்தினால் அந்தக் கிராமம் இந்த வேலையில் சேர்ககப்படாமல் இருக்கிறது. எந்தெந்த ஊர்களுக்கு சாலை பயன்படுகிறதோ அந்த ஊர்களில் இருக்கிற அத்தனை மக்கள் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அங்கெல்லாம் சாலை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உயர்நிலைப் பள்ளி இருக்கின்ற பெரிய ஊர்களில் கூட சாலை வசதி இல்லாமல் இருக்கிறது. கமுதியிலிருந்து கும்மநாதபுரம் (வழி பம்மனேந்தல்), கமுதியிலிருந்து வலந்தை, கீழமுடிமன்னார் கோட்டையிலிருந்து ஆராயி, பெருமாள்தேவன்பட்டி சாலை ஆகிய இடங்களில் மொத்தமாக ஜனத்தொகையை கணக்கில் எடுத்துக் கொண்டு சாலைகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கமுதி அரசு மருந்தகத்திற்கும், பிரசவ ஆஸ்பத்திரிக்கும் நீண்ட காலமாக கட்டட வசதி இல்லை. டோகன் கண்டிரிபியூஷன் கூட இதற்காக செலுத்தத் தயாராக இருக்கிறோம். இவைகளுக்கு துரிதமாக கட்டட வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கமுதி துணைத் தாலுகாவை ஒரு பெரிய தாலுகாவாக ஆக்க வேண்டும் என்று இரண்டு, மூன்று ஆண்டுகளாக முயற்சி செய்த போதிலும், இன்னும் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.



போதுமான ஜனத்தொகை, போதுமான விஸ்தீர்ணம் கொண்டதாக இது இருக்கிறது. இதைப் பெரிய தாலுகாவாக உயர்த்தித் தரவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம். கமுதி யூனியனும் கடலாடி யூனியனும் பெரிய யூனியன்கள். அவைகளின் பரப்பளவு அதிகமாக இருப்பதால், பல கிராமங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியவில்லை. ஆகவே, கமுதி யூனியன், கடலாடி யூனியன் ஆகியவைகளிலிருந்து சில பகுதிகளைப் பிரித்து பெருநாழியை தலைநகராகக் கொண்ட ஒரு புதிய ஒன்றியத்தை ஏற்படுத்த வேண்டுகிறேன்.

கமுதியில் சுண்ணாம்புக் கல் அதிகமாக கிடைக்கிறது, அங்கே ஒரு ரசாயன கல் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டு, ஏராளமான வசதி வாய்ப்புகள் இருப்பதாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் பொறியாளர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். ஆகவே, கமுதியில் ஒரு ரசாயன கல் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரையில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தப் போவதாக அறிக்கை பார்த்தேன். கமுதி, முதுகளத்தூர் தாலுகாக்களையும் அந்த ஆலை எல்லையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அப்பொழுது தான் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பயிரிடும் கரும்பை அந்த ஆலைக்கு எடுத்துச்சென்று கொடுப்பதற்கு வசதி வாய்ப்புகள் ஏற்படும்.

கமுதி தொழில்வசதி வாய்ப்புகள் இல்லாத பிற்போக்குப் பகுதியாக இருக்கிறது. அங்கே ராணிப்பேட்டையில் அமைத்திருப்பது போல் ஒரு தொழிற்பேட்டை உருவாக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆய்வு செய்வதற்கு அதிகாரிகள் வந்தார்கள். ஆனால் வேலைகள் சரிவர செய்ய முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் ஆய்வு வேலைகளில் சற்று சுணக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதைத் துரிதப்படுத்தி, அங்கே ஒரு தொழிற்பேட்டையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்போக்குத் திட்டங்களையெல்லாம் அரசாங்கம் நிறைவேற்றி பின்தங்கிய மக்களுக்கு நல்வாழ்வு தரவேண்டும் என்பது நீண்ட நாளையக் கோரிக்கை. முதுகளத்தூரில் அதிகமாக மரவர் குடிமக்கள் வாழ்கிறார்கள். கல்வி வசதியின்றி, தொழிலிலும் பின்தங்கியிருக்கிறார்கள். கள்ளர் ரிக்லமேஷன் திட்டம் போல மரவர் ரிக்லமேஷன் என்ற ஒரு திட்டத்தை ஏற்கனவே பின்தங்கிய நலக் குழு சிபார்சு செய்திருக்கிறது. பின்தங்கியோர் நலக் குழுவின் அந்தச் சிபார்சை ஏற்று, மரவர் ரிக்லமேஷன் திட்டத்தை செயல்படுத்தி, அதன் மூலம் அவர்கள் வாழ்வை மேம்படச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டில் குடிநீருக்காக ரூ. 1.77 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் கோவையை எடுத்துக்கொண்டாலும் சரி, சென்னையை எடுத்துக் கொண்டாலும் சரி, 'ஸம்மர்' காலங்களில் குடி தண்ணீருக்கு மக்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலை இருக்கிறது. போன வருஷத்திற்கு முன்பு ஒரு கோடி ரூபாய் செலவு செய்து சென்னையிலும், சுற்றுப்புறத்திலும், பல கிணறுகளை சர்க்கார் தோண்டியது. ஷேக் மேஸ்திரித் தெரு என்று ஒரு தெரு வட் சென்னையில் இருக்கிறது. அந்த் ஒரு இடத்தில் மாத்திரம் 7 பம்பு செட்டுகள் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு வைக்கப்பட்டன. அந்த ஒரு வார்டில் மட்டும் அவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டது. அந்த பம்புகளில் இப்பொழுது தண்ணீர் வருகிறதா? அவைகள் என்ன ஆயிற்று? ஏன் அதை 'பெர்மனென்ட் மெஷராக' எடுக்கவில்லை? அவ்வளவு தொகை கண்டின்ஜென்ஸி பண்டிலிருந்து செலவழிக்கப்பட்டும், ஏன சரிவர பயன்படுத்தப்படவில்லை?

அடுத்தபடியாக 1,500 ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்கு லிங்க் ரோடுகள் போடுவதற்கு கிட்டத்தட்ட 6 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 12 கோடி ரூபாய் அதற்கு எப்பொழுது செலவிடப்படும், எத்தனை வருஷங்களில் அந்தத் திட்டம் முடிவடையும் என்ற விவரங்கள் இதில் சொல்லப்படவில்லை.





இன்னும் சர்க்கரை ஆலைகளுக்கு ஷேர் காபிடலுக்காக ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு லாபம் ஏராளமாக வருகிறது. ஒன்றிரண்டு மில்களைத் தவிர சர்க்கரை மில்களுக்கு லாபம் தான் கிடைத்து வருகிறது. அதில் இருக்கக்கூடிய பணத்தைக் கொண்டு ஏன் ஷேர் கேபிடலுக்குக் கொடுக்கக்கூடாது.

அதே மாதிரி பல்லவன் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு உள்பட ரூ. 71.50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரியம் என்று ஏற்படுத்திவிட்டு, அந்த வாரியத்தினால் முடியாததினால் சர்க்கார் உதவி செய்கிறது என்றால் அந்த வாரியத்திற்கே அவசியம் இல்லை. பல்லவன் டிரான்ஸ்போர்ட் கழகம் அதிகமாக லாபம் சம்பாதிக்கிறது. மற்ற கழகங்களும் அதிக லாபம் சம்பாதிக்கின்றன. அப்படி இருக்கும்பொழுது சர்க்கார் பணத்தைக் கொண்டு அதற்கு உதவி செய்வானேன்? கிடைக்கின்ற லாபத்தைக் கொண்டு கழகமே உதவி செய்துகொள்ள வேண்டியது தானே ஒழிய சர்க்கார் அதற்கு உதவி செய்ய வேண்டிய முறைகள் இருக்கக்கூடாது.

ரூ. 14 கோடி வரி போடப்படுகிறது. ரூ. 6.06 கோடி ரூபாய் உதவித் தொகைக்காக, ஷேர் காபிடலுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 14 கோடி ரூபாய் வரி எதற்காக போடப்பட்டிருக்கிறது? முக்கியமாக இது 'ப்ரொடக்ஷன்-ஓரியண்டெட்' பட்ஜெட்டாக இருக்கிறதா, உற்பத்தியை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்றால், இந்த பட்ஜெட்டில் புதிய பெரிய உத்யோகங்கள் 'கிரியேட்' செய்யப்படுகின்றன. உதாரணமாக, எலக்டிரிஸிடி போர்டில் ஸ்ட்ரீட் லைட்டுக்காக ஒரு சூப்பரிண்டெண்டிங் என்ஜினியர் போடப்பட்டிருக்கிறது. அவருக்குக் கீழே யாரும் கிடையாது. அவர் எலக்டிரிஸிடி போர்டில் உட்கார்ந்து கொண்டு என்ன வேலை செய்யப்போகிறார்? அவருக்குக் கீழே போர்மென் கிடையாது, சூபர்வைஸர் கிடையாது, என்ஜினியர் கிடையாது. சர்க்கார்

[திரு. என். கே. பழனிசாமி] [1974 ஆகஸ்ட் 20

கொள்கை என்றால் 'கிரியேஷன் ஆஃப் எம்ப்ளாய்மெண்ட்' என்ற அடிப்படையில் இருக்கிறதே தவிர, அது 'ப்ரொடக்ஷன் ஓரியண்டெட்டாக' எந்தவிதத்திலும் இல்லை.

(முற்பகல் 11-30)

இந்தமாதிரி, அரவிந்தர் ஆஸ்ரமத்திற்கு பூமி வாங்குவதற்கு என்றும் மற்ற வகைக்கும் 3 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது? அந்த ஆஸ்ரமத்துக்காரர்கள் எல்லாம் பெரும் செல்வந்தர்கள்; கோடிக் கணக்கான பணம் அங்கே இருக்கிறது. ஒரு சிட்டியை ஏற்படுத்தப் போகிறார்கள். அவர்களுக்கு என் பணம் கொடுக்க வேண்டும்?

அதேமாதிரிதான் பூம்புகாரும். மக்களுக்கு எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஏன் பணத்தைச் செலவிட வேண்டும்? அடுத்தபடி இருப்பது வீராணம் திட்டம். ஏற்கெனவே அதற்கு கோடிக்கணக்கில் பணம் செலவிட்டாகி விட்டது. தண்ணீரை தேக்கி வைக்கிறோம் என்றார்கள். ஆனால் இப்போது அங்கிருந்து சென்னைக்கு தண்ணீர் வருமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஒரு கோடிக்கு மேல் செலவு செய்து விட்ட பின்னால் இந்தச் சந்தேகம் வந்திருக்கிறது. புழலேரியில் உள்ள அளவுக்குத்தான் அங்கும் தண்ணீர் இருக்கும் என்று சொல்கிறார்கள். அங்கிருந்து தண்ணீர் வருவதாக இருந்தாலும் பெருத்த அளவில் விவசாயம் பாதிக்கும். மைசூர் அரசாங்கம் தண்ணீர் கொடுக்குமா என்பது இன்னும் தெரியவில்லை. இல்லை என்றால் போட்ட பணம் அத்தனையும் நஷ்டம் தான்.

அடுத்து, பின்தங்கிய வகுப்பினருக்கு உதவி செய்வது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உதவி செய்ய வருமான வரம்பை 2,000 ரூபாயாக இருந்ததை 2,500 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அதை நான் குறைசொல்லவில்லை. ஆனால் யாருடைய பணத்தை யாருக்கோ கொடுக்கக்கூடிய நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. அது நியாயம் தானா? உண்மையிலேயே பின்தங்கிய வகுப்பினராக இருந்து, ஏழைகளாக இருந்தால் பரவாயில்லை. அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டியதுதான் ஆனால் வசதி படைத்தவர்கள் எல்லாம் சலுகை பெற்றுக்



1974 ஆகஸ்ட் 20] [திரு. என். கே. பழனிச்சாமி]

கொண்டிருக்கிறார்கள். அது கூடாது. உதாரணமாக செக்ரட்டேரியட்டில் ஒருவர் வேலை செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு 500 ரூபாய் சம்பளம். அவர்கள் லா காலேஜுக்குப் போனால் 300 ரூபாய் கிடைக்கிறது. அப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் கூட உதவி செய்ய வேண்டுமா? யாருடைய பணத்தையோ யார் யாருக்கெல்லாமோ அள்ளி அள்ளி கொடுக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களுக்கு எல்லாம் வீணாகப் பணத்தை செலவிடக் கூடாது. உற்பத்தி அடிப்படையாக இல்லாத எந்தக் காரியத்திற்கும் செலவிடக் கூடாது.

இப்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நீர்ப்பாசனங்களுக்கு கொஞ்சம் தான் ஒதுக்கியிருக்கிறோம். இவைகளுக்கு எல்லாம் செலவிடலாம். இன்னும் என்னென்ன காரியங்கள் எல்லாமோ செய்ய வேண்டியிருக்கிறது. எப்படிச் செய்தாலும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட காரியங்களுக்குத்தான் பணத்தை செலவிட வேண்டும். ஆனால் அந்தமாதிரியான காரியங்களுக்கு குறைந்த தொகைதான் செலவிடப்படுகிறது என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

இன்றைக்கு மதுவிலக்கை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த மதுவிலக்கினால் 56 கோடி ரூபாய் நஷ்டம். மதுவிலக்கு இல்லா விட்டால் வேண்டுமென்று கேட்பார்கள்; இருந்தால் இருக்கக் கூடாது என்று சொல்வார்கள். இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. இது சகஜம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை "தினமணிக் கதிர்" பத்திரிகையில் பார்த்தேன். மதுவிலக்கை சரியாக அமுல்படுத்த முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நன்றாகத் தெரியும்போது ஏன் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும்? கொண்டுவந்தால் எப்படி நிறைவேற்ற முடியும்? அதுவும் முடியாது. 56 கோடி ரூபாயும் நஷ்டம். அதுமட்டுமல்ல. குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதன் மூலம் 2 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 ஆகஸ்ட் 20

அது மட்டுமல்ல. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் 151 கோடி ரூபாய்க்கு செலவிட வேண்டியிருக்கிறது. ஆனால் நமக்கு வரக்கூடியதோ 121 கோடி ரூபாய் தான். அப்படி இருக்கும்போது மீதியுள்ள 30 கோடி ரூபாயை எப்படித் திரட்ட முடியும்? மதுவிலக்கில் 56 கோடி நஷ்டம்; குதிரைப் பந்தய ஒழிப்பில் 2 கோடி நஷ்டம். இதை எல்லாம் எப்படி ஈடுசெய்ய முடியும்? பற்றுக்குறையை எப்படி சரிக்கட்டுவது? அதுமட்டுமல்லாமல் நேஷனல் வாட்டர் சப்ளை திட்டத்திற்கு 35 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக, எல்லாவற்றையும் சேர்த்தால் 118 கோடி ரூபாய் பற்றுக்குறை ஆகிவிடும். எல்லாம் சேர்ந்து கிடுக்கி போட்டமாதிரி கழுத்தைப் பிடிக்கும். அதற்கெல்லாம் என்ன செய்ய முடியும்? ஒருவேளை துக்ளக் மாதிரி பணத்தை வெளியிடுவீர்களா? துக்ளக் தோலிலே நாணயத்தை வெளியிட்டான். நீங்கள் தோலுக்குப் பதிலாக வெறும் காகிதத்திலேயே வெளியிட்டுவிடுவீர்கள் போலிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதுமாதிரி நாணயங்களை அச்சிடுகின்ற உரிமை மாநிலங்களுக்கு இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களை விளக்க வேண்டுகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** இப்படி எல்லாம் சேர்ந்து கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் நாடு என்ன செய்யப் போகிறது என்று தெரியவில்லை.

சமீபத்திலே இரண்டு ஆர்டினன்ஸ் வந்தது. டி.ஏ. கொடுப்பதை டிபாசிட் பண்ண வேண்டும்; கூலி உயர்வு கொடுத்தால் டிப்பாசிட்டிலே போட வேண்டும். இரண்டு வருஷம் கழித்து கொஞ்சம் கொஞ்சமாக தொழிலாளர்களும் சர்க்கார் சிப்பந்திகளும் திருப்பி வாங்கிக் கொள்ளலாம் என்று ஆர்டினன்ஸ் போட்டிருக்கிறார்கள். விலைவாசி உயர்வுக்குத் தக்கபடி தான் டி.ஏ. கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஊதியத்தை முடக்கிவிட்டால் எப்படி விலைவாசி குறையும்? முன்பு படி அரிசி 2½ ரூபாய்க்கு விற்றது. இப்போது 5 ரூபாய்க்கு விற்கிறது. ஊதியத்தையும் முடக்கிவிட்டால் சாதாரணமானவர்கள் எப்படி வாங்கிச் சாப்பிட முடியும்? ஊதிய முடக்கத்தினால் விலை குறையப் போவதில்லை. ஏற்கனவே ஏறிய விலை இன்னும் ஏறிக்கொண்டே தான் இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட



1974 ஆகஸ்ட் 20]

நேரத்தில் ஊதியத்தை கொடுக்காமல் முடக்கி வைப்பது ஊதிய முடக்கமல்ல; அது ஊழியர் முடக்கம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

இன்றைன்று. முடக்கி வைக்கும் ஊதியத்தை இரண்டு வருஷம் கழித்து கொஞ்சம் கொஞ்சமாக வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். அப்போது மட்டும் விலை குறைந்துவிடுமா? இன்னும் 5 வருஷம் கழித்து இதே விலைவாசி இருக்கும் என்று யாராவது உத்தரவாதம் கொடுக்க முடியுமா? இன்னும் 5 வருஷம் கழித்தால் இப்போது இருப்பதைவிட விலைவாசி அதிகமாகத்தான் இருக்கும்.

சர்க்கார் சிப்பந்திகளுக்கு மத்திய அரசாங்கம் டிசம்பரில் ஊதிய உயர்வு கொடுத்தால் நம்முடைய மாநிலத்தில் மார்ச் மாதம் தான் கிடைக்கும். மத்திய அரசு சிப்பந்திகளுக்கு 2 தடவை, 3 தடவை கொடுத்தால் மாநில அரசாங்கம் ஒரு தடவை கொடுப்பார்கள். அண்மையிலே ஒரு 10 ரூபாய் கொடுத்தார்கள். அதுகூட இன்னும் கைக்கு வரவில்லை. முன்னைவிட இப்போது 10 மடங்கு விலை ஏறியிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கண்டனம் கூட தெரிவிக்கவில்லை. குறிப்பாக ஊதிய முடக்கம் செய்திருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை.

இங்கே இந்த அளவுக்கு உணவு நெருக்கடி ஏற்பட்டிருப்பதற்கு அரசாங்கத்திடம் 'பஃபர் ஸ்டாக்' இல்லை என்று சொல்லப்படுகிறது. அதையெல்லாம் சரியாகச் செய்திருந்தால். . . .

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

THIRU B. VENKATASWAMY : Sir, I would like to offer a few remarks on behalf of our Party regarding the First Supplementary Statement presented in this House by the Hon. Chief Minister.

Regarding the Rural Water Supply Scheme, priority should be given to the Dharmapuri district. I regret to note that some of the taluks in that district have been neglected in the matter

[Thiru B. Venkataswamy] [1974 ஆகஸ்ட் 20

of allotment of funds for water-supply schemes. For example, Hosur has been eliminated. In this connection, I would like to point out that the Dharmapuri district is always affected by adverse seasonal conditions. This year also there is no rain at all and almost all the commercial crops have failed. Also people are suffering for want of drinking water. Now I would like to refer to the circular sent by the Government to the Panchayat Unions that if they do not spend the amount applied for, for drinking water wells, action would be taken against them. As a result of that circular, some panchayat union officials are not willing to apply for it as they fear if they do not deepen the wells when the rains come, they would be held responsible. I am the Chairman of a Panchayat Union and my Panchayat Union Commissioner also has expressed such a fear. But I told him, I will protect you and that I will see that no action is taken against him. So, there should be no hard and fast rule with regard to allotment of funds for the deepening of wells, etc. So, I request the concerned officials to see that there is no shortage of drinking water in the Dharmapuri district which has already been declared as a drought-affected area by the Government. I hope liberal amount would be sanctioned to the Dharmapuri district so that more wells could be deepened and the people would be very happy. The District Development Council also has passed a resolution on the drought conditions there.

Coming to the other point, the Government should postpone the collection of loans. It is purely a dry area and the people are not able to repay the loans but they are being harassed by the co-operative soieties and Tahsildars. So, the Government should sanction liberal schemes to enable the people to repay the loan.

As regards rural roads, I regret to note that so many areas in Tamil Nadu have been completely neglected.

For example, Anjatti has no roads at all. It is in Dharma puri district. Tht entire district is not connected with good roads. So also in Ramanathapuram district. I request the Hon. Chief Minister to bring in a comprensive scheme regarding



1974 ஆகஸ்ட் 20] [Thiru B. Venkataswamy]

laying of roads in backward areas. We must have a crash programme. Otherwise, it is impossible to complete this laying of roads in backward areas.

There are many villages not having this population ceiling of 1,500. Many villages may be grouped and for the entire compact village, roads may be laid. In Anjatti for example, being a forest area, there are no roads at all. Two people had died because of elephant attack. For those victims, the Hon. Chief Minister must grant Rs. 1,000 for each individual's family from his relief fund. Last year, 3 people died because of elephant attack. That place Anjatti must be connected with good roads.

Regarding minor irrigation projects, I find that Kizhavalapalli and Dhodahalla Schemes have not been included.

Regarding re-introduction of prohibition, our party welcomes it. (The bell was sounded.) I may be given some more minutes. Rajaji went in rain at 10.00 p.m. to the Chief Minister's house to plead with him not to scrap prohibition. But at that time his words were not listened to. Now at least I am glad the Hon. Chief Minister has realised the wrongs of drinking and had sought to reintroduce prohibition. I welcome it. At the same time we must see that illicit preparation of arrack should be checked; otherwise, prohibition will not be a success.

Horse racing is bad. I am glad the Chief Minister has abolished it. Like that, raffle ticket sale also should be banned. By buying 1 rupee ticket the man thinks he can get Rs. 1 lakh. That promotes laziness. Only by working hard, one should be able to earn more money. That tendency should develop among people. I hope the Hon. Chief Minister will abolish sale of raffle ticket also.

With these words. I conclude my speech.

*திரு. எ. சுப்பிரமணியம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சப்லிமெண்டரி பட்ஜெட் மீது எங்கள் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்று முதலமைச்சர் அவர்கள் இப்பொழுதேனும்—76 தேர்தல் நெருங்கி வருகிற நேரத்திலேனும்—

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஆகஸ்ட் 20

மதுவிலக்கை ஏற்படுத்துவதற்கு—குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு முன்வந்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் மெத்தவும் வரவேற்கிறேன். ஆனாலும், ஏற்கெனவே மதுவிலக்கை அவர்கள் பாணியில் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது—உண்மையில் ரத்து செய்தது—பலவிதமான பிரச்சினைகளை உண்டாக்கியிருக்கிறது. பலருக்கு புதியதாகக் குடிப்பழக்கத்தை உண்டாக்கிவிட்டிருக்கிறது. இனிமேல் மதுவிலக்கை கொண்டுவருவதனால் அவர்களை எல்லாம் சமாளிக்கின்ற பெரும் பிரச்சினை காவல் துறைக்கு ஏற்படும். அவை எல்லாம் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. எப்படியேனும் அதனைச் சரியாகச் சமாளிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

குதிரைப் பந்தயத்தைக் கூட ஒழிக்க வேண்டுமென்று ஏற்கனவே இந்தச் சட்ட மன்றத்தில் பலமுறை சொன்னபோது அண்டை மாநிலங்களுக்கு அந்த வருவாய் போய்விடும் என்று சொன்னார்கள். அப்படி எல்லாம் சொல்லி பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்காது—இப்போது நடுத்தர—கீழ் நிலையில் உள்ள மக்களைப் பாதுகாக்க என்று சொல்கிறார்களே—அவர்கள் அப்போதும் இருந்தார்கள்—முன்னமே செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, புதிய வரிகள் பல போடப்பட்டிருக்கின்றன. அந்த வரிகளைப் பொறுத்து நான் எதிர்பார்த்தது—ஏர் கண்டிஷனர், ரெப்ரிஜிரேட்டர் போன்ற லக்ஷுரி பொருள்களுக்கு விற்பனை வரியைக் கூடுதலாக ஆக்கியிருந்தால் சாதாரண மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள்—அப்படிச் செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன். செய்யவில்லை. உண்மையில் அது குறை என்று கருதுகிறேன்.

இன்னொன்று—வரிகளைப் புதியதாகப் போட்டிருக்கிறார்கள். அரசாங்க நிர்வாகத்திலே சிக்கனம் செய்வதற்கு ஏராளமான இடங்கள் இருக்கின்றன. எல்லா அரசாங்க நிர்வாகத்திலுமே அது உண்டு. இந்த அரசாங்கம் மட்டும் அதனை என்னவோ நினைக்கமாட்டேன் என்கிறார்கள். ஏராளமான வீண் விரயங்கள் ஏற்படுகின்றன. எல்லோருக்கும் தெரியும். அவற்றை எல்லாம் தவிர்க்க முன்வந்திருந்தால் புதிய வரிகளைப் போடாமல்



1974 ஆகஸ்ட் 20] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

தவிர்த்திருக்க முடியும் என்பது என் கருத்து. 400 கோடி ரூபாய் செலவில் 56 கோடி தான் பற்றுக்குறை—இது 13 சதவிகிதம், 14 சதவிகிதம்தான். தேவையற்ற செலவுகளைக் குறைத்துக் கொள்ள முன்வந்திருந்தாலே, இந்தப் பற்றுக்குறையை புதிய வரிகளைப் போடாமலேயே தவிர்த்திருக்கலாம். ஆகவே, எந்தெந்த வகைகளில் சிக்கனம் செய்யலாம் என்பதைப்பற்றி பரிசீலிக்க சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நிலையான குழு—ஸ்டாண்டிங் கமிட்டி—போட வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி போட்டால் அகில இந்தியா முழுவதிலும் சுற்றிப் பார்த்துவராத கமிட்டியாக அது இருக்குமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நீங்கள் பல இடங்களுக்குப் போய்ப் பார்க்கலாம். உறுப்பினர்கள் பல இடங்களுக்குப் போகிறபோதுதான் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அதைப்போய்ச் சிக்கனம் இல்லாத செலவு என்று சொல்வது தவறு.

***திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஒரு கமிட்டியைப் போடட்டும். பிறகு அது எப்படி செயலாற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம்.

அடுத்து. தனியாக பல நிதிகள் வசூலிக்கப்படுகின்றன—பல காரியங்களுக்கென்று. அந்த நிதி வசூலைப் பற்றி பல குறைபாடுகள்—பலமுறை இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒழுங்குபடுத்தியாக வேண்டும். பல தவறுகள் நடக்கின்றன—நிதி கொடுப்பவர்கள் பலவற்றை எதிர்பார்த்துக் கொடுக்கிறார்கள்—அவற்றுக்கு எல்லாம் இடமின்றி ரசீது அச்சிட்டு—இன்னார்தான் வசூலிக்கலாம் என்று வைத்து—அந்த நிதி வசூல் முறைப்படுத்துவதோடு, அதன் அக்கவுண்டுகள் எல்லாம் இந்த மன்றத்தின் முன்னால் வரும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக துணை மானியக் கோரிக்கையில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் வழங்குவதாக அறிவித்தார்கள் திராவிட முன்னேற்றக்

கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட கிளர்ச்சி அது. அதற்காக பென்ஷன் வழங்குகிறார்கள். இதுபோல பல்வேறு இயக்கங்களில்—பல கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்கள் இருக்கிறார்கள். விவசாயப் போராட்டம் நடந்தது—தொழிலாளர்கள் கிளர்ச்சிகள் நடக்கின்றன. பல பேர் உயிரிழந்திருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் கூட பென்ஷன் வழங்க முன்வந்தால் இந்த முறை சரியாக இருக்கும். ஒரு கட்சி ஆளுங்கட்சியாக இருக்கிறது என்கிற காரணத்தினால் கட்சியின் சார்பில் நடத்தப்பட்ட போராட்டங்களில் பங்கு கொண்டவர்களுக்குப் பரிசு வழங்குவது என்று சொன்னால்—எல்லாப் போராட்டங்களுக்குமே—எந்தக் கட்சி நடத்திய போராட்டமாக இருந்தாலும்—சம்பந்தப்பட்டவர்களுக்கு பென்ஷன் கொடுப்பீர்களானால் இதற்கு ஆட்சேபணை இல்லை. இந்திக் கிளர்ச்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுப்பது என்று தீர்மானித்துவிட்டபடியால் மற்ற போராட்டங்களிலும் ஈடுபட்டவர்களுக்கு பென்ஷன் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக கைத்தறியாளர்கள் இந்த மாநிலத்தில் அதிகமாக இருக்கிறார்கள். கைத்தறியாளர்களைப் பொறுத்தவரையிலே, சந்தானம் குழுவினுடைய பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. அவை இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. ஒரு மசோதா வந்திருக்கிறது, சில ரக துணிகளை இதற்கு ஒதுக்குவது என்று. அதை வரவேற்கிறேன். அதை விரைவிலே அமுல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பணிக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்த இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதுபோல் பல பரிந்துரைகளிருக்கின்றன. அவற்றையெல்லாம் நிறைவேற்ற அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, நெசவுத் தொழிலாளர்களுக்குக் கூலியைக் குறைத்து நிர்ணயித்திருக்கிறார்கள். இப்பொழுது கொடுத்து வருகின்ற கூலியே போதாது; ஏறி இருக்கின்ற விலைவாசியிலே அதனை குறைந்தபட்சம் இரண்டு மடங்காக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்





கொண்டிருக்கும்போது, அதனைக் குறைத்து அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அம்மாதிரி இல்லாமல் இப்பொழுதிருக்கிற கூலி விகிதங்களின் இருமடங்கையாவது அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, இப்பொழுது அரிசி வழங்குகிறார்கள். மூன்று கிலோ ஒரு வாரத்திற்கு ஒரு குடும்பத்திற்கு என்று கொடுக்கிறார்கள். அது போதாது. அதை அதிகப்படுத்த வேண்டும். விவசாயத் தொழிலாளர்கள், கைத்தறி தொழிலாளர்கள் ஆகிய கிராமப் புறங்களிலுள்ள தொழிலாளர்கள் இம்மாதிரி மிகச் சாதாரணமான நிலையிலே இருப்பவர்களுக்கு அது கிடைக்க வழியில்லை. அதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்ததாக, மின்சார வெட்டினாலும் ஆலைத் தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 'லே-ஆப்' நஷ்டஈடு கொடுப்பதில்லை. குறிப்பாக, டெம்பரரியாக இருப்பவர்களுக்குக் கொடுப்பதில்லை. சென்ற ஆண்டு கொடுத்தார்கள். இந்த ஆண்டு இன்னும் கொடுக்கவில்லை. அதனால் கோவையிலே வேலைநிறுத்த நோட்டீஸ் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஒரு போராட்டத்திற்கு வழி வகுக்காமல், அரசு இப்பிரச்சினையை உடனே தீர்த்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலுள்ள பைலட் கம்பெனி முதலாளி சட்ட விரோதமாக, கம்பெனியை மூடிவைத்துள்ளார். அந்த முதலாளி சட்டவிரோதமாக, 150 தொழிலாளிகளை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார். வேறு இடத்திலே லைசென்ஸ் இல்லாமல் அதனை நடத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறார். அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? லேபர் டிபார்ட்மெண்டிலே அது பல மாதங்களாக இருக்கிறது. 150 தொழிலாளர் குடும்பங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கு வங்கத்திலே சட்டமே செய்து இருக்கிறார்கள். இம்மாதிரி மூடிக் கிடக்கின்ற, லாக் அவுட் செய்யப்படுகின்ற கம்பெனிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று. இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிந்த பிறகு, முதலாளிகளது பிடிவாதத்தினாலே மூடிக் கிடக்கின்ற கம்பெனிகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கான அவசரச் சட்டம் இயற்றி, இந்தக் கம்பெனியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சின்னவேடம்பட்டி குளத்தைப் பற்றி அடிக்கடி சொல்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். சென்ற கூட்டத் தொடரிலேயே சொன்னார்கள், ஒத்துழைக்குமாறு கேட்டார்கள். ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். அதனை நிறைவேற்றி, அங்குள்ள நீர்ப்பாசனத் தட்டுப்பாட்டினை சீர்செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, கூடுதலாக பஸ் போக்குவரத்தைப் பற்றி. இப்பொழுது சேரன் போக்குவரத்திலே புதிதாக பஸ் விடவேண்டுமென்று கேட்டால், டீசல் பற்றாக்குறை காரணமாக, புதிதாக பஸ்கள் விடவேண்டாமென்று அரசினிடமிருந்து ஆணை வந்திருப்பதாகச் சொல்லி மறுக்கிறார்கள். ஆனால், இரண்டு நாளைக்கு முன்னால் அமைச்சரவர்கள், டீசல் பற்றாக்குறை அல்ல—அதிகமாக இந்த ஆண்டு வந்திருக்கிறது என்றார்கள். அப்படி இருக்கிற நேரத்திலே கூடுதல் பஸ்கள் விடத் தயங்கக் கூடாது என்று போக்குவரத்துக் கழகங்களுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

நீண்ட நேர தொலைதூர பஸ்களைப் பொறுத்தவரை, புதிதாக விடுதிகளைக் கட்டி, நல்ல உணவுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று அவர்கள் சொன்னார்கள். விடுதிகள் கட்டுவது என்று சொன்னால் காலம் பிடிக்கும். கட்டிடம் கட்டுவது நல்லதுதான். ஆனால், இடைக்காலத்திலாவது, ஒழுங்கான இடத்தில் உணவு கிடைக்க—சாப்பிட்டால், காலரா வரக்கூடிய இடத்தில் நிறுத்தாமல்—ஒழுங்கான இடத்தில் சாப்பிட, சாப்பிட வேண்டிய காலத்திலே நிறுத்த—மத்தியானம் சாப்பிட 3 மணிக்கு போகக்கூடாது, இரவுக்கு 11 மணிக்குக் போகக்கூடாது—ஒழுங்கான நேரத்திலே, ஒழுங்கான இடத்திலே, பஸ்களை நிறுத்த விடுதிகள் கட்டுகிறவரை இடைக்காலத்தில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபொழுது இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். ஒன்று டீசல் பற்றாக்குறை. டீசல் பற்றாக்குறையைப் பற்றி, மத்திய அரசு மிகத் தெளிவாக மாநில





அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. புதிய வழித் தடங்களை நாம் அனுமதித்தால் இன்றைக்கிருக்கிற அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக, கிட்டத்தட்ட ரூ. 1,600 கோடி செலவாகும். அந்த நிதி நெருக்கடியைத் தவிர்க்கும்பொருட்டு, அவர்கள் எல்லா மாநில அரசுகளுக்கும் கூடுமானவரை மிகமிக அவசியமிருந்தாலன்றி, புதிய வழித் தடங்களைத் தயவு செய்து அனுமதிக்காதீர்கள் என்று மாநில அரசுகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, நீண்ட தூர பேருந்துகளில் பயணம் செய்கிறவர்களுக்கு இடைக்காலத்தில் நல்ல வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறையினை ஏற்கனவே அரசாங்கம் உணர்ந்திருக்கிற காரணத்தாலே, எங்கெங்கு அவைகளைத் துரிதமாகச் செய்ய முடியுமோ, அவற்றை ஏற்கனவே செய்து வந்திருக்கிறோம். மதுரை, இன்னும் மற்ற இடங்களில் அத்தகைய வசதிகள், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், தரமான உணவு என்பது தனியாரிடத்திலே இருக்கிற வரையில், நாம் வேண்டுகோளாகத் தான் விடமுடியுமே தவிர, விரும்புவதை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் ஏற்படாது. குறைந்த காலத்தில் அந்த வசதிகளை ஏற்படுத்துவதற்கும் நீண்ட கால அடிப்படையில் அந்த வசதிகள் இருக்க வேண்டுமென்பதற்காகவும் நாமே அந்தக் கட்டிடங்களைக் கட்டத் திட்டமிடுகிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** புது வழித் தடங்களைப் பற்றி சொன்னார்கள். ஏற்கனவே, தனியார் ஓட்டிக்கொண்டிருந்த வழித் தடங்களில் பஸ்களை ஓட்டுவதற்கு மத்திய அரசு ஆணை குறுக்கே நிற்க முடியாதே, அதனைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அந்த பஸ்கள் ஓட வேண்டுமானாலும் டீசல் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, நம்முடைய அரசைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதேபோல், மத்திய அரசாங்கம் 'கம்பல்சரி டெபாசிட் ஸ்கீம்' கொண்டு வந்திருக்கிறதே, அவர் தொழிற்சங்கத் தலைவராயிற்றே, அது தொழிலாளர்களை வெகுவாகப் பாதிக்குமே, அவருடைய கட்சி கொள்கை என்ன என்று சொன்னால் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கடுமையாக எதிர்க்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலே.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, துணை மானியக் கோரிக்கைகளையும், மதிப்பீடுகள் அடங்கிய கோரிக்கைகளையும் என்னுடைய கட்சியின் சார்பாக வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மானியக் கோரிக்கைகளைப் பார்க்கும்போது, ரூ. 3 லட்சத்தை மாநிலத்தில் முஸ்லீம்கள் வணங்கக்கூடிய வணக்கத்தலங்களுடைய பரிபாலனத்திற்காக, அவற்றை ரிப்பேர் செய்ய ஒதுக்கப் பட்டிருப்பது கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன். முஸ்லீம் மக்களுடைய வணக்கத்தலங்கள் பராமரிப்புச் செலவுக்கு யாதொரு தொகையும் ஒதுக்கப்படாமலிருந்தது. ஆனால், அதே சமயத்திலே, எனது சகோதர இந்து வணக்கத் தலங்களுக்கு ஏறக்குறைய ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டு வந்தது. அதுகுறித்து நாங்கள்கூட நினைத்தோம், ஏன் எங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்று. ஆனால், நீதியை நிலைநாட்டக் கூடிய அரசு உண்மையிலேயே பரிந்து ரூ. 3 இலட்சத்தை அடையாளமாக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இது மிகக் குறைந்த தொகை. இன்னும் எதிர்காலத்தில், கூடுதல் தொகையை, சிறுபான்மை சமுதாயத்தின்மீது இரக்கம் கொண்டு ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அதேநேரத்தில் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, செங்கல்பட்டு தொழுநோய் நிலையத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு ரூ. 5 இலட்சம், ரூ. 6 இலட்சம் செலவு செய்வதாகப் பார்க்கிறேன். இந்த அரசு பெருமைப்படக்கூடிய,





மனிதாபிமான செயல் ஒன்று தொழுநோயாளிகளை வாழ்விப்பது. அந்தத் தொழுநோயாளிகள் மீது அரசு கொண்டுள்ள அபரிமிதமான பாசம் இருக்கிறதே அது எந்த மனித உள்ளத்தையும் வசீகரிக்க செய்யும்.

தொழுநோய் பிச்சைக்காரர்களைப் பற்றி யாருமே அக்கறை கொள்ளாத காலத்திலே, எத்தனையோ பேர்கள் வாய் நிறைய பேசிக்கொண்டு ஒன்றும் செய்யாத காலத்திலே, டாக்டர் கலைஞர் அவர்களது அரசுதான் பல்வேறு இடங்களிலே விடுதிகள் அமைத்து, இன்று அவர்கள் எல்லாம் சமுதாயத்திற்கு ஏற்ற முறையிலே மாற்றப்படுகின்ற நல்ல ஒரு காட்சியை நாங்கள் பார்க்கிறோம். வெறும் முகஸ்துதி அல்ல, பாராட்ட வேண்டுமென்ற நோக்கத்துக்காகப் பாராட்டவில்லை. உண்மையிலே இந்தப் பிரச்னையைப் பற்றி பேசுகிற நேரத்தில் என்னுடைய இருதயத்திலே சொல்லொணா மகிழ்ச்சி ஏற்படுகிறது; நல்லாசை என்னுடைய உள்ளத்திலே ஏற்படுகிறது. அரசாங்கமே எடுத்துக் கொண்டு, செங்கற்பட்டு தொழுநோய் விடுதியை பராமரிக்க விருப்பதைப் பாராட்டமலிருக்க முடியாது. இப்படிப்பட்ட மனிதாபிமான செயல்களால்தான் இந்த அரசு உலகத்திலுள்ள ஏனைய அரசுகளைவிட பாராட்டத்தக்க அரசு என்று கூற விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

அடுத்தபடியாக, குடிநீருக்கென்று ஏறக்குறைய 22 லட்சம் ரூபாய் இதிலே ஒதுக்கியிருக்கிறார்கள், அதிலே 5 லட்சம் ரூபாய் வரையில் திருச்சி மாவட்டத்திலே உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலிருந்து எனக்கு குறிப்பாக அரவக்குறிச்சியிலிருந்து தந்திகளும் கடிதங்களும் கண்டனத்துடனே, கோபத்துடனே வந்திருக்கின்றன, குடிநீர் கிடையாது, எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு மழைபொய்த்துவிட்டது இந்த ஆண்டு, தண்ணீர் கிடைக்கவில்லை. 100 அடி ஆழமுள்ள கிணறுகளில்கூட குடிக்கத் தண்ணீர் கிடையாது, குடிநீருக்காக மக்கள் 2 மைல் தூரம் வரையில் நடந்தால்கூட குடிநீர் கிடைக்கவில்லை, மக்கள் மிகுந்த அவதிப்படுகிறார்கள் என்று பல செய்திகள், பல தந்திகள் எல்லாம் கண்டனத்திற்குரியவகையில் அனுப்பியிருக்கிறார்கள் மக்கள்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஆகஸ்ட் 20

உடனடியாக அரசாங்கம் ஒரு தனித் திட்டம் தயாரித்து ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே விடுக்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு முதன் முறையாக என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தபோது ராசுபுரம் பாலத்திற்கு அடிக்கல் நாட்டி விட்டுச் சென்றார்கள். ஆனால் இன்னும் அந்த வேலை ஆரம்பிக்கப் படவில்லை. கிராம மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள், எம்.எல்.ஏ. நாடகம் ஆடியிருக்கிறார்போல் தெரிகிறது என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட வேலைகளை உடனடியாகத் தொடங்குவதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் கூட்டத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது அந்தத் தொகுதியின் வறட்சி நிலையைப் பார்த்துவிட்டு நான் நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப்பற்றி இந்த சட்ட மன்றத்திற்கு வந்ததற்குப் பிறகு 50 தடவைகளாவது பேசியிருக்கிறேன்—அந்த நொய்யலாற்றுத் திட்டத்தைப்பற்றி பரிசீலனை செய்கிறேன் என்று அந்தக் கூட்டத்திலே வாக்குறுதி தந்தார்கள், மாவட்ட ஆட்சித் தலைவரோடு அதுபற்றிப் பேசி அதை நிறைவேற்ற ஆவன செய்வேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு என்னைக் காண்பவர்கள் எல்லாம் நொய்யல் ஆற்றுத் திட்டம் என்ன ஆயிற்று என்று கேட்கிறார்கள். அதைச் செய்வது இந்த அரசுக்கும் இந்த எளியவனுக்கும் நற்பெயரைத் தேடித்தரக்கூடியது; அந்தத் திட்டத்தை இந்த சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே சேர்த்து அடையாளமாக ஒரு தொகை ஒதுக்கப்படும் என்று ஆசையோடு எதிர்பார்த்தேன், ஆனால் ஏமாற்றம் அளிக்கிறது. எப்படியாவது இந்த ஆண்டிற்குள் அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று எவ்வளவு பணிவாக வேண்டுகோள் விடுக்க முடியுமோ அவ்வளவு பணிவாக வேண்டுகோள் விடுக்கிறேன், நொய்யலாற்றில் தொப்பம்பட்டி பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதையும் பரிசீலனை செய்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 20] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பள்ளபட்டி போக்குவரத்தை பொறுத்தவரையில் கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாக தொலைதூர வண்டி வேண்டுமென்று கேட்டோம். இதை டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொலைதூர பஸ் வேண்டுமென்று நாங்கள் கேட்டதற்கு டைரக்டர் எழுதியிருக்கிறார், தாராபுரம் வழியாகப் போவதைவிட பள்ளப்பட்டி வழியாகப் போவது தூரமாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் இந்தச் சபையிலே ஒரு அறைகூவலாக விடுக்க விரும்புகிறேன். பள்ளபட்டி வழி தூரம் குறைந்த வழிதான், அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், இல்லாவிட்டால் அரசு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன், எங்களுடைய நியாயமான கோரிக்கைக்கு மாறாக உண்மை புரியாமல் அதிகாரிகள் அமைச்சரவைக்குத் தவறான தகவல்களைத் தருகிறார்கள். ஏன் அப்படித் தருகிறார்கள் என்று புரியவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தகவல்கள் தவறாக இருக்குமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அமைச்சர் அவர்கள் கூறிய அந்த வார்த்தை எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நிச்சயமாக நடவடிக்கை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவைக்கும் பள்ளபட்டி வழியாக பஸ் விடவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், டீசல் கணக்கு எல்லாம் சொல்லக்கூடாது, டீசல் பஞ்சம் வருவதற்கு முன்னாலேயே நாங்கள் அந்தக் கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறோம், ஒரு தடவை டயர் பஞ்சம் என்று சொன்னார்கள், அடுத்த தடவை டீசல் பஞ்சம் என்று சொல்கிறார்கள், இப்படி ஏதேனும் ஒரு பஞ்சம் நாட்டிலே இருந்துகொண்டுதான் இருக்கும், பஞ்சத்திற்கும் பேர்போன நாடு இது. ஆகவே மற்றப்பகுதிகளுக்குச் செய்வதைப்போன்று எங்கள் தொகுதிக்கும் பயன்கள் ஏற்படும்படி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சினிமா சம்பந்தப்பட்டவரையில் என்னுடைய கட்சியின் கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன், முதலமைச்சர் அவர்களுக்கு மிரட்டல்விடுகிறார்கள், வரியை

நீக்கினால் அல்லது குறைத்தாலன்றி திறக்கமாட்டோம் தியேட்டர்களை என்று ஆர்ப்பரிக்கிறார்கள், நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பயமுறுத்தல்களுக்கு எல்லாம் நீங்கள் அஞ்ச வேண்டாம், நேரடியாக மக்களைப் பாதித்த குதிரைப் பந்தயத்தையும், மதுவிலக்கையும் ஒழித்தீர்கள் நீங்கள். மறைமுகமாக மக்களைப் பாதிக்கக்கூடிய இந்த சினிமாவையும் ஒழிக்கவேண்டும். வயிற்றுக்கு உணவு இல்லாவிட்டாலுங்கூட பார்க்கிறார்கள், இந்தநிலையிலேகூட நடிகர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மாதத்திற்குப் பெறுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது இந்தக் கேவலமான சிறிய தொழிலுக்கு எந்தவிதமான பிரதிபிரயோசனமும் இல்லாத தொழிலுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் தரப்படுகிறது என்று சொல்லும்போது நான் வேதனைப் படுகிறேன்; என்னைப் போன்றவர்கள் 20, 25 ஆண்டுகாலமாக சினிமா பார்க்காததால் வெறுப்புணர்ச்சி ஏற்படலாம், சினிமாவை பார்க்கிறவர்களுக்கு விருப்பம் இருக்கலாம்; இந்தத் தொழிலுக்கு இத்தனை பெரிய தொகை விடப்படுகிறது என்ற நிலையில் அதற்காக வரிகள் போடுவது நியாயமானது, முதலமைச்சர் அவர்கள் இதிலே பிடிவாதமாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன, 6.6 கோடி ரூபாய் அளவிற்கு மானியம் ஒதுக்கவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த சபையிலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். புதிய தொழில்கள் என்று சொல்கிறபோது தஞ்சை மாவட்டத்திலே வேதாரண்யம் பகுதியிலே சுமார் 75 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உப்பு விளைந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு மெரைன் காம்பளக்ஸ் ஆரம்பிக்கலாம் என்று தொழில் வல்லுநர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டால் 6 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லி



யிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மாதிரியான தொழிற்சாலையை அங்கு ஆரம்பிப்பதன் மூலமாக தமிழ்நாட்டில் 6 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற நிலையை ஏற்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றும் தாழ்த்தப்பட்டோர். பின்தங்கியோர் குழந்தைகள் படிப்பதற்காக ஆண்டு வருமானமாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 2,500 ரூபாயாக இருந்ததை 3,000 ரூபாயாக உயர்த்தியும், பின்தங்கியோர் உடைய குழந்தைகளுக்கு 2,000 ரூபாயாக இருந்ததை 2,500 ரூபாயாக உயர்த்தியும் அரசு ஆணையிட்டிருக்கிறது, இருந்தாலும் அது போதுமானதல்ல, மாநில ஆலோசனைக் கமிட்டி தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் வருவாய் நிலை 5,000க்கு உயர்த்தப் படவேண்டுமென்றும், பின்தங்கியோர்களுக்கு 4,500 ஆக உயர்த்தப் படவேண்டுமென்றும் அரசுககு சிபாரிசு செய்திருக்கிறது. அம்மாதிரி அரசு உயர்த்துவதன் மூலமாக தாழ்த்தப்பட்ட மாணவர்களாக இருந்தாலும் பின்தங்கிய மாணவர்களாக இருந்தாலும் பரிபூரணமாக உதவிபெறக்கூடிய நிலைமை இருக்கும். உதாரணமாக பியூன் வேலை செய்கிறவர்கள் பிள்ளைகள்கூட அந்த உதவியைப் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அதை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக இந்த அவையிலே கூறிவந்திருக்கின்ற, பல அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடு கட்டிக்கொடுப்பதற்காக ஒரு வாரியத்தை அரசு அமைத்திருக்கிறது. ஆனால் கட்டப்படுகிற வீடுகளுக்கு குறைவான தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது 3,500 ரூபாயை வைத்துக்கொண்டு வீடுகளை இந்தக் காலத்திலே கட்ட முடியாது என்று சொல்லி ஒப்பந்தக்காரர்கள் வருவதற்கு மறுக்கிறார்கள். வேலை இதனால் தாமதமாகிறது, அது மாத்திரமல்ல; சிமிண்ட் கிடைக்கவில்லை. ஒப்பந்தக்காரர்களை வைத்து அரசாங்கம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. அரசாங்கமே வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளை கட்டிக் கொடுப்பதை போன்று அரசாங்கமே இதற்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு 1,500 மக்கள் கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், 1,500 மக்களுக்குக் குறைந்திருந்தாலும் இணைப்புச் சாலைகள் அமைக்கக்கூடிய திட்டம் மிக நல்ல திட்டம் ஆகும்.

கிராமப்புறங்களில் நடப்பதற்குச் சரியான பாதையில்லாமல் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும் இந்த வேலைகளைச் செய்வதற்கு பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கக்கூடாது. பஞ்சாயத்து யூனியன்கள் அல்லது பஞ்சாயத்துக்களில் செய்யப்படும் வேலைகள் பிரயோசனம் இல்லாத வேலைகளாக இன்றையதினம் இருக்கின்றன. ஆகவே, இதற்கென்று தனியாகவே பொறியாளர்களைப்போட்டு அதன் மூலமாக ஹைவேஸ் இலாக்கா அல்லது பி.டபிள்யூ. டி. மூலமாக, கட்டிடம் கட்டுதல் இன்னும் மற்ற வேலைகளைச் செய்வதைப் போல இந்தச் சாலை அமைப்புத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக கூட்டுறவு முறையிலே சர்க்கரை ஆலையை ஆரம்பிக்கப் போவதாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் விவசாய காலங்களைத் தவிர மற்றக் காலங்களில் வேலையில்லாமல் விவசாயிகளும், தொழிலாளர்களும் வேதனைப் படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தஞ்சை ஜில்லாவில் அதிகமான கரும்பாலைகளை ஆரம்பிக்க வேண்டும். எனவே, இம்மாதிரி கரும்பாலைகளை ஆரம்பிக்கும் பொழுது நல்ல வாய்ப்பு வசதி உள்ள பிரதேசங்களாகப் பார்த்து ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவின் தீமையை அறிந்தபிறகு அதை விலக்குவதற்கு அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்வதை நான் பாராட்டுகிறேன். இதனால் ஏழை எளிய மக்கள் நன்மை பெறுவார்கள். ஆனால் இதில் அரசாங்கம் உஷாராக இருக்க வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சக் கூடியவர்கள் தானாகவே உற்பத்தியாவார்கள். இதற்கு முன்னால் அப்படிப் பழக்கப்பட்டவர்கள் நிறைய இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு விசேஷ போலீஸ் படைகளை



உருவாக்க வேண்டும். இன்றுள்ள போலீசாரை நம்பினால் அவர்கள் அதற்கு உடந்தையாகவேகூட இருப்பார்கள். ஆகவே, இன்றுள்ள போலீசாரை அதன்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்வதற்குப் பதிலாக விசேஷ போலீஸ் படைகளை நிறுவி அதன் மூலமாக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சினிமா தியேட்டர்களை அரசுடைமையாக்குவது அரசாங்க கட்சியின் கொள்கையாக இருந்துகொண்டிருக்கிறது. முதலமைச்சரவர்கள்கூட எங்கேயோ கூறியிருக்கிறார்கள், 25 கோடி ரூபாய் வருவாய் சினிமா தியேட்டர்களிலிருந்து வருவதற்கு பதிலாக 12 கோடி ரூபாய்தான் கொடுக்கிறார்கள், பாக்கி 13 கோடி ரூபாயை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இம்மாதிரி ஏமாற்றுகின்ற கும்பலிடமிருந்து வரி வசூலிப்பதைவிட அரசாங்கமே ஏற்று நடத்தினால் அதன் ஆதாயத்தைக்கொண்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பயன்படுத்த முடியுமென்று கருதுகிறேன்.

இன்றைக்கு குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். அதில் வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்க வேண்டும் அல்லது அவர்களை வேறு தொழிற்சாலைகளில் வேலை கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சத்திரம் இலாக்காவிலே வேலை செய்தவர்கள் வயதானவர்கள் என்று நீக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் சுமார் 10 பேர் அப்படி இருக்கிறார்கள். எங்களுடைய கட்சித் தலைவர் மணலி அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு பென்ஷன் வழங்க வேண்டுமென்று. முதலமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒருவர் இறந்துவிட்டார். மீதம் 9 பேர்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பென்ஷன் கிடைக்க அரசாங்கம் உடனடியாக உத்தரவிட வேண்டும்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 ஆகஸ்ட் 20

அந்த வகையிலே இன்றையதினம் நமது அரசு கொண்டு வந்துள்ள இந்த துணை நிதிநிலை அறிக்கையில் கேட்டிருக்கும் ரூபாய் மிகவும் நியாயமானது, விதிக்கப்பட்டிருக்கும் வரிகள் நியாயமானதாக விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி நான் அமர்கிறேன்.

*** திரு. எம். ஆர். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசானது குதிரைப் பந்தய ஒழிப்பு, மதுவிலக்கு ஆகிய இரண்டு சிறப்பு நிலைமைகளை ஏற்படுத்தி, அது மக்களுக்கு நல்ல மகிழ்ச்சிகரமான நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் இந்தப் பிரச்னைகள் அகில இந்திய பிரச்னைகள் ஆகும். அகில இந்தியாவை ஆளுகின்ற மத்திய சர்க்கார் நிச்சயமாக இதைக் கவனிக்க வேண்டும்.

குதிரைப் பந்தய ஒழிப்பு, மதுவிலக்கு ஆகியவற்றை எல்லா மாநிலங்களிலும் செய்வதற்கு அது முன்வரவேண்டும். அதற்காக நமது மாநிலத்தில் உள்ள அகில இந்திய கட்சிகளெல்லாம் முயற்சியெடுத்துப் பாடுபட்டால் நன்றாக இருக்கும். நமது அரசு ஏறக்குறைய ஏழாண்டுக்காலமாக நல்லமுறையில் நல்ல பணிகளை ஆற்றி வருகிறது. அதைக் கொள்கை அடிப்படையில் எந்த எதிர்க் கட்சியும் குறை கூறுவதில்லை. அவர்கள் ஏதோ பொறாமையின் காரணமாக இது தவறு, அது தவறு என்று சொல்கிறார்களே தவிர, கொள்கையளவில் என்ன சட்டதிட்டங்களை இந்த அரசு தீட்டி அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று யாராவது சொல்கிறார்களா என்றால் இல்லை. ஏற்கனவே கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதமாக இருந்தாலும் சரி, மற்றபடி இதுபோன்ற பட்ஜெட் கூட்டங்களிலேயும் சரி யாரும் அதுபற்றி எதுவும் சொல்வதில்லை. ஆனால் இங்கே அவர்கள் சொல்வதெல்லாம் தவறான காரணங்களாக இருக்கின்றனவே தவிர, திட்டங்களைக் குறை கூற முடிவதில்லை.



1974 ஆகஸ்ட் 20] [திரு. எம். ஆர். கண்ணன்]

குதிரைப் பந்தய ஒழிப்பு, மதுவிலக்கு ஆகியவற்றைப் பற்றிப் பாராட்டவில்லை என்றாலும்கூட, அதுகூட தேர்தலுக்காகப் பயந்து செய்தது என்று எண்ணுகிறார்கள். தேர்தலுக்காக என்று அவர்கள் எண்ணப்படியே ஒத்துக்கொண்டாலும்கூட இது நல்ல விஷயம்தானே, பாராட்டலாம் என்று மனப்பூர்வமாகப் பாராட்டியிருக்கிறார்களா என்றால் பாராட்டவில்லை.

பல ஆண்டுகளாக எத்தனையோ முதல்வர்கள் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் கீர்த்தியும் கித்தாப்பும் பெற்ற நிலையில் கூட இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்றுள்ள முதல்வர் அவர்கள் குடும்ப நலத்திட்டம் என்ற ஒரு திட்டத்தை இந்த மாநிலத்தில் ஏற்படுத்தித் தந்து அதன் மூலமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நல்ல பலன்களை அடையச் செய்திருக்கிறார்கள். இதை எந்தக் கட்சிக்காரர்களாவது பாராட்டுகிறார்களா என்றால் பாராட்டவில்லை. அப்படிப் பாராட்டினால் அவர்கள் கௌரவம் குறையும் என்று நினைக்கிறார்கள் போலும்.

மக்கள் நலத்திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், கை ரிக்ஷாக்கள் ஒழிப்புத் திட்டம், தொழுநோய் வியாதியஸ்தர்களைப் பாதுகாக்கும் திட்டம், ஊனமுற்றோருக்கான திட்டம, குடிசை மாற்று வாரியம் போன்றவைகளை பெரிய சாதனைகள் என்று பிற கட்சிக்காரர்கள் எண்ணாவிட்டாலும், மக்களுக்குச் செய்ய வேண்டிய எத்தனையோ காரியங்களை இந்த ஆட்சியிலே உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. இன்றையதினம் அண்ணாவின் வழி நின்று, அண்ணாவின் கொள்கைகளை இந்த அரசிலுள்ளவர்கள் பின்பற்றி வருகிறார்கள்.

இங்கேகூட மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள், நம்மிடமிருந்து பிரிந்து சென்றவர்களைப் பங்காளிகள் என்று. அந்தப் பங்காளிக் கட்சிக்காரர்கள், அண்ணாவின் கொள்கையை இந்தக் கட்சி எந்தெந்த விதத்திலே மீறி இருக்கிறது என்று அவர்கள் யாராவது சொல்லி அதன் காரணமாக நாங்கள் புதுக்கட்சியை அமைத்திருக்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்கள் சொல்வதெல்லாம், இன்றுள்ள முதல்வரவர்கள் ஒரு சர்வாதிகாரி என்றும், இப்படி நடவடிக்கை எடுத்தார் அப்படி நடவடிக்கை எடுத்தார் என்றும், தனிப்பட்ட

முறையில் தாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அதை வைத்து சொல்லி அந்தக் கட்சியிலே நுழைந்துகொள்கிறார்கள். அவர்கள் அண்ணாவின் கொள்கையிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் மாறி இருக்கிறது, ஆகவே, இப்படி ஒரு புதிய கட்சியை ஆரம்பித்திருக்கிறோம் என்று சொல்கிறார்களா என்றால் இல்லை. மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள்கூட நாங்களெல்லாம் மனமுருகும் விதத்தில், நான் குழந்தைப் பருவத்திலேயிருந்து, இன்றுள்ள முதல்வரவர்கள் எந்த வயதில் அரசியலில் ஈடுபட்டார்களோ அந்த வயதிலிருந்தே நானும் கட்சிக்காகப் பாடுபட்டேன் என்று நாங்கள் மனமுருகும் விதத்தில் சொன்னார்கள். அவர்களிடம் ஏதாவது சிறு குறை இந்தக் கட்சியில் ஏற்பட்டிருக்கலாம், அதற்காக அவர்களை டிஸ்மிஸ் செய்திருக்கலாம். 'அப்படிச் செய்தது சரியோ, தவறோ, தவறு என்று அவர்கள் சொல்வதைப் போலவே சொன்னாலும், அதற்காகத் தனியாக ஒரு கட்சியை அமைக்க வேண்டுமா' ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணை மானியத்தைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** இந்த ஆட்சி நல்லமுறையில் நடைபெற நல்லமுறையில் எல்லாக் கட்சி அமைப்புகளும் பாடுபட்டு ஒத்துழைத்தால் நல்லமுறையில் இருக்கும். கட்சியிலே ஏதாவது குறைபாடு இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அதற்காகப் பிரிந்து சென்று தனியாகக் கட்சி ஆரம்பிக்க வேண்டுமென்பது இல்லை. உண்மையிலேயே அண்ணாவின் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டுமே தவிர அண்ணா ஏற்படுத்திய கட்சியை உடைக்கப் பார்க்கக்கூடாது. அண்ணா அவர்கள் எந்தக் காரியத்தையும் ஒழிக்க மாட்டார்கள். அதைத் திருத்தத்தான் விரும்புவார்கள். அவரைப் பின்பற்றுகின்றவர்கள், தவறுகள் இருந்தால் அதைத் திருத்தி வாழலாம். அவர்கள் அந்த அடிப்படையில் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது முதல்வரவர்கள் போலீஸ் கமிஷன், பிற்பட்டோர்க்கான கமிஷன், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்காக பே கமிஷன் போன்றவற்றை ஏற்படுத்தி நல்லமுறையிலே எல்லா மக்களுக்கும் பணியாற்றியிருக்கிறார்கள்.





இருபத்தைந்து கோடி ரூபாயை ஒரே ஆண்டில் சர்க்கார் துறையில் வேலை செய்பவர்களுக்கு அதிகப்படி சம்பளமாக இந்த அரசு கொடுத்திருக்கிறது. இதுவரைக்கும் எந்த ஒரு முதலமைச்சருடைய காலத்திலும் இல்லாத அளவுக்குச் சிறப்பாகக் கொடுத்திருக்கிறார்கள். சாதாரண மக்களுக்கு வரி விதிக்காமல் சிறப்பான பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள்.

அதோடு தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதிகளை எல்லாம் புதுப்பித்து தமிழ் மக்களின் பெருமையையும், தமிழ் நாட்டின் பெருமையையும் பல துறைகளில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். தமிழர்கள் என்பவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஊறு செய்யக்கூடாது.

நாட்டு விடுதலைக்கும் மொழி விடுதலைக்கும் பாடுபட்டவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் மூன்று மாதம் சிறை சென்றவர்களுக்குத்தான் இந்தத் தொகை கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். மூன்று மாதம், மூன்று வாரம், 15 நாட்கள் என்றெல்லாம் தண்டனை காலத்தை நிர்ணயிப்பது மாஜிஸ்ட்ரேட். அந்தக் கிளர்ச்சியிலே ஜெயிலுக்குச் சென்றார்களா என்று பார்க்க வேண்டுமே தவிர, மூன்று மாதம் சிறையிலே இருந்திருக்க வேண்டுமென்ற வரையறை வைக்கக்கூடாது. இதைச் சர்க்கார் கவனிப்பார்கள் என்று கருதுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமுதாயத்தில் எல்லா இடங்களிலும் எல்லா நிலையிலும் சமத்துவம் வழங்க தமிழக அரசு பாடுபட்டு வருகிறது. அகில இந்தியக் கட்சிக்காரர்கள், காந்திஜியின் வாரிசு என்று சொல்பவர்கள் எல்லாம் இதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிசை மாற்று வாரியத்தின் மூலமும் நல்ல பணியாற்றி வருகிறார்கள். யாருக்கு அந்த வீடுகள் அலாட் செய்யப்படுகிறதோ அவர்களே குடியிருக்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டும். சிலர் விற்று விட்டுப் போய்விடுகிற நிலை இருக்கிறது.

சாதிக் கட்சிகள் நாட்டிலே நிறைய இருக்கின்றன. இந்த சாதிகளை ஒழிக்க சர்க்கார் ஒரு முறையை வகுக்கவேண்டும். என்னென்ன சாதிகள் இருக்கின்றனவோ அந்த சாதி மக்களுக்

இடையே பாரபட்சம் இல்லாமல் சாதி அடிப்படையில் சமத்துவமாக எல்லோருக்கும் வேலைவாய்ப்பு, மற்ற சலுகைகள் வழங்க வேண்டும். எங்கள் கட்சி சாதியை விரும்புவதில்லை. என்றாலும் சிலர் எங்கள் சாதி என்று சொல்லிக் கூப்பிடுகிறார்கள். சாதி நாட்டில் ஒரு உறுப்பு மாதிரி இருக்கிறது. எல்லோருக்கும் சமத்துவமாக சந்தர்ப்பம் கொடுத்துவிட்டால் சாதி ஒழிந்து விடும்.

மத விழாக்கள் கூடியவரை கோயிலுக்குள்ளேயே இருக்க வேண்டுமே தவிர வெளியே வரக்கூடாது. தேர், திருவிழா என்று சொல்லி கொட்டு மேளம் கொட்டிக் கொண்டு தெருவில் வரக் கூடாது. அப்படி வரும்போது இது முஸ்லிம் தெரு, இது இந்து தெரு என்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. ஆகவே, மத விழாக்களைக் கோயிலுக்குள்ளேயே வைத்து முடித்துக் கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பட்டது)

*** திருமதி சத்தியவாணிமுத்து:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்ட முதல் துணை மதிப்பீட்டின்மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மூன்றாவது பாராவில் தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் நலனைக் கவனிப்பதற்காக உள்ள மாவட்ட நல அதிகாரிகள் இரு துறைகளுக்கும் ஒருவராக இருந்ததை மாற்றி ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாக மாவட்ட நல அதிகாரிகளை நியமிப்பதற்கு இத்துணை மதிப்பீட்டில் கோரிக்கை வைக்கப் பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி யடைகிறேன். நியமிக்கப்பட்டிருக்கும் மாவட்ட நல அதிகாரிகள் சரியான முறையில் செயல்பட வேண்டுமென்பது தான் என்னுடைய அனுபவ பூர்வமான கோரிக்கையாகும்.

நான் அதைப் பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது குறிப்பிட்டபோது அதற்குப் பதிலளிக்கும்போது முதலமைச்சர் அவர்கள் 'நான் வயதானவர்களைப் போடுவதாகக் குறை கூறினாலும், நானே வயதானவர்களை நியமிக்குமாறு செய்ததாக' ஒரு குறிப்பினைப் படித்துக் காட்டினார்கள். வயதானவர்களைப்





போடக்கூடாது என்று சொல்லிவிட்டு இவர்களே வயதானவர் களைப் போட்டிருக்கிறார்களே என்று சொன்னார்கள். முதலமைச்சர், அவர்கள் இப்படி மிக மிகத் தவறான ஒரு தகவலை இந்த மன்றத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

நான் இதைப் பற்றி ஏற்கனவே ரெவின்யூ செகரடரியாக இருந்த திரு. பசுபதி அவர்களோடு பேசியிருக்கிறேன். எதற்காக வயதானவர்களை மாவட்ட நல அதிகாரிகளாகப் போடுகிறீர்கள்?, ஏன் இளைஞர்களைப் போடக்கூடாது என்று கேட்டேன். அவர் சொன்ன விளக்கம்—சாதாரணமாக மாவட்ட நல அதிகாரியாக வரவேண்டுமானால் டெபுடி கலெக்டர் ராங்கில் வரவேண்டும். அவர்கள் நேரடி ரெக்ரூட்மெண்டில் வரமுடியாது. ஆர். ஐ., தாசில்தார், டெபுடி கலெக்டர் என்ற வகையிலே படிப் படியாகத் தான் வரவேண்டும். அப்படி வருவதற்கு 45, 50 வயது ஆகிவிடும். ஆகவே, அப்படிப்பட்டவர்களைத்தான் இந்த வேலைக்குப் போட முடியும் என்று சொன்னார்கள். ஆகவே, ஏற்கனவே நலத் துறை அதிகாரிகளாகப் பணியாற்றி வேறு துறைக்குச் சென்ற ராமநாதன், பூச்சியப்பன், தேவராசன், மனோன்மணி ஆகிய நால்வரையும் மறுபடியும் மாவட்ட நல அதிகாரிகளாகப் போட வேண்டுமென்று சொன்னேன். அவர்களுக்கு அந்தப் பதவியை நான் கொடுக்கவில்லை. ஏற்கனவே அவர்கள் அந்தப் பதவியில் பணியாற்றி இடைக்காலத்தில் வேறு இடத்திற்கு மாற்றப் பட்டவர்கள். அவர்களை மாற்றிவிட்டுப் புதியவர்களைக் கொண்டு வந்து போட்டார்கள். ஏற்கனவே பணியாற்றியவர்களை, தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மனோன்மணி, தேவராசன், பூச்சியப்பனையும், இன்னொருவர் வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவரையும் ஏற்கனவே பணியாற்றிய காரணத்தால் மறுபடியும் இந்தப் பணியில் போடுமாறு சொன்னேன். டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர்களாக நான் அவர்களுக்கு போஸ்டிங் கொடுக்க வில்லை. ரெவின்யூ துறையிலிருந்து ஏற்கனவே அவர்களுக்கு அந்தப் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. நேரடி ரெக்ரூட்மெண்டில் போட முடியாது என்று சொன்ன காரணத்தால் ஏற்கனவே இருந்தவர்களை மாற்ற வேண்டுமென்ற முறையில் அவர்களையே மறுபடியும் போட வேண்டுமென்று சொன்னேன். இதையெல்லாம் விட்டுவிட்டு.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1974 ஆகஸ்ட் 20

The following Deputy Collectors may be posted as District Welfare Officers

என்ற அந்த வார்த்தைய மட்டும் எடுத்து வைத்துக் கொண்டு நானே அவர்களைப் போட்டதாக ஒரு தவறான தகவலை முதலமைச்சர் அவர்கள் சபைக்குத் தருகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தவறான தகவலைச் சொன்னேன், தவறான தகவலைச் சொன்னேன் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் பதவி விலக்கப்பட்ட பிறகு பத்திரிகைக்காரர்களுக்குக் கொடுத்த பேட்டியில் மாவட்ட நல அதிகாரிகளாக வயதானவர்களைப் போட்டு விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்தியிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் சொன்னேன். இன்னின்னாரைப் போட வேண்டுமென்று அவர்கள் பெயரை எழுதிக் கொடுத்தார்கள்; அவர்களைத்தான் ரெவின்யூ மினிஸ்டர் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் சொல்லுவது தவறு என்று சொன்னேன். அதைப் படித்துக் காட்டினேன். அந்த அதிகாரிகளைப் போடுவதில் இருக்கின்ற முறைகளை அவர்கள் இப்போது விளக்குகிறார்கள். அது வேறு விவகாரம். அந்த முறைகளை மாற்றியமைக்க வேண்டுமென்றால் அமைச்சரவைக் கூட்டத்திலோ என்னிடத்திலோ வாதித்திருக்கலாம். அதிகாரிடத்தில் பேசியதில் இருக்கின்ற முறைக்கேற்ப எழுதிக் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். அரசு வயதானவர்களை மாவட்ட நல அதிகாரிகளாகப் போட்டுவிட்டதாகப் பத்திரிகையாளர்களிடத்தில் குற்றம் சாட்டுகின்ற வகையில் சொன்னதால் யார் போட்டது என்பதற்காகப் படித்துக் காட்டினேன். இது தவறான தகவலா அல்லது அவர்கள் கூறுவது தவறான தகவலா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த நான்கு பேரையும் டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஆபீசராகப் போடுங்கள் என்று நான் சொல்லிப் போடவில்லை. நானே போட முடியாது. அவர்கள் ஏற்கனவே நல அதிகாரிகளாகப் பணியாற்றியவர்கள். அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டார்கள். திரு. பூச்சியப்பன் வேறு பதவிக்கு மாற்றப்பட்டார், ராமனுதன் மதுரைக்கு மாற்றப்பட்டார். மனோன்மணி வேறு பகுதிக்கு மாற்றப்பட்டார். இவர்கள் ஏற்கனவே பணியாற்றியவர்கள். இந்த நான்கு பேரிலே



1974 ஆகஸ்ட் 20] [திருமதி சத்தியவாணிமுத்து]

மூன்று பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக அவர்களை மறுபடியும் இங்கே போட வேண்டுமென்று சொன்னேனே தவிர, நான் அவர்களை இந்தப் பதவியில்

(பிற்பகல் 12-30)

போடவில்லை. நான் போட்டதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிற தகவல் இப்போதும் தவறான தகவல்தான். அப்படிப்பட்ட தவறான தகவல்களைச் சொல்லக்கூடாது. அண்ணாவின் பெயரால் இருக்கிற உரகடம் அனாதை இல்லத்திற்கு நான் பணம் கேட்டதாகவும் அதைக் கொடுக்க மறுத்தால் 19-ம் தேதி கேட்டு 29-ம் தேதி நான் மன எரிச்சலால் பேசியதாகக் கூறினார்கள். நான் பேசியது 29-ம் தேதி அல்ல. மார்ச் 21-ம் தேதி.

**திரு. ஆலடி. அருணா:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு வேறு ஒன்றும் பேசக்கூடாது.

**திரு. ஆலடி அருணா:** முதல் அமைச்சர் அவர்கள் தவறான தகவலை கொடுப்பதாக பொறுப்பான பதவியில் இருந்தவர்கள் சொல்கிறார்கள். இதில் யார் சொல்வது உண்மையான தகவல் என்பது மன்றத்திற்குத் தெரியவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது சரியான தகவலா அல்லது முன்னாள் அமைச்சர் சொல்வது சரியான தகவலா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** முதலில் வயதானவர்கள் பதவி வகிக்கிறார்களா என்பது ஆராய வேண்டும். ஓய்வு பெறுவதற்கு என்று ஒரு வயது இருக்கிறது. அந்த வயதுக்கு மேற்பட்ட வயதுள்ளவர்கள் யாரையாவது போட்டிருந்தால் சொல்லலாம். ஐம்பத்தைந்து வயது, 58-வயது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த வயதுக்குள் யார் வேண்டுமானாலும் அவரவர்கள் பொறுப்பேற்றிருக்கும் துறையில் பதவி வகிக்கலாம். எனவே வயதானவர்களை போட்டு விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றது. அவர்கள் எழுதியிருப்பதை படித்துக் காட்டினேன். மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கு எழுதிய குறிப்பில் இன்னின்ன ஆட்களை இன்னின்ன இடங்களுக்கு போடவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அதைத்தான் நான் வெளியிட்டேன். அதில் தவறு இல்லை.

[1974 ஆகஸ்ட் 20

**திருமதி சத்தியவாணிமுத்து:** மீண்டும் சொல்கிறேன். டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸர் யாராவது 30-35 வயது இருப்பவர்கள் இருக்கிறார்களா? சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஐம்பது வயது ஆனவர்களைப் போட வேண்டாம், இளைஞர்களே தேவை, இன்னின்னார்களைத்தான் இந்தப் பதவிகளில் போடவேண்டுமென்று ஏன் அந்தக் குறிப்பில் எழுதவில்லை?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, much has been said on either side. Why not the Government place all the orders so that we may know the facts.

**திருமதி சத்தியவாணிமுத்து:** முதல் அமைச்சர் அவர்கள் அந்தக் கோப்பினை தயவுசெய்து இந்த மன்றத்தில் வையுங்கள். அதில் நான் உத்தரவு போட்டேனா? நலத்துறை அதிகாரிகள் போஸ்டிங்க்கு உத்தரவு போட்டேனா அல்லது மாறுதல் செய்ய உத்தரவு போட்டேனா? போஸ்டிங்க்-க்கு நான் உத்தரவு போடவில்லை. நாற்பது வயதுக்கு மேல் உள்ளவர்களை ஏன் போடுகிறீர்கள் என்று கேட்டேன் ரெவின்யூ செகரடரியை. போஸ்டிங்க்-க்கு நான் உத்தரவு போட்டிருந்தால், அதைக் காண்பியுங்கள். நான் எனது இந்த சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்கிறேன். அந்த பைலைக் கொண்டுவாருங்கள், போஸ்டிங் போடுகிற அதிகாரமே எனக்குக் கிடையாது. ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தான் போஸ்டிங் போடவேண்டும். பூச்சியப்பன் யார் என்று தெரியாது. பைல் வந்தபிறகு கையெழுத்து போட்டேன். ஏன் அந்தக் கோப்பினை இந்தச் சட்டமன்றத்தில் வைக்கக் கூடாது? அதை வைத்துப்பாருங்களேன். அப்போது யார் சொன்னது சரி என்று தெரியும். உயர்ந்த இடத்தில் இருப்பதால் எதையும் சொல்லலாம் என்பதையும் தாழ்ந்த இடத்தில் இருக்கிற காரணத்தால் சொல்வது அத்தனையும் உண்மைக்குப் புறம்பானது என்பதையும் ஒப்புக்கொண்டு விடமுடியுமா. அந்த பைலை சட்ட மன்றத்தில் வையுங்கள்.

அட்ஹாக் கிராண்ட் இல்லை என்று உரகடத்திற்கு கிராண்ட் இல்லை என்று, சி. வி. எஸ். மணி கையெழுந்து போடுகிறார். 28—5—74-ல், நான் பேசியது 21—3—74-ல், என்னை நீக்கியது 3—5—74-ல், உத்தரவு அப்புறம் வருகிறது 19-ம் தேதி.



1974 ஆகஸ்ட் 20]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் தொகையைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு, டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் கொடுக்க வேண்டாம் என்று எழுதிய பிறகும் கொடுக்கவேண்டும் என்றும் அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தர வேண்டும் என்று எழுதி அதிகாரிகள் எழுதியதற்கு இணங்க தருவதற்கில்லை. ஏனென்றால் அம்மையாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்த விடுதியை நடத்திக் கொண்டிருப்பதால் இதுபற்றி அரசின் மீது அவதூறு வரும் என்று எடுத்துச் சொல்லப்பட்ட பிறகு—நான் எழுதியிருக்கிறேன். முதல் அமைச்சர் எழுதிய பைல் எப்படி தெரியாமல் இருந்திருக்க முடியும்? தெரிந்துதான் இரண்டு நாட்களுக்குப் பிறகு இந்த சபையில் வந்து பேசினார் என்பது என் வாதம்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நேரில் சொன்னார்களே தவிர பைலில் அப்போது எழுதவில்லை. என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துகிறார்கள் என்று சொன்னால், அஞ்சுகம் இல்லம் அல்லது கருணாநிதி இல்லம் என்று வைத்திருந்தால்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அஞ்சுகம் இல்லம், கருணாநிதி இல்லம், எந்த இல்லம் வைத்திருந்தாலும் சரி இப்படிப் பட்ட ஒரு அவதூறு அரசாங்கத்திற்கு வரும் என்றால் நிச்சயமாக அதற்கு இணங்க மாட்டேன். இணங்க மாட்டேன் என்பதை நான் இங்கு மிகத் தெளிவாகச் சொல்லிக் கொல்கிறேன். அஞ்சுகம் இல்லம் அல்லது முத்துவேலர் இல்லம் அல்லது கருணாநிதி இல்லம் அல்லது எங்களை ஆளாக்கிய அண்ணா இல்லம் என்று அந்தப் பெயரில் ஒளிந்துகொண்டு அரசாங்கப் பணத்தை அவதூறாகச் செலவழிக்க இந்த அரசு என்றைக்கும் விரும்பாது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நடந்து கொண்டிருக்கிறது. அதைத்தான் சொன்னேன். அஞ்சுகம் இல்லம் என்று நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அஞ்சுகம் இல்லத்திற்கு அரசாங்கம் பணம் கொடுக்கவில்லை.

*திருமதி சத்தியவாணிமுத்து:* நீங்கள் அண்ணா இல்லத்திற்குக் கொடுக்கவில்லை. அப்படி கொடுக்கவில்லை என்பதற்காக அண்ணா இல்லத்தை, நடத்தாமல் விடபோவதில்லை. பிச்சை எடுத்தாவது அந்த இல்லத்தை நான் நிச்சயமாக நடத்துவேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* அண்ணாவின் பெயருக்கு இந்த அரசு எந்த அளவிற்கு மதிப்பு தருகிறது, அண்ணாவிற்கு எவ்வளவு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அண்ணாவின் பெயரால் எவ்வளவு எவ்வளவு ஸ்தாபனங்கள் வைத்திருக்கிறோம் என்பது தமிழ்நாடு மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால் அண்ணாவின் பெயரால் அரசாங்கப் பணத்தை விரயமாக்குவதை இந்த அரசு அனுமதிக்காது.

*திருமதி சத்தியவாணிமுத்து:* சிலர் அவரவர்கள் குடும்பத்தில் அண்ணாவின் பெயரால் என்ன செய்கிறார்கள், என்னென்ன நடைபெறுகின்றன என்பதை நினைவுபடுத்த சொன்னேனே தவிர. . . .

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* File- ஐப் பார்த்து வந்த பின்தான் பேச்சு.

The following Deputy Collectors may please be posted as District Welfare Officers :—

(1) Thiru Ramanathan, D.W.O., may be transferred and posted as D.W.O., Madurai, vice Thiru Bhuvarahaswamy, who may be transferred and posted as D.W.O., Tirunelveli.

(2) Thiru Manonmani. Assistant Commissioner, Urban Land Tax, Coimbatore, be transferred and posted as D.W.O., Dharmapuri.

(3) Thiru T. O. Puchiappan, Assistant Commissioner, Urban Land Tax, may be posted as D.W.O., Tiruchirappalli.

(4) Thiru C. Devarajan, District Planning Officer, may be transferred and posted as District Welfare Officer, Vellore.

(Signed) SATHIAVANIMUTHU.

Dated 6th September 1973.

*திருமதி சத்தியவாணிமுத்து:* அதே மனோன்மணி, தேவராசன், பூச்சியப்பன் இவர்கள் இதற்கு முன்னால் எந்தப் பதவியில் இருந்தார்கள்? முதன்முதலாக அவர்கள் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர்





ஆபீஸர்களாகபணியாற்றியிருக்கிறார்கள். என் வாதம் அதுதான். அப்போது யார் போட்டது அவர்களை அங்கு? இங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாதா. இதற்குமுன் பூச்சியப்பன் திருச்சி மாவட்ட நலத்துறை அதிகாரிதான் மனோன்மணி, செங்கற்பட்டு மாவட்ட நலத்துறை அதிகாரிதான். தேவராசன், வட ஆற்காடு மாவட்ட நலத்துறை அதிகாரியாக ஏற்கனவே இருந்தார். நலத்துறை அதிகாரிகளாக இருந்து அவர்கள் வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்ட பிறகு மீண்டும் அவர்களைப் போடுங்கள் என்று கேட்டேனே தவிர நானாகவே, டிஸ்ட்ரிக் வெல்பேர் ஆபீஸராக டெப்டி கலெக்டர்களைப் போடுங்கள் என்று சொல்லவில்லை. என்னிடம் அந்த பைலைக் கொடுங்கள். எந்தவரி என்று காட்டுகிறேன். அங்குவிட்டு இங்குவிட்டு இடையில் இருந்து படித்தால் என்ன அர்த்தம் பூச்சியப்பன் ஏற்கனவே டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீஸராக இருந்திருக்கிறார். நான் உத்தரவு போட்ட பிறகுதான், அவர் நலத்துறை அதிகாரியா? நான் உத்தரவு போட்ட பிறகுதான் மனோன்மனி நலத்துறை அதிகாரியா? தேவராசன் மாறுதல் கோரிய பிறகுதான் நலத்துறை அதிகாரியா? அதற்கு முன்னாலேயே அவர்கள் நலத்துறை அதிகாரிகளாகப் பணியாற்றி யிருக்கிறார்கள். திரும்பச் சொல்கிறேன். அந்த பைலை என்னிடம் கொடுங்கள். ஐந்தாறு தாள்கள் உள்ள பைல் அல்ல ஒரு திக் பைல். (Thick File) அதைக் கொண்டுவாருங்கள். அதிகாரிகள் உங்களை ஏமாற்று கிறார்கள். நீங்களும் ஏமாந்து போய் வகையாக மாட்டிக் கொள்ளுகிறீர்கள். நான் அறைகூவல் விடுகிறேன். முழு பைலையும் கொண்டு வாருங்கள்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):* மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் அம்மையார் அவர்கள் லெட்டர் பாடில் டைப் செய்து அவர்கள் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அந்த பைலைத்தான் முதல் அமைச்சர் அவர்கள் படித்தார்கள். அந்த ஐந்து பேர்களில் நான்கு பேர்கள் 50-க்கு மேற்பட்ட வயதானவர்கள். அதைப் படித்த பிறகும் அதைக் கொடுங்கள். நான் பார்க்கிறேன் என்று சொன்னால்? அவர்கள் லெட்டர்பாடில் எழுதி கையெழுத்து போட்டிருக்கிறார்கள். சில நேரங்களில் மறந்து விடலாம. மறதியாகச் சொல்லி இருந்தால் மறதியாகச் சொல்லி விட்டேன் என்று சொல்லலாம். அதல்லாமல் பைலில்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1971 ஆகஸ்ட் 20

எழுதி யிருப்பதை படித்திருக்கிறார்கள். அதைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால் அது எந்தவகையில் சரி என்று என்றால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திருமதி சத்தியவாணிமுத்து:** பைலை பார்த்தவள் நான் பைலை எழுதியவள் நான், பைலின் சரித்திரமே எனக்குத் தெரியும்.

**Dr. H. V. HANDE:** On a point of order. Now the former Minister, Thirumathi Sathiavanimuthu, has said that file may be given to her in order to enable her to point out where and what she has written. The Hon. Chief Minister may hand over the file to her. There is no harm is handing over the file. It will enable her to explain the position.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** வேண்டுமானால் பைலை சபாநாயகர் அவர்களிடத்தில் கொடுத்து விடுகிறேன். நண்பர் ஹாண்டே அவர்கள், திருமதி அனந்தநாயகி அவர்கள், திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் மூன்று பேரும் படித்துப் பாருங்கள். நாளைக்கு வந்து விளக்கம் சொல்லுங்கள். இதைவிட உங்களுக்கு என்ன சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** நான் இந்த ஒரு பிரச்னையோடு முடித்துவிடுகிறேன். ஏற்கனவே பூச்சியப்பன், மனோன்மணி, ராமனுதன், தேவராசன் ஆகியவர்கள், இந்த உத்தரவு கையெழுத்துப் போடுவதற்கு, முன்னாலேயே, மாவட்ட நலத்துறை அதிகாரிகளாக பணியாற்றி இருக்கிறார்கள். அவர்கள் எப்படி யாரால் அந்த இடத்திற்குப் போடப்பட்டார்கள்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் இன்னும் கொஞ்சம் பைலை படித்து காட்டுகிறேன். ஹாண்டே அவர்கள், படிக்கிறேன் கேளுங்கள். அதிகாரிகள் நோட்டு எழுதியிருக்கிறார்கள்.



974 ஆகஸ்ட் 20] [டாக்டர் மு. கருணாநிதி]

'In view of the fact that he had already worked as D.W.O., as had his non-Gazetted service in the composite district Chingleput for more than two years and has had his non-gazetted service in the composite district of Salem, it may not be desirable to post him as D.W.O., Dharmapuri.'

அந்த மனோன்மணியைப் பற்றி நோட்டு எழுதியிருக்கிறார்கள். ஏற்கனவே டி.டபிள்யூ.ஓ.-வாக இருந்து விட்டார்கள். ஆகவே, இ மெஸ் நாட் டிசைரபிள்' என்று எழுதியிருக்கிறார்கள். அதற்கு அம்மையார் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். 'பி' குறிப்பு போட்டு எழுதியிருக்கிறார்கள்.

'B' also may be approved as a special case.'

'Sathiavanimuthu'

இதை ஒரு சிறப்பு கேசாக எடுத்து அப்ரூவ் செய்யுங்கள் என்று எழுதியிருக்கிறார்கள். வேண்டாம் என்று சொன்னதைக் கூட அவர்கள் தான் எழுதியிருக்கிறார்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து:** ஏதோ சாமர்த்தியமாகச் சொல்கிறீர்கள். என்னுடைய வாதம் எல்லாம், டிரான்ஸ்பராகப் போட்டேனே தவிர போஸ்டிங்காக போடவில்லை. இந்த மன்றத்தில் இருக்கும் 234 உறுப்பினர்களையும் வைத்துக்கொண்டு சொல்கிறேன். டிரான்ஸ்பருக்கு நான் எழுதியிருப்பேனே தவிர போஸ்டிங் அல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குறிப்பு

'It may not be desirable to post him as D.W.O.

போஸ்டிங் பண்ணக்கூடாது என்று குறிப்பு ஆனால் அம்மையார் அவர்கள் 'பி' போட்டு

'B' also may be approved as a special case.

மனோன்மணியை ஸ்பெஷல் கேசாகப் போடவேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். போஸ்டிங் தான் அது.

**திருமதி சத்தியவாணிமுத்து:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, என்னுடைய வாதம் எல்லாம், அவர்கள் ஏற்கனவே 4-5 ஆண்டுகளுக்கு முன்பு அந்தந்த மாவட்டத்தில் நலத்துறை அதிகாரிகளாக பணியாற்றி இருக்கிறார்கள். அந்த அனுபவம் வைத்துத்தான் மீண்டும் அவர்களைப் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன் . . . (மணியடிக்கப்பட்டது)

THIRU K. M. SUBRAMANIAM: Hon. Mr. Speaker, Sir, now that time is limited, I do not want to indulge on more points. I am confining myself to clarify a certain subject, in which I have studied a bit. The subject is horse-racing. I request the Hon. Ministers to listen to me about the horse-racing business. I say it is a big evil. The playing of cards is also a big evil. More than 50,000 people are playing cards in various Clubs at high stakes. Because it is a big evil, the Government cannot prevent that evil. Having said this, I would like to say a few words on horse-racing.

So long as there is horse racing in Bangalore, in Mysore, in Hyderabad, in Bombay, and in Calcutta, the gambling on horse racing cannot be prevented. The gambling on horses cannot be stopped, because there are two institutions which are running gambling business in Madras. One is called bucket-shop. They do not pay the taxes to the Government. They collect bets on races to an extent of fifty, sixty or seventy thousand rupees. They are not paying even a pie to the Government as tax. There is another institution which has recently come up. It is run by a respectable man, a big advocate. He is doing agency business. He collects bets on horses with regard to races in Bangalore. He pays the amount to them. Therefore, there is no use of saying that by abolishing horse-racing, gambling can be stopped. It is very difficult to control.

Secondly, when Mr. Arul was Commissioner of Police in Madras City, he wanted to control the bucket shops. He has not succeeded in that. When I say this, you should not think that I want gambling. I am not for gambling. What I want to submit is this. So long as the horse-racing is there in other States, you cannot control gambing in our State. I myself am a Member of the Committee in the Race Club. I have been fighting against the mismanagement of racing. There are two people who are taking lakhs and lakhs of rupees from the public. Out of two lakhs of people, 10,000 to 12,000 people only are attending races and others are coming from outside, particularly from Andhra, Mysore and even from Bombay. 10,000 to 12,000 people are affected. It is not like drink, in which more than seventy five thousand people are affected. It is not like cards gambling in which more than 50,000 people are involved. I request the Hon





Chief Minister to reconsider his decision impartially. I do not want any sentimental reasons to be brought in. It may the policy of the Government to abolish gambling. But I may tell the Government that they will not succeed in their attempt. In order to create an impression that the Government wants to abolish gambling, they might have abolished racing. So long as there is racing in other States, the Government may not succeed in their attempt to control gambling. I am sorry that it is only a piece of sentimental legislation. It will never be successful

Thank you, Sir.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, துணை மானியக்கோரிக்கை என்பதைக் காட்டிலும், மற்றொரு வரவு செலவுத் திட்டம் கொண்டு வந்து வருமானம் தேடும் வழியைக் கையாண்டு இருக்கிறார்கள். உடனே முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள், மத்திய அரசாங்கம் செய்யவில்லையா என்று. மத்திய அரசாங்கம் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த நெருக்கடியில் செய்தது என்பதைப் பாருங்கள். நோட்டு அச்சடிப்பதில் உச்சவரம்பு கொண்டு வரவேண்டும், பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வந்திருக்கிறார்கள். நோட்டு அச்சடிக்கும் அதிகாரம் மத்திய அரசின் கையில் இருக்கிறது. உங்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. உங்களுக்கு என்ன அவசியம்? நோட்டு அச்சடிக்கப் போகிறீர்களா? ஒரு தரம் வரி போட்டால் போதாதா, நீங்களும் இரண்டாம் தரம், மூன்றாம் தரம் வரி போடவேண்டுமா? இப்படி இரண்டு தரம் வரி போட்டால் மக்கள் தாங்க மாட்டார்கள். என்ன செய்யவேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும், உங்களைப் பார்த்துக்கொள்வார்கள்.

நீங்கள் ரொம்ப சாமர்த்தியசாலி. மதுவிலக்கை எடுக்கும் போது என்ன சொன்னீர்கள். ரூ. 10-30 கோடிதான் வருமானம் வரும் என்று சொன்னீர்கள். இப்போது மதுவிலக்கை ஒழிக்கிறேன் என்று சொல்கிறீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள், 56 கோடி நஷ்டம் வரும். எடுக்கும்போது குறைந்த வருமானம் என்று சொல்லி, அதனால் இன்னும் அதிக வரி போட்டு பணம் சம்பாதிக்கப் பார்க்கிறீர்கள். ஒழிக்கிறபோது என்ன சொல்கிறீர்கள்?

*1974 ஆகஸ்ட் 20]* *[திருமதி த. ந. அனந்தநாயகி]*

அதிகமான நஷ்டம் வரும், அதை அரசாங்கம் தாங்க இருக்கிறது என்பது போல் சொல்கிறீர்கள். ஐம்பத்தாறு கோடி நஷ்டம் வரும் என்கிறீர்கள். இதிலே பல கோடி தப்புக் கணக்குப் போட்டு இருக்கிறீர்கள். சிலபேர் ரூ. 250 கட்டி கள்ளுக்கடை ஏலம் எடுத்துவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். அவர்களையெல்லாம் பிடித்துக்கொண்டுபோய் ஏலத்தொகையை கட்டு என்றால் எப்படி கட்டுவார்கள்? அவர்களிடமிருந்து ரூ. 55,000 வசூல் செய்வது என்றால் எப்படி அவர்களால் கொடுக்க முடியும்? அவர்கள் நியாயமாக பணம் கட்டுவதற்கு சக்தி படைத்திருந்தவர்களாக இருந்தால் தானே பணம் கட்ட முடியும்? அவர்கள் கடையை நடத்தமுடியாமல் எங்கிருந்து பணம் கட்டுவார்கள்? எக்ரிமெண்டில் பல கோளாறுகள் இருக்கின்றன என்று நான் அப்பொழுதே சட்டசபையில் சொன்னேன். யாராக இருந்தாலும் சரி, தமிழ் நாட்டுப் பிரஜையாக இருக்கும் ஒருவரை அநியாயமாக ஒரு எக்ரிமெண்டில் கையெழுத்து வாங்கி, அவரை 'டிபெரென்ஸை' கட்டு, ஏலத் தொகையை கட்டு, வேறு யாராவது எடுத்து நடத்துவதென்றால், அதற்கும் ஏலத்தொகைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கட்டு என்றால் அவர் எங்கிருந்து கட்டுவார்?

சில இடங்களில் இப்பொழுது தாசில்தார்கள் அவர்களிடமிருந்து பக்கெட்களை தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த அவல நிலைக்கு இன்று தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சொத்துக்கள் இன்றைக்கு ஜப்தி செய்யப்படுகின்றன. நியாயமான முறையில் அவர்கள் உண்மையிலேயே அரசாங்கத்தை ஏமாற்றியிருந்தால் தாராளமாக அவர்களிடமிருந்து பணத்தை வாங்கிக் கொள்ளலாம். நியாயம் இல்லாத முறையில் ஒரு எக்ரிமெண்டில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, அந்தச் சட்டத்தை வைத்து அதன் பேரில் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பணத்தை வசூலிக்க முற்பட்டால், அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டும்.

சினிமா ஷோ டாக்ஸைப்பற்றி இங்கே பேசப்பட்டது. நல்ல சினிமாக்களும் இருக்கிறது, கெட்ட சினிமாக்களும் இருக்கிறது. நல்ல சினிமாக்கள் மூலம் மக்களிடையே நல்ல பிரசாரம்



*1974 ஆகஸ்ட் 20]* *[திருமதி த. ந. அனந்தநாயகி]*

செய்யலாம். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. சென்ஸார் போர்டு சரியாக இயங்கினால் கெட்ட சினிமாக்களைத் தவிர்த்து விடலாம். சினிமாவே 'Bad' என்று ஜப்பார் பாய் அவர்கள் சொன்னார்கள். நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை. அவர் பழைய காலத்தில் இருந்துகொண்டிருக்கிறார்.

It is a good medium of instruction to educate tl e people.

இன்றைக்கு ரூ. 12½-ஆக இருந்த டாக்ஸை திடீரென்று ரூ. 150 ஆக கூட்டியிருப்பது ஏன்? 1,200 மடங்கு அதிகரிப்பதா? ஒரே நேரத்தில் இப்படி இந்த வரியை உயர்த்துவதா? அதில் நியாயமே இல்லை. அதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறேன். தமிழ்நாட்டில் இந்த ரகசியத்தைத் தெரிந்துவைத்திருந்தவர்கள் இத்தனை நாட்கள் வரையில் ஏன் இந்த வரியை ஏற்றாமல், திடீரென்று இப்பொழுது ஒரேயடியாக உயர்த்தவேண்டும்? முதல் அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர். இதிலிருக்கிற நுணுக்கங்களையெல்லாம் அறிந்தவர். அவர்கள் ஏன் இத்தனை நாட்கள் வரையிலும் இந்தத் திருடர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கவேண்டும்? கொஞ்சம் கொஞ்சமாக கூட்டியிருக்கக் கூடாதா? ரூ. 12½ என்பதை ரூ. 50, 75, 100, 125, 150 என்று இப்படி கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக உயர்த்தியிருந்தால் அவ்வளவாக இது தெரியாது. ஏன் இத்தனை காலமாக இந்தத் திருடர்களுக்கு பாதுகாப்பாக இருக்கவேண்டும்? இப்பொழுது திடீரென்று ரூ. 150-க்கு, அதாவது 1,200 'டைம்ஸ்' வரியை உயர்த்தவேண்டும்.

It is very unjust.

இதற்கு வேறு ஏதோ காரணம் இருக்கிறது என்று நான் நினைக்க வேண்டியிருக்கிறது. அது முதல் அமைச்சர் அவர்களுக்குத்தான் தெரியும். இந்தத் தொழில் ரகசியமெல்லாம் எனக்குத் தெரியாது.

டூரிங் சினிமாக்களுக்கும் இந்த ஷோ டாக்ஸ் விதிக்கப்பட்டிருக்கிறது. திருவாரூரில் போய்ப் பார்க்கட்டும், என்ன வருவாய் வருகிறது ஒரு டூரிங் டாக்கீஸுக்கு. எவ்வளவு டாக்ஸ் கட்டவேண்டியிருக்கிறது, என்ன மிச்சமாகிறது என்று பார்க்கட்டும். முதல்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்ட் 20

அமைச்சர் அவர்கள் சொந்த ஊரிலேயே போய் பார்க்கட்டும். பெர்மனென்ட் தியேட்டர் சொந்தக்காரர்கள் என்றால், அவர்கள் ஒரு கட்டடம் கட்டி, எல்லா வசதிகளையும் செய்துகொடுத்து, சினிமா தொழில் நடத்துபவர்களாகிய டிஸ்டரிபியூட்டர்ஸ், ப்ரொட்யூஸர்ஸ் இவர்களுக்கு ஒரு பெர்சென்டேஜ் என்று கொடுத்தாலும்கூட, அவர்களுக்கெல்லாம் என்ன கஷ்டம் இருக்கிறது என்று பார்த்து, அவர்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய அளவுக்கு வரி போடவேண்டும். நியாயமான முறையில், கொடுக்கக்கூடிய அளவுக்கு எண்டர்டயின்மெண்ட் வரி போட்டால் அவர்கள் திருடமாட்டார்கள், வரியை கட்டிவிடுவார்கள். அளவுக்கு மேல் வரி போட்டால் இவ்வளவு வரியையும் கொடுத்து தொழிலை நடத்த முடியாத நிலைமையில், அவர்கள் போட்ட வரியை கட்டாமல் திருடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விதத்தில் வரிகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது பற்றி ரொம்பவும் சந்தோஷம். ஆனால், அதிலே ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு, தொழிலாளர்களுக்கு ஏதாவது மாற்று வேலையை சீக்கிரம் தேடித் தரவேண்டும்.

குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதோடு அல்லாமல், இந்த அரசாங்கம் நடத்துகிற சூதாட்டத்தையும் ஒழிக்கவேண்டும். அரசாங்கம் நடத்துகிற லாட்டரியும் சூதாட்டம்தான். அரசாங்கமே பெரிய சூதாட்டத்தை நடத்திக்கொண்டு, நீங்களே ஒரு சூதாடியாக இருந்துகொண்டு, இன்னொரு சூதாட்டத்தை ஒழிக்கிறேன் என்று சொல்வது சரியல்ல. அரசாங்கம் நடத்துகின்ற லாட்டரியையும் ஒழிக்கவேண்டும்.

எவ்வளவு பேர்கள் உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் தீவிரமாக சீட்டாட்ட கிளப்புகளை நடத்துகிறார்கள்? ஆகவே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதோடு மட்டுமல்லாமல், இந்த 'கேம் ஹவுஸ்'களையும் ஒழித்து நடுத்தர குடும்பங்களை காப்பாற்றவேண்டும்.

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை சமுதாயத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றால் படிப்படியாக எல்லாவற்றையும் ஒழித்துவிடவேண்டும். லாட்டரி சீட்டுகள், கேம் ஹவுஸ்கள்,



1974 ஆகஸ்ட் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

குதிரைப் பந்தயம், மதுவிலக்கு எல்லாவற்றையும் ஒழித்து விடுவீர்களேயானால், கலைஞர் அவர்களின் ஆட்சி நடக்கிறது என்று பாராட்டலாம்.

சினிமா வரியையும் மறுபரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி பாக்வேர்டு கிளாஸைப் பொறுத்தவரையில் இன்கம் லிமிட்டை ரூ. 2,500-லிருந்து ரூ. 3,000-ஆக ஆக்கியிருப்பது யாருக்கும் பயனில்லை. 'அட்லீஸ்ட்' ஸிக்ஸ் தவுசண்டு பெர் இயர்' என்று ஆக்கவேண்டும். 1969-70-ம் ஆண்டில் ரூ. 144 லட்சம் பாக்வேர்டு கிளாஸுக்கு ஒதுக்கப்பட்டும், படிப்பு வசதிக்காக ஒதுக்கப்பட்டும், ரூ. 25 லட்சம் மிச்சப்படுத்தப்பட்டது. காரணம் என்ன? போதுமான அப்ளிகேஷன் இல்லாமல் தொகை மிச்சப் பட்டுவிட்டது. உண்மையிலே பிற்பட்டவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்றால், இன்கம் லிமிட்டை இன்னும் அதிகமாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேரம் அதிகம் இல்லாத காரணத்தினால் ஒரு மணிக்கெல்லாம் இந்த விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடத்தவேண்டியிருப்பதால், விரைவிலே என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

கடைசியாகப் பேசிய அம்மையார் அவர்கள் பேசுகின்ற வேகத்தில் சில நேரங்களில் கொள்கையையே விட்டுவிடுகிறார்கள். மதுவிலக்கை ஒழிக்கிறோம் என்று சொன்னார்கள். மதுவிலக்கை ஒழிக்கவில்லை, மதுவிலக்கை மீண்டும் அமுல்படுத்துகிறோம் என்று அவர்கள் திருத்திக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். படபடப்பில், பதபதப்பில் சில நேரங்களில் வார்த்தைகள் லட்சியங்களை மாற்றிவிடக்கூடாது என்பதற்காகத் தான் இதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக மதுவிலக்கை மீண்டும் அமுல் நடத்துவது குறித்தும், குதிரைப் பந்தயத்தை அறவே நீக்குவது குறித்தும் இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பெரும்பாலானவர்கள் ஆதரவான கருத்தைத் தெரிவித்திருக் கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 20

குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையில் அதிலே வேலை வாய்ப்பை இழக்கின்ற தொழிலாள நண்பர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புகளுக்கான வழிவகை செய்யவேண்டும் என்று எடுத்துச்சொல்லப்பட்ட கோரிக்கை நிச்சயமாகக் கவனத்தில் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னேற்பாடாக இந்தக் குதிரைப் பந்தயத்தை அறவே நீக்குவதற்கு வேறு சில காரியங்கள் இருப்பதினால், மேலும் ஒரு மூன்று மாத காலம் அவர்களுக்கு அவகாசம் தரவேண்டும் என்ற கருத்தை அண்ணா தி.மு.க. சட்டசபை துணைத் தலைவர் நண்பர் எட்மண்ட் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அதையும் இந்த அரசு பரிசீலிக்கும். ஆனால், இரண்டு மாதங்கள், மூன்று மாதங்கள் என்ற அளவில்தான் இந்தத் தவணை நீடிக்கப்படுமே அல்லாமல், குதிரைப் பந்தயத்தை மீண்டும் அனுமதிப்பது என்கிற பேச்சுக்கே இடமில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு இந்த மாமன்றத்தில் இருக்கிற நம்முடைய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களைத் தவிர, மற்றவர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய முழுமையான ஆதரவைத் தருவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

திரைப்பட காட்சி வரி உயர்வைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. திரைப்படக் காட்சி வரி ஓரளவுக்கு கட்டுப்படியாகாதது என்று அந்த அதிபர்களும் அல்லது திரைப்பட அரங்குகளை நடத்துகிறவர்களும் கருதியிருந்தால் காலையிலே இந்த மாமன்றத்தில் அந்த வரி விதிப்பைப்பற்றி அறிவித்தவுடன், மாலையிலே என்னைச் சந்திப்பதற்கு அவர்களுக்கு ஏராளமான நேரம் இருந்தது. அதைத் தவறவிட்டுவிட்டு, அன்றைக்கே அவர்கள் கூடிப் பேசி உடனடியாக தமிழகம் எங்கிலும் உள்ள எல்லா திரை அரங்குகளுக்கும் தகவல் கொடுத்து, அவைகளையெல்லாம் மூடச் செய்தார்கள். ஏடுகளிலேயும் விளம்பரம் செய்தார்கள். அவர்கள் இவைகளையெல்லாம் செய்து விட்டு, மறுதினம் என்னிடம் பேச வந்தார்கள். திரை அரங்குகளை திறந்து விட்ட பிறகுதான் பேசுவது சிலாக்கியமாக இருக்கும் என்று நான் அவர்களிடம் எடுத்துக் கூறினேன். ஒன்றிரண்டு நாள் கொஞ்சம் அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். இன்று காலையிலே வந்த பத்திரிகை செய்திகள் அவர்கள் இன்றைக்கு மீண்டும் திரை



1974 ஆகஸ்ட் 20] [டாக்டர் மு. கருணாநிதி]

அரங்குகளை திறப்பதற்கு முடிவெடுத்திருக்கிறார்கள் என்கின்ற அளவுக்கு அமைந்திருந்தது. அவைகள் திறக்கப்பட்ட பிறகு, நாளையோ, நாளை மறு தினமோ அவர்களுக்கும் எனக்கும் ஏற்ற ஒரு நேரத்தில் அந்தத் துறை அமைச்சரும், அதிகாரிகளும் அந்தச் சங்கத்தினரும் கலந்து பேசி, இந்த வரி எப்படி அமையலாம் என்பதைப்பற்றி நான் நிச்சயமாக யோசிப்பேன் என்பதையும் இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இங்கே பேசிய நண்பர்கள் குறிப்பிட்டது போல் கிட்டத்தட்ட கேளிக்கை வரியின் மூலமாக ரூ. 25 கோடி அளவுக்கு தமிழக அரசுக்கு வருமானம் வரவேண்டும். ஆனால், ரூ. 13 அல்லது 14 கோடி அளவுக்குத்தான் வருகிறது. இதை வலியுறுத்தி வசூலித்தால் என்ன என்று கேள்வி நியாயமானதாக இருந்தாலும், அவர்கள் கற்றிருக்கிற தந்திரோபாயங்களை நாம் ஒரேயடியாக தடுத்திட இயலாத நிலைமையிலிருந்து, இந்த வரி விதிப்பின் மூலம் இழக்கின்ற பணத்தை எந்த வகையில் ஈடுகட்டலாம் என்பதற்காகத்தான் இந்தக் காட்சி வரிகளை நாம் உயர்த்தியிருக்கிறோம்.

தியேட்டருக்கு தியேட்டர் வேறுபடுவது இவைகளையெல்லாம் பற்றிச் சொன்னார்கள். நான் நேற்று நெல்லை மாவட்டத்தில் ஒரு வழக்கு பற்றி கேள்விப்பட்டேன். நெல்லை மாவட்டத்தில் ஒரு தியேட்டரில் பிரபல நடிகர் நடித்த ஒரு படம், அதே தியேட்டரில் ஒரு சாதாரண நடிகர் நடத்த இன்னொரு படம், அந்தப் படத்திற்கு மொத்தமாக வந்திருக்கிற 'ஷேர்'—சாதாரண நடிகர் நடித்தது ரூ. 30,000 'ஷேர்' வந்திருக்கிறது. அதே தியேட்டரில் பிரபல நடிகர் நடித்த நல்ல முறையில் ஓடக்கூடிய படத்திற்கு விநியோகஸ்தர்களும், தியேட்டர் சொந்தக்காரர்களும் ரூ. 5,000 'பிக்ஸ்ட் ஹையர்' என்கின்ற முறையில் பேசிக்கொண்டு, ரூ. 5,000-ல் கதையை முடித்துவிட்டார்கள். ரூ. 25,000 இன்றைக்கு சினிமா தியேட்டர்காரர்களுக்காக வாதாடுகின்ற படத் தயாரிப்பாளருக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை, நம்முடைய நண்பர் செழியன் போன்றவர்கள் திரைப்பட தயாரிப்பாளராக இருக்கிற காரணத்தினால் அதிலே உள்ள நுணுக்கத்தை, நிச்சயமாக அறிவார்கள். ஆகவேதான்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 20

இதிலே அரசாங்கத்திற்கு வருமானம் இழப்பு இல்லாமல் அரங்குகள் வைத்திருப்பவர்களும் ஏமாற்றப்படாமல், அதே நேரத்தில் படத் தயாரிப்பாளர்களும் ஏமாற்றப்படாமல், அதே நேரத்தில் திரை அரங்குகளை நடத்துகின்றார்களே அவர்களும் அதிகமாக பாதிக்கப்படாமல் ஒரு நல்ல முடிவுக்கு வருவதற்கு, இப்பொழுது நாம் உயர்த்தியிருக்கிற காட்சி வரியின் மூலமாக ஒரு பேச்சு வார்த்தை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இப்போது உயர்த்திய காட்சி வரிபற்றி பேச்சு வார்த்தை நடத்த நல்ல வாய்ப்பு இன்றைக்கு ஏற்பட்டிருப்பதற்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதில் எல்லோரும் ஒத்துழைத்து, இந்த 25 கோடி ரூபாய் கிடைக்க வேண்டியதற்கு 20 கோடி அல்லது 22 கோடி ரூபாயாவது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வகையில் வரி மாற்றம் செய்ய முன் வந்தால் இந்தக் காட்சி வரி போன்றவைகளை மாற்றியமைக்கவும் அரசு தயாராக இருக்கிறது. அதுபற்றி அவர்களோடு பேசவும் தயாராக இருக்கிறேன்.

நான் முதலிலே சொன்ன என்னுடைய வார்த்தைகளை ஏற்று, அவர்கள் பிடிவாதம் காட்டாமல், திரையரங்குகளைத் திறப்பதற்காக அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக்களுக்கு நன்றி தெரிவித்து, தனித்தனியாக அவர்கள் தொகுதி பற்றி குறிப்பிட்ட கருத்துக்கள் உரிய நேரத்தில் கவனிக்கப்படும் என்ற வாக்குறுதியை அளித்து, இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் விவாதம் முடிவுற்றது. அடுத்து, நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு நடைபெறும்.





## (5) 1974-75 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவு குறித்த துணை நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

### ஏ. வருவாய்க் கணக்கில் செலவு.

### நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 34,29,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1974 ஆகஸ்ட் 20

### நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,08,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,21,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,26,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,90,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



974 ஆகஸ்ட் 20]

### நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 20.—வேளாண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,87,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,02,94,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

### நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள்.

**மாண்பமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,60,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 30—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 17,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 31—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 33—நகர்ப் பகுதி வளர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 33—நகர்ப் பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 54,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 38—சாலைகளும், பாலங்களும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 38—சாலைகளும் பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,88,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.





**நிதிக் கோரிக்கை எண் 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 39—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 40—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 53,99,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—“நிதிக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி —“நிதிக் கோரிக்கை எண் 42—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1974 ஆகஸ்ட் 20

நிதிக் கோரிக்கை எண் 44—காட்டு வளத் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —"நிதிக் கோரிக்கை எண் 44—காட்டு வளத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

பி. வருவாய்க் கணக்கின் கீழ் வாராத மூலதனச் செலவு

நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப் பணித் துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —"நிதிக் கோரிக்கை எண் 51—பொதுப் பணித் துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ 1,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"நிதிக் கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 70,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.



1974 ஆகஸ்ட் 20]

நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —"நிதிக் கோரிக்கை எண் 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 32,59,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

சி. கடன்கள், முன் பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —"நிதிக் கோரிக்கை எண் 56—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,48,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(6) அறிவிப்பு.

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளவார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப் படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-08 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**Nil.**

### *B. Reports, Notifications and Other Papers.*

53. Errata issued with Memorandum No. 54736/ME/74-1, Rural Development and Local Administration, dated 30th April 1974 to Notification No. II (2)/RUL/877(ai)/74, published at pages 44 to 47 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 9th February 1974.

54. Errata issued with Memorandum No. 40130/ME/74-1, Rural Development and Local Administration, dated the 4th April 1974 to Notification No. II(2)/RUL/1124(n)/74, published at pages 14 and 15 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

55. Errata issued with Memorandum No. 8392/ME/74-1, Rural Development and Local Administration, dated 1st March 1974 to Notification No. II (2)/RUL/100(r)/74, published at pages 33 to 37 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 4th January 1974.



56. Errata issued with Memorandum No. 42601/ME/74-1, Rural Development and Local Administration, dated the 27th March 1974 to Notification No. II (2)/RUL/1124/(P)/74, published at pages 16 to 19 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

57. Erratum issued with Memorandum No. 38361/ME/74-1, Rural Development and Local Administration, dated the 11th June 1974 to the Notification relating to division of Karur Municipality into wards, published on page 1 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 2nd April 1974.

58. Errata issued with Memorandum No. 59352/ME/74-1, Rural Development and Local Administration, dated the 29th April 1974 to Notification No. II (2)/RUL/1003(k)/74, published at pages 19 to 21 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 16th February 1974.

@ 59. The Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 (L.A. Bill No. 27 of 1974).

@ 60. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 (L.A. Bill No. 28 of 1974).

@ 61. The Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 (L.A. Bill No. 29 of 1974).

@ 62. The Tamil Nadu Hindu Religious and Charitable Enodwments (Fifth Amendment) Bill, 1974 (L.A. Bill No. 26 of 1974).

@ 63. Annexure to the Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974).

---

@ Despatched to Members on 17th August 1974.

இணைப்பு

(122-ம் பக்கத்திலுள்ள 174—ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க)

| Month and year of Examination. (1) | Name of the subjects. (2) | Number admitted. (3) | Number Passed. I Class. (4) | Number Passed. II Class. (5) | Number Passed. Total (6) | Percentage of passes. (7) | Remarks (8) |
|---|---|---|---|---|---|---|---|
| | | TYPEWRITING | ENGLISH | | | | |
| November .. | 71 Lower | 17756 | 31 | 11519 | 11550 | 64 | |
| May .. | 72 Lower | 23472 | 29 | 9467 | 9496 | 40·4 | |
| Movember .. | 72 Lower | 20000 | .. | .. | 12673 | 63·3 | |
| November .. | 71 Higher | 12905 | 8 | 5202 | 5210 | 40·4 | |
| May .. | 72 Higher | 14778 | 3 | 2366 | 2369 | 16·0 | |
| November .. | 72 Higher | 13614 | .. | .. | 3895 | 28·6 | |
| | | TYPEWRITING | TAMIL | | | | |
| November .. | 71 Lower | 3502 | 5 | 2872 | 2877 | 82·0 | |
| May .. | 72 Lower | 4581 | 7 | 3609 | 3616 | 72·9 | |
| November .. | 72 Lower | 4222 | .. | .. | 3207 | 76·0 | |
| November .. | 71 Higher | 2631 | 0 | 1624 | 1624 | 61 | |
| May .. | 72 Higher | 3395 | 2 | 1611 | 1613 | 47·5 | |
| November .. | 72 Higher | 3434 | .. | .. | 1786 | 52·0 | |
| | | SHORTHAND | ENGLISH | | | | |
| November .. | 71 Lower | 2950 | 5 | 639 | 644 | 22 | |
| May .. | 72 Lower | 3254 | 25 | 402 | 427 | 13·1 | |
| November .. | 72 Lower | 3158 | 14 | 446 | 460 | 14·6 | |
| November .. | 71 Higher | 534 | 1 | 27 | 28 | 5·2 | |
| Nay .. | 72 Higher | 657 | nil | 77 | 77 | 11·7 | |
| Movember .. | 72 Higher | 519 | 1 | 26 | 27 | 5·2 | |
| | | SHORTHAND | TAMIL | | | | |
| November .. | 71 Lower | 163 | 8 | 69 | 77 | 47 | |
| May .. | 72 Lower | 243 | 121 | 60 | 181 | 74·4 | |
| November .. | 72 Lower | 284 | 96 | 38 | 134 | 47·2 | |
| November .. | 71 Higher | 99 | nil | 30 | 30 | 30 | |
| May .. | 72 Higher | 89 | 9 | 23 | 32 | 36.0 | |
| November .. | 72 Higher | 129 | 10 | 47 | 57 | 44·2 | |
| | | ACCOUNTANCY | | | | | |
| November .. | 71 Lower | 994 | nil | 285 | 285 | 28·6 | |
| May .. | 72 Lower | 1,366 | 2 | 469 | 471 | 34·5 | |
| November .. | 72 Lower | 1,152 | 6 | 348 | 354 | 30·7 | |
| November .. | 71 Higher | 803 | nil | 152 | 152 | 19 | |
| May .. | 72 Higher | 1,162 | 1 | 234 | 235 | 20·2 | |
| November .. | 72 Higher | 830 | 9 | 304 | 313 | 37.7 | |
| | | COMMERCIAL | PRACTICE | | | | |
| November .. | 71 Lower | 84 | nil | 27 | 27 | 32·1 | |
| May .. | 72 Lower | .. | .. | .. | .. | .. | |
| November .. | 72 Lower | .. | .. | .. | .. | .. | |
| November .. | 71 Higher | 110 | nil | 41 | 41 | 40.9 | |
| May .. | 72 Higher | .. | .. | .. | .. | .. | |
| November .. | 72 Higher | .. | .. | .. | .. | .. | |
| | | COMMERCIAL | GEOGRAPHY | | | | |
| November .. | 71 Lower | 63 | .. | 32 | 32 | 50·8 | |
| May .. | 72 Lower | .. | .. | .. | .. | .. | |
| November .. | 72 Lower | .. | .. | .. | .. | | |
| November .. | 71 Higher | .. | .. | | | | |

| Month and Year of Examination. | Name of the subjects. | Number admitted. | Number Passed, I Class. | II Class | Total | Percentage of Passes. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | COMMERCIAL GEOGRAPHY (Contd) | | | | | |
| May .. | 72 Higher | 72 | Nil | 24 | 24 | 33.3 | |
| November .. | 72 Higher | .. | .. | .. | .. | .. | |
| | | | BANKING | | | | |
| November .. | 71 Lower | .. | .. | .. | .. | .. | |
| May .. | 72 Lower | 120 | Nil | 24 | 24 | 20.0 | |
| November .. | 72 Lower | .. | .. | .. | .. | .. | |
| November .. | 71 Higher | .. | .. | .. | .. | .. | |
| May .. | 72 Higher | 96 | Nil | 28 | 28 | 29.2 | |
| November .. | 72 Higher | .. | .. | .. | .. | .. | |
| | | HIGH SPEED TEST IN TYPEWRITING ENGLISH | | | | | |
| November .. | 71 High Speed Test | .. | .. | .. | .. | .. | |
| May .. | 72 do | 115 | 3 | 22 | 25 | 21.7 | |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. | |
| | | HIGH SPEED TEST IN TYPEWRITING TAMIL | | | | | |
| November .. | 71 High Speed Test | .. | .. | .. | .. | .. | |
| May .. | 72 do | 47 | 1 | 15 | 16 | 34.0 | |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. | |
| | | HIGH SPEED TEST IN SHORTHAND ENGLISH | | | | | |
| November .. | 71 150 W.P.M | .. | .. | .. | .. | .. | |
| May .. | 72 do | 17 | Nil | 4 | 4 | 23.5 | |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. | |



HIGH SPEED TEST IN SHORTHAND ENGLISH (Contd)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| November .. | 71 180 W.P.M. | .. | .. | .. | .. | .. |
| May .. | 72 do | 3 | Nil | 2 | 2 | 66.7 |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. |
| November .. | 71 200 W.P.M. | .. | .. | .. | .. | .. |
| May .. | 72 do | 1 | .. | .. | .. | .. |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. |
| | | HIGH SPEED TEST IN SHORTHAND TAMIL | | | | |
| November .. | 71 80 W.P.M. | .. | .. | .. | .. | .. |
| May .. | 72 do | 17 | Nil | Nil | Nil | Nil |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. |
| November .. | 71 100 W.P.M. | .. | .. | .. | .. | .. |
| May .. | 72 do | 3 | Nil | 1 | 1 | 33.3 |
| November .. | 72 do | .. | .. | .. | .. | .. |

W.P.M. — Words per minute.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

## புதன்கிழமை, 1974 ஆகஸ்டு 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### முதியோர் உதவித் தொகை.

*202 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித் தொகை வழங்க ஆண்டு தோறும் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவை முன்னர் வைக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் @ விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில், 1963–64-ல் ரூ. 125.13 இலட்சமும், 1964–65-ல் ரூ. 115·09 இலட்சமும் வழங்கப்பட்டிருக்கிறது. 1969–70-ல் ரூ. 88.05 இலட்சமும், 1970–71-ல் ரூ. 95 இலட்சமும் இப்படியாக வழங்கப்பட்டு, இந்த வருஷம் 1973–74-ல் ரூ. 106.71 இலட்சம்தான் வழங்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் நம்முடைய தமிழ் நாட்டில், குறிப்பாக கிராமப் புறங்களில் எந்த ஆதரவும் இல்லாமல், எந்த வருமானமும் இல்லாமல் இருக்கக்கூடிய முதியோர்களுக்கு இருபது ரூபாய் கிடைக்கும்போது ஒரு வேளை சாப்பாடாவது சாப்பிட்டு உயிரைப் பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். அம்மாதிரி பென்ஷன் பெறுவதற்குத் தகுதியுள்ள அத்தனை முதியோர்களுக்கும் நம்முடைய சர்க்கார் அளிக்க முன்வருமா? ஒவ்வொரு வட்டத்திலும் தகுதியுள்ளவர்களின் இத்தகைய அப்ளிகேஷன்கள் அதிகமாகக் குவிந்து கிடக்கின்றன. தகுதியுள்ள அத்தனை முதியோர்களுக்கும் பென்ஷன் தொகை அளிப்பதற்கு ஒரு கோடி ரூபாய் செலவாகலாம். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் தகுதியுள்ள ஆதரவற்ற முதியோர் அத்தனை பேருக்கும் பென்ஷன் கொடுக்கக்கூடிய முறையில் திட்டத்தினை அமைக்க முன்வருவார்களா?

---

@ 370ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஆகஸ்டு 21

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1963-64-ல் 125.13 இலட்சம் கொடுத்ததை மாத்திரம் சொல்லி விட்டு, பிறகு 1973-74-ல் 106.71 இலட்சம்தான் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். தொடர்ச்சியாக அதைப் பார்த்து, 1965-66-ல் ரூ. 106.66 இலட்சம், 1966-67-ல் ரூ. 100.12 இலட்சம், 1967-68-ல் 94.69 இலட்சம் என்று வெகுவாகக் குறைத்து, 1973-74-ல் ரூ. 106.71 இலட்சம் முதியோர் பென்ஷன் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. பொதுவாக இதற்காக ஒரு வரையறை வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வழங்குவது; அதற்குமேல் போகாமல் பார்த்துக் கொள்வது என்ற வரையறை வைக்கப்பட்டது. இருந்தாலும் கூட, நாம் சில நேரங்களில் கொஞ்சம் அதிகமாகவே செலவிடுகின்ற அளவுக்கு முன்வந்திருக்கிறோம்.

இப்போதே இன்றைக்குத் தமிழ் நாட்டில் 43,673 பேர் இந்த உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் அரசு பிறப்பித்த ஆணைக் கிணங்க, ஏற்கெனவே வரையறுக்கப்பட்ட விதிகளையொட்டி, 65 வயதும், அதற்கு மேற்பட்டும் உள்ள அனாதைகளுக்கும், 60 வயதும் அதற்கு மேற்பட்டும் உள்ள குருடு, தொழு நோய், மனநோய், வாதநோய், முடம் முதலிய காரணங்களால் உழைத்துப் பிழைக்க முடியாத அனாதைகளுக்கும் என்று இருந்ததை, ஊனமுற்றோர் மறு வாழ்வு திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு, 60 வயதுக்கு மேற்பட்ட ஊனமுற்றோர் என்பதற்குப் பதிலாக, ஐம்பத்தைந்து வயது நிரம்பியிருந்தால் போதும் என்று அப்படிப்பட்ட ஊனமுற்றோர்களையும் முதியோர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. முன்பிருந்த வரையறையில், குருடு, தொழுநோய், மனநோய், முடம், வாத நோய் என்று இருந்தது. இப்பொழுது ஊமைகள் செவிடர்கள் ஆகியவர்களும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, தமிழ் நாட்டிலுள்ள எல்லா முதியவர்களுக்கும் உதவித் தொகை அளிக்கப்படுவதற்கு மேலும் ஒரு கோடி ரூபாய்தான் செலவாகும் என்பது திண்ணமானால், அரசு அப்படி எல்லோருக்கும் கொடுப்பதைப் பற்றிக்கூட பரிசிலிப்பதற்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அளவு கடந்துபோய் விடுமாயின், அரசினுடைய நிதி ஆதாரம் அதற்கு இடம் தராது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, ஆண்டுக்காண்டு, ஏறிவருகிற விலைவாசி உயர்வை நாம் கவனிக்க வேண்டும். கருணை உள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள்—இந்த உதவித் தொகை வாங்குகிறவர்கள் இந்த 20 ரூபாய் போதாது என்று கருதுகிறார்களே, அதனை அறிவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெயரே உதவி தொகையே தவிர—சேவைத் தொகை அல்ல,



1974 ஆகஸ்டு 21]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முதியோர் பென்ஷன் வாங்குவதற்குச் சில அதிகாரிகள் மெடிக்கல் சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்கிறார்கள். மாவட்டங்களில் ஓரளவுக்கு—அவர்களுக்கு இலவசமாக வைத்தியப் பரிசோதனை செய்து சர்டிபிகேட் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிப் பிரச்னை எழுமேயானால் அது கவனிக்கப்படும்.

**திரு. என. கிட்டப்பா :** முதியோர் உதவித் தொகை வழங்குவதில் மாயூரம் போன்ற பகுதிகளில் மனுக்களைப் பரிசிலனை செய்வதற்கே நீண்ட காலமாகிற காரணத்தினால்—குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் மனுக்களைப் பரிசீலனை செய்து முடிவு எடுக்க அரசு கவனம் செலுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முதியோர் உதவித் தொகை வழங்குவதில் மனுக்களைப் பரிசீலிப்பதற்கே காலம் அதிகம் ஆக்கப்பட்டால் மனுதாரர்களே இல்லாமற் போய்விடக்கூடும். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று எங்காவது இருக்குமேயானால்—அதை எடுத்துக் காட்டினால்—அரசாங்கம் உடனடியாக தயங்காது நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆலடி அருணா :** முதியோர் பென்ஷனுக்கு—அனாதைகள்—உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களைச் சேர்த்திருப்பது பற்றிச் சொன்னார்கள் முதியோர்களைப் பராமரிக்கிற தன்மை ஏழ்மை காரணமாக சரியாக இல்லை. ஆகவே ஏழ்மையில் கவனிக்கப்படாமல் இருக்கிற முதியோர்களுக்கும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அரசாங்கம் அநாதைகளாக இருக்கிற முதியோர்களைப் பராமரிக்கும். மற்றவர்களை அந்தக் குடும்பத்தில் பாசம் உள்ளவர்கள் பராமரிக்க வேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** நம் ஆட்சியில் எத்தனையோ பேர்களுக்கு உதவி செய்து வருகிறோம். ரிக்ஷாக்காரர்களுக்கு ரிக்ஷா கொடுத்திருக்கிறோம். கண் ஒளி இழந்தவர்களுக்கு கண் ஒளி வழங்கி வருகிறோம். இதுபோல நாட்டில் இருக்கக்கூடிய 55 வயதுக்கு மேற்பட்ட விதவைகளுக்கு ஓய்வூதியம் கொடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நம்முடைய நிதி ஆதாரங்களை மனதில் வைத்துக்கொண்டுதான் இப்படிப்பட்ட பிரச்னைகளை அணுக வேண்டும்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு ஒரு கோடி என்று வழங்கப்படுகிற இந்த உதவித் தொகை வட்டங்களுக்கு இவ்வளவு என்று ஒதுக்கப்படுகிறபோது—சில வட்டத்தில் அதிகப் பேர்கள் இருக்கிறார்கள். உதவித் தொகை கிடைக்காது என்கிறார்கள். சில

வட்டாரத்தில் குறைவாக இருப்பதனால் கொடுக்கப்படாமல் பணமிருக்கிறது—அப்படியின்றி மாவட்டங்களை முழுமையாகக் கணக்கில் கொண்டு தகுதி அடிப்படையில் எல்லா விண்ணப்பங்களைப் பரிசிலித்து வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்படி மாவட்ட ரீதியாகத்தான் கணக்கிடப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல சில வட்டங்களில் பாராவது இடம்பெருத சூழ்நிலை ஏற்படுமானால்—இதர வட்டத்தில் போதுமான அளவு இல்லாமல் இருக்குமானால் அதையும் பரிசிலனை செய்து அதை மாவட்ட அளவில் சேகரிக்கலாமா என்பதை அரசு யோசிக்கும்.

திரு. கே. என். குமாரசாமி : இந்தத் திட்டத்தை அரைகுறையாக நடத்துவதன் மூலம் பென்ஷன் பெருதவர்களிடம் அச்சம் ஏற்பட்டிருக்கிறது—ஒருவித ஏக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகவாவது—சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்பதை அமலுக்குக் கொண்டுவந்து எல்லோருக்கும் பாதுகாப்பும் கிடைக்கிற நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சமூக பாதுகாப்புத் திட்டத்தைப் பற்றி கடந்த நிதிநிலை அறிக்கையில் நான் சொல்லியிருக்கிறேன். அதைப் பற்றிய செயற்குறிப்பு தயாராகிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் வருமானால் முதியோர் பென்ஷன் பெருத—மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று விதவைத் தாய்மார்கள் பிரச்சினைகளை எல்லாம் கூட எளிதில் தீர்க்கலாம். மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திட்டம் அரைகுறையாக இருப்பதாகச் சொன்னார்கள். அரைகுறை இல்லை. முடிந்த அளவுக்கு முழுமையாகச் செயல்படுகிற திட்டம் இது.

ஒட்டப்பிடாரத்தில் துணைக்கருவூலம்.

* 203—வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுகா, ஒட்டப்பிடாரம்-தாலுகாவில் துணைக்கருவூலம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஒட்டப்பிடாரத்தில் துணைக்கருவூலம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதும் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.





## HISTORY OF TAMIL NADU.

* 204. Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Committee appointed to write the History of Tamil Nadu has finished its work ; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the Table of the House ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ)& (இ) : டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட தமிழ்நாட்டு வரலாறு எழுதும் குழு முதல் தொகுதியைத் தயாரித்துள்ளது. இதை அச்சேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : இது மத்திய சர்க்கார் தயாரித்திருக்கக் கூடிய காலபெட்டகம் மாதிரியா ? அல்லது வெறும் சரித்திர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதுதானா ? பொருளாதார–கலாச்சார அடிப்படையில் இந்தச் சரித்திரம் எழுதப்பட்டால்தான் தமிழ்நாட்டின் சரித்திரமாக இருக்கும். சமுதாயம் மாறி மாறி வருகிறது. சமுதாய மாறுதல்களை அடிப்படையாக வைத்து எழுதப்படாவிட்டால் இது தமிழ்நாட்டுச் சரித்திரமாக இருக்காது. இந்த அடிப்படையில் இது எழுதப்பட வேண்டும் என்று ஆலோசனை சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டு வரலாறு எழுதப்படுவதற்கு டாக்டர் மு.வரதராசனார் பணியாற்றுகிறார்கள். அவரோடு சேர்ந்து எட்டு வல்லுநர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் இந்த வரலாறு எழுதப்படுகிறது. அரசியல், சமுதாயம், கலை, கலாச்சாரம் முதலியவற்றை உள்ளத்தில் வைத்துத்தான் இது எழுதப்பட வேண்டும். இதுவரை வெறும் போர், போர்க்களங்கள் அதில் வெற்றி பெற்றவர் முதலியவற்றை மையமாகக்கொண்டே வரலாறு எழுதப்பட்டிருக்கின்றன. அந்தந்தக் காலத்து அரசியல் நிலை, சமுதாய நிலைமை, கலை–கலாச்சார வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே—சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழகம், சங்கக்காலத் தமிழகம், பல்லவ–பாண்டியர் காலத் தமிழகம்–சோழப் பெருவேந்தர்கள் காலத் தமிழகம் என்கின்ற நான்கு தலைப்புகளில் எழுத முற்பட்டிருக்கிறார்கள். சங்க காலத்திற்கு முற்பட்ட தமிழகம் பற்றிய நூல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதை வெளியிடுவதற்கான முயற்சியை பாட நூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககாலத்திற்கு முற்பட்ட தமிழகம் என்பது பற்றிய சரித்திர நூல் எழுதுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி என்பதாகச் சொல்வார்கள். உலகில்

மனித இனம் மனித சமுதாயம் தோன்றுவதற்கு முன்னரேயே தமிழ்ச் சமுதாயம் இருந்ததாக அறிகிறோம். அதை அடிப்படையாக வைத்து—சரித்திரச் சான்றுகள் கிடைக்கவில்லை என்றாலும்—புராணங்களில் ஆணித்தரமான ஆதாரங்கள் கிடைத்தால் அவற்றை வைத்து உலகத்திற்கே மூத்த தமிழர் இனம்பற்றி—சரித்திர நூலை எழுத ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> சங்க காலத்திற்கு முன்பட்ட தமிழகம் என்கிற முதல் தொகுதியைக் கொண்டுவர இந்தக் குழுவினர் முயற்சியை மேற் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழுவில் வரலாற்றுப் பேராசிரியர்கள்—கல்வெட்டுத்துறை—தொல்பொருள் ஆராய்ச்சித்துறை வல்லுநர்கள் அமைந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்று பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கிய அவர்கள் உலக வரலாற்றோடு ஒட்டி அமையத்தக்க வகையில் இந்த வரலாற்றுக் குறிப்பைத் தயாரித்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவிதமான ஆதாரங்களையும் அடிப்படையாக வைத்தே இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> சரித்திரத்தை எழுதுவது என்றால் காலண்டர் இருந்தால்தான் சரித்திரம் ஒழுங்காக இருக்கும். தமிழகத்திற்கு காலண்டர் முறை கிடையாது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தத் துறையில் நல்ல ஆராய்ச்சி செய்து—சரித்திர அமைப்புக்கொத்த காலண்டர் முறையை வகுப்பதற்கு—ஒரு குழு அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, இப்போது சரித்திர ஆசிரியர்கள் பெரும்பாலும் உலகத்தோடு ஒட்டி நடக்க வேண்டுமென்று கருதி—கிறிஸ்து பிறப்பதற்கு முன்—கிறிஸ்து பிறப்புக்குப் பின் என்பதாக காலவரையறையைக் கொண்டே ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் திருவள்ளுவர் பிறப்புக்குப் முன்—திருவள்ளுவர் பிறப்புக்குப் பின் என்பதாக ஆராய்ந்த நிலைமை உண்டு என்றாலும்—இப்போது உலகம் முழுவதும் கிறிஸ்து பிறப்பை யொட்டி காலவரையறை செய்து கொண்டியிருக்கிற காரணத்தினால் இந்த அடிப்படையிலேயே வரலாறு அமைக்கப்படுகிறது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தமிழ்நாட்டு வரலாறு எழுதும்போது தமிழ் நாட்டை ஒட்டிய அண்டை மாநிலங்களின் நிலைமையையும் கவனிக்கப்பட வேண்டும். தமிழகத்தோடு சேர்ந்திருக்க வேண்டிய பகுதிகள் இன்றைக்கு அண்டை மாநிலங்களில் இருக்கின்றன. அந்தப் பகுதிகளையும் உள்ளடக்கி இந்த வரலாறு எழுதப்படுமா ? அப்படி எழுதப்பட்டால்தான் வருங்காலத்தில் அந்தப் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்—அந்த அடிப்படையில் தமிழகத்தோடு இணைந்திருக்க வேண்டிய—இன்றைக்கு அண்டை மாநிலங்களோடு சேர்ந்திருக்கிற அந்த அந்தப் பகுதிகளின் வரலாற்றையும் உள்ளடக்கி இந்த நூல் அமையுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, இந்த வரலாற்றுத் தொகுப்பினை முழுமையாகவும் சிறப்பாகவும் கொடுப்பதற்கு எங்கெங்கிருந்து ஆதாரங்களைத் திரட்ட முடியுமோ, அந்த ஆதாரங்களை எல்லாம் திரட்டுகின்ற பணியிலே இந்தக் குழுவினர் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பணியில் 4 பதிப்பாசிரியர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ் வரலாற்றினை எழுதுவதின் முதற்படியாக இந்தத் தொகுப்பு வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. உள்நாட்டிலே கிடைக்கின்றவைகளை மட்டுமல்லாமல், தமிழர்கள் தொடர்பு கொண்டிருக்கிற பல்வேறு ஆதாரங்களையெல்லாம் திரட்டுகிறார்கள். வேறுபல நாடுகளை, யவனம், சீனம், சாவகம், காழகம் போன்ற நாடுகளை ஈடுபடுத்துகின்ற அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். உலக வரலாற்றில் கிடைக்கக்கூடிய, ஆசிய வரலாற்றில் கிடைக்கக்கூடிய இந்திய வரலாற்றில் கிடைக்கக்கூடிய எல்லா ஆதாரங்களையும் திரட்டி தொகுக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். அந்த நோக்கமும் ஈடேறுகின்ற வகையில்தான் குழுவினர் பணியாற்றி வருகிறார்கள்.

### *Tamil Lexicon*

*205. Q. **Thiru N. K. PALANISAMY :** Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to compile a Tamil Lexicon ; and

(*b*) If so, the details thereof ?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u>

(அ) & (இ) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி என்னும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்தது. இந்நூல் 12 தொகுதிகளைக் கொண்டது. இத்திட்டம் 4 ஆண்டுகளில் முடிவு பெறும்.

<u>திரு. என். கே. பழனிசாமி :</u> இப்பொழுது பஸ் ஸ்டாண்டுக்குப் பேருந்து நிலையம் என்றும், போலீஸ் ஸ்டேஷனுக்குக் காவல் நிலையம் என்றும் அவர்கள் மாற்றியிருந்தாலும் கூட ஜனங்கள் இன்னும் பஸ் ஸ்டாண்ட் என்றும், போலீஸ் ஸ்டேஷன் என்றும்தான் சொல்கிறார்கள். ஆகவேதான் பேசிப் பழக்கப்பட்ட அதே வார்த்தைகளை வைத்து, இம்மாதிரி தொகுக்கக் கூடிய காலத்தில் ஏன் இப்படி மாறுதல் செய்யக் கூடாது?

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தமிழ் அகரமுதலி தொகுக்கிறவர்கள் சொற்களைத் தொகுத்துத் தருகிறார்கள். அது ஆட்சி மொழியின் கீழ்வரும். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போலல்லாது, இரண்டு சொற்களுமே பழக்கத்தில் வந்துள்ளன. 7,8 ஆண்டுகளுக்கு முன்பு காவல் துறை, காவல் நிலையம், காவல் துறை அதிகாரி என்ற சொற்கள் புதிதாக இருந்தன. இப்பொழுது அவை பழக்கத்திலே வந்துவிட்டன. இப்பொழுது, பேருந்து நிலையம் பழக்கத்திலே வந்துவிட்டது.

எவ்வளவு சொற்கள் நடைமுறைக்கு வரும்பொழுது புதிதுபோல் தோன்றுகிறது. 'அசம்பிளி' என்பதைப் பேரவை என்று மாற்றியிருக்கிறோம். இஞ்ஜினியர் என்பது பொறியாளர் என்பதெல்லாம் புழக்கத்தில் வந்துவிட்டன. சொற்களை ஆட்சிப்படுத்துவதே வழக்கத்தைப் பொறுத்தது. இருக்கிறத் தமிழ்ச் சொற்களைக் கையாள்வது, சொற்களைச் சேர்த்துக் கையாள்வது, அல்லது புதிதாக எளிமையான சொற்களைக் கையாள்வது, உருவாக்குவது, இல்லாவிட்டால் அப்படியே அந்தச் சொற்களை வேறு மொழியிலிருந்து தழுவி எடுத்துக்கொள்வது என்ற முறைதான் கையாளப்பட்டு வருகிறது.

திரு கோ. இளங்கோவன்: இந்தப் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தச் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலியை உருவாக்குகிற பொறுப்பு, தேவநேய பாவணர் அவர்களை இயக்குநராக நியமித்து, அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

## திருக்குறள் ஆராய்ச்சி

* 206 வினா—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

திருக்குறள் ஆராய்ச்சி பற்றி சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகியவை மேற்கொண்டுள்ள பணிகள் எந்நிலையில் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னைப் பல்கலைக்கழகம் திருக்குறள் இலக்கிய இயல்புகள் பற்றிய 5 நூல்களையும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "இடைக்கால இலக்கியத்தோடு திருக்குறளை ஆய்தல்" என்ற பொருளின் கீழ் இரண்டு நூல்களையும் மதுரைப் பல்கலைக்கழகம் "குறள்கண்ட பொருள் வாழ்வு" என்னும் நூலையும் வெளியிட்டுள்ளன. ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த அருமையான பணியின் ஆராய்ச்சித் தொகுப்புக்களின் ஆங்கிலப் பிரதிகள் உலகப் பல்கலைக்கழகங்களிலே இடம் பெறுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த நூல்களை வெளியிடுகின்ற பணியை இந்தப் பல்கலைக்கழகங்கள் மேற்கொண்டிருக்கின்றன. உலகப் பல்கலைக்கழகங்களிலே அவற்றை எப்படி இடம் பெறச் செய்வது என்று தெரியவில்லை. ஆனால், உலகப் பல்கலைக் கழகங்களிலே அப்படிப்பட்ட ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருப்பவர்கள் அப்படிப்பட்ட நூல்களை விரும்பிக் கேட்கும்போது, அவர்களுக்கெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.



திரு ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, குறள் பற்றிய ஆராய்ச்சி நிரம்ப நடைபெறுகிறது. நிறைய பேர் குறள் படிக்கிறார்கள். பேருந்துகளிலே கூட வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறள் வழி நடப்பவர்கள் யார் என்று தேடிப் பிடித்து, அவர்களைக் கௌரவிக்க, பரிசளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: குறள் வழி நடக்க வேண்டுமென்பதற்காகக் குறள் ஆராய்ச்சிகளும் அதனை அறிமுகப்படுத்துகின்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன. அதன் வழி யார் நடக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். அவர்களைத் தேர்ந்தெடுப்பவர்களை முதலில் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்ந்தெடுப்பவர்களைத் தேர்ந்தெடுப்பவர்களுக்கு முதல் பரிசு கொடுத்துவிட்டு பிறகு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்குப் பரிசு கொடுக்க வேண்டும். திருக்குறளிலுள்ள கருத்துக்கள், அனைவரிடத்தும் நம்பிக்கையையும் மதிப்பையும் ஏற்படுத்திவிடுமானால், அது நாளடைவிலே நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கும் என்ற அடிப்படையில்தான் இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு நாம் மதிப்பும் ஆதரவும் தருகிறோம்.

## *Funds for Tamil Development.*

*207 Q—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to allocate separate funds entirely for the development of Tamil language and Culture ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) தமிழுக்காக செலவிடப்படும் தொகையினை "நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய முன்னேற்றம்" என்ற துணைத் தலைப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற கருத்துரு அரசின் ஆய்விலுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது ? என்னென்ன விஷயங்களில் புஸ்தகம் எழுத ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பல்வேறு தலைப்புகளின் கீழ் ரூ. 1,76,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது. இவைகளை ஒரு தனி தலைப்பின்கீழ் கொண்டு வர வேண்டுமென்று எண்ணித்தான் மாநில கணக்காய்வுத் தலைவரை, தனிக் கைத்துறை மூலம் கேட்டிருக்கிறோம். அவருடைய இசைவு வந்த பிறகு தமிழுக்காகச் செலவிடப்படுகின்ற தொகைகளை ஒரு தலைப்பின் கீழ் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

<u>திரு. கே. கந்தசாமி :</u> பேரவைத் தலைவரவர்களே, தமிழ் மொழி, தமிழ்ப் பண்புகள் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவாகத் தெரிகிறது. இன்னும் கணிசமான தொகை ஒதுக்கப்பட வேண்டும். உலகத்திற்கே வழிகாட்டிய தமிழகத்திலே கூட, அமைதியின்மையும், மாணவர்களிடையே கிளர்ச்சிகளும் மிளிர்வதைப் பார்க்கிறோம். தமிழிலுள்ள பழம் பெரும் நூல்களான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்றவற்றை இன்றைய இளைஞர்களுக்குப் போதிக்கிற வகையில், பண்பாடு, மொழி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிற வகையில்—அறம் செய விரும்பு, ஆறுவது சினம், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் போன்ற நல்ல பண்புகளை வளர்க்கின்ற வகையில், அதற்கு வேண்டிய நிதியை அரசு ஒதுக்குமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:</u> தலைவரவர்களே, தமிழ் வளர்ச்சிக்கு, பல்வேறு துறைகளில், பல வேறு வகைகளில் நாம் ஏராளமாகச் செலவு செய்து வருகிறோம்.

நான் முதலிலேயே குறிப்பிட்டதுபோல், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களுக்கும் இந்த ஆராய்ச்சித் துறைக்காக, ஒவ்வொன்றிற்கும் ரூ. 3 இலட்சம் தந்திருக்கிறோம். அது தவிர, தமிழ் வளர்ச்சி ஆட்சி மொழித் துறையை இந்தக் கணக்கிலே கொண்டுவரவில்லை. அது தனியாகவே இயங்கி வருகிறது. அது தவிர, தமிழ்ப் பாடமொழித் திட்டத்தின் கீழ் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படுகிறது. மத்திய அரசு ரூ. 1 கோடி தர, நாம் ரூ. 25 இலட்சம் தர, அதன் கீழ் கல்லூரிகளுக்கான பாடநூல்களைத் தமிழிலே கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 400-க்கு மேற்பட்ட புத்தகங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மேலும், பல பள்ளிக்கூட பாடநூல்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சரித்திர கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்காக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நூல்களை—நல்ல தமிழ் நூல்களை வெளியிடுவோருக்கு, ஆண்டுதோறும் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நூலுக்கு ரூ. 2,000 முதற் பரிசும், இரண்டாவது நூலுக்கு ரூ. 1,000 பரிசும் தருகிறோம். அதற்காக, மொத்தம் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெளியிடுகின்ற புத்தகங்களை உருவாக்குகின்ற வகையிலே ஊக்குவித்து வருகிறோம். ஆகவே, எந்த எந்த வகையிலே வளர்க்க வேண்டுமோ, அந்தந்த வகையிலே நிதி ஆதாரங்களை நாம் பெருக்கித்தான் வருகிறோம்.

<u>திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, நவீன இலக்கியங்களுக்குப் போதுமான ஆதரவை அரசாங்கம் தரவில்லையென்பதை நாம் சொல்லுகின்ற நேரத்தில், அதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, அவ்வப்பொழுது எடுத்துக் கொள்கிற முயற்சியே இலக்கியங்களும் தமிழ் முன்னேற்றமும் என்ற அளவில், தமிழ் மொழி, மற்ற இலக்கிய முன்னேற்றத்திற்கென்று தனித் தலைப்பின்கீழே அந்த நிதி ஆதாரங்களைக் கொண்டு வருகின்ற நோக்கத்தின் அடிப்படையிலே மாநிலக் கணக்காய்வுத் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு இந்தத் தொகையை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது.

<u>திரு. நா. வீராசாமி :</u> தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் இந்தி மொழி வளர்ச்சிக்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கிறது. நம்முடைய அரசாங்கம் தமிழ் வளர்ச்சிக்கென அப்படிப்பட்ட நிதி உதவி தேவையென்று கேட்டிருக்கிறதா? அப்படி கேட்டிருந்தால் மத்திய அரசாங்கம் என்ன பதில் கொடுத்திருக்கிறது.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவரவர்களே, பல தடவை இதுபற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கே நிதி உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை, பல்லாண்டு காலமாக நாம் கூறிவருகிறோம். ஆனால், எல்லா மொழிகளுக்குமே தரவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு ஏற்காமலிருக்கிறது. இப்பொழுது, ஓரளவு உலகத் தமிழ் ஆராய்ச்சித் துறைக்கு யுனெஸ்கோ தருகின்ற உதவியையும், நாம் தருகின்ற உதவியையும் வைத்துத்தான் அது நடைபெற்று வருகிறது.

(முற்பகல் 9-30)

ஆகவே, கல்வியமைச்சர்கள் மாநாட்டில் இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் ஒப்பு நோக்கி ஒரே விதத்தில் உதவி செய்ய வேண்டுமென்று வேறு மாநில கல்வி அமைச்சர்களும், நானும் சொன்னோம். அதற்குப் பிறகு ஒரு கோடி ரூபாய் தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒதுக்கினார்கள். இந்தி மொழிக்கு 22 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அதைச் சுட்டிக்காட்டி எல்லா மொழி வளர்ச்சிக்கும் தர வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

<u>சென்னை குழந்தைகள் மருத்துவமனை</u>

*208 <u>வினா— திரு. சு. துரைசாமி :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னையில் உள்ள குழந்தைகள் மருத்துவ மனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன் :</u> (அ) ஆம்.

(இ) குழந்தை கவனிப்பு, உடல் நலக் கல்வி குறித்து தாய்மார்களுக்கு கல்விக்கூடம் (Mothers' Museum) புறநோயாளி சிகிச்சைப் பிரிவு கட்டுதல், நீராவி சலவைச் சாலை அமைத்தல் ஆகியவை இச் செயற்குறிப்பில் அடங்கும்.

[1974 ஆகஸ்டு 21

Thiru K. M. SUBRAMANIAM: Is there any hospital exclusively for children? If not, is there any proposal to construct such a hospital? It is very much felt that a hospital for special treatment with special instruments is necessary for children. Will the Government consider the proposal to have a separate children's hospital?

The Hon. Thiru K. ANBAZHAGAN: A hospital is already existing in Egmore, a paediatric hospital specially for children alone.

### *Primary Health Centre, Edaicode*

*209 *Q*—Thiru R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the bed-strength in the Primary Health Centre, Edaicode in Melpuram Block in Vilavancode taluk and whether the Union Council has urged for such increase; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இது ஒரு மலையோரப் பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதியில் மருத்துவ வசதி இல்லாமல் இருப்பதால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது அதைப் பரிசீலித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அந்த இடத்திலே அமைந்திருப்பது ஆரம்ப சுகாதார நிலையம். ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்தும் ஒரு அமைப்புடையவை. அதை மாற்றுவது என்றால் ஏற்கெனவே மத்திய அரசு ஒரு ஆலோசனையைக் கூறியது. 30 படுக்கைகள் என்று ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அமைக்கலாம் என்று தெரிவித்தார்கள். பிறகு பொருளாதார நிலையைக் கருதி அந்த ஆலோசனையை மத்திய அரசு கைவிட்டுவிட்டது. ஆகவே, இடைக் காலத்தில் நாமாக அந்த முயற்சியைச் செய்யும் வாய்ப்பு இல்லை.



1974 ஆகஸ்டு 21]

### *Co-operative Dispensaries*

*210 *Q*— Thiru N. K. PALANISAMY.. Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to give loans on low interest to the medical graduates who come forward to start co-operative dispensaries; and

(*b*) if so, the rate of interest that will be charged?

மாண்புமிகு திரு.க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், சமீபத்தில் அடையாறு போன்ற ஒன்றிரண்டு இடங்களில் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்று ஏற்பாடு செய்து அந்தப் பகுதி மக்களுக்கு, கர்ப்பமாக இருந்தால் குழந்தை பிறந்து, வளர்ந்து, சாகும் வரையில் அதற்கு மெடிகல் கேர் கொடுக்கும் முறையில் அவர்களாக வாலண்டரி சர்வீசாக, ஜனங்களும் ஒரு பர்செண்ட், இரண்டு பர்செண்ட் என்று தங்களுடைய வருமானத்தில் வழங்கிக்கொண்டு வருகிறார்கள். அந்த முறையில் அவர்களுக்கு வேண்டிய கருவிகளைக் கொடுக்கவும், கட்டணத்தைக் கொடுக்கவும் சர்க்கார் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்ற பெயரால் பெறப்படும் கருத்து அங்கேயுள்ள மக்கள் தாங்களாகவே முன்வந்து கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு ஓரளவிற்குக் கட்டணம் செலுத்தி, அதன் மூலமாக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். அப்படி கோயம்புத்தூர் மாவட்டத்தில் பவானி வட்டத்தில் சிலயிடங்களில், ஒரு சர்க்கரை ஆலையின் நிர்வாகிகள் வாலண்டரி ஹெல்த் திட்டத்திற்குமுன் வந்திருப்பதாக அரசு அறிகிறது. அதை ஆதரித்து இருக்கிறது. ஆனால், அப்படிப்பட்ட மக்களுடைய ஒத்துழைப்பில்லாமல் தானாகவே ஒரு டாக்டர் தொழில் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அவர் கடன் பெறுவதற்கு, ஏதாவது வங்கியிலே கடன் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அது தனிப்பட்ட முறையிலே கவனிக்கப்பட வேண்டியது. வாலண்டரி ஹெல்த் சர்வீஸ்களுக்கும், டாக்டர்கள் கடன் பெறுவது இரண்டும் ஒன்றாக அமையவில்லை.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, ஸ்டேட் பேங்க் மூலமாக மருத்துவப் பட்டதாரிகளுக்குக் கடன் வழங்கப்படுகிறதே, இது கூட்டுறவுத் துறையில் வழங்கப்பட்டால் மருத்துவப் பட்டதாரிகள் மேலும் தொழில் தொடங்குவதற்கு உதவியாக இருக்குமல்லவா? இதை மாநில அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்டு 21

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கூட்டுறவு என்றால் 10 பேர், 20 பேர் பொறுப்புடையவர்கள் ஒன்று சேர்ந்து, பொது மக்களும் ஒன்று சேர்ந்து ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும், சங்கத்தை ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்ட ஒரு டாக்டருக்குக் கூட்டுறவின் பெயரால் கடன் வழங்குவது பொருத்தமாக இருக்காது.

*Medical care for rural areas.*

*211 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state —

(*a*) whether it is a fact that the State Government had in recent times drawn up a scheme for providing medical care in every village in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், கிராமப்புறங்களுக்கு வைத்திய வசதி செய்யும் முறையில் மாணவர்கள் அவர்களுடைய படிப்புக் காலம் முடிந்தவுடன் குறைந்த பட்சம் ஒரு வருஷம், இரண்டு வருஷங்களாவது கிராமப்புறங்களிலே மருத்துவப் பணியாற்றும்படி கூறுவதற்கு ஏற்பாடு செய்வதாக ஒரு திட்டம் மத்திய சர்க்காரிடத்திலே இருக்கிறதே, அம்மாதிரி இங்கு சர்க்காரால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி நிர்ப்பந்தமாக மாணவர்களைக் கிராமப்புறங்களில் வைத்திய வசதிக்குப் போகும் முறையில் அரசு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மருத்துவக் கல்வி பெறும் மாணவர்கள், பட்டதாரிகளானவுடன் முதன் முதலாக வேலைக்கு அவர்களை எடுத்தவுடன், கிராமப்புறங்களிலே பணியாற்றும் முறையில் ஆரம்ப சுகாதார நிலையத்திலே ஒன்று குடும்ப நலத்துறை அல்லது மருத்துவத் துறையில் கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குறைந்தது இரண்டாண்டிலிருந்து நான்காண்டுக் காலம் வரையில் அங்கே பணியாற்றிய பிறகு வேறு தாலுக்கா மருத்துவமனைகளுக்கு அவர்கள் வர முடியும். மருத்துவப் பட்டதாரி களுக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. கிராமங்களுக்கு வருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கேள்வி, ஒவ்வொரு கிராமத் திலும் மருத்துவ வசதிக்கு வகை செய்வது பற்றி இருக்கிறது. கிராமங் களிலே மருத்துவ வசதி அளிப்பது என்றால் முதல் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்குத்தான். இரண்டாவதாக, அரசாங்கம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகப் பரவலாக 10,000 மக்களுக்கு ஒரு சப் (சென்டர் என்ற திட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக மகப் பேறு உதவி



1974 ஆகஸ்டு 21]

செய்கிறது. அதற்குமேலாக எல்லாவிதமான கடுமையான நோயாளிகளை யும் அவ்வப்பொழுது அறிந்து தெரிவிக்க ஒரு மருத்துவ இடைத்தர துணை ஊழியரை நியமிக்க மத்திய அரசு ஆலோசனை செய்து கொண்டிருக் கிறது எதிர்காலத்தில் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு எந்த அளவில் செயல்பட முடியுமோ அந்த அளவில் செயல்படுத்த அரசாங்கம் கருதி இருக்கிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, மருத்துவமனைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலேதான் கட்டப்படுகின்றன. அதனால் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் தங்களது ஏழ்மையின் காரணமாகவும், போக்குவரத்து வசதி இல்லாததாலும், மருத்துவமனைகளைப் பயன் படுத்துவது கடினமாக இருக்கிறது. செலவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, கொஞ்சம் அதிகமாகப் பணம் செலவழித்து மொபைல் டிஸ்பென்சரிகளை அதிகப்படுத்தி கிராமப்புறங்களில் வைத்திய வசதியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த மொபைல் டிஸ்பென்சரியைப் பற்றிப் பேசுவதற்கு இது நல்ல காலமாக இல்லை. ஏனென்றால் மோட்டார் வண்டிகள் கிடைப்பதிலேயிருந்து பெட்ரோல் கிடைப்பது வரையில் கடினமாக இருக்கும் ஒன்றாகும். ஏற்கனவே இந்தத் துறையில் குடும்ப நலத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட வண்டிகளே கூட முழு அளவில் பயன்படுத்த முடியாத நெருக்கடியை, மத்திய சர்க்காரே தங்களுடைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக அறிவித்திருக் கிறார்கள். பெட்ரோல் அளவும் குறைந்திருக்கிறது. இப்படி இருக்கின்ற வண்டிகளையே பயன்படுத்த முடியாமல் இருக்கும்பொழுது இன்னும் அதிகமாக மொபைல் வண்டிகளைப் பயன்படுத்துவது என்பது கடினம். அதைவிட ஒன்றியங்கள் சிறிது முயற்சியெடுத்து ஆங்காங்கே சிறுசிறு மருத்துவ மனைகளை ஏற்படுத்தி ஒரு டாக்டரே பல்வேறு டிஸ்பென்சரி களுக்கும் போகும் முறையை ஏற்படுத்த வேண்டும். ஒரு டாக்டர் ஒரே டிஸ்பென்சரியில் இருக்கும் முறைதான் இன்றைக்கு இருக்கிறது. எதிர் காலத்திலே அவர்கள் இரண்டு, மூன்று டிஸ்பென்சரிகளுக்குப் பொறுப்பை ஏற்று, காலையிலே ஒரு இடத்திற்கும், மத்தியானம் இன்னொரு இடத் திற்கும், சென்று பணியாற்றும் முறையை ஏற்படுத்தினால் பரவலாக அவர்களுடைய பணி கிடைக்கும். பொருளாதார நிலைமை செழிப்பாக இருந்தால், ஒவ்வொரு பத்தாயிரம் மககளுக்கும் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரைப் போட்டு பணியாற்றச் செய்யும் அளவில் டாக்டர்கள் கிடைக் கிறார்கள். பொருளாதார வசதியைப் பொறுத்து நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, ஒன்றியங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களில் வேலை செய்யும் டாக்டர்களும் ஒன்றியங்களுக்கும் போதுமான தொடர்பு இல்லாத காரணத்தினால் அவர்கள் தன்னிச்சையாகச் செயல்படுகிறார்கள். இதனால் பல கிராமங்களுக்கும் அவர்கள் சென்று வருவதைப்பற்றி கமிஷனரோ,

அல்லது ஒன்றியமோ மேற்பார்வை இட முடியாமல் இருக்கிறது. இப்பொழுதுள்ள விதிமுறைகளின்படி ஒன்றியங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல அந்த டாக்டர்கள். நேரடியாக டி.எம்.ஓ.வின் கண்ட்ரோலில்தான் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றியங்களின் கண்ட்ரோலில் வந்தால் டாக்டர்கள் மற்ற கிராமங்களுக்குப் போகிறார்களா என்று பார்க்கும் சூழ்நிலை உண்டாகும். அம்மாதிரி அரசாங்கம் ஏதாவது செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி ஒரு கருத்து சில ஆண்டுகளாகத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லப்படுகிறது. அதே போல ஒன்றியங்களிலே பணியாற்றும் வேறு சில பொறுப்பில் உள்ளவர்கள்கூட அரசாங்கத்தின் நேரடிப் பணிக்கு வர வேண்டுமென்று கேட்கிறார்கள். இதைப்பற்றி அவ்வப்பொழுது பரிசீலிக்கப்படுகிறது. ஆனால் டாக்டர்களாகப் பணியாற்றுபவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மட்டும் பணியாற்றும் கேட்டகிரியாகப் பிரிக்க முடியாமல் இருப்பதால், குறைந்தது இரண்டாண்டுகள் அங்கே பணியாற்றுகிறார்கள். பிறகு நிலைமைக்கேற்ப தாலுக்கா மருத்துவ மனைகளுக்கு வருகிறார்கள். ஆகவே, ஒன்றியத் தலைவர் அவருக்கு இருக்கும் பொறுப்பு காரணமாக, ஒரு மரியாதை காரணமாக அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களின் நடவடிக்கையை மேற்பார்வை செய்யலாம். அப்படி ஏதாவது குறைகள் இருந்தால் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம். அதற்குமேல் என்ன செய்ய முடியும் என்பதைப்பற்றி எதிர்காலத்திலேதான் ஆராய வேண்டும்.

திரு. அ. ஆறுமுகம் : ஊராட்சி ஒன்றியம் அல்லது ஊராட்சி மன்றம் அல்லது பேரூராட்சி மன்றம் மருத்துவ மனைக்குரிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க முன்வந்தால் மருத்துவ நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனைக்கான கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லும்போது அரசாங்கத்தின் ஆலோசனையைக் கேட்டால் 1½ லட்சம், 2 லட்சத்தில் கட்டடத்தைப் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். 20,000 ரூபாய்க்குக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்துவிட்டு அரசு 30,000 ரூபாய் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை வரும்போது கட்டடத்தின் மதிப்பை விட பல மடங்கு செலவழிக்க வேண்டுமென்ற நிலை வரும். அப்படிப்பட்ட காரியங்கள் வரும்போது தனித் தனியாகப் பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்க முடியுமே தவிர, பொதுவான விதியாக வகுக்க முடியாது.

***Formation of new road at Mandapam.***

*212 *Q.*—THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have proposed to form a new road through the hamlet of Maravar street, Mndapam in Ramanathapuram district; and



(*b*) if so, the number of acres of land proposed to be acquired for this purpose ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) சுமார் 18·55 ஏக்கர்.

காட்டுப்புத்தூர்-சிலைப்பிள்ளையார்புத்தூர் சாலையோரத்திலுள்ள மரங்கள்.

* 213 வினா—திரு. சி. க. வடிவேலு : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில், காட்டுப்புத்தூர்-சிலைப்பிள்ளையாரபுத்தூரை இணைக்கும் அரசு நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் அரசுக்குச் சொந்தமான தென்னை மரங்களின் கணக்கு குறித்து சென்ற ஆண்டு புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. க. வடிவேலு : காட்டுப்புத்தூர் நெடுஞ்சாலையில் 800 தென்னை மரங்கள் இருக்கின்றன. தனியார் அனுபவித்து வருகிறார்கள். ஊராட்சி மூலமாக சென்ற ஆண்டு ஏலம் விட்டதில் 20,000 ரூபாய் கிடைத்திருக்கிறது. ஆனால் கோர்ட்டுக்கு அந்தத் தனியார் போயிருக்கிறார்கள். அரசாங்கம் இதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தம் என்ற காரணத்தால்தான் ஊராட்சிக்கு அதைப் பிரித்துக் கொடுத்தோம். ஆனால் அண்டை நிலத்துக்காரர்கள் தங்களுக்குச் சொந்தம் என்று நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது.

குண்டாறு நீர்த் தேக்கத் திட்டம்.

* 214 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கோட்டை பகுதியிலுள்ள குண்டாறு நீர்தேக்கத் திட்டப் பணி ஆரம்பமாகிவிட்டதா ?

(ஆ) இத் திட்டத்தினால், பயன் அடையும் நிலங்களின் பரப்பளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத் திட்டத்தினால் ஏற்கனவே உள்ள 1,122 எக்கர் ஆயக்கட்டு நிலங்களுக்கு பாசன உறுதியும், 98 எக்கர் ஒரு போக நிலங்களில் இருபோக சாகுபடி செய்ய பாசன வசதியும் கிடைக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது ? மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 40.70 லட்சத்திற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை எவ்வளவு செலவு என்ற புள்ளிவிவரம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சேகரித்துத் தருகிறேன்.

## ஆம்பூர்-பேரணாம்பட்டு சாலையில் பாலம்.

*215 வினா— திரு. நா. கிருட்டிணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஆம்பூர் நகரத்திற்கும் பேரணாம்பட்டுக்குமிடையே உள்ள சாலையில், பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இல்லை.

திரு. நா. வீராசாமி: ஆம்பூருக்கும் பேரணாம்பட்டுக்கும் இடையே பாலாறு ஓடுவது அந்த மாவட்டத்தின் அமைச்சர் என்ற முறையில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அது மிக இன்றியமையாத ஒரு பாலமாக இருப்பதால் இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது எடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : பாலாறு நீராக இல்லாவிட்டாலும் அவசியத்தை உணர்ந்து நிதிநிலைக்கேற்ப அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

## *Occurrence of crude oil at Paravakkottai.*

*216 *Q.*—THIRUVALARGAL N. K. PALANISAMY AND P.SOUNDARAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that occurrence of gas or crude oil has been found in Paravakkottai near Mannargudi in Thanjavur district ; and

(*b*) if so, the details of the same ?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) பரவக்கோட்டை கிராமத்திற்கு அருகில் தனியார் ஒருவரால் தோண்டப்பட்ட குழாய்க்கிணற்றில் கச்சா எண்ணெய் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டது. அதன்பேரில் மத்திய எண்ணெய் எரிவாயுக் கழகம், கச்சா எண்ணெய் மாதிரிகளை பரோடாவிலும், டேராடூனிலும் உள்ள தங்களது ஆய்வுக்கூடங்களில் ஆய்விற்காக சேகரித்திருக்கிறது. இது பற்றி ஆய்வு அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை.

திரு என். கே. பழனிசாமி : சர்க்கார் மறுபடியும் பரிசீலித்து அதுபற்றிய விவரங்களைச் சேகரிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இங்கு கச்சா எண்ணெய் இருப்பதாக எப்போது கண்டு பிடிக்கப்பட்டது? ஆய்வைத் துரிதப்படுத்த அரசாங்கம் தனி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசாங்கத்தின் அந்தத் துறைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

## *Graphite deposits in Sivaganga taluk.*

*217 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the progress made so far in the implementation of the scheme taken up by the Geology Branch formed under the Industries and Commerce Department for exploring the graphite deposits in Sivaganga taluk in Ramanathapuram district ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகே தூரியப்படிவம் இருப்பதைக் கண்டறிய மாநில புவியியல் பிரிவு 1969-ம் ஆண்டில் ஆய்வு மேற்கொண்டது. அதன் முதல் கட்டப்பணி 1971-ல் முடிவுற்றது. 30 மீட்டர் ஆழத்திற்குக் கீழுள்ள படிவங்களின் அளவினையறிய இரண்டாவது கட்டப்பணி 1973-ம் ஆண்டு தொடங்கியது. இத்தூரியப்படிவங்களைச் சோதனைக்காக அனுப்பியதில் குடுவைகள் தயாரிப்பதற்கு உகந்தவை எனத்தெரிய வந்தது. இப்படிவங்களை வெட்டி எடுத்து தூரியக் குடுவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இதை எக்ஸ்பிளாயிட் பண்ண எவ்வளவு செலவாகும்? இதை வைத்து என்ன தொழில் செய்யலாம்?

[1974 ஆகஸ்டு 21

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைத் தோண்டியெடுத்து சுத்தமாக்க சுமார் 24·73 லட்சம் ரூபாயில் திட்டம் போட்டிருக்கிறோம். இதைப் பயன்படுத்தி க்ரூசிபிள் பிளாண்ட் அமைக்க திட்டம் ஆய்வில் இருக்கிறது.

திரு. சே. எ. வகாப்: நம்முடைய நாட்டில் கிராபைட் க்ருசிபிள்ஸ் என்று சொல்லப்படுகிற பொருள் கிடைக்க சிரமமாக இருக்கிறது. மார்க் க்ருசிபிள்ஸ் போன்ற வெளிநாட்டுக் கம்பெனிகளோடு கூட்டுச் சேர்ந்து செய்தால்தான் இது வெற்றிபெற முடியும். நம்முடைய நாட்டில் தயாராகும் முறையில் தரமானவையாக இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வெளிநாட்டுக் கம்பெனிகளோடு கூட்டுச் சேர்ந்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தியாவிலேயே ஒரே ஒரு இடத்தில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் பாட்னா ஸ்டேட் கிராபைட் மைனிங் கம்பெனியிலே க்ரூசிபிள்ஸ் உற்பத்தி செய்கிறார்கள். நேரிலேயே நான் சென்று பார்த்து பேச்சுவார்த்தை நடத்தி வந்தேன். அவர்கள் தொழில் நுட்ப அறிவு கொடுப்பதற்கு மிகுந்த அளவில் பணத்தை எதிர்பார்க்கிறார்கள். பேச்சு வார்த்தை தொடருகிறது! அது கிடைக்காவிட்டால், வெளிநாட்டு உதவி நாடப்படும்.

சேலம் முதலிய இடங்களில் கனிவளப் படிவங்கள்.

*218 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், தர்மபுரி, கோவை போன்ற பகுதிகளில் துத்தநாகம், ஈயம், தாமிரம் போன்ற கனிவளப் படிவங்களை கண்டுபிடிக்க விமானம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஆம். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம், கோவை மாவட்டங்களில் விமான மூலம் மின்காந்த ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் 6,600 கி.மீ. பரப்பில் சில குறிப்பிட்ட இடங்களில் விமான மூலம் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுகள் பற்றிய விவர அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

திரு பெ. சௌந்தரபாண்டியன்: இந்த ஆய்வுக்காக வெளி நாட்டு நிறுவனத்தின் உதவி ஏதாவது கோரப்பட்டதா? எந்தெந்த வகையில் உதவி பெற முயற்சிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு செ. மாதவன்: யு. என். டி. பி. உதவி செய்கிறது. மத்திய அரசாங்க ஏற்பாடு. இதற்காக சுமார் ஒரு லட்சம் அமெரிக்க டாலர் திட்டமிடப்பட்டிருக்கிறது.



1974 ஆகஸ்டு 21]

சேலத்தில் கனிப்பொருள் ஆய்வுக்கூடம்.

*219 வினா— திரு. சி. ஜெயராமன்; மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெட்டியெடுக்கப்படும் கனிகளை (Minerals) பரிசோதித்து ஆராய்ச்சி செய்ய பரிசோதனைக் கூடமொன்று சேலத்தில் நிறுவ மாநில திட்ட ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: சுமார் 20 லட்சம் செலவில், கனிப்பொருள் பகுப்படுத்தும் ஆய்வுக்கூடம் ஒன்றை சேலத்தில் அமைக்கும் ஒரு செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இந்த ஆய்வுக் கூடம் சேலத்தில் அமையவிருப்பதை மாநில திட்டக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

*George Town as Thiru V.O.C. Nagar*

*162 *Q.*—THIRU R. R. MUNUSAMI; Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Central Government have turned down the request of the State Government to name the George Town in Madras City as Thiru V.O.C. Nagar; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா (அ) அண்டு (இ): இப்பொருள் மத்திய அரசுடன் கடிதத் தொடர்பில் உள்ளது.

திரு. ஆலடி அருணா: நகரத்தில் ஒரு பகுதியின் பெயரை மாற்ற மத்திய அரசு ஒப்புதல் தேவை என்றால் எந்த அடிப்படையில் ஒப்புதல் வேண்டப்படுகிறது? வ.உ.சி. நகர் என்ற பெயரை வைக்க மத்திய அரசு எதிர்க்கிறதா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1953-ம் ஆண்டு அறிக்கையின் மூலமாக பெயர் மாற்றங்களுக்கு

All proposals should be referred to the Government of India in the Ministry of Home Affairs before any change is made.

என்பதாக 1953-ம் ஆண்டு அறிக்கைப்படி மத்திய அரசாங்க அனுமதி கோரப்பட்டிருக்கிறது. பிப்ரவரி 5, 1973-ம் தேதிய பதிலில்—

With reference to letter dated on the subject noted above, I am directed to say that the proposed change in the name of village George Town to Thiru V.O.C. Nagar goes against the broad

**principles laid down in paragraph 2 sub-clause (3) of this Ministry's letter No. 130/53, dated 11th September 1953. It is therefore regretted that the proposed change in the name of village cannot be agreed to.**

என்று கூறியிருக்கிறார்கள். இந்தக் கடிதம் வந்த பிறகு தொடர்ந்து நம்முடைய அரசாங்கம் பெயரை மாற்ற வேண்டுமென்று வற்புறுத்திக் கடிதம் எழுதி கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறுவடை இயந்திரங்கள்.

*220 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் புதிய "அறுவடை இயந்திரத்தை" செயல் முறைக்குக் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் அதிகமான அளவுக்கு நெல் சாகுபடியாவதால் குறிப்பிட்ட நேரத்தில் அறுவடை பூராவையும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால் ஆள் பஞ்சம் அடிக்கடி ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இனிமேலாவது அறுவடை இயந்திரத்தைச் செயலுக்கு கொண்டு வர அரசு ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு சிறிய ஹார்வஸ்டர், அறுவடை இயந்திரம் பரிசோதனையில் இருக்கிறது. அந்தப் பரிசோதனை வெற்றி பெறுமானால் அதைப் பெருமளவில் தஞ்சை மாவட்டத்தில் நாம் பயன்படுத்தலாம்.

*Agricultural Engineering Workshop, Madras*

***221 *Q.*— Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the stage at which the proposal to expand the Agricultural Engineering Workshop at Washermanpet, Madras stands at present ?**

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த விரிவுபடுத்தும் திட்டம் தற்காலிகமாக ஒத்திப்போடப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் திட்டம் 1971ம் ஆண்டிலேயே பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. குழாய்க் கிணறுகள் போட ரிக்ஸ் தயாரிக்கும் திட்டம் முக்கியமாக அமைந்திருக்கிறது. அதைத் தயாரிப்பதற்குப் பதிலாக எவ்வளவு செலவாகுமோ அந்தப் பணத்தைக் கொடுத்து வெளி கம்பெனிகளிலிருந்து வாடகைக்கு வாங்குவது சரியா? எனவே அதைத் தயார் செய்ய என் முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஹாண்ட் போரிங்க் செட்ஸ் தற்போது அங்கு உற்பத்தியாகிறது. Power drills க்குள்ள சில கருவிகளும் உற்பத்தியாகிறது. விரிவுப்படுத்துவது என்பது பவர் ட்ரில்லர்ஸ் உற்பத்தி செய்வது பற்றியது. ஹாண்ட் போரிங் செட்ஸ் இப்போதே உற்பத்தியாகிறது.

கோழிப்பண்ணைகள் அமைக்க உதவி

*222 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு கோழிப்பண்ணை ஏற்படுத்துவதற்கு அரசு உதவி செய்து வருகிறதா?

(இ) ஆம் எனில், 1973-74ல் எத்தனை பேருக்கு உதவி அளிக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) 88.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கோழிப்பண்ணைகள் அமைப்பதற்காக வேலையற்ற இளைஞர்களுக்கு உதவி வழங்க ஏதாவது விதிமுறைகள் உள்ளனவா? அவை, என்னென்ன விதிமுறைகள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நிதி ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 13,78,000.

திரு எஸ். வடிவேல் : இந்தக் கோழிப் பண்ணைகள் வைப்பதற்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்படுகிறது? அதிலிருந்து ஒரு குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விதிமுறைகள் பற்றிக் கேட்டார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும். பிறகு அவர்களுக்குக் கடன் கொடுப்பது ரூ. 15,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். தனிக் கேள்வி கேட்டால் முழு விதிமுறைகள் பற்றியும் சொல்லலாம். லாபத்தில் நடக்கிறதா என்று கேட்டார்கள். ஒருசிலர் லாபத்தில் நடத்துகிறார்கள். ஆனால் நஷ்டத்தில் நடக்கிற கோழிப்பண்ணைகள் இருக்கின்றன.

திரு எ. ஆர். மாரிமுத்து: இந்தக் கோழிப்பண்ணைகள் வைப்பதன் மூலம் கிடைத்திருக்கிற அனுபவம் என்ன? எனக்குத் தெரிந்தவரையில் பெரும்பாலும் நட்டத்தில்தான் நடத்தப்படுகிறது என்று தெரிகிறதே. அந்த நஷ்டம் எதனால் ஏற்படுகிறது? அதைச் சரிப்படுத்த அரசாங்கம் என்ன முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நஷ்டம் எதனால் ஏற்படுகிறது என்று கேட்டார்கள். எதனால் ஏற்படுகிறது என்று கேட்டால் கோழித் தீவனத்தின் விலை அதிகமாகியிருக்கிறது. ஒரு கிலோ கோழித் தீவனம் இரண்டு முட்டையின் விலை அளவிற்கு வந்தால் வாபகரமாக நடத்த முடியும்.

*Parasite Breeding Centres*

*223 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the number of parasite Breeding Centres in the State as on 1st December 1973?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: முப்பத்தைந்து

THIRU N. K. PALANISAMY: Sir, may I know the functions and uses of such breeding centres?

THE HON THIRU Si. Pa. ADITANAR: These parasite centres grow parasites and they are used for the purpose of eradicating the worms in the cocoanut trees and also in the sugarcane areas.

பரமக்குடி நகராசபைக் கட்டடம்.

* 224 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியில் நகரசபைக்குப் புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) பரமக்குடி நகராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் வேலை ரூபாய் 3,30,000 மதிப்பீட்டில் ஏற்கெனவே எடுத்துச் செய்யப் பட்டு வருகிறது. கட்டிட வேலையினை இவ்வாண்டிலேயே முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதால் வேலை விரைவாக நடைபெற்று வருகிறது.



சுகநதியின் குறுக்கே பாலம்

* 225 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வந்தவாசி சேதராகுப்பம் கிராமத்திற்கிடையே உள்ள சுக நதியின் குறுக்கே ஒரு காஸ்வே கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

மதுரையில் வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம்.

* 226 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை செல்லூருக்கும், பேச்சு அம்மன் படித்துறைக்கும் இடையே வைகை ஆற்றில் தரைப்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

வீட்டுமனை விலைக்கு உச்சவரம்பு.

* 227 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நகர்ப்புற பகுதிகளில் வீடு கட்டுவதற்கான நிலங்களின் விலைக்கு உச்சவரம்பு விதிக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நகர்ப்புறங்களில் உள்ள வீட்டு மனை நிலங்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிய நிலை தற்போது இருக்கிறது. இன்னும் வர வர அது உயர்ந்து கொண்டே போகிறது. ஆகவே இதற்கு ஒரு உச்சவரம்பு வைக்க என் அரசாங்கம் மறுபடியும் ஆலோசனை செய்யக் கூடாது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நகர்ப்புறங்களில் உள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட வேண்டியது நியாயமானது என்றாலும் அகில இந்திய ரீதியில் சில நிலைகளை உத்தேசத்து அதை அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறதே தவிர, அதில எந்தவிதமான முடிவிற்கும் வரவில்லை.

[1974 ஆகஸ்டு 21]

திரு. ஜே. ஜேம்ஸ்: நகர்ப்புறங்களில் வீட்டு மனை விலை நடுத்தர மக்கள் எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்கு உயர்ந்து கொண்டே போகிறது. ஒருவேளை அதன் விலையை நிர்ணயிப்பது அகில இந்திய ரீதியில் செய்யப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினாலும் அர்பன் லாண்ட் ஸீலிங் கொண்டுவந்தால் கூட இந்த நிலங்களின் விலை குறையக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். ஆகவே அதையாவது இந்த அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது எனக்குச் சம்பந்தப்படாத விவகாரம். அது வருவாய்த் துறை அமைச்சர் பொறுப்பேற்று பதில் சொல்ல வேண்டிய ஒன்று. லாண்ட் ஸீலிங் வரப்போகிறது என்று பலபேர்களும் இப்போது நிலத்தை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது குறைந்த விலையில் விற்கிறது. உறுப்பினர் அவர்கள் விரும்பினால் வாங்கிக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாராசாமி: இந்த வீடு கட்டுவதில் கூட்டுறவு மூலமாகவோ அல்லது மற்ற மற்ற கடன்கள் பெற்று வாங்குவதில் பெரும்பகுதி பணமும் நிலத்திற்கு கொடுத்துவிடக்கூடிய ஒரு குழ்நிலை இருப்பதால் நகரத்திற்குள் இருக்கிற நிலங்களுக்கு 'நிலங்கள்' சதுரத்துக்கு இவ்வளவு என்று விற்கிறது என்று மதிப்பீடு போட்டு அவற்றை குறைந்த விலையில் வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சென்னை போன்ற பெரிய நகரங்களில் வீட்டு மனைகள் வருடத்திலேயே ரூ. 10,000-க்கு விற்றுவந்த மனைகள் எல்லாம் இப்போது ரூ. 20,000, ரூ. 30,000 என்று உயர்ந்து கொண்டே செல்கிறது. இதனால் கள்ளப் பணமும் அதில் ஈடுபடுத்தப்படுகிறது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அது அகில இந்தியப் பிரச்னையாக இருப்பதால் அதில் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று. ஆனால் ஆந்திர மாநிலத்தில் நிலம் ஒருவர் பெயரில் இருந்து இன்னொருவர் பெயருக்கு மாற்றுவதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தடை செய்துவிட்டார்கள். ஹைதராபாத், செகந்திராபாத் போன்றயிடங்களில் நிலத்தை ஒருவர் வாங்கவோ அல்லது விற்கவோ அரசின் அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது என்று செய்திருப்பதால் அங்கு விலை குறைந்திருக்கிறது. அதேபோல் சென்னை நகரைச் சுற்றி ஐந்தாறு மைல் சுற்றளவில் உள்ள இடங்களுக்கு இப்படிப்பட்ட தொரு தடையைக் கொண்டு வந்தால் விலைவாசி ஏறாமல் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதால் அந்த முறையை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னையைச் சுற்றியுள்ள இடங்களையெல்லாம் முடிந்த அளவிற்கு வீட்டுவசதி வாரியமே வாங்கியிருக்கிறது. புறநகர்ப்பகுதிகளிலும், அறிஞர் அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர் போன்ற புறநகர்ப்புறப் பகுதிகளில் உள்ளவைகளும் இன்று விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றன. திருவான்மையூர் பகுதியிலும் கூட ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. வட சென்னையிலும் சில நிலங்களைப் பார்த்து விலைக்கு வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மாமத் தீவு என்ற பகுதியைக் கூடப் பார்த்து அந்தப் பகுதியில் ஒரு பாலம் போட்டால் ஒரு புறநகர் திட்டமாக ஆக்கலாம் என்ற எண்ணத்தையும் வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது. நகருக்குள்ளே என்ன செய்ய முடியும் என்பது தான் இருக்கிற பிரச்னையே தவிர, புறநகர்ப்பகுதிகளில் விலையை எவ்வளவு கட்டுப்படுத்த முடியுமோ அந்தளவிற்குக் கட்டுப்படுத்தி மனைகள் விற்கப்பட்டு வருகின்றன.



1974 ஆகஸ்டு 21]

திரு. கோவை செழியன்: நகரத்தில் வீடுகளின் விலை அதிகரிப்பதற்குக் காரணம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பணம் வைத்திருப்பவர்கள் 20, 30 வீடுகள் என்று வாங்கி அதை வாடகைக்கு விடுகிறார்கள். ஆகவே ஏழை மக்கள் வீடு வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதைத் தடுப்பதற்கு, மகாராஷ்டிரா அரசு பம்பாய் நகருக்குள் உள்ள இடம் அனைத்தும் கார்ப்பரேஷனுக்குச் சொந்தம் என்று செய்திருப்பதுபோல் சென்னை கார்ப்பரேஷன் லிமிட்டுக்குள் உள்ள இடங்கள் அனைத்தும் கார்ப்பரேஷனுக்கே சொந்தம் என்று அறிவித்து விட்டு அரசாங்கம் நிலத்தை சட்டம் கட்டுவதற்கு விலைக்கு தருவதாக இருந்தால் தனிப்பட்டவர்களுக்கு இவ்வளவுதான் தர முடியும் என்று விதி விதிக்கலாம். எனவே, அது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு தக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எனக்குத் தெரிந்தவரையில் இப்போது இந்தக் காலத்தில் யாரும் 20, 30 வீடுகள் வாங்குவதில்லை. ரொம்பப் பணம் வைத்திருக்கக்கூடியவர்கள் கூட வாடகைக் வீட்டில் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்பட. ஆக அப்படி யாரும் 20 அல்லது 30 வீடுகள் வாங்குபவர்கள் இல்லை. அப்படி வாங்கி வீடுகளை வாடகைக்கு விட்டு சம்பாதிப்பது போல் இல்லை. மற்றபடி அவர்கள் ஆலோசனையை ஏற்று சில காரியங்களைச் செய்ய முடியுமா என்பதை அரசாங்கம் மூலம் பரிசீலிக்கத் தயாராயிருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ஐம்பது வீடுகள் வைத்திருப்பவர்களும் சென்னையில் இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

திரு. எ.ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூட்டங்களில் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். மனைக்கட்டு விலைகள் அதிகமாக ஏறிக் கொண்டிருக்கிறது. அதைத் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அடுத்து, நகரில் பிற பகுதிகளில் இப்போது மனைக்கட்டுக்கள் வாங்கி சிறிய சிறிய டவுன்சிப் ஏற்படுத்தி இருக்கிறோம். அதற்கான மனைக்கட்டுகளை நாம் "அக்கொயர்" செய்கிறபோது பக்கத்தில் இருக்கும் நிலத்திற்கு எந்த

விதமான செலவும் செய்யாமலேயே விலையேறிவிடுகிறது. அரசாங்கம் வாங்கிய நிலத்தில் சில டெவலப்மெண்ட் வேலைகள் செய்கிறார்கள். ஆனால் பக்கத்தில் இருப்பவர்கள் அப்படிச் செய்வது இல்லை. இருப்பினும் பக்கத்தில் தரிசாக இருக்கும் நிலத்தின் விலையும் ஏறிவிடுகிறது, அந்தச் சொந்தக்காரர் எந்தவிதமான அக்கரையும் எடுத்துக் கொள்ளாமலேயே பயன் அடைகிறார்கள். இதை விண்ட்-பால் வெல்த் என்பார்கள். சர்க்கார் செய்கிற முயற்சியின் காரணமாக அவர்களுக்கு விலை அதிகமாகக் கிடைக்கிற காரணத்தால், அப்படி அதிக விலைக்கு அந்த மனைகட்டுகளை, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி கூறியபடி, டிரான்ஸ்பர் செய்வதை தடை செய்து விட்டு, பிறகு அதை அக்கொயர் செய்ய அரசு முயற்சி எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. க. இராசாராம்:</u> தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், அந்த எண்ணம் அரசுக்கு இருக்கிறது. இதிலே நாம் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்திக் கொண்டு இருக்கிறோம். நகரங்களில் இருக்கும் நிலங்களின் விலை ஏறிப் போகாமல் இருப்பதற்கு என்னென்ன வழிமுறைகளைக் கையாளலாம் என்பதில் அரசு அக்கறை கொண்டிருக்கிறது. கனம் உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல், ஒரு இடத்தை நாம் வாங்கி அபிவிருத்தி செய்கிறபோது பக்கத்தில் இருக்கும் நிலங்களின் விலையும் அதிகமாகிவிடுகிறது. அப்படி பக்கத்தில் இருக்கிற நிலங்களையும் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று முயற்சி எடுத்து வருகிறோம். ஒரேயடியாக எல்லாவற்றையும் எடுக்க முடிவதில்லை. வீட்டு வசதி வாரியத்திற்கு அதிகப் பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட நிலைமையேற்படுகிறது.

*Burma Bazaar.*

*169 *Q.*—THIRU G. R. EDMUND: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) the total number of shops now doing business at Burma Bazaar in Madras; and

(*b*) the number of them (i) repatriates and (ii) localmen ?

<u>மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:</u> பேரவைத் தலைவரவர்களே,

(அ) 405 கடைகள்.

(இ) (1) 393 அகதிகள் கடைகள்.

(2) 12 உள்ளூர்வாசி கடைகள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> தலைவரவர்களே, பர்மா அகதிகள் கடைகள் இருக்கின்ற பகுதிகளில் அதிகமாக சீட்டிங் நடைபெறுவதாக கூறுகிறார்கள். ஏமாற்று நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். அதாவது போலி சாமான்களை அசல் சாமான்கள் என்று விற்பனை செய்யும் முறை இருக்கிறது. இதனால் சாதாரண ஏழை மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே, அதை கண்காணிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?





<u>மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:</u> அது போலீஸ் துறை செய்ய வேண்டியது. கடைகள் கட்டிக் கொடுப்பதும், கடன் வழங்குவதும்தான் இந்தத் துறை செய்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், அதை போலீசுக்குத் தெரிவிக்கலாம்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:</u> தலைவரவர்களே, அந்த பர்மா அகதிகள் கடைகள் கட்டிக்கொண்டிருக்கும் பகுதிகளிலிருந்து அவர்களை காலி செய்ய வேண்டுமென்று கார்ப்பரேஷன் அதிகாரிகள் அடிக்கடி வந்து அச்சுறுத்துவதாகவும் அவர்களும் அரசாங்கத்திடம் முறையீடு—குறிப்பாக முதலமைச்சர் அவர்களிடம்—செய்து, அவர்கள் இருக்கும் இடத்தை அவர்களுக்கு உத்திரவாதம் செய்து தரவேண்டுமென்று கேட்டார்களே, அது குறித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:</u> தலைவரவர்களே, பக்கத்தில் ரயில்வேக்குச் சொந்தமான இடத்தில் எண்ணெய்த் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அவர்கள் ரயில்வேத் துறையிடம் அந்த இடத்தை குத்தகைக்கு எடுத்து, அந்தத் தொழிற்சாலையை நடத்தி வருகிறார்கள். அந்த தொழிற்சாலைக்கு நுழைகிற நுழைவாயிலிலேயே ஆக்கிரமிப்பு செய்து 34 கடைகளைக் கட்டி விட்டார்கள். அப்படிச் செய்தது சரியல்ல என்று அவர்கள் அரசாங்கத்திடம் சொல்லி எதுவும் முடியாமல் போகவே, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றமும் ஆக்கிரமிப்புச் செய்தது தவறு என்று தீர்ப்புக் கொடுத்தது. அதன் அடிப்படையில் பிறகு இவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இவர்கள் ரிட் மறுபடியும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அவர்களுக்கு வேறு இடம் எப்படியாவது கொடுக்க வேண்டும் என்று கருதி அரசாங்க நர்ஸ் இல்லத்திற்குப் பக்கத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடத்தைத் தயார் செய்து கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண். 170........

<u>திரு. கே. எ. வகாப்:</u> அகதிகள் சீட்டிங் செய்வதாகக் குறிப்பிட்டார்கள் அது பற்றி ஒரு வார்த்தை........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அது குறித்து காவல்துறைக்கு சொல்ல வேண்டுமென்று அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள்.

<u>திரு. கே. எ. வகாப்:</u> எல்லாப் பகுதிகளிலும் அப்படிப்பட்ட ஏமாற்று வேலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அகதிகள் இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்வது, அந்த அகதிகளை நாம் குற்றம் சொல்வது மாதிரி இருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஒரு இடத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். நீங்கள் எல்லா இடத்திலும் இருக்கிறது மாதிரி சொல்கிறீர்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இது அகதிகள் மீது புகார் சொல்வது மாதிரி இருக்கிறது. அவர்கள் மீது இவ்வளவு பெரிய அபாண்டம் சொல்வது நல்லதல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு அங்கத்தினர்கள் இதை ஏதோ வேதனையோடு கூறுகிறார்கள். நான் யாரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை. ஆனால், நான் கூறியது உண்மை என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். எல்லோரும் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை. சிலர் செய்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்று சொன்னேன்.

### *Gift houses for Harijans in Dharmapuri.*

*170 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to gift houses to select Harijans in Dharmapuri; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) and (இ). துப்புரவு பணியில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்கும் நிலமற்ற அரிசனத் தொழிலாளர்களுக்கும் இந்திய சுதந்திர வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 2,300 வீடுகள் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 100 ஜெயந்தி கிராமங்கள் ஒவ்வொன்றிலும் 23 வீடுகள் வீதம் கட்டப்படும். ஒவ்வொரு வீடு கட்டவும் ரூபாய் 2,000 செலவாகும். அவ்வாறு கட்டப்படும் வீடுகள், தெரிந்தெடுக்கப்பட்ட அரிசனங்களுக்கு நன்கொடையாக வழங்கப்படும். மேற்சொன்னவாறு தெரிந்தெடுக்கப்பட்டுள்ள 100 கிராமங்களில் ஐந்து கிராமங்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ளவையாகும். இக் கிராமங்களில் மொத்தம் 115 வீடுகள் கட்டப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ரூபாய் 2,000 போட்டு வீடுகட்டுகிறார்கள். அந்த வீடுகள் கட்டிய மறுநாளே கீழே விழுந்து விடுகின்றன. அந்த ரூபாய் 2,000 போதாது. அந்த வீடுகள் கட்டுவதை கண்டிராக்டர்களிடம் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் மண் வைத்து கட்டிவிடுகிறார்கள். ஆகவே, சர்க்கார் அது மாதிரி வீடுகள் கட்டுவதற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும், அப்படி வீடுகள் விழுந்து விட்டால் அவர்களிடமிருந்து வாடகை வசூல் செய்வதை ரத்து செய்ய வேண்டும். இதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒரே சீரான வீடுகள் கட்ட வேண்டுமென்று மதிப்பிடப்பட்டு, பல இடங்களில் கட்டடங்கள் கட்டி திறந்தாகிவிட்டது. நானே பல இடங்



களில் சென்று திறந்து இருக்கிறேன். ஆகவே, இது முடிந்து விட்ட காரியம். இனிமேல் கட்டப்படுகிற திட்டம் இருந்தால், அப்போது அங்கத்தினர் கருத்தைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. ரு. சுப்பையா: தலைவரவர்களே, ஜெயந்தி கிராமங்களில் கட்டப்படும் வீடுகள் மாநில அரசு நிதியிலிருந்தா, அல்லது மத்திய அரசு நிதியில் இருந்தா கட்டப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இதை மத்திய அரசு சொன்னது. மாநில அரசு அதைக் கட்டி இருக்கிறது. அதற்கான கணக்கை இனிமேல்தான் பார்க்க வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: சார், அரிசனங்களுக்கு வீடு கட்டித்தரும்போது பணம் கணக்கு வைத்துக் கொள்ளாமல், அவர்களுக்கு அடிப்படை வசதி கொடுக்கின்ற வகையில் கட்டிக் கொடுக்க வேண்டும். இப்போது கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகளை நாம் பார்த்து இருக்கிறோம். வீடுகள் என்று சொன்னால் குறைந்த பட்சம் ஒரு குடும்பம் வாழ்க்கை நடத்துகிற அளவுக்கு இருக்க வேண்டும். இந்தக் கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டு அரசு ஆலோசனை செய்து முடிவு எடுக்கும்.

### செந்துறை ஒன்றியத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

*171—வினா— திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், செந்துறை ஒன்றியம், தளவாய், செங்கமேடு, இலைக்கடம்பூர், ஆலத்தியூர் முதலிய கிராமங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) and (இ): தளவாய், செங்கமேடு கிராமங்களில் அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கான நில ஆர்ஜித குறிப்பு எதும் பரிசீலனையில் இல்லை.

இலைக்கடம்பூர் கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கான குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஆலத்தியூர் கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்காக நில ஆர்ஜிதம் பிரிவு 6 விளம்பல் வரைவு அரசு வாலாய ஆணை எண் 490 சமூக நலத் துறை நாள் 30-3-74-ல் ஏற்கப்பட்டுள்ளது.

திரு. செ. சதாசிவம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் கண்ட ஆலத்தியூரில் 1971-ம் ஆண்டு பட்டாதாரர்களை அழைத்து விசாரித்து, அரிசன மக்களுக்குப் பட்டா வழங்குவது பற்றி விசாரணை

[திரு. செ. சதாசிவம்] [1974 ஆகஸ்ட் 21

நடந்ததாகத் தெரிகிறது. ஆனால், 1971-லிருந்து 1974-ம் ஆண்டு வரையில் அவர்களுக்கு எந்தவிதமான பட்டாவும் வழங்கப்படவில்லை. அதனுடைய காரணம் என்ன என்பதை அறியலாமா? விரைவில் இந்த ஆண்டிலேயே பட்டா வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்போது ரூபாய் 10,517 அதற்கு செலவாகும் என்று குறிப்பிட்டு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல்தான் அரசு அது பற்றி முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10 00)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) அத்தியாவசிய மருந்துகளின் கட்டுப்பாடும் மருந்துகளின் விலையேற்றமும்

Mr. SPEAKER: Dr. Hande has given notice of the following adjournment motion:—

"This House stands adjourned to discuss a matter of urgent public importance namely, the acute scarcity of essential drugs and the exorbitant increase of prices of all drugs in the market." என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அளவில் வரும் என்பதைச் சுருக்கமாக சொல்ல வேண்டும். டாக்டர் ஹாண்டே.

Dr. H. V. HANDE: Hon. Speaker, Sir, with regard to this adjournment motion, I would like to state that a number of drugs are not available in the market for the past 3 or 4 months. Even during the last one year, the drug prices have shot up considerably, especially the prices of essential drugs have gone up considerably. The life-saving drugs are not available in the market. For instance, the special drug 'haperine' which is very necessary for the persons who suffer from heart disease is not available in the market. The prices of drugs like 'sulphadine' and 'sulphadiazine' have shot up by 50 to 60 per cent and it completely prevents normal man from consuming such drugs.



1974 ஆகஸ்ட் 21] [Dr. H. V. Hande]

Apart from these drugs, even articles like distilled water and glucose which are used every day by the dispensaries are not available.

In addition to this problem, we are also told that certain drugs which have to come from the Central Government to the State Government are not available and there is shortage for these drugs both in the Government Hospitals and private hospitals. Also, hospitals depend for drugs on the Government Medical Stores.

Apart from that, even drugs like strepto-pencillin which are administered to Tuberculosis patients are not easily available in the market. So, these T. B. patients are not able to have proper treatment.

On the other hand, a lot of spurious drugs have come into the market and the situation is quite dangerous. I am not trying to frighten the people. But I am only trying to find out from the Hon. Minister whether any remedial measures have been taken to see that the tremendous and acute shortage of drugs is completely removed by the Government. I would like to know the full details about it and a discussion on this matter would allay the fear of the people outside.

This is a very serious problem and a number of medical practitioners have complained to me that they are not able to run their dispensaries for want of these drugs. I have got statistics regarding the number of drugs which are not available and if the Hon. Speaker allows half-hour or one-hour discussion and adjourns the House for that purpose, I will place the full facts before the House. I hope and trust that the Hon. Speaker will adjourn the House for one hour to discuss their matter.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற 42-வது விதியின்கீழ் தரப்பட்டுள்ள முக்கியமான பிரச்னை இந்த மாநில அரசினுடைய முழுக் கட்டுப்பாட்டிலே இல்லாதது என்பதை அவர்கள் மிக நன்றாக அறிவார்கள். மத்திய அரசின் கட்டுப்பாடுகள் கூட உலகப் போக்கின் காரணமாக அந்தக் கட்டுப்பாடுகள் கூட மிகப் பெரிய அளவிற்குப் பயன்படுத்தமுடியாத வகையிலே பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1974 ஆகஸ்டு 21

இதுபற்றி ஒரு விளக்கத்தை இந்தச் சட்டமன்றத்தில் சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே கிளப்பி யிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

நமது மக்களுக்குத் தேவையான பெரும்பாலான மருந்துகள் நமது நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. அடிப்படை மருந்துகள் தயாரிக்கத் தேவைப்படும் சில இரசாயனப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்யப்படுகின்றன. சில அடிப்படை மருந்துகள் உள்நாட்டு மூலப் பொருள்களைக் கொண்டே இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. சில அடிப்படை மருந்துகள் அவற்றை உபயோகிப்பவர்களால் நேரிடையாகவும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அல்லது அவைகள் "இண்டியன் ட்ரக்ஸ் அண்டு பார்மசுட்டிகல்ஸ் லிமிடெட்" மற்றும் "ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்" போன்ற அமைப்புகளின் மூலமாக இறக்குமதி செய்யப் படுகின்றன.

எரிபொருள் நெருக்கடி காரணமாக அகில உலகிலும் மூலப்பொருள் கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. காரணம், பெரும்பாலான அடிப் படை இரசாயனப் பொருள்கள் மற்றும் மருந்துகள் பெட்ரோலியப் பொருள்களிலிருந்தே தயாரிக்கப்படுவதேயாகும். சில நாடுகள் தத்தம் நாட்டில் தயாராகும் மூலப் பொருள்களை, பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரும்புவதில்லை. இது மூலப்பொருள்கள் கிடைப்பதில் நெருக் கடியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இந்தியப் பேரரசு கிடைக்கின்ற மூலப் பொருள்களைத் தருவித்து, அவற்றினைப் பங்கிட்டுக் கொடுக்க முயற்சி செய்து வருகிறது.

சில குறிப்பிட்ட பிராண்டு மருந்துகள் "தற்காலிகமான பற்றாக் குறை"க்கு ஆட்படுகின்றன. எனினும் மற்றைய நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் இவற்றையொத்த மருந்துகள் கிடைக்கின்றன. உதாரண மாக "நோவால்ஜின்" மாத்திரை எப்பொழுதாகிலும் இருப்பில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மற்றைய நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் 'அனால்ஜின்' மாத்திரை கிடைக்கிறது. இந்நிலை மற்றைய மருந்துகளுக்கும் பொருந்தும். இப்படிப்பட்ட மருந்துகளை அந்த நேரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மருந்துகளின் இறக்குமதி மத்திய அரசினால் செயலாக்கப்பட்டு வரு கின்றது. இது மாநில அரசைச் சார்ந்தது அல்ல. எப்போதாகிலும், அங்காடியில் ஏதேனும் ஒரு மருந்துக்குப் பற்றாக்குறை ஏற்படின், அதனை இந்திய மருந்துச் சரக்குக் கட்டுப்பாட்டு அலுவலருக்கும், மத்திய "பெட்ரோ லியம்" மற்றும் இரசாயனம் பொருள்கள் அமைச்சகத்திற்கும் அறிவிக்கப் பட்டு, அம்மருந்தின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு வழிகோலுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.



1974 ஆகஸ்டு 21] [திரு. க. அன்பழகன்]

இந்திய அரசினால், இன்றியமையாத பொருள்களின் சட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்ட மருந்துகளின் விலைகள் கட்டுப்பாடு ஆணை 1970, இன்றியமையாத மொத்த மருந்துகளின் அதிகபட்ச விலைகள் நிர்ண யிக்கப்படுகின்றன. அதில் கூட்டு மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலைகளை நிர்ணயிப்பது பற்றியும் அதில் வரையறுக்கப்பட்டுள்ள வியா பாரிகள் லாபம், உற்பத்தியாளர்களின் லாபம் எவ்வளவு இருக்கவேண்டும் என்பதும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக மருந்துகளை விற்பது இவ்வாணையின்படி குற்றமாகும்.

மருந்து தயாரிப்புச் செலவு அதிகமானதால், இந்திய அரசு இன்றி யமையாத மொத்த மருந்துகளின் விலையை அதிகரிக்க அனுமதித் துள்ளது. பெரும்பாலான உற்பத்தியாளர்கள், தயாரிப்புச் செலவு, அச்சுச் செலவு மற்றும் மூலப்பொருள்கள் விலை, காகித விலை, மற்றைய பொருள்களின் விலை முதலியன உயர்ந்துள்ளதால், தங்களுடைய தயா ரிப்புகளின் விலையை உயர்த்த அனுமதி கேட்டு, இந்திய அரசுக்கு விண்ணப்பம் செய்து இருந்தார்கள். இந்திய அரசு அவர்களது விண்ணப்ப ங்களை ஆய்வு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு ரூ. 50 லட்சமும், அதற்குக் குறைவாகவும் மொத்த விற்பனை செய்யும் உற்பத்தியாளர்களை, அரசின் ஒப்புதலுக்குக் காத்திராமல், ஆணையில் வரை யறை செய்துள்ளபடி மருந்துகளின் விலையை மாற்றிக்கொள்ள அனு மதித்தது. ரூ. 50 லட்சத்திற்கு அதிகமாக ஆண்டு மொத்த விற்பனை உள்ள உற்பத்தியாளர்களின் விண்ணப்பங்கள் இந்திய அரசின் பரிசீலனை யில் உள்ளன. அநேகமாக சில உற்பத்தியாளர்கள் விலை உயர்வுக்கு ஒப்புதல் எதிர்பார்த்து தங்களது இருப்பினை முடக்கி வைத்திருக்கலாம். ஸ்டாக்குகளை அவர்களிடம் உள்ளதை வெளியில் விடாமல் இருக்கக் கூடும். இதுபோன்ற உற்பத்தியாளர்களில் பெரும்பாலோர் இம் மாநிலத்திற்கு வெளியே உள்ளவர்களாகும். தமிழ்நாட்டில் இந்த உற்பத்தி குறைவு, வெளி மாநிலங்களில் அதிக உற்பத்தி இருக்கிறது. இதுவும் சில குறிப்பிட்ட இன்றியமையாத மருந்துகளின் தற்காலிகமான பற்றாக்குறைக்குக் காரணமாகும்.

அதிலிருந்து இன்றியமையாத மருந்துகளுக்கு இயற்கையாக பற்றாக் குறை ஏற்படவில்லை என்பது தெரியவரும். ஆனால், ஏதேனும் பற்றாக் குறை இருப்பின் அது சில குறிப்பிட்ட பிராண்டு, மருந்துகளின் முடக்கமே யாகும். இக்குறிப்பிட்ட பிராண்டு மருந்துகளுக்கு மாற்று மருந்துகள் கிடைக்கின்றன. மருந்துகளின் விலை எவ்வளவு உயர்ந்தாலும் மத்திய அரசு அதை அங்கீகரிக்கும்.

சட்டத்தில் விதித்த விலைக்குமேல் மருந்துகளை விற்ற வியாபாரிகள் 1970-ம் ஆண்டு மருந்து விலைக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் குற்றம் சாட்டப்பட்டனர். அவ்வாறு குற்றம் சாட்டப்பட்டவர்களின் 1972-வது ஆண்டில் 10 பேர், 1973-ம் ஆண்டில் 33 பேர், 1974-ம் ஆண்டில் (ஆகஸ்டு வரையில்) இம்மாதம் வரையில் 21 பேர். மேலும் இம் மாநிலத்திலுள்ள மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருந்துகளை ரேட் காண்டிராக்ட் முறையில் மெடிக்கல் ஸ்டோர்ஸ் டிப்போ, இண்டியன் டிரக்ஸ் அண்டு பார்மாசுட்டிக்கல் லிமிடெட், சென்னை ஹிந்துஸ்தான்

ஆண்ட்டி பயோட்டிக்ஸ் லிமிடெட், பிம்ப்ரி, தமிழ்நாடு தாதா பார்மா குட்டிக்கல்ஸ் லிமிடெட், சென்னை முதலிய நிறுவனங்களிலிருந்தும் தனியார் மருந்து நிறுவனங்களிலும் வாங்கப்படுகின்றன. இம்மருந்துகள் அரசு மருத்துவ மனைகளில் வாங்குவதற்கு மாற்று ஏற்பாடுகள் இருக்கின்றன.

பொதுவாக நாட்டில் ஏற்பட்டுள்ள நிலை, மூலப்பொருள்களின் தட்டுப்பாடுகள் விளைவாகவும், மூலப்பொருள்கள் விலை அதிகரிப்பு காரணமாகவும், விலை ஏற்றத்திற்கு பெரிய நிறுவனங்கள் மத்திய அரசை அணுகியிருப்பதன் காரணமாகவும், அந்த விலை ஏற்றத்திற்கு அனுமதி கிடைத்தவுடன் அதிகமான மருந்துகளை வெளிவிடக்கூடும் என்ற நிலை இருப்பதன் காரணமாகவும், நம்முடைய மாநிலத்தில் இல்லாமல், வெளி மாநிலங்களில் உற்பத்தி அதிகமாக இருப்பதன் காரணமாகவும், நமது அரசு தங்களால் முடிந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தங்களுக்கு ஏற்படுகின்ற குறைகளை மத்திய அரசின் டிரக் கண்ட்ரோலர்க்கும் பெட்ரோலியம் கெமிகல் துறையினருக்கும் தெரிவித்து, அவர்களும் இந்தக் குறைகளை முடிந்த அளவிற்குப் போக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மத்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளைப் பொறுத்துத்தான் இந்தக் குறைகள் பெரும்பாலும் நீங்க முடியும்.

DR. H. V. HANDÉ: May I know whether it is possible for the State Government to have some fair price shops or retail shops so that they can buy these things and so that these people who hold the market to ransom cannot do so? May I know whether it is possible to have such wholesale or retail distribution of essential drugs? I am told that in one or two months the Central Government is going to increase the price of many drugs. The object in my bringing this adjournment motion is to give fairly sufficient warning to the State Government of something that is likely to happen, so that the Government can take preventive action.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: தலைவரவர்களே, மாநில அரசு இந்த மருந்துகளை எல்லாம் வாங்கி நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்வதாக இருந்தாலும், விலைக் கட்டுப்பாட்டை மத்திய அரசு ஏற்கெனவே செய்திருக்கிறது. அதற்குமேல் விற்றால் யார் விற்றாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். அப்படிச் செய்யும்போது மருந்துகளை வாங்கி விற்பனை செய்வதற்குச் சிலர் அக்கறை இல்லாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும். அதனால் சில இடங்களில் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்க முடியாமல் இருக்கலாம். மருந்துகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் அவர்கள் உற்பத்தி செய்த மருந்துகளை விற்பனை செய்யாமல் அதிக விலைக்கு விற்கலாம் என்று பதுக்கி வைக்கவும் கூடும். அப்படி இருந்தால் மாநில அரசு ஒன்றும் செய்ய முடியாது. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தாதா ஃபார்மட்டிக்கல் இன்ஸ்டிடியூட் மூலம் அதிக அளவில் மருந்துகளை உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவர்கள் உற்பத்தி செய்கின்ற மருந்துகளை, தமிழ்நாட்டுக்குத் தேவையான அளவுக்கு வழங்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள். மற்றுள்ள விற்பனையாளர்களோ, உற்பத்தியாளர்களோ தவறு செய்தால் அதை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. மத்திய அரசுதான் அதற்கு வழி கோல வேண்டும். அதற்கு வெளிநாட்டில் இருந்து மூலப்பொருட்கள் கிடைக்க வேண்டும். மருந்து விலையில் ஏதாவது மாற்றம் ஏற்படுமானால் மத்திய அரசு அதை உடனுக்குடன் முடிவு செய்து அனுமதி வழங்க வேண்டும். அப்படி எல்லாம் இருந்தால் தான் சாதகமான ஒரு சூழ்நிலை உருவாகும்.





தற்போது மருந்து உற்பத்தியில் போட்டிகள் அதிகமாக இருப்பதாலும், ஒரு மருந்து இல்லாவிட்டால் அதற்கு மாற்று மருந்து தாராளமாகக் கிடைப்பதாலும் மத்திய அரசு இந்த விவகாரத்தில் சுறுசுறுப்பாக செயல் பட்டால் நிலைமையை சீராக சமாளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## (ஆ) கூவம் நதியில் ஏற்பட்ட படகு விபத்து குறித்து

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அடுத்து, 15—8—1974-ல் கூவம் நதியில் உல்லாசப் படகில் சென்ற மூன்று பேர் மரணமடைந்ததாகவும், பலர் காணாமல் போனதாகவும் கிடைத்திருக்கின்ற, அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று விதி 42-ன் கீழ் திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், சோ. அழகர்சாமி, பி. வெங்கடசாமி, கோவை செழியன், எம். சுரேந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கப்பட வேண்டிய அவசியம் வாய்ந்தது என்பதை விளக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு கோவை செழியன்</u>: பேரவைத் தலைவரவர்களே, கூவம் நதிக் கரையில் ஏற்படுத்தியிருக்கின்ற பரிசில் பகுதியில் இருந்து உல்லாசப் பயணிகள் படகுகளை எடுத்துச் செல்வதற்கு வசதி இருக்கிறது. கடந்த 15-ந் தேதியன்று ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பலபேர் அங்கிருந்து ஒரு படகிலே சென்றிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு போட்டில் எவ்வளவு பாரம் தாங்கும், எத்தனை பேர்களை ஏற்றிக்கொள்ளலாம் என்ற முறை இருக்கிறது. அந்த அளவை மீறி, அதிக லாபத்தை உத்தேசித்து, காண்ட்ராக்ட் எடுத்திருப்பவர்கள் அதிகமான ஆட்களை ஒரு பரிசில் ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். அதனால் பாரம் தாங்காமல் அது கவிழ்ந்து, 3 பேர் இறந்திருக்கிறார்கள். பலர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்

திருக்கள். இப்படி லாபம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு, அங்கே காண்ட்ராக்ட் எடுத்திருப்பவர்கள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அரசாங்கமே காண்ட்ராக்ட் கொடுத்திருப்பதால, அவர்கள் முறையாகத் செயல்படுகிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆகவே, இந்த விபத்தில் அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். விபத்திலே இறந்துபோனதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்த அரசாங்கம்தான். அரசாங்கம் இன்ஸ்பெக்டர்களைக் போட்டு, சரியான முறையில் கண்காணித்து வந்திருந்தால், இந்த நிலைமை தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆரம்ப நாளிலிருந்தே விபத்து ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. வேதாசலம் அவர்கள் ஆரம்ப நாளிலேயே தவறி விழுந்துவிட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதிலிருந்து இன்று வரையில் சரியான முறையிலே அரசாங்கம் கண்காணித்து வரவில்லை. சென்னை நகரைப் பொறுத்தவரையில் இத்தகைய நிகழ்ச்சி இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு, போட்ஸ் விடுவதற்கு காண்ட்ராக்ட் எடுத்தவர்கள் முறையாக நடந்துகொள்வதற்கு எதிர்காலத்திலே எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதைப்பற்றி எல்லாம் விவாதிப்பதற்காக இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, ஒரு மணி நேரம் விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை 16-ந் தேதி அன்றே கொடுத்திருக்கிறோம். ஆனால் 5 நாட்கள் கழித்து இன்றைக்குத்தான் எடுத்திருக்கிறார்கள். ஒரு அவசரப் பிரச்னையைப் பற்றி விவாதிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை, பத்திரிகைகளில் செய்தி வந்த உடனேயே..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிறபோது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படுவது இல்லை. அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலேயே இதைப் பற்றியும் பேசியிருக்கலாம்.

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> எப்படி இருந்தாலும் இந்தத் தீர்மானத்தின் மூலம் நான் விரும்புவதெல்லாம் — கூவம் நதி பற்றி பல நேரங்களில் பல பிரச்னைகள் எழுந்திருக்கின்றன. அந்த நதியில் படகிலே சென்றவர்கள் மரணம் அடைந்துவிட்டார்கள் என்பது வந்த செய்திகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் அமைந்துவிட்டது. இதில் அரசாங்கத்தின் கவனம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்கு இந்த நிகழ்ச்சியும் வலுவுள்ள ஒன்றாக இருக்கிறது, என்பதைச் சுட்டிக் காட்டி, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதோடு மரணம் அடைகின்ற நிலைமை இருந்தால், அப்படி வராமல் பாதுகாக்கின்ற வகையில் முன் ஜாக்கிரதையாக யாராவது தண்ணீரில் மூழ்கி விடுவதாக இருந்தால் உடனே தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பது இந்த விபத்திலிருந்து புலனாகிறது.





எவ்வளவு பாரத்தைப் படகிலே ஏற்றிக்கொள்ளலாம் என்ற வரன்முறையை சரியாக கடைப்பிடிக்க வேண்டும். அளவுக்கு மீறிய அளவில் ஆட்களை ஏற்றிச்சென்றதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது.

உண்மை நிலைமை என்ன ? இனிமேல் இம்மாதிரி விபத்து ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் ? யார் இதற்குப் பொறுப்பு ? அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் விவாதிப்பதற்காக இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMI : Sir, the Cooum river is about 5 to 6 feet deep and 3 people have died recently there, while travelling in a boat. I do not know what kind of protection the Government gives for these people ; especially women and children should be given protection. The Cooum river is about 5 to 6 feet deep and if something happens in the boat, the women and children who do not know swimming have to die. There is no other go. So, I want to point out that this matter is urgent and the House should be adjourned to discuss this matter.

Already three persons have died. We must see that concrete steps are taken by Government to protect people travelling in boats in Cooum. When we travel by plane, we are given some protection aids. Something like that should be given to women and children travelling by boat in Cooum.

I also suggest that with people who know swimming some sort of patrolling may be done so that when some mishap happens, they can rush and rescue the people who will be drowning. Experts in swimming may be patrolling that area. This could be arranged. Since it is not done, three persons have died. So, I want the Hon. Speaker to adjourn the House to discuss this subject.

(முற்பகல் 10-30)

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, இந்தப் படகிலே 13 பேர்களை ஏற்றிச் சென்றதாகப் பத்திரிகையில் பார்த்தேன். 3 பேர்கள் இறந்துவிட்டார்கள். 4 பேர்களின் கதி என்னவென்று தெரியவில்லை என்று பத்திரிகையில் வந்தது. சடலங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்களா என்று கூடத் தெரியவில்லை. ஏன் இதை ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்திருக்கிறோம் என்றால், இதுபோன்ற விபத்துகள் இனிமேலாவது நடைபெறாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை

அரசு எடுத்தாக வேண்டும் என்பதற்காகத்தான். படகுகளில் மிதவைகள் இதுபோன்ற ஆபத்திற்கு பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்கிற விதி இல்லையா? அதுபோன்ற மிதவைகள் இந்தப் படகில் வைக்கப்படவில்லையா? வைக்கப்படவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படவில்லையா? இது சம்பந்தமாக அரசாங்கம் முன்கூட்டியே எச்சரிக்கையாக நடந்திருந்தால், இதுபோன்ற மோசமான விபத்தைத் தவிர்த்திருக்கலாம். இனிமேலாவது தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதற்குத்தான் இதுபற்றி இந்தப் பேரவை மற்ற அலுவல்களை ஒத்திவைத்து — இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் — அப்படிச் செய்வதுதான் சரியாக இருக்கும் என்பதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே 15—8—1974 இரவு 8 மணி அளவில் கூவம் நதியில் படகுவிட 4—2—1973 ஆம் தேதியில் இருந்து இரண்டு ஆண்டு கால குத்தகைக் காரர்களான திருவாளர்கள் "தெர்மோடார்ஸ்" நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு படகு கூவத்தில் கவிழ்ந்தது. அந்தப் படகு கீழே குறிப்பிட்டுள்ள நபர்களைச் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படுகிறது: (1) சுப்பிரமணிய செட்டியார் (வயது 45), (2) திருமதி ரத்னாபாய் (வயது 42), (3) ராதா பாய் (வயது 32), (4) ரவிச்சந்திரன் (வயது 12), (5) கணேசன் (வயது 9), (6) திருமதி தனலட்சுமி (வயது 48), (7) திருமதி வேத லீலாவதி (வயது 36), (8) திருமதி சூசுமாம்பாள் (வயது 45) (9) ஆர். சத்யநாராயணமூர்த்தி (வயது 12).

இந்த ஒன்பது பேர்களைத் தவிர மூன்று ஆண்கள், ஒரு பையன் ஆகிய மற்ற நான்கு பேர்களும் இருந்தனர். ஆனால் படகு ஓட்டுநரின் வாக்குமூலப்படி நபர்களின் எண்ணிக்கை 10. நீரூற்றின் அருகில் படகு கவிழ்ந்திருக்கிறது. எதிர்பாராதவிதமாக ஒரு பெருங்காற்று அடித்து பிரயாணிகளின் மேல் நீர் தெறித்து விழுந்து அதில் உள்ள வர்கள் ஒருபக்கமாக ஒதுங்கி ஒரு நடுநிலைமையற்ற நிலையை உண்டாக்கி யதுதான் காரணம் என்று கூறப்படுகிறது. மேலே குறிப்பிட்டுள்ள ஒன்பது நபர்களில் மூன்று நபர்கள் (திருமதி தனலட்சுமி, திருமதி ராதா பாய், திருமதி ரத்னாபாய்) இறந்துவிட்டார்கள். திரு. கணேசன், திரு. ரவிச்சந்திரன், திருமதி லீலாவதி, திருமதி சூசுமாம்பாள் ஆகிய நான்கு பேர்கள் பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். அதில் இரண்டு பேர்கள் 11—8—1974 அன்று சுகமாகி வெளியே சென்றனர், மற்ற இரண்டு பேர்களுக்கும் ஆபத்து இல்லை. திரு. சத்தியநாராயணமூர்த்தி யும், திரு. சுப்பிரமணியமும் நலமாக இருக்கின்றனர். அடையாளம் கண்டு கொண்டவர்களைப் பொறுத்தமட்டில் கணக்குக் காட்டப்பட்டு இருக்கிறது. இன்னும் நான்கு பேர்கள் அந்தப் படகில் இருந்தார்கள் என்ற கூற்றைச் சரி பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தப் படகு கண்ணாடி இழையால் உறுதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் காலான உள்ளுறை மிதவைச் சாதனம் பொருத்தப்பட்டது ஆகும். அதனால் படகு மூழ்கக் கூடியதல்ல என்று கூறப்படுகிறது. மேலும் விபத்து நடந்த பின், இதேமாதிரி உள்ள வேறு ஒரு படகில் தண்ணீர்





நிறைத்து 13 நபர்களையும் அதில் ஏற்றி சோதித்துப் பார்த்ததில் அப்படகு கவிழாமல் இருந்திருக்கிறது. திருவாளர்கள் "தெர்மோடார்ஸ்" நிறுவனத்தைச் சேர்ந்த மற்ற படகுகளைக் கொண்டு, அந் நிறுவனத் தினர் படகு கவிழ்ந்தபின் தண்ணீரில் உள்ளவர்களைக் காப்பாற்றுவதில் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார்கள் என்று தெரிய வருகிறது.

'தெர்மோடார்ஸ்' நிறுவனத்தின் மேலாளரையும், அப்படகின் ஓட்டு நரையும் காவல் துறையினர் கைது செய்து இருக்கிறார்கள். குத்தகை ஒப்பந்தத்தின்படி பயணிகளுக்கு ஆளுக்கு ஒரு காப்பணி (லைப் ஜாக்கெட்) அல்லது இரண்டு ஆளுக்கு ஒரு காப்பு வளையமோ (லைப் பாய்) படகில் வைத்திருக்க வேண்டும். ஒரு காப்புறுதி (இன்சூரன்ஸ்)யையும் குத்தகைக்காரர் எடுத்துக்கொள்ளவேண்டும். பயணிகளுக்கு ஏற்படும் காயங்களுக்கும் இழப்புகளுக்கும் உயிர்ச் சேதங்களுக்கும் பொருட்சேதங் களுக்கும் அரசாங்கம் பொறுப்பல்ல.

இந்நிலையில் குத்தகைக்காரர்களின் கடும் கவனக் குறைவுதான் இந்த விபத்துக்குக் காரணம் என்று நிரூபிக்கப்படும்வரை இதை ஒரு எதிர் பாராத விபத்து என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதற்குமேலே எக்சிக்யூட்டிவ் என்ஜினியரைவிட்டு விசாரிக்கச் சொன்னோம். விசாரித்து அரசாங்கத்திற்கு ஒரு ரிப்போர்ட் கொடுத்தி ருக்கிறார்கள். அதன்மேல் ஏன் காண்டிராக்டை ரத்து செய்யக் கூடாது என்பதாக காண்டிராக்டருக்கு நோட்டீஸ் கொடுத்திருக் கிறோம். அதற்குப் பதில் வந்த பிறகு தகுந்த நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஒத்திவைத்து இதைப்பற்றி மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறபாடு இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பது தேவையில்லை என்ற காரணத்தினால், நான் இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

<u>(இ) நெய்வேலியில் தொழில் நுட்பப் பணியாளர்களுடையவும், இடைநிலைப் பொறியாளர்களுடையவும் வேலை நிறுத்தம் குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத்தலைவர்:</u> அடுத்து டாக்டர் ஹாண்டே அவர் களும், திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்களும் நெய்வேலி பொறி யாளர்கள் வேலை நிறுத்தம் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். இது எந்த அளவுக்குச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கப்பட வேண்டிய அவசியம் வாய்ந்தது என்பதை விளக்கும்படி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**DR. H. V. HANDE**: Hon. Mr. Speaker, Sir, I would not like to take much of the time of the House. We still do not know what the latest position is. In all likelihood, I hope and trust, the strike would be withdrawn in a couple of days. I would only like to stress that the Labour Minister should take a little more interest in the issue and see that such strikes do not take place, especially in Neyveli. The main reason is that labour-management relationship in Neyveli during the last 5 or 6 years have been very very unsatisfactory. We have to face facts and we have to take proper measures in the hope that such incidents do not take place in future. This situation could have been prevented if only anticipatory measures had been taken in time by this Government and probably by the Central Government also, I do not know. At best, the Labour Minister can only be a conciliatory officer, for, he has no powers to ask the Central Government to behave and he has no mandatory authority to do that.

At any rate, this unfortunate incident affecting the lives of 4½ crores of people in Tamil Nadu could have been averted. That is why we have brought forward this adjournment motion and that is done to fix the responsibility of the State Government. The reason is two-fold—one is the labour situation and the other is electricity failure and that is where the Hon. Mr. O. P. Raman comes into the picture. We are told till yesterday, no current was produced in Neyveli and only yesterday the 50 mw. unit started functioning and I do not know whether the production is flowing into the grid. Whatever it is, there is the discontent of the engineers there and secondly there is power failure affecting the State.

In this context, the Hon. Chief Minister also should take another fact into account and that is where the State's responsibility comes in and that is about the second mine cut. If that is done, then the labour situation would improve. Many of the Trade Union leaders feel that if the second mine is opened, there will be more job opportunities for the Engineers and others and therefore the opening of the second mine cut becomes important and we would like to know what are the steps taken by the State Government in that direction.





All these things have to be taken in their proper context and the whole subject discussed completely and on a proper footing and for that one day or half a day could be set apart adjourning the other business of the House. That is why we have brought this motion.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, லிக்னைட் கார்ப்பரேஷனில் நடைபெற்ற வேலைநிறுத்தம்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இன்று காலைப் பத்திரிகையைப் பார்க்கும்போது வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டிருப்பதாக வந்திருக்கிறது. அது மகிழ்ச்சிகரமான செய்தி. வேலைநிறுத்தம் அங்கே 12 தினங்களுக்கு மேலாக நடந்திருக்கிறது என்று கருதுகிறேன். இந்த வேலைநிறுத்தம் இவ்வளவு நாட்கள் நீடிக்காது முன்னரேயே ஒரு முடிவுக்குக் கொண்டு வந்திருக்கலாம் என்பது என் கருத்து.

மின்சார உற்பத்தி தடைப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில்—நமது அரசு தலையிட்டு லேபர் டிஸ்ப்யூட்டை தீர்த்திருக்கலாம். தீர்ப்பதற்கான முயற்சிகளையாவது மேற்கொண்டிருக்கலாம். காலைப் பத்திரிகையில் தொழிலாளர் தலைவர்கள் நமது முதலமைச்சரை வந்து சந்தித்ததாகவும்—இதுபற்றி பின்னால் பேசி செட்டில்மெண்டு செய்து வைப்பதாகவும் உறுதி அளித்ததன்பேரில் அவர்கள் வேலைநிறுத்தத்தை வாபஸ் வாங்கியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வாக்குறுதியை நமது முதல்வர் அவர்கள் முன்னமேயே அளித்திருக்கலாம். காலத்தோடு செய்திருந்தால் இத்தனை நாட்கள் இந்த வேலைநிறுத்தம் நீடித்திருக்கவேண்டியதில்லையே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதை மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் பேசும்போது நடந்து முடிந்த ரெயில்வே ஸ்டிரைக்கை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பேசுவது நல்லது.

திரு. எ. ஆர். மாரிமுத்து: ஆகவே, இம்மாதிரி முக்கியமான பிரச்னை, மின்சாரம் நமக்குத் தட்டுப்பாடாக இருக்கிறபொழுது, தொழில்கள் எல்லாம் பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கும்போது, அரசாங்கம் மிக விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டும். இந்த நிலையில் மின்சாரத் தட்டுப்பாடு தொடராமல் இருக்கவும், காலத்தோடு இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ, அவைகளைப் பற்றி தெரிந்துகொள்ள சபையில் இதர அலுவல்களை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10-ம் தேதியன்று நெய்வேலி நிலக்கரி கழகத்திலே பணியாற்றுகின்ற இடைநிலைத் தொழில் நுட்பப் பணியாளர்களும்,

இடைநிலைப் பொறியாளர்களும் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். பதவி உயர்வு அளிக்க வேண்டும், சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்ற இரண்டு கோரிக்கைகளை முன்னால் வைத்து, வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டார்கள். நான் 10-ம் தேதியன்று, 40 சதவிகிதம் மின்சார வெட்டு 30 சதவிகிதமாக ஆக்கப்படுகிறது என்று அறிவித்தேன். இந்த வேலை நிறுத்தம் வந்தவுடனேயே பத்திரிகையாளர்களும் மற்றவர்களும் என்னை அணுகி எதிர்பாராத நிலையில் திடீரென்று நெய்வேலியிலே ஸ்டிரைக் ஆரம்பித்துவிட்டார்களே, இந்த 30 சதவிகிதம் கட் மீண்டும் உயர்த்தப்படுமா என்று என்னைக் கேட்டார்கள். நான் அப்பொழுதே இருக்கிற நிலைமையில் நீர்நிலைப் பகுதிகளில் மழை சற்று பெய்திருக்கிற காரணத்தினாலும், பாசனத்தோடு தொடர்பு கொண்டிருக்கிற நீரை கட்டாயமாக நாம் வெளியிடுகிற காரணத்தினாலும், நீர் நிலையத்திலிருந்து மின்சாரத்தினை அதிகமாக விடமுடியும். ஆகவே, இந்த ஸ்டிரைக் மூலமாக இப்பொழுது இருக்கிற மின்சார நிலைமை பாதிக்கப்படாது என்று நான் எடுத்துச் சொன்னேன். நெய்வேலி நிலக்கரிக் கழகம் சுமாராக நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் யூனிட்டுகள் தந்து வந்தார்கள். ஆனால், ஸ்டிரைக் விளைவாக நாம் 5 இலட்சம் யூனிட்டுகளை அவர்களுடைய அவசர தேவைக்காகக் கொடுத்து வந்தோம். நெய்வேலியிலே மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டதே தவிர, சுரங்கத்திலே நிலக்கரி எடுக்கிற நிலைமை பாதிக்கப்படவில்லை. அதாவது "மைனிங்" முழுப்பு நிலக்கரி எடுப்பது பாதிக்கப்படவில்லை. நிலக்கரி ஸ்டாக் வைக்கப்பட்டிருக்கிறது. வழக்கமாக, அக்டோபர், நவம்பர் மாதங்களில், வட கிழக்குப் பருவ மழை பெய்கிற மாதங்களில், சுரங்கத்திலே நீர் பிடிப்பு ஏற்பட்டதிலே இரண்டு மாதம் ஏற்படுவது வழக்கம். அந்தச் சமயத்திலே தற்செயலாக மின்சார உற்பத்தி பாதிக்கப்படும். ஆனால் அடுத்த மாதமும், அதற்கு அடுத்த மாதமும் மழை பிடிப்பு ஏற்படுகிற நேரத்திலே, இந்த 10 நாட்களுக்கான மின்சாரத்தைப் பயன்படுத்தி, எதிர்பார்க்கும் மின்சாரத்தைத் தரமுடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே, ஸ்டிரைக் விளைவாக நமது நிலைமை பாதிக்கப்படவில்லை என்பது தான் உண்மையாகும்.

அடுத்தபடியாக, நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அன்றிலிருந்து, தொழிலாளர்களோடு தொடர்பு வைத்து, முதலமைச்சரவர்களுடைய ஆலோசனைப்படி, மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்லி, அங்கிருந்து பரிகாரம் வராததால் சில பிரச்னைகள் இருக்கின்றன என்று சொன்னார். இருந்தாலும் ஒவ்வொரு நாளும் அரசின் சார்பாக, தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பேசினார்கள். அதற்குப் பின்னாலே, முதலமைச்சரவர்களும் அவர்களை அழைத்துப் பேசி பிரச்னைகள் முடியாவிட்டாலும் இன்றைக்கிருக்கிற நிலைமைக்கு ஏற்ப வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டு, அவரது வேண்டுகோளை அவர்கள் ஏற்றுக்கொண்டு இன்று காலையில் இருந்து 7 இலட்சம் யூனிட்டுகள் நமக்கு அவர்கள் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு எல்லோரும் வேலைக்குத் திரும்புகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.





மேலும் சுரங்கத்தைப் பற்றி விரிவான, மின்சார இலாகா நிதிநிலை அறிக்கை வர இருக்கிறது. அதன் மூலம் பேசலாம். தற்பொழுது விநியோகத்திலே கூடாபாடு இல்லையென்று தெரிவித்து, ஆகவே, மேலும் இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்களும் திரு. மாரிமுத்து அவர்களும் இந்தத் தொழிலாளர் பிரச்னையிலே என் முதலிலேயே கலந்து பேசி முடிவெடுத்திருக்கக் கூடாது என்கிற கேள்வியைக் கேட்டார்கள். அந்த வேலை நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னதாகவே அவர்களைப் பாதுகாக்கிற முறை என்னவோ, அவைகளையெல்லாம் தெரிவித்து, அந்தச் சங்கப் பொறுப்பாளர்களோடும்—பொறியாளர்களோடும்—நிர்வாகிகளோடும் நான் பேசியிருக்கிறேன். நான்கு முறை பேசியபோது உயர்வான சம்பளக் கோரிக்கைகளை எல்லாம் வைத்தார்கள். அந்தச் சம்பளக் கோரிக்கைகள் அத்தனையையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு நிர்வாகத்திற்குப் பரிந்துரை செய்து, அவற்றை நிர்வாகம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது. ஆனால், அப்கிரேடிங் என்ற பதவிகள் தகுதிகள் அதிகரிப்பு போன்றவற்றைச் செய்வதற்கான சூழ்நிலைகளை அவர்கள் வற்புறுத்த வேண்டும். இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசு. அவர்களிடத்திலே சொல்லி, அவைகளையெல்லாம் நிறைவேற்ற சிபாரிசு செய்ய வேண்டுமென்று நிர்வாகத்திடம் சொன்னோம். அதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இருந்தாலும், "ரொம்ப காலமாகச் சொல்கிறார்கள், செய்வதில்லை" என்ற மனக்குறையோடு போராட்டத்திலே ஈடுபட்டார்கள். பிறகும், அந்தப் பொறியாளர் சங்கத் தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்களைக் கூப்பிட்டுத் திரும்பவும் பேசினேன். பேசி வருகிறோம். இதில் உடனடியாகத் தீர்வு காணவேண்டுமென்று சொன்னோம். கடைசியாக, முதலமைச்சரைச் சந்தித்து, நீங்கள் வேண்டுகோள் விட்டால் அதன்படி நாங்கள் வேலையில் சேருகிறோம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் நாட்டினுடைய நிலைமையைக் கருதி, பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்வது நல்லது என்று தெரிவித்து, அதன் விளைவாக இன்றைய தினம் காலையிலிருந்து வேலை நிறுத்தம் நீங்கி சுமுகமான சூழ்நிலை நிலவி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே, இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்குத்தான் தொழிலாளர்கள் எல்லாம் நல்ல அளவிற்கு ஒத்துழைப்பு தந்து தங்களுடைய சம்பள நிலையைப் பற்றிக் கூட, வேலை நிறுத்தம் இல்லாமல் பேச்சு வார்த்தைகள் மூலமாக காரியங்களைச் செய்வதன் மூலமாக, மத்திய அரசிடமிருந்து இரண்டாவது சுரங்கத்தைப் பெறுவதற்கான வழி வகைகளைச் செய்வது நல்லது என்று நான் கருதுகிறேன்.

[1974 ஆகஸ்டு 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இதைப்பற்றி விவாதிக்க பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லையென்ற காரணத்தினாலே, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு.

### சென்னையில், குறிப்பாக சைதாப்பேட்டைப் பகுதியில் உள்ள குடிநீர் தட்டுப்பாடு குறித்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரவை விதி 41-ன் கீழ், "சென்னையில பல பகுதிகளில், குறிப்பாக சைதாப்பேட்டை பகுதியில் சரியான முறையில் குடிநீர் கிடைக்காத காரணத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதால் அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, சென்னை நகருக்கு 1968-ம் ஆண்டில நாளொன்றுக்கு 33 மில்லியன் காலன் விநியோகிக்கப்பட்ட தண்ணீர் சில முக்கிய திட்டங்களை நிறைவேற்றியதன் மூலம் 1973-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நாளொன்றுக்கு 52 மில்லியன் காலன் தண்ணீராக அதிகரிக்கப்பட்டிருந்தது. 1973-இல் வட கிழக்குப் பருவக் காற்றினால் வரும் மழை சரியாகப் பெய்யாததால், பூண்டி நீர்த் தேக்கத்திலும், செங்குன்றம், சோழவரம் ஆகிய ஏரிகளிலும் போதிய அளவு நீர் வந்து சேரவில்லை. உதாரணமாக, செங்குன்றத்தின் மொத்த அளவு 18·78 இலட்சம் கேலன். இதில் 1973 ஆகஸ்ட் 17-ல் இருந்த அளவு 10.78 இலட்சம் கேலன். இந்த ஆண்டு அதே தேதியில் இருந்தது 3·04 இலட்சம் கேலன்.

சோழவரத்தின் மொத்த அளவு 17·46 இலட்சம் கேலன். இதில் 1973 ஆகஸ்ட் 17-ல் இருந்த அளவு 2·42 இலட்சம் காலன். இந்த ஆண்டு அதே தேதியில் தண்ணீரே இல்லை. இதனால் முன் கூட்டியே நடவடிக்கை எடுத்து, இருக்கின்ற தண்ணீரை வட கிழக்கு பருவ மழை வரை பயன்படுத்துவதற்காக நாளொன்றுக்கு வழங்கப்படும் தண்ணீர் 35 மில்லியன் காலனாக 1974 பிப்ரவரி 1-ம் தேதி முதல் குறைக்கப்பட்டது. ஜூன், ஜூலை மாதங்களிலும் மழை சரிவரப் பெய்யாததினால் ஜூலை 15-ம் தேதிக்குப் பிறகு இது 30 மில்லியன் காலனாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் தண்ணீர் வழங்கும் நிலைகளிலிருந்து தூரத்தில் உள்ள சைதாப்பேட்டை போன்ற இடங்களுக்குத் தண்ணீர் செல்வதில் சிரமம் இருக்கிறது.

சென்னை நகருக்கு அதிக அளவு தண்ணீர் வழங்கும் பொருட்டு சில அவசரத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான செயற் குறிப்புகளை சென்னை மாநகராட்சி அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியது. அரசு அவை



1974 ஆகஸ்டு 21] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

களைப் பரிசீலித்த பின்னர், எப்ரல் 1974-ல் பின் வரும் திட்டங்களைச் செயல்படுத்த கடனாக ரூ. 12·25 இலட்சமும் மானியமாக ரூ. 35·00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 47·25 இலட்சம் செலவுக்கு ஒப்புதல் அளித்தது :—

(1) 16 லாரிகள் வாங்குதல்.

(2) உருக்காலான 75 தண்ணீர் தொட்டிகள் அமைத்தல்.

(3) புதுக் குழாய்க் கிணறுகள் தோண்டுதல்.

(4) தற்போதுள்ள கிணறுகளைப் பழுது பார்த்தலுக்கும், புதுப்பித்தலுக்கும், வேறு செலவுகளுக்கும்.

(5) சிறு கால்வாய்கள் வெட்டுதல்.

சென்னை மாநகராட்சி, ஏற்கனவே அமைத்த, 2,400 குழாய்க் கிணறுகளை துரிதமாக பழுது பார்த்தது. அதுபோலவே, அரசின் பொறியியற் துறைகளும் அவைகளால் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளைப் பழுது பார்க்கும் வேலையை மேற்கொண்டு 1,300 குழாய்க் கிணறுகள் உபயோகத்திற்கு கொண்டு வந்துள்ளன. மொத்தமாக 3,700 குழாய்க் கிணறுகள் மாநகராட்சியில் பயன்படுகின்றன.

ஏற்கெனவே, சென்னை மாநகராட்சியிடம் தண்ணீர் வழங்குவதற்காக, 16 லாரிகள் உள்ளன. தற்போது 9 டாங்கர் லாரிகளை அம்மாநகராட்சி வாங்கியுள்ளது. இன்னும் 7 லாரிகளையும் வாங்க இருக்கிறது. இந்த லாரிகள் ஏற்கெனவே உள்ள 140 தண்ணீர்த் தொட்டிகளையும் சமீபத்தில் அமைக்கப்பட்ட 40 தண்ணீர் தொட்டிகளையும் நிரப்புகின்றன. இன்னும் 35 உருக்குத் தண்ணீர்த் தொட்டிகள் விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

ஏழை மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் குறைக்கவும், நீர் வழங்கு நிலைகளிலிருந்து தொலைவில் உள்ள இடங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாதிருக்கும் பொருட்டும் கீழ்கண்டுள்ள நடவடிக்கைகளையும் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.—

(1) வீடுகளுக்கு 1974 ஜனவரி 1-ம் தேதி முதல் புதியதாக குழாய் இணைப்பு கொடுப்பதில்லை.

(2) கட்டிட வேலைகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை.

(3) மீட்டர் பொருத்தப்பட்டுள்ள வீடுகளுக்கும் மற்ற இடங்களுக்கும் கட்டணம் வசூலிக்காமல் தண்ணீர் வழங்கப்படும் சலுகையில் 50 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

(4) தோட்டங்களுக்குக் குழாய்த் தண்ணீர் உபயோகிப்பதைத் தடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கிடைக்கும் தண்ணீரை அதிகப்படுத்துவதற்கும், தண்ணீர் வீணாவதைக் குறைப்பதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(1) கீழ்ப்பாக்கம் எந்திர வடிகலன்களில் உள்ள தண்ணீரை மேலும் சுத்தப்படுத்தி நாளொன்றுக்கு 10 லட்சம் காலன் வீதம் நகருக்கு வழங்கப்படுகிறது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஆகஸ்டு 21

(2) பெரிய கிணறுகளிலிருந்து குழாய்கள் மூலம் கீழ்ப்பாக்கம் நீர் வழங்கு நிலேக்குக் கொண்டுவரும் 3 லட்சம் காலன் தண்ணீர் நகருக்கு வழங்கப்படுகிறது.

(3) தாமரைப்பாக்கத்தில் உள்ள துளைக் கிணறுகளிலிருந்து சோழவரம் ஏரிக்கும், அங்கிருந்து செங்குன்றம் ஏரிக்கும் வரும் தண்ணீர் சேதம் ஆகாமல் இருக்கும் பொருட்டு சோழவரம் ஏரிப் படுகையில் ஒரு "காண்டூர்" கால்வாய் வெட்டப்பட்டுள்ளது.

(4) சோழவரம் ஏரியில் தரை மட்டத்துக்குக் கீழுள்ள நீரை 40 குதிரைத் திறன் கொண்ட பம்புகள் மூலம் செங்குன்றத்திற்கு அனுப்பப் படுகின்றது. இவ்வகையில் ஏறத்தாழ 4 முதல் 5 மில்லியன் காலன் தண்ணீர் நாளொன்றுக்கு செங்குன்றம் ஏரிக்குக் கொண்டு வரப்படுகின்றது.

(5) 120 பொதுக் கிணறுகளைத் தூர் எடுக்கும் வேலேயும் விரைவாக நடைபெற்று வருகிறது.

நீர் நிலேகளில் தண்ணீர் மிகக் குறைந்து வற்றிப்போன போதும் ஓரளவிற்குத் திருப்தி தரும் வகையில் சென்னே நகருக்கு நீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் நீர் வழங்கும் நிலேகளிலிருந்து தொலேவில் உள்ள இடங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

கிணறுகளேயும், குழாய்க் கிணறுகளேயும் தோண்டிக் கொள்ளும்படி பொது மக்களேயும் நிறுவனங்களேயும் சென்னே மாநகராட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

இப்பொழுது செங்குன்றம் ஏரியில் இருக்கும் தண்ணீரைப் பயன் படுத்தி அக்டோபர் முதல் வாரம் வரை நாளொன்றுக்கு முப்பது மில்லியன் காலன் தண்ணீர் கொடுக்க முடியும். அதற்குள் நல்ல மழை பெய்யா விட்டால் இதை 20 மில்லியன் காலனுக்குக் குறைக்க வேண்டி வரும். அந்த அளவில் மேலும் ஒரு மாதம் தண்ணீர் கொடுக்க முடியும். அதற்குள் வட கிழக்குப் பருவ மழை வருமென்று எதிர்பார்க்கப் படுகிறது. குறிப்பாக சைதாப்பேட்டை பகுதியில் 150 குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 19 புதிதாக அமைக்கப் பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையால் 60 குழாய்க் கிணறுகள் பணியாற்றி வருகின்றன. இப் பகுதியில் நில நீர் குறைந்து கிடைப் பதால் குழாய்க் கிணறுகளே அதிகமாக அமைக்க இயலாத நிலே இருக் கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், நான் குறிப்பாக முதலமைச்சரின் தொகுதியாக இருக்கும் சைதாப்பேட்டைத் தொகுதி என்று சொல்லி யிருக்கிறேன். அது நான் பார்த்த காட்சி கூட, தகவலும் கொடுத் திருக்கிருர்கள். தாய்மார்கள் இரவு நேரங்களிலே குடங்களே வைத்துக் கொண்டு நிற்கும் நிலேமை பல்வேறு பகுதிகளில் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நிலேமை இருக்கிறது. பூங்கா நகர் தொகுதியிலும் அப்படித்தான் இருக்கிறது. பொதுவாக எல்லா லோ லேயிங் ஏரியாவிலும்



1074 ஆகஸ்டு 21] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

இது ஜாஸ்தியாக இருக்கிறது. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னுல் இப்படிப்பட்ட ஒரு பிரச்னே வந்தது. அந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் ஒரு உத்தரவைப் போட்டார்கள். ஆங்கங்கே டியூப் வெல்ஸ் போடவேண்டுமென்று உத்தரவு போட்டு சென்னேயிலே பல பகுதிகளிலே டிவிஷனுக்கு 10, 20 என்று போட்டார்கள். அப்பொழுது என்ன நிலேமை இருந்ததோ, அதைவிட இன்னும் கடுமையாக இப்பொழுது இருக்கிறது. உங்களுடைய புள்ளி விவரங்கள் அப்படி இருக்கின்றன. எனவே இந்த நடவடிக்கை போதும் என்று கருதுகிருர்களா ? இல்லாவிட்டால் இன்னும் 'ஜெயண்ட் வெல்ஸ்" என்ற அளவில் பெரிய கிணறுகளேத் தோண்டுவதோ அல்லது லாரிகளின் மூலம் தண்ணீர் வினியோகிப்பதோ போன்ற ஏற்பாடு களேச் செய்வார்களா ? குறிப்பாக சைதாப்பேட்டை பகுதியில் இதை விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா ? வேறு ஏதாவது செய்யப்போகிருர் களா ? இல்லேயென்ருல் பயங்கரமான நிலேமை ஏற்படும்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலேவரவர்களே அந்த சைதாப்பேட்டைத் தொகுதியில் பல கிராமப் பகுதிகள் இப் பொழுது நகரத்தோடு சேர்க்கப்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. பல பகுதிகளில் தண்ணீர் குழாய், "ஹாண்ட் போரிங்ஸ்" ஆங்காங்கே போடப்பட்டு தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆனுல் அது நல்ல தண்ணீ ராக இல்லாமல் இருப்பதால் அதை மற்ற உபயோகத்திற்குப் பயன் படுத்தச் சொல்லிவிட்டு ஆங்காங்கே 13 இடங்களிலே சைதாப்பேட்டை தொகுதியில் மட்டும் புதிதாக ஏறத்தாழ 700 காலன் கொள்ளளவு கொண்ட டாங்க் வைக்கப்பட்டு தண்ணீர் வழங்குகிருர்கள். அதைப்போல வட சென்னேயிலேயும் வழங்கப்படுகிறது. எங்கெங்கு அப்படிப்பட்ட குறை இருக்கிறதோ அங்கெல்லாம் லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இன்னொரு ... தண்ணீர் டாங்கு களில் பிரஷரை அதிகப்படுத்திருல் தண்... வரும். வீட்டிலே பள்ளம் தோண்டி கீழே குழாய்களே ...ருர்கள். அப்படி வைக்கும் பொழுது தண்ணீர் சுலபமாக வரு... பிரஷரை அதிகப்படுத்துவார் களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலேவரவர்களே, அதற்காக வேண்டிய ஏற்பாடு கூட செய்யப்படுகிறது. பிரஷர் அதிகமாக இல்லாத பகுதிகளில் மோட்டார் வைத்து அழுத்தத்தின் மூலம் வேறு பகுதி களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது.

(4) நடைமுறைக் கேள்விகள்

(அ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு உடனடியாக அமைச்சர்கள் அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. ஜே. ஹெம்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். 41-வது விதியின் கீழே பல்வேறு "கால் அட்டன்ஷன், மோஷன்கள்" கொடுத் திருக்கிறேம். இதுவரையில் ஒருமுறை எப்படி இருக்கிறது என்ருல்

கொடுத்திருக்கும் கால் அட்டன்ஷன், மோஷன்கள் அந்த செஷனில் வரவில்லை என்றால் அடுத்த செஷனில் அது வருவதில்லை. அப்படி இந்த செஷனில் கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானங்களும் வராமல் போய் விடக் கூடாது. மிக முக்கியமான தீர்மானங்களை பல அங்கத்தினர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து தலைவரவர்கள் அது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குக் கூறி .. இந்த 41-வது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டிருக்கின்ற தீர்மானங்கள் அனைத்திற்குமே இந்த செஷனில் பதில் கொடுக்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த அவையில் கூறியது அமைச்சர்களின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே விரைவில் வரும். இந்தச் சபை நடக்கும் நேரங்களில் வரும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் சபைக்குக் கொண்டு வரப்படுகின்றன. சபை முடிந்த பிறகு, வந்தால் அவைகள் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றன. அடுத்தக் கூட்டம் வரையில் காத்திருப்பதில்லை.

## 5. அறிக்கை அளித்தல்.

துணை வினாவிற்குரிய விடையைச் சரிசெய்து அளிக்கப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 8—4—1974-ம் நாளன்று 771-ம் எண் வினாவிற்கு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரி செய்து உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயதது வரிகளை வசூல் செய்வதற்காக தனி நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா என்பதைப் பற்றிய உடுக்குறியிட்ட சட்டப் பேரவை வினா எண் 771-ற்கு (பழைய வினா எண் 2839), 8—4—1974 அன்று நான் விடையளித்தேன்.

மேற்கூறிய அவ்வினாவினை ஒட்டிய துணை வினாவாக திரு. கே. டி. கே. தங்கமணி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் ஊராட்சிகளுக்கு அளிக்கப் படும் முத்திரைத்தாள் வருமானத்தை அதிகப்படுத்துவதைப் பற்றி இவ்வரசு ஆலோசிக்குமா என்று கேட்டார்கள். அதற்கு விடையாக பதிவுத்தாள் கட்டணம் மாத்திரமல்ல சினிமா, பஸ் கட்டணங்கள் போன்ற வற்றிலும் உதவித் தொகை ஏதாவது கொடுக்கலாமா என்பதை அரசு ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது என்றும் ஆராய்ச்சி முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளேன். ஆனால் அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என தற்போது தெரிய வருகிறது.



## 6. அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ் நாடு 1974-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 41/74 ;

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 41/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள கொள்ளப்பட வேண்டும் என்று கோருகிறேன்.

## 4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவின் மீது விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலேயே எந்தவிதமான விவாதமும் இல்லாமல் நிறைவேற்றப்படவேண்டுமென்று . . . . . . . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதற்குள் ஏன் அவசரப் படுகிறீர்கள் ? நான்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேனே இந்த சப்ளிமெண்டறி பட்ஜெட்டைப் பற்றிய பில் வருகிறது. அதற்க்காக நான் பெரிய டிஸ்கஷன் கேட்கவில்லை. ஆனால் மேல் சபையில் டிஸ்கஷன் நடக்கிறது அப்ரோபிரியேஷன் பில்லுக்கு அங்கே டிஸ்கஷன் நடக்கிறது. இது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. உலகத்திலேயே இல்லாத காட்சி யாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. அலுவல் ஆயவுக் குழுவிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து அப்ரோபிரியேஷன் பில்லில் எந்தவிதமாக விவாதமும் இல்லாமல் நிறைவேற்றிவிடலாம் என்று முடிவெடுத்திருக்கிறார்கள். எந்த ஒழுங்கு முறையும் மீறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

DR. H. V. HANDE : The Business Advisory Committee has no jurisdiction to completely stop discussion on the Appropriation Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு விஷயம். அலுவல் ஆய்வுக் குழுவில் டிஸ்கஷன் பண்ண வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள்—தலைவர்கள் எல்லாரும் கூடி. அப்படி ஒரு முடிவைத் தலைவர்கள் எல்லாம் கூடி எடுத்த பிறகு அதைப் பற்றி இங்கே எழுப்புவது முறையல்ல.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : ஃபண்டாஸ்டிக்காக இருக்கிறது. மேல் சபையில் டிஸ்கஸ் பண்ணுகிறார்கள். இங்கே டிஸ்கஸ் பண்ண வழி இல்லை. இங்கே டிஸ்கஸ் பண்ண வேண்டுமென்பது பேசிக் நாலேட்ஜ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை உங்கள் கட்சித்தலைவரிடம் சொல்ல வேண்டும். உங்கள் கட்சித் தலைவர் அலுவல் ஆய்வுக் குழுவில் இதிலே எந்த விதமான விவாதமும் இல்லாமல் நிறைவேற்றலாம் என்று ஒத்துக் கொண்டார்கள்.

**Dr. H. V. HANDE : The Business Advisory Committee has no jurisdiction to say that.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அறிவுரையை உங்கள். தலைவருக்குக் கூறுங்கள். உங்கள் தலைவரும் மற்றக் கட்சிகளின் தலைவர்களும் உட்கார்ந்து அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவெடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேலவையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலவையில் இந்தத் துணை மானிய மதிப்பீட்டின்பேரில் விவாதம் வந்தபோது மிகக் குறைவான உறுப்பினர்கள் மாத்திரம் பேச அனுமதி அளிக்கப்பட்டது. மற்றவர்கள் நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசிக்கொள்ளலாம் என்ற ஏற்பாட்டை அங்குள்ள தலைவர்கள் செய்து கொண்டார்கள். இங்கு துணை மானியக் கோரிக்கையின்போது பேசினால் போதுமானது, நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசத் தேவையில்லை என்று அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாத் தலைவர்களும் ஒப்புக் கொண்டார்கள். மற்றத் தலைவர்கள் இதைப் பற்றிச் சொல்லட்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எங்களுடைய கட்சியின், சார்பில், அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்தது பற்றிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே விவாதம் தேவையில்லை என்ற முடிவு எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து எடுத்த முடிவு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் திரு எட்மண்ட் அவர்களும் அன்று இருந்தார்கள். டிமாண்டிலே பேசிக்கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. அலுவல் ஆய்வுக் குழுவுக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி இந்த மன்றத்திலே விவாதிப்பது நல்லதல்ல. ஆனால் எப்போது ஒரு முடிவு எடுக்கப்பட்டதோ அந்த முடிவுக்கு நான் கட்டுப்பட்டவன் என்ற முறையில் கட்டுப்பாட்டை மீறுதவன் என்று தங்கள் மூலமாகத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து : அலுவல் ஆய்வுக் குழுவில் அப்ரோப்ரியேஷன் பில்லில் விவாதிப்பதில்லை என்று எல்லாத் தலைவர்களும் சேர்ந்து முடிவு எடுத்தோம். நேற்று துணை மானியக் கோரிக்கையில் எல்லோரும் பேச வாய்ப்புக் கொடுத்து இதில் அலுவல்களை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஹாண்டே அவர்கள் பேச வேண்டுமென்று விரும்பியிருந்தால் நேற்றே அவர்களுடைய தலைவரிடம் அனுமதி வாங்கி பேசியிருக்க வேண்டும். தலைவர் செய்த முடிவு கட்சியிலுள்ள உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும், அந்தக் கட்சித் தலைவர்கள் ஏற்றுக்கொண்ட முடிவை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வதுதான் முறை. ஆகவே, மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு மேற்கொண்டு காரியங்களை நடத்த இடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அப்ரோப்ரியேஷன் பில் மணி பில். நம்முடைய சபையில் விவாதிக்கப்படாமல் எப்படி மேல் சபையில் விவாதிக்கப்படலாம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செழியன் அவர்கள் எதையும் தெரிந்துகொள்ளாமல் பேசுவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அங்கு விவாதிக்கப்படவில்லை.

திரு. கோவை செழியன் : இங்கு விவாதிக்க வாய்ப்பு கொடுக்காமல் எப்படி அங்கு போகலாம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் செழியன் அவர்கள் இங்கு விவாதிக்கப்படாமல் அங்கு எப்படி விவாதிக்கப்படலாம் என்று கூறிவிட்டு இப்போது மாற்றிப் பேசுகிறார்? அப்ரோப்ரியேஷன் பில் இங்கு முடிவுற்ற பிறகுதான் மேலவைக்குப் போவதாக இருக்கிறது.

திரு. கோவை செழியன்: இங்கு விவாதிக்க சான்ஸ் கிடையாதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்கள் தலைவர் நண்பர் எட்மண்ட் அவர்களைக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில் இங்கு விவாதம் செய்து நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுகிறதா, விவாதம் இல்லாமலே நிறைவேற்றப்பட்டு அங்கு அனுப்பப்படுகிறதா என்பது பிரச்சினை அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சித் தலைவர்களும் அப்ரோப்ரியேஷன் பில்லில் எந்தவிதமான டிஸ்கஷனும் தேவையில்லை என்று முடிவு எடுத்த பிறகு கட்சித் தலைவர்களின் கீழ் இருக்கும் உறுப்பினர்கள் முரண்பட்ட கருத்தைச் சொல்லுவது முறையல்ல.

## 6. அரசினர் சட்ட முன் வடிவு—தொடர்ச்சி.

### தமிழ் நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/74).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி- "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அட்டவணை, பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன்வடிவை சட்டமாக்கித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

(கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

## 4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (இ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு முறையாகக் கொண்டுவரப் படவில்லை என்பது குறித்து.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : கண்ணை மூடிக்கொண்டு வாக்கெடுப்பு நடத்துகிறீர்கள். பாயிண்ட ஆப் ஆர்டர் கேட்க உரிமை கிடையாதா? கான்ஸ்டிட்யூஷனுக்கு முரணாக இருக்கிறது.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : He is in a fighltng mood.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : நான் ஃபைட்டிங் மூடிலே இல்லை. அமைதியாக ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். முக்கியமான விஷயம். 360-வது விதியின் கீழ் நிதி ஒதுக்க மசோதா வந்திருக் கிறது. இதுவரை இப்பேர்பட்ட நிதி ஒதுக்க மசோதா வரவில்லை. ஏறத்தாழ 60 கோடி ரூபாய்க்குப் பற்றுக்குறை வருவதன் காரணமாக பல புது வரிகள் விதித்திருக்கிறார்கள். புது வரிகள் விதித்து சாதாரண மாக் துணை மானியக் கோரிக்கையில் வருவதற்கு சில எஸென்ஷியல் சர்வீஸஸ், நியூ சர்வீஸஸ் என்று இருக்கிறது. இப்போது இந்த பில் ஆர்டிகிள் 205, 206-ன் படி கொண்டு வரப்படவில்லை. அந்த ஆர்டிகிள் பிரகாரம் அல்லாமல் அதை மீறி 360-ன் பிரகாரம் கொண்டு வந்திருக்கிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரை அப்போதே எழுப்பியிருக்கவேண்டும்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : தயவுசெய்து என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரை இப்போது எழுப்ப முடியாது. பாயிண்ட் ஆப் ஆர்டர் சரியா இல்லையா என்பது வேறு விஷயம். முதலமைச்சர் அவர்கள் அப்ரோப்ரியேஷன் பில்லை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இன்ட்ரட்யூஸ் பண்ணிய நேரத்திலேயே, முறையான அப்ரோப்ரியேஷன் பில் இல்லை, இன்ட்ரட்யூஸ் பண்ணக்கூடாது என்ற ஆட்சேபணையை இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலேயே சொல்லியிருக்கவேண்டும். அதை எழுப்ப இது நேரம் இல்லை.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : We are taken unawares. இன்ட்ரட்யூஸ் பண்ணும்போது "அன்அவேர்" ஆக இருந்து விட்டதால் இப்போது எழுப்பக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "அன்அவேர்" என்பது எக்ஸ்க்யூஸ் ஆகாது.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : பில் காப்பி எங்களுக்கு வந்து, சரியானபடி படிக்க நேரம் இல்லை. இப்போது இரண்டாவது ஸ்டேஜிலேயே நான் இந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்டேன்.

The bi'l be taken into consideration. என்றவுடனேயே நான் இதை எழுப்பிவிட்டேன். செகண்ட் ரீடிங்கிலேயே எழுந்து விட்டேன். that the bill be passed. என்றவுடன் எழுந்திருக்க வில்லை.

ஆர்டிகிள் 360-ல் வருகிறது—If the President is satisfied that a situation has arisen whereby the financial stability or credit of India or of any part of the territory thereof is threatened, he may by a Proclamation make a declaration to that effect.

(2) The provisions of clause (2) of article 352 shall apply in relation to a Proclamation issued under this Article as they apply in relation to a Proclamation of Emergency issued under Article 352.

(3) During the period any such Proclamation as is mentioned in clause (1) is in operation, the executive authority of the Union shall extend to the giving of directions to any State........My point is according to Article 360, there is a serious financial crisis in this State.

எதற்காக அப்ரோப்பிரியேஷன் பில் கொண்டுவரப்படுகிறதோ அதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லாதவகையில் இருக்கிறது. இதைச் சொல்லுவதற்கு, அமைதியாகச் சொல்லுவதற்கு எனக்கு அனுமதி கொடுத்திருந்தால் முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் கொடுத்திருக்கலாம். சபாநாயகரே கூட விளக்கம் கொடுத்திருக்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அப்ரோப்பிரியேஷன் பில் நீங்கள் சொல்லுவது போல இல்லை. ஆர்டிகிள் 204, 205–ன் கீழ் வருகிறது. உங்களுடைய ஆர்க்யூமெண்ட், பாயிண்ட் ஆப் ஆர்டர் எல்லாம் இன்ட்ரொடக்ஷன் ஸ்டேஜிலே எழுப்பியிருக்க வேண்டும். நீங்கள் "அன்அவேர்" என்று சொன்னீர்கள். தெரியாது விட்டு விட்ட பிறகு மறுபடியும் நுழைந்து, போன காரியத்தைப் பற்றிக் கிளப்புவது முறையல்ல.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> செகண்ட் ரீடிங்கிலும் கொடுக்கலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது அதற்கு ஆட்சேபனை கிளப்புவது முறையல்ல.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> ஃபஸ்ட் ரீடிங்கில்தான் சொல்லலாம் என்பதற்கு அசெம்பிளி ரூல்ஸில் எந்த விதி என்று நீங்கள் "கோட்" பண்ணுங்கள்.

THIRU V. KRISHNAMOORTHY : Sir, Constitutional objection can be raised only at the time of the introduction of the Bill and not during the consideration of the Bill. If the Hon. Member has got any doubt about it, he can challenge it in a court of law..

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே :</u> இன்ட்ரொட்யூஸ் செய்யும்போதுதான் அப்ஜக்ட் செய்யலாம் என்று எந்த ரூலில் இருக்கிறது என்று கேட்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்ட்ரொட்யூஸ் செய்த எந்தப் பில்லும் விவாதத்திற்கு வரும். அதை மறுக்க முடியாது. ஆகவே, அதில் எந்தவிதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

<u>(ஈ) கச்சத்தீவு பற்றிய அரசினர் தனித்தீர்மானத்தின் மீதான விவாதம் அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பது குறித்து.</u>

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, I wish to raise a point of order against the Resolution which the Hon. Chief Minister is about to move in this House. I am raising it on Constitutional grounds. My submission is that the discussion or consideration



or passing of this Resolution is beyond the competence of the House according to the provisions of the Constitution. Article 253 of the Constitution says—

'Notwithstanding anything in the foregoing provisions of this Chapter, Parliament has power to make any law for the whole or any part of the territory of India for implementing any treaty, agreement or convention with any other country or countries or any decision made at any international conference, association or other body'.

Sir, this Resolution deals with a matter which is strictly under the purview of the Parliament and the Central Government according to the provisions of the Constitution. In the Seventh Schedule, item 10 of List I—Union List says—

'Foreign Affairs, all matters which bring the Union into relation with any Foreign Country'.

Item 14 says—

'Entering into treaties and agreements with foreign countries and implementing of treaties, agreements and conventions with foreign countries'.

Item 20 says—

'Pilgrimages to places outside India'.

This Resolution regarding Katchathivu comes under these items.

So, as far as relations with any foreign country or any agreement with regard to pilgrim centres or boundaries are concerned it is strictly under the jurisdiction and competence of the Parliament and the Central Government. Now the agreement has been reached between the Central Government and the Government of Sri Lanka and this agreement has been ratified by the Government of India and this agreement has also been placed before the Parliament which has ratified it. After all these things are over, for this House to discuss a matter which lies exclusively within the jurisdiction of the Central Government and the Parliament—they have already ratified it—would I submit, be against the provisions of the Constitution.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தைப் படித்திருந்தால் உங்கள் ஆட்சேபனைக்கு இடமில்லை. "..........மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து கச்சத்தீவின்மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது". என்றுதான் இருக்கிறது. மத்திய அரசை வலியுறுத்துகிறது. செய்ய வேண்டிய காரியம் எல்லாம் மத்திய அரசு செய்யவேண்டியதுதான். மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்கிறது. ஆகவே, அதில் எந்த விதமான வயலேஷனும் இல்லை.

திரு. எ. சுப்பிரமணியம் : நாம் ரீகன்ஸிடரேஷனுக்குக் கேட்கிறோம். Before this agreement which was entered into by the Prime Minister was ratified by the Parliament, this Resolution should have been brought forward.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசு பிற அரசுகளுடன் செய்துகொள்கிற ஒப்பந்தங்கள் மாறி மாறி வருகின்றன. ஆகவே அப்படிக் கேட்பதில் தவறு இல்லை. நாம் கேட்டுக்கொள்கிறோம், அவ்வளவுதான். அடுத்து, அரசினர் தீர்மானம்.

## 7. அரசினர் தனித் தீர்மானம்.

கச்சத் தீவு பற்றி மத்திய அரசு இலங்கை அரசுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை மத்திய அரசு மறு பரிசீலனை செய்து திருத்தியமைக்க வேண்டுமென்பது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, "இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ் நாட்டுக்கு நெருங்கிய உரிமைகள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்சினையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவு பற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ் நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது" என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.



தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பற்றி அவையிலே பல உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். கச்சத் தீவு இலங்கைக்கு அளிக்கப்படக்கூடாது, தமிழ் மக்கள் அதை விரும்பமாட்டார்கள் என்பதைப் பற்றி பல நேரங்களில் மத்திய பேரரசுக்கு தமிழக அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. நடைபெற்ற ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் இந்தியா கச்சத் தீவை விட்டுத் தரக் கூடாது என்ற கருத்து தமிழக அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும், அதற்கு மாறாக ஏற்பட்டு விட்ட இந்தச் சூழ்நிலையில் உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டி, ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கும் இந்தியப் பிரதமருக்கும் நாம் அனுப்பி வைத்தோம். இப்போது இந்தச் சட்டப் பேரவை மூலமாக ஒருமனதாக இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பிவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதற்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உறுப்பினர்களுடைய கருத்துரைகளுக்கு பிறகு நான் ஏதாவது சொல்ல வேண்டுமென்றிருந்தால் இறுதியாகச் சொல்கிறேன் என்று கூறி இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்து உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டேகால் மணி நேரம் இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, கச்சத் தீவு சம்பந்தமாக அரசினர் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற தனித் தீர்மானத்தின் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

இராமாயண காலத்திலிருந்து இராமநாதபுரம் ராஜா காலம் வரை மட்டுமல்ல, கற்காலத்திலிருந்து நம்முடைய தலைமுறையுடைய காலம் வரையில் கச்சத் தீவு தமிழ் நாட்டினுடைய அங்கமாக இந்தியாவிற்குச் சொந்தமான பகுதியாக இருந்தது என்பதில் இரண்டுபட்ட கருத்து இந்த அவையில் இல்லை என்று நாம் எல்லாம் மனதார நம்புகிறோம். 1802-ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட ஜமீன்தாரி நில உரிமை சட்டப்படி கச்சத் தீவு இராமநாதபுரம் ராஜாவிற்கு அரசுரிமையாக்கப்பட்டது. அதற்குப் பிறகு இராமநாதபுரம் ராஜா அவர்கள் அந்த இடத்தை தனி நபர்களுக்குக் குத்தகையாகக் கொடுத்து அவர்கள் மூலமாக பயன் பெற்றிருக்கிறார்கள்.

1913-ம் ஆண்டில் கூட சென்னை அரசாங்கம் இராமநாதபுரம் சமஸ்தானத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டு மீனவர்களுக்காக சில சலுகைகளைத் தந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் 1874-ம் ஆண்டில் இந்திய சர்வே இலாகா கச்சத் தீவை நல்ல முறையில் சர்வே செய்திருக்கிறது. அன்றையத் தினமும் கச்சத் தீவில் இருக்கிற சர்வே கல் எண். 1250 என்பது இந்திய அரசு நிர்ணயித்திருக்கும் நம்பராகும்.

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்டு 21

கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதி, தமிழ் நாட்டுக்குச் சொந்தமான பகுதி, அதில் புனித அந்தோணியார் கோவில் கட்டியிருக்கிறார்கள். அங்கு வருடாந்திர விழாவும் நடத்துகிறார்கள். அப்போது ஆயிரக் கணக்கான மக்கள் அங்கு செல்கிறார்கள். மீனவ நண்பர்கள் எல்லாம் கச்சத் தீவில் வளமான அளவிற்கு, தேவையான அளவிற்கு மீன்களைப் பிடிக்கிறார்கள் என்ற கருத்துக்களை இந்த மன்றம் ஒருமனதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் 1954-ம் ஆண்டு வரையில் இலங்கை தனது தேசப் படத்தில் கச்சத் தீவை ஒரு பகுதியாகக் குறிப்பிடவில்லை. அந்த அளவிற்கு 1954-ம் ஆண்டு வரையில் தன்னுடைய தேசப்படத்தில் குறிப்பிடாத இலங்கை அரசு இன்றைய தினம் கச்சத் தீவை பெற்றுக்கொண்டதென்றால் இதிலிருக்கிற அடிப்படைக் காரணங்கள் என்ன, நியாயங்கள் என்ன என்பதை இந்த மன்றத்தில் நாம் பரிசீலனை செய்யாமல் இருக்க முடியாது. கச்சத் தீவு நான் முதலில் குறிப்பிட்டதுபோல் தமிழகத்தின் ஒரு அங்கம் இதிலே நமக்குள்ளே ஒருமித்த கருத்து உண்டு. ஆனால் இந்தக் கச்சத் தீவு பிரச்னை மீண்டும் பரிசீலிக்கப்பட வேண்டும், மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும் என்ற பிரச்னை எழும்போது தான், கச்சத் தீவு பிரச்னை முடிந்து விட்ட விவகாரம். எனவே அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டியது இல்லை என்று சொல்பவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள். முடிவு என்பது உலகத்தில் எதுவும் இல்லை. முடிவு என்பது அந்த முடிவின் நியாயத்தைப் பொறுத்தது மட்டுமல்ல. சொல்பவர்களின் துணிவைப் பொறுத்து இருக்கிறது. எனவே, நாம் சொல்கிறபடி சொன்னால் இந்தப் பிரச்னைக்கு மீண்டும் உயிரோட்டம் கொடுக்கலாம். எனவே, மீண்டும் ஆலோசனை செய்யவேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டிய அவசியம், நியாயம் என்பதை எண்ணுபவர்கள் இந்த மன்றத்தில் இருக்கிறார்கள்.

இந்த கச்சத் தீவு பிரச்னையை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த மன்றத்தில் கொண்டுவைப்பதன் மூலம் அரசியல் லாபவேட்டையாட வேண்டுமென்று நினைத்து இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள். எனவே, மீண்டும் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த மன்றத்தில் ஒருமித்த கருத்து இல்லை, முரண்பாடான எண்ணங்கள், வேறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை, நிச்சயமாக மறைப்பதற்கு இல்லை.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த மட்டில் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முற்படுவது எல்லாம், கச்சத் தீவு சம்பந்தமாக தமிழக அரசு எடுத்து வைத்த வாதங்கள், தொடுத்து வைத்த நியாயங்கள், மேற்கொண்ட வரலாற்றுச் சான்றுகள், குறிப்புகள் இவைகளை மத்திய சர்க்காருக்கு ஒழுங்காக, முறையாக தெரிவிக்கவில்லை என்பது மட்டுமல்ல. அதைத் தீவிரமாகத் தெரிவிக்கவில்லை, நம்முடைய மக்களின் எண்ணம் இந்தப் பிரச்னையில் உணர்ச்சிப் பிழம்பாயிருக்கிறது என்பதை தமிழக அரசு மத்திய அரசுக்கு கூர்மையாக, தீவிரமாகத் தெரிவிக்கத் தவறிவிட்டது என்பதைத் தாழ்மையாக சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1974 ஆகஸ்டு 12] [திரு. ஆலடி அருணா]

எந்த அளவுக்கு மத்திய சர்க்காரிடத்தில மாநில சர்க்கார் தீவிரமாக சொல்லவில்லை, கூர்மை காட்டவில்லை என்று குற்றம் சாட்டுவதற்குக் காரணம் ஆந்திரா பிரிந்த நேரம். இந்த சென்னை மாநகரம் யாருக்குச் சொந்தம், தமிழகத்திற்குச் சொந்தமா, அல்லது ஆந்திராவுக்குச் சொந்தமா, அல்லது கூவத்தை எல்லையாக வைத்து கூறுபோட்டுக் கொள்ளலாமா என்ற நிலைமை ஏற்பட்ட நேரத்தில், அது தமிழகத்திற்குச் சொந்தம் என்ற நாம் எல்லாம் ஆர்பரித்த நேரத்தில், அணி வகுத்த நேரத்தில், போர்க்குரல் கொடுத்த நேரத்தில், போராட்டத்திற்குத் தயாராக இருந்த நேரத்தில், அன்றையதினம் முதலமைச்சராக இருந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள், சென்னையை தமிழக மக்களுக்கு கொடுக்காவிட்டால், தமிழக மக்களின் கோரிக்கைக்கு எதிராக, தமிழக மக்களின் வேண்டுகோளுக்கு எதிராக மத்திய சர்க்கார் செயல்படுமானால், நானே அந்தப் போராட்டத்தை தலைமை தாங்குவேன் என்று மத்திய சர்க்காருக்கு ஒரு தாக்கீதை, போராட்ட மடலை எழுதினார்கள். அதே போல், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கச்சத் தீவு பிரச்னையில் எங்களுடைய உணர்வுகள் புறக்கணிக்கப் படுமானால், எங்களுடைய நியாயங்கள் மறுக்கப்படுமானால், எங்களுடைய ஆதாரங்கள் அலட்சியப்படுத்தப்படுமானால், தமிழகத்தில் நானே தலைமைதாங்கி போராட்டத்தை நடத்த வேண்டிய கட்டம் ஏற்படும் என்று மத்திய சர்க்காருக்கு அச்சுறுத்தும் வகையில் தாக்கீது அனுப்பியிருப்பார்களேயானால், கச்சத்தீவு பிரச்னையில் இவ்வளவு பெரிய பரிதாபகரமான முடிவு ஏற்பட்டு இருக்காது என்பது எங்களுடைய தாழ்மையான கருத்தாகும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை.)

இதை தமிழக அரசு நியாயமாக அணுகவில்லை என்று நாங்கள் சொல்வதற்கே காரணம், பெருமதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் தீவிரம் காட்டவில்லை என்று சொல்வதற்கே காரணம், இன்னொரு ஆதாரம் இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். வங்கத்தின் ஒரு பகுதியான பெருபாரியை பாகிஸ்தானுக்குக் கொடுத்த காலத்தில் வங்க அரசு காங்கிரஸ் கட்சியின் ஆளுகையில் இருந்தது. மத்திய அசராங்கமும் காங்கிரஸ் கட்சியின் ஆளுகையில் இருந்தது. அப்போது நேரு அவர்கள் இருந்த காலம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட கட்சியின் கட்டுப்பாட்டைப் பாராமல் நாட்டின் நலன் கருதி, வங்கத்தின் அங்கமாக இருக்கும் பெருபாரியை எப்படி இந்தியா பாகிஸ்தானுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்று ஆர்த்தெழுந்து மத்திய சர்க்காருக்கு எதிராக வழக்குத் தொடுத்தது வங்க சர்க்கார். வழக்குத் தொடுத்தது மட்டுமல்ல, அந்த ஆண்டு வந்த சுதந்திர விழாவை துக்கதினமாகப் பிரகடனப்படுத்தி, அரசாங்க அலுவலகங்களில் எல்லாம் கறுப்புக் கொடி பறக்க விட்டது அன்றைய காங்கிரஸ் ஆட்சி. நான் இதை நினைவூட்டுவதற்குக் காரணம் மத்திய சர்க்காரிடத்தில் நம்முடைய நியாயங்களைச் சொல்கிறபோது, சில நேரங்களில்

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்டு 21

நம்முடைய ஆயுதங்களை கூர்மையாகத் தீட்டி, நம்முடைய நியாயங்களை எடுத்து வைக்கவேண்டும். அந்த அளவுக்கு இந்த கச்சத்தீவு பிரச்னையில் தமிழக அரசு செய்யத்தவறிவிட்டது, வலிமைப்படுத்தவில்லை, கூர்மைப்படுத்தவில்லை, போர்த்தன்மைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்ளவில்லை என்பது என்னுடைய வாதம், என்னுடைய குற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டை சொல்கிற நேரத்தில், அதைப் பலப்படுத்துவது எதன் அடிப்படையில், எதன் அடிப்படையில் அது உருவாகிறது இந்தக் குற்றச்சாட்டு என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆரம்பத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கச்சத்தீவு ஒப்பந்தம் ஏற்பட்டது என்பதை நான் பத்திரிகையில் தான் பார்த்தேன். என்னிடத்தில் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை, இந்தப் பிரச்னை பற்றி, என் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை, நான் பத்திரிகையில் பார்த்துத் தான் தெரிந்து கொண்டேன் என்று பகிரங்கமாக பொதுமேடையில் பேசினார்கள். மத்திய சர்க்கார் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்து ஆலோசனை கேட்கவில்லை, அவர்களைக் கூப்பிட்டு கச்சத்தீவு பிரச்னை பற்றி விவாதிக்கவில்லை என்று பகிரங்கமாகப் பேசினார்கள். இதைப் பல மேடைகளில் பேசினார்கள். மதுரை மாநகரத்தில் பேசியதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுரை மாநகரத்தில் பேசுகிறபோது சொல்லிய கருத்துக்களை, துணைச் சபாநாயகர் அவர்களே தங்களின் அனுமதியோடு, அவர்களுடைய ஆதரவோடு இருக்கும் முரசொலி பத்திரிகையிலிருந்து சொல்ல விரும்புகிறேன்.

"கச்சத்தீவு தமிழ்நாட்டிற்கே சொந்தம், இந்தியாவிற்கே சொந்தம் என்ற ஆதாரங்கள் எல்லாம் பிரதமருக்கு எடுத்து வைத்தேன். எதையும் லட்சியம் செய்யாமல், என்னை அழைத்து இது பற்றி ஒரு வார்த்தை கூட பேசாமல் கச்சத்தீவை இலங்கைக்கு தானம் செய்து இருக்கிறார் பிரதமர் அவர்கள். இன்று கச்சத்தீவு, நாளை ராமேஸ்வரம், நாளை மறுநாள் தனுஷ்கோடி என்று ராமாயண காலத்தில் கூறியது போல் தமிழகத்தையே தூக்கிக் கொடுக்கும் அளவுக்கு இருக்கிறது இன்று இருக்கும் அரசியல் சட்டம்" என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுரை நகரில் முழங்கினார்கள்.

மதுரையில் பேசிய பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்குச் செல்கிறார்கள். திருச்சியில் தந்தை பெரியார் அவர்களின் நூல் வெளியீட்டு விழா, அந்த நிகழ்ச்சியில் பேசும்போது அதே கருத்தைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே இதுபற்றி பேசும்போது "கச்சத்தீவு தமிழகத்தின் உரிமை—(குறுக்கீடு) பெரியாரின் விஷயத்தில் வேறுபட்ட கருத்து இருக்கலாம்—அவர் அஞ்சல் தலை வெளியிடுவது—கச்சத்தீவு பிரச்னையில் நாட்டில் இருக்கும் மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள். அதைக் கேளாமல் இலங்கைக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு,



1974 ஆகஸ்டு 21] [திரு. ஆலடி அருணா]

ஒப்பந்தம் ஆகிவிட்ட செய்தியை உலகுக்கு அறிவிக்கிறார்கள். நாம் பத்திரிகையைப் பார்த்து தெரிந்து கொள்கிறோம்". இப்படி நம் முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாபநாசத்திற்குச் செல்கிறார்கள். பாபநாசத்தில் பேசும்போதும் இதே கருத்தைத் தான் அந்தப் பொதுகூட்டத்தில் பேசியிருக்கிறார்கள். மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறார்கள், அந்தக் கூட்டத்தில். "இலங்கை தேசப் படத்தில் இந்த கச்சத்தீவு 1954-வரையிலும் இடம் பெறாமல் தான் இருந்தது. அப்படி இடம் பெறாது இருந்த கச்சத்தீவு தமிழகத்தோடும், இந்தியாவோடும் சேர்ந்திருந்த நிலப்பரப்பு ஆகும். அந்தப் பகுதியை நம்மிடம் சொல்லாமலேயே கூட இலங்கைக்கு இந்தியப் பிரதமர் ஒப்பந்தம் செய்து கொடுத்துள்ளார்" என்று பாபநாசத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்கு மக்களிடத்தில் தன்னிடம் கேட்கவில்லை, ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை, பத்திரிகையில் பார்த்துத் தான் தெரிந்துகொண்டேன் என்று முதலமைச்சர் சொல்லிவிட்டு, இன்றையதினம் இந்தப் பிரச்னையின் அடிப்படையில் அவர்கள் கட்சியைச் சார்ந்தவர்களே நாடாளுமன்றத்தில் பேசினார்கள். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய நாவலர்கூட சீரணி மேடையில் பேசுகிறபோது மிகத் தெளிவாகச் சொன்னார்கள்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் மதுரையிலே, திருச்சியிலே, பாபநாசத்திலே பேசியதில் என்ன தவறு என்று குறிப்பிடுகிறீர்கள்? பிரதமர் என்னை அழைத்து ஒரு வார்த்தை கேட்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். என்னை அழைத்துக் கேட்கவில்லை. நான்தான் பிரதமர் அவர்களைச் சந்தித்து கச்சத்தீவு பற்றிச் சொன்னேன். அதற்கிடையில் செயலாளர் பேசினார். ஒரு விருந்தில் வெளிநாட்டு அமைச்சர் பேசினார். இதைப்போல் ஒப்பந்தம் செய்து கொள்ளப் போகிறோம் என்று சொல்லவில்லை. ஏற்கெனவே இருநாடுகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டபோது அன்று தமிழகத்தில் அமைச்சராக இருந்த ராமையா அவர்களை அழைத்து அன்று இருந்த பிரதமர் டில்லியில் வைத்து கலந்து கொண்டார்கள். இப்போது யாரையும் கேட்கவில்லை என்று சொல்வது தவறாகாது. கேட்கத்தான் இல்லை.

திரு. ஆலடி அருணா: அவர்களை ஆலோசனை கேட்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது பிரதமர் கேட்கவில்லை, அல்லது வேறு யாரும் கேட்கவில்லை...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் ஒவ்வொரு முறையும் பிரதமரைச் சந்தித்தபிறகும் சரி, செயலாளர் கேவல் சிங்கை சந்தித்தப்பிறகும் சரி, நிருபர்களை சந்தித்து என்ன பேசினேன், எந்த அடிப்படையில் உணர்வுகளை தெளிவுபடுத்தினேன் என்பதை சொல்லியிருக்கிறேன். பத்திரிகைகளிலும் அவ்வப்போது அவை வெளிவந்து இருக்கின்றன.

திரு. ஆலடி அருணா: ஏற்கெனவே முதலமைச்சர் சொன்னார்கள். நானும், சட்ட அமைச்சர் அவர்களும் இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசினோம். பிறகு, தங்களை யாரும் கலந்து ஆலோசிக்கவில்லை என்று மத்திய சர்க்காருக்கு எதிராக வாதிட்ட பிறகு, முதலமைச்சர் அவர்களின் வாதத்தைக்கொண்டு அவர்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. எஸ். எஸ். மாரிசாமி நாடாளுமன்றத்தில் பேசினார்கள்.

(முற்பகல் 11-30).

நாடாளுமன்ற மேலவையில் பேசும்போது என்ன சொன்னார்கள்?

**It was rather strange that the Centre had neither consulted the Chief Minister of Tamil Nadu nor replied to the letter he wrote to the Prime Minister on the subject, before signing the agreement** என்று தான் திரு. மாரிசாமி அவர்கள் பேசினார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், கன்ஸல்டே பண்ணவில்லை என்று சொன்னார். இப்பொழுது என்ன சொல்கிறார் என்றால் நான் "கன்செண்ட்" கொடுக்கவே இல்லை என்று கூறுகிறார். இந்த வாதத்தை ஏன் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது? என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கிட்டத்தட்ட ஓராண்டு காலத்தில் நிருபர்களிடம் நான் அவர்களைச் சந்தித்தைப் பற்றியும், என்ன பேசினேன் என்பதைப்பற்றியும் ஒவ்வொரு முறையும் சொல்லியிருக்கிறேன். அவ்வப்பொழுது அதுபற்றி பத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருக்கிறது.

திரு. ஆலடி அருணா: ஆலோசனை நடத்துவது வேறு. முதல் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். உங்களைக் கூப்பிட்டு ஆலோசனை நடத்தினார்களா, இல்லையா? சந்திப்பது என்பது வேறு, பேச்சுவார்த்தை என்பது வேறு, ஆலோசனை என்பது வேறு, உரையாடல் என்பது வேறு என்று பிட்டுப் பிட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி இலக்கணத்தை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பிரதமர் என்னை அழைத்து இதைப்பற்றி ஆலோசனை நடத்தவே இல்லை.

திரு. ஆலடி அருணா: மத்திய அரசு உங்களோடு ஆலோசனை நடத்தியதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செயலாளர் கேவல் சிங் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபொழுது இதைப்பற்றி அவர் என்னிடம் பேசினார். இதை ஆலோசனை என்று வைத்துக்கொண்டா



லும் கூட, நான் அவர்களிடம் சொன்னது "தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளாது, கச்சத்தீவு இந்தியாவுக்கே, தமிழகத்துக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, மறுநாள் பிரதமரைச் சந்தித்தப் பொழுதும் இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன். பின்னர் நிருபர்களைச் சந்தித்தபோதும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். ஜனவரி மாதத்தில் மேலவையில் பேசும்போதும் இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. ஆலடி அருணா: ஸ்வரண்சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியதை துணைசபாநாயகர் அவர்களின் அனுமதியோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

The External Affairs Minister Shri Swarn Singh said in Rajya Sabha today that very detailed consultations had been held with Chief Minister of Tamil Nadu Mr. Karunanidhi by the Government of India on the issue of Kachatheevu.

சாதாரண கன்ஸல்டேஷன் அல்ல, 'டீடைல்டு கன்ஸல்டேஷன்'

The consultations were held at least twice.

'அட்லீஸ்டு ட்வைஸ்' என்று கூட சொல்லியிருக்கிறார்கள், குறைந்த பட்சம் இரண்டு முறை நாங்கள் கன்ஸல்டேஷன் பண்ணியிருக்கிறோம். அதுவும் டீடைல்டு 'கன்ஸல்டேஷன்'

அதுவும் மிகத் தெளிவாக, விரிவாக அவர்களோடு கலந்து ஆலோசனை நடத்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், தன்னைக் கேட்கவே இல்லை. ஒரு வார்த்தை கூட கேட்கவே இல்லை........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதற்கும் நான் விளக்கம் அளித்துவிடுகிறேன். ஸ்வரண்சிங் அவர்கள் சொல்லுகிறார்கள்:

May I say because others might pick up—I would like to say categorically that we had very detailed consultation with the Chief Minister Shri Karunanidhi of Tamil Nadu not once but at least two times. உடனே ரபிராய் என்ற உறுப்பினர் எழுந்திருந்து Has he agreed? என்று கேட்டார். உடனே அமைச்சர் ஸ்வரண்சிங் அவர்கள் சொல்கிறார்: The point raised was about consultation என்று சொல்லி தந்திரமாக தப்பித்துக் கொள்கிறார்கள். பிறகு வலம்புரி ஜாண் அவர்கள் சொல்கிறார்:

It is not a question of consultation but registration of protestations of my beloved leader Dr. Karunanidhi. It is not the end of the problem. It is the beginning of the problem. That is the tragedy என்று ஜாண் அவர்கள் பேசி முடிக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா : தந்திரமாகப் பேசி தப்பித்துக்கொள்வது சுவரண் சிங் அவர்கள் அல்ல. தந்திரமாகப் பேசி தப்பித்துக் கொள்வது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் தான். கன்ஸல்டேஷன் இல்லை என்று சொல்லிவிட்டு, கன்செனட் இல்லை என்று இப்பொழுது சொல்கிறார்கள்., எங்களுடைய வாதம் அது அல்ல. நீங்கள் கன்ஸல்டேஷன் இல்லை என்று முதலில் சொன்னீர்கள். இப்பொழுது கன்செண்ட் இல்லை என்று சொல்கிறீர்கள். நாங்கள் சொல்கிறோம். கன்ஸல்டேஷன் இல்லை என்று நீங்கள் முதலில் வாதித்ததற்குக் காரணம், திரை மறைவில் கன்செனட் கொடுத்திருக்கிறீர்கள் என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது உண்மைக்குப் புறம்பானது. அவதூறானது. வேண்டுமென்றே அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகச் சொல்வது. நான் சொல்கிறேன். பிரதமர் அவர்கள் என்னை அழைத்து இதைப் பற்றி ஆலோசனை நடத்தவே யில்லை. நான் பிரதமரைச் சந்தித்தபொழுது கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்து விடக்கூடாது என்று அவர்களிடம் சொன்னேன். அப்படிக் கொடுப்பதை தமிழக அரசு ஒத்துக்கொள்ளாது என்று சொன்னேன். மத்திய அரசு மந்திரி எவரும் என்னிடம் இதைப் பற்றி ஆலோசனை நடத்தவில்லை. இரண்டு முறைகள் கேவல் சிங் அவர்கள் என்னைச் சந்தித்தார். ஒரு முறை டெல்லியிலும் இன்னொரு முறை சென்னையிலும் சந்தித்தார். டெல்லியில் சந்தித்த பொழுது நான் அவர்களிடம் கச்சத்தீவை இலங்கைக்கு அளிக்கக்கூடாது என்று திட்டவட்டமாக மறுத்துக் கூறியிருக்கிறேன். உடனே நிருபர்களிடமும் அதைப்பற்றிக் கூறியிருக்கிறேன். பிரதமர் அவர்கள் என்னை அழைத்து இதைப்பற்றி ஆலோசனை நடத்தவே இல்லை.

திரு. ஆலடி அருணா : மத்திய சர்க்கார் பிரதிநிதிகள் முதல் அமைச்சர் அவர்களோடு பேசிய நேரத்தில் கேவல் சிங் அவர்கள் என்ன மனப்பான்மையோடு இருந்தார்., வெளி விவகார அமைச்சர் என்ன கருத்தில் இருந்தார்; பிரதமர் என்ன கருத்தில் இருந்தார் என்று திறமை மிக்க நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் அப்பொழுது இதைப் பற்றி அவர்களுடைய தோழமைக் கட்சியிடமோ அல்லது எதிர்கட்சிகளிடமோ கலந்து பேசி இந்தத் தீர்மானத்தை அந்த ஒப்பந்தத்திற்கு முன்னால் தீவிரப் படுத்தி ஒரு பெரிய போராட்டத்திற்கு தமிழகத்தை தயாராக ஆக்கி இருக்கலாம். அதை அவர்கள் செய்யவில்லை. அப்படிச் செய்யாததற்குக் காரணம், நாங்கள் குற்றம் சாட்டுகிறோம், நீங்கள் அதற்கு உடந்தை



யாக இருந்தீர்கள் என்று. இலங்கையில் தமிழர்கள் எவ்வளவு துன்புறுத்தப்பட்டார்கள் என்பதைப் பற்றி நான் இப்பொழுது பேச ஆசைப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

திரு. ஆலடி அருணா : இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு வருகிறார். சென்னைக்கு வருகிறார். அவரை மாலை போட்டு வரவேற்கிறார் நம்முடைய முதல் அமைச்சர். மாலை போட்டவர் மகஜர் ஏன் கொடுக்கக்கூடாது என்று எங்கள் கட்சித் தலைவர் கேட்டார். "மகஜர் கொடுப்பது உங்கள் பழக்கமே தவிர எனக்குப் பழக்கம் இல்லை" என்று அலட்சியமாக எங்கள் கட்சித் தலைவரை விமர்சனம் செய்தார். நான் அவர் அப்படி விமர்சித்தது பற்றி கவலைப்படவில்லை. இரண்டு, மூன்று நிமிடங்களுக்குள் ஒரு வரலாற்று நிகழ்ச்சியை இந்த மன்றத்திலே சொல்ல விரும்புகிறேன். 1961-ல் இலங்கையில் தமிழர்களுக்கு பெரிய கொடுமை இழைத்த நேரத்தில் இலங்கை பிரதமருக்கு இங்கே இருக்கிற அசிஸ்டெண்டு ஹைகமிஷனர் மூலமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு மகஜர் கொடுத்தார்கள். அந்த மகஜரை இப்பொழுது இந்த மன்றத்திற்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். சென்னை மாநிலத்திதைச் சேர்ந்த இரண்டு லட்சம் மக்கள் அங்கே வர்த்தகம் நடத்துகிறார்கள். அந்த மகஜர் இலங்கைப் பிரதமருக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. யு.என்.ஓ.வில் உள்ள பொதுச் செயலாளருக்கும் அனுப்பப்பட்டது. அப்பொழுது காங்கிரஸ் நண்பர்கள் என்ன சொன்னார்கள் ? தி.மு.க. எங்கே, உலக ஐக்கிய நாடு சபை எங்கே. அங்கே போய் மகஜர் கொடுக்கிறார்கள் என்று இங்கே கேலி செய்தார்கள், கிண்டல் பண்ணினார்கள். அண்ணா அவர்களை அவதூறாகப் பேசினார்கள். அன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் மகஜர் கொடுத்ததை எப்படி கேவலமாக பேசினார்களோ, கிண்டல் செய்தார்களோ அதே அடிப்படையில் நாங்கள் மகஜர் கொடுத்ததை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்குச் சொல்கிறார்கள். இதிலே எங்களுக்கு ஒன்றும் கோபம் இல்லை. நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் காங்கிரஸ்காரராக மாறி வருகிறார் என்று தெரிந்து கொள்கிறோம். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளிப்படையாக காங்கிரஸ்காரராக மாறினாலும் பரவாயில்லை, துரோகியாக மாத்திரம் மாறக் கூடாது.

திரு. ஆலடி அருணா : யார் துரோகி, யார் வீரன் என்று மக்கள் நிர்ணயம் செய்வார்கள். துரோகிகளுடைய முகமூடியை நிச்சயம் 1976-ல் மக்கள் கிழித்து எறிவார்கள். யார் துரோகி. யார் வீரன் என்பது போகப் போகத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நன்றி கெட்டவர்கள் யார் துரோகிகள் யார் என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

திரு. ஆலடி அருணா : நன்றி மறந்த நிலையினால் தான் இன்று தி.மு.க. மூன்று கூறுகளாக பிரிந்து கிடக்கிறது. தேவையில்லாத பிரச்சினையைப் முதல் அமைச்சர் அவர்கள் கிளப்பிக்கொண்டிருக்கிறார். அதற்குப் பதில் சொல்வதற்கு நான் எந்தக் கட்டத்திலும் தயாராக இருக்கிறேன். இந்த மாநிலத்தோடு இணைந்த கச்சத் தீவு பிரச்சினையைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு மத்திய அரசோடு சேர்ந்து ஒப்பந்தத்திற்கு திரைமறைவில் ஒப்புதல் அளித்துவிட்டு இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டுவருகிறது.

எனவே இந்தத் தீர்மானத்தில் தமிழக அரசையும் கண்டித்து இந்தியப் பேரரசையும் கண்டித்து, மீண்டும் மத்திய அரசு இதை பரிசீலிக்கவேண்டும் என்ற திருத்தத்தோடு நிறைவேற்றுவதாக இருந்தால் அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது என்று சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : இங்கே கச்சத் தீவு பிரச்சினை பற்றி அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அ.தி.மு.க. உறவு வைத்துக்கொண்டிருக்கிற இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி கச்சத் தீவு கொடுத்தது சரிதான் என்று சொல்கிறதே, அவர்களோடு ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்களா, அது எந்த விதத்தில் நியாயம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கவேண்டும்.

திரு. ஆலடி அருணா : கச்சத் தீவை தூக்கிக் கொடுத்த இந்திரா காங்கிரஸ் குடியரசுத் தலைவர் வேட்பாளரை நீங்கள் ஆதரித்தீர்களே ? அது எதற்காக ?

திரு. நா. வீராசாமி : ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காந்தி வேட்பாளருக்கு அ.தி.மு.க.வும் வோட்டு அளித்து ஆதரித்ததே ? அது ஏன் ?

திரு. ஆலடி அருணா : அவர்கள் எதிர்கட்சிக்காரர்கள். எங்களுக்கு தோழமை கட்சிக்காரர்கள் என்பது ஊர் அறிந்த விஷயம். நீங்கள் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : (திரு. என். கே. பழனிசாமி எழுந்திருந்தார்) அவர்கள் இரண்டு பேர்களும் ஒருவருக்கொருவர் விளக்கம் அளித்துகொள்கிறார்கள். நீங்கள் அதைப் பற்றி என்ன பேசப் போகிறீர்கள் ? இப்பொழுது திரு. கந்தசாமி அவர்கள் பேசட்டும்.





*Thiru K. KANDASAMY : Mr. Deputy Speaker, Sir, on behalf of the Forward Bloc I stand here to express my views on the issue of Katchatheevu which has unfortunately become an issue of Indian citizens as a whole. Though it has been described by several members of this House that it is a matter which has already been consented and agreed to by the Government of India and it has got no relevance to be discussed further, in my view it is the most important touching issue of all Indians which has unfortunately been raised by the Hon. Prime Minister due to, if I may be permitted to say, lack of foresight and statesmanship.

Like her father, the late Prime Minister Nehru who once in reply in Parliament to H. V. Kamath and other parliamentarians who questioned as to why the Government of India was keeping quite while the Chinese had occupied 24,000 sq. miles in Indian territory in the Himalayan Hills, said quite reluctantly that it was barren, desert land and hilly tract, where not even a blade of grass grows. "So, as there was no importance it was given" was his reply. That was the statement of Nehru in Parliament while questioned by eminent parliamentarians like Kamath and others. After some years, it was in 1958, I think, it was proved that it was a vital issue to Indian security ; for we saw in 1962 Chinese aggression took place and then it was a very great threat to the Indian Nation as a whole. Then again at that time also, questioned by other members in parliament, Nehru was not able to explain as to how and why a vast area of 24,000 sq. miles was allowed be taken away in that area.

Similarly, I want to quote the earlier words of my revered leader, Nethaji Subhas Chandra Bose who vehemently opposed even the Father of the Nation, Gandhiji himself, on account of Pakistan ; he said that our nation should not be divided on the ground of religion ; Pakistan is not the ambition of Muslims, but it is the creation of the British and so saying, Nethaji vehemently opposed the division of the country on the basis of religion and warned that it would lead to future complications and create ground for international interference. That has now been proved to be more

a fact than anything else. The Pakistan border has not yet been settled between India and Pakistan and there is the glaring example of Kashmir which every year is eating up crores and crores of Indian money, and several lakhs of people are sacrificed in the name of protecting Kashmir. Though we claim still Kashmir as ours, we can see that a part of Kashmir is occupied by Pakistanis, allowing international interference in the guise of U.N. forces. We have got only Jammu the valley and Ladakh. Why? If there had been statesmanship in the then Prime Minister Nehru, he could have settled or taken it away immediately; we could have settled it once and for all and solved the issue of Kashmir. Similarly, we see Berubari area. Due to lack of statesmanship, that was left out. And again there was Chinese aggression and invasion against India in 1962. But he explained to the people that it was not aggression, or indirect invasion but intrusion; he wanted people to take it in the way he wanted.

In the same way, it is because of the* of Indira Gandhi and her * the present situation has arisen. I am not prepared to accept that she is a diplomatic politician acting as per the Constitution. She is described as the Prime Minister; we have to honour her. At the same time, we expect her to have loyalty to Constitution and she has to carry out the wishes of the people. She is endowed with supreme power. What is her duty? She has a supreme duty and also supreme responsibility and burden in her shoulders to safeguard the interests of the Indian people and territorial integirity which includes the Katcha Theevu. After all, what was the emergency to give the property Kathcha Theevu? It will be the most strategic and diplomatic area of operation in future. If I may be permitted to say so it may even be a strategic part for future wars in the Eastern Area, that is, the Southern most water of the Indian Ocean. Similar cases are there as quoted earlier. This was already described in Parliament by our revered leader Muthuramalinga Thevar; he has spoken about it both in Parliament and outside. "Your war tactics are very poor. You say you are non-violent, preaching non-violence. But by practice you do not hesitate to spend crores and crores of rupees on arms.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



You do not hesitate to shoot kisans and labourers inside the Workshops." So three times he warned; nobody heard him or respected his words. He warned the Prime Minister to give military training to all able bodied Indians so that whenever necessary they can be called upon to safeguard Indian property.

According to the Constitution, Article, 3, the Parliament alone is the supreme body which may by its Act, either add or give up or enter into agreement with other countries. She has totally ignored her sovereign duty to the Constitution from which she gets her powers.

Sir, therefore, I charge that the Prime Minister, Indira Gandhi has failed as the prime citizen of India; she by her words assumes or makes others believe that she is democratic, but by action she is more autocratic * * and she wants to assume. . . . .

Mr. DEPUTY SPEAKER: You may withdraw that word *

Thiru K. KANDASAMY: If I may be permitted, I say so because I still hold that view because she has failed. . .

Mr. DEPUTY SPEAKER: The words * * wherever they occur are expunged from the proceedings.

Thiru K. KANDASAMY: She has not given respect to the words or advices of the Hon. Chief Minister and other elder statesmen; she has not called for expert opinion through the Hon. Chief Minister to assess the views and other relevant records from the Tamil Nadu Government. She has failed to do so. She has entered so urgently into an agreement. She may sacrifice individuals but not a piece of our land.

I still hold on the following grounds that India has complete and entire ownership over this piece of land, Katcha Theevu and ownership according to law, one gets if one possesses title, has interest and occupation; occupation may be this way or that way "i.e., *Defacto or Delur*"; but we have got both.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

I am prepared to quote from the Gazetteer of India as is published by the Government of India in 1972—page 30, regarding Katcha Theevu. It is said—

"Katcha Theevu lies 10 miles north-eastwards of Rameswaram. The Raja of Ramanathapuram was leasing this Island to private persons before the abolition of the Zamindari. Fishermen frequent this Island for fishing. The Island is so named because of the Kacha (dirty) water in it. The survey number of Kacha Theevu is 1,250 and its extent is 285·20 acres. There is a Roman Catholic Church on it and the Father of Tangachimatam pays a visit and conducts a mass in the church. This Island lies within the jurisdiction of the Karnam of Rameswaram.

The Karnam of Rameswaram had effective jurisdiction over the Kacha theevu. It is not a word of Kalaignar or anybody else. These are the real words found in the Gazetteer of India, 1972——page 30. Therefore, according to the evidences available with us, I do not want to go into the details of all the evidences which have been produced very carefully by my leader Thiru P. K. Mookiah Thevar, M.P., Chairman, All India Forward Bloc in an open letter to Prime Minister Indira Gandhi regarding Katcha Theevu. During the current session of Parliament, about 15 days back he raised the issue, and condemned the Union Government for ceding of Katcha Theevu which belongs to Tamil Nadu. I am prepared to furnish copies of the open letters to the Hon. Ministers.

THIRU K. A. WAHAB. The hon. Members also.

THIRU K. KANDASAMY : Yes.

MR. DEPUTY SPEAKER : As the hon. Member's leader also wants to speak on the subject, I request the hon. Member to wind up his speech soon.

THIRU K. KANDASAMY In another five minutes, I shall finish my speech. There are other evidences to show that Kacha Theevu belongs to Tamil Nadu. I do not want to go into other relavant records, because I do not want to take the time of the House



Regarding the 'Story of Ceylon', there is a prologue. I would like to quote the 'Story of Ceylon' by E. F. C. Ludowyk. On page 15, under prologue—The Search for a clue, he has stated in the first paragraph as follows :—

" If Ceylon is not in Milton's isle it is yet an Indian isle; Indeed, it is necessary to think of it as of many other islands separated from the continents to which they once belonged."

Whereas on the other hand, there are evidences to show that our people had their way over Ceylon through Madras State till the end of British Colonialism in the Eastern Asia. It is part and parcel of Madras State. As such Ceylon had no jurisdiction over this. We have got every right. We have got every title. We have got every interest. We have all the records to show that we had practical *de facto* possession. We have got records to show that fishermen went there frequently for fishing operations,

There was also evidence to show that the Father of Thangachimadam paid a visit and conducted a mass in the Roman Catholic Church there. The Karnam of Ramewsaram has also issued a patta. The patta number has also been published in the Gazetteer of India.

In spite of all these evidences, I am sorry to find that our Prime Minister, Thirumathi Indira Gandhi, who is described as the heroine of modern India, has come to the present conclusion without understanding the feelings of the people. The Central Government has not given respect to the wishes of the people of Tamil Nadu. they have not taken note of the feelings of the people of Tamil Nadu.

The Central Government should be run to fulfil the wishes and feelings of the people of every part of the country.

Therefore, I request the House, through the Hon. Speaker, to pass this Resolution unanimously condemning the action of the Prime Minister of India and to request her at the same time to give respect to the feelings of the people of Tamil Nadu and re-enter into an agreement in such a way as to establish our past rights which have been recently given to Ceylon by the Central Government in a hasty and hurried manner.

With these words, I conclude, Sir.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமல்ல—இந்தியத் துணைக் கண்டத்தின் மக்களுடைய உணர்ச்சி பூர்வமான ஒரு தீர்மானத்தை நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். இதை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில்—கற்காலம் தொட்டு கலைஞர் காலம் வரை அண்ணா தி. மு. க. உறுப்பினர் திரு. ஆலடி அருணா சொன்னது போல—இந்தப் பிரச்சினையில் கட்சி வேறுபாடுகள் இன்றி—நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள் அத்தனைபேரும் ஒன்று சேர்ந்து இருந்தாக வேண்டிய கட்டத்தில்—சொந்த காழ்ப்புகளையும், அரசியல் ஆதாயங்களையும் எதிர் நோக்கி—இது பற்றி உணர்ச்சி பூர்வமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளுக்கு எல்லாம் களங்கம் கற்பிப்பது போல பேசியிருப்பது—உள்ளபடியே எங்களைப் போன்றவர்களுக்கு வேதனை தரக்கூடியதாக இருக்கிறது.

நாடு ஒருமுகமாகப் போராட வேண்டிய கட்டத்தில்—அதை தங்கள் கட்சிக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிற துரதிருஷ்டமான போக்கு இந்த நாட்டு அரசியலில் இருக்கிறது—அந்த அடிப்படையில் இங்கே எப்படியாவது தமிழக அரசின்மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்பதற்காக—மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்திரா அம்மையார் தம்மைக் கலந்துகொண்டு இந்த முடிவை எடுக்கவில்லை என்பதை தெளிவுபட பலமுறை எடுத்துச் சொல்லியும்—அதை ஏற்காத முறையில்—வேண்டுமென்றே களங்கம் கற்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட வாதங்களைப் பார்க்கின்ற போது நாங்கள் உண்மையில் வேதனை அடைகிறோம். அதே நேரத்தில் தமிழுக்கு—தமிழ் இனத்திற்கு தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற முதல்வர் அவர்கள்—உணர்ச்சி பூர்வமாக—இந்த இழப்பை தன்னுடைய சொந்த இழப்பாகக் கருதுகின்ற நிலையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறபோது இதன்மீது குற்றங்களைச் சொல்வது பொருத்தமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையில்—நான் சொன்னதுபோல இந்த நாட்டினுடைய கச்சத்தீவுபற்றி நாம் எடுக்கிற முயற்சியுல்—நீங்கள் இணைந்து—இணைந்து என்று சொல்கிறபோது, கொள்கையில் அதிக வித்தியாசம் இல்லை என்பதை இரண்டு கட்சிக்காரர்களுமே ஒத்துக்கொள்கிற போது—கொள்கை அதுவேதான் என்பதாக பெயரை மட்டும் அ. தி. மு. க. என்று வைத்துக் கொண்டிருக்கிறவர்களும் இப்பிரச்சினையில் கொள்கை அடிப்படையில் இணைந்து போராட வேண்டும். முதல்வர் அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று நான் தோழமை உணர்வோடு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

கச்சத் தீவைப் பற்றி சொல்கிற நேரத்தில் கச்சா எண்ணெய் கிடைக்கிறது என்று சொன்னார்கள். கச்சா எண்ணெய் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ள இடம்தான் அது. கச்சா மீன் கிடைப்பதனால் கச்சத்தீவு என்று





பெயர் வந்ததாகவும் கச்சம் என்றால் ஆமை—அங்கே ஆமை அதிகம் கிடைப்பதனால் கச்சத்தீவு என்று பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது. அங்கே ஒன்றும் விளையாது என்று சொல்லப்பட்டது. அது சரியல்ல. அங்கே பலவகையான மூலிகைகள், பழங்கள் விளைகின்றன. அது மட்டுமல்ல, கனிவளம் அங்கே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெட்ரோல் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறு அங்கே இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் அது நமக்குத்தான் சொந்தம் என்பதற்கு சரித்திர ஆதாரங்களைப்பற்றி எல்லாம் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். லெமூரியா கண்டம் என்று இருந்தபோது குமரிகண்டமாக அது இருந்திருக்கிறது. பஃறுளியாறு இருந்து உடைந்த போது சிலோன் தனித்துப் போனபோது இது ஒரு தனித் தீவாக அமைந்திருக்கிறது. எங்கள் புனிதத் திருமறையாகிய குரானில் சொன்ன முதல் மனிதன்—பெண்—ஆதம் தோன்றிய இடமாக அது முதல் முதல் அவர்கள் வாழ்ந்த இடமாக அது சொல்லப்படுகிறது. பழைய சங்க இலக்கியங்களைக் கொண்டு பார்த்தாலும் அது நம்முடைய நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்திருப்பது தெரியும். அதிகார பூர்வமான ரெக்கார்டுகள் மூலமாகவும்—1609-ஆம் ஆண்டு சேதுபதிக்குச் சொந்தமாக இருந்திருக்கிறது. 1802-இல் இராமநாதபுரம் இராஜாவுக்குச் சொந்தமாகியது. 1884-இல் கர்னல் வாக்கர் மேஜர் பிரான்ஸ்பில்ட் அந்தத் தீவை சர்வே செய்திருக்கிறார். 1880-இல் இராமநாதபுரம் சேதுபதிகள் கீழக்கரை மாப்பிள்ளை மரைக்காயம் பிள்ளை அப்துல் காதர் என்பவருக்கு மீன் பிடிப்புக்காக ரூபாய் 700-க்கு குத்தகை விட்டிருக்கிறார். அதற்கு வேண்டிய ரெக்கார்டுகள் எல்லாம் இருக்கின்றன. இவ்வளவு ஆதாரங்களைக் கூறியுள்ளோம்.

(நண்பகல் 12-00)

அதுமட்டுமல்லாமல், அண்மைக்காலத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப் போல், இங்கே இருக்கிற சிறித்தவப் பெரியார்கள் அங்கே சென்று, தங்கச்சிமடத்திலிருந்து சென்று, கச்சத் தீவு இந்த நாட்டினுடைய ஒரு பகுதி என்ற காரணத்தினால், அங்கே அந்தோணியார் கோயிலை கட்டி, நல்ல முறையிலே விழாக்கள் கொண்டாடுகிற அந்த நிகழ்ச்சிகளும் இருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த நாட்டினுடைய உயர்நீதி மன்றம், சுப்ரீம் கோர்ட்டே, கச்சத் தீவானது இந்திய நாட்டினுடைய ஒரு பகுதி என்று கூறியுள்ளது. கீழக்கரையைச் சேர்ந்த வாசுதேவ செட்டியார் என்பவர் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு வழக்குத் தொடுத்தார். இந்தியாவிலே இருந்து சில பொருள்களை அங்கே எடுத்துச் சென்ற பொழுது, அத்தீவு இந்தியாவிற்குச் சொந்தமானது அல்ல. வேறு இடத்திற்குச் சொந்தமானது என்று வழக்கு தொடரப்பட்ட பொழுது, வாசுதேவ செட்டியாருக்குச் சாதகமாக அந்த வழக்கிலே தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதோடு, சென்னை ஹைகோர்ட்டிலும் அப்படிப்பட்ட தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சுப்ரீம் கோர்ட்டு எப்பொழுது சொன்னது என்றால் நல்லமாக இருக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : இங்கே குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் குறிப்புகளைக் கண்டால், அந்தக் குறிப்புகளிலே அது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இது சம்பந்தமாக ஆதாரங்கள் வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அரசுத் துறையிலே அதைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படிப்பட்ட வழக்கு, சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருப்பது இந்தக் குறிப்புக்களிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆதாரத்தை வைத்துத்தான் பேசுகிறேன்.

இப்படி சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு எதிராக, பிரதமர் அவர்கள் ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள் என்றால், அதனைப் பற்றிக் கூறுவதற்கு முன்னால், அது சரிதானா என்று நாம் யோசிக்க வேண்டும். சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னால் லடாக் பகுதிக்காகப் போராடினோம். வெறும் காடு, வெறும் கல் உள்ளது, முள் உள்ளது, மேடு என்றெல்லாம் சொன்னார்கள். அந்த லடாக் பகுதியை மீட்க, காக்க பல்லாயிரக்கணக்கான உயிரைக் கொடுத்தார்கள். சீன தேசத்தோடு போராடினார்கள். அவர்கள் தான் கச்சத் தீவைத் தானமிட்டிருக்கிறார்கள். வடக்கே இருப்பவர்களுக்குத் தான் வடக்கேதான் பாதுகாப்பு, தெற்கே இல்லையென்று நினைத்து விட்டார்களா என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது.

இன்றையத்தினம் இலங்கையும் கம்யூனிஸ்ட் சைனாவும் நட்போடு இருக்கின்றன. சில படைத் தளங்கள் தேவைப்படுகிற நேரத்திலே, ஒரு வேளை எதிர்காலத்திலே அப்படிப்பட்ட படைத்தளங்கள் அமைக்கப்படும் என்றால், நாம் வடக்கேயும், தெற்கேயும் கட்டுண்டவர்களாக, எப்பொழுதும் அப்படிப்பட்ட ஆதிக்கத்திற்கு அடிபணிந்து, பயந்து நடக்க வேண்டிய சூழ்நிலையும் இன்றைக்கிருக்கிறது என்று நான் கூற விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், கச்சத் தீவானது இலங்கைக்குத்தான் சொந்தமானது என்பதற்கு, நாம் நமக்குச் சொந்தமானது என்று தருகின்ற ஆதாரங்களைப் போல் அவர்களால் தரமுடியவில்லை.

அது மட்டுமல்ல, 5—4—1972-ல் வீர கேசரி என்ற இலங்கைப் பத்திரிகையிலே கூறப்பட்டிருக்கிறது, நில நூல்படி பார்த்தால் கூட இலங்கைக்குச் சொந்தமானது அல்ல. அந்தக் கச்சத் தீவில் விளைகிற புல், பூண்டுகள், இந்தியாவில் விளைவதைப் போல்தான் இருக்கின்றன. இலங்கையில் விளைகின்ற புல், பூண்டுகளைப் போல் இல்லை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலே கூட, இலங்கைக்குச் சொந்தமானது என்று ஒப்புக் கொள்ளப்படாத நிலையில் தானம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்திய துணைக்கண்டத்திலே யாருக்கும் அவ்வளவு உணர்ச்சி இருப்பதில்லை. என்றாலும்,



தமிழர்களாகிய நமக்கு, நம்முடைய உடலிலே ஒரு அங்கம் போனதுபோல் உணர்ச்சி ஏற்பட்டு துடிதுடித்துக் கொண்டிருக்கிறோம். கச்சத்தீவிலே ஒன்றும் விளையவில்லை. அதனால் கச்சத்தீவைக் கொடுப்பதில் ஒன்றும் பாதகம் இல்லை என்று சில கட்சிக்காரர்கள் கச்சை கட்டிக் கொண்டு வருகிறார்கள். தனக்குப் பிறந்த பிள்ளைகளிலே ஒரு பிள்ளைக்குக் கால் ஊனம் என்றால், அந்தக் குழந்தையை தெருவிலே விட்டுவிடுவதுதானா ஒரு தாயினுடைய கடமையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலே எல்லோருக்கும் நாயகராக இருப்பவர் இந்திரா காந்தியார். நம்மோடு இருக்கின்ற பகுதியை அளிக்க எல்லா உரிமைகளும் உங்களுக்கே இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதி மக்களுடைய உணர்ச்சிகளை, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுடைய எண்ணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இருக்க வேண்டும். அதே நேரத்தில் இந்த மாநிலத்தைக் கலைக்கின்ற வகையிலே அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். அதைக் குற்றச்சாட்டாக நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகளிலே மக்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

திரு. எ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்தக் கச்சத் தீவு பிரச்சினையிலே உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்படாமல், இருக்கின்ற சர்வ தேசச் சூழ்நிலை, நம்முடைய வெளிவிவகார நிலைமை, இவைகளையெல்லாம் கருத்திலே கொண்டு அணுக வேண்டுமென்று முதலிலேயே நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஜூன் மாதம் 29-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சர்வ கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டு பேசிய பொழுது ஒரு தீர்மானம் போட்டோம். அன்றைய நிலைக்கும், இன்றைக்குத் தீர்மானம் வந்திருக்கிற நிலைக்கும் மாறுபாடு இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. அன்றையத்தினம், அந்த உடன்பாட்டினுடைய முழு விபரமும் தெரியாதிருந்த பொழுதும், பிரதம அமைச்சர்கள் இரண்டு பேரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள் என்ற நிலையிலே தமிழ் மக்களுடைய உணர்வு, மத்திய அரசாங்கம் நம்மைச் சரியாக கலந்து ஆலோசிக்கவில்லையென்று முதல் அமைச்சர் சொன்னதை வைத்துப் பார்க்கும்போது இந்த உணர்வுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று அந்தத் தீர்மானத்திலே நாம் கூறினோம். ஆனால், இன்றைக்கிருக்கிற நிலைமையிலே இந்தத் தீர்மானம் அவசியமில்லை, கொண்டு வரத் தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

சர்வ தேச ரீதியிலே ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படுகிற உடன்பாடு இது. கச்சத் தீவு பிரச்சினையிலே பிரதமர் அவர்கள் கையெழுத்திட்டு, காபினெட் அங்கீகாரம் கொடுத்து, பிரசிடென்ட் அங்கீகாரம் கொடுத்து, பாராளுமன்றத்திலே வைத்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கிறது. ஆகவே, இது முடிந்துபோன விவகாரமே. ஆக, நாம் ஒத்துக் கொள்ள வேண்டுமே தவிர, இதற்கப்பால் போய், மறுபரிசிலனை செய்ய

[திரு. எ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்டு 21

வேண்டுமென்று சொல்வது, வேண்டுமானால், மக்களுக்குச் சொல்வதற்காக இருக்கலாமே தவிர, சாதாரணமாக நடக்கக்கூடியது அல்ல. ஆகவே நடக்கக்கூடாத ஒன்றினை, நடக்கமுடியாது என்று உணர்ந்திருக்கிற ஒன்றை நாம் தீர்மான வடிவிலே போட்டிருக்கிற காரணத்தாலே, இந்தத் தீர்மானம் தேவையில்லையென்று நான் எதிர்க்கிறேன்.

இங்கே பேசியபொழுது, மதிப்பிற்குரிய ஆலடி அருணா அவர்கள் சில விவரங்களை எல்லாம் கூறினார்கள். அதிலே நான் அதிகம் புக விரும்பவில்லை. முதலமைச்சர் அவர்கள் 30-ம் தேதி "தினமணியில்" நிருபர்களுடைய கேள்விக்குப் பதில் சொல்கின்ற பொழுது சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீலங்காவுடன் உடன்பாடு செய்துகொள்வதற்கு முன்னால் மாநில சர்க்காரை, மத்திய சர்க்கார் கலந்து ஆலோசிக்காதது வருந்தத்தக்கது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு முன்னால், அந்தக் கூட்டத்திற்குமுன்னால்—முரசொலியிலே வந்திருக்கிற செய்தி—பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள், மத்திய சர்க்கார் கச்சாத் தீவைக் கொடுப்பது சம்பந்தமாகத் தங்களிடம் கூறி, அது குறித்து உங்களைக் கேட்டார்களா? என்று. அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்: இது மாதிரி ஒரு ஒப்பந்தத்திற்கான சூழ்நிலை உருவாகி வருவதாகவும், அது எந்த அடிப்படையிலே உருவாகிறது என்பதையும் கேவல் சிங் என்னிடம் கூறியபொழுது, தமிழ் மக்களுடைய பிரச்னை இந்த அளவிலே பின்னிப் பிணைந்திருக்கிறது என்று நான் அவர்களிடத்திலே கூறினேன், என்று. நான் கூறுவதெல்லாம், மத்திய அரசு எல்லா கட்டத்திலும் மாநில அரசோடு கலந்து பேசி இருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் ஆனால், முதலமைச்சருடைய குறை என்ன? மத்திய சர்க்கார் மாநில சர்க்கார் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லையென்று வேண்டுமானாலும் சொல்லலாம். அது வேறு. ஆனால், கலந்து ஆலோசிக்கவில்லையென்று சொல்வது தவறு. மாநில முதலமைச்சரவர்களைக் கலந்து ஆலோசிக்கும் போது என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள் என்பதையும் ஓரளவு சொல்லியிருக்கிறார்கள்.

அது எந்த அடிப்படையில் உருவாகும் என்பதையும் கேவல் சிங் விளக்கமாகச் சொன்னார். ஆக, கொடுக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை அவர் சொல்லியிருக்கிறார். உங்களுடைய கருத்து மாறுபாடாக இருக்கலாம். ஆனால், மத்திய சர்க்கார் உங்களோடு கலந்து இருக்கிறது.

ஆகவே, கலக்கவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல, கலந்து ஆலோசித்துள்ளது என்பதை மட்டும் சொல்லி அடுத்தபடியாக வருகிறேன்.



[1974 ஆகஸ்டு 21] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

தலைவரவர்களே, மாண்புமிகு அண்ணா அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்ற பொழுது அமெரிக்காவில் அவரிடம் உங்கள் வெளிநாட்டுக் கொள்கை என்ன என்று கேட்டார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள், மத்தியிலே உள்ள ஆட்சியின் வெளிநாட்டுக் கொள்கை என்னவோ அதுதான் எங்கள் வெளிநாட்டுக் கொள்கை என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, நான் கருதுகிறேன். அண்ணா அவர்கள் அன்று என்ன சொன்னார்களோ அதைத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமும் தங்கள் வெளிநாட்டுக் கொள்கை என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று, அதற்கு எந்தவிதமான மாற்றமும் இருப்பதாகக் கருதவில்லை. ஆகவே, அந்நிய நாட்டுக் கொள்கையில் மத்திய சர்க்கார் கொண்டிருக்கின்ற கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது, அல்லது இந்த அரசு ஆதரிக்கிறது, மத்திய சர்க்காரில் இன்றுள்ள நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். வெளிநாட்டுக் கொள்கையிலே எந்த நிலையை நாம் அனுசரிக்க வேண்டுமென்பதைப் பற்றியெல்லாம் நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.

எப்பொழுதுமே ஒரு நாடு நிம்மதியாக, வெளி விவகாரங்களிலே சிக்கல் ஏற்படாமல், யுத்தம் இல்லாமல் இருந்தால் அந்த நாடு தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய காரியங்களை உன்னிப்பாகக் கவனிக்க முடியும். அதே நேரத்தில் பக்கத்து நாடுகளோடு சதா விவகாரமும், பகையுமாக இருந்தால் அதனுடைய வளர்ச்சிக்குப் பாதகம் என்பதை இந்தச் சபையிலுள்ள உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஆகவே, இன்றைக்கு நாம் கருத வேண்டியது, அண்டை நாடுகளோடு எந்தவிதமான சச்சரவும் இல்லாமல், அமைதியோடு உறவோடு வாழ்வது தான் உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாக இருக்கும்.

ஆகவே, அம்மாதிரி கொள்கைக்கு நாம் அனுசரணையாக இருக்க வேண்டுமென்ற நிலையிலே இன்றைக்கு விடாப்பிடியாக அண்டை நாடுகளோடு ஒப்பந்தம் செய்யும் முயற்சியிலே மத்திய அரசு நடந்து வருகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டி வருகிறது.

சமீபத்திலே ஏற்பட்ட பங்களாதேஷ் யுத்தத்தின்பொழுது பங்களாதேஷ் உருவானதற்குப் பிறகு நாம் பாகிஸ்தானோடு சிம்லாவிலே ஒப்பந்தம் செய்து கொண்டோம். அதில் எந்த அளவிற்கு விட்டுக் கொடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு பெரிய பகைமை இருந்தது. உலக நாடுகள் அப்படி ஒரு பகுதியும், இப்படி ஒரு பகுதியுமாக இருந்து பெரிய பிரச்னையாகி, பெரிய யுத்தமே நடந்து, பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்து பங்களாதேஷ் ஏற்பட்ட பிறகு பங்களா தேசத்தோடு நாம் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நட்பு நாடாக்கி, நாட்டின் கிழக்குப் பகுதியிலே நமக்கு எந்தவிதமான வம்பும் இல்லாத சூழ்நிலையை வைத்திருக்கிறோம்.

அந்தப் பங்களாதேஷ் யுத்தத்தினால் பொருளாதாரம் எவ்வளவு சீர் கேடடைந்து இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வளவு நஷ்டப்பட்டும்கூட கிழக்குப் பகுதியில் பகைமையில்லாமல் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். அப்படி ஏற்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், மேற்கொண்டு பாகிஸ்தானோடு நாம் நட்புறவோடு இருக்கிறோம் என்பதற்காக, பங்களாதேஷ் யுத்தத்தின்போது ஏற்பட்ட நஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், பங்களாதேஷ் யுத்தத்தின் பொழுது பாகிஸ்தானோடு இருந்த பகைமையெல்லாம் மறந்துவிட்டு அவர்களுக்கு எந்த அளவிற்கு விட்டுக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு விட்டுக்கொடுத்து, நாம் பிடித்த இடங்களை, மேற்குப் பகுதியை, இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை, அந்தக் கேந்திரமான இடத்தைக்கூட அவர்களுக்கு விட்டுக்கொடுத்து பகைமையில்லாமல், உள்நாட்டின் வளர்ச்சிக்காக நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் நாம் காரியங்களைச் செய்திருக்கிறோம்.

பாகிஸ்தானோடு இன்னும் பல பிரச்னைகள் இருந்தாலும்கூட, பழைய பகைமை மாறி நட்புறவு ஏற்படும் சூழ்நிலைக்கு வருகிறோம். இதை யாரும் மறுக்க முடியாது. இம்மாதிரி எல்லாயிடத்திலும், நில எல்லையானாலும் சரி, கடல் எல்லையானாலும் சரி- திட்டவட்டமாக வகுத்து, எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் ஆக்க வேண்டுமென்று இன்றைக்கு இந்திய அரசு கவனம் செலுத்தி காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆகவே, அதை வைத்துத்தான் இதைப் பார்க்க வேண்டும்.

அந்தப் பிரச்னையை வைத்துப் பார்க்கும்பொழுது கச்சத் தீவு, கச்சத் தீவு என்று சொல்லிக்கொண்டிருந்த கச்சத் தீவு இருக்கிறதே அந்தக் கச்சத் தீவு நீண்ட நாட்களாக டிஸ்ப்யூட்டட் ஏரியாவாக இருந்திருக்கிறது. நாம் எத்தனை ரிக்கார்டுகளை வைத்திருக்கிறோமோ அதேபோல் ஸ்ரீலங்கா சர்க்காரும் தங்களுக்கான ரிக்கார்டுகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்தக் காலத்திலும் கச்சத் தீவு நம்முடைய அரசு உரிமையில் இருந்ததில்லை என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். நம்முடைய அனுபவத்தில் இருந்திருக்கிறது, இராமநாதபுரம் இராஜா காலத்தில் இருந்திருக்கிறது என்று என்னென்னவோ சொன்னார்கள். அது உண்மை. ஆனால் இதே மாதிரி அவர்களும் ரிக்கார்டுகளை வைத்திருக்கிறார்கள் என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. இது சம்பந்தமாக வெளிநாட்டு அமைச்சர் இராஜ்ய சபையில் பேசும்பொழுது கூறியிருக்கிறார்கள். நம்முடைய ரிக்கார்டுகளை மட்டும்தான் நாம் குறிப்பிடுகிறோமே தவிர, எதிர்த் தரப்பிலே உள்ள ரிக்கார்டுகளை தமிழகத்திலே உள்ள நாம் பார்ப்பதில்லை. மத்திய சர்க்கார் இரண்டு தரப்பிலே உள்ள ரிக்கார்டுகளையும் கவனித்துத்தான் தந்திருக்கிறார்கள் என்பதை உணர முடியும். ஸ்வரண் சிங் அவர்கள் குறிப்பிடுவது என்னவென்றால் (மணியடிக்கப்பட்டது) தயவு செய்து எனக்கு அதிக நேரம் கொடுங்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 5 நிமிடங்களில் முடித்துவிடுங்கள். மற்றவர்களுக்கு 10 நிமிடங்கள்தான், உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு எ. ஆர். மாரிமுத்து: மத்தியில் ஆட்சியில் உள்ள கட்சியைச் சேர்ந்தவன் என்பதால் கொஞ்சம் விரிவுபடுத்திச் சொல்ல வேண்டிய தேவையிருக்கிறது. ஆகவே, எனக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டும். என்ன சொல்கிறார்கள் என்றால்,

"Neither Sri Lanka, nor India has had any permanent presence there. During the long colonial period the question whether Katchathivu was part of India or part of Ceylon was frequently discussed, with the Governments of the day putting forward claims and counter-claims. When two sides have a good arguable case on a particular issue the problem cannot be resolved through bilateral negotiations. There is inevitably an attempt to seek outside interventions by appeal either to the International Court of Justice or to third party arbitration . . . என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால் இது டிஸ்ப்யூட்டெட் ஏரியா. இது நம்முடைய சொத்து என்று நாம் வாதிக்கிறோம். இது அவர்களுடைய இடம் என்று அவர்கள் வாதாடுகிறார்கள். இரண்டு பேரும் ரிக்கார்டுகளை வைத்திருக்கிறோம். இந்த நேரத்தில் இதற்கு முடிவு என்ன? ஒரு சர்வதேச கோர்ட்டிற்குச் செல்ல வேண்டும் அல்லது மூன்றாவதாக ஒருவரை ஆர்பிட்ரேட்டராக, மத்தியஸ்தராக வைக்க வேண்டும். ஆனால் நமக்குக் கிடைத்த நீண்ட கால அனுபவத்தில் மத்திய சர்க்கார் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. நமக்கும் இன்னொரு நாட்டிற்கும் உள்ள பிரச்னை பற்றி மத்தியஸ்தத்திற்கு விடுவதில்லை. பேசியே தீர்ப்பது. அதற்கடுத்தபடியாக சர்வதேச கோர்ட்டுக்கும் செல்வதில்லை. எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும் இரண்டு நாடுகளும் பேசியே தீர்ப்பது என்ற திடமான முடிவில் இருக்கிறார்கள். வெளிநாட்டுக் கொள்கையிலே இரு ஒரு அம்சம். அந்த வெளிநாட்டுக் கொள்கையை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று நான் கருதுகிறேன் இரண்டு பேரும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அப்படித் தீர்த்துக் கொள்ளும் பொழுது இரண்டுபேரும் இதைப்பற்றி உரிமை கொண்டாடும் பொழுது எப்படிச் செய்வது, என்ன செய்வது என்பதைப்பற்றி நாம் ஆலோசிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கச்சத் தீவை என் அங்கே கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய கடல் எல்லை வகுக்கப்பட்டபொழுது கடல் எல்லைக்கு அப்பால் கச்சத் தீவு வருகிறது. அது ஒன்று. அடுத்தபடியாகக் கச்சத்தீவு இலங்கைக்கு நம்மைவிட சுமார் இரண்டு மைல் அருகில் இருக்கிறது. அவர்களுக்கு 10½ மைல் தூரத்தில் இருக்கிறது. நமக்கு 12½ மைல் தூரத்தில் இருக்கிறது.

அத்துடன், கச்சத் தீவு பிரச்னையினால், இலங்கைக்கும் நமக்கும் நட்புறவு அவ்வளவு நன்றாக இல்லை கச்சத் தீவு பிரச்னையை வைத்துக் கொண்டு பாகிஸ்தான் யுத்தத்தின்பொழுது என்ன நடந்தது? பாகிஸ்தானுடைய விமானங்களுக்கெல்லாம் இலங்கையிலே பெட்ரோல் போட்டுக் கொடுத்தார்கள். பக்கத்து நாடு, நம்மோடு நட்புறவாக இல்லாமல் பாகிஸ்தானுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா அரசாங்கம் இருந்தது. சர்வதேச ரீதியில் நட்புறவு சரியாக இல்லை. ஏன்? கச்சத் தீவு பிரச்னையால். ஆகவே, இந்த கச்சத் தீவு பிரச்னையை வைத்து நம்மிடையே நட்புறவு நிலவாமல், பகைமை உணர்வு நிலவுவது நல்லதா என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு கே. கந்தசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்பேசுகின்ற போது சர்வதேசப் பிரச்சினையை—இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின்போது இலங்கை நடந்துகொண்ட முறைப்பற்றிச் சொன்னார்கள். பாகிஸ்தான் யுத்தத்தின் போது இந்தியாவுக்கு எதிராக இலங்கை பாகிஸ்தானுக்கு உதவியதாகக் கூறினார்கள். அப்படிப்பட்ட நாட்டுக்குப் பார்லிமெண்டின் அனுமதி கூட இல்லாமல் கச்சத் தீவைக் கொடுத்தது சரியா என்பதை அவர்கள் தான் விளக்க வேண்டும்.

திரு. எ. ஆர் மாரிமுத்து: உறுப்பினர் அவர்கள் இதுபற்றிப் பார்லிமெண்டில் கேள்வி கேட்டால் பதில் சொல்லுவார்கள். சைனா நாட்டோடு அவர்கள் உறவாக இருக்கிறார்கள்; நமக்குப் பகைமையாக இருக்கிறது. அவர்களோடும் நட்புறவோடு இருக்கவேண்டுமென்று மத்திய அமைச்சர்கள் பாராளுமன்றத்தில் கூறிக்கொண்டு வருகிறார்கள். பகைமை இருந்தது என்ற காரணத்தால் நட்புறவை இந்தச் சமயத்தில் மறுத்துவிடுவதற்கில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இலங்கை பாகிஸ்தானத்திற்கு ஆதரவாக இருந்தது; அவர்கள் நமக்கு எதிராக இருந்த நிலையை மாற்ற நட்புறவு கொள்ள கச்சத் தீவு அளிக்கப்பட்டது என்று கூறினார்கள். நட்பு என்பது இன்னொரு நாட்டோடு காலகாலத்திற்கும் இருந்துவிடக்கூடிய ஒன்று அல்ல. இப்போது கச்சத் தீவைக் கொடுத்த பிறகு எதிர்காலத்திலே நட்பு முறிந்துவிடுமானால்—இப்போதே இலங்கை பாகிஸ்தான் போன்ற எதிரி நாடுகளுக்கு ஆதரவாக இருக்கும்போது கச்சத் தீவையும் பயன்படுத்திக் கொண்டு நெருக்கமாக நின்று எதிர்ப்பை உருவாக்க ஒரு ஏது உண்டாகாதா என்று யோசிக்க வேண்டுமல்லவா?

திரு. எ. ஆர் மாரிமுத்து: வருங்காலம் எப்படி இருக்குமென்று நிச்சயமாக இப்போது கணக்கிடமுடியாது. இன்றைக்கு இருக்கும் நிலையில் என்ன செய்ய முடியும் என்ற வகையில்தான் முடிவு செய்திருக்கிறார்கள். சீன அரசோடு அவர்கள் நட்புறவாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் கச்சத் தீவை விடாமல் வைத்துக்கொண்டால் நாமும் நட்புறவில் இல்லை, பகைமையுணர்ச்சியோடு இருக்கிறோம் என்றுதான்



பொருள். இலங்கையை அதிகமாக சைனா பக்கம் தள்ளி விடுகிறோம் என்பதுதான் பொருள். சைனா எங்கோ இருக்கிறது. அவர்களோடு இவர்கள் உறவாக இருப்பதை மாற்ற, நம் பக்கம் இழுக்கும் முயற்சியை நாம் ஏன் செய்யக்கூடாது? அதற்கான முயற்சியாக இதை ஏன் கொள்ளக்கூடாது?

கச்சத் தீவைக் கொடுப்பதால் ராணுவ ரீதியாக பலவீனமாக இருக்குமென்ற கருத்து சொல்லப்பட்டது. இந்தத் தீவு ஸ்ரீலங்காவுக்கு நம்மை விட இரண்டு மைல் கிட்டத்திலே இருக்கிறது. இந்தியா பெரிய நாடு. சர்வதேச ரீதியில் நம்மைப்பற்றிப் பாதகமான நிலை ஏற்படக்கூடாது. பாகிஸ்தான் கூட "இந்தியா பெரிய நாடு; ராணுவத்தைப் பெருக்கிக் கொண்டு பயமுறுத்துகிறார்கள் பயமுறுத்துகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. அதே நிலைதான் இலங்கைக்கும். நாம் சமீபத்தில் அணுகுண்டு வெடித்திருக்கிறோம். வல்லரசு நிலையை அடைந்திருக்கிறோம். வல்லரசு லிஸ்டில் சேர்த்துக்கொள்ளுகிறார்களா இல்லையா என்பது வேறு விஷயம். ஆக, எல்லாத் தரப்பிலிருந்தும் பார்க்கிறபோது கச்சத் தீவில் நமக்கு உரிமை என்று இருந்தாலும் கூட ஸ்ரீலங்காவை நட்பு நாடாக வைத்துக்கொள்ள அது விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கச்சத் தீவு விஷயத்தில் ஸ்ரீலங்கா பக்கம் போய் நின்று வாதாடுவது போல் காஷ்மீர் விஷயத்தில் பாகிஸ்தான் பக்கம் போய் வாதாடுவார்களா?

திரு. எ. ஆர் மாரிமுத்து: காஷ்மீர் நம்முடையதுதான் என்று முடிவான ஒன்று. கச்சத் தீவுப் பிரச்சினையிலும்கூட இந்திய சர்க்கார் ஒப்பந்தம் செய்வதற்கு முன்னாலே இப்படிப் பேசவில்லை. இரண்டு தரப்பிலும் ஒரு முடிவுக்கு வந்த பிறகு இப்படி நான் சொல்லுவதில் தவறு இருக்குமென்று கருதவில்லை. ஆக இந்தியாவின் வெளி நாட்டுக்கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது. பக்கத்திலே இருக்கும் எல்லா நாடுகளோடும் நட்புறவோடு இருப்பதுதான் தேசிய வளர்ச்சிக்கு ஒட்டுமொத்தமாக நல்லது. ஆகவே, பக்கத்திலே இருக்கும் ஸ்ரீலங்கா நாட்டோடு உறவாக இருக்கவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது.

இந்த அக்ரிமெண்டுக்குப் பிறகு இலங்கையில் இருக்கும் தமிழர்கள் இதை ஆதரித்திருக்கிறார்கள். திரு. செல்வநாயகம் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றிருக்கிறார் "இந்தியாவும் ஸ்ரீலங்காவும் உறவோடு இருக்கக்கூடாது என்று கருதும் சக்திகள் இந்த உடன்பாடு குறித்து பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சி செய்கின்றன" என்று தமிழர் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, இந்திய நாட்டின் ஒட்டுமொத்தமான நலனைக் கருதி இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுவதில் தவறு இல்லை. சர்வதேச ரீதியில் இந்தியாவின் நிலை காப்பாற்றப்பட, அந்தஸ்து உயர பக்கத்திலிருக்கும் சிறிய நாடுகளோடு நட்புறவோடு இருக்கிறோம். அவர்களுக்கு அச்சம் இல்லாத நிலையை ஏற்படுத்த இந்த ஒப்பந்தம் மிக மிக வரவேற்கத்தக்க ஒன்று.

இந்த ஒப்பந்தத்தின்படி நாம் எல்லா உரிமைகளையும் கொடுத்து விடவில்லை. மீன் பிடிக்க, கப்பல் போக, மினரல்ஸ் எதேனும் இருந்தால் நாமும் சேர்ந்து உபயோகித்துக்கொள்ள உரிமை பாதிக்கப்படவில்லை.

(திரு. கே கந்தசாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் எற்கனவே, அவரைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். "He is not yielding."

திரு. எ. ஆர் மாரிமுத்து: I am not yielding. நான் பேசி முடித்த பிறகு சொல்லட்டும்.

திரு. கே கந்தசாமி: Sir, on a point of order. முன்பு இருந்த உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். கர்ணத்தின் மூலமாக விசாரித்ததில் ராமநாதபுரம் ராஜா லீசுக்கு விட்டதாக இருக்கிறது. இப்போதும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: I have not given permission to the Hon. Member, Thiru Kandasamy, to raise his point of order; let him resume his seat ......

திரு. எ சுப்பிரமணியம்: பாயின்ட் ஆப். ஆர்டர்: .. உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். பேசிக்கொண்டிருக்கும்போது இடையில்—. the mike is switched off. When he has stated that he is not yielding, how is it that the mike is switched off?

(திரு. எம். சுரேந்திரனும் எழுந்து நின்றார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மைக் வேலை செய்வதற்கும் நமக்கும் என்ன இருக்கிறது? "பாயின்ட் ஆப் ஆர்டர்" என்று எழுந்ததால் மைக் வேலை செய்திருக்கும். நீங்களும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டீர்களானால் உங்களுக்கும மைக் வேலை செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை என்று சொல்லியாகிவிட்டது. திரு. சுப்பிரமணியம் அவர்கள் அதைப் பற்றிச் சொன்னவுடனேயே முடிவாகிவிட்டது. அதையே மறுபடியும் கிளப்பாதீர்கள்.

(திரு. அழகர்சாமியும், திரு. எ. ஆர். பெருமாளும் பலத்த குரலில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அழகர்சாமி அவர்கள் தயவு செய்து இருக்கையில் அமரவேண்டும். உணர்ச்சிவசப்படுவது சரியல்ல.





உறுப்பினர் அவர்கள் சத்தம் போட்டுப் பேசுவது சரியல்ல. சத்தம் போட்டுப் பேசுவது என்றால் ஒருவருக்குமேல் ஒருவர் சத்தம் போட்டுப்பேச உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: இதிலே உணர்ச்சி வசப்படுவதற்கு ஒன்றும் இல்லை. பிரச்சினையை அலசி ஆராயவேண்டும். இதுவரை நாம் கச்சத் தீவில் அனுபவித்து வந்த உரிமைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் எதிர்ப்புணர்ச்சியோடு இருந்த ஸ்ரீ லங்கா நாடு நட்புறவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது இந்திய நாட்டுக்கு எதிர்காலத்திலே. பெரும் லாபத்தையும், நன்மையையும் தரும் என்ற முறையில் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கவேண்டும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்ற தீர்மானம் தேவையில்லாதது என்று கூறி இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்.

[பிற்பகல் 12-30]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: (நெல்லிகுப்பம்): மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்னையில் என்றென்றும் கடைப்பிடிக்கிற தமிழர்கள் விரோத கொள்கையினைத் தான் இந்த சமயத்திலும் கடைபிடித்திருக்கிறார்கள். இலங்கையில் இருக்கக் கூடிய மக்களில் மூன்றில் ஒரு பங்கு பேர்கள் தமிழர்கள். ஏறக்குறைய 35, 40 லட்சம் இந்திய வம்சாவளிகுடியினர்களாக, 97 சதவிகிதம் அதில் தமிழர்களாக இருக்கிறார்கள். இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்த பிறகு இந்தியப் பிரதமர் அவர்களும் இலங்கைப் பிரதமர் அவர்களும் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்களைப் பார்த்தால் தமிழர்களுக்கு துரோகம் இழைக்கிற வகையில்தான், தமிழர்களுக்கு தீங்கு பயக்கிற விதத்தில்தான் இதுவரையில் மத்திய அரசு தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களுக்கு எதிராக—காரணம் வடநாட்டுகாரர்கள் இலங்கையில் இல்லை என்ற ஒரே காரணத்தால், இலங்கையில் இருக்கக் கூடிய இந்தியர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அத்தனை பேர்களும் தமிழர்கள் என்று சொல்லக்கூடிய காரணத்தால் கொத்தலவாலா எக்ரிமெண்டாக இருந்தாலும் சரி, சிரோமா பண்டாரநாயகா சாஸ்திரி ஒப்பந்தமாக இருந்தாலும் சரி தமிழர்களுக்கு துரோகம் இழைக்கக் கூடிய ஒப்பந்தங்களைத்தான் இதுவரையில் செய்து வந்தார்கள்.

நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த சமயத்தில், எங்கள் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் எதிர்கட்சித் துணைத் தலைவராக இருந்த சமயத்தில், இந்தியாவும் இலங்கையும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி 5,26,000 பேர்களை இலங்கையிலிருந்து அனுப்பிவிடுவது என்றும் ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கு மேற்பட்டு அங்கு குடியிருப்பவர்களுக்கு, அங்குள்ள இந்திய வம்சாவளியினருக்கு குடி உரிமை வழங்கவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அந்தச் சமயத்தில் நாங்கள், அந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாக உறுதுணையாக இருந்த ராமையா அவர்களைப் பார்த்து இப்படி தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலுக்கு நீங்கள் உறுதுணையாக இருந்தீர்களே என்று அந்தச் சமயத்தில் கேட்டோம். காரணம், ஒரே கட்சி மாநிலத்தி

லும், மத்தியிலும் ஆட்சியில் இருந்து கொண்டு என் இப்படிச் செய்தீர்கள் என்று அந்த சமயத்தில் கேட்டோம். நிலைமை என்ன? 5.26,000 பேர்களை அனுப்பிக் கொண்டுதான் வருகிறார்கள். அங்குள்ளவர்களுக்கு வசிட்டிஸன்ஷிப் ரைட்ஸ் கொடுக்கிறார்களா என்றால் நாம் எதிர்பார்த்தபடி, எக்ரிமெண்ட்டுக்கு விரோதமாகத்தான் அவர்களுக்கு குடி உரிமை வழங்க வருடக்கணக்கில் நீட்டிக் கொண்டு வருகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான் இன்றையதினம் கச்சத்தீவு என்ற பெயரில் தமிழர்கள் பேரில் பிரதமர் அவர்கள் திணித்திருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

நமது அருமை நண்பர் காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், வெளிநாட்டுக் கொள்கை, சர்வதேச நிலை என்றெல்லாம்—சொன்னார்கள். இந்தியாவிற்கு எதிரிகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. யார் எதிரிகள்? யார் எதிரிகளாக வரக்கூடியவர்கள் என்று பாகுபடுத்திப் பார்த்தீர்களா என்றால் இல்லை. நம் பெர்மனென்ட் எனிமீஸ் என்று சொல்லக்கூடியவர்கள் பாகிஸ்தான். இரண்டாவது சைனா. சைனாவோடு அல்லது பாகிஸ்தானோடு எதாவது ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டால், இந்தியா நிரந்தரமாக சமாதானமாக வாழலாம். இப்போது செலவு செய்யக்கூடிய 1,600 கோடி ரூபாய் பாதுகாப்பிற்காகச் செலவழிக்கும் சூழ்நிலை இல்லாமல் போகும் என்ற அளவிற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அல்லது உருவதாக இருந்தால் அதை இந்தியக் குடிமகன் என்ற முறையில் நான் வரவேற்பேன்.

ஆஸாத் காஷ்மீரில் பல ஆயிரக்கணக்கான சதுர மைல் இடங்களை 1947-ல் இருந்து பாகிஸ்தான் தன் கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்களா? அப்படி ஒரு ஒப்பந்தம் செய்திருந்தால் பாகிஸ்தானுக்கும் நமக்கும் இடையே—சர்வதேச நிலையில் தகராறு இருக்காது. கோடிக்கணக்கான ரூபாய் டிபென்சுக்காக செலவு செய்யவேண்டிய அவசியமும் இருக்காது என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. 12,000 சதுர மைல்கள் லடாக்கில் வைத்துக்கொண்டிருக்கிறார்களே சீனாக்காரர்கள், அவர்களோடு என் தகராறு? அவர்களோடு தகராறு இருப்பதால் மக்களின் வரிப் பணத்தில் இவ்வளவு செலவு செய்கிறார்கள். அவர்கள் ஆகுபை செய்துள்ள பகுதிகளை லடாக்கில் அவர்களை வைத்துக்கொள்ளலாம். அதை நாம் ராட்டிஃப செய்யலாம் என்று இந்திய சர்க்கார் சொன்னால் அர்த்தம் இருக்கிறது, நியாயம் இருக்கிறது.

ஆனால் சிலோனுடன் என்ன ஒப்பந்தம் வேண்டியிருக்கிறது. ஒரு கோடி மக்கள் தொகை கொண்டது சிலோன். *** அந்த அளவிற்கு எளிமையான நாடு அது. ***

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளிநாடுகள்பற்றி நாம் அதிகமாக இங்கே பேசக்கூடாது. மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நாம் அதற்கான நியாயங்களைச் சொல்லும்போது தயவுசெய்து வெளிநாட்டு அரசாங்கத்தைப்பற்றி இங்கே தரக்குறைவாகவோ அல்லது வேறுவிதத்திலோ பேசுவது முறை அல்ல.

THIRU V. KRISHNAMOORTHI: I am building up the argument that there was no necessity to transfer Kachatteevu to Ceylon. நம்மோடு சமமாக இருக்கக்கூடிய பலவானிடம் நாம் சமாதானம் செய்து கொள்ளலாமே தவிர நம்மைவிட சாதாரணமாக இருக்கக்கூடியவர்களோடு சமாதானம் செய்துகொண்டு என் தானம் கொடுக்கவேண்டும் என்பதற்கு ஆதாரமாகத்தான் இதைச் சொல்லுகிறேன்.

நான் 1959-ல் சிலோன் சென்று வந்திருக்கிறேன். அங்குள்ள எல்லாப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்திருக்கிறேன். அங்கு முப்பது லட்சம் பேர்கள் தமிழர்கள் இருக்கிறார்கள். பத்து லட்சம் பேர்கள்...........

(Thiru R. Ponnappa Nadar rose.)

THIRU V. KRISHNAMOORTHI: I am not yielding, Sir.

THIRU R. PONNAPPA NADAR: On an important point of order, Sir. I did not want to obstruct the speech of Thiru Krishnamoorthi. So far as this House is concerned, we can discuss all these matters. But when it comes to the question of relation with other States, in international matters, it is better we do not say(a)..So I suggest that that part of the speech may be expunged.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: லக்ஸம்பர்க் இருக்கிறது. 28 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதோடு நாம் ஒப்பந்தம் செய்து கொள்வதா? சிறிய சுண்டைக்காய் நாடு போல் உள்ளது சிலோன். They are not potential enemies. நான் பேசுவது தமிழ்நாட்டு மக்களுக்காக மட்டுமல்ல. சிலோன் என்றைக்கும் இந்தியாவின் பொட்டன்ஷியல் எனிமியாக இருந்ததில்லை, இருக்கவும் இல்லை என்பதை வாதத்திற்குச் சொல்கிறேன். மாரிமுத்து அவர்கள் சொல்கிறார்கள், சர்வதேச நிலைமையில் நண்பர்கள் என்று முறையில் கொடுத்து விட்டோம் என்று. நாளையதினம் அவர்கள் மதுரையைக் கேட்கிறார்கள். நாளையதினம் அவர்கள் தமிழ்நாட்டைக் கேட்கிறார்கள் என்றால் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றக்கூடாதா?

திரு. எ. ஆர். மாரிமுத்து: மதுரை அல்லது தமிழ்நாட்டை யாராவது கொடுத்து விடுவார்களா? அதன்பேரில் இலங்கை உரிமை கொண்டாடியிருக்கிறதா? தேவையில்லாமல், கற்பனையில் உறுப்பினர் அவர்கள் பேசவேண்டாம்.

(a) * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ராமேஸ்வரம் ரெவின்யூ வில்லேஜில் ஒரு சர்வே நம்பராக கச்சத்தீவு இருக்கிறது. அதை சிலோனுக்கு எப்படி கொடுக்க முடியும் ? யாரைக் கேட்டுக் கொடுத்தார்கள் ? ஒரு பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு நிலத்தை வேறு ஒருவருக்கு அஸைன் செய்ய வேண்டுமென்றால்கூட அரசாங்கத்தை கலந்து ஆலோசிக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்தின் சம்மதத்தைக் கேட்கிறார்கள். அப்படியிருக்க தமிழ் நாட்டின் ஒரு பகுதியை, நம்மைக் கலக்காமல், இன்றையதினம் நம் சம்மதம் இல்லாமல் ஏன் கொடுக்க வேண்டும் ?

ராமேஸ்வரத்தில் இருந்து பார்த்தால் 12 மைலில் அந்தத் தீவு இருக்கிறது. இலங்கையிலிருந்து பத்து மைல்களுக்குள்ளே அது இருக்கிறது. சிலோனை நமக்கு படை எடுக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. காரணம் அந்நாடு ஒரு சிறிய நாடு. அவர்களால் நமக்கு பயம் இல்லை. ஒரு பெரிய நாடோடு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று, தண்டத்தால் முடியவில்லை என்றால் தானம் கொடுத்து அவர்களைத் திருப்திபடுத்த வேண்டியதுதான். ஆனால் சிலோனுக்கு எதற்காக நாம் அதைத் தானம் கொடுக்க வேண்டும் ? அதைத்தான் கேட்கிறேன்.

சீனாவோடு அவர்கள் உறவு கொண்டிக்கிறார்கள். சீனா என்றைக்குமே இந்தியாவைப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். சீனாவிற்கும் சிலோனுக்கும் இடையே ஒப்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சீனா அங்கு தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் டெக்னீஷியன்ஸ் அங்கு இருக்கிறார்கள். நமக்கும் சீனாவிற்கும் உடன்பாடு இல்லை. அவர்களோடு நமக்கு தொடர்பு கிடையாது. வியாபாரம் கிடையாது. ஆனால் சிலோனுக்கும் சீனாவிற்கும் இடையே தொடர்பு இருக்கிறது.

இன்றையதினம் பாகிஸ்தான் பெஷாவரை ஏன் அமெரிக்காவிற்கு வாடகைக்கு கொடுத்திருக்கிறார்கள். ஒருவேளை ரஷ்ய படையெடுப்பு ஏற்பட்டால் பெஷாவரிலிருந்து விமானங்களை அனுப்பலாம் அல்லது அங்கிருந்து ஏவுகணைகளை ஏவலாம் என்றுதான் லீஸ்க்கு வாங்கியிருக்கிறார்கள். ஆனால் சிலோனோடு நமக்கு எதற்காக ஒப்பந்தம் ? அங்கு எதாவது கிடைத்தால் வாங்கி வந்துவிடுவார்களா ? எண்ணெய் கிடைத்தால் துளை போட்டு எண்ணெய் எடுக்க ஒப்பந்தம் செய்து தந்திருக்கிறார்களா ? அப்படி எடுக்க முடியுமா ? பிஷரீஸ் ரைட்டுக்குத்தான் இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அதிலே இருக்கின்ற கனிப்பொருள்களிலும் நமக்குப் பங்கு இருக்கிறது. அதை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒப்பந்தம் கூறுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பின் எதற்கு ஒப்பந்தம் போடவேண்டும். அது தேவையில்லையே.



அங்கே அந்தோனியார் கோவில் ஒன்று இருக்கிறது. வருஷத்திற்கு ஒரு தடவை அந்தோனியார் திருவிழா நடக்கிறது. அந்தத் திருவிழாவிற்கு மக்கள் இலங்கையிலிருந்தும் வருகிறார்கள். இந்தியாவிலிருந்தும் வருகிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறை இப்படி ஒரு நாள் இரண்டு நாள் அங்கு மக்கள் இருக்கிறார்கள். அங்கு ஒரு நாளைக்கு குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அங்கு என்ன நடக்கிறது என்றால், ஆண்டுக்கு ஒரு முறை தாயும், மகனும், தந்தையும் மகனும் கட்டித் தழுவிக் கொள்வதற்கு வசதியாக இருக்கிறது. அதுகூட இல்லாமல் இப்போது செய்து விட்டார்கள் மத்திய அரசாங்கம்.

இத்தனை நாள் நமக்கு அந்தத் தீவில் இருந்த உரிமையைக் கொடுத்து விட்டார்கள். சாவர்னடி ரைட்ஸ் கொடுத்து விட்டார்கள். இனிமேல் நாம் அதன்மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. நாளையதினம் இந்திய அரசாங்கம் அங்கே மிலிடெரியைக் கொண்டு போக முடியுமா ? அதற்கு அந்த அம்மையார் ஒப்புக்கொள்வார்களா ? நம்முடைய மிலிடெரியை ஏவுகணைகளை அங்கே ஸ்டேஷன் செய்ய முடியுமா ? அதற்கு அந்த அம்மையார் ஒப்புக்கொள்வார்களா ? ஆகவே, இந்தக் கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்ததன் மூலம் மத்திய அரசு தமிழகத்திற்கு தீங்கிழைத்ததோடு மட்டுமல்ல, தமிழர்களின் உணர்வுகளை மதிக்கத் தவறிவிட்டது. தமிழர்களின் எதிர்காலத்திற்கு விரோதமாக நடந்து கொண்டுவிட்டது. எல்லாவற்றிலும் தமிழகத்திற்கு துரோகம் செய்யும் அரசாங்கம் இதிலேயும் தவறு செய்து இருக்கிறது. மாநில அரசின் கருத்துக்களுக்கு விரோதமாக செயல்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

சிலோனில் இருக்கிற ஹை கமிஷனர்கள் என்ன செய்கிறார்கள் ? தமிழர்கள் இருந்தது உண்டா ? யார் இருக்கிறார்கள் அங்கே ? அங்கே அடிஉதை படுபவன் தமிழன். தமிழன் அடிபட்டால் வடநாட்டுக்காரனுக்கு, பம்பாய்காரனுக்கு, குஜராத்காரனுக்கு என்ன வந்தது ? மத்திய அரசாங்கம் செய்து இருக்கிற ஒப்பந்தம் தமிழகத்திற்கு விரோதமானது. அந்த ஒப்பந்தம் சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைச் சரியானது என்று இங்கேயுள்ள சிலர் சொல்கிறார்கள். குஜராத் போன்ற அரசாங்கம் "ரான் கச்" பகுதியை பாகிஸ்தானுக்குக் கொடுத்த சமயத்தில் மத்திய அரசாங்கம் செய்தது சரியல்ல என்று தீர்மானம் போட்டார்கள். அதேபோல் நாம் இங்கே கேட்கிறபோது, இங்கேயிருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்கள் ஏன் கோபப்படவேண்டும்? உண்மையிலேயே தமிழக மக்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாய் இருந்தால் அவர்கள் செய்தது தவறு என்று சொல்லவேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கோபப்படவில்லை. இருக்கிற உண்மையை உணரவேண்டும் என்று தான் சொன்னேன். கோபப்படவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஒரு முறை அண்ணா அவர்கள் சொன்னார்கள். இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கையோடு நமக்கு பிணைப்பு இருக்கவேண்டும். எல்லாவற்றிலும் இல்லை, ஒரு சில பிரச்னை

களில் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அமெரிக்கா, ரஷ்யா போன்ற மேலை நாடுகளோடு ஒப்பந்தம் ஏற்படுகிற நேரத்தில் நாம் ஒப்புக்கொள்கிறோம் அல்லவா ? அதை வரவேற்கிறோம் அல்லவா ? இன்றையதினம் நம்மைக் கேட்காமல் கச்சத்தீவை கொடுத்துவிட்டு, ஒப்பந்தம் செய்து கொண்டுவிட்டார்கள். நாளைக்கு அவர்கள் ராமேஸ்வரம் எங்களுக்குச் சொந்தம் என்பார்கள். அதையும் கொடுப்பார்கள். அதற்குப் பின் ஒரு மாவட்டம் எங்களுக்குப் பக்கத்தில் இருக்கிறது, அதைக் கொடுங்கள் என்பார்கள். அதையும் கொடுப்பார்கள். அப்புறம் எங்களுக்கு வெங்காயம் கிடைக்கவில்லை, தூத்துக்குடியைக் கொடு என்பார்கள், மிளகாய் கிடைக்கவில்லை, இராமநாதபுரத்தைக்கொடு என்பார்கள் ? இப்படி போய்கொண்டே இருந்தால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும். இப்படி செய்தால் நாளைக்கு நமக்கு ஆபத்து ஏற்படாது என்பதற்கு என்ன பாதுகாப்பு ?

இப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதால் நமக்கு பாதுபாப்புக்குச் செலவாகும் பணம் மிச்சப்படுகிறது என்றாலும் பரவாயில்லை. அதைச் செய்யவேண்டிய இடம், ஆசாத் காஷ்மீர் பகுதிகள். அந்த ஆசாத் காஷ்மீர், லடாக் பகுதிகளில் செய்யவேண்டியதை விட்டு விட்டு, நம்முடைய தமிழகத்தின் பகுதியை தானம் செய்து மத்திய அரசு இலங்கை அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசின் ஆலோசனையைக் கேட்காமல் இலங்கை அரசுக்கு சகச்சத்தீவை தானம் செய்துவிட்டார்கள், தமிழக மக்களுக்கு துரோகம் செய்து விட்டார்கள் என்று சொல்லி தீர்மானத்தை ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிற நேரத்தில் * * * என்று சொன்னார்கள். அதை மாத்திரம், அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்த கச்சத்திவு பற்றிய தீர்மானம் இப்போது நிறைவேற்றுவதன் காரணமாக ரத்து செய்யப்போகிறார்களா என்பது தான் இப்போது நம் முன்னால் இருக்கும் பிரச்னை. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் மறுபடியும் இந்திய சர்க்கார் புனராலோசனை செய்து இலங்கையைக் கூப்பிட்டு ஒப்பந்தத்தை ரத்து செய்ய முடியுமா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த ஒப்பந்தம் எந்த அடிப்படையில் இருக்கிறது என்றால் நமக்கும் சிலோன் அரசாங்கத்திற்கும் இடையே ஒரு நல்லுறவை ஏற்படுத்தும் விதத்தில் இருக்கிறது. சிலோனில் 10 லட்சம் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்களின் நலனில் அக்கறை கொண்டுதான் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. நமக்கும், சிலோனுக்கும் இடையே

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



இருக்கும் தகராறு நமக்கெல்லாம் தெரியும். சிங்களர்கள் தமிழர்கள் தமக்கு விரோதி என்று நினைப்பதை மாற்றி, அவர்களும் சகோதரர்கள் தான் என்ற நிலைமையை உருவாக்கும் விதத்தில் இருக்கிறது இந்த ஒப்பந்தம். இது ஒரு நல்ல ஒப்பந்தம். இதிலே தமிழகத்திலுள்ள தலைவர்களும் ஒத்துப்போகிறார்கள்.

1954-ம் வருஷத்திலேயே இந்த அவையில் கச்சத்தீவு பற்றி நான் தான் கேள்வி கிளப்பினேன். அப்போது சுப்பிரமணியம் அவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் கலந்து சொல்வதாகச் சொன்னார்கள். அது டிஸ்பியூட்டில் இருப்பதாகச் சொன்னார்கள். பிறகு 1957-ல் கிளப்பப்பட்டது. அதற்கும் அதே பதில் சொன்னார்கள். பிறகு 1971-ல் இதே சபையில் கிளப்பினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் அது விவகாரத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள். எப்ரல் மாதத்தில் கனம் முதலமைச்சர் அவர்களை நான் பார்த்தபோது, போதுமான ஆதாரங்களையும், விவரங்களையும் கொடுக்கச்சொல்லியிருந்தேன். அது பற்றி மறுபடியும் எப்ரல் மாதத்தில் விவாதிக்கலாம் என்று சொல்லியிருந்தார்கள். பின்பு கேவல்சிங் அது பற்றி ஆதாரம் கேட்டதாகவும், சரியாகக் கொடுக்கவில்லை என்றும் சொல்லப்பட்டது.

இன்றையதினம் இலங்கைக்கும், தமிழகத்திற்கும் இடையே இருக்கும் தூரம் 18 மைல்தான். கச்சத்தீவு இலங்கைக்குச் சமீபத்தில் இருக்கிறது. 1921-ம் ஆண்டிலேயே பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்தபோது இரண்டு பேருக்கும் பிஷரீஸ் ரைட்ஸ் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்......

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, வாதத்தில் கச்சத்திவு சிலோனுக்கு அருகில் இருப்பதால் கொடுக்கலாம் என்ற அடிப்படையில் சொல்கிறார்கள். அந்தமான் நிக்கோபார் தீவுகள் பர்மாவுக்கு அருகாமையில் இருப்பதால் கொடுத்துவிடலாமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : சிலபேர் 20 மைல் 22 மைல் என்று சொன்னார்கள். அதற்காகச் சொன்னேன். ஆகவே, 1921-லே பிஷரீஸ் ரைட்ஸ் சிலோனுக்கு கொடுத்து இருக்கிறார்கள். 1924-ல் அன்று இருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் கச்சத்திவு இலங்கைக்குச் சேர்நதது என்று சொல்லி இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நமக்குச் சுதந்திரம் வந்தபிறகும் இந்தக் கச்சத்திவு இலங்கையைச் சார்ந்தது என்று யாரும் இதுவரையில் சொல்லவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சுதந்திரம் வந்ததற்குப் பிறகு கச்சத்திவு இலங்கைக்குச் சொந்தமானது என்று இந்திய அரசாங்கம் சொன்னது இல்லை என்று சொல்கிறார்கள். இப்போது தான் சொல்ல ஆரம்பித்து இருக்கிறார்கள். 2–3 ஆண்டுகளுக்கு. பிறகு பாராளுமன்றத்தில் லோக் சபையில் சோஷலிஸ்ட் உறுப்பினர் மதுலிமாயி பிரச்னை எழுப்பிய நேரத்தில் இந்திய வெளி உறவு இலாகா அமைச்சர் அந்த

கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தம், இலங்கைக்குச் சொந்தமானது அல்ல என்று ஆணித்தரமாகச் சொன்னார்கள். இப்போது தான் அவர்கள் விட்டுக் கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கெனவே மத்திய சர்க்கார் கொடுத்த பதிலைத்தான் இங்கே மூன்று தரம் சொன்னார்கள். ஆகவே, 1924-ம் வருஷத்திலே செக்ரடிரி ஆப் ஸ்டேட் இந்திய சர்க்காருக்கு எழுதும் நேரத்தில் கச்சத்தீவு சிலோனுக்கு சொந்தமானது என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, சுதந்திரத்திற்குப் பிறகு யாரும் இலங்கைக்கு அது சொந்தமில்லை என்று சொல்லவில்லை. அங்கே ஒரு மாதா கோவில் இருக்கிறது. அதைச் சுற்றி ஆயிரக்கணக்கான தீவுகள் இருக்கின்றன. இந்தத் தீவு மட்டும் தான் 200, 250 எக்கர் கொண்டதாக இருக்கிறது. வருஷத்திற்கு மூன்று தரம் அங்கே திருவிழா நடக்கும். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பிள்ளைகளைத் தழுவிக் கொள்வதற்குக்கூட முடியாமல் இந்த ஒப்பந்தம் செய்து விட்டதே என்று சொன்னார்கள். அதற்கு எந்தவிதமான பெரிய தடையும் கிடையாது.

அதுமட்டுமல்ல. அங்கு இந்த மூன்று நாட்களிலும் "ஸ்மக்லிங்" நடக்கிறது. இங்கிருந்து கடத்தல் சாமான்களைக் கொண்டுபோவார்கள். கச்சத்தீவுக்குக் கொண்டுபோவார்கள். கச்சத்தீவுக்கு இலங்கை யிலிருந்து வருகிறவர்கள் அந்த சாமான்களை வாங்கிகொண்டு தாங்கள் கொண்டு வந்த சாமான்களை மாற்றிக் கொள்வார்கள், அதற்கு இவ்வளவு பெரிய போராட்டம்.

இராமனுதபுரம் ராஜாவுக்குச் சொந்தமாக இருந்தது என்று "கிளேம்" சொல்லப்படுகிறது. யார் வேண்டுமானுலும் சொல்லலாம். குத்தகைக்கு விட்டிருக்கலாம். இராமனுதபுரம் ராஜா சார்பில் ஏதாவது உண்மை சொல்லப்பட்டதா ? படகு போக்குவரத்திற்கு, சங்கு எடுத்துக்கொள் வதற்கு, மீன் பிடிப்பதற்கு, இப்படிப்பட்ட உரிமை அவர்களுக்கு இருந் திருக்கலாம். அதுவும் கச்சத்தீவுக்கு மேற்புறம்தான். கீழ்ப்புறத்தில் அப்படிப்பட்ட உரிமை இருந்தது என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. இராமனுதபுரம் ராஜாவைச் சார்ந்த யாரும் அப்படிச் சொல்ல முடியாது.

இந்த ஒப்பந்தத்தினால் எந்தவிதமான பாதகமும் கிடையாது. "பாக் ஸ்ட்ரைட்"—அதிலே இருக்கக்கூடிய தண்ணீரை இலங்கை சர்க்காரும், இந்திய சர்க்காரும் இந்த இரண்டு நாடுகளும்தான் உபயோகப்படுத்திக் கொள்ள முடியும். மூன்றாவதாக எந்த நாட்டின் கப்பல் போக்கு வரத்தையும் அங்கே அனுமதிக்க முடியாது என்று ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. அங்கே போவதற்கு எந்தவிதமான பெர்மிட்டும் கிடை யாது. யார் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம், சங்கு குளிக்கலாம், எங்கு வேண்டுமானாலும் செல்லலாம், எந்தவிதமான பெர்மிட்டும் தேவை யில்லை.



அதுமட்டுமல்ல, அங்கு எண்ணெய் வளம் கிடைப்பதாக இருந்தால், இரண்டு நாடுகளும் ஒன்றுகூடி யோசித்து, "ஜாயிண்ட் வென்சராகத்" தான் செய்ய முடியும். எண்ணெய் மட்டுமல்ல, மினரல்ஸ் கிடைத்தாலும் சரி, இரண்டு நாடுகளும் சேர்ந்துதான் எடுக்கவேண்டும் என்று ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இம்மாதிரி ஒரு ஒப்பந்தம் எப்படி வருகிறது என்றால், நமது இந்தியாவைப்பற்றி ஒரு கெட்ட பெயர், சைனாவை எடுத்துக் கொண்டாலும் சரி, பாகிஸ்தானை எடுத்துக்கொண்டாலும் சரி, இந்தியா ஒரு ஆபத்தான நாடு, அன்னிய நாடுகளின் மீது படையெடுத்து, அந்த நாடுகளை கபளீகரம் செய்யக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்று பிரசாரம் செய்கின்றன. ஆகவே தான் "சிம்லா எக்ரிமெண்ட், பங்களா தேச் எக்ரிமெண்ட், பர்மா எக்ரிமெண்ட்" எதை எடுத்துக்கொண்டாலும் சரி, அந்த ஒப்பந்தங்கள் உலகிலே இந்திய நாடு, நாடு பிடிக்கக்கூடிய நாடு அல்ல, இந்தியா அன்னிய நாடுகளோடு சுமுகமாக இருக்க விரும்புகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அன்றையதினம் பெருவாரி போன போதும் சரி, லதக்கை சைனா எடுத்துக்கொண்டபோதும் சரி, இவ்வளவு பெரிய கிளர்ச்சி, இவ்வளவு பெரிய எதிர்ப்பு காட்டப்படவில்லை. ஒரு சிறிய இடத்திற்கு, புல், பூண்டு கூட முளைக்காத ஒரு இடத்திற்கு இவ்வளவு பெரிய கிளர்ச்சி ஏன் என்பது புரியவில்லை.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கச்சத் தீவிலிருந்து படை யெடுக்கலாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய, "எலக்ட்ரானிக் வெபன்ஸ்" காலத்தில் 5,000 மைல்களுக்கு அப்பா லிருந்து கூட அடிக்க முடியும். ஆகவே, அது குறித்துப் பேசத் தேவை யில்லை. அது வேறு விஷயம். இப்படிப்பட்ட கிளர்ச்சி செய்வதற்குக் காரணம், ஏதோ குட்டையைக் குழப்பி அதில் மீன் பிடிப்பது போன்ற சமாசாரமாக இந்திய சர்க்கார் செய்து கொண்ட இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. வோட்டுப் போடுகிற நிலை வருகிறபொழுது அது வேறு விஷயமாக இருக்கிறது. இந்திரா சர்க்காரை எதிர்த்து பார்லிமெண்டில் 8 கட்சிகள் . . . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை எதிர்க்கிறார்கள், அவர் களுக்கு ஆதரவாக வோட்டுப் போட்டார்களே என்று சொல்கிறார்கள். நீங்கள் அவர்களை ஆதரிப்பவர்கள் ஏன் வோட்டுப் போடாமல் ஒதுங்கிக் கொண்டீர்கள் ?

திரு. என். கே. பழனிசாமி : இதற்கு ஒரு பெரிய விவாதத்தைக் கிளப்பி ஒன்றும் இல்லாததற்கு இவ்வளவு பெரிய கிளர்ச்சி வேண்டிய தில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கேட்டதற்கு விளக்கம் தேவை, நாங்கள் அவர்களை ஆதரித்து வோட்டுப் போட்டதாகச் சொன் னீர்கள். இந்திரா காங்கிரஸை ஆதரிக்கிற நீங்கள் ஏன் வோட்டுப் போடாமல் ஒதுங்கி விட்டீர்கள் ?

திரு. என். கே. பழனிசாமி : இரண்டு காண்டிடேட்களும் பிற்போக்கானவர்கள் என்பதற்காகத் தான் யாருக்கும் வோட்டுப் போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

திரு. என். கே. பழனிசாமு : இராமாயணத்திலிருந்து பல எடுத்துக்காட்டுகளை எடுத்துக் காட்டினார்கள். ஒரு காலத்தில் பர்மாவும், சிலோனும் இந்தியாவோடு இருந்தன. இன்றைக்குக் கச்சத் தீவு வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக ஏன் பர்மா வேண்டும் என்று கேட்கக்கூடாது, இலங்கை வேண்டும் என்று கேட்கக் கூடாது? ஆகவே, இதற்கு இவ்வளவு பெரிய எதிர்ப்போ, ஆர்ப்பாட்டமோ அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் கச்சத் தீவை இலங்கை அரசுக்குக் கொடுப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளிலே, இந்தியப் பேரரசின் பிரதமர் இந்திரா காந்தியோ அல்லது வெளி நாட்டு அமைச்சரோ நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை இந்தக் கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுக்க போகிறோம், ஆகவே அதுபற்றி உங்களுடைய கருத்து என்ன? என்று அவர்களைக் கூப்பிட்டு எந்தப் பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், மத்திய அரசு ஏதோ ஒரு பெரிய சக்கரவர்த்தி போலவும், இங்கே இருக்கிற மாநிலங்கள் கப்பம் கட்டுகின்ற சிற்றரசுகள் போலவும் நடத்தப்படுகின்றன என்பது நன்றாகத் தெரிகிறது.

உண்மையிலேயே இந்தியா ஒரு யூனியன் என்று சொல்லக்கூடிய அளவில் அவர்கள் எண்ணியிருப்பார்களேயானால், இந்த கச்சத் தீவு தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. 1966 வரையில் இருந்திருக்கிறது—1954-ல் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் 1966 வரையில் நம்முடைய தமிழ்நாட்டோடு இணைந்ததாக இருந்தது என்பதற்கு இங்கே குறிப்பு இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எல்லா ரிஜிஸ்த்திரார் ஆபீஸின் பதிவு எல்லையைக் குறிக்கும் ஒரு நூலில் 107-ம் பக்கம் இராமநாதபுரம் ஜமீன்தாரி கிராமங்களைக் குறிக்கும் பட்டியலில் தனுஷ்கோடியின் உட்கிராமமாகக் கச்சத் தீவு குறிக்கப்பட்டுள்ளது. நூல் வெளியீடு 1—1—1966. முன்னாள் முதல்வர் காங்கிரஸ்கட்சிக்காரர் திரு. பக்தவச்சலம் ஆட்சி புரிந்த காலம் அது என்பது குறிப்பிடத்தக்கது. தகராறு ஏதாவது இருந்திருக்குமானால்,



இந்த நாட்டினுடைய ஒரு பகுதியாக கச்சத் தீவு சர்வேயில் குறிப்பிடப்பட்டிருக்கும்பொழுது, தமிழ்நாட்டினுடைய ஒரு பகுதியை எடுத்து இன்னொரு நாட்டிற்குக் கொடுக்கிறார்கள் என்றால், அதைப்பற்றி தமிழ் நாட்டினுடைய மக்களுடைய பிரதிநிதியாக இருக்கிற இந்த அரசினுடைய முதல்வரை பிரதமர் அவர்கள் கூப்பிட்டுக் கலந்து பேசி இருக்க வேண்டும். ஆனால் பேசவில்லை. இது அவர்களுடைய எதேச்சாதிகாரத்தைதான் காட்டுகிறது.

இந்திய உப கண்டத்தை எடுத்துக்கொண்டால், எப்பொழுதும் போர் மூளுகின்றபொழுது, வடக்கே போர் மூளுகின்றது, மேற்கே போர் மூளுகின்றது, வடக்கே இருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்,மேற்கே இருப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள், தென் மாநிலத்தில் இருப்பவர்கள் போர் பயமின்றி கவலையே இல்லாமல் நிம்மதியாக, அமைதியாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கச்சத் தீவை எடுத்து இலங்கை அரசுக்குக் கொடுப்பதன் மூலம் போர் பயம் இல்லாமல் வாழக்கூடிய தென் மாநிலங்களும் எப்பொழுதும் போர் குறித்து அச்சப்பட்டுக்கொண்டு இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, தமிழர்களுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டும், குறிப்பாக திராவிட நாட்டிற்கு பாதகம் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வடக்கே இருப்பவர்கள் இதை செய்திருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

சீனு படையெடுப்பு நடந்தபொழுது இந்து மகா கடலில் சீனக் கப்பல் உலாவியதாக அப்பொழுது செய்தி வந்தது. இலங்கை அரசு சீனாவுக்கு மிக நெருக்கமாக இருக்கிறது. மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு மாரிமுத்து அவர்கள் உறவு நெருக்கத்தின் காரணமாகத்தான் இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறினார். எந்தக் காலத்திலும் இந்த உறவு நெருக்கமாக இருக்கும் என்று என்ன காரண்டி இருக்கிறது? அவர்கள் மீண்டும் நம்மோடு மோதமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? நம்முடைய நாட்டினுடைய ஒரு பகுதியை இலங்கைக்கு எடுத்துக் கொடுப்பதன் மூலம் நம்முடைய நாட்டிற்கு ஆபத்து வந்திருக்கிறது. நம்முடைய மக்கள் அனைவருக்கும் ஆபத்து வராமல் தடுப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

நம்முடைய முதல்வர் அவர்களைக் கூப்பிட்டு அவர்கள் பேசவில்லை. ஏதோ ஒரு செயலாளர் அங்கிருந்து வருகிறார். அவர் இங்கே செயலாளரோடு பேசுகிறார், முதல் அமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசுகிறார். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களை பிரதமர் அவர்கள் கூப்பிட்டு பேசியிருக்கவேண்டும். நாட்டின் பிரதமர், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர், இந்த நாட்டில் ஜனநாயகத்தை நாங்கள் தான் ஏற்படுத்தியிருக்கிறோம் என்று கூறிக்கொள்கிறவர், ஒரு மாநில் முதல் அமைச்சரைக் கூப்பிட்டு அந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இடத்தை இன்னொரு

நாட்டிற்குக் கொடுக்கப் போவதைப்பற்றி கலந்து பேசாதது அவர்கள் எந்த அளவிற்கு சர்வாதிகாரத் தன்மையுடன் இருந்திருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. மற்றொன்று கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானது அல்ல என்று இலங்கைக்காரரே குறிப்பிட்டிருக்கிறார். கச்சத் தீவைப்பற்றி இலங்கை அரசின் அமைச்சர் அவையைச் சார்ந்த ஒருவர் குறிப்பிட்ட குறிப்பை நான் இங்கே வாசிக்கிறேன்

"I remember coming across this problem when I was an Assistant Legal Draftsman. I had .to deal with a file for the purpose of verifying some of the boundaries of the Northern district. In the process of revising the draft proclamation, I had to trace the history of the boundary back over many years. I remember coming across a proclamation issued probably in the time of Queen Victoria in which the island of Kachativu is excluded from the Northern district as it belonged to the Raja of Ramnad".

இப்படி இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இது இலங்கைக்கு எப்போதுமே சொந்தமாக இருந்ததில்லை என்று தெளிவாகக் கூறுகிறது. இதுபோன்ற இன்னும் பல சான்றுகள் இருக்கின்றன.

[பிற்பகல் 1-00]

இருந்தாலும் இந்தக் கச்சத்தீவை கொடுக்கிறோம்; அங்கே இலங்கையில் இருக்கின்ற தமிழர்களுக்கு எல்லாம் எல்லாத் தமிழர்களுக்கும் குடியுரிமை கொடுங்கள் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லவே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப்போல அங்கே இருக்கின்ற தமிழர்களை எல்லாம் வெளியே அனுப்புகின்ற நிலைமையை தவிர்க்க முடியவில்லை.

பாதுகாப்பு முக்கியத்துவம் குறித்து மற்றொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய கச்சத் தீவிலே யுத்த களத்தை அமைத்துக்கொண்டால் நமக்கென்ன என்று சொன்னார்கள். டையாகோ கார்சியா தீவில் அமெரிக்கா தன்னுடைய படையை நிறுவ முயன்றது. "செவன்த் பிளிட்டை" அங்கே நிறுவ முயற்சி செய்தது. அப்போது நம்முடைய நாடு அதை எதிர்த்தது. நம்முடைய இந்திய பேரரசு அமெரிக்கா அங்கே படைத்தளத்தை அமைக்கக்கூடாது என்று கண்டித்தது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏவு கணைகள் இருக்கின்ற நேரத்தில், எங்கிருந்தும் தாக்கக்கூடிய அபாயம் இருக்கின்ற நேரத்தில் இது ஒரு பெரியப் பிரச்சினை அல்ல என்று சொன்னார்கள். அப்படியானால் டையாகோ கார்சியாவில் செவன்த் பிளிட் அமைப்பதை ஏன் எதிர்க்க வேண்டும்? ஏன் அதை எதிர்க்கிறார்கள்? இதை எல்லாம் பார்க்கும்போது இந்திய பேரரசு இந்தியாவின் பாதுகாப்பு பற்றி கொஞ்சம் கூட கவலைப்படவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.



இங்கே இருக்கின்ற கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் இரண்டு கம்யூனிஸ்டு கட்சிக்காரர்களிலும் கச்சத் தீவைக் கொடுத்தது சரிதான் என்று சொல்கிறார்கள். அது எப்படிச் சரியாகும்? சீனாவும் ரஷியாவும் படையெடுத்துவர ஒரு வாய்ப்பு ஏற்படக்கூடும் என்கின்ற ஒரு உள் நோக்கத்தோடுதான் அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தியாவிலே இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்களும், பொதுவுடைமையாளர்களும் இந்த நாட்டுக்கு துரோகம் விளைவித்தவர்கள் ஆவார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒப்பந்தம் முடிந்துவிட்டது; இனி அதைப்பற்றி பேசக்கூடாது என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்திய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரித்திருக்கிறார்கள். அவர்களுடைய வழிவந்த நீங்கள் ஆதரிக்கிறீர்களா எதிர்க்கிறீர்களா என்று இங்கே கேட்டார்கள். இந்தியப் பேரரசின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிப்பதுதான் எங்களுடைய கொள்கை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டில் இருந்தபோது கூறினார்கள். இந்திய பேரசின் கொள்கையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டபோது, இந்திய பேரரசின் மானம் காப்பாற்றப்பட வேண்டும்; இந்திய பேரரரசின் ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இங்கே இருக்கின்ற இந்திய பேரரசு, நம்மைக் கேட்காமல், சர்வாதிகாரமாக, எதேச்சாதிகாரமாக மாநில அரசை கலந்து கொள்ளாமல் செய்த முடிவு எந்தவிதத்தில் நியாயம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நம்முடைய மாநில அரசைக் கலந்துகொள்ளாமல், நம்முடைய முதலமைச்சரைக் கேட்காமல் அவர்கள் எடுத்த முடிவை எதிர்க்கிறேன்; எதிர்க்க வேண்டுமென்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி சத்தியவாணிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, கச்சத் தீவை ஸ்ரீலங்கா அரசுக்கு மத்திய அரசு எடுத்துக் கொடுத்ததை நான் கண்டிக்கிறேன். அதைக் கொடுத்திருக்கக்கூடாத ஒரு பிரச்சனைதான். கச்சத் தீவு நம்முடையது; ஸ்ரீலங்கா அரசுக்கு சொந்தம் அல்ல. இதில் எந்தவித தகராறுக்கும் இடமில்லை என்னைப் பொறுத்தவரையில் மத்திய அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு கச்சத் தீவை கொடுத்துவிட்டதை தமிழ்நாட்டிலே இருக்கின்ற நல்ல தமிழர்கள் யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது என்னுடைய எண்ணமாகும். ஆனால் என்னைப் போன்றவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்க காரணம் நமது முதலமைச்சர் அவர்கள் நினைத்திருந்தால் இந்தக் கச்சத்தீவு பறிபோயிருக்காது. இதுதான் என்னுடைய திட்டவட்டமான கருத்தாகும்.

பிரதம அமைச்சர் என்னிடம் கலந்து பேசவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் பிரதம அமைச்சர் நம்முடைய முதலமைச்சரைக் கலந்து பேசாமல் இருப்பது நம்முடைய பிரச்சினைக்கு வலிவைத்தான் தந்திருக்கும். மத்திய

1 4 ஆகஸ்டு 21] [திருமதி சத்தியவாணி முத்து]

அரசிலே இருக்கின்ற செயலாளர் கேவல்சிங் அவர்களோ அல்லது மத்திய வெளிநாட்டுறவு அமைச்சர் ஸ்வரன்சிங் அவர்களோ நம்முடைய மாநிலத்தோடு கலந்துபேசினார்கள் என்பதை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இது கடந்த அக்டோபர் மாதம் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு இந்த ஆண்டு ஜனவரி 26-ம் தேதி குடியரசு தின விழாவில் கலந்துகொள்ள ஸ்ரீலங்கா பிரதம அமைச்சர் ஸ்ரீமாவோ பண்டார நாயகாஅவர்கள் டில்லிக்கு சிறப்பு விருந்தாளியாக வந்திருக்கிறார்கள். அப்போதுதான் இதுபற்றி இந்திய பிரதம அமைச்சரும், ஸ்ரீலங்கா பிரதம அமைச்சரும் பேசி இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். காரணம் நான் அப்போது ஸ்ரீலங்கா பிரதமரை வரவேற்கிறேன். டில்லியிலே அவர்கள் கலந்துகொண்ட விழாவிலே நானும் பங்குபெற்றிருக்கிறேன். சென்னையில் ஸ்ரீலங்கா பிரதமருடைய மகளுடன் பேசிக்கொண்டிருக்கும்போது இந்தப் பிரச்சனைப்பற்றி பேசக்கூடும் என்று தெரிய வந்தது.

அக்டோபர் மாதத்தில் முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசுச் செயலாளர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஸ்ரீலங்கா பிரதமர் நமது நாட்டுப் பிரதமரைச் சந்தித்திருக்கிறார்கள். எனவே, நமது நாட்டுப் பிரதமர் ஸ்ரீலங்கா பிரதமரைச் சந்திப்பதற்கு முன்னால் அக்டோபர் மாதத்தில் கேவல்சிங் அவர்கள் நம்முடைய முதலமைச்சரோடு பேசியிருக்கும்போது, இந்தப் பிரச்சினைப் பற்றியும் விவாதிப்பார்கள்; கச்சத் தீவை எடுத்துக் கொடுக்கப் போகிறார்கள் என்பது சூசகமாக, ஜாடை மாடையாக முதலமைச்சருக்குத் தெரிந்திருக்கும். அந்த நேரத்தில் முதலமைச்சர் இன்றைக்கு இந்த மன்றத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதைப்போல ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கலாம். அல்லது நேரடியாகத் தெரிவிக்காவிட்டாலும்—ஏனென்றால், அதிகாரப் பூர்வமாகத் தெரியாது என்று சொல்லலாம்—மறைமுகமாகவாவது எதிர்க்கட்சிக்காரர்களைக் கூப்பிட்டு, இப்படி ஒரு அநீதி நடக்க இருக்கிறது: அதைக் கண்டிக்க வேண்டும்: அதற்கு அனைவரும் ஒன்றுசேர வேண்டும் என்று ஜாடைமாடையாகத் தெரிவித்திருந்தால் தமிழ் நாட்டு மக்கள் கட்சி வேறுபாடின்றி ஒன்று சேர்ந்திருக்கக்கூடும். இன்றைக்கு அந்த நிலை இல்லாமல் போய் விட்டது. காரணம் இது இன்றைக்கு முடிந்துபோன கதை; ஆகவே இதில் பங்கு கொள்ளவில்லை என்று கூறமுடியும்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்போது கச்சத் தீவை அவர்களுக்கு கொடுத்தாலும் நஷ்டம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் உண்மை நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தமான் நிக்கோபார் தீவு நேவல் பேசாக இந்திய அரசுக்கு இருக்கிறது. அதேபோல் கச்சத் தீவும் நம்மிடம் இருந்தால் இந்திய நாட்டைக் காப்பாற்ற ஒரு நேவல் பேசாக அமைத்துக்கொள்ள முடியும். இதையெல்லாம் நம்முடைய முதலமைச்சரவர்கள் எடுத்துக்கூறி, இதிலே, வெற்றிபெற்றிருக்கலாம்: இதற்கு இந்த நாட்டு மக்களைத் திரட்டி இருக்க முடியும். அந்தச் சக்தி முதலமைச்சருக்கு இல்லையா என்றால் நிச்சயமாக இருக்கிறது.



1974 ஆகஸ்டு 21] [திருமதி சத்தியவாணி முத்து]

இங்கே இப்போது தமிழர் பேரவை என்று ஓர் அமைப்பு இருக்கிறது. தனிப்பட்ட ஒரு சிறிய விஷயத்தைக் கிளப்பி, மொழி வெறியையும் இன வெறியையும் தூண்டி, அதனால் கேரள அரசுக்கும் நம்முடைய அரசுக்கும், கேரள மக்களுக்கும் நமக்கும் இருக்கின்ற சகோதர மனப்பான்மை முறியக்கூடிய அளவுக்கு தமிழர் பேரவை பணியாற்றிக்கொண்டிருக்கிறது. இந்த வேலைக்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய தமிழர் பேரவையை கச்சத் தீவு எதிர்ப்புப் பிரச்சினைக்கு அப்போதே பயன்படுத்தியிருந்தால், இந்த தமிழர் படையை நடத்தியிருந்தால் தவிர்க்க வேண்டிய கட்டத்தில் தவிர்த்திருப்போம். அப்படிச் செய்திருந்தால் "கல்லக்குடி கொண்டான்" என்பதோடு "கச்சத் தீவையும் வென்றான் கருணாநிதிச் சோழன்" என்று நாங்கள் கூட பாராட்டியிருப்போம். ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படி அல்ல. தடுக்க வேண்டிய கட்டத்தில் தடுக்கவில்லை. மக்களைச் சந்தித்து கேட்க வேண்டிய நேரத்தில் கேட்க வில்லை. - கேட்க வேண்டிய நேரத்தில் கேட்டிருந்தால், கேட்டும் இந்தப் பிரச்சினையில் தோற்றுப் போயிருந்தால், பொறுப்புள்ள ஒரு மாநில அரசுக்கு மத்திய அரசு என்ன மதிப்பு கொடுக்கிறது? எனவே மாநில சுயாட்சி தேவை என்று கேட்க வாய்ப்பாக இருக்கும்.

ஏன் அந்த நேரத்தில் எதிர்க் கட்சியினரை அழைக்கவில்லை? ஏன் அந்த நேரத்தில் தமிழர் பேரவையை பயன்படுத்த வில்லை? ஏன் அந்த நேரத்தில் பெரிய ஆபத்து வர இருக்கிறது என்று தமிழ நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தவில்லை? ஏன் அந்த நேரத்தில் முதலமைச்சர் வாளா இருந்துவிட்டார்? ஏன் அந்த நேரத்தில் முதலமைச்சர் மெத்தனப் போக்கிலே இருந்துவிட்டார்? பறி போன பிறகு மத்திய அரசுமீது பழிபோடலாம் என்று இருந்துவிட்டாரா? கச்சத் தீவைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் இந்த மெத்தனப் போக்கு இருக்குமா ?

இந்த நேரத்திலே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருந்தபோது—நானும் நீங்களும் அந்த மூன்றாவது இடத்தில்தான், கோபாலும் மற்றவர்களும் உட்கார்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்திருந்தோம்—என்ன சொன்னார்கள்? ஆளும் கட்சியைப் பார்த்து, மத்திய அரசிடத்தில் நீங்கள் எடுத்துச் சொல்லிப் போராடி, நல்ல காரியங்களைச் செய்ய விரும்பினால், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற எங்களை யுத்தக் களத்திலே முன்னால் நின்று போராடும் (Sappers and Miners) சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ் வீரர்களைப்போல, எங்களை முன்னால் அனுப்பி பயன்படுத்திக்கொள்ளுங்கள், என்று சொன்னார்கள்.

நாங்கள் இங்கே போராட்டத்தை நடத்துகிறோம். எங்கள் மக்கள் கச்சத் தீவை கொடுக்க மறுக்கிறார்கள். அதற்காகப் பெரிய போராட்டத்தையே நடத்துகிறார்கள். நாங்கள் அவர்களை சுட்டு வீழ்த்துகிற நிலை இருக்கிறது. இங்கே இரத்த ஆறு ஓடுகிறது. பிண மலை குவிகிறது,

நரம்புகள் புடைக்க உதைக்கப்படுகிறார்கள்—எனது மக்களைக் காப்பாற்ற—மத்திய அரசே கச்சத் தீவைக் கொடுக்காதீர்கள் என்று முன்பே அவர்களிடம் சொல்வதற்கு எனது அண்ணன் வழியில் ஆட்சி நடத்துவதாகச் சொல்கிற நீங்கள் முன்கூட்டியே எதிர்க்கட்சிக்காரர்களைப் பயன்படுத்திக் கொள்ள முன் வந்திருந்தால் இந்தியப் பிரதமரே சற்று யோசித்திருப்பார்கள். கச்சத் தீவை ஸ்ரீலங்காவுக்குக் கொடுத்திருக்கமாட்டார்கள்.

இன்றைக்கு நான் முதலமைச்சரிடத்தில் வருத்தப்படுவது எல்லாம் அவர்கள் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத் தவறிவிட்டார்கள்—தனி ஒருவர் மீது எடுக்கிற போராட்டத்தை இந்த நாட்டுக்காக அன்றைக்கு எடுத்திருக்கலாம்—தனி ஒரு மனிதர் அல்ல இந்த தமிழ்நாடு—இந்த நாட்டு மக்களையும்—இந்த நாட்டையுமே பொருத்த பெரிய பிரச்னை இந்திய அரசோடு மோதுகின்ற பிரச்னை—ஒப்பந்தம் முடிந்த பிறகு—நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரத்தில்—எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு நாடவேண்டிய நேரத்தில் அதனைச் செய்யாது—இன்றைக்கு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னால்—மற்ற நாடுகள் எல்லாம் குறிப்பாக இலங்கை நாட்டவர்கள் நமது நாட்டு பிரதம மந்திரியைப்பற்றி என்ன நினைப்பார்கள் ? இந்த நாட்டு மக்களிடத்தில் அவர்களுக்குச் செல்வாக்கு இல்லை—ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போட்ட பிறகு இன்றைக்கு அதை யோசிக்கிறது என்கிறபோது நம்முடைய நாட்டுக்கு என்ன மதிப்புஏற்படும்? நம்முடைய இந்தியப் பிரதமருக்கு என்ன மதிப்பு ஏற்படும்? இது இந்தியப் பிரதமருக்கும்—இந்திய நாட்டுக்குமே அவமானத்தைஉண்டாக்குவதாகத்தான் அமையும் என்கிற காரணத்தினால் இதை எங்கள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தட்டிக் கேட்க வேண்டிய நேரத்தில் கேட்காமல், போராட வேண்டிய நேரத்தில் போராடாமல் எதிர்க்கட்சிக்காரர்களை "சாப்பர்ஸ் அண்டு மைனர்ஸ்" ஆக பயன்படுத்திக்கொள்ள வேண்டிய நேரத்திலே பயன் படுத்திக் கொள்ளாமல் குதிரை திருட்டுப்போன பிறகு லாயத்தை இழுத்துப்பூட்டுவதுபோல இன்றைக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவது இருக்கிறது. எனவே இதை எனது கட்சியின் சார்பில் ஆதரிப்பதற்கு இல்லை என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது பலபேர் பேசிய பிறகு நான் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க முடியாது என்று வன்மையாகக் கூறியவர்கள் அதற்குச் சொன்ன காரணங்கள் விநோதமாக இருக்கின்றன.

கச்சத் தீவு சம்பந்தமாக இப்போது ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தம் முடிந்ததாக ஆகிவிட்டது—பாராளுமன்றத்திலும் ராடிபிகேஷன் ஆகிவிட்டது—சிலோன் பார்லிமெண்ட்டிலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று பேசுகிறார்கள். உலகத்தில் எந்த ஒப்பந்தமும் நிரந்தரமானது அல்ல—





சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்துப் பேச வேண்டும்—எத்தனையோ ஒப்பந்தங்கள் உடனேயே கிழித்தெரியப்பட்டிருக்கின்றன—அநீதியான ஒப்பந்தங்கள் இன்றைக்கு கிழித்தெரியப்படாவிட்டாலும் இன்னொரு நாளைக்குக் கிழித்தெரியப்படும்.

அதுபோல் கச்சத் தீவு ஸ்ரீலங்காவுக்குத்தான் சொந்தம் என்றால் அதைக் கொடுப்பது பற்றி ஆட்சேபணை இல்லை—ராமேசுவரம் அவர்களுக்குதான் சொந்தமானது என்றால் அதைக் கொடுத்து விடுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் கச்சத் தீவு பற்றி அவர்களுக்கு எந்த விதமான உரிமையும் கிடையாது என்கிறபோது அதை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது அநீதியானது இதை எதிர்த்துப்பேச நமக்கு உரிமை கிடையாதா என்று கேட்கிறேன். நம்முடைய உரிமையைப் பற்றிக் கேட்பதற்கு எந்த சர்வதேசச் சட்டம் தடையாக இருக்கும்?

நண்பர் மாரிமுத்து அவர்களைத் தான் கேட்கிறேன். இது நம் இடமா? அவர்கள் இடமா? நம் இடமாக இருந்து கொடுக்கப்பட்டது என்றால் அது தப்பு இல்லையா? கச்சத் தீவு தமிழ் நாட்டின் இடம்—தமிழ் நாட்டை ஒட்டியிருக்கக்கூடிய பாகம்—அதைக் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்ததற்கு என்ன காரணம்? பக்கத்து நாட்டின் நட்புறவைப் பெறுவதற்காகக் கொடுத்து உறவாடுவது என்றால் இது அரசியல் விபசாரம் தான்—கொடுத்து உறவு கொள்ளுவது விபசாரம்தான். அது அவர்களுக்குத்தான் சொந்தமானது என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால்—அதை அவர்களிடமே கொடுத்துவிடத் தயார், ஆனால், இங்கே அப்படி இல்லை.

அடுத்தபடியாக இப்போதிருக்கிற அரசியல் நிர்ணயச் சட்டப் பிரகாரமே இதை எல்லா அசெம்பிளிகளும் ராடிபை பண்ணவேண்டும் என்று கருதுகிறேன். இது எல்லா அசெம்பிளிகளுக்கும் வந்தாகவேண்டும். 3-இல் 2 பங்கினர் இதை ஆதரிக்கவில்லை என்றால் இதை ஒத்துக்கொள்ள முடியாததாகச் செய்ய வேண்டும். அப்படி ஏதாவது வகை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். இந்த ஒப்பந்தம் மிக அநீதியானது—நியாயத்திற்கு விரோதமானது—இப்படி இந்த நாட்டின் நிலப்பரப்பை கொடுத்து நட்புறவு கொள்வது என்றால்—இந்தக் கொள்கை எங்கே கொண்டுபோய் விடுமோ தெரியாது—ஹிட்லர் கொடுத்து நட்புறவு கொள்ள முயன்றதன் விளைவுகளை நாம் அறிவோம். நம்முடைய உரிமையைக் கொடுப்பது என்கிற தவறான கொள்கைக்கு இது ஒரு ஆரம்பம்—அங்கே ஒன்றும் விளையவில்லை என்றாலும்—அது ஒரு தீவுதான் என்றாலும்—நம்முடைய நிலத்தை எந்தக் காரணத்திற்காகவும் நாம் கொடுக்க முடியாது.

இந்தக் கச்சத்தீவு தங்களுக்குச் சொந்தம் என்று இலங்கைக்காரர்கள் ஏதாவது கிளர்ச்சி செய்திருக்கிறார்களா ? அந்த மாதிரி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு வந்த நேரம் இது பற்றி பேசி அவர்களே இந்த ஒப்பந்தப்படி அதை விட்டுக்கொடுப்பது என்பது ஜனநாயக அமைப்பில் நாம் ஒத்துக்கொள்ளத்தக்கதாக இல்லை

இதில் எத்தனையோ மர்மங்கள் உள்ளடங்கிக் கிடக்கும் என்று கருதுகிறேன். சீனாவுக்கும் சிலோனுக்கும் உள்ள உறவுத் தன்மை—சீனாவுக்கும் நமக்குமுள்ள உறவுத் தன்மை—ருஷியாவுக்கும் சிலோனுக்கும் உள்ள உறவுத் தன்மை—நமக்கும் ருஷியாவுக்கும் உள்ள உறவுத் தன்மை—இப்படி எத்தனையோ இரகசியங்கள் உள்ளடங்கியிருக்கலாம். அகில இந்திய ரீதியில் செயல்படும் கட்சிகள் இதை ஆதரிக்கின்றன என்பதற்காக—நியாயமற்ற ஒரு ஒப்பந்தத்தை ஏற்க முடியாது. வாருக்குப் பிறகு ஜெர்மன் ஆர்க்கைவ்லை திறந்தபோது சேம்பர்லின் என்ன சொன்னார்? லாவாஸ் என்ன சொன்னார்? ஹிட்லர் எங்கே போனார் என்கிற எத்தனையோ இரகசியங்கள்—நாஜி சர்க்காருடைய தஸ்தாவேஜிகளில் இருந்து வெளியாயின. அயல்நாட்டிலாகா இரகசிய தஸ்தாவேஜிகள் யாருக்கும் தெரியாது. இதிலும் பல இரகசியங்கள் இருக்கலாம்.

ஜனநாயகத்திலே ஒன்றைக் கொடுத்து உறவு கொள்வது என்பது சரியல்ல—அதுவும் இந்த பூஷ்வா ஜனநாயகத்திலே, இந்திரா காந்தி அம்மையார் என்ன சாஸ்வதமாக இந்தியப் பிரதமராக இருக்கப் போகிறாரா? அடுத்து யார் வேண்டுமானாலும் வரலாம். ஜனசங்கத்தைச் சேர்ந்தவர் பிரதமராக வரலாம். ஆட்சிகள் மாறிக்கொண்டிருக்கும். சிலோனில் ஸ்ரீமாவோவே பிரதமராக இருந்துகொண்டுதான் இருக்கப் போகிறாரா? இதை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு பார்த்தால் இந்த ஒப்பந்தம்—நீதியின் அடிப்படையில் இருந்தால் சரியானது—இல்லையென்று சொன்னால் ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் இது தெரியப்படும். இதனால் பலவிதமான சிக்கல்கள்தான் உண்டாகும்.

நட்புரிமை வேண்டும் என்பதற்காக இந்த ஒப்பந்தத்தைச் செய்துக் கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். இந்த ஒப்பந்த அடிப்படையில் நட்புரிமை குலையும் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். சிலோனுக்கும் நமக்கும் இடையில் ஒரு பெரிய கடற்கரை இருக்கிறது. நம்முடைய கடற்கரை பெரிய கடற்கரை. தற்பொழுது ஸ்மக்லிங் பெரிய அளவுக்கு இருப்பதை பல அங்கத்தினர்கள் மறந்து விடுகிறார்கள். தஞ்சையிலே, கீழக்கரை பூராவும் கடத்தல் பரவியுள்ளது. கோடிக்கணக்கான மதிப்புள்ள தங்கம் கடத்தப்படுகிறது. அதற்குக் கச்சத் தீவு ஒரு அடைக்கலஸ்தலம். நாம், கள்ளக் கடத்தலைப் பிடிக்க இங்கே தூரத்தினால் அங்கே போய் உட்கார்ந்து கொண்டார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறார்கள். இந்தக் கச்சத்தீவைக் கொடுத்ததனால், நிச்சயமாக தஞ்சாவூர் பொருளாதாரம், தமிழ் நாட்டினுடைய பொருளாதாரம், பாதிக்கக் கூடிய அளவுக்கு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகுபேரவைத் தலைவர்-தலைமை

இது நியாயத்தின் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல, சட்ட அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல, தினசரி ஒரு பிரதேசத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றால் அர்த்தம் அல்ல. நம்முடைய



நாட்டின் நன்மையை நம்பி, பிற நாட்டினுடைய வம்புக்குப் போகாமல் அவர்களுடைய மண்ணுக்கு ஆசைப்படாமல் இருக்க வேண்டும். இப்பொழுது இருப்பது பேடித்தனமான கொள்கை, பேடிக் கொள்கையாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

இந்தத் தீர்மானமே செயலற்ற தீர்மானம். இதிலே, கண்டிக்கத் தக்கது என்று கூறப்பட்டிருந்தால், நான் ஆதரித்திருப்பேன். ஆனால், அது இல்லாததால், இதை நான் எதிர்க்கிறேன். இந்தத் தீர்மானத்திலே உப்பில்லை, சப்பில்லை. கண்டிக்கிறேன் என்று ஏன் சொல்லக் கூடாது. பின்னால் சரித்திரம் தீர்ப்பு கொடுக்கட்டும் என்று போட்டிருக்கலாமே. இது ஆதரிக்கத்தக்கத் தீர்மானமல்ல. இன்றைக்கு இருக்கிற நிலைமையில் நான் ஆதரிக்கத் தயாராயில்லை என்று தெரிவித்து அமர்கிறேன்.

<u>திரு. ஏ. ஆர். பெருமாள்:</u> பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த மாமன்றத்திலே முதலமைச்சரால் கொண்டு வரப்பட்டிருக்கும் கச்சத் தீவு பற்றிய தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பிலே ஆதரித்துப் பேச விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே பெரியவர் மணலி அவர்கள் குறை கண்டார்கள். இது கண்டனத் தீர்மானமாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சர் ஸ்தானத்திலேயிருந்து இந்த அளவோடுதான் அவர் போக முடியும். அதற்கு மேலே நாம்தான் போக முடியும். நம்மைப் போல் எதிர்க் கட்சிக்காரர்கள், ஆளுங்கட்சியிலே இல்லாதவர்கள்தான் போக வேண்டும். ஆட்சியினது கருத்தை எந்த அளவிலே பிரதிபலிக்க முடியுமோ அந்த அளவிலே தீர்மானம் வந்திருக்கிறது.

இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் கச்சத் தீவு எங்கோ, யாருக்கோ சொந்தமானதாக இருந்ததைப் போலவும் அந்தக் கச்சத் தீவு இருப்பது யாருக்குமே தெரியாததைப்போலவும், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததுபோலவும், வாஸ்கோடகாமா இந்தியாவைக் கண்டுபிடித்ததைப் போலவும் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் கச்சத் தீவைப் பற்றி தெரியாது என்று நினைக்கிறேன். மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் என்னோடு வந்தால் கச்சத் தீவைக் காட்டுகிறேன். அதைச் சுற்றியுள்ள 12 தீவுகள் ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படுவதற்கு முன்னாலே, இராமநாதபுரம் இராஜா பின்பிடி குத்தகை உரிமை வாங்கிய இடமாகும். அதனைக் காட்டுகிறேன். கச்சத் தீவும், அந்த 12 தீவுகளும் எப்படி எப்படி எந்த எந்தப் பகுதியிலே இருக்கிறது என்று காட்டுகிறேன். சுற்றிப் பார்த்துவிட்டுப் பேச வேண்டும். இங்கே உட்கார்ந்து கொண்டு, பார்லிமெண்டிலே பிரதமர் பேசியதைப் பார்த்து, பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு, அந்த ஆதாரங்களை இங்கே வைத்தால் சரியாகத் தெரியாது. நேராகப் போய்ப் பார்த்தால், எவ்வளவு இராஜதந்திரமான அந்தக் காரியத்தை நம்முடைய நாட்டை ஏமாற்றி இலங்கை சர்க்கார் பெற்றிருக்கிறது என்பது தெரியவரும்.

[திரு. எ. ஆர். பெருமாள்] [1974 ஆகஸ்டு 21

இப்படித்தான் அன்றைக்கு வட புலத்திலே 40,000 சதுர மைல்களை சீனுவுக்கு விட்டுக் கொடுத்தார் நேரு. அதற்கு என்ன காரணம் சொன்னார் அவர்? அவ்வளவும், மேடு பள்ளங்கள், பாறைகள், உபயோகமில்லாதவை என்றார். அப்படித்தான் இராஜஸ்தானில் 18,000 சதுர மைல்களை விட்டுக் கொடுத்தார்; கேட்டதற்கு அது பாலைவனம், ஒன்றுக்கும் உதவாது என்றார். இப்பொழுது கச்சத் தீவைக் கொடுத்து விட்டு, கேட்டால், கச்சத் தீவு அது சும்மா பாறை, அது சும்மா பாலைவனம், அது சும்மா மைதானம், என்கிறார்கள். சும்மா பாறை, சும்மா பாலைவனம் , சும்மா மைதானம் என்றால் அவனுக்கு எதற்கு என்று கேட்கிறேன். வெறும் பாறை இலங்கைக்கு எதற்கு? வெறும் பள்ளம் சீனுவுக்கு எதற்கு? வெறும் பாலைவனம்—இராஜஸ்தானில், பாகிஸ்தானுக்கு எதற்கு?

ஆக, ஒவ்வொரு பிராந்தியமாக நாட்டில் ஆட்சிப்பீடம் ஏறிய காலம் தொட்டு, 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதி முதல், நாட்டுக்குச் சொந்தமானதையெல்லாம் விட்டுக் கொடுத்தது எவ்வளவு என்று தெரியுமா? கேட்க ஆள் இல்லையென்ற நினைப்பா? இந்தியாவினுடைய பாதுகாப்பைப் பற்றி சிந்திக்காமலே இருக்கிற காரணத்தினாலே, வட புலத்திலே சீனுவாலே ஆபத்து; இராஜஸ்தானிலே ஒரு பகுதியைக் கொடுத்ததால், பாகிஸ்தானாலே ஆபத்து. காஷ்மீரிலே ஒரு பகுதியைக் கொடுத்து விட்டு, கேட்கவும் முடியவில்லை, எடுக்கவும் முடியவில்லை. அவ்வளவு பாதுகாப்பு பலவீனம் ஏற்பட்டிருக்கிறது நாளைக்கு கச்சத் தீவிலே இராணுவ முகாம் அமைக்கமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் இருக்கிறதா? இங்கே யுத்தம் நடக்கிறபொழுது, அமெரிக்காவினது 7வது கடற்படை இந்து மகா சமுத்திரத்திற்கு விரைந்தது. இப்பொழுது இலங்கையிலே கடற் படை எவ்வளவு பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரியுமா? இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் ஒரு மோதல் வருமானால் அல்லது கருத்து வேற்றுமை வருமானால் அல்லது ராஜ ரீதியாக ஒரு ஆபத்து வருமானால் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இருக்கிறதா? தமிழர்கள் பாதுகாப்புக்கு உத்திரவாதம் இருக்கிறதா?

முடிந்து போயிற்று விட்டு விடுங்கள் என்று சொல்வது ஒரு சாரார். முதலமைச்சர் அதை முன்னாலேயே சொல்லியிருந்தால் இந்தப் பிரச்சினையைத் தடுத்திருக்கலாம் என்று சொல்வது மற்றொரு சாரார். இங்கே சுற்றி, அங்கே சுற்றி, கொடுத்தவர்களை விட்டுவிட்டு, ஒப்பந்தத்தைக் கையெழுத்துப் போட்டவர்களை விட்டுவிட்டு, முன்னாலேயே முதலமைச்சர் ஏன் செய்யவில்லை என்று கேட்கிறார்கள். முதலமைச்சரிடம் யார் கேட்டார்கள். முதலமைச்சரிடம் கச்ச தீவைக் கொடுக்கப் போகிறோம் என்று கேட்டது யார்? பொறுப்புள்ள அந்த இலாகாவை நிர்வகிக்கின்ற அமைச்சர் கேட்டாரா? அல்லது பிரதமர் கேட்டாரா? எங்கேயோ கேவல் சி[illegible] கலந்து பேசியவுடன் முடிந்து விட்டது. இலங்கைக்கு கச்சத் தீவைக் கொடுக்க அதற்குரிய ஆதாரம் இருக்கிறதா?



1974 ஆகஸ்டு 21] [திரு. எ. ஆர். பெருமாள்]

பாராளுமன்றத்திலே இந்திரா காந்தி அம்மையார் என்ன பதில் சொல்கிறார்? நமக்குச் சொந்தமானது என்று நாம் சொல்ல ஆதாரம் இல்லை என்று சொல்கிறார். நான் கேட்கிறேன். இந்த மாமன்றத்தில் நின்று கொண்டு கேட்கிறேன். இலங்கைக்குச் சொந்தமானது என்று கூறுவதற்கு ஆதாரம் இலங்கைக்கு இருக்கிறதா? கிடையாது. நமக்காவது, அவர்களைவிட நிறைய ஆதாரம் இருக்கிறது. நமக்காவது பிராந்தியப் பாதுகாப்பு என்ற வகையில் ஆதாரம் இருக்கிறது. ஆனால், எந்த ஆதாரமும் இல்லாமல், கொடுக்கப்பட்டிருக்கிறது.

அன்றைக்கே எங்கள் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கூறினார்கள். இனிமேல் மூன்றாவது உலக யுத்தம் வருமானால், அது தென் பிராந்தியத்தில்தான் வரும். வடக்கே வராது என்று சொன்னார்கள். அதற்கு அடையாளமாக தென் நாட்டிலிருக்கிற கச்சத் தீவு, இலங்கையோடு சேருமானால், அந்தத் தீவை தங்களது பாதுகாப்பு அரணாக ஆக்க என்ன சதி நடந்திருக்கிறதோ என்ற சந்தேகத்திற்கு இடமேற்படுகிறது. ஆகவே, மிகத் தீவிரமாக இருக்க வேண்டும்.

இந்தத் தீர்மானத்தை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால், இந்தக் கச்ச தீவு பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பிக்கை என்னைப் பொறுத்த அளவிலே கிடையாது. எங்களுடைய கட்சியைப் பொறுத்த அளவிலே கிடையாது. இங்கே இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும் விட்டுவிட்டாலும்கூட, பார்வார்ட் பிளாக் கட்சியைப் பொறுத்த வரையிலும், முன்னேற்றக் கட்சியைப் பொறுத்த வரையிலும் இந்தக் கச்ச தீவுப் பிரச்சினையை விடப்போவதில்லை. காரணம் இந்தக் கச்ச தீவு எதிர் காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சத் தீவாக போய்விடும். எனவே, கச்சத் தீவை எந்தக் காரணம் கொண்டும் விடக்கூடாது. இங்கே நாங்களும் கழகத்தினரும் எதற்கும் தயாராயிருக்கிறோம் என்று கூறி, தீர்மானத்தை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஓரிரு கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க முற்படுகிறேன்.

அனைத்துக் கட்சியினரும் கூடி முடிவெடுத்து விட்டதை முழுமையாக ஏற்றுக் கொண்டு இந்தத் தீர்மானமானது இந்த மன்றத்திலே விவாதத்திற்கு வந்திருக்கிறது. முதன் முதலிலே இதிலே ஒரு சில சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்று பலரும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்த அளவிலே, இதிலே எந்தவிதமான சட்டச் சிக்கலும் ஏற்படாது என்ற கருத்தினை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கச்சத் தீவு வெற்றிடமாக இருக்கிறது, பாறையாக இருக்கிறது, மணல் மேடாக இருக்கிறது, சிறு பகுதியாக இருக்கிறது என்று கிண்டலாகவோ, கேலியாகவோ பேசுவதற்கு பலரும் முற்பட்டிருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே இது தேசியப் பிரச்னை என்ற முறையிலே தேசியக் கண்ணோட்டத்தோடு அணுகப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லையென்று தெளிவாகப் புலனாகும். இது மாதிரி முக்கியமான பிரச்னையிலே மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. சட்டத்திலே வழிவகைகள் இருக்கின்றன என்று அவர்கள் நினைத்தாலும் பாராளுமன்றத்—தினைக் கலந்து இந்த முடிவினை எடுத்திருக்க வேண்டும்.

(பிற்பகல் 1-30)

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களையாவது தனித்தனியாக அழைத்து இம்மாதிரி பிரச்னை இருக்கிறது, பேச்சுவார்த்தைகள் நடக்கப் போகின்றன என்று கலந்திருந்தால் ஒருவேளை நமக்கு அந்த அளவிலாவது மனநிறைவு ஏற்பட்டிருக்க முடியும். அதுகூட பூரணமான மனநிறைவு என்று நினைக்கவில்லை. இம்மாதிரி ஒப்பந்தங்களைப் பேசி முடித்துவிட்டு, கடைசியாக முடிவு இப்படி இருக்கிறது, அதை ஏற்றுக்கொள்ளுங்கள், ஒப்புக்கொள்ளுங்கள் என்று மத்திய ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு அதிகப் பெரும்பான்மை இருப்பதால் எதிர்க்கட்சிகளை மதிப்பதற்கோ அல்லது எதிர்க்கட்சிகளோடு கலந்து உரையாடுவதற்கோ போதிய அவகாசமோ அல்லது மனமோ இல்லை என்று கருதுகிறேன்.

இதைச் சர்வதேச கோர்ட்டுக்கு விட்டு, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இதை அணுகக் கூடாதா என்ற கருத்து இங்கே கூறப்பட்டது. சர்வதேச சட்டமாவது எந்த முறையில் இருக்கிறது என்பதுபற்றி பெரிய வல்லுநர்கள், நிபுணர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சாலமன் என்ற ஜூரிஸ்ட் அவர்கள் சர்வதேச சட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். International law is vanishing point of jurisprudence என்ற கருத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏனென்றால் திட்டவட்டமாக, தெளிவாக சர்வதேச சட்டம், இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லுமளவில் அதற்குப் பூரண வடிவம் இல்லை என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. It is nebulous என்றால் அது மிகையானதல்ல. அம்மாதிரி உள்ள சட்டத்தின் அடிப்படையில் அதை அணுகி நமக்குத் தீர்வு காண முடியுமென்று நினைப்பது பொருத்தமல்ல என்றே நான் கருதுகிறேன்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் இது இராமநாதபுரம் இராஜாவிற்குச் சொந்தமான தீவாக இருந்திருக்கிறது. அதைக் கச்சத் தீவு என்றும், வல்லித் தீவு என்றும் அழைக்கிறார்கள் என்ற தகவல்கள் எங்களுக்குத் தந்திருக்கின்ற ஒரு புத்தகத்திலே பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. மூக்கையா தேவர் அவர்கள் ஒரு சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள். எல்லாப் பக்கங்களையும் படித்து முடித்தால் அதில் பல



பிரச்னைகள் இருப்பது தெரிகிறது. இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள மக்களெல்லாம் இதை அவர்களுடைய உணர்வுகளை மதிக்கவில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தொன்றுதொட்டு அவர்கள் உரிமை பாராட்டுகின்ற அந்தப் பகுதியை இந்தியப் பேரரசு இலங்கைக்கு விட்டுக் கொடுத்திருக்கிறது என்ற உணர்வு அந்தப் பகுதி மக்கள் எல்லோருக்கும் இருக்கிறது. அவர்கள் பல தீர்மானங்களையும், ஏன், கடிதங்களையும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இது முடிந்த முடிவு என்று பலரும் கூறினாலும் அந்த முடிவைப் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்பதுதான் தீர்மான வடிவமாக வந்திருக்கிறது. இது மத்திய சர்க்காரைக் குற்றம் சாட்டுகின்ற தீர்மானம் அல்ல என்பதை நாம் உணர்வோம். இதில் குறை இருந்தால், குற்றம் இருந்தால் அதைத் திருத்திக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கூறுகிறேன்.

அதுமட்டுமல்ல, நாட்டின் எல்லைக்கோடுகளெல்லாம் நிரந்தரமானது அல்ல என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். "மேக்னைட் லைன்", "பர்லின்வால்" பற்றிப் படித்திருக்கிறோம். ஏதோ எல்லைக்கோடு இருக்கிறது, சர்வதேச எல்லைக்கோடு இருக்கிறது, இதைத் திருத்தியமைக்க உரிமையில்லை, அவகாசம் இல்லை என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல. இன்னும் நமது எல்லைக்கோடு, அதிலும் குறிப்பாக கடலோர எல்லை 12 இருக்க வேண்டுமா அல்லது 18 இருக்க வேண்டுமா, லிட்டரலாக பகுதி எப்படி இருக்க வேண்டுமென்ற சட்டப் பிரச்னைகள் குறித்து நமது சட்ட ஆலோசகர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இம்மாதிரி பிரச்னையில் இன்னொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே இம்மாதிரி முடிவுகளை எடுக்கும் நேரத்திலே நமது முதல்வர் அவர்களையாவது அல்லது பிரதம காரியதரிசி அவர்களையாவது கேட்டிருக்கலாம். ஒருவேளை மன்றத்திலே உள்ளவர்களைக் கேட்காமல் இருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள் அவர்களையாவது கேட்பதற்கு என்ன சங்கடம் ஏற்பட்டிருக்குமென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்பாட்டிலே அங்கே மீன்பிடிக்க உரிமை உண்டு, உலோகப் பொருள்களை எடுக்க உரிமையிருக்கிறது, பண்டிகைகளில் செல்ல உரிமை இருக்கிறது, ஆகவே, இந்த ஒப்பந்தத்தில் எந்தத் தவறும் இல்லை என்று வாதிடுவது பொருத்தமுடையது அல்ல. அங்கே அந்தோணியார் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில் இராமநாதபுரம் மாவட்டத்து கிறிஸ்தவக் குடும்பங்கள் செல்வதற்கு உரிமை இருக்கிறது, செல்வதற்குப் பாதுகாப்பு இருக்க முடியும் என்று நினைத்தார்கள். ஆனால் அண்மையிலே போலீசார் அந்தப் பண்டிகைக்குச் சென்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது இந்த ஒப்பந்தத்தினால். அதேபோல் ஆகஸ்ட் 15-ஆம் தேதி சோஷலிஸ்ட் கட்சியின்

சார்பில் அந்தக் கச்சத் தீவில் கொடியேற்ற ஒரு கோஷ்டியினர் புறப்பட வேண்டுமென்று தீர்மானம் போட்டு புறப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்களைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தமான நிலை ஏற்பட்டது. இப்படி இக்கட்டான நிலைமை இருக்கிறது. இதை நடுநிலைமையோடு சிந்திக்க வேண்டும். குற்றங்குறை காண வேண்டும் என்பதோ அரசாங்கத்தைப் பழித்துச் சொல்லவேண்டுமென்ற எண்ணமோ இருக்க கூடாது. மத்திய அரசாங்கமானாலும் சரி, மாநில அரசாங்கம் ஆனாலும் சரி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் என்பதை உணர்ந்து அவர்களுக்கிடையே கருத்துக்களை நல்லமுறையில் பறிமாறிக்கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

அடுத்தபடியாக, அரசியலமைப்புச் சட்டத்திலே 3-வது ஷரத்தில் புதிதாக எல்லைகளை மாற்றியமைக்கவோ, திருத்தவோ உரிமை கொடுத்திருக்கிறது. அதற்காக இது அந்த ஷரத்தின் கீழே வருகிறது என்று நான் வாதாடவில்லை. ஆனால் இது நமது இராஜ்யத்தின் ஒரு பகுதி என்று இருந்தால் அந்த ஷரத்து நிச்சயமாக நமது இந்தச் சட்டமன்றத்திலே விவாதிப்பது பொருத்தமாக இருக்கும். இல்லையென்றால் அந்த ஷரத்து நமக்கு வராது என்று கருதுகிறேன். இந்த நேரத்திலே அந்தப் பகுதியை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன்.

'Provided that no Bill for the purpose shall be introduced in either House of Parliament except on the recommendation of the President and unless, where the proposal contained in the Bill affects the area, boundaries or name of any of the States ***, the Bill has been referred by the President of the Legislature of that State for expressing its views thereon within such period as may be specified in the reference or within such further period as the President may allow and the period so specified or allowed has expired.

இந்த ஷரத்தைப் பார்க்கும்பொழுது ஒரு இராஜ்யத்தின் எல்லைக்கோடு மாற்றியமைக்கப்படும்பொழுதோ அல்லது புதிதாக அமைக்கப்படும் பொழுதோ நிச்சயமாக இந்த மன்றத்தைக் கலந்துகொள்ள வேண்டுமென்ற பிரிவு இருக்கிறது. ஆனால் நேர்மாறாக இது நமது பகுதி அல்ல என்ற வாதத்தின் அடிப்படையில், நம்மைக் கேட்கவில்லை என்ற அடிப்படையில் மத்திய அரசு கருத்து தெரிவித்திருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

இந்த ஷரத்தைப் பொறுத்தவரையில் அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தமாக வராது என்று கீழ் பகுதியிலே கூறியிருக்கிறார்கள். ஆனால் முக்கியமான பிரச்னை என்னவென்றால், இது தமிழகத்தின் பிரச்னை, இந்தியாவின் பிரச்னை என்ற முறையில் அணுக வேண்டும். இதை ஒரு மாவட்ட பிரச்னை என்று இல்லாமல் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண மத்திய சர்க்கார் நம்முடைய உணர்வுகளை மதித்து, தமிழர்களின் உணர்வுகளை மதித்து, புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்கிறோம்.



திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்கிறோம். எத்தனையோ முறை பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே பல பிரச்னைகளைத் திருத்தியமைத்திருக்கிறார்கள். அதே மனப்பான்மையோடு இப்பொழுதும் இதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்து விடை பெறுகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, கச்சத் தீவு பற்றி இந்த மாமன்றத்தில் நான் முன்மொழிந்துள்ள தீர்மானத்தைப் பெரும்பாலோர் வழிமொழிந்தும், சிலர் எதிர்த்தும், சிலர் அரசின்மீது பழிபொழிந்தும் தங்களுடைய கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள்.

தீர்மானத்தினுடைய வாசகத்தைப் பொறுத்தமட்டில் இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற எல்லாக் கட்சிகளிலேயும் இருக்கின்றவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நான் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கச்சத்தீவு பிரச்னையை முடிந்து விட்ட பிரச்னையாகக் கருதாமல், ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்கின்ற முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதில் தமிழ் நாட்டு மக்கள் யாருக்கும் அல்லது அந்த மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கின்ற எந்தக் கட்சிகளுக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதற்கு எந்த வகையான நியாயமும் இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய தமிழ்நாட்டு அரசியலில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற வருந்தத்தக்க ஒரு சூழ்நிலை என்னவென்றால், மாநில அரசின் சார்பிலேயோ அல்லது முதலமைச்சரோ மற்ற அமைச்சர்களோ சொல்லுகின்ற வாதத்திற்கு மேலாக, மத்திய அரசின் சார்பிலே சொல்லப்படும் வாதங்கள்தான் உயர்ந்தவை அல்லது மத்திய அமைச்சர்கள் சொல்லும் கூற்றுக்கள்தான் நியாயமானவை, அவைகள்தான் உண்மையானவை என்ற ஒரு வருந்தத்தக்க, துரதிருஷ்டவசமான சூழ்நிலை நம்முடைய தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழக அரசை இதுபோன்ற பெரிய பிரச்சினைகளில் மத்திய அரசு தன்னுடைய ஒப்புதலைக் கேட்கவில்லை; ஆக்கபூர்வமான முறையில் பிரதமர்-முதலமைச்சர் இதுபற்றி ஆலோசனை நடத்துவதற்கு வாய்ப்புக் கூறுகள் வழங்கப்படவில்லை என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அனைத்துக் கட்சியினுடைய தலைவர்கள் அடங்கிய கூட்டத்திலேகூட, எத்தனை முறை இதுபற்றிப் பிரதமரிடத்தில் தமிழக அரசின் சார்பிலே ஒரு முறையீடாக இந்த அரசு கச்சத்தீவுப் பிரச்சினையில் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று வலியுறுத்தியது, பிரதமருக்குத் தமிழக அரசின் சார்பிலே எழுதப்பட்ட கடிதத்திலே எவ்வளவு ஏராளமான ஆதாரங்களை—கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கு—இந்தியாவுக்குத்தான் சொந்தம் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆதாரங்களை வழங்கியது, அதைப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது என்பதையும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

ஆனாலும் இவைகளுக்கெல்லாம் மாறாக டில்லி மாநிலங்கள் "அவையில் மத்திய வெளிநாட்டு உறவு அமைச்சர் அவர்கள்" நாங்கள் மாநில அரசைக் கலந்து கொண்டோம்" என்று சொன்ன ஒரே ஒரு வாசகத்தை மட்டும் வைத்துக்கொண்டு, கச்சத்தீவை மறந்து விட்டு, மாநில அரசு மீது பழி சுமத்துவதை நோக்கமாகக் கொள்வது கச்சத் தீவுப் பிரச்சினையில் நாம் கொண்டிருக்கும் உறுதிக்கு ஊனம் விளைவித்ததாக ஆகிவிடும் என்பதற்காகத்தான், என்னைத் தாக்குவதானாலும், என்னுடைய தலைமையில் இருக்கும் கழகத்தைத் தாக்குவதானாலும் அதை வேறு நேரங்களில் வைத்துக் கொண்டு—அல்லது இன்னும் வேகமாகக் கேட்டிருக்க வேண்டும்; இன்னும் வேகமாகப் போராடியிருக்கவேண்டுமென்று இந்த மன்றத்திலே சொன்னாலும், வெளியிலே சொன்னாலும் அதைக் கூட இந்தப் பிரச்சினையிலே நீங்கள் காட்டுகின்ற உறுதிக்கு அடையாளமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து தமிழ் நாட்டு மக்கள் சார்பாகக் கச்சத்தீவை மறந்து விடாமல், அந்தப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்தியில் இருப்பவர்கள் சொல்வதுதான் வேதவாக்கு; மாநில அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர் சொல்லுகிற வார்த்தைகள் எல்லாம் மதிப்புக் குறைவானவை, மலிவானவை என்ற எண்ணம் நமக்கு வருமானால் அது மத்திய மாநில உறவுகளுக்கும் நல்லது அல்ல; மாநில உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும், மாநில சுயாட்சி வடிவத்திலே அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற குறிக்கோளின் அடிப்படையில் கூட பொருந்தாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசோடு கலந்து கொண்டோம் என்று ஸ்வரண்சிங் சொன்னதும் மாநிலங்களவையில் ஒரு உறுப்பினர் எழுந்து கேட்டிருக்கிறார் நீங்கள் கலந்துக் கொண்டீர்கள், தமிழக அரசு சம்மதித்ததா ?'—என்று. 'கலந்து கொண்டோமா இல்லையா என்பதுதான் பிரச்சினை' சம்மதத்தை பெற்றோமா என்பது பிரச்சினை அல்ல என்று கேள்விக்குப் பதிலை மிகத் தந்திரமாகச் சொன்னார். இதை நான் நண்பர் அருணா பேசிய நேரத்திலும் குறிப்பிட்டுச் சொன்னேன்.

இன்னொரு அமைச்சர்—பெயர் மறந்து விட்டது— டில்லியில் பாராளு மன்றத்திலோ மாநிலங்களவையிலோ பேசுகிறார். "கச்சத்தீவுப் பிரச்சினையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று எந்தவிதமான தகவலும் இந்திய அரசுக்கு வரவே இல்லை" என்ற தகவலைக் கொடுத்தார். உடனே இங் இருக்கும் பத்திரிகைகள் எல்லாம் அதை என்மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டாக எடுத்துக் கொண்டார்களே அல்லாமல் உண்மை என்ன என்பதை அறிய அவர்கள் நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்கள் சொன்னால் அது வேதவாக்கு, நாம் சொன்னால் அது மலிவானது என்ற எண்ணத்தை நாம் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சி



அல்ல—ஒவ்வொரு மாநிலத்திலும் வேறு எந்த ஆட்சி வருகிற நேரத்திலும் அது நல்லதாக அமையாது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கடந்த ஜூன் மாதம் 29-ம் தேதியன்று நம்முடைய கோட்டையிலே கூடி எடுத்த முடிவினை உடனடியாக நான் தலைமையமைச்சருக்கு எழுதியிருக்கிறேன். 29 ஜூன் 1974 "டியர் பிரைம் மினிஸ்டர்" என்று துவங்கி

Dear Prime Minister,

On behalf of the Government of Tamil Nadu and on behalf of the people of Tamil Nadu, I am constrained to express our deep sense of disappointment over the recent Indo-Srilanka agreement, according to which, Sri Lanka's claim to Kachativu has been conceded by the Government of India. I convened an All Party meeting today consisting of my cabinet colleagues and leaders of all the opposition Parties to discuss the Indo-Srilanka agreement.

After discussion, all the Leaders of Political parties in Tamil Nadu, and all the Cabinet members unanimously passed a Resolution which is enclosed. May I express the hope that you will take into consideration the unanimous decision contained in the Resolution and take appropriate action ?

என்று நான் எழுதியிருக்கிறேன்.

முதலமைச்சர் என்ற முறையில் இங்கே கூட்டப்பட்ட சர்வ கட்சிக் கூட்டத் தீர்மானங்களை இணைத்து அத்தனை பேர்கள் கையெழுத்தும் அடங்கிய தீர்மானத்தை பிரதமருக்கு அனுப்பியிருக்கிறேன்.

ஆனால் டில்லியில் பதில் சொல்லுகின்ற அமைச்சர் இந்திய அரசுக்குத் தமிழக அரசு சார்பில் எந்தவிதமான தகவலும் வரவில்லை என்று கூறுவது இங்கே மாநில அரசை எதிரியாக எண்ணுகிறவர்களுக்கு இனிப்பான செய்தியாக இருக்கிறது. நான் ஆதாரங்களோடு தருகிறேன், புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகள் அவ்வளவையும் அவர்கள் இன்று நம்பத் தயாராக இல்லை என்பதை எண்ணும்போதுதான் மாநில அரசுகள் மாநில மக்களாலேயே மதிப்புக் குறைவாக எண்ணப் படுகின்றன என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்டு 21

நம்முடைய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் பேசிய பழனிசாமி அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய மாரிமுத்து அவர்களும் நம்முடைய அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்களும் "எல்லாம் முடிந்து போன விவகாரம் ஆகவே விட்டு விடலாம்" என்று சொன்னார், கள். சத்தியவாணிமுத்து அவர்கள் "முடிந்து போன விவகாரம், விட்டு விடலாம்" என்று சொன்னாலும் கச்சத் தீவுப் பிரச்சினையில் இருக்கும் நியாய வாதங்களைஎடுத்துச் சொன்னார்கள். திரு பழனிசாமி அவர்களும், நண்பர் மாரிமுத்து அவர்களும், இலங்கையின் பக்கம் இருந்து வாதிட்டு இது அவர்களுக்கு இருக்க வேண்டியதுதான் என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு வேகமாகச் செயல்படவில்லை என்று குற்றம் சாட்டிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கச்சத் தீவு இலங்கைக்குச் சொந்தம் என்று வாதிடவில்லை. ஆகவே, இவைகளை எல்லாம் மனதில் வைத்து பார்க்க வேண்டும்.

கம்யூனிஸ்டு கட்சியின் அதிகார பூர்வமான "ஜனசக்தி" பத்திரிகையில் ஒரு தலையங்கம் "கச்சத்தீவு" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறது.

பாராளுமன்றத்திலே எல்லாக் கட்சியினரும்—பழைய காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அங்கிருக்கும் கட்சிகள் அத்தனை பேரும் கச்சத்தீவுப் பிரச்சினையில் வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். ஆனால் "ஜனசக்தி" பத்திரிகை தலையங் கத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால் "வெறும் உணர்ச்சியை மட்டும் வைத்துக் கொண்டு இயங்கும் கட்சிகள், பிற்போக்கு வலதுசாரிக் கட்சிகள் கண்டித்து வெளி நடப்பு செய்தனர்" என்று ஜனசக்தி பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள்.

இதிலே பிற்போக்கு முற்போக்கு என்ற கருத்திற்கே இடமில்லை. கச்சத்தீவு இந்தியாவோடு சேர்ந்ததா இல்லையா என்பதுதான் பிரச்சினை. பெரியவர் மணலி சொன்னது போல் இந்தியாவை முற்போக்குக் கட்சிகள் ஆளலாம் அல்லது பிற்போக்குக் கட்சிகள் ஆளலாம். ஆளுகின்ற கட்சி முற்போக்கா, பிற்போக்கா என்பது பிரச்சினை அல்ல. நமக்கு உரிமையான நிலங்கள், பகுதிகள் காக்கப்படுகின்றனவா இல்லையா என்பதுதான் பிரச்சினை.

ஆனால், கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கு—இந்தியாவுக்குச் சொந்தம் என்று விளக்கி பாராளுமன்றத்தில் வெளிநடப்பு செய்தவர்கள், உணர்ச்சி வயப்பட்ட கட்சிக்காரர்கள் அல்லது பிற்போக்கு சக்தி என்ற அளவுக்கு தலையங்கம் எழுதியிருக்கிறது. அவர்கள், கச்சத் தீவு இலங்கைக்குத் தான் சொந்தம் என்று வலியுறுத்தும் வகையில் அந்தத் தலையங்கத்தில் பல பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. மாரி முத்து அவர்களாவது, முடிந்து போன பிறகு அவர்களுக்கே சொந்தம் என்று ஆக்கிவிட்ட பிறகு விட்டு விடலாம், என்று குறிப்பிட்டார்கள். அதையாவது பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், பண்டாரநாயகா அம்மையாரே கூட காரணங்களை எடுத்துச் சொல்ல முடியாத அளவுக்கு இவர்கள் வாதிட்டிருக்கிறார்கள்—இலங்கைக்கே கச்சத் தீவு சொந்தம் என்று, இப்படி இந்திய கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் வாதிடுவது உள்ள படியே வேதனை தரக்கூடியது.



1974 ஆகஸ்டு 21] [டாக்டர். மு. கருணாநிதி]

இப்போதும் கூட முழுகிப் போகவில்லை. நாம் போட்டிருக்கும் தீர்மானம் "மறு பரிசீலனை செய்யுங்கள்" என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளுவது, மறு பரிசீலனை செய்யுங்கள் என்று இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்கிறோம். நீங்கள் மறு பரிசீலனை செய்யுங்கள் தமிழ்நாட்டு மக்கள் பேரன்பைப் பெற. இல்லையென்றால் திடீரென்று அந்த அம்மையார் மறு பரிசீலனை செய்ய ஒப்புக் கொண்டார்களானால் நீங்களெல்லாம் தமிழக மக்களால்—திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லவில்லை, எந்தக் கட்சியானாலும் மறு பரிசீலனை செய்ய மத்திய அரசு ஒப்புக் கொண்ட பிறகு நீங்கள் எல்லாம் தமிழ் நாட்டு மக்களின் கண்ணோட்டத்தில் வேறு விதமாகப் படுவீர்கள்—எச்சரிக்கையாக இருங்கள். ஒரு வேளை மறு பரிசீ லனை வந்தால் இந்த நேரத்தில் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தோம் என்ற அளவுக்குத் தமிழக அரசின் கரத்தை வலுப்படுத்தும் அளவுக்கு, தமிழக மக்களின் ஏகோபித்த குரலை மத்திய அரசுக்கு வெளிப்படை யாகத் தெரிவிக்கலாம்.

இது மத்திய அரசுக்கு எதிரானது என்று எடுத்துக் கொள்வதற் கில்லை. நாம் குறைப்பட்டுக் கொள்கிறோம்—மத்திய அரசு நம்மைக்கலந்து கொள்ளவில்லை என்று. ஸ்வரண்சிங் ஒரு விருந்தில் சந்தித்தார். கேவல்சிங் சந்தித்தார். இந்தப் பேச்சுக்கள் எப்படி ஆலோசனைகளாக ஆக முடியும்? வெளி நாட்டு இலாகா செகரடரியை அனுப்பி வைத்தார் கள். இரண்டாவது முறையாக வந்தார்; அதிகாரிகளைச் சந்தித்தார். பின்னர் என்னை "கர்டசி கால்—பார்க்க வேண்டுமென்றார்" காபினெட் ரூமில் பார்த்தேன். அகதிகள் பற்றிப் பேசினார். இலங்கை ஒப்பந்தத் தைப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடப்பதாகச் சொன்னார். அழுத்தந் திருத்தமாக அப்போதே சொன்னேன். ஜூன் 27-ம் தேதி திடீரென்று அறிவிப்பு வந்தது. இப்போதும் சொல்கிறேன். இது பற்றி எந்தவிதமான சூசகமான தகவலையும் இந்த அரசுக்கு அறிவிக்கவில்லை. 27-ம் தேதி பத்திரிகையில் பார்த்தவுடன் பதறிப்போய் எல்லாக் கட்சித் தலைவர் களுக்கும் தந்தி கொடுத்தேன். சில பேருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தேன். சில தலைவர்களுக்கு அதிகாரிகளையே அனுப்பினேன். அவர்களுடைய கட்சித் தலைவர் திருச்சி மாநாட்டில் இருந்தார். அவர்கள் கூட்டத்திற்கு வர வேண்டுமென்று சொல்லி அனுப்பினேன்.

அவ்வளவு அக்கறையோடு இந்தக் காரியத்தில் நாங்கள் செயல்பட்டிருக் கிறோமேயல்லாமல் இதில் தமிழக அரசு கச்சத் தீவை இலங்கைக்கு அளிப்பதில் எந்தவிதத்திலும் உடந்தையாக இல்லை என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

நாங்கள் எதிர்க்கிறோம் மத்திய அரசு செய்திருக்கிற ஒப்பந்தத்தை. பெரியவர் மணலி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக்காட்டியதைப் போல் எதையும் முடிந்த முடிவாகக் கருதாமல்— மறுபரிசீலனை என்று போட்டிருப்பதற்குக் காரணமே முடிந்திருப்பதை பரிசீலனை செய்ய, மறுபரிசீலனை என்றிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி

இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், மறு பரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறது. சாதாரண மாகச் சொல்லப்போனால் சிம்லாவில் நடந்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஒரு பெரிய போராட்டமே நடத்தியிருக்கும்போது இவ்வளவு பெரிய பிரச்னையில் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று என் கேட்கக்கூடாது? மறுபரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். இது தமிழ் நாட்டு மக்களுக்கு இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் பெரும் பலனை அளிக்கக்கூடிய ஒன்றாக இருப்பதால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இதை ஏகமன தாக நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

திரு. கோவை செழியன் : இந்தத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்பாக தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். அதாவது கச்சத் தீவு தமிழ்நாட்டுக்குத்தான் சேரவேண்டும் என்பதில் அவர்களுக்கு இருக் கிற ஆர்வத்தைவிட எந்தவிதத்திலும் எங்களுக்குக் குறைந்துவிடவில்லை. இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் அண்ணா திராவிட முன். னேற்றக் கழகத்தினுடைய முடிவு மத்திய அரசு இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பாக மாநில அரசு அதில் அவ்வளவு அக்கறை, தீவிரம் காட்டவில்லை என்ற குற்றச்சாட்டை நாங்கள் சொன்னோம். அந்தக் குற்றச்சாட்டை முதல் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனை யும் இருக்கமுடியாது. மத்திய அரசின்மீது இப்போது குற்றச்சாட்டு சாட்டியிருக்கிறார்கள். மத்திய அரசின் தவறுமட்டுமல்ல—மாநில அரசு தன் கடமையைச் செய்ய தவறிவிட்டது என்பது எங்கள் கட்சியின் வாதம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேதிவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எந்தெந்த நேரத்தில் எந்தெந்த முறையில் நாம் பிரச்னையை அணுகியிருக்கிறோம், எந்தெந்த நேரங்களில் மிகக் கண்டிப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதையும், எழுதப்பட்ட கடிதங்களை தேதிவாரியாக எடுத்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே மாநில அரசைப் பொறுத்தவரையில் தன்னுடைய கடமையைச் செய்யத் தவறவில்லை என்பதைத் கூறிக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாநில அரசின் தவற்றைக் கண்டிக்காமல் மத்திய அரசினுடைய தவறை மட்டும் கண்டிக்கிற இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் செழியன் அவர்களுக்கு இறுதியாக ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். மாநில அரசு இன்னும் வேகமாகச் செயல்பட்டிருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை உங்கள் கட்சிக் கூட்டத்தில் போடுங்கள், நான் வரவேற்கிறேன். ஆனால் இங்கு நாம் எல்லோரும் சேர்ந்து தமிழ் நாட்டினுடைய குரலை மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டும். கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் போடுங்கள் மாநில அரசு இன்னும் வேகமாக செயல்பட்டிருக்க வேண்டும் என்று. ஆனால் இந்தப் பேரவையில் அனைவரின் சார்பாகவும் நம் தமிழக மக்களின் ஏகோபித்த குரலை மத்திய அரசுக்குத் தெரிவிக்க இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.





திரு ஆலடி அருணா : மாநில அரசின் தவறைக் கண்டிக்காமல் மத்திய அரசின் தவறை மட்டும் கண்டித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற இந்தத் தீர்மானம், தன் குற்றத்தை மறைத்து அரசியல் லாப வேட்டையாக ஆளும் கட்சி பயன்படுத்தும் ஒரு கருவியாகும் இந்தத் தவறுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உடந்தையாக இருக்கவில்லை. எனவே நாங்கள் வெளியேறுகிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

"இந்தியாவுக்குச் சொந்தமானதும், தமிழ்நாட்டுக்கு நெருங்கிய உரிமை கள் கொண்டதுமான கச்சத் தீவுப் பிரச்னையில் மத்திய அரசு எடுத்துள்ள முடிவுபற்றி, இந்தப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதோடு, மத்திய அரசு இதனை மறுபரிசீலனை செய்து கச்சத் தீவின் மீது இந்தியாவிற்கு அரசுரிமை இருக்கும் வகையில் இலங்கை அரசுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தைத் திருத்தி அமைக்க முயற்சி எடுத்து, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்க வேண்டு மென்று வலியுறுத்துகிறது."

அரசினர் தனித் தீர்மானம், குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்போர் அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-54 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

**92.** Notifications issued with G.O. Ms. No.283, Public (Elections -IV), dated 28th January 1974 in regard to date of commencement of the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Act, 1973 and amendment to the Rules for maintenance and

repairs of Government Cars allotted to Ministers, Speaker, Legislative Assembly and Chairman, Legislative Council, 1952. (Laid on the table of the House under section 25 (4) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act XX of 1951).]

93. Notification issued with G.O. Ms. No. 310, Co-operation, dated 3rd September 1973, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

*B. Reports'—Notifications and Other Papers.*

64. Errata issued with Memorandum No. 42168/ME/74-1, Rural Development and Local Administration, dated 27th March 1974, to Notification No. II (2)/Rul/1124 (j)/74, published at pages 6 to 11 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 23rd February 1974.

65. Erratum issued with Memorandum No. 23679/ME/74-1, Rural Development and Local Administration, dated the 5th April 1974, to Notification No. II(2)/RUL/877(e)/74, published at pages 3 to 5 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th February 1974.

66. Errata issued with Memorandum No. 39479/ME/74-1, Rural Development and Local Administration, dated 23rd March 1974, to Notification No. II (2)/RUL/283(aak)/74, published at pages 14 to 16 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th January 1974.

@ 67. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 30 of 1974).

@68. The Tamil Nadu Local Authorities' Laws (Amendent) Bill, 1974 (L.A. Bill No. 31 of 1974).

@ 69. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 32 of 1974).



@ 70. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 33 of 1974).

@ 71. The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 34 of 1974).

@ 72. The Tamil Nadu General SalesTax (Second Amendment) Bill, 1974 (L.A. Bill No. 35 of 1974).

@ 73. The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 36 of 1974).

---

@ Despatched to Members on 19th August 1974.

இணைப்பு I.

(253-ம் பக்கத்தில் 202-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.)

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1962–63 .. .. .. .. .. .. | 51·58 |
| 1963–64 .. .. .. .. .. .. | 125·13 |
| 1964–65 .. .. .. .. .. .. | 115·09 |
| 1965–66 .. .. .. .. .. .. | 106·66 |
| 1966–67 .. .. .. .. .. .. | 100·12 |
| 1967–68 .. .. .. .. .. .. | 94·69 |
| 1968–69 .. .. .. .. .. .. | 89·65 |
| 1969–70 .. .. .. .. .. .. | 88·05 |
| 1970–71 .. .. .. .. .. .. | 95·00 |
| 1971–72 .. .. .. .. .. .. | 95·00 |
| 1972–73 .. .. .. .. .. .. | 98·94 |
| 1973–74 .. .. .. .. .. .. | 106·71 |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

வியாழக் கிழமை, 1974 ஆகஸ்ட் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Foreign trained Indian Scientists*

* 228. THIRU G. R. EDMUND : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that the scheme of the Government to attract foreign trained Indian Scientists has failed to invoke interests; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் இரு நிபுணர்கள் இப்பொழுது பணியாற்றி வருகின்றனர். அயல் நாடுகளிலிருந்து தாயகத்திற்கு விடுப்பில் திரும்பும் நிபுணர்கள் ஓராண்டுக் காலம் இங்கு பணியாற்ற வசதி செய்வது தான் இத் திட்டத்தின் நோக்கம். விண்ணப்பித்தவர்களில் பெரும்பாலானோர் நிரந்தரமாகப் பணியில் அமர்த்தப்பட வேண்டுமென்று கூறியதன் காரணமாக அவர்களில் பலரை இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள இயலவில்லை. மேலும் இத்திட்டம் அண்மையில் தான் தொடங்கப்பட்டு இதற்கான அறிவிப்புகள் அயல் நாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் ஆராய்ச்சி நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டு உள்ளன. வரும் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேலும் பல நிபுணர்கள் நியமனம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு உற்சாகமான வரவேற்பு இல்லையென்று கூறுவது பொருந்தாது.

[1974 ஆகஸ்ட் 22

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இத்திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் தனிப்பட்ட முறையில் ஏதாவது செயற்குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அறிவியல் துறை, இன்னும் பல்வேறு துறைகளில் வெளிநாடுகளில் பணியாற்றுகிறவர்கள் இங்கே ஒரு மூன்று திங்கள், ஆறு திங்கள் பணிக்கால ஓய்வுக்கு வருகிறார்கள். அப்படி வருகிறவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கமாகும். அந்த வகையில் 440 கடிதங்கள் உலகத்தினுடைய முக்கியமான மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் தலைவர்களுக்கும், டீன்ஸ் ஆஃப் ஃபெகல்ட்டிகளுக்கும் அனுப்பப்பட்டன. அந்த வகையில் 96 பேர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்தார்கள். அதிலும் பல பேர் தங்களை நிரந்தரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்தார்கள். நாம் ஒதுக்கியிருக்கும் பணம் கிட்டத்தட்ட ஆயிரம் ரூபாய் மாதமொன்றுக்கு ஒருவருக்குத் தருவதற்காக—ஓய்வுக்காக வந்திருப்பவர்களைப் பயன்படுத்திக்கொள்ள இத்தொகை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், அவர்கள் அங்கே வாங்குவது மாதமொன்றுக்கு எண்ணாயிரம் ரூபாய், ஒன்பதாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய். சில பேருக்கு இந்தத் தொகை ஓரளவுக்கு அவ்வளவு பிடித்தமில்லாமலிருக்கிறது. அப்படியிருந்தும், அவர்களில் 34 பேர்களை தேர்வுக் குழுவினர் தேர்ந்தெடுத்தனர் அந்த 34 பேர்களில் ஆறு பேர்களை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று, ஆறு பேர்களையும் நியமிப்பதற்கான உத்தரவு அனுப்பப்பட்டது. அவர்களில் இரண்டு பேர் வந்து சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் நான்கு பேர்கள் சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். முப்பத்துநான்கு பேர்களையும் அடுத்தடுத்து பயன்படுத்திக் கொள்ளும் எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அவர்களுடைய சம்பளம் போதாது என்று சொன்னதன் காரணமாக, இப்பொழுது அசிஸ்டெண்ட் ப்ரொஃபசராக இருப்பார்களானால் அவர்களுக்கு ரூ. 1,200 வீதம் தருகிறோம். பேராசிரியராக இருந்தால் அவர்களுக்கு ரூ. 1,800 வீதம் தருகிறோம். ஓரளவு தொகையை இப்பொழுது நாம் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எந்தெந்த விஞ்ஞானப் பிரிவுகளுக்கு இம்மாதிரி பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் இதுகாறும் என்ன செலவாயிற்று என்று அமைச்சர் அவர்கள் விவரங்களைத் தருவார்களா?



1974 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட 34 பேர்களில் இன்ஜினீரிங் டெக்னாலஜி அண்டு அப்ளைடு சயன்ஸ் பிரிவில் 12 பேர்களும், விவசாயக் கல்விப் பிரிவில் 3 பேர்களும், வெடரினரி எஜுகேஷன் பிரிவில் 2 பேர்களும், மெடிகல் எஜுகேஷன் பிரிவில் 3 பேர்களும், காலேஜியேட் எஜுகேஷன் பிரிவில், அதாவது பிஸிகல் சயன்ஸஸ், சோஷல் சயன்ஸஸ், ஹுமானிடீஸ் ஆகியவைகளில் 8 பேர்களும், மற்றைய துறைகளில் 6 பேர்களும், இப்படி 34 பேர்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த அயல்நாட்டுப் பயிற்சி பெற்ற இந்திய அறிவியல் வல்லுநர்களில் எத்தனை பேர் தமிழர்கள் இருக்கிறார்கள்? அந்தப் பயிற்சி பெற்றவர்கள் இப்போது எங்கெங்கே பணியாற்றுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே யார் யார் தமிழர்கள் என்று கணக்குப் பார்க்க முடியாது. பெரும்பாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். பெயரைப் பார்த்துச் சொல்லலாம் என்றாலும், அதிலே முகர்ஜி, சர்தார்ஜி என்று வருகிறார்கள். அவர்கள் தமிழ் நாட்டில் நிரந்தரமாகக் குடி இருப்பவர்களா அல்லது வெளி மாநிலத்திலிருந்து இங்கே வர விரும்புகிறார்களா என்று அவர்களுடைய விண்ணப்பங்களை பார்த்தால் தான் தெரியும். பெரும்பாலும் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## புதிய கல்லூரிகள்

* 229 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறையில் ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்று திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் 1973 டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1974–75-ம் கல்வியாண்டில் மணப்பாறையில் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசமில்லை.

[1974 ஆகஸ்ட் 22

* 230 வினா—திரு. மா. வெ. நாராயணசாமி : மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் கல்லூரி ஒன்று துவக்கிடக் கோரி திருவொற்றியூர் நகராட்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு விதித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றாத காரணத்தால் திருவொற்றியூரில் கல்லூரி துவக்குவது சாத்தியம் இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இப்போது சாத்தியம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். திருவொற்றியூர் மணலி போன்ற இடங்கள் மிகுந்த தொழிற்சாலைகளை உடைய பகுதி, ஆகையால், மேலும் மக்கள்தொகை அதிகமாகும் காரணமிருப்பதால், வீரைவில் அந்தப் பகுதியில்—திருவொற்றியூரில் ஒரு கல்லூரியைத் துவங்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் கல்லூரியைத் துவங்க அனுமதி வழங்குவதற்கு முன்பு மக்கள் தொகையை மாத்திரம் கணக்கில் கொள்ளாமல், பக்கத்தில் போதுமான அளவுக்குக் கல்லூரிகள் இருந்தால் அங்கே தேவையில்லை என்று கருதுகிறோம். மேலும், ரூ. 5 லட்சம் நிதி திரட்டித் தர வேண்டும், 40 ஏக்கர் நிலம் காட்டவேண்டுமென்று விதி வைத்து இருக்கிறோம். திருவொற்றியூரில் 40 ஏக்கர் நிலம் காட்ட வழியில்லை. கல்லூரியைத் துவங்க தற்காலிகமாக கட்டடங்கள் இருக்கவேண்டும். புதிதாக துவங்கப்பட்டிருக்கும் உயர்நிலைப்பள்ளிக்கே அங்கே கட்டடம் கிடைக்கவில்லை. பக்கத்தில் பொன்னேரியில் ஒரு கல்லூரி இருக்கிறது. வட சென்னையில் டாக்டர் அம்பேத்கார் பெயரில் புதிதாக இப்போது கல்லூரி துவங்கியிருக்கிறோம். இப்படி அந்த இடத்தைச் சுற்றி கல்லூரிகள் போதுமான அளவுக்கு இருக்கிற காரணத்தால் அங்கே துவங்கப்படவில்லை. இந்த ஆண்டு துவங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 5 ஆக இருந்தது. ஆகவே, திருவொற்றியூரில் கல்லூரி அமைய வழியில்லை.



1974 ஆகஸ்ட் 22]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கல்லூரிகள் அமைப்பதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளில் சிலவற்றை சில வட்டாரங்களில் நிறைவேற்ற முடியவில்லை. ஐந்து லட்ச ரூபாய், 40 ஏக்கர் நிலம் என்பது நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது குறிப்பாக, வந்தவாசியில் ஒரு கல்லூரி . . .

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : கேள்வி திருவொற்றியூரில் கல்லூரி பற்றியது. ஜெனரலாகக் கேட்கக்கூடாது.

திரு. கே. எ. வகாப் : அந்த நிபந்தனைகளைப் பற்றி கேட்கிறேன். அந்த 5 லட்ச ரூபாய் என்பதை, பேக் வார்ட் ஏரியாவில் $2\frac{1}{2}$ லட்சம் என்றும், 40 ஏக்கர் நிலம் என்பதை அரசாங்க புறம்போக்கு அல்லது காட்டிலாகா போன்றவற்றில் தர அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 40 ஏக்கர் நிலம் காட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நிலமாகத் தர வேண்டுமென்று சொல்லவில்லை. பெரும்பாலான இடங்களில் அரசாங்க புறம்போக்குகள், காட்டிலாகா, நிலங்களைத் தான் தருகிறார்கள். நிதி, நிலம் மட்டுமல்ல. அங்குள்ள தேவையையும் கருத்தில் கொள்ளவேண்டும். சில இடங்களில் கல்லூரி வேண்டுமென்கிறார்கள். அப்படி ஆரம்பிக்கப்பட்டபின்பு பார்த்தால் சென்ற ஆண்டில் 1,500 இடங்கள் காலியாக இருந்து இருக்கின்றன. ஆகவே, எந்தெந்த இடங்களில் தேவை, எந்தெந்த இடங்களில் நெருக்கடி ஏற்படுகிறது என்று கண்டறிந்து நாம் கல்லூரிகள் துவக்கவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, திருவொற்றியூர் வளர்ந்து வரும் பெருநகரம். எனவே அங்கேயிருக்கும் நகரமன்றப் பிரமுகர்கள் ஒன்றுகூடி சர்க்கார் வைத்து இருக்கும் நிபந்தனைகள் 40 ஏக்கர் நிலம், 5 லட்ச ரூபாய்தர முன்வந்தால் அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, திருவொற்றியூரில் 40 ஏக்கர் நிலம் கிடைப்பது அரிது. அப்படியே 5 லட்சம் ரூபாய் தந்தால் கூட கல்லூரி தேவையா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்கிறேன், காஞ்சீபுரத்தில் பெண்கள் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். அங்கே யொரு பெண்கள் கல்லூரி அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனல், காஞ்சீபுரத்தில் இருக்கிற பெண்கள் சென்னையில் இருக்கும் பெரும்

கல்லூரிகளில் தான் சேர விரும்பி சேருகிறார்கள். அங்கே, பி.ஏ., பி.எஸ்.சி. புகுமுக வகுப்பு ஆகியவற்றில் 100-க்கு மேற்பட்ட இடங்கள் காலியாக இருக்கின்றன. காஞ்சிபுரத்திலிருந்து வருகிறவர்கள் இங்கேவந்து சீட் கேட்கிறபோது, அங்கே காஞ்சிபுரத்திலேயே சேருங்களேன் என்றால் அவர்கள் இங்கே வந்து தான் சேர்கிறேன் என்கிறார்கள். காஞ்சிபுரத்தின் நிலையே இது என்றால், திருவொற்றியூரின் நிலை என்னவாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

*Admission for private students*

*231 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Government have issued any order that students coming after private study would be admitted in recognised schools upto sixth standards; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1974–75 ஆம் கல்வி ஆண்டுமுதல், அங்கீகாரம் பெறாத தனியார் பள்ளிகளில் படித்துவிட்டு, அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் அனுமதி கோரும் மாணவர்கள் 6-ஆம் வகுப்பில் மட்டுமே தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என அரசு ஆணையிட்டுள்ளது. இருப்பினும் 1974–75 ஆம் ஆண்டு மட்டும் மேற்கூறிய பள்ளி மாணவர்கள் 7 அல்லது 8 வகுப்புகளில் அனுமதி கோரினால், அவற்றைப் பரிசீலனை செய்து விதிவிலக்கு வழங்கும் அதிகாரத்தைப் பள்ளிக்கல்வி இயக்குநருக்கு வழங்கியும் அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, இப்படி பிரைவேட் ஸ்டடி அனுமதிப்பதன் காரணமாக, சென்னை நகரத்தில் பாலர் பள்ளி, சிறுவர் பள்ளி என்று அதிகமான அளவுக்குப் பள்ளிகளைத் தனியார் ஆரம்பிக்கிறார்கள். இதன் மூலம் தனியார் தவறான வகையில் பணம் ஈட்டுகிறார்கள். எனவே அதைத் தடுக்கும் வகையில் அந்த பிரைவேட் கல்வியைத் தடுக்க அரசு முன் வருமா? கண்டிப்பாக எல்லோரும் முதல் வகுப்பிலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் தான் சேர வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் தவிர மற்ற பள்ளிகளில் சேர்ந்து படிக்கக்கூடாது என்று முன்பே அரசு உத்தரவிட்டு இருக்கிறது. அதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன. அவற்றைக்குறித்து பெற்றோர்களும், மாணவர்களும் வந்து அரசுக்கு விண்ணப்பித்த காரணத்தால், பிறகு அனுமதி அளித்தோம். பிறகு 8-வது வகுப்பிற்கு மேல் அங்கே படிக்கக் கூடாது என்று திட்டவட்டமாகச் சொன்னோம். ஐந்தாவது வகுப்பிற்குப் பிறகு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் தான் படிக்கவேண்டும், மற்றப் பள்ளிகளில் படித்தால் இனி ஏற்றுக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக இப்போது நாம் தெரிவித்து இருக்கிறோம். ஆனாலும் சென்ற ஆண்டு 7-வது, 8-வது படித்தவர்கள் நிலையைக் கருதி, 6-வது வகுப்பு தாண்டி 7-வது வகுப்பிற்கு வந்துவிடுவார்களானால் அவர்களை இந்த ஆண்டு அனுமதிக்கவேண்டுமென்று சொன்னதால் இந்த ஆண்டு மட்டும் அப்படிப்பட்டவர்களுக்கு அனுமதி அளிப்பது என்று சொல்லியிருக்கிறோம். இனிமேல் 5-வது வகுப்பிற்கு மேல் பள்ளி நடத்த யாருக்கும் அனுமதி கிடையாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தனியார் நடத்தும் இந்த மாதிரி பள்ளிகளில் அதிகமாகக் கட்டணம் வசூல் செய்கிறார்கள். அதுவும் ஆங்கில மீடியம் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் அதிகம் பணம் வாங்குகிறார்கள். அதை முறைப்படுத்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளும்? அதே மாதிரி செகன்டரி கிரேடிலும் இருக்கின்றது. அதையும் கட்டுப்படுத்த அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளாக இருந்தால் தான் நாம் கட்டுப்படுத்த முடியும். நம்முடைய அரசுப் பள்ளிகளாக இருந்தால் தான் கட்டுப்படுத்த முடியும். இப்போது மெட்ரிகுலேஷன் ஸ்கூல் என்று இருக்கின்றன. அவைகள் பல்கலைக்கழகங்கள் கீழ் வருகின்றன. சென்டிரல் ஸ்கூல் என்பது மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கி வருகின்றது. போர்ட் ஆப் செகன்டரி எஜுகேஷன் என்று மத்திய அரசாங்கம் சார்பாக நடத்தப்படும் பள்ளிகள் இருக்கின்றன. அவர்கள் விதிக்கிற கட்டணமும் அதிகமாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் மத்திய அரசாங்கமும் பல்கலைக்கழகங்களும் தான் கட்டுப்படுத்த வேண்டும். அவர்களுக்கு நாம் இது குறித்து எழுதி அனுப்பியிருக்கிறோம். அவர்கள் தான் அதைக் கட்டுப்படுத்த

வேண்டும், வரைமுறைப்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் கீழும், கல்வித் துறையின் கீழும் வரும் பள்ளிகளைத்தான் நாம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.

## உதகை நகரத்தில் விளையாட்டு அரங்கம்

* 232 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை நகரத்தில் விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான வேலை எப்போது தொடங்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) உதகை நகரத்தில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குத் தகுந்த இடம் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் விளையாட்டு அரங்கம் கட்டும் வேலை தொடங்கப்படும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, ஏற்கனவே விளையாட்டு அரங்கத்திற்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் ஏரிக்குப் பக்கத்தில் இருக்கும் இடம். அந்த இடத்தைத் தூர்த்து அந்த இடத்தில் கட்டலாம் என்று கூறப்பட்டது. ஆனால் அந்த இடம் காற்று மழை ஆகியவற்றால் எளிதில் பாதிக்கப்படும் என்று சொல்லப்பட்டதால் கைவிடப்பட்டது. வேறு இடம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவில் வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பு வந்த பிறகு அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். தேவராசன் : இந்த விளையாட்டு அரங்கத்திற்கு மதிப்பீடு எவ்வளவு? விரைவிலே வேலை துவங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தந்த மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் குழுக்கள் தான் விளையாட்டு அரங்கத்தைக் கட்டுவதற்கு மதிப்பீடு போடுகிறார்கள். அந்தந்த மாவட்டத்தின் சக்திக்கேற்றவாறு போடுகிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் விளையாட்டு அரங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் மானியம் அளிக்கிறோம்.

திரு. க. உரோ. எட்மண்ட் : உதகையில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஒரு தகுதி வாய்ந்த இடத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் குதிரைப் பந்தயத்தை ஒழித்திருக்கிறது. அங்கே குதிரைப் பந்தயம் நடக்கிற மைதானம் இருக்கிறது. அதை விளையாட்டு அரங்கமாக மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்பொழுது தான் அதைக் கொண்டு வந்திருக்கிறோம். நிரந்தரமாக குதிரைப்பந்தயம் இல்லை என்ற நிலை ஏற்பட்டதற்குப் பிறகு அந்த இடம் அரசாங்கத்தினிடம் ஒப்படைக்கப்படும். அப்படி ஒப்படைக்கப்பட்ட பிறகு அதை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : அந்தப் பந்தய மைதானம் 99 வருஷ கால லீஸுக்கு விடப்பட்டிருக்கிறதே? அதை எடுக்க சாத்தியப் படுமா என்று தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதனால் தான் சில தடங்கல்கள் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன்.

## *Rural Dispensary at Sulagiri.*

* 233 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is a proposal to upgrade the Rural Dispensary at Uddanapalli in Sulagiri block, Hosur taluk; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

[1974 ஆகஸ்ட் 22

கூடலூர் மருத்துவ மனை

* 234 வினா—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர் மருத்துவ மனைக்குப் பெண் மருத்துவர் ஒருவரையும் நியமிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 21—11—1973 முதல் தொடர்ச்சியாக ஒரு பெண் மருத்துவ அதிகாரி இங்கு பணிபுரிகிறார்.

கோவைக்குக் குடிநீர் வழங்கல்.

* 235 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகர குடிநீர் வசதிக்கென ஆனையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இத்திட்டத்திற்கு, 18—5—1973 ஆம் நாளன்று, அரசு நிர்வாக ஏற்பளிப்பு வழங்கியது. சிறுவாணி நீரைக் கோயம்புத்தூருக்குத் திருப்பிவிடுவது குறித்து கேரள அரசோடு பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் ஆனையாறு நீரானது தற்போது கோயம்புத்தூருக்குத் தேவையில்லை என்று உணரப் பட்டது. எனவே, ஆனையாறு திட்டமானது, நிறைவேற்றப்படுவதற் காக எடுத்துக் கொள்ளப்படவேண்டிய தேவையில்லை என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. செ. அரங்கநாயகம்: இந்த ஆண்டு கோவை நகரில் தண்ணீர் அதிகமாக இல்லாத காரணத்தினால் கோடை காலத்தில் கஷ்டமாக இருப்பதால், சிறுவாணித் திட்டம் வருவதற்கு முன்னால் கோடை காலத்தில் "போர் வெல்" போட ஒரு திட்டத்தை அரசு நடத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கோடை காலத்திற்காக வேறு "போர் வெல்" போன்ற அமைப்புகள் மூலமாக அந்த நேரத்தில் தண்ணீர்ப் பஞ்சத்தை மாற்றுவதற்கு முயற்சி



1974 ஆகஸ்ட் 22]

செய்யலாம். ஆனால், இப்பொழுது சிறுவாணி திட்டத்திற்கு ஒப்பந்தம் ஆகியிருக்கிற காரணத்தினால், அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுவதற்கு, ஒரு நாளைக்கு 3 மிலியன் காலன் அதிகத் தண்ணீர் கிடைக்கத் தக்க அளவுக்கு உடனே ஒரு குழாய் பொருத்து வதற்கு தகுந்த ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

வால்பாறைக்குக் குடிநீர் வழங்கல்

* 236 வினா—திரு. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை நகரியத்திற்கு அக்காமலையிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்ட வேலை தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: வால்பாறை நகரியத்திற்கு நடுவார் நதியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான விரிவான ஆய்வுகள் முடிவடைந்து உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு குடிநீர் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இ. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும், இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குடிநீர் வாரியத்தின் பரிசீலனை யில் இருக்கிறது என்று சொன்னால் இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை என்று பொருளாகும். டெக்னிகலாக அந்தத் திட்டத்தை நிறை வேற்றுகிற முறைகளைக் குறித்து இரண்டு விதமான கருத்து இருக்கிற காரணத்தினால் அது ஆராயப்பட்டு வருகிறது. ஒன்று, நகரியத்தை ஒட்டி ஓடும் நடுவார் நதியிலிருந்து தேவையான நீரை 150 மி.மீட்டர் விட்டமுள்ள இரும்பு நீரேற்றுக் குழாய் மூலமாக நகரியத்திற்குள் அமைந்திருக்கும் இரண்டு 12,500 காலன் கொள்ளளவு கொண்ட நில மட்ட நீர்த்தொட்டிக்கு தண்ணீர் கொண்டு வந்து விநியோகம் செய்வது. இத்திட்டத்தை நிர்மாணிப்பதற்கான செலவு ரூ. 5.10 லட்சமாகும். வருட பராமரிப்பு செலவு ரூ. 43,000 அதற்குத் தேவை யாக இருக்கும். மற்றொரு திட்டம், காராமலை எஸ்டேட்டில் நடுவார் நதியில் குறுக்கே அமைந்திருக்கும் கலிங்கலிலிருந்து நீர் எடுத்து 100 மில்லி மீட்டர் விட்டமுள்ள விரிவு இரும்புக்குழாய்கள் மூலம் நகரியத் திற்குக் கொண்டு வந்து தண்ணீர் வழங்குவது. அந்தத் திட்டத்திற்கு

[1974 ஆகஸ்ட் 22

முதலீட்டுச் செலவு ரூ. 10 லட்சமாகும், பராமரிப்புச் செலவு ஆண்டுக்கு ரூ. 17,000 ஆக இருக்கும். ஒரு திட்டத்திற்கு முதலீடு குறைவு, ஆனல் பராமரிப்பு செலவு அதிகம். மற்ருெரு திட்டத்திற்கு முதலீடு அதிகம், பராமரிப்பு செலவு குறைவு. எனவே, இந்த இரண்டு வகையான திட்டங்களில் எது அதிக வசதி உடையதாக இருக்கும், எதிர்காலத்தில் நன்மை பயக்கும் என்பது ஆலோசனையில் இருக்கிறது.

## கல்லணை–காவிரிப்பூம்பட்டினம் சாலை

* 237 விஞ—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப் பாரா—

கல்லணை–காவிரிப்பூம்பட்டினம் சாலையை மேம்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச்சாலை தார் சாலையாக மாற்றப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : காவிரிபூம்பட்டினம் எதிர்கால சரித்திரச் சின்னமாகும். எனவே இப்பொழுது இதைப்பார்க்கச் செல்கின்ற கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாக இருக்கிறது. ஆகவே, சீர்காழி யிலிருந்து காவிரிபூம்பட்டினத்திற்கு செல்லுகிற சாலையைச் செப்பனிட்டு அகலப்படுத்தும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நல்ல நிலையில் பாதை இருக் கிறது என்று தான் நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : அமைச்சர் அவர்கள் நல்ல நிலையில் இருக் கிறது என்று கூறினர்கள். ஆனல் அது ஒரு வழிப் பாதையாக மிகவும் குறுகலாக இருக்கிறது. அதை அகலப்படுத்தி விஸ்தரிப் பதற்கு ஏதாவது திட்டம் தீட்டப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்பொழுது இல்லை. நிதி ஆதாரத்தைப் பொறுத்து அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.



1974 ஆகஸ்ட் 22]

## சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தினருகே மேம்பாலம்

* 238 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையம் அருகில் மேம் பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) சுமார் 85 லட்சம் அளவில் சென்னைப் பெருநகர் சாலை வளர்ச்சித் திட்டத்தில் சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையம் அருகில் ஒரு மேம்பாலம் கட்டும் திட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலைத் துறை) அனுமதி கேட்டிருக்கிருர்.

## முக்கரம்பாக்கம் சாலை

* 239 விஞ—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி வட்டம், முக்கரம்பாக்கம் கிராமத்திலிருந்து K.B.P நெடுஞ்சாலை வரையுள்ள பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலையின் அரசுப் பெருவழித் துறையில் ஏற்று மேம்படுத்தும் திட்டம் மேன்மேலும் காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சன்முகம் : (அ) & (இ) : இச்சாலையை நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பிற்கு மேற்கொள்ளுமாறு அரசு மார்ச் 1974-ல் ஆணையிட்டுள்ளது. இந்த ஆண்டில் நிதி ஒதுக்கீட்டின் படி வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : பெருவழித் துறையிலே எடுத்துக் கொண்டதற்கு நன்றி செலுத்துகின்ற நேரத்தில், அதை இந்த ஆண்டே மேற்கொண்டு—ஏனெனில் பேருந்துகள் நின்றுவிடுகிற அளவுக்கு பழுதடைந்ததாக இந்தச் சாலை இருக்கிற காரணத்திஞல்—விரைவாக நடவடிக்கை எடுக்க அரசு முயலுமா?

[1974 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் இந்தச் சாலே அபிவிருத்தி செய்யப்படும் என்று தெரிவித்தேன். இந்த ஆண்டு அதைப்பற்றி எடுத்துக் கொள்ளலாம்.

## கிளவிப்பட்டியில் புதிய கண்மாய் அமைப்பு.

* 240 விஞ—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கிளவிப்பட்டி என்ற இடத்தில் கண்மாய் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், வேலே எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) : திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கிளவிப்பட்டி கிராமத்தின் அருகில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்காக பாசனத் தலைமைப் பொறியாளரால் ரூ. 1.74 லட்சத்திற்கு அனுப்பப்பட்ட மதிப்பீடு உணவு உற்பத்தி வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

## பழங்குளம் கிராமத்தில் புதிய கண்மாய்.

* 241 விஞ—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :—

நாங்குனேரி தாலுக்கா, களக்காடு சிதம்பரபுரம் அருகில் இரும் பழங்குளம் கிராமத்தில் இரட்டை அறுவிக்கால் பக்கம் மலேயடி வாரத்தை ஒட்டி ஒரு புதிய பாசனக் கண்மாய் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லே.



1974 ஆகஸ்ட் 22]

## செஞ்சேரிக்கரைத் திட்டம்

* 242 விஞ—திரு. நா. பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டம், தாராபுரம் வட்டத்தில், செஞ்சேரிக் கரைத் திட்டம் என்னும் அணைக்கட்டுத் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) அதற்கு ஆகும் செலவு என்ன?

(உ) அதஞல் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

(எ) எப்போது அத்திட்டம் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லே.

(இ), (உ) & (எ) இவ்விஞக்களுக்கு இடமில்லே.

டாக்டர் க. நாகராஜன்: இந்த அணைக்கட்டுத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என்று எல்லோரும் கருதுவதாலும், முறையீடு செய்துகொள்வதாலும், அது பற்றி மறு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: செஞ்சேரி ஓடை உப்பாறு ஓடையில் சேருகிறது. உப்பாறு ஓடையில் ஏற்கனவே ஒரு நீர் தேக்கம் கட்டப்பட்டிருக்கிறது, பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தின் கீழ். செஞ்சேரி ஓடையின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் கட்டிஞல் உப்பாறு ஓடை பாதிக்கப்படும் என்ற காரணத்திஞல், இந்தத் திட்டம் தேவையில்லே என்று கைவிடப்படுகிறது.

## பெரம்பலூர் பகுதியில் சர்க்கரை ஆலே.

* 243 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் பகுதியில் சர்க்கரை ஆலே நிறுவும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் ஐந்து சர்க்கரை ஆலைகளை நிறுவ இவ்வரசு தீர்மானித்துள்ளது. அவற்றில் ஒன்று திருச்சி மாவட்டத்தில் பெரம்பலூர் பகுதியில் நிறுவப்படும்.

திரு. க. பழனிவேலன்: தலைவர் அவர்களே, ஆத்தூர் பகுதியிலே சர்க்கரை ஆலை அமைப்பதற்கு சர்க்கார் பரிசீலித்து வருகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட பரிசீலனை இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த ஐந்து ஆலைகளில் ஒன்றை வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு அருகே அமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி அரசு பரிசீலனை ஏதாவது இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

### *Tamil Nadu Chromates Company.*

* 244 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any unit of the Tamil Nadu Chromates is to be commissioned at Ranipet in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு குரோமேட்ஸ் & கெமிகல்ஸ், லிமிடெட், இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் அடிப்படை குரோமியம் சல்பேட், சோடியம் டைகுரோமேட் ஆகிய பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ. 1,18 லட்ச ரூபாய் செலவில் அமைத்து வருகிறது. இத்தொழிற்சாலை வருகிற நவம்பர் மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[முற்பகல் 9-30]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இதிலே அரசாங்கத்தினுடைய பங்கு எந்த அளவில் இருக்கிறது என்பதோடு இந்த குரோமேட்ஸ் & கெமிகல்ஸ் முறையில் அரசாங்கத் தரப்பில் சிறிய



ஆலை ஒன்று தொடங்கப்பட்டு, மறுபடியும் நிறுத்தப்பட்டுவிட்டதே. அதை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிக்கடி அந்தக் கருத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது சரியாக இயக்கப்படுமா என்பது சந்தேகம்தான். அதை ஒரு தொழிற்சாலை என்று சொல்ல முடியாது. பைலட் பிராஜக்ட் என்ற முறையில் தொடங்கப்பட்டது. நஷ்டம் அதிகமாக இருப்பதால் மேற்கொண்டு இயக்குவதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது.

### நீதி மன்றங்களுக்குப் புதிய கட்டடங்கள்.

* 245 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் துணை நீதி மன்றத்திற்கு அரசாங்கம் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

திரு. ஜி. ராமசாமி: தலைவரவர்களே, நீதிபதியிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளதா? மறுபடியும் அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உயர்நீதி மன்றத்திலிருந்து எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை; வந்தால் பரிசீலனை செய்யப்படும்.

* 246 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are proposals under the consideration of the Government to construct additional buildings for the Munsif Courts at Kuzhithurai?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, குழித்துறையில் நான்கு முன்சீப்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய இடவசதி இல்லாததால் கூடுதலாகக் கட்டடம் கட்டவேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. ஆகையால் இதை அனுதாபத்துடன் அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தக் கருத்து உயர்நீதி மன்றத்தில் கேட்கப்பட்டுள்ளது. அவர்களுடைய கருத்தைத் தெரிந்து முடிவு செய்யலாம்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, மாவட்டங்களில் உயர்நீதி மன்றம் அமைக்கும் ஏற்பாடு ஒன்று இருந்ததே. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாவட்டங்களில் மாவட்ட நீதி மன்றம் தான் இருக்கும். உயர்நீதி மன்றம் இருக்க முடியாது. ஒருவேளை தென் மாவட்டங்களுக்கென்று மதுரையில் ஏற்படுத்த ஒரு கோரிக்கை இருந்ததைப்பற்றி கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசுக்கு அதைப்பற்றி எழுதியிருக்கிறோம்.

### திருப்பூர் விற்பனை வரி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்.

* 247 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் உள்ள விற்பனை வரி அலுவலகத்திற்குத் தனியாக அரசாங்கத்துக்கு சொந்தமாகக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

### *House-site for Coimbatore Journalists Association.*

* 248 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Coimbatore Journalists Association have requested the State Government during January 1974 to provide a site for the construction of building for its office; and

(b) if so, the action taken thereon?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 29—3—1974 அன்று கோயம்புத்தூர் செய்தியாளர்கள் சங்கம், அலுவலகக் கட்டிடம் கட்ட நிலம் ஒதுக்கித் தருமாறு முதலமைச்சரிடம் முறையிட்டுக் கொண்டுள்ளது.

(இ) கோயம்புத்தூர் வட்ட ஆட்சியாளர் சங்கத்திற்கு நிலம் ஒதுக்கத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. என். கே. பழனிசாமி: சார், அவர்களுக்கு அக்கோயர் செய்து கொடுப்பதற்கு சிக்கிரமாக நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவித்திருக்கிறார்கள். அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்கமுறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Allotment of kerosene*

* 249 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Government has made representations to the Centre recently regarding the proposed 15 per cent cut in kerosene quota for the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (ஆ) சபை முன்பு விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இப்போது மண்ணெண்ணெய் போதுமான அளவுக்கு கோட்டா மூலம் கிடைத்து வந்தாலும் சென்னை நகரிலும் மற்றும் மவாட்டங்களிலும் சரியாகக் கிடைக்க வில்லை. எல்லா இடங்களிலும் இப்போது விறகுக்குப் பதிலாக மண்ணெண்ணெய் வைத்துத்தான் அடுப்பு எரிக்க வேண்டுமென்ற கண்டிஷன் வந்திருப்பதால், தண்ணீருக்கு அடுத்தபடியாக அவ்வளவு முக்கியமான ஒரு பொருளாக மண்ணெண்ணெய் இருக்கிறது. ஆகவே,

(@ 513-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது).

இப்போது இருக்கின்ற விநியோக முறையை மாற்றி அமைத்து, வீதி வீதியாக மண்ணெண்ணெய்க்காக அலைந்து திரியாமல் இருக்க தக்கதொரு விநியோக முறையைக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போதிய அளவில் மண்ணெண்ணெய் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது தவறு. 30,000 டன் கொடுத்து வந்ததை இப்போது 20,000 டன்னாகக் குறைத்துவிட்டார்கள். இந்தக் கஷ்டம் இருந்தாலும் அரசாங்கம் சீராக விநியோகம் செய்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த மண்ணெண்ணெய் பல பகுதிகளிலும், விசேஷமாக கிராமப்புறங்களிலும் ஜில்லா மட்டத்திலும் பற்றாக்குறை இருக்கிறது. ஆகையால் விநியோகம் செய்யும் முறையை மாற்றியமைத்து, விரிவாக எல்லா இடங்களிலும் கிடைக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பற்றாக்குறை இருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன். 20,000 டன் வந்து கொண்டிருந்தது. சென்ற திங்கட்கிழமை ஆயிரம் டன்னை நிறுத்தி விட்டார்கள். 5—8—1974-ல் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். 8-ந் தேதி ஆயிரம் டன் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் பற்றாக்குறை இருப்பதால் சிறிது சங்கடங்கள் ஏற்பட்டாலும், இப்போது சீரான விநியோகம் நடைபெறுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, மண்ணெண்ணெய் பொறுத்தவரையில் தாராளமாகக் கிடைக்காததற்குத் தமிழக அரசு தான் பொறுப்பு என்றும் விநியோக முறையை சரியாக பின்பற்றவில்லை என்றும் பொதுமக்கள் மத்தியிலே பலர் பேசிக்கொண்டிருப்பதும், அதற்கு "ஆமாம், ஆமாம்" என்று சிலர் தூபம் போடுவதும் இந்த அரசுக்குத் தெரியுமா? பொதுவாகவே இந்த மண்ணெண்ணெய் பிரச்சனையில் தமிழ் மாநிலம் தான் இடையூறு செய்கிறது என்பதை இல்லை என்று பொதுமக்களுக்கு விளக்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பற்றாக்குறை இருப்பதால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இப்படிப்பட்ட கஷ்டம் எவ்வளவு [illegible]வாக இருக்கும் என்பது தெரியும்.





*Conference of Chief Ministers*

* 250 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the State Government was represented at the Chief Ministers' Conference held during March 1974 at New Delhi; and

(b) whether State trading of food grains was discussed during the meeting?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) கோதுமை சம்பந்தமாக மட்டிலும் அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: சார், போன வருஷம் இந்தச் சபையில் இந்த மாதிரி சர்க்காரே கொள்முதலையும் விநியோகத்தையும் நடத்தும் யோசனை பரிசிலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய சர்க்கார் ஏற்கெனவே கொள்முதலை எடுத்துக்கொண்டு, பிறகு விட்டுவிட்டு, 50 சதவிகிதம் வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்தார்கள். அந்த முறையில் 8 லட்சம் கொள்முதல் செய்வதற்கு 5 லட்சம் தான் கொள்முதல் செய்தார்கள். நம்முடைய சர்க்காரும் தஞ்சை மாவட்டத்தில் 25 சதவிகிதம் கொள்முதல் என்று சொல்லி, ஒரு லட்சத்து 80 ஆயிரம் டன் தான் கொள்முதல் செய்தார்கள். ஆக, இரண்டு சர்க்காரும் வியாபாரிகளை நம்பியிருப்பது தவறு. ஆகவே, சர்க்காரே கொள்முதலைச் செய்து; விநியோகத்தைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா, அதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த அரசைப் பொறுத்த வரையில் சங்கடம் இல்லை. மத்திய அரசுக்கு இந்த அரசு யோசனை சொல்லியிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அந்த மாநாட்டில் தமிழ்நாட்டுக்கு அதிகமாக அரிசி கடனைக் கொடுக்க வேண்டுமென்ற கேள்வி எழுப்பப்பட்டதா? அதேமாதிரி கோதுமையையும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடு என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இந்த அதிகாரம் இருந்தாலும் மாநில அரசுக்குக் கஷ்டம் வரும்போது ஒவ்வொன்றாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். சிலவற்றைத் தருகிறார்கள், சிலவற்றை இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, மருத்துவர் சான்று உள்ளவர்களுக்கே கோதுமை வழங்க வேண்டுமென்ற முறையை மாற்றி எல்லோருக்கும் கோதுமை கிடைக்க, மத்திய அரசோடு போராடி அதிக அளவில் கோதுமை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: போராடிக்கொண்டுதான் இருக்கிறோம்; ஒவ்வொன்றுக்கும் போராடிக்கொண்டிருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கடந்த ஆண்டு இந்திய அரசுக்கு நாம் ஒப்புக்கொண்டபடி அவர்கள் "ஃபுட் கார்ப்பரேஷன்" மூலம் புரொக்யூர் செய்தது போக மேற்கொண்டும் $1\frac{1}{2}$ லட்சம் டன் புரொக்யூர் செய்ய அனுமதித்தோம். ஆகவே, அவர்களைக் கேட்டு, விலைவாசியைக் குறைப்பதற்கு கொஞ்சம் கூடுதலாகப் பெறுவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதில் என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த அந்த ஆண்டுக்குத் தக்கபடி கொள்முதல் செய்ய, ஃபுட் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்கிறார்கள். நமக்குத் தேவையானது போக மற்றவைகளை மத்திய அரசு தொகுப்புக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த வருஷம் பற்றாக்குறை ஏற்பட்டபோது அவர்களிடம் கேட்டிருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, நம்மிடம் உபரியாக உள்ள அரிசியை வெளி மாநிலங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு யோசனை தெரிவித்திருக்கிறதா? நம்மிடம் உள்ள புஞ்சை தானியங்களை நம்முடைய அனுமதியின்றி வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடாது என்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்தியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எந்த ஒரு மாநிலமும் மற்ற மாநிலங்களுக்குத் தன் விருப்பப்படி அனுப்ப முடியாது. மற்ற மாநிலத்தவர்கள்—கேரள மாநிலத்தவர்கள் கேட்டார்கள். நாம் தருகிறோம் என்று சொன்னாலும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுதான் அவர்கள் எடுத்துச் செல்ல முடியும். பொதுவாக இந்தமாதிரி கட்டுப்பாடு இருக்கிறது. கோதுமை, அரிசி இவைகளை அந்தக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது சிறு தானியங்களை அந்தக் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்திருக்கிறார்கள். ஆகவே, சிறு தானியங்களை நம்மைக் கேட்காமல் எடுத்துப்போகலாம், அரிசியை எடுத்துப்போக முடியாது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தப் புஞ்சை உணவு தானியங்கள்ன் மீது தமிழ்நாடு அரசு தடை விதித்திருந்ததை மத்திய அரசு நீக்கியது. அதன் காரணமாக நமக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி மத்திய அரசிடம் கேட்பதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். டெல்லிக்குச் சென்று சிறு தானியங்கள் மீதான தடையை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். இல்லாவிட்டால் லெவி போடுவதற்காவது நீங்கள் உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: சிறு தானியங்களுக்கும் சர்க்கார் இப்போது கடலைக்கு லெவி போட்டிருக்கிற மாதிரி போட்டு, கொள்முதல் செய்து குறைந்த விலையில் மக்களுக்குக் கொடுக்க முடியும். இதற்கு மத்திய சர்க்காரைக் குறைகூறிப் பயன் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் கேள்வி போடலாம். விளக்கம் கொடுக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அவர் ஏதோ மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்கியிருப்பதுபோலப் பேசுகிறார். நாங்கள் கடலைக்கும் லெவி போடவில்லை. போட வேண்டுமென்று நினைத்தாலும் போட அதிகாரம் கிடையாது. வியாபாரிகளாகவே ஒத்துக்கொண்டு இப்போது கொடுத்து வருகிறார்கள். கடலைக்கு மாநில சர்க்கார் லெவி விதிக்க அதிகாரம் கிடையாது என்று ஒரு வியாபாரி உயர்நீதி மன்றத்திற்கே சென்றார். சர்க்கார்

அதுபோன்ற உத்தரவைப் போடவில்லை. வியாபாரிகளாகவே கொடுக்கிறார்கள் என்று சொல்லி உயர்நீதி மன்றமும் அவரது கோரிக்கையை நிராகரித்திருக்கிறது. ஆகவே, கடலைக்கும் சரி, சிறு தானியங்களுக்கும் சரி லெவி விதிக்க எங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நெல் கொள்முதல் சம்பந்தமாக ஏதாவது முடிவு எற்பட்டதா? அப்படியானால் நெல்லின் கொள் முதல் விலைபற்றி—உயர்த்துவதுபற்றி ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மறுபடியும் புதிய தாக உணவு அமைச்சர்கள் மகாநாடு நடத்தப்படும்போது இதுபற்றி விவாதிக்கப்படும்.

திரு. ஆலடி அருணா: நிலக்கடலைக்கு லெவி விதிக்க நமக்கு அதிகாரம் கிடையாது என்கிறபோது லெவி போன்று வியாபாரி களாக முன்வந்து அரசுக்கு நிலக்கடலை தருகிற நிலை ஏன் ஏற்பட்டது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஏதோ பெரிய சூட்சுமமான கேள்வியைப் போடுவதாகக் கேட்கிறார்கள். நல்லெண்ணம் படைத்த வியாபாரிகள்—ஏழை மக்களுக்கு உதவியாக இருக்கட்டும் என்று அவர்களே முன்வந்து எழுதிக்கொடுத்தார்கள். அப்படி எழுதிக் கொடுத்ததே தப்பு என்று ஆட்சேபித்தவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் வலியவந்து அவர்கள் கொடுத்தார்கள். இதில் உள் கருத்து ஒன்றுமே இல்லை.

திரு. கே. என். பழனிசாமி: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமே தவிர—பதிலை விட்டுவிட்டு வேறு ஏதேதோ சொல்வது சரிதானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கள் மூலக் கேள்வியைவிட்டுவிட்டு வேறு ஏதேதோ கேட்கிறார்கள். அவரும் அதனால்தான் எங்கெங்கோ போகிறார். மூலக்கேள்வியை ஒட்டியே உறுப்பினர்கள் கேள்வி கேட்கவேண்டும்.

திரு. ஆலடி அருணா: அமைச்சர் அவர்களிடம் நான் நிலக்கடலைக்கு லெவி போடாமலேயே எதற்காக வியாபாரிகளே கொடுக்க முன் வந்திருக்கிறார்கள் என்று உண்மையிலேயே தெரிந்துகொள்ள கேள்வி போட்டேனே தவிர வேறு எந்தத் தவறான உள்நோக்கமும் அதற்குக் கற்பிக்க வேண்டாம்.





## செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராமத் தொழில் திட்டம்.

* 251 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கிராமத் தொழில் திட்ட நிறுவனம் எந்தெந்தப் பணிகளை நிறைவேற்றி வருகின்றது?

(இ) இந்த ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டப் பணிகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) (1) தொழில் நிலையங் கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தி வேலைவாய்ப்பும் தொழிற் பயிற்சியும் அளித்தல்.

(2) சிறு தொழில்களின் அபிவிருத்திக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்குதல்.

(3) சிறு தொழில்களுக்கும் கச்சாப் பொருட்கள் முன்னுரிமை மூலம் வழங்க பரிந்துரை செய்தல்.

(4) வங்கிகளின் மூலம் தொழில்களுக்குக் கடன் வழங்க தொழில் நுட்ப ஆய்வறிக்கை அனுப்புதல்.

(இ) தொழில் நுட்பப் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப் பிட்டுள்ள திட்டங்கள் சென்னை தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களால் புதுடில்லி வளர்ச்சி ஆணையாளர் அவர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து தனியார் தொழில் நிறுவனங்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கப்படு கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்ட நிறுவனம் செங்கல்பட்டு மாவட்டத்தில் எல்லா இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு ஓரளவு நல்ல பணியை ஆற்றிக்கொண்டு வருகிறது. ஏற்கனவே இந்தத் திட்ட நிறுவனத்தின் கீழ் செயல்படுகிற சிறு தொழில்களை விரிவுபடுத்தவும், செங்கல்பட்டு மாவட்ட ஒவ்வொரு ஒன்றியத்திலும் கிராமத் தொழில்கள் வளர்ச்சி பெறவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இது முயலுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டம் ஆரம்பகாலத்தில் ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர் ஆகிய இரண்டு இடங்களில்தான் இருந்தது. இப்போது மாவட்டம் முழுவதும் விரிவு படுத்தப் பட்டிருக்கிறது. அதுபோல சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் முன்பு ஓமலூர், மேட்டூர் ஆகிய இரண்டு இடங்களுக்குத் தான் இருந்தது. இப்போது சேலம் மாவட்டம் முழுவதும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் முன்பு நாங்குனேரி யில் மட்டும் இருந்தது. இப்போது நெல்லை மாவட்டம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத் தில் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். ஒன்றிய வாரியாக மட்டும் இல்லாமல் 15 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட இடங்களில் எல்லாம் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சிறப்பான முறையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் செயல்பட்டு வருகிற அதேநேரத்தில்—தனித் தொகுதி என்று சொல்லப்படுகிற தொகுதிகளில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது இதற்காக விதிக்கப்படுகிற நிபந்தனைகளைத் தளர்த்தி, சலுகைகள் ஏதாவது அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தொகுதி வேற்றுமை இதில் கிடையாது. எந்த எந்த கிராமங்கள் தொழில் வளர்ச்சிபெறாமல் பின்தங்கிய நிலையில் இருக்கின்றனவோ அங்கெல் லாம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எல்லாவிதமான சலுகைகளும், முன்னுரிமைகளும் அளிக்கப்படுகின்றன.

## தமிழ்நாட்டுப் பனைப்பொருட்கள்

* 252 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தயாராகும் பனைப்பொருட்களுக்கு வெளிநாடு களில் நல்ல வரவேற்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.





திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் தயாராகும் பனைப்பொருட்கள் என்னென்ன ஏற்றுமதி செய்யப்படுகின்றன? சென்ற ஆண்டு எவ்வளவு ஏற்றுமதி செய்யப் பட்டது? இதனை அபிவிருத்தி செய்ய புதிய திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: சென்ற ஆண்டு 1973–74 இல் 14.82 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள பனைப்பொருட்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. பனைத்துண்டு, ஈர்க்கு, பனை ஓலையால் செய்யப்பட்ட தொப்பிகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இப்போது தும்புக்குப் பதிலாக—பிரஷ்களாகவே அனுப்பிவைக்க வேண்டுமென்று வெளிநாட்டார் கேட்கிறார்கள். அதற்காக மாதிரிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி பல வகைகளில் வெளிநாடுகளோடு தொடர்புகொண்டு பனைப் பொருட்களை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## அரிசனக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல்

* 253 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், இராக்கன்பாளையம் அரிசனக் காலனியில் குடிநீர் கிணறு வெட்டித்தரும் திட்டம் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: கும்முடிப்பூண்டித் துணை வட்டம், இராக்கன்பாளையம் அரிசனக் காலனிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு முதல் கட்டமாக ரூ. 8,500 மதிப் பீட்டுச் செலவில் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 10,000 மதிப்பீட்டுச் செலவில் தானே இயங்கும் நீர்த் தொட்டி அமைக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவை யான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, தொடர்ந்து மழை இல்லாமல் இருக்கிற அந்தப் பகுதியில், இந்தக் காலனிக்கு குடிநீர் வழங்க இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: அதன்காரணமாகத்தான் ரூ. 8,500 மதிப்பீட்டில் உடனடியாகக் குழாய்கிணறு எடுக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எங்கே தண்ணீர் எடுக்கலாம் என்பது

பற்றி பரிசீலிக்கப்பட்டு—தண்ணீரைக் கிண்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள்—குடிப்பதற்குத் தகுதி உடையதுதானா என்று பரிசீலிக்க. நல்ல தண்ணீர்தான் என்று தெரிந்துவிட்டால் உடனடியாக வேலையை ஆரம்பிப்பார்கள்.

* 254 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் அரிசனக் காலனிக்குக் குழாய் நீர்த்திட்டம் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப் படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது நிறைவடையும்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: திருவள்ளூர் வட்டம், தாமரைப்பாக்கம் அரிசன காலனிக்குக் குழாய் நீர்த் திட்டம், நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்க் கிணறு 1974–75 ஆம் ஆண்டிலேயே அமைக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, இந்தத் தாமரைப்பாக்கம் அணைக்கட்டில் இருந்துதான் சென்னைக்கே தண்ணீர் வருகிறது. ஆனால் அங்கேயுள்ள அரிசனக் காலனி மக்கள் தண்ணீர் கிடைக்காமல் தொல்லைப்படுகிறார்கள். இந்த ஆண்டிலாவது அங்கே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இந்தக் காலனிப் பகுதியில் தண்ணீரே இல்லை. எவ்வளவோ முயற்சி எடுத்து—குழாய்க் கிணறு எடுத்தாலொழிய தண்ணீர் கிடைக்காது என்று அறிந்து மாவட்ட ஆட்சியாளருக்கு இத் திட்டம் பற்றிய குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர் பதில் வந்தவுடன் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கும்.

* 255 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் துணை வட்டம், சில்லாங்குளம் பஞ்சாயத்து, ஓ.சரவணபுரம் கிராமத்து அரிசன மக்கள் குடிதண்ணீர் கிணறு வெட்டித் தரும்படி அரசுக்கு மனு செய்துள்ளார்களா?

(இ) ஆமெனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?



மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) இல்லை. ஆனால் ஓ. சரவணபுரம் கிராமத்து அரிசன மக்களுக்கு குடிநீர் கிணறு வசதி அளிக்கக்கோரி திருநெல்வேலி மாவட்ட அரிசன நல அதிகாரிக்கு உறுப்பினர் 16—5—1974 நாளிட்டு அனுப்பிய மனு மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## அரிசன நலத் துறைப் பள்ளிகள்

* 256 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, தொப்பம்பட்டியில் அரிசன நலத்துறை மூலம் ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம். இல்லை. தொப்பம்பட்டியில் அரிசன நலப்பள்ளி ஒன்று துவக்கும் செயற்குறிப்பு அரிசன நல இயக்குனரால் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருடனும், முதன்மைக் கல்வி அலுவலருடனும் கலந்து பரிசீலிக்கப்பட்டது. தொப்பம்பட்டியிலிருந்து இரண்டு பர்லாங் தொலைவில் ஒரு பள்ளியும் நான்கு பர்லாங் தொலைவில் மற்றொரு பள்ளியும் ஏற்கனவே இயங்கி வருவதால் அச்செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

* 257 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974–75-ல் கோவை மாவட்டத்தில், அரிசன நலத்துறையின் கீழ் எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: கோவை மாவட்டத்தில் அரிசன நல நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக 1974–75-ல் மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமோ அல்லது அரிசன நல இயக்குநரிடமோ பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) கிருஷ்ணராஜசாகரிலிருந்து காவிரி நீரை காலத்தில் திறந்து விட நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்து.

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Thiru N. K. Palaniswamy, has given notice of an Adjournment Motion under Rule 42, which reads as follows:—

'the failure of the Government to take steps for the early release of the Cauvery water from Krishnarajasagar affecting the ryots in the tail end areas of Thanjavur district."

The hon. Member may briefly explain how this matter comes under an adjournment motion.

திரு. என். கே. பழனிசாமி: சார், ஜூலை மாதத்திலே போதுமான தண்ணீர் விடாமல் கிட்டத்தட்ட 50 டி.எம்.சி. தண்ணீர் இருந்த நேரத்தில், 1972-ம் ஆண்டு ஒப்பந்தப்பிரகாரம் 35 டி.எம்.சி. யாவது விட வேண்டும்; ஆனால் தண்ணீர் விடவில்லை. அதனால், தஞ்சாவூர் டெயில் என்ட்டில்—ஓரத்தில்—இருக்கக் கூடிய பகுதியில் நாற்றுக் கூட விட முடியாமல், காலாகாலத்தில் பயிர்விடமுடியாத காரணத்தால், அந்தப் பகுதியிலே நெற் பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற முறையிலே இதைப்பற்றி விவாதிக்க இந்தச் சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூன் மாதம் 12-ந் தேதி பாசனத்திற்குத் திறந்து விடப்படுவது வழக்கமாகும். ஆனால், இந்த ஆண்டு ஜூன் 12-ந் தேதியன்று நீர்த்தேக்கத்தின் மட்டம் 21.45 அடி (அதாவது 4,534 மில்லியன் கன அடி) தான் இருந்தது. தொடர்ந்து சீரான முறையில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு, நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருக்க வேண்டும். காவிரி நீர்கோள் பகுதியில் தென்மேற்குப் பருவமழை பெய்து விநாடிக்கு சுமார் 20,000 முதல் 30,000 கன அடி வரை நீர்வரவு இருக்கவேண்டும். 12—6—1974 அன்று நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லாததாலும், தென்மேற்குப் பருவ மழையும் பெய்யத் தொடங்காததாலும் நீர்த்தேக்கம் திறக்கப்படும் தேதி ஒத்தி வைக்கப்பட்டு விவசாயிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.



நீர்கோள் பகுதியில் தென்மேற்குப் பருவ மழை ஜூலைத் திங்கள் தொடக்கத்தில்தான் ஆரம்பித்தது. அதன் பின்னர் நீர்த்தேக்கத்தில் நீர்வரவு அதிகமாகியது. 15—7—1974 அன்று நீர்த்தேக்கத்தில் இருந்த நீரின் அளவு, நீர் வரவு மற்றும் குடகில் 5—7—1974 முதல் 13—7—1974 வரை பெய்த மழை ஆகியவற்றை ஆய்வு செய்து 20—7—1974 அன்றிலிருந்து நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் விடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. 15—7—1974 அன்று நீர்த்தேக்கத்தில் நீர் அளவின் மட்டம் 48.90 அடி, அதாவது 17,126 மில்லியன் கன அடி நீர் இருந்தது. நீர்த்தேக்கம் திறந்து விடப்பட்டது முதல் பாசனத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் விடப்பட்டு, காவிரி டெல்டாவில் எல்லாப் பகுதிகளுக்கும் வேண்டிய அளவு தண்ணீர் அனுப்பப்படுகிறது.

1974 ஜூன் மாதம் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்த நீரின் அளவு இயல்பான அளவைவிட, 89 சதவீதம் குறைவு. ஜூலை மாதத்திலும் இயல்பான அளவை விட 54 சதவீதம் குறைவாக இருந்தது. ஆகஸ்ட் மாதம் முதற்கொண்டுதான் இயல்பான அளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

எனவே, இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை தாமதமானதாலும் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லாததாலும் தான் மேட்டூர் நீர்த்தேக்கம் தாமதமாகத் திறந்துவிடப்பட்டது. 1966 ஆம் ஆண்டைப் போலவே இவ்வாண்டும் நிலைமை இருந்ததால் மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பாசனத்திற்குத் திறந்து விடும் நாளை ஒத்திப்போட வேண்டியதாயிற்று. 1966 ஆம் ஆண்டில் 21—7—1966ல் தான் தண்ணீர் பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. நீர்த்தேக்கத்திலிருந்து நீர் வழங்குவது என்பது நீர்கோள் பகுதிகளில் மழை பெய்வது போன்ற நமது சக்திக்கு அப்பாற்பட்ட கூறுகளைப் பொறுத்ததாகையால், நிலநீர் வாயில்களை மேம்படுத்துவதன் மூலம், அதாவது வடிமுனைக் குழாய்களையும், குழாய்க் கிணறுகளையும் பயன்படுத்துவதன் மூலம், சாகுபடி தொடங்குவது பற்றிய நிச்சயமற்ற தன்மையை ஓரளவு குறைக்கலாம். நிலநீர் வாயில்களை அதிக அளவிற்குப் பயன்படுத்தும் வகையில் திட்டமிடுவதற்காக, அந்த வாயில்களை விரிவான முறையில் மதிப்பிடுவதற்கான ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது என்ற விவரமான அறிக்கையை நான் படித்திருக்கிறேன். இதற்குமேல் அவையை ஒத்தி வைத்து, இதனைப் பற்றி விவாதிக்க ஒன்றும் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் மற்ற அலுவல்களை, இது குறித்து விவாதிக்க, ஒத்திவைக்கத் தேவையில்லையென்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவரிடையே உள்ள பதட்ட நிலை காரணமாக மருத்துவக் கல்லூரியும், மருத்துவ மனையும் மூடப்பட வேண்டி ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள், "ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவரிடையே உள்ள பதட்ட நிலை குறித்தும், அதனால் மருத்துவக் கல்லூரியும், மருத்துவ மனையும் மூடப்பட வேண்டி ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி திரு. கந்தசாமி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஸ்டான்லி மெடிக்கல் காலேஜும், கல்லூரி விடுதியும் நேற்றுமுதல் மூடப்பட்டிருப்பதாகவும், மூடப்பட்டிருப்பதற்குக் காரணம் மாணவர்களிடையே ஒற்றுமையின்மை, பகைமை சூழ்நிலை அதிகமாக நிலவுவதாகவும் கூறப்படுகிறது. இதற்கு முன்னால், பலமுறை, இரண்டு மூன்று தடவைகள் அங்கே பலவிதமான அசம்பாவிதமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அதற்கு வேண்டிய முயற்சியை வார்டன் போன்றவர்கள் அமைச்சருடைய அறிவுரையின் பேரில், அறிவுரைகள், ஆலோசனைகள் கூறியும் பயனற்றுப் போனதாகத் தெரிகிறது. அங்கிருக்கக்கூடிய ஒருசில மாணவர்கள் விலையுயர்ந்த பொருள்களைக் களவாட வேண்டுமென்று முயற்சித்து, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உயர்மட்ட அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டபோதும்கூட, கல்லூரி முதல்வர் அவர்கள் தயாள மனப்பான்மையோடு நடந்த காரணத்தால், அங்கே திருடு போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்து வருவதாகவும், அவர்கள்மேல் ஐ.பி.சி. படி—கிரிமினல்—நடவடிக்கை எடுப்பது, மாணவர்களிடையே அவ்வளவு சிறப்பாக ஒரு நல்ல தன்மையை வளர்க்காது என்ற காரணத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத காரணத்தால்,



1974 ஆகஸ்ட் 22] [திரு. கே. கந்தசாமி]

அவர்கள் நடந்துகொண்ட தாராள மனப்பான்மை காரணத்தால், தவறு செய்பவர்களுக்கு ஊக்கம் ஊட்டும் அல்லது தைரியமூட்டும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலையை நிறுத்தி, மாணவர்களிடத்திலே பண்பாடை வளர்க்கும் முறையில், மிகக் கடுமையான நடவடிக்கையை எடுப்பதன்மூலம் மேற்கொண்டு தவறு வளராமலும், கல்லூரியில் அமைதியை ஏற்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்களில் ஓரிரு கல்லூரிகளில் நடைபெறுவதன் மூலம் மற்றக் கல்லூரிகளுக்கு நோய் போல் பரவாமலிருக்க வேண்டும். அதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எப்படி ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வரும் என்பதைச் சொல்ல வேண்டும். இதிலே உங்களது கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தால் சரியல்ல.

திரு. கே. கந்தசாமி : அக்கல்லூரி அவ்வாறு மூடப்படுவதன் மூலம், மாணவர்களிடையே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. அமைதியாக இருக்கிற மற்ற மாணவர்களும் பயப்படுகிறார்கள். சிலர் அங்கே தங்குவதற்கும் பயப்படுகிறார்கள். இப்படி பதட்ட நிலைமை ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் மத்தியிலும் அமைதி குன்றுமோ என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை வளரவிட்டால், சட்டம், ஒழுங்கு பாதிக்கப்படக் கூடிய நிலைமையிருக்கிறது. சாதாரண மக்களது அமைதியான சூழ்நிலையைப் பாதிக்கும் என்று ஐயப்படுகிற காரணத்தால், ஐயப்பாட்டிற்குரிய காரணங்களிருக்கிற காரணத்தால், மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சபையை சிறிது நேரம் ஒத்திவைத்து, ½ மணி நேரம் மாண்புமிகு உறுப்பினர்களது ஆலோசனைகளைக் கேட்டு, அமைச்சரவர்கள் செயல்படுவது சிறப்பு என்று கருதுகிறேன். ஆகவே, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். 18—8—1974 அன்று, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் அறைகள் ஒதுக்குவது பற்றி ஒரு சிறு மாறுபாடு எழுந்தது. இது 19—8—1974 அன்று இரவு

மாணவர்களிடையே இரண்டு கோஷ்டிகளாகப் பிரிகிற நிலைமை ஏற்பட்டு, பெரிய மோதலாக உருவெடுத்தது. ஒரு மாணவர்க்கு மண்டையில் காயம் ஏற்பட்டு ஸ்டான்லி மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். மற்ற மூன்று மாணவர்கள் காயம் அடைந்தனர்.

கல்லூரி மாணவர் விடுதிக் காப்பாளர், விடுதிக்கு, கல்லூரி உதவி முதல்வரையும், கல்லூரி முதல்வரையும், மருத்துவக் கல்வி இயக்கு நரையும் உடனே வரவழைத்தார். மாணவர்களைச் சமாதானப்படுத்த அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தகுந்த பலனளிக்கவில்லை. மாணவர்களில் பெரும்பான்மையினர் சொன்ன குற்றச்சாட்டை மருத்துவக் கல்வி இயக்குநர் பொறுமையாகக் கேட்டார். ஆயினும் அமைதியாக இருக்குமாறு அவர் மாணவர்களுக்கு விடுத்த வேண்டு கோள் பலனளிக்கவில்லை. தனித்தனியான மாணவர் விடுதிகள் ஏற்படும் வரை, கல்லூரி மாணவர் விடுதி மூடப்பட வேண்டும் என்றும், தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உடனடியாகக் கல்லூரியிலிருந்தும் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்றும் (சஸ்பென்ட் செய்யப்படுதல்), மாணவர்கள் விடுதியிலிருந்து நிலையாக வெளியேற்றப்பட வேண்டுமெனவும் அந்தப் பெரும்பான்மை மாணவர்கள் கூறினர்.

[முற்பகல் 10.00]

மாணவர்களிடையே பரபரப்பான நிலை நிலவி வந்ததாலும், மாறுபட்ட மனநிலையைக் கருதியும், இப்பிரச்சினையை அமைதியாகத் தீர்த்து வைக்க எல்லாவழிவகைகளையும் ஆராய்ந்து பார்த்தும், ஒரு வழியும் இல்லாததால் கல்லூரியையும், மாணவர் விடுதியையும் உடனடியாக மூட மருத்துவக் கல்வி இயக்குநர் கல்லூரி முதல்வருக்கு அனுமதி அளித்தார். கல்லூரியும் மாணவர்கள் விடுதியும் அவ்வண்ணமே 20—8—1974 அன்று மூடப்பட்டன. மேற்கொண்டு மோதல்கள் ஏற்பட இடமில்லை.

விசாரணைக் குழு ஒன்றையும் மருத்துவக் கல்வி இயக்குநர் அமைத்துள்ளார். இதன் தலைவர் உடற்கூறு இயல்துறைப் பேராசிரியர் டாக்டர் டி. நாராயணசாமி; மருந்தியல் பேராசிரியர் டாக்டர் ஜி. எம். யாஹ்யா, மருந்துத் துறைக் கூட்டுப் பேராசிரியர் டாக்டர் கே. நடராசன் ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர்.





இக்குழு தனது விசாரணையை 20—8—1974 அன்று தொடங்கியது. குழுவின் முடிவுகள் கிடைத்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்கும்.

அங்கே பதட்ட நிலை ஏற்பட்டதால் கல்லூரி மூடப்பட்டதே தவிர, கல்லூரியும் விடுதியும் மூடப்பட்டதால் பதட்ட நிலை ஏற்பட வில்லை. ஆகவே, பதட்ட நிலையைச் சமாளிப்பதற்காக, இருசாராருக் கும் மோதுதல் ஏற்படாமல் இருக்க உடனடியாக அந்தத் துறையின் தலைவர் கல்லூரியையும், விடுதியையும் மூடி தற்காலிகமாக இந்த மோதுதல் தொடராமல் வழி செய்துள்ளார். மேலும் விசாரணைக் குழு தனது விவரமான அறிக்கையைத் தந்த பிறகுதான் அரசு அல்லது இந்தத் துறையின் இயக்குநர் தகுந்த நடவடிக்கை எடுக்க முடியும். விசாரணைக்கு முன்னால் நாமாக எதையும் செய்ய முடியாது. ஆகவே, இதற்காக இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க அவசியமில்லை என்று கருதி, இதற்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

**(அ) குளித்தலை வட்டம் முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்து கிராமங்களிலுள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாது பொதுமக்கள் படும் சிரமத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பது குறித்து.**

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் இல்லாததால் திரு. எட்மண்ட் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

<u>திரு. க. உரொ. எட்மண்ட்</u>: தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 41 இன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 22

"குளித்தலை வட்டம் முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்து பகுதியைச் சேர்ந்த எல்லா கிராமங்களிலும் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் பொதுமக்கள் குடிக்க தண்ணீர் இன்றி மிகவும் சிரமப் படுவதால் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி"

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊற்றுத்துறையே இல்லாத கிராமங்கள், தொத்துநோயால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் ஆகிய இரண்டு வகைக் கிராமங்களுக்கு மட்டுமே, குடிநீர் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இதர கிராமங்களைப் பொறுத்த மட்டில், ஊராட்சியின் குறிப்பான வேண்டுகோளின்படி, குடிநீர் வாரியம் திட்டங்களை ஆய்வு செய்ய முற்படும். இவ்வூராட்சிகள் ஆய்வுக்கான செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆய்வுக்குப் பிறகு நிறைவேற்றக்கூடியதாக இருக்குமானால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். ஊராட்சிக்குக் கடனைத் திருப்பி செலுத்தும் திறன் இருக்குமாயின் அத்தகைய திட்டங்களுக்கு அரசிடமிருந்தும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும் 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் கடன் பெற்று வழங்கப்படும். குளித்தலை வட்டத்திலுள்ள முத்துரெங்கம்பட்டி ஊராட்சிப் பகுதியில் குடிநீர் வசதி செய்ய வேண்டுமென்பதற்காக வேண்டுகோள் எதுவும் இதுகாறும் வாரியத்திற்கு வரவில்லை. குடிநீர் வாரியத்திற்கும் வரவில்லை, அரசுக்கும் அவ்வாறு எந்த வேண்டுகோளும் வரவில்லை.

## (ஆ) கரூர் வட்டம், உப்பிடமங்கலம் பஞ்சாயத்து கிராமங்களிலுள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாது பொதுமக்கள் படும் சிரமத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41 இன் கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சௌந்தர பாண்டியன் அவர்கள் இல்லாததால் திரு. எட்மண்ட் அவர்கள் அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.



1974 ஆகஸ்ட் 22]

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 41 இன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கரூர் வட்டம், உப்பிடமங்கலம் பஞ்சாயத்து பகுதியைச் சேர்ந்த பல கிராமங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் குடிக்க தண்ணீர் இன்றி பெரிதும் சிரமப் படுவதால் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றி".

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொதுவாக குடி நீர் இல்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. தகுந்த பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை என்றால்தான் பொருத்தமாக இருக்கும். கிணற்றில் தண்ணீர் இல்லை, கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் ஆங்காங்கு ஏற்படும் சூழ்நிலையால் அப்படிக் கூறினால் தனித் தனியாக குடிநீர் வாரியம் கவனிக்க முடியாது. ஒரு வட்டாரத்திற்கு, வட்டாரம் முழுவதும் பரவலாக நெருக்கடியிருந்தால் போரிங் வெல் அமைக்கப்படும். அப்படி வேண்டுகோள் வந்தால் உடனுக்குடன் உதவி செய்யலாம். ஆனாலும் இதைப்பற்றிய விவரம் இது.

கரூர் வட்டம், உப்பிடமங்கலம் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வழங்கு முகத்தான், 14—7—1972 நாளிட்ட குடிநீர் வாரிய ஆணை எண் 53-ல் ரூ. 14,000-க்கு ஒரு ஆய்வு மதிப்பீடு ஒப்பளிக்கப்பட்டது. ஆய்வு வேலைகள் முடிவு பெற்றுவிட்டன.

இப்பேரூராட்சிப் பகுதியில் மொத்தம் 29 குடியிருப்புகள் (சிறு கிராமம்) உள்ளன. இப்பேரூராட்சியில் போதிய நிதி வசதியின்மையால் தற்போது 9 குடியிருப்புகளுக்கு மட்டுமே குடிநீர் வழங்குமாறு 14—7—1972 நாளிட்ட தீர்மான எண் 92-ல் வாரியத்தினை பேரூராட்சி கேட்டுக்கொண்டுள்ளது. எனவே, குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் ரூ. 10.90 லட்சத்திற்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரித்திருக்கிறார். திட்டத்திற்கு ஆண்டுதோறும் ஆகும் பராமரிப்புச் செலவு ரூ. 20,500. நீரேற்றுக் குழாய்கள் மற்றும் நீர்த்தேக்கத் தொட்டி யாவும் பேரூராட்சியின் நிதிநிலை மேம்பாடடையும்போது எல்லா கிராமங்களுக்கும் வழங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

[திரு. க. அன்பழகன்] [1974 ஆகஸ்ட் 22

இத்திட்ட மதிப்பீடு, வாரியத்தின் ஆய்வில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்தும், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடமிருந்தும் பேரூராட்சியின் நிதிநிலை குறித்து பரிந்துரை கிடைக்கப் பெற்றவுடன், திட்ட மதிப்பீடு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

மேலும் இப்பேரூராட்சியைச் சேர்ந்த

1. உப்பிடமங்கலம்
2. லிங்கத்தூர்
3. ஜோதிவடம் ஆஸ்பத்திரி
4. புதுகஞ்சமனூர்
5. சின்னக் கவுண்டனூர்

ஆகிய 5 குடியிருப்புகளுக்கு ஆழ்துளை கிணறுகள் போட்டு விரைவில் குடிநீர் வழங்க ஆவன செய்யுமாறு இப்பேரூராட்சியின் தலைவரிடமிருந்து ஒரு விண்ணப்பம் 18—8—1974-ல் வாரியத்திற்கு வந்துள்ளது. இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு ஆணைகள் இடப்பட்டுள்ளன.

## 4. நடைமுறைக் கேள்விகள்

### (அ) துணைமானியக் கோரிக்கை விவாதத்தின்போது முதலமைச்சர் அவர்கள் ஒரு கோப்பினை சபாநாயகரிடம் தருவதாகக் கூறி தராமை குறித்து

திருமதி சத்தியவாணிமுத்து: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், நேற்று முன் தினம் துணைமானியக் கோரிக்கை விவாதத்தின்பொழுது மாவட்ட அதிகாரிகளை நியமிக்கும் வகையில் முதலமைச்சரவர்களுக்கும் எனக்கும் சர்ச்சை ஏற்பட்டது. அதற்குரிய ஃபைலை சட்டமன்றத் தலைவரவர்களிடம் தருவதாகவும், அதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஹாண்டே அவர்களையும், திருமதி அனந்தநாயகி அவர்களையும், என்னையும் பரிசிலனை செய்யுமாறு முதல்வரவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் நேற்று தலைவரவர்களிடம் கேட்டேன். இன்னும் ஃபைல் தரப்படவில்லை என்று அவர்கள் கூறினார்கள். என்றைக்கு அந்த ஃபைலைத் தருகிறார்கள், என்றைக்கு நாங்கள் மூவரும் அந்த ஃபைலைப் பார்க்கலாம் என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பேரவைத் தலைவரவர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வி. இப்பொழுது பேரவைத் தலைவரும் இல்லை, முதலமைச்சரும் இல்லை. அவர்கள் வந்த பிறகு அறையில் சந்தித்து கேட்டுக் கொள்ளலாம். எனவே, இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) சட்ட முன்வடிவை" அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE: Sir so far as this Bill is concerned . . . .

MR. DEPUTY SPEAKER: This is only introduction of the Bill.

### (ஆ) 1974-ம் ஆண்டு, உழைப்பூதியம் வழங்குதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு, உழைப்பூதியம் வழங்குதல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

[1974 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) (சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்டவாறு)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, " சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமை யாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆளுநர் அவர்களிடமிருந்து 7—8—1974-ம் நாளிட்டு வரப்பெற்ற செய்தியில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு இணங்க, மறு ஆய்வு செய்வதற்கென 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். (உறுப்பினர்கள் பட்டியல் பின்னர் வழங்கப்படும்)".

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்குதல்) சட்ட முன்வடிவு, 1973, ஏப்ரல் 3 ஆம் நாளன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், குடியரசுத் தலைவரின் இசைவைப் பெறுவதற்கென, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கிடையில் இந்திய அரசு, இச்சட்ட வரைவில் விதித்துறைகளுக்கு மாற்றங்களை தெரிவித்து, தனக்கு வந்துள்ள சில முறையீடுகளை மாநில அரசுக்கு அனுப்பி, அவை பற்றிய கருத்துக்களை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டது. சட்ட முன்வடிவில் உள்ள விதித்துறைகளை தற்போதுள்ள வடிவிலேயே செயற்படுத்தின பல்வேறு நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஏற்படக்கூடிய



1974 ஆகஸ்ட் 22] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இடையூறுகளைக் குறிப்பிட்டு பொதுமக்களிடமிருந்து, நேரடியாகவும், செய்தித் தாள்கள் மூலமும் பல முறையீடுகள் மாநில அரசுக்கும் வந்துள்ளன.

முறையீடுகளில் குறிப்பிட்ட கருத்துக்கள், இச்சட்ட முன்வடிவின் அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ள முக்கியமான விதித்துறைகளை மாற்றியமைப்பதாக உள்ளன. எனவே, இச்சட்ட முன்வடிவு பரிசீலனைக்காக மீண்டும் முழுமையாகச் சட்ட மன்றத்தில் வைக்கப்படுவதன் மூலம் இந்த முறையீடுகள் தொடர்பாக சட்டமன்றத்தின் கருத்துக்கள் அறியப்பட வேண்டும் என்று அரசு கருதியது. இச்சட்ட முன்வடிவு முழுவதையும் மறு பரிசீலனை செய்வதற்காக சட்ட மன்றத்தின் இரு அவைகளுக்கும் அதைத் திருப்பி அனுப்புமாறு தமிழ்நாட்டு ஆளுநரைக் கேட்டுக்கொள்ளும்படி குடியரசுத் தலைவரை வேண்டிக் கொள்ளுமாறு இந்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. சமய நிறுவனங்களிடமிருந்தும் அறநிலையங்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும் வரப்பெற்று பல்வேறு முறையீடுகளின் அடிப்படையில், இந்தச் சட்ட வரைவு முழுவதையும், குறிப்பாக, 15-வது பகுதியின் 2-வது வரம்பு நிபந்தனையையும் 26-வது பகுதியையும் இரு அவைகளும் மறு பரிசீலனை செய்து, மேற்சொன்ன நிறுவனங்கள் எவ்வித நிதி இடர்ப்பாடும் இன்றி முறையான தங்களது அலுவல்களை நிறைவேற்றுவதற்கு இயலும் வகையில் அவசியமெனக் கருதக்கூடிய திருத்தங்களைச் செய்யலாம் என்ற கட்டளைக் குறிப்புடன் மாநிலச் சட்டமன்ற அவைகளுக்கு இந்தச் சட்ட முன்வடிவைத் திருப்பி அனுப்பலாம் என்று இந்திய அரசியலமைப்பின் 201-வது பிரிவின் வரம்பு நிபந்தனையையொட்டி குடியரசுத் தலைவர் கட்டளை பிறப்பித்துள்ளார். குடியரசுத் தலைவரிடமிருந்து வரப்பெற்ற இக்கட்டளைக்கிணங்க, தமிழ்நாட்டு ஆளுநர், சட்டமன்றப் பேரவைத் தலைவருக்கும் மேலவைத் தலைவருக்கும் எழுதிய 7—8—1974 நாளிட்ட தமது செய்திக் குறிப்பில் இந்தச் சட்ட முன்வடிவு முழுவதையும், குறிப்பாக 15-வது பகுதியின் 2-வது வரம்பு நிபந்தனையையும், 26-வது பகுதியையும் மறு பரிசீலனை செய்து, குடியரசுத் தலைவரது கட்டளையில் சுட்டிக் காட்டியவாறு இந்தச் சட்ட முன்வடிவில் அவசியமெனக் கருதக்கூடிய திருத்தங்களைச் செய்வதற்காக இந்தச் சட்ட முன்வடிவை சட்டமன்ற இரு அவைகளுக்கும் திருப்பி அனுப்பியுள்ளார். இந்தச் சட்ட வரைவிற்குத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கருத்து தெரிவித்து

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 22

வரப்பெற்ற பல்வேறு முறையீடுகளை முன்னிட்டு விரிவாகப் பரிசிலனை செய்வதற்காக சட்டமன்ற இரு அவைகளைச் சேர்ந்த இணை ஆய்வு குழு ஒன்றுக்கு இந்தச் சட்ட முன்வடிவு அனுப்பப்படுவது விரும்பத் தக்கதென கருதப்படுகிறது. இதனை இம்மாமன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

இக் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட சட்டப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்:

1. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.
2. திரு. கோவை செழியன்.
3. திரு. ஜே. ஜேம்ஸ்.
4. திரு. எம். முத்தையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. பி. வெங்கிடசாமி.
7. திரு ஏ. ஆர். மாரிமுத்து.
8. திரு. சோ. அழகர்சாமி.
9. திரு. மணலி சி. கந்தசாமி.
10. திரு. இ. எஸ். தியாகராசன்.
11. திரு. அ. சின்னசாமி.
12. திரு. எம். பன்னீர்செல்வம்.
13. திரு. அ. சே. குமாரசாமி.
14. திரு. ஆ. பரந்தாமன்.
15. திரு. மு. பழனிசாமி.
16. திரு. க. நாகராசன்.
17. திரு. வி. மலைக்கண்ணன்.
18. திரு. பு. செ. முத்துச்செல்வன்
19. திரு. என். கிட்டப்பா.
20. திரு. ஏ. ஆர். சுப்பையா.



1974 ஆகஸ்ட் 22]

* DR. H. V. HANDE: Hon. Mr. Deputy Speaker, Sir, this s a very peculiar situation that we are in today, after the return of the Bill by the President for reconsideration by this Legislature. It is a tragedy that the Bill passed by the House sometime ago, after it had been sent to the President, the President had thought it fit to send it back to this House. That only shows the haste with which we have passed this measure and it also shows that the haste should be stopped hereafter at least. That is why time and again I have mentioned and I have many a time unsuccessfully sought to impress upon the Chair as well as the Treasury Benches that when a Bill is to be passed in this House, all the points should be gone into carefully and all members should be given opportunity to express their views during the introduction of the Bill, and also during first or second or third reading. I have mentioned it several times. It is so tragic to find that my attempts have never succeeded.

MR. DEPUTY SPEAKER: The hon. Member may not use such strong words. He may refrain from using such words like ' tragic ' etc. A message has been received from the President to reconsider the Bill in the light of representations received from religious and charitable institutions. That is all. The hon. Member may refrain from using strong words.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஸ்ட்ராங் வேர்ட்ஸ் ஒன்றும் இல்லை. லோக் சபாவில் யூஸ் பண்ணுகிறார்கள். ஒன்றுமே பேசக் கூடாதா? நான் பேசுவதைக் கட்டுப்படுத்தும்போது கடைசியில் அது சுற்றி எங்காவது போகிறது. அவசியமாக இப்படிக் குறுக் கிட்டால் எப்படி? நான் உபயோகப்படுத்தியது ஒன்றும் ஸ்ட்ராங்க் வொர்ட்ஸ் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படிச் சொல்லுவது சரியல்ல.

Let us maintain decency and decorum in the House as well as the standard of debate. That is my request to hon. Members.

[1974 ஆகஸ்டு 22

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஸ்டாண்டர்டு ஆப் தி டிபேட் பற்றி நீங்கள் சொல்லி நான் கேட்க வேண்டிய நிலையில் இல்லை. கடந்த பத்து வருடங்களாக அந்த அவையிலும் இந்த அவையிலும் தொடர்ந்து இருந்து வருகிறேன். அந்த நாற்காலியில் உட்கார்ந்த வுடன் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டு சொல்லுவது சரியல்ல.

THIRU R. PONNAPPA NADAR: So far as word 'tragic' is concerned, it is not an unparliamentary word. So, it is not a very strong word. "வருந்தத்தக்கது" என்று தான் தமிழிலே வரும்.

MR. DEPUTY SPEAKER: I agree. What I say is, even though it is not unparliamentary, it should not be used in a strong sense.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கவர்ன்மெண்டுக்குச் சாதகமாகப் பேசினால் ஸ்ட்ராங் வேர்ட்ஸ் இல்லையென்று சொல்லப் போகிறீர்கள். நான் பேசியதிலே என்ன ஸ்ட்ராங் வேர்டு இருக்கிறது? சேரில் எல்லோரும் உட்காரலாம். அதிலே உட்கார்ந்த காரணத்தால் இப்படிச் சொல்லுவதா? அடிக்கடி, உறுப்பினர் இதை யூஸ் பண்ணக்கூடாது, அதை யூஸ் பண்ணக்கூடாது என்று சொல்லுவது நன்றாக இருக்காது. அது அனாவசியமான உணர்ச்சியைத்தான் உண்டாக்கும்.

As far as this Bill is concerned I maintain that it could have been passed without haste. We should not become the laughing-stock of the entire country. The very fact that the highest body in the country, the President, has thought it fit to send the Bill back to us, after we have passed it, goes to show that all the representations had not been taken into consideration fully. Suppose somebody does a mathematical calculation and the teacher says 'please do it again'; it means that the pupil is at fault. Similarly the sending of the Bill back to us means that we have not considered all the representations to the Bill. That is my point.



1974 ஆகஸ்ட் 22] [Dr. H. V. Hande]

I also want to say another thing. Whenever a Bill comes before the House, at first reading, second reading or third reading we should be given an opportunity to speak. Suddenly some point may strike us and the Chair or the person presiding at that time should not say 'this is third reading and so no new points should be raised'.

இந்த நேரத்தில் ரெய்ஸ் பண்ணுவது நியாயமில்லை, தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். This sort of stifling of discussion should not be there. That is another point.

I want to make a strong plea that our State should not become notorious or famous for hasty legislation. If I say notorious it may be termed by the Chair as 'strong'. Therefore to please Treasury Benches I use the euphemism 'famous'. Many of the Bills that we pass here in haste are either struck down by the High Court or Supreme Court; sometimes it is committed back to us. That means that we pass hasty legislation. This is something which we should guard against and we should give an impression to the public that fair discussion takes place in this House on all Bills.

I have seen Bills being rushed through in half an hour and forty-five minutes and discussion being restricted sometimes during third reading saying that no new points should be raised at that time. I want that such sort of restriction should not be put.

The second point that I want to stress is this. The President has asked us to reconsider this Bill. Unless we are convinced that the points mentioned by the President are valid we should not reconsider it. Government must make it clear here and now whether the Bill, which we passed earlier, was in order and if they have the guts let them send the BILL back to the President without any change.

If I remember right, when this Bill was discussed here, our Muslim League friends mentioned several points here. They were trying to make the point that the interests of minority communities should not be flouted and they should be protected. They were

pleading that nothing should be done to flout the guarantees given under Chapter III of the Constitution, i.e. the Fundamental Rights.

Therefore I would like to say this when the Hon. Minister is bringing in a motion to refer the Bill to a Joint Select Committee. Let us not say that simply because the Bill is going to a Select Committee, let us not have a full discussion here in this House now. What I say is let there be a full discussion here and now. Let the minority community have their say in the matter. Let all the points raised here be made use of by the Joint Select Committee in its discussion. Otherwise, they will say during the second or third reading, we cannot raise new points. So, let us have a full discussion now and let our points be taken note of by the Joint Select Committee. If we do not have discussion now, it will be said later that Select Committee had discussed all points already and so new points need not be raised during third reading.

Let us have discussion both before going to the Select Committee and after coming from Select Committee. I may also say that as far as possible it is absolutely imperative that minority rights should be safeguarded. To that extent, I make a request to the House and to all Members of the Select Committee in this particular context to see to it that as far as possible the request of the minorities are accommodated in the provisions of this Bill. Thank you, Sir

திரு. என். கே. பழனிசாமி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது இங்கே விவாதிக்கப்படும்போது அதுவே சரியான முற்போக்கு அல்ல என்று விவாதித்தோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Just I want to make one point with reference to what Dr. Hande has said. Just because the Bill has been referred back to us, it does not mean that the Bill has not been considered by the House fully. That is the most important thing. Even after Bills are fully discussed and passed, even after consideration by the Upper House, in many cases the



Bill is returned by the President on certain occasions. That is the constitutional right of the President, if it goes against certain interests or if it is considered wrong by him. We discuss on merits; actually, at the time of consideration of the Bill many representations have been heard to my knowledge.

DR. H. V. HANDE: Regarding the point raised by Mr. Subramaniam, I wish to say this. I made it quite clear that just because it has been returned to us by the President or recommitted to us, it does not mean that the Bill had not been discussed fully. My argument was either you accept that full discussion has not taken place yielding to the request or committal of the President or you have the guts to say—Mr. Palanisamy was coming to say that—that this is our stand, and if we are satisfied that the Bill had been discussed in full by the House, say that the House is satisfied, we need not take into consideration minorities rights—that is what Mr. Palanisamy was about to say—and have you the guts to say we are not yielding to the request of the President? That is what I said.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், அவைத் தலைவர் அவர்களே, சபைக்கு என்று சில முறைகள் வகுக்கப்பட்டு ஒரு மசோதா எவ்வளவு நாட்கள் விவாதிக்கப்படவேண்டும் என்று உங்கள் தலைமையில் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும் கூடி அதற்கு என்று நாட்கள் ஒதுக்கப்பட்டு அவை பூர்ணமாக விவாதிக்கப்பட்டுத்தான் எந்தச் சட்டமும் இங்கே நிறைவேற்றப்படுகிறது. எனது அருமை நண்பர் ஹாண்டே அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் பேசிய தொனி இந்தச் சட்டமன்றம் எதையும் சரியாக நிதானமாக ஆலோசித்துப் பார்த்து முடிவு செய்வதில்லை, என்றைக்குமே சட்டங்கள் சரியாகச் செய்யப்படுவதில்லை என்பது அவர்கள் குற்றச்சாட்டு. அதைப் பற்றி, அவர்கள் எவ்வளவு கடுமையான வார்த்தைகளை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு போகட்டும், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் இந்த சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் இங்கு வந்திருக்கிறவர்களில் ஹாண்டே அவர்கள் மட்டும் ஒரு நோட்டோரியஸ் அல்லது புத்திசாலி என்று சொல்ல முடியாது. எல்லோருக்கும் புத்தியிருக்கிறது. உங்களை யார் தேர்ந்தெடுத்து

அனுப்பினார்களோ அதேபோல்தான் மற்ற உறுப்பினர்களையும் மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். ஹாண்டே அவர்கள் பெற்ற வாக்குகளை விட அதிக வாக்குகள் பெற்று தேர்ந்தெடுத்து வந்தவர்கள் இங்கு ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் சொல்கிற கருத்து அவர்களது கருத்தாக இருக்கவேண்டும். அந்தக் கருத்து சட்டமன்றத்தைப் பிரிதிபலிக்கிற வகையிலே, இந்தியாவிலேயே புகழ்பெற்ற தமிழ்நாட்டு சட்டமன்றம் அவசரப் பட்டு எதையும் நிதானமாக யோசிக்காமல் எதையுமே சட்டமாக ஆக்கிக்கொண்டிருக்கிறது என்ற கருத்துப்பட அவர்கள் சொன்னது நல்லதல்ல. ஆகவே அதுபற்றி தங்கள் திர்ப்பைப் பெற விரும்பு கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, என்னைப்பொறுத்தவரையில் சட்டமன்றத்தை அவமதிக்க வேண்டுமென்று நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் சொன்ன வாதம் எல்லாம், ஜனாதிபதி அவர்கள் இந்த மசோதாவை மீண்டும் பரிசிலனை செய்யவேண்டுமென்று அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அதனுடைய அர்த்தம் நாம் ஏற்கனவே பரிசிலித்தது போதாது, அதை இன்னும் விரிவாக பரிசிலனை செய்யவேண்டுமென்றால் அதில் கொஞ்சம் ஊனம் இருக்கிறது. ஆகவே, இன்னும் பரிசிலனை செய்ய வேண்டுமென்றால், அதை சரியான வகையில் நாம் பரிசிலனை செய்ய வில்லை என்றுதான், மறைமுகமாக, நாம் பரிசிலனை செய்த அந்த முறை சரியாக இல்லை, போதிய அளவிற்கு இல்லை என்பதால்தான் அனுப்பி யிருக்கிறார்கள். ரீகமிட்டட் என்றால் அதனுடைய அர்த்தம் அதுதான். நான் சொல்வது—என்னை உட்படத்தான் சொல்கிறேன்—எல்லோரும் புத்திசாலிகள்தான், அதில் சந்தேகம் கிடையாது. மதிப்பிற்குரிய அரங்கண்ணல் ரொம்ப புத்திசாலி, அவர்களை நான் எப்போதும் பாராட்டக் கூடியவன். ஆகவே நான் சொல்வது என்ன வென்றால், இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு இனிமேலாவது ஜாக்கிரதை யாக இருப்போம். இது திரும்பி வந்திருக்கிறது. நான் சொல்வது இனிமேலாவது நாம் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் பணியாற்றவேண்டியது மிக மிக அவசியம் என்று சொல்வதில் எந்த விதமான தவறும் இல்லை.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கான்ஸ்டிட்யூஷனல் ப்ரொவிஷன்ஸ்படி ரெபர் செய்ய பவர் இருக்கும்போது, திருப்பி அனுப்ப அதிகாரம் இருக்கிறது அவர்களுக்கு. திருப்பியனுப்பியதால் அதைச் சரியாக ஆராயவில்லை என்ற அர்த்தப்படுகிற மாதிரி பேசுவது சரியல்ல.

திரு. என். கே. பழனிசாமி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த . . .

(THIRU K. M. SUBRAMANIAM rose)

THIRU N. K. PALANISAMY : Sir, I am not yielding.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am raising a point of order. My point is this. Words like ' if we have the guts ' were used; that means if the Legislature has the guts—that is a wrong term to use. The Constitution definitely lays down that such a Bill can be referred back, if there is difference of opinion. If we do not reconsider it, there will be a stalemate. If we should say 'we won't consider it ' and if the President says ' no, you consider it' what happens? Is it guts? No, no, I think, this word "guts' should be withdrawn.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சொல்வது என்னவென்றால், ...ட்ஸ் என்றால் கான்ஸ்டிட்யூஷனை எதிர்த்துப் பேசுவது என்றல்ல. ஜனாதிபதி அவர்களுக்கு ரீகமிட்—திருப்பி அனுப்ப அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதே கான்ஸ்டிட்யூஷன்படி நாம் போட்டது போட்டதுதான், நீங்கள் அப்படியே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அனுப்ப நமக்கும் உரிமை இருக்கிறது...அது அவர் களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அந்த உரிமையை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றுதான் சொன்னேன். மீண்டும் அப்படியே அனுப்புவதற்குக்கூட நமக்கு முழு உரிமை இருக்கிறது. ... because the President has sent it, we need not accept it. We ... send it and we need not make any changes.

...அரசியலமைப்புச் சட்டத்திலேயே இருக்கிறது. நாம் சொன்னது ...சரி என்று அதைத் திருப்பி அனுப்ப நமக்கு உரிமை இருக்கிற...

ஆகவே கட்ஸ் அல்லது தைரியம் என்று சொல்வதில் தப்பில்லை. அப்படிச் சொல்வது அன்பார்லிமெண்டரி அல்ல. ஜனாதிபதி அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள் என்பதற்காக நாம் மாற்றவேண்டும் என்றில்லை.

It is in the Constitution. Just because the President has sent it back, we need not accept it.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஹாண்டே அவர்கள் தைரியம் இருந்தால் திருப்பி அனுப்பலாம் என்று சொல்கிறார்கள். இதில் தைரியத்திற்கோ, வீரத்திற்கோ, ஆண்மைக்கோ அல்லது கட்ஸ்க்கோ, இவைகளுக்கு இடம் கிடையாது. நம்முடைய அறிவை மறுபடியும் பயன்படுத்தி அவர்கள் சொன்ன ஆலோசனை காரணமாக ஏதாவது மாற்றம் தேவைப்பட்டால், அது நல்ல பயன் அளிப்பதாக இருந்தால் இந்த அவை ஆலோசிக்கவேண்டுமே தவிர, தனிப்பட்டவர்களிடையே பேசப்படுவதுபோல் தைரியம், வீரம் பற்றிப் பேசுகிறார்கள். அதை இந்த அவையின்மீது ஏற்றக்கூடாது. குடியரசுத் தலைவர் அவர்களை மதிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து வந்த பிறகு, கட்ஸ் இருந்தால் என்று சொல்வதற்குப் பதில் நாம் சொன்னதை மறுபடியும் இந்த அவை அதுதான் சரியானது என்று தீர்மானிக்கிறது என்று சொல்லி அனுப்பலாம் என்ற கருத்தைத்தான் சொல்லவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நமக்குள் ஒரு குழப்பம் வேண்டாம் என்று சொல்கிறேன். அறிவின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். அறிவின் அடிப்படையில் இதை மாற்ற வேண்டாம் என்று நினைத்தால் தைரியமாக அனுப்புவோம், அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதற்குத் தைரியம் வேண்டியதில்லை, அறிவே போதும்.

[முற்பகல் 10.30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு டாக்டர் ஹாண்டே அவர்கள் பதில் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் கடுமையான வாசகங்களைப்





பேசுகிறார்கள் என்று அந்த நேரத்திலேயே சொன்னேன். இருந்தும் கடுமையான வாசகங்களை உபயோகித்து இருக்கிறார்கள். நம்முடைய ஒவ்வொரு அமைப்பும் இங்கே அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இயங்கிக்கொண்டு வருகிறது. ஒரு சட்டத்தை நாம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, அவர் திரும்பவும் இந்த அவை அதைப் பரிசீலிக்கவேண்டுமென்று திருப்பி அனுப்புகிற நேரத்தில் நாம் அதைக் கட்டாயம் பரிசீலிக்கவேண்டுமென்று அரசியல் சட்டம் விதி இருக்கிறது. அவர்கள் சொல்கிற கருத்தின்படி அதை நாம் பரிசீலிக்க வேண்டும். குடியரசுத் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. இருக்கின்ற அதிகாரத்தில் என்னென்ன செய்யமுடியுமோ அவற்றை முறைப்படி நாம் செய்யவேண்டும். * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இப்படியெல்லாம் பேசப்போகிறார்கள் என்று தெரிவித்தார்கள். இந்த சட்டமன்ற விதிகளில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது சொந்தக் கருத்துக்களை சொல்லலாம் என்று இருக்கிறது. ஒரு வேளை மாண்புமிகு பழனிசாமி அவர்கள் பேசும்போது அவர்களுடைய சொந்தக் கருத்தைச் சொல்வார்களா அல்லது மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் கருத்தைத் தெரிவிக்கப்போகிறார்களா என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்கிற கருத்து வேறு. நான் சொல்கிற கருத்து வேறு. கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். மைனாரிட்டிகளுக்கு இந்த மசோதாவில் வாய்ப்பு இல்லை, ஆகவே திருப்பி விடப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால் திருப்பி இங்கே அனுப்பலாம் என்று. மத்திய சர்க்கார் இதைத் திருப்பி அனுப்புவதற்குக் காரணம், சர்க்காரின் ஆன்டி-வர்க்கிங் கிளாஸ் ஸ்டான்ட் தான். ஏனெனில் கேரளாவில் இங்கே வந்திருக்கும் இதே மசோதா மாதிரி ஒரு மசோதா கொண்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

வந்திருக்கிறார்கள். ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷனுக்கு எக்சம்ஷன் கொடுக்கக்கூடாது என்று. அங்கே இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டு, அதற்கு அனுமதியும் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால், சென்னையில் மட்டும் நிறைவேற்றிய இந்த மசோதாவுக்கு அனுமதி கொடுப்பதில் என்ன தயக்கம்? இந்த மசோதா நிறை வேற்றுகிற காலத்தில் அதைக் குறிப்பிட்டேன். இன்னும் தமிழ் நாட்டில் உள்ள 6 லட்சம் ஏக்கர் நிலம் கோவில், மடங்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களில் கோவில்கள், மடங் களுக்கு இவ்வளவு சொத்து இல்லை. அப்படியிருக்கிறபோது இந்த மசோதாவை திருப்பி அனுப்புவதன் காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

இதிலே மைனாரிட்டிகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதல்ல. விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கக்கூடாது என்பது தான். 1972-க்குள் ஒரு டைம்—பவுண்ட் ப்ரோக்கிராம் போட்டு நில உச்சவரம்புச் சட்டம் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றப்போகிறோம் என்று சொன்னால் மாத்திரம் போதாது. ஒவ்வொரு மாநிலத்திலும் அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வகையில் உத்தரவிடவேண்டும். அப்படி உத்தரவிடுவதற்கு வகை செய்யும் இந்த மசோதாவை அனுப்பினால் அதைத் திருப்பி அனுப்புவது என்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்றையதினம் இங்கேயிருக்கக்கூடிய மசோதா வரக்கூடிய காலத் தில் சொன்னோம். கேரளத்தில் இருக்கிற மசோதாவில் பூமியை விட்டு விலக்கியிருந்தால் கூட அந்த விவசாயிகளுக்கு அந்த உரிமை கொடுக்கவேண்டுமென்பதாகும். இந்தச் சட்டம் வந்தவுடனே எல்லா குத்தகை விவசாயிகளுக்கும் பூமி சொந்தம் என்று சொல்லி, சர்க்கார் நஷ்ட ஈடு தொகை அவர்களிடமிருந்து வசூல் செய்து நிலச் சுவான்தார்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னோம். ஆனால் இங்கே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், அவர்கள் விண்ணப் பித்து வாங்கிக்கொள்ள வேண்டுமென்பது முறை. இந்த மசோதா வந்த காலத்திலேயே இந்த மாதிரி பிற்போக்கான அம்சங்களைக் கொண்டு இந்த மசோதா இருக்கிறது. கேரளத்தைப் பின்பற்றக் கூடாதா என்று அன்றே சொன்னேன். அப்படி இருந்தும் கூட, இந்த சாதாரண மசோதாவை இந்த மத்திய சர்க்கார் நிராகரித்து



இருப்பது விரும்பத்தக்கது அல்ல. இந்த மசோதாவை மறுபடியும் அதே முறையில் ஒரு ப்ரோக்கிரசிவ் மசோதாவாக மாற்றி, பொறுக் குக் கமிட்டியில் நல்ல முறையில் விவாதத்தை நடத்தி மறுபடியும் இந்த மசோதாவைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு. கே. எ. வகாப்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மதிப்பிற்குரிய உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போது, மைனாரிட்டிகளுக்கு ஆதரவாகத் திருப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மைனாரிட்டிகளுடைய பாதுகாப்புக்கு கான்ஸ்டிடியூஷனில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது, என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படிப் பட்ட மைனாரிட்டிகளுக்கு வாய்ப்பளிக்கிற வகையில் செய்யக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? இந்த மசோதாவை நமது ஜனாதிபதி அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்றால் பொதுவாக இந்த மசோதா தமிழகத்திலிருந்து அனுப்பும்போது சொன்னார்கள், சாதாரண நடுத்தர மக்கள் மட்டுமல்ல, மைனாரிட்டி மக்கள் இந்த மசோதாவால் பாதிக்கப்படக்கூடிய அளவில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் தான் ஜனாதிபதி அவர்கள் திருப்பி அனுப்பியிருக்கலாம். அந்த அடிப்படையில் எடுத்துக்கொள்ளாமல் மைனாரிட்டி மக்களுக்கு சலுகை அளிப்பதற்கு என்ற முறையில் கூறுகிறார்கள். அதற்குத் தாங்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: மைனாரிட்டி, மெஜாரிட்டி என்பது பிரச்னை அல்ல. இது குத்தகை விவசாயிகள் பிரச்னை. இது குத்தகை விவசாயிகளுக்கு குத்தகைக்கு விட்டு இருக்கும் பூமிகளை அளிப்பது என்பது. இதிலே நடுத்தர மக்கள், மைனாரிட்டி மக்கள் பாதிக்கப் படாத வகையில் இருப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை.

* *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நம்முடைய சபையின் மரபையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொள்ளும் அளவிலே நம்முடைய வாதத்தின் தரம் அமையவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, * * * என்ற வார்த்தையை இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

* * * *

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker. I want to clarify one point. While the hon. Member, Thiru Palaniswamy, was speaking, he had stated that assent was given by the President to the Kerala Bill and that it was not sent back. That is not a fact. It was sent back. In this connection, I want to point out that because the B ll was passed by the Kerala Legislative Assembly, many religious institutions were closed because they had no money to conduct the religious functions of the temples. Even the Chairman of the Dewaswom Board indulged in satyagraha. That must be the reason why the President sent the Bill back. The same fate should not overtake the religious institutions in Tamil Nadu where they are in plenty. Their income is high and they have to carry on their religious functions. So we cannot compare Tamil Nadu with Kerala. In Kerala many religious institutions were closed. It is only with the income of the temples at Sabarimalai and Guruvayur, that they are able to manage other temples there. I only want to clarify this point and I stop with that.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்த மசோதா முன்பே இந்த சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது, தோழமைக் கட்சியாக இருந்தாலும், மிகக் கடுமையாக இதை எதிர்த்து, எதிர்வாதங்களை நாங்கள் சமர்ப்பித்திருக்கிறோம். அதிலும் குறிப்பாக, இந்த மசோதாவைக் குறித்து நான் பேசியபோது, 15-வது ஷரத்து அம்சத்தைப்பற்றிக் கடுமையாக நான் விவாதித்து இருக்கிறேன். இந்த ஷரத்தின்படி பல ஏழை எளியவர்கள், விதவைகள்,

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



ஒய்வுபெற்ற அதிகாரிகள் இவர்களுக்கெல்லாம் இருக்கக்கூடிய நிலங்களைப் பறிமுதல் செய்யக்கூடியதாக இந்த ஷரத்து அமைந்துள்ளது, என்று நான் மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறேன். இருந்த போதிலும், இந்தச் சபையின் பெரும்பாலான கருத்துக்களுக்கேற்ப, இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பிறகு இது ஜனாதிபதியினுடைய அனுமதிக்கு அனுப்பப்பட்டது. அப்படி அனுப்பப்பட்ட போது, இந்திய அரசியல் சாசன சட்டப்படி உண்மையிலேயே பாராட்டத்தக்க அம்சம் என்று சொன்னால், நாட்டின் சிறுபான்மை மக்களும், மற்றும் மதச் சார்புள்ள மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்ற நிலை ஏற்படும்போது, இந்திய ஜனாதிபதி அவர்கள், அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் துணை வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துகிற அளவுக்கு இந்திய அரசியல் சாசனம் அமைந்திருக்கிறது, என்பதை நான் பாராட்டுகிறேன். ஜனாதிபதி அவர்கள் நியாயமாகத்தான் செய்திருக்கிறார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன். இந்த மாதிரியான ஒரு வகையை இந்திய அரசியல் சாசனத்தில் செய்திருப்பது குறித்து உண்மையிலேயே சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள் எல்லாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இந்தச் சட்டம் மீண்டும் சட்டமன்றத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டிருப்பது முழுக்க முழுக்க நியாயமானதாகும். இந்த சட்டம் இப்போது ஆய்வுக் குழுவுக்கு போகின்றது என்று சொல்லக் கூடிய நேரத்தில், இதிலே என்னென்ன குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள், என்று அறிந்து, அவைகளை பாரபட்சமற்ற முறையில் அணுக வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மதச் சார்புள்ள மக்கள், மதங்களின் மீது, அக்கறையும் பிடிப்பும் உள்ள மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய உணர்ச்சி பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுடைய வணக்க ஸ்தலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களுடைய மத உணர்வுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய மக்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று வாழ்நாள் எல்லாம் பாடுபட்டு, கொண்டுவந்த பொருளைக் கொண்டு ஒரு சில ஏக்கர் நிலம் வாங்கி வைத்திருப்பார்கள். அவர்கள் திடீரென்று மரணம் அடைந்துவிட்டால் அந்த விதவைகள் நிலத்தை

எடுத்துக் கொண்டால் அவர்கள் தெருவிலே நின்று திண்டாட வேண்டிய அவல நிலைதான் ஏற்படும். வாழ்நாள் முழுவதும் பாடு பட்டு, பணியாற்றி, ஏதாவது ஒரு அலுவலகத்திலே பணியாற்றி, சிறு சேமிப்பு செய்து, அதன் மூலம் சிறிய நிலத்தை வாங்கி வைத்திருந்தால், அவர்கள் மறைந்தவுடன் அந்த நிலத்தை பறித்துக்கொண்டால் அவர் களின் விதவைகள் தெருவிலே நிற்கும் இக்கட்டான நிலைமைதான் ஏற்படும்.

24-வது ஷரத்திலே என்ன விதிவிலக்கு இருக்கிறதோ, அதன்படி மத சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இருக்கின்ற சொத்துக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நாட்டிலே இருக் கின்ற சிறுபான்மை சமூகம், மத உணர்வு உள்ள மக்கள் சமூகம் காப் பாற்றப்பட வேண்டும்; அவர்களுக்கு தக்க மரியாதை காட்டுகின்ற வகையில் இந்த சட்டத்தை நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டு மென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நாம் ஏற்கெனவே இந்த மன்றத்திலே நிறைவேற்றிய சட்டம் அரசியல் சட்டத்திற்கு முரணாக இருக்கிறது என்று சொல்லி, குடியரசுத் தலைவர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அதனால் இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போகிறது. நிச்சய மாக இந்த மசோதாவிலே என்னென்ன மாற்றங்களைச் செய்யலாம், எப்படி திருத்தலாம் என்பதைப் பற்றி பொறுக்குக் கமிட்டிதான் முடிவு செய்ய வேண்டும். இந்த நேரத்தில் அதை எப்படிச் செய்ய வேண்டும், சட்டம் மீண்டும் எப்படி பொறுக்குக் கமிட்டியால் அமைக்கப்பட வேண்டும் என்று இங்கே சொல்வது சரியாகாது. இங்கே வேண்டு கோள் விடுவதோ, உத்தரவு போடுவதோ சரியல்ல. ஆகவே, இந்த மசோதாவைப் பற்றி மேலும் விவாதிக்காமல் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவதுதான் பொருத்தமானது. பொறுக்குக் கமிட்டியிலே பேசிக்கொள்ளலாம். ஆகவே, மேல் விவாதத்தை அனுமதிக்காமல் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, இந்த வரலாற்று சிறப்பு மிக்க இந்த மசோதாவிலே இரண் டொரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொறுக்குக் கமிட்டிக்கு இந்த மசோதாவை அனுப்புவதற்கு முன்னதாக இந்த மன்றத்திலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

நான் இந்த மசோதாவை வரலாற்று சிறப்பு மிக்கது என்று சொன்னதற்குக் காரணம் முதல் தடவையாக தமிழ்நாடு சட்ட மன்றத்திற்கு குடியரசுத் தலைவரிடமிருந்து இந்த மசோதா திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான். ஏன் அவசரம் அவசரமாக இந்த சட்டத்தை அன்றைக்கு நிறைவேற்றி னார்கள் என்ற கருத்துக்கள் எல்லாம் முன்பு நடந்த விவாதங்களை உற்று கவனிக்கும்போது புலனாகும்.

இந்த மசோதா மீது 1973 ஏப்ரல் திங்களில் விவாதம் நடை பெற்றது. இரண்டு நாள் விவாதம் நடந்தது. ஒரு நாள் விவாதம் ஆரம்பித்தபோது அன்றையதினம் சற்று சூடாக நடைபெற்று, பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று முஸ்லீம் லீக் கட்சியின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்த திரு. லத்திப் அவர்கள் பேசினார்கள். பிஸினஸ் அட்வைசரி கமிட்டி தப்பான முடிவை எடுத்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டும் அன்றைக்கு வந்தது. அன்றைக்கே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி இருந்தால் இந்தமாதிரி இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்திலே நல்ல புரட்சிகரமான மாற்றங்கள் இருக் கின்றன. இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை. இந்த மசோதாவை ஆதரிக்கும் முகத்தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் அன்றைக்கு ஆற்றிய உரையின் ஒரு பகுதியை தங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன். "குத்தகைக் காரர்கள் கஷ்டப்படுகிறார்கள், அவர்களுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையில் இது ஒரு நல்ல ஆரம்பம் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்" என்று

முடித்திருக்கிறார்கள். அவர்கள் அந்த உரையிலே பல நல்ல நியாயங்களை எல்லாம் எடுத்துச்சொல்லி, இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினால் ரிலிஜியஸ் சாரிட்டபிள் நிறுவனங்களில் இருக்கின்ற சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு இருக்கிறது. அது மட்டுமல்ல. இந்த சட்டத்தில் கொடுத்திருக்கிற விதி விலக்கு போதாது என்ற கருத்து இருக்கிறது. அதிலும் "ஆர்ம்டு பர்ஸனல்-க்கு தான் விதிவிலக்கு இருக்கிறது. மற்றபடி விதவைகளுக்கு விதிவிலக்கு போதாது. அதை விஸ்தரிக்க வேண்டும். இந்தப் பகுதியில் வேறு சில தொகுப்பினரையும் சேர்த்துக்கொள்ளலாமா என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாக மைனர்ஸ், புத்தி ஸ்வாதீன மற்றவர்கள், ஊனமுற்றவர்கள்—இந்தமாதிரி நபர்களுக்கும் விதிவிலக்கு அளிக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிற ஸ்தாபனங்களுக்கு விதிவிலக்கு கட்டாயம் அளிக்க வேண்டும்.

இந்த மசோதாவிலே பல சட்ட சிக்கல்களும் இருக்கின்றன. 20 ஸ்டான்டர்டு ஏக்கர் வைத்திருக்கிற ரிலிஜியஸ் சாரிட்டபிள் இன்ஸ்டிடியூஷன் அந்த நிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று பப்ளிக் சாரிட்டி ஆக்டில் ஒரு ஷரத்து இருக்கிறது. அதற்கு முரண்பாடு இல்லாத முறையில் இந்த மசோதா திருத்தி அமைக்கப்படுவது பொருத்தமாக இருக்கும்.

பொதுவாக, இந்தச் சட்டத்தை அவசரம் அவசரமாக நாம் நிறைவேற்றி அனுப்பியதன் காரணமாக ஜனாதிபதியிடமிருந்து திரும்பி வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் முதலிலே தெளிவான முறையிலே தயாரித்து, ஆட்சேபனை இருந்தால் முன்னதாகவே அதற்குப் பரிகாரம் தேடி, சரியான முறையிலே சட்டத்தைச் செய்திருக்க வேண்டும்; அதைச் செய்யாததுதான்.

தமிழ்நாட்டில் பல தர்ம ஸ்தாபனங்களிடம் சொத்துக்கள் குவிந்து இருக்கின்றன. அவைகளிலே உழுகின்ற உழவனுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இதிலே இரண்டுவித கருத்துக்களுக்கு இடமே இல்லை. உழுபவனுக்கு நிலம் என்று எல்லா அரசியல்



கட்சிகளும் சொல்கின்றன. அப்படி இருக்கும்போது உழுபவர்களுக்கு நிலம் கிடைக்க எல்லா வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் தர்ம ஸ்தாபனங்களுக்கு நஷ்டம் இல்லாமல் உரிய வழிவகைகளைச் செய்து, அந்த நிலங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: இந்தச் சட்டம் செலக்ட் கமிட்டிக்குப் போகிறது. அங்கே எல்லாவிதமான கருத்துக்களையும் தெரிவித்துக்கொள்ளலாம்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u>: சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இதிலே இருக்கிற இன்னொரு கஷ்டம் என்னவென்றால், இதிலே வேறு எக்சம்ஷன் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பதையும் பரிசீலிக்க வேண்டும். ஜனாதிபதியிடம் இருந்து என்னென்ன அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன; அவைகள் என்னென்ன முறையிலே பரிசீலனை செய்யலாம் என்பதை அமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ அங்கிருந்து திருப்பி அனுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லி, ஒருசில விபரங்களைத்தான் தந்திருக்கிறார்கள். முழு விபரத்தையும் கொடுக்க வேண்டும். அப்படியானால்தான் பொறுக்குக் கமிட்டியும் இந்த மன்றமும் என்னென்ன ஆட்சேபனைகளைக் கூறியிருக்கிறார்கள், என்னென்ன சட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். அதைத் தெரிந்து கொள்வதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை இருக்கிறது. அதனால் அதை மறைக்கத் தேவையில்லை. ஆகவே, தயவுசெய்து அவைகளை எல்லாம் தெரிவித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த செலக்ட் கமிட்டியிலே ஒரு பெண் உறுப்பினரையும் நியமிக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். யாரையாவது ஒரு பெண் உறுப்பினரை அரசாங்கத்தின் சார்பிலிருந்தே கூட போட்டுக்கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். இப்போது எல்லோரும் ஆணாக இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பெண் உறுப்பினரைப் போடுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. உங்களுடைய கட்சியின் சார்பில் இருக்கின்ற ஒரு உறுப்பினரை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் ஒரு பெண் உறுப்பினரை வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள். அதை நாங்கள் எதிர்க்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று சொல்கிறார்கள். ஆகவே, பெண்களின் உரிமையும் காக்கப்பட வேண்டும் என்ற உணர்வு என்னிடம் தெரிவிக்கப்பட்டதால் இந்த மன்றத்திலே அதைத் தெரிவிப்பது என்னுடைய கடமையாகும்.

இறுதியாக நான் குறிப்பிட விரும்புவது, திருப்பி அனுப்பப் பட்டிருக்கும் இந்த மசோதாவின் மீது யாருடைய உரிமையும் பாதிக்கப்படாமல், ரிலிஜியஸ் சாரிட்டபிள் இன்ஸ்டிடியூஷன்களுக்கு தேவையான பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் பொறுக்குக் கமிட்டியில் ஆராய்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த அவைமுன் வந்திருக்கிற தீர்மானம் இந்த மசோதாவைக் கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பவேண்டும் என்பதுதான். இதனை கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. ஜனாதிபதி திருப்பி அனுப்பியிருக்கிறாரே, தைரியம் இருந்தால் ஏற்கெனவே நிறைவேற்றிய இந்த மசோதாவை அப்படியே வலியுறுத்தி அனுப்ப வேண்டும் என்றும் சொல்லப்பட்டது.

ஜனாதிபதி இந்த மசோதாவை மறுத்து அனுப்பவில்லை. இந்த மசோதாவில் உள்ள சில பிரிவுகளை திரும்பப் பரிசீலிக்கவேண்டும் என்கிற கருத்தில்தான் அனுப்பியிருக்கிறார்கள். இப்படி அனுப்புவதில் தவறு இல்லை. சில மசோதாக்களை மறுபரிசீலனைக்கு அனுப்பலாம் என்பது அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது. இப்படி அனுப்புவது அரசியல் சட்டத்திற்கு முரணானது அல்ல.



இப்படி அனுப்பப்பட்டிருப்பது—இதுதான் முதல் தடவை என்பதுபோலப் பேசப்பட்டது. 1930-ஆம் ஆண்டிலே மலபார் டெனன்ஸி பில் அனுப்பப்பட்டிருக்கிறது. 1956-ஆம் ஆண்டிலே Essential Articles (Control and Requisitioning (Temporary Powers) Re-enacting Bill என்கிற பில்லும் ஜனாதிபதியால் திருப்பி அனுப்பப்பட்டு, அது இந்த அவையில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் எல்லாம் சாங்கோபாங்கமாக—விரிவாக பொறுக்குக் குழுவில் எடுத்துச்சொல்லி விவாதிக்க வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிவைக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இந்தப் பொறுக்குக் குழுவில் ஒரு பெண் உறுப்பினரையும் போடவேண்டும் என்று தெரிவித்தார்கள். அவரது கட்சி சார்பில் கொடுக்கப்பட்ட பெயர்களில் ஒருவரை எடுத்துவிட்டு, அவரது கட்சியைச் சார்ந்த ஒரு பெண் உறுப்பினரையே போடலாம் என்று அவர் தெரிவித்தால் அதை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவிதமான ஆட்சேபணைக்கும் இடமில்லை. இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பிவைக்கும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆளுநர் அவர்களிடம் இருந்து 7—8—1974-ஆம் நாளிட்டு வரப்பெற்ற செய்தியில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு இணங்க, மறு ஆய்வு செய்வதற்கு என 30 உறுப்பினர்கள் அடங்கிய (20 சட்டப் பேரவை உறுப்பினர்களும், 10 சட்டமன்ற மேலவை உறுப்பினர்களும்) கூட்டாய்வுக் குழு ஒன்றை

அமைக்க சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன் கூட்டாய்வுக் குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள்* தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

1. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.
2. திரு. கோவை செழியன்.
3. திரு. ஜே. ஜேம்ஸ்.
4. திரு. எம். முத்தையா.
5. திரு. கே. எ. வகாப்.
6. திரு. பி. வெங்கடசாமி
7. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
8. திரு. சோ. அழகர்சாமி.
9. திரு. மணலி சி. கந்தசாமி.
10. திரு. இ. எஸ். தியாகராசன்.
11. திரு. ஏ. சின்னசாமி.
12. திரு. எம். பன்னீர்செல்வம்.
13. திரு. அ. சே. குமாரசாமி.
14. திரு. ஆ. பரந்தாமன்.
15. திரு. மு. பழனிசாமி.
16. திரு. க. நாகராசன்.
17. திரு. வி. மலைக்கண்ணன்.
18. திரு. பு. செ. முத்துச்செல்வன்.
19. திரு. என். கிட்டப்பா.
20. திரு. ஏ. ஆர். சுப்பையா.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.





(ஈ) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/74)

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

கூடுதல் வரி வருவாய் வாயில்களை திரட்டும் பொருட்டு, அரசு, தமிழ்நாடு 1939-ம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (தமிழ்நாடு சட்டம் 1939) சட்டத்தின் கீழ் பெட்ரோல், விமான எரி எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு 15 காசில் இருந்து 21 காசு வரையிலும், டீசல் எண்ணெய் மீதான வரியை லிட்டர் ஒன்றுக்கு 13 காசில் இருந்து 15 காசு வரையிலும் உயர்த்துவது என்று முடிவு செய்துள்ளது. விசேஷ அதிகரிப்புக்குப் பிறகும் கூட, தமிழ்நாட்டில் பெட்ரோல், விமான எரி எண்ணெய் மீதான வரி வீதங்கள் அண்டை மாநிலங்களில் நிலவும் வரி விகிதங்களைக் காட்டிலும் மிகக் குறைவாகவே இருக்கும்.

மேற்சொன்ன செயற்குறிப்புக்கு செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1974) முக உரைக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட முன்வடிவு ஆலோசனைக்காக பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை இம்மாமன்றம் ஏற்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, in connection with this Bill I would like to offer a few remarks for the consideration of the Hon. Minister and the Cabinet.

---

* 16—8—1974 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப் பட்டுள்ளது.

[Dr. H. V. Hande] [1974 ஆகஸ்டு 22

In this context the Hon. Minister has sought to make it appear that increasing the taxation from 15 p. to 21 p. per litre is almost innocuous, that it is a small thing and therefore it is unlikely to have any adverse effect on the price spiralling in the State. That is the fact that he is trying to stream, that is the point he is trying to make. Between the Centre and State, between Spenlow and Jarkins, between these two, they had tried to elevate the prices of the entire communication system.

I will confine my remarks only to the State. During the last six months or so, prices of communication transport, whether it is scooter or whether it is motor-car, or its spare parts—all have increased enormously. It has affected the cost of living index directly or indirectly of the lower middle class. So what I say is, the Minister should have a dialogue with the Centre. I do not say that this should be withdrawn, after what we have seen in the morning paper of the enormous increase in railway fares, etc. Let it not be said that Dr. Hande is against this increase. What I say is, let there be a dialogue between the Centre and the State and either in the Chief Ministers' conference, or discussion with Planning Commission or during Transport Ministers conference, let there be a dialogue and let the Centre and State earmark the order of taxation. Otherwise people are put to intolerable taxing.

Now, the Centre does not know what the State is going to do. The State does not bother about what the Centre has done. Due to this lopsided policy, prices are spiralling up. In spite of our having had four five-year plans, in spite of constant discussion with the Planning Commision by State Ministers, we find only unplanned taxation. It is high time that the subject of taxation is discussed between the Centre and State. This price spiralling is something fantastic. Because of this increase, cost of other materials depending on this will also increase. This will enhance the cost of living and the poor middle class is caught between this Spenlow and Jarkins betwen this tragic exercise between the Centre and State in going on increasing taxation. In this context, what is that we are going to do? Let the House be told of this. I hope and trust the Hon. Chief Minister will take positive steps to alleviate the sufferings of the public in the context of what I have said.



1974 ஆகஸ்டு 22]

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி கூடுதல் பற்றி, பெட்ரோலுக்கு போடக்கூடிய வரியைப் பற்றி ஆட்சேபிக்கவில்லை. அதாவது ரூ. 150-லிருந்து ரூ. 210-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களிலே அது அதிகம் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் டீசலுக்கு 2 பைசா அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. பஸ் முதலாளிகளும் இதை சாக்காக வைத்து, அதிகப்படியாக கட்டணங்களை உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். கட்டணத்தை அதிகப்படுத்தாமல் வரிபோடுவதைப் பற்றி ஆட்சேபிக்கவில்லை. ஜனங்களிடமிருந்து வசூல் செய்வதைத் தடை செய்ய வேண்டும். இந்த வரி வசூலிப்பு விஷயமாக, ஏற்கெனவே மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு ராஜ் கமிட்டி சிபாரிசுகளை ஞாபகப்படுத்தி, அதன் அடிப்படையிலே, கிராமப்புறத்திலேயிருக்கிற பெரிய நிலச்சுவாந்தார்கள்மீது வரி போடவேண்டுமென்று சொல்லியும்கூட இந்த சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பெரும் நிலச்சுவாந்தார்கள் சர்க்காரிடத்திலிருந்து குழாய்க் கிணறுகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் மற்றும் எல்லாச் சலுகைகளையும் பெற்றும்கூட, அவர்களுக்குந்தான் இன்றைய தினம் அதிக வசதி ஏற்பட்டிருக்கிறது. சாதாரண மக்களுக்கு தண்ணீர் வசதியும் கிடையாது, எந்தவிதமான வசதியும் கிடையாது. அப்படி இருக்கும்போது அந்த ஒரு செக்ஷன்மீது சர்க்கார் வரி போட ஏன் தயங்கவேண்டும்? அப்படி இருக்கும்போது, ஏன் அவர்கள்மீது வரி போடக் கூடாது? அந்த சர்க்கார் ஞாபகப்படுத்தியும்கூட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? மேன்மேலும் வரி போடுவதன் காரணமாக ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படுவதன் காரணமாக, டீசல் மீது போடக் கூடிய வரியை நான் ஆட்சேபிக்கிறேன்.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பெட்ரோல் மீது விதிக்கப்பட்ட வரியை நான் எங்கள் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் வரவேற்கிறேன். இது நேரடியாக என்னுடைய ஜேபியைத் தொடுகின்ற நிலையிலிருந்தாலும், எந்தச் சூழ்நிலையில் விதிக்கப்படுகின்றது என்பதைப் பார்க்கின்ற பொழுது நான் வரவேற்பதைத் தவிர வேறு வழியில்லை. காரணம், மதுவிலக்கு என்ற பொன்னான கொள்கையை வரவேற்று, அதனால் சற்றேறக்குறைய ரூ. 56 கோடி இழப்பு ஏற்படுகிறது. செப்டம்பர்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 ஆகஸ்டு 22

முதல் முழு மதுவிலக்கு கொண்டுவரப்படுகிறது. அதனால் அரசுக்கும் பெருத்த வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இதையெல்லாம் சரிக்கட்ட வரியைப் போட்டுத்தான் ஆகவேண்டும். ஆனால், எந்தத் தேவையும் இல்லாமல், டெஃபிசிட் பட்ஜெட்டை ஆண்டுக்கு இரண்டு முறை போட்டு வரியை உயர்த்தியிருக்கிறது மத்திய அரசு. ரெயில் கட்டணத்தை கூட 25 சத வீதம் முதல் 35 சத வீதம் வரை உயர்த்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் உயர்த்த மத்திய அரசு எண்ணும்போது, மாநில அரசு பெட்ரோல் மீது மேலும் போடுவதை, வசதி படைத்த மக்கள் உபயோகிக்கும் பெட்ரோலுக்கு வரி போடுவதை—ஏழை, எளியவர்கள் கார் வைத்துக் கொண்டு அதிலே போகவில்லை—வாழ்க்கையிலே ஓரளவு வசதி படைத்தவர்கள்தான் இந்த பெட்ரோலை உபயோகிக்கின்ற நிலையிலே இருக்கிறார்கள்—அவர்கள்மீது, மதுவிலக்கு இழப்பை சரிக்கட்ட வரி போடுவது முழுக்க முழுக்க நியாயம். சென்னையிலே ரூ. 3.02-க்கு லிட்டர் பெட்ரோல் விற்றுக் கொண்டிருந்தபோது, நாங்கள் பெங்களூருக்குச் சென்றோம். அங்கே ரூ. 3.35-க்கு விற்றதைக் கேட்ட நாங்களெல்லாம் ஆச்சரியப்பட்டோம். நம்முடைய மாநிலத்திலே ரூ. 3.02-க்கு விற்கும் போது, ரூ. 3.35-க்கு விற்கப்படுகிறதே என்று ஆச்சரியப்பட்டோம். அவ்வளவு பெரிய ஏற்றத்தாழ்வு அப்பொழுதே இருக்கத்தான் செய்தது. இப்பொழுது கூட, 15 பைசா 21 பைசாவாக விதிக்கப் படும்போதுகூட, மற்ற மாநிலங்களைவிடக் குறைவாகத்தான் இருக்கும்.

இப்பொழுதெல்லாம் பிளஷர் கார்களுக்கு டீசல் இன்ஜின் பொருத்துகிற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி அமைக்கும் போது செலவு சிக்கனமாக இருக்கிறது. எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு டீசல் இன்ஜின் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அதற்கெல்லாம், கோட்டா பெர்மிட் முறை இருக்கிறது. கோட்டா பர்மிட் ராஜ்யம்தானே, இந்தியாவே. இந்த டீசல் இன்ஜின் கோட்டா அளிக்க, அதிலும் குறிப்பாக, அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு, பொதுத் தொண்டிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு டீசல் இன்ஜின் கிடைக்க வழி செய்ய வேண்டும். அதிலேதான் எங்களைப் பாதுகாக்க வழி இருக்கிறது. ஆகவே, அதைச் செய்யவேண்டும். வரி விதிப்பு என்றாலே கசப்பானதுதான். ஆனால் தேவையை முன்னிட்டு, புனிதமான மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்ற இதனைக் கொண்டு வருகிற காரணத்தினால், இதனை முழுமையாக வரவேற்று நான் அமர்கிறேன்.



1974 ஆகஸ்டு 22]

THIRU R. PONNAPPA NADAR: Mr. Deputy Speaker, Sir, I would like to offer a few remarks on this Bill.

So far as the taxation that has been just brought forward is concerned, it has been set forth in the Statement of Objects and Reasons and in one portion they say' 'with a view to mobilise additional resources, the Government have decided to increase the tax under the Tamil Nadu Sales of Motor Spirit Taxation Act of 1939'. Sir, if we look into the history of this legislation, there has been sporadic and periodic increases in the taxation of motor spirit. I do not for a moment plead in the matter of taxation that aviation fuel should be left out. This Government may just increase it. Sir, there is a race between the Central Government and the State Government for the increase of taxation, so much so petrol and diesel and other oils have become a scarcity.

Now, it may be argued that there is scarcity throughout the world and consequent on the development in the Middle-East this malady has happened. That is no reason why we should also increase as we like. Therefore, taxation on diesel must most emphatically be objected to. For, diesel is not a luxury fuel as aviation fuel is a luxury one.

(Thiru S. Kandappan in the Chair)

So far as diesel is concerned, it is used by the people who are operating pumpsets also and it may adversely affect agricultural production also. For, the cost of diesel will naturally go up so much so the ryot will have to pay more and that is a matter which will have to be considered. It may even be argued that it is only from 13 paise to 15 paise; even though the increase is only two paise, I think it will adversely hit all those who are using it.

Another point is regarding the rates which are now prevalent. So far as the taxis are concerned, the fare has been announced and nobody can travel in taxis if he were to go five or six miles. I think the people who want to go to hospitals cannot take the patients in the public conveyances and they will have to hire a taxi and there are a large number of people using these taxis. But today, most of the taxis are idle, because of the high rate of hire. I can say without fear of contradiction that that is a fact and that is within the knowledge of the members of the ruling party as well. Of course, we want money; but money can be raised not only by

[Thiru R. Ponnappa Nadar] [1974 ஆகஸ்டு 22

this way. A norm has been set forth by your revered leader, the late lamented Annā and 'tapping the rich and patting the poor' was the motto which he has adumbrated when he was the Chief Minister here. Will that motto be just now given the go-by is the question I am asking. Or I may say that is not strictly adhered to now, so far as this legislation is concerned.

There is another principle of taxation—plucking the goose with as little squeezing as possible. But in the matter of collection, you are killing the goose which lays the golden egg, which will adversely affect all other aspects.

Another point is whether there would be any further increase in the fares of motor vehicles of State Transport Department and other Corporations which are now operating their services.

Sir, there has been much volume of increase in the fares. They call it restructure or reconstitution of stages. But I think the minimum and maximum fares in the express buses have been recast in such a way, so much so, it has become out of reach of ordinary man. I think there would be still further spurt in rise in prices.

With these words, I emphatically object to the new increase that is contemplated so far as diesel is concerned.

So far as other matters are concerned, I do not raise any serious objection.

With these words, let me conclude.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மோட்டார் ஸ்பிரிட் என்பதற்கான டெஃப்னிஷன் கொடுப்பதிலே

"'motor spirit' means any substance which by itself or in admixture with other substances is ordinarily used directly or indirectly to provide reasonably efficient fuel for automotive or stationary internal combustion engines, and includes petrol, diesel oil, aviation fuel and other internal combustion oils, but does not include kerosene, furnace oil, coal or charcoal".

இப்பொழுது இருக்கின்ற பெட்ரோல் மீதுள்ள வரியும், டீசல் மீதுள்ள வரியும், petrol or aviation fuel லிட்டர் ஒன்றுக்கு 15 காசு என்று விதிக்கப்பட்டிருக்கிறது, டீசலுக்கு 13 காசு என்று விதிக்கப்



1974 ஆகஸ்டு 22] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

பட்டிருக்கிறது. இப்பொழுது வந்துள்ள மசோதாவினால் 15 பைசா என்ற பெட்ரோல் வரியானது 21 பைசா ஒரு லிட்டருக்கு என்றும் டீசல் 13 பைசா என்று இருந்ததை 15 பைசா ஒரு லிட்டருக்கு என்றும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த வரி விதிப்புகளைப் பற்றிப் பேசும்பொழுது இதுபோன்ற வரி விதிப்புகளை விதிக்கக் கூடாது என்று சொன்னார்களே தவிர வேறு எந்த வகையிலே வருமானத்தைப் பெருக்கலாம் என்று சொல்லவில்லை. இந்த வரிகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தங்களுடைய சப்ளிமெண்ட்ரி எஸ்டிமேட்டில் சொல்லியிருக்கிறார்கள்.

'In Tamil Nadu the sales tax on motor spirits is significantly lower than it is in the neighbouring States. While the tax per kilo litre, at present, on the sale of petrol is Rs. 420 in Kerala, Rs. 365 in Andhra, Rs. 352 in Karnataka, and Rs. 308 in Maharashtra, the sales tax being levied in our State is only Rs. 150 per kilo litre. It has therefore been decided to increase the tax from Rs. 150 to Rs. 210 per kilo litre of petrol, which is normally consumed by the more affluent sections. In this context, it is worth mentioning that even with this increase the rate will be lower than the rates in neighbouring States. An increase of 2 paise in the sales tax per litre of diesel is also proposed so that the differential between the prices of petrol and diesel is not unduly wide.'

என்று. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இது அதிகம் இல்லை என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் இந்த வரி விதிப்புகளால் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு ஜப்பார் அவர்கள் சொன்னதைப் போல்—பெட்ரோலுக்கு விதிப்பதாலே சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். வேண்டுமென்றால் சில பணக்காரர்களுக்கு அதிகச் செலவு ஏற்படுமே தவிர சாதாரண மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்வது பொருத்தமாகத் தெரியவில்லை. இந்த வரிவிதிப்புகளால் எந்தவிதமான நெருக்கடியும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. இது நியாயமானது, தேவையானது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கு வழிகளாக அமைந்திருக்கின்றன.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்டு 22

அடுத்து, மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அரசாங்கப் போக்குவரத்தில் கட்டணங்கள் உயர்த்தப்படுமா என்று கேட்டார்கள். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். நீங்கள் சொன்னதை அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது அதிகப்படுத்த மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். பிறகு அதிகப்படுத்துவார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் இந்த வரிவிதிப்பு பற்றிய விவாதத்தின்மீது தன்னுடைய கருத்துக்களைச் சொல்லும் நேரத்தில், பொதுவாக இந்தக் கூடுதல் வரிவிதிப்புகளை அரசாங்கம் போடுவதற்குக் காரணம் வருமானத்தைக் கூட்ட வேண்டுமென்பதற் காகத்தான் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் வரியைக் கூட்டுகிறார்கள், வரியைக் கூட்டுகிறார்கள் என்று சொல்லு கிறார்களே தவிர அதற்கான மாற்று வழியைச் சொல்வதில்லை என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்று வதற்கு முன்னால் ஒரு விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்களிடத் திலிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எதிர்க் கட்சிகள் மாற்று வழிகளைச் சொன்னால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதை நிறுத்தி வைத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிக் கொடுத் தால் அந்த வரியையும் போட வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், நான் பேசும்பொழுது, ராஜ் கமிட்டி சிபார்சிலே என்னென்னமோவெல்லாம் சொல்லப்பட்டிருக் கிறது. எல்லா மாநிலங்களிலும் இதன்மேல் வரி போடுவதுபற்றி. கிராமத்திலுள்ள அஃப்ளுயன்ட் சொசைட்டி சர்க்காரின் சலுகை களைப் பெற்று அதிக வருமானத்தைப் பெறுகிறது. அவர்களுக்கு போட்டிருக்கும் வரி கொஞ்சமாக இருக்கிறது. அவர்களுக்கு ஏன் வரி போடவில்லை என்று கேட்டேன். ஆனால் எதிர்க்கட்சிகள் யோசனை சொல்லவில்லை என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள்.



1974 ஆகஸ்டு 22] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் அஃப்ளுயன்ட் சொசைட்டி பற்றிச் சொல்கிறார்கள். ஆனால் அஃப்ளுயன்ட் சொசைட்டி மெம்பர் என்று சொல்ல வேண்டி வரும். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், கிராமங்களைப் பொறுத்தவரையிலும், விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் "ஃபார்ம் டாக்ஸ்" போதும் என்று கருதுகிறது. ராஜ் கமிட்டி அக்ரிகல்சுரல் ஹோல்டிங் டாக்சேஷன் நில உடைமைகளுக்குப் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை நம்முடைய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. கிராம மக்களைப் பொறுத்தவரையில், விவசாயி களைப் பொறுத்தவரையில் போட வேண்டிய வரிகள் போடப்பட்டிருக் கின்றன. அவ்வப்பொழுது அது பரிசீலிக்கப்பட்டு தேவையான மாற்றங்களைச் செய்கிறோம். ஏற்கனவே போடப்பட்டிருக்கும் வரியே அதிகம் என்று சொல்கிறார்கள். கிராமப்புறத்திலிருந்து வந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கிராமப்புற விவசாயிகளுக்கு அதிக வரி போட வேண்டுமென்று சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது பல கருத்துக்களைக் கூறி னார்கள். இந்த விவசாயிகள் உபயோகிக்கும் டீசல் ஆயிலுக்கு சலுகை காட்டும் உத்தேசம் உண்டா? அதுமட்டுமின்றி, டிரான்ஸ்போர்ட் இலாக்கா அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள், சமீபத்திலே இந்தக் கட்டணங்களை உயர்த்த உத்தேசம் உண்டா என்ற விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்பு கிறேன்.

THE HON. THIRU S. RAMACHANDRAN: I think the hon. Member Thiru R. Ponnappa Nadar is nurturing an apprehension that the increase in the levy of 2 paise per litre of diesel may have its repercussions on the bus fare revision also. I can very well appreciate this apprehension in view of the present revision of the railway fare. But I can assure the hon. Member and the House that there will not be revision of bus fares due to this. (Applause)

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நான் ஒரு கேள்வியை அமைச்சருக்கு எழுப்பியிருந்தேன். ரொம்ப முக்கியமான பிரச்னை. இந்த விவசாயிகளுக்கு இவ்வளவு வரி போடலாம் என்று மத்திய அரசாங்கம் சொல்லி இருக்கிறது. யோசனை சொல்லியிருக்

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஆகஸ்டு 22

கிறது. அக்ரிகல்சுரல் செக்டாருக்கு இன்னும் வரியை ஏற்றலாம் என்று சொல்லியிருக்கிறது. அதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. இங்கே ஒரு கருத்து இருக்கும். மத்திய சர்க்காருக்கு ஒரு கருத்து இருக்கும். அம்மாதிரி சொல்லியிருக்கிறது. அதேபோல் மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு பெட்ரோல் வரியை இன்னும் அதிகமாகப் போடலாம் என்று எதையாவது சொல்லியிருக்கிறதா? இல்லையென்றால் மாகாண அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் இதைப் பொறுத்தவரையில் நன்கு விவாதித்து எந்த அளவிற்கு மத்திய சர்க்கார் வரி போடலாம், எந்த அளவிற்கு மாகாண அரசாங்கம் வரி போடலாம் என்று பிளானிங் கமிஷனிலேயோ அல்லது மற்ற இடங்களிலேயோ முடிவு 'எடுத்திருக்கிறார்களா? ஏனென்றால் மத்திய சர்க்காரின் வரி ஒரு நாளைக்கு வருகிறது, அடுத்த நாள் மாகாண சர்க்கார் வரி போடுகிறது. பத்திரிகையைப் பார்த்தாலே பயங்கரமாக இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தால் நன்றாக இருக்கும். அமைச்சரவர்கள் என்னுடைய கருத்தை ஏற்றுக்கொள்வார் என்று தெரியும். அதற்கு விளக்கம் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, டயலாக்கை வைத்துக்கொண்டு என்ன பண்ணுவது? அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இரயில்வேயிலே வரி போட்டால் மாண்புமிகு உறுப்பினர்கள் அதைப்பற்றிச் சொல்வது கிடையாது. அங்கே வரி போட்டால் மட்டும் பேச்சே கிடையாது. (குறுக்கீடு) வெளியிலே கூட சொல்வதில்லை. எனக்குள்ள வருத்தம் எல்லாம் இங்கே 5 பைசா, 7 பைசா என்று வரி போட்டால் ஒரே சத்தமாக இருக்கிறது. ஆனால் அங்கே கிட்டத்தட்ட 33 பர்சென்ட்கூட போடுகிறார்கள், அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்வது இல்லை. மின்சாரத்திற்கு ஏற்றினால், டீசலுக்கு, பெட்ரோலுக்குப் போடுகிறார்கள், முன்பு எவ்வளவு வரி இருந்தது என்ற கணக்குக்கூட மறந்துவிடக் கூடிய அளவிற்கு அதிகமாகப் போடுகிறார்கள். 400 கோடி, 500 கோடி என்று போடுகிறார்கள். அதனால் மறந்து விடுகிறது. இதெல்லாம் சின்ன விஷயம். 2 பைசா, 3 பைசாவினால் ஒன்றும் ஆகாது. அரசாங்கத்திற்கு இதனால் வருமானம் வருமே தவிர பெரிய அளவில் பாதிக்காது.

(Dr. H. V. Hande rose.)



1974 ஆகஸ்டு 22]

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : Just a minute. I am on my legs. Please be seated.

(Dr. Hande was standing.)

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : Please be seated. I say, please be seated.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதற்குள் முடித்துவிடாதீர்கள்.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : I am sorry you are always doing like this. You should not comment on the behaviour of the Chair. I have to make some observations.

[முற்பகல் 11-30]

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதற்குள் முடித்துவிடாதீர்கள்.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : How can the hon. Member presume things ? The hon. Member Dr. Hande has raised a question about the financial relations between the Centre and the State. I am afraid it has no bearing on the Bill that we are presently discussing. I am closing the debates and I am going to put the motion to the vote of the House. Is the hon. Member raising a point of order ?

DR. H. V. HANDE : Yes, I am raising a point of order. I want to know whether it is in order for the Hon. Minister to talk about that subject. Because he has raised the point that we have not raised a word of protest against the taxation measures of the Central Government I am raising it. In my speech I was trying to help the Hon. Minister. I have been stating that the Centre is taxing at a very fantastic and horrible rate. The taxation proposed by the State Government may yield only a small amount but the point which I am trying to make out is, let there be a protest by the State Government about it to the Central Government. In my speech I have indirectly helped him to make a protest to them. Let us persuade the Central Government to discuss the matter with us so that we can say, ' this portion you can tax and the other portion we will tax.' That is my point.

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN) : I am sure the Hon. Minister will appreciate your co-operation. Now I am putting the motion to the vote of the House.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இச் சட்ட முன் வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(உ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/74).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே "தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1974) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

கூடுதல் நிதி திரட்டுவதற்காக, அரசு, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 3-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்கீழ் விதிக்கப்

* 16—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



படும் பலமுனை வரி வீதத்தையும், 5-ஆவது பிரிவைச் சேர்ந்த (b) பகுதியின் கீழ் விதிக்கப்படும் வரி வீதத்தையும் 3½ சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்த முடிவு செய்துள்ளது. அண்டை மாநிலங்க ளான ஆந்திரப் பிரதேசம், கேரளா மாநிலங்கள் ஏற்கனவே பல முனை வரிப் பொருள்கள் மீது 4 சதவீத வரி விதிக்கின்றன. மேற்படி சட்டத்தைச் சேர்ந்த முதல் விவர அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளவற்றுள் கரும்பு தவிர்த்த இனங்களுக்கு விதிக்கப்படும் ஒரு முனை வரியை 8 சதவீதமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்கு தற்பொழுது 7 சதவீத ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. கரும்புக்கான ஒருமுனை வரியை 12 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு அச்சட்ட முன்வடிவு பரிசீலனைக்காக பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை ஏற்குமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மூலமாக 3½ சதவிகித வரியை 4 சதவிகித மல்டி பாயின்ட் டாக்சாக உயர்த்துகிறார்கள். 7 சதவிகித வரியை 8 சதவிகித வரியாக சிங்கிள் பாயின்ட் டாக்சாக உயர்த்துகிறார்கள். கரும்புக்கு 12 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை மானியக் கோரிக்கைகளை வைக்கின்ற நேரத்திலேயே சூசகமாக இதைப் பற்றித் தெரிவித்தார்கள். மதுவிலக்கை மீண்டும் கொண்டுவருவதாலும் மற்ற சில காரணங்களாலும் 60 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படுகிறது; 60 கோடி ரூபாயை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு புது வரிகள் இருக்குமென்று சூசகமாகத் தெரிவித்தார்கள்.

இப்போது உயர்த்தப்பட்டிருக்கும் இந்த சேல்ஸ் டாக்ஸ் மூலமாக எவ்வளவு தொகை நமக்குக் கிடைக்கும் என்பதைப் பற்றி ஃபினான் ஷியல் மெமோராண்டத்தில் தெரிவித்திருந்தால் பயனுள்ளதாக இருக்கும். இந்த வரி உயர்வின் காரணமாக ஏராளமாக விலைவாசி

ஏறும் என்று நான் சொல்லுகிறேன். நான் அப்படிச் சொன்னவுடனேயே மத்திய சர்க்கார் போடுகிறதே, அதற்கு என்ன செய்தீர்கள் என்று கேட்பார்கள். என்னைப் பொறுத்தவரை இங்கு நான் மாநில அரசாங்கத்தைக் குறிப்பிட்டுத்தான் பேச முடியும். இதனால் விலைவாசி ஏராளமாக ஏறும் என்பதிலே வேறுபட்ட கருத்து அரசாங்கத்திற்கோ, மற்ற எதிர்க்கட்சி நண்பர்களுக்கோ இருக்க முடியாது. எந்த அளவுக்கு இதனுடைய எஃபக்ட் இருக்குமென்ற பயங்கரமான நிலைமையைப் படம் பிடித்துக் காட்டுவது நல்ல வகையில் இருக்குமென்று கருதுகிறேன்.

சேல்ஸ் டாக்ஸ் மசோதா வருகிற நேரத்தில் காரணத்தைச் சொன்னார்கள். பணம் பற்றாக்குறை, புதிதாகப் பிரச்சினை ஏற்பட்டது என்றார்கள். புதிதாக மறுபடியும் மதுவிலக்கைக் கொண்டு வந்ததால் நெருக்கடி என்றார்கள். நம்முடைய மாநிலத்தில் ஒரு பயங்கரமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்.

நாலைந்து நாட்களாகப் பார்த்தீர்கள். பல்வேறு முனைகளில் நிதியைப் பெருக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதைக் காட்டுகிறது? பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஜாஸ்தியாக ஆகியிருக்கிறது. அந்த அளவுக்கு தேவை ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் வாதம். அண்டர் எஸ்டிமேட் இல்லாத அளவுக்கு இதன் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்று சொல்ல வேண்டும். ப்ரொஹிபிஷனைச் சரிக்கட்டத்தான் முன்பு ராஜாஜி அவர்கள் சேல்ஸ் டாக்சைக் கொண்டு வந்தார்கள். அது பெருகிக் கொண்டே போகிறதே தவிர, குறையவில்லை. ஏற்றிக் கொண்டே போகிறார்கள். இதற்கு மத்திய அரசாங்கத்தைச் சுட்டிக்காட்டப் போகிறார்கள் என்று தெரியும். இருந்தாலும் கூட இதைச் சரியான வகையில் ஆராய்ந்து காம்ப்ரஹென்சிவ் ஆகக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: You cannot have the cake and eat it too. If you want to introduce prohibition to offset the revenue loss, you must have to levy other taxes. It is not as if there is financial crisis in Madras State only. It is there throughout the country and the Hon. Mr. Chavan has admitted that there is financial crisis throughout the country and the States must co-operate to get ready to levy proper taxation measures. So far



as this taxation measure is concerned, it does not affect the poorer sections of the society. So far as increase of sales tax in this particular case is concerned, all the commodities which are exempt now will continue to be exempted. So, I think Government is not wrong in increasing the sales tax, due to expected deficit on account of introduction of prohibition. Not only tax, but cost of production, cost of construction and cost of administration—everything is going up. So taxation cannot remain at the old rate.

If we have a society like this, if there is a sort of capitalist society, taxation is bound to increase and that is inevitable. It is not because of the policy of this Government but because of the policy of the Central Government also, in increasing cement prices, steel prices etc. (I do not want to exhaust that list here), that prices have gone up. This Assembly is ready to co-operate with the Government in getting more money. I think this is a good measure by which we can get some more money to compensate the loss due to the introduction of prohibition. By that money we can do some good to the people. Thank you.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, கரும்புக்கு 7 சதவிகிதத்தில் இருந்து 12 சதவிகிதம் வரை வரி போட்டிருப்பதை நான் எதிர்க்கிறேன். 8.5 ரிக்கவரி ஷுகருக்கு ரூ. 85ல் இருந்து ரூ. 90 வரை கொடுக்கப்படுகிறது. இப்போது சிறிது அதிகப்படுத்தியிருக்கிறார்கள். சில மில்களில் ரூ. 100 வரை கொடுக்கிறார்கள். மில்களில் வாங்கும்போது, ரிசர்வ் பாங்கிலிருந்து பெற்ற பணத்துக்கு வட்டி, வாடகை, உரக்கடன் இவையெல்லாம் போக விவசாயிக்கு ரூ. 60க்கு மேல் டன்னுக்கு கிடைப்பதில்லை. பாசன வசதி, உரச் செலவு, பண்ணைச் செலவு இவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டால் விவசாயிக்கு லாபமே இல்லை.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், கரும்பின் பேரில் வரி போடுவதற்குப் பதிலாக சர்க்கரையின் மேல் போடலாம். இன்று சர்க்கரைக்கு வெளிநாடுகளில் டிமான்ட் அதிகமாக இருக்கிறது. ரூபாய் ஐயாயிரம் வரை விற்கிறது. முன்பு சப்ஸிடி கொடுத்து விற்றார்கள். இப்போது சப்ஸிடி இல்லாமல் விற்கிறது. ஐயாயிரம் ரூபாய் வரை விற்கிறது. இப்படி வரி போடுவதால் கரும்பு விவசாயம் குறையும்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 ஆகஸ்டு 22

உத்தரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கு ரிக்கவரி 10½ சதவிகிதம் இருக்கிறது. தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரிக்கவரி 11 சதவிகிதம். சக்தி ஷுகேர்ஸ்-ல் ரிக்கவரி 10 சதவிகிதம் தான் இருக்கிறது. யு.பி.-யில் 9 சதவிகிதத்தில் இருந்து 10½ சதவிகிதம் வரை இருக்கிறது. யு.பி-யில் ரூ. 125 என்று பிக்ஸ் செய்திருக்கிறார்கள். அங்கு இரண்டு மில்கள் மூடப்பட்டு பின்னர் இன்ன விலை கொடுத்தால்தான் முடியும் என்று சொல்லி அதற்கு ஒத்துக்கொண்டார்கள். இந்த சர்க்கார் அப்படி முதலாளிகளிடம் பேசுவதில்லை, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில்லை. சர்க்கார் நிர்ப்பந்தம் கொடுத்திருந்தால் டன்னுக்கு ரூ. 125 கண்டிப்பாக கிடைத்திருக்கும். எனவே கரும்புக்குப் பதிலாக சர்க்கரை மீது வரி போடலாம். இன்று இரண்டாயிரம் டன் உற்பத்தி செய்யக் கூடிய ஆலை கூட இருக்கிறது. அவர்களுக்கு கோடிக்கணக்கில் லாபம் வருகிறது. எனவே கரும்பின் மீது வரி போடுவது சரியல்ல. எனவே இதை புனர்பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வா. மை அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த வரியை 3 சதவிகிதத்தில் இருந்து 4 சதவிதம் ஆக உயர்த்தியுள்ளது வணிகர்களை ஓரளவு பாதிக்கத்தான் செய்கிறது. விற்பனை வரி என்ற அம்சத்தை முதன்முதலாக கொண்டுவரும்போது அரை சதவிகிதம்தான் ராஜாஜி அவர்கள் கொண்டுவந்தார்கள். இன்று அந்த அரை சதவிகிதம் 3½ சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம் ஆக ஆகியிருக்கிறது. ஆனால் இன்றுள்ள சூழ்நிலையை அனுசரித்து இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். ஆகவே நாங்கள் இதை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இருந்தபோதிலும் ஒரு ஆலோசனையை நான் அமைச்சரவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த பலமுனை விற்பனை வரியை விட ஒருமுனை விற்பனை வரியை வணிகர்கள் பொதுவாக வரவேற்கிறார்கள். சென்ற ஆண்டு பல பொருள்களை ஒருமுனை விற்பனை வரியின்கீழ் கொண்டுவந்தபோது வணிகர்களின் சிரமம் வெகுவாகக் குறைந்தது. அதேசமயத்தில் அரசுக்கு வரி இழப்பு ஏற்படுவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. வரி இழப்பு ஏற்படாத வகையில் பலமுனை விற்பனை வரியின்கீழ் வரக்கூடிய பொருள்களை ஒருமுனை விற்பனை வரியின்கீழ் கொண்டுவந்தால் அதிகப்படியாக விற்பனை வரி கூட வரும். இந்த பலமுனை விற்பனை வரியில் உள்ள கோளாறு என்னவென்றால் அதிகாரிகள் வணிகர்களிடத்தில் அவமதிப்பாக, சுய லாபத்துடன்



1974 ஆகஸ்ட் 22] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

நடக்கிறார்கள். வெளிப்படையாக நான் அதைச் சொல்லமுடியவில்லை. சுயலாபம் என்பதன் அர்த்தம் அமைச்சர்களுக்கும் அரசாங்கத்திற்கும் விளங்கியிருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதிகாரிகளுக்கு சுயலாபமா அல்லது வியாபாரிகளுக்கு சுயலாபமா?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நாட்டின் பிரஜைகளான வியாபாரிகளுக்கு சொந்த லாபம் வேண்டியதுதான். இல்லாவிட்டால் அவர்கள் குழந்தைகுட்டிகளை எப்படி வளர்க்க முடியும்? எப்படி அவர்கள் உலகத்தில் வாழ்வார்கள்? ஒவ்வொரு மனிதனும் சுயலாபத்துடன் வாழவேண்டியதுதான். ஆனால் அதிகாரிகளுக்கு சம்பளம், படி இவைகளை அரசு நிர்ணயித்திருக்கிறது, எனவேதான் அங்கும் சுயலாபம் வந்துவிடக்கூடாது என்று மறைமுகமாகச் சொல்கிறேன். ஆக, இந்தத் தொந்தரவுகளிலிருந்து வணிகர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று சொன்னால் பலமுனை விற்பனை வரிக்குப் பதிலாக ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டுவருவதுதான் சரியாக இருக்கும். எவ்வளவோ பொருள்களை ஒருமுனை விற்பனைவரியின் கீழ் கொண்டுவந்திருக்கிறீர்கள். அதை பரவலாக வணிகர்கள் வரவேற்றிருக்கிறார்கள். 7 சதவிகிதத்தில் இருந்து 8 சதவிகிதம் ஆகக் கூட உயர்த்தியிருக்கிறீர்கள். அதனால் வணிகர்கள் பாதிக்கப்படுவதில்லை. அதை வரவேற்கிறேன். கரும்புக்கு 12 சதவிகிதம் என்று வரி உயர்த்தியிருப்பதை பழனிசாமி அவர்கள் குறை கூறினார்கள். நாட்டில் வரி விதிக்கப்படுகிறது என்றால் அது சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்டவர்களையும் தொடத்தான் வேண்டும். வணிகர்களின் மேல்தான் வரி விதிக்கவேண்டும், விவசாயிகள் வரியே செலுத்த வேண்டியதில்லை என்ற முறையில் ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்துவது நல்லதல்ல. விவசாயிகளும் இந்த நாட்டில் வாழ்பவர்கள்தான், வணிகர்களும் இந்த நாட்டில் வாழ்பவர்கள்தான். ஆகவே ஒவ்வொருவரும் அரசுக்கு தங்கள் தங்கள் கடனைச் செலுத்தித் தானாகவேண்டும். அப்போதுதான் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியும். கரும்பு போன்ற பயிர்களை விளைவிக்கக் கூடிய விவசாயிகளை நான் பார்க்கிறேன். அவர்கள் வசதிபடைத்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கரும்பு வரியை
விவசாயி கொடுப்பதில்லை. சக்தி ஷுகர் பாக்டரியிலிருந்து
வாங்கினால் அவர்கள் கொடுக்கிறார்கள். அமராவதி ஷுகர்
பாக்டரியிலிருந்து வாங்கினால் அந்த ஆலைக்காரர்கள்தான் கொடுக்க
வேண்டும் அந்த வரியை. It is only a purchase tax.
ஆகவே, தவறுதலாகப் புரிந்து கொள்ள வேண்டாம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்களின் விளக்கம்
தெளிவுபடுத்திவிட்டது. பழனிசாமி அவர்களின் ஆட்சேபனை
இதிலிருந்து நீங்கிவிட்டது என்று நினைக்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : அவர்கள் வாங்கும்போது அந்த
வரியைக் குறைத்துத்தானே விவசாயிகளிடத்திலிருந்து வாங்கு
வார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 110 என்று
சொன்னால் அதற்குண்டான வரியை நாங்கள் வசூல் செய்து
கொள்கிறோம். விவசாயிகளைப் பொறுத்தவரையில், கரும்பின் விலை
குறைகிறமாதிரி சாத்தியக்கூறு இல்லை. It is only a purchase tax.
ஆலைக்காரர்களிடமிருந்து நாங்கள் வசூல் செய்துகொள்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : வரி கட்டும்போது லாபத்தில் குறைக்
கிறார்கள். அதனால் மறைமுகமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்
என்பதை ஒத்துக்கொண்டுதானாகவேண்டும். வரி வசூலிக்காமல்
இருந்தால் லாபம் விவசாயிகளுக்கு பங்கிட்டு அளிக்கப்படுகிறது.

திரு. கோவை செழியன் : கரும்புக்குப் போடுகிற வரியை
மில்காரர்கள் தந்துவிடுகிறார்கள், விவசாயிகளைப் பாதிக்காது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில மில்களில் போனஸ்
தருகிறார்கள். அந்த போனஸினுடைய விகிதம் குறைந்துவிடும்.
லாபத்தை வைத்துத்தான் அவர்கள் போனஸ் தருகிறார்கள்.
அப்போது போனஸ் என்றவிதத்தில் விவசாயிகளுக்குத் தருகிற
பணம் குறைந்துவிடாதா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நாங்கள் கூட யோசித்துப் பார்த்தோம். விவசாயிகளிடமிருந்து வரி வசூல் செய்து விடலாமா என்று பார்த்தோம். அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. அதனால்தான் பர்சேஸ் டாக்ஸ் போட்டோம். கோவை செழியன் அவர்களுக்கு அதிகமாக வருவதால், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். அதிலே லாபம் இல்லை.

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்த பிறகு நான் இந்த வரியை மனப் பூர்வமாக வரவேற்கிறேன். டாக்டர் ஹான்டே அவர்கள் சுட்டிக்காட்டியது போல், இந்த அரசாங்கத்திற்கு இந்த வரி விதிப்பால் எவ்வளவு வருமானம் வரும் என்ற புள்ளிவிவரங்களைக் காட்டியிருந்தால் நலமாக இருந்திருக்கும். இனி வருகிற காலத்திலாவது இப்படி வரி விதிப்புகள் கொண்டு வருகிறபோது, அரசாங்கம் எதிர்காலத்தில் வருகிற வருமானம் எவ்வளவு இருக்கும் என்பதை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற வரிவிதிப்பு மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : துணைத் தலைவரவர்களே, பொதுவாக இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற வரிவிதிப்பை நாங்கள் ஆதரிக்கிறோம்.

இந்த வரி விதிப்பைப் பற்றி நாங்கள் பேசுகிறபோது, மற்ற மாநிலங்களில், மத்திய அரசு போடும் வரிகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் பெரிய திருப்தி ஏற்படுகிறது. பெட்ரோல் விலை 1½ ரூபாயாக இருந்ததை ரூ. 3 என்று திடீரென்று ஆக்கிவிட்டார்கள். இன்று பத்திரிக்கையில் பார்த்தேன். ரயில் கட்டணம் உயர்வு. நம்மை எல்லாம் திடீரென்று 3-வது பிரிவிலே பயணம் செய்பவர்களை இரண்டாவது பிரிவு என்று மாற்றியிருக்கிறார்கள். இது என்ன உயர்வு என்று கேட்டால் 3-வது என்று இருந்ததை அழித்து விட்டு, இரண்டாவது என்று எழுதியிருக்கிறார்கள். அதாவது பலகையில் எழுதுவதில்தான் உயர்வு கொடுத்து இருக்கிறார்கள். பிரயாணம் செய்பவர்களின் வசதியை ஒன்றும் உயர்த்தவில்லை. ஆனால் இப்போது 25 சத வீதம் இரண்டாம் வகுப்புக்கு கட்டண உயர்வு, 35 சத வீதம் முதல் வகுப்புக்கு கட்டண உயர்வு என்று போட்டு இருக்கிறார்கள்.

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்டு 22

இப்படிப்பட்ட பயங்கரமான வரி விதிப்பைப் பார்க்கிறபோது நாம் திருப்திப்பட்டுக்கொள்ளலாம். இதைப் பார்க்கிறபோது நம் அரசாங்கம் ஏதோ பயந்து கொண்டு வரி போடுவது போல் இருக்கிறது. ½ பைசா தான் விற்பனை வரியில் உயர்த்தியிருக்கிறார்கள். இதற்கு வியாபாரிகள், ஏழைமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். இது ஒன்றும் பெரிய வரி விதிப்பு அல்ல. மத்திய சர்க்கார் போட்டிருக்கிற வரியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்த ½ சத வீதம் வரி போட்டிருப்பதை பாராட்டுவது நம் கடமையாகும்.

வியாபாரிகளிடத்தில் ஒரு பெரிய குறை இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஒரு முனை விற்பனை வரி போடுகிற முறையை எல்லாப் பொருள்களுக்கும் கையாளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார்கள். இப்போது வரி மூலமாக 150 கோடி வரலாம் என்றால் இன்னும் 10 கோடி அதிகமாக வரும் வகையில் பல பொருள்களுக்கு ஒரு முனை வரி போட்டு அமைத்துக்கொள்ளுங்கள் என்று வியாபாரிகள் சங்கத்தினர் கேட்டுக்கொள்கிறார்கள். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இப்போது பல இடங்களில் வரி வசூலிக்கிற தன்மை இருப்பதால் ஒரு இடத்தில் விடப்பட்டாலும் மறு இடத்தில் பிடிக்கும் தன்மை இருக்கிறது. ஒரு முனை வரி என்று போட்டால் அந்த ஒரு இடத்தில் தப்பித்துக்கொண்டால் வரி ஏய்ப்புச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை, இதற்கு பதில் சொல்கிற வகையில் வியாபாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், இன்றையதினம் 4 சதவீதம் என்று இருப்பதை 10 சதவீதம் ஆகப் போட்டால் கூட நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படி வருகிறபோது, ஒரு எல்லையிலிருந்து, ஒரு தொழிற்சாலையிலிருந்து ஒரு பொருள் வெளிப்படுகிற நேரத்தில், அவற்றை பெரிய கோடவுனில் விவசாயிகளிடமிருந்து பர்சேஸ் செய்து, உற்பத்தியாளர்களிடமிருந்து பர்சேஸ் செய்து, மார்க்கெட்டிங் சொசைடி மூலம் அவற்றை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய, நாமே அதிக விலைக்கு வாங்கி அவற்றை ஒரு முனை வரியின்கீழ் கொண்டு வந்து குறைந்த விலைக்கு விற்கலாம். நாமே பர்சேஸ் செய்வதால் இதிலே மறைமுகமாக ஏதும் நடைபெறுவதற்கு இல்லை. அப்படியே இருந்தாலும் வரி ஏய்ப்புக்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 22] [திரு. கே. எ. வகாப்]

இப்போது சர்க்கரை விலை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 2.15க்கு விற்கப்படுகிறது. அதே சர்க்கரை வெளி மார்க்கெட்டில் ரூ. 4.50 கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. வெளி மார்க்கெட்டில் அதிகப் பணம் கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் வரி என்று கேட்கிறபோது சங்கடப்படுகிறார்கள். அரசாங்கத்தின் மீது குறை சொல்கிறார்கள். இந்த நாட்டில் கரும்பு உற்பத்திக்கு நல்ல எதிர்காலம் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். கரும்புத்தோட்ட விவசாயிகளின் செலவு அதிகமாக இருக்கிறது. நெல்லின் விலை இப்படியே இருந்தால் நெல்தான் சாகுபடி செய்வார்களே தவிர கரும்பு சாகுபடி செய்ய மாட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகாமல் இருப்பதற்கான வகையில் கரும்பின் விலையை ரூ. 150 வரை உயர்த்தவேண்டும். இப்போது ரூ. 93 டன்னுக்கு கொடுக்கிறார்கள். ரிகவரி 11 சத வீதம் வருகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் 7 சத வீதம், 7½ சத வீதம் ரிகவரி வந்தபோதிலும் ரூ. 150, 140 என்று கொடுக்கிறார்கள். ஆகவே, இங்கேயுள்ள விவசாயிகளைப் பாதிக்காத வகையில் ரூ. 150 டன்னுக்கு கொடுத்தால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன். நெல்லின் கொள்முதல் விலையும் ரூ. 140 இருந்தால்தான் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும்.

அரசாங்கம் வரி போடுவதை வேண்டாம் என்று சொல்லவில்லை. வரி போட்டால்தான் வசதிகளைப் பெருக்க முடியும். ஆனால் அதே நேரத்தில் பொருள்களும் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும். கரும்புக்கு அதிக விலை நிர்ணயிக்கவேண்டும். அப்படி நிர்ணயித்தால் விவசாயிகளும் கரும்பு அதிகம் சாகுபடி செய்ய முன் வருவார்கள் என்று கூறிக்கொண்டு, இந்த வரிகளை நான் வரவேற்கிறேன், அதே நேரத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்களைக் குறித்து * என்று நான் உபயோகித்த வார்த்தைகளை பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஏற்கெனவே ஆணையிட்டுள்ளேன். இது சம்பந்தமான வாதங்கள், பேச்சுக்கள், குறுக்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கிடுகள் அனைத்தையும் நீக்கவேண்டுமாய் இப்போது ஆணையிடு கிறேன். அவற்றை பத்திரிக்கைகளிலும் வெளியிடவேண்டாம் என்று இப்போது உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு ரெவன்யூ அமைச்சரால் கொண்டுவரப்பட்டுள்ள வரிவிதிப்புக் கொள்கையை ஆதரித்து, எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் கருத்துக்கள் ஒப்பிட்டு நான் பேச விரும்புகிறேன். பொதுவாக, மதுவிலக்கு அமல்படுத்தப் படுவதால் ஏற்படும் நஷ்டங்களைச் சரிக் கட்டுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் திறமையான முறையில் பொதுமக்களை அதிகமாகப் பாதிக்காத வகையில் ஏற்பட்டு இருக்கின்ற துண்டினை சரிக் கட்டி இருக்கிறார்கள். அதேபோல்தான் அந்த விதத்தில் கரும்புக்கு 7 சத வீதம் பர்சேஸ் டாக்ஸ் என்பதை 12 சத வீதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். நான் இங்கே கூறுவது எல்லாம் ஏற்கெனவே போட்ட 7 சத வீதம் பர்சேஸ் டாக்சை அரசாங்கம் முறையாக வசூலிக்கிறார்களா? சர்க்கரை ஆலை வைத்து நடத்துகிறவர்கள் ஒழுங்காகச் செலுத்துகிறார்களா என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இன்றைய தினம் எனக்குத் தெரிந்த வரையில் தமிழகத்திலே இருக்கக் கூடிய சர்க்கரை ஆலை அதிபர்கள் ஏறக்குறைய 5 கோடி ரூபாய்க்கு மேல் அவர்கள் அரசாங்கத்திற்குக் கட்டவேண்டிய வரிப் பணத்தை கட்டாமல் இருக்கிறார்கள். ஏன் கட்டவில்லை. அவர்களால் முடியவில்லையா என்றால், இல்லை. கடந்த 2–3 ஆண்டுகளாக சர்க்கரையில் அதிகமான லாபத்தைப் பெற்று இருக்கிறார்கள். விவசாயிகளுக்குத்தான் அவர்கள் ஒழுங்காக கொடுக்கவில்லை, நேர்மையாக நடத்தவில்லை. லாபம் குறைந்து விட்டது என்று யாரும் சொல்ல முடியாது. அப்படி லாபம் சேகரிக்கும் நேரத்தில், ஒவ்வொரு சர்க்கரை ஆலையில் 1 கோடி, 1½ கோடி, 2 கோடி என்று நெட் பிராபிட் பெறுகிற நேரத்தில் அரசாங்கத்திற்கு எதுவும் வரி செலுத்தவில்லையே, அது ஏன் என்பதை நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் துருவிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில ஆலை அதிபர்கள் பணம் கட்டாத காரணத்தால் சுமார் 2 கோடிக்கு மேல் வசூல் செய்ய வேண்டிய வரிப்பணத்தை ரெவின்யூ ரிகவரி ஆக்ட்டை அப்ளை செய்து வசூல் செய்யுங்கள் என்று கூட



அரசாங்கம் செய்து இருக்கிறது. 2 கோடிக்கு மேல் அவர்கள் நீண்ட காலமாக செலுத்தாத காரணத்தால் அவர்களுக்கு தவணை கொடுத்தும் எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டது. அப்படி ஆகியும் அவர்கள் கொடுக்காமல் இருக்கிறார்கள். ரெவின்யூ ரிகவரி ஆக்ட்படி செய்யுங்கள் என்று ரெவின்யூ அதிகாரிகளுக்கு குறிப்பாகச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

[நண்பகல் 12.00]

The Direcotr of Sugar is incharge of collection of this tax.

என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்? ஒரு விவசாயி 10 ரூபாய் கட்டவில்லையென்றால், கூட்டுறவுச் சங்கத்தில் கடன் ரூ. 100 வாங்கி கொடுக்கவில்லையென்றால், அரிவுகாலைக் கழட்டுகிறோம். தட்டுமுட்டுச்சாமான்களைத் தூக்குகிறோம். பத்து ரூபாய் வரி கட்டவில்லை என்றால் விவசாயிகளிடமிருந்து அவர்களுடைய அன்றாடத் தேவைப்படும் பொருட்களைகூட மணியக்காரர் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் 4 கோடி, 5 கோடி ரூபாயை, அரசாங்கத் திற்குக் கட்டவேண்டிய வரிப் பணத்தை இன்னும் ஏன் கட்டவில்லை? இதற்கு அமைச்சரவர்கள் இங்கே பதில் சொல்ல முடியாவிட்டாலும் ரெவின்யூ அமைச்சராக இருப்பதால் ஏன் வசூல் செய்யபட்வில்லை என்பதை அவர்கள் அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த வரியைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை சுகர்கேன் செஸ்-ஆக அது இருக்கலாம். விற்பனை வரியாக இருந்தால் இப்படி விட்டுவைக்க மாட்டார்கள். வசூல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பார்கள். எந்த வரி என்று அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால் வசூல் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : ஆலை முதலாளிகள் அரசாங்கத்திற்கு கட்டவேண்டியது என்று சொன்னேன். அது கரும்பு செஸ்ஸாக இருக்கலாம் அல்லது பர்சேஸ் டாக்ஸ்ஸாக இருக்கலாம். 4 கோடி, 5 கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை எளிய விவசாயிகள் கட்டத் தவறிவிட்டால் அவர்களுக்கு என்ன கஷ்டம் இருந்தாலும் வசூல் செய்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

இந்த வரி உயர்வின் காரணமாக பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருகிறது என்பதை அறிந்து, 7 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக உயர்த்துவதன் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கரும்பு விலையைப்பற்றி இங்கே சொன்னார்கள். இன்றைய தினம் வெட்ட இருக்கிற கரும்புக்கு என்ன விலை கொடுக்கப் போகிறார்கள் என்று சர்க்கரை ஆலை அதிபர்கள் இன்னும் சொல்ல மறுக்கிறார்கள். அப்படி இருக்கும்போது கரும்பு விவசாயிகள் கரும்பை வெட்ட மாட்டோம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்துவிட்டோம். இப்போது இருப்பதை மட்டும் சொல்லவில்லை. அடுத்தாண்டு கரும்பு நடுவதற்கும் முடியாது. என்ன விலை கொடுப்பார்கள் என்பதை அறிந்து, கரும்பு விவசாயிகளுக்கு லாபமாக இருந்தால் கரும்பு விவசாயம் பண்ணுவோம்; இல்லை என்றால் கரும்பு விவசாயம் பண்ணாமல் நெல் பயிர் செய்யுங்கள், கேழ்வரகு பயிர் செய்யுங்கள், கம்பு பயிர் செய்யுங்கள்; நஷ்டம் வரக்கூடிய கரும்பை பயிர் செய்யாதீர்கள் என்று சொல்லி யாரும் கரும்பு பயிர் செய்ய மாட்டோம்.

அரசாங்கம் இதிலே தலையிட்டு, கரும்பு பயிர் செய்வோருக்கு எதிர்காலத்திலே என்ன விலை கொடுப்பார்கள் என்று சொல்லிவிட வேண்டும். இன்றையதினம் விவசாயிகள் நஷ்டம் வருவதால் கரும்பு பயிர் செய்ய தயாராக இல்லை. அடுத்தாண்டு வெட்டக்கூடிய கரும்புக்கு குறைந்தது 150 ரூபாயாவது கொடுப்பதாக சர்க்கரை ஆலை அதிபர்கள் சொன்னால் தமிழ்நாட்டு விவசாயிகள் கரும்பு பயிர் செய்வார்கள். இல்லாவிட்டால் நெல், கேழ்வரகு, கம்பு போன்ற இதர உணவு தானியங்களைப் பயிர் செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் வருகிறது என்றால் 80 ரூபாய் அல்லது 60 ரூபாய்க்குக் கூட கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். 37 ரூபாய்க்கு கூட கரும்பு விற்றிருக்கிறோம். ஆனால் இன்றையதினம் இருக்கின்ற நிலைமை என்ன என்பதை பார்க்க வேண்டும். சர்க்கரை ஓப்பன் மார்க்கெட்டிலே வரி உட்பட 420 ரூபாய்க்கு விற்கிறது. லெவி சர்க்கரைக்கு 135 ரூபாய். ஆனால் ஓப்பன் மார்க்கெட்டில் 420 ரூபாய் வரி உட்பட; வரியை தள்ளிப் பார்த்தால் 320 ரூபாய்க்குமேல் வரும். அதன் காரணமாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய எந்த ஆலை முதலாளிக்கும் 2 கோடி





ரூபாய்க்குமேல் லாபம் வரும். அதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படி இருக்கும்போது ஏன் செஸ் பணத்தை கட்ட மறுக்கிறார்கள்? அவர்கள் கட்ட விரும்பவில்லை. காரணம் வெளி மார்க்கெட்டிலே கரும்பை வாங்குவதற்காக அந்தப் பணத்தைப் பயன் படுத்துகிறார்கள். சாதாரண நடைமுறைச் செலவுகளுக்காக அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள். அரசாங்கத்திற்கு சேரவேண்டிய பணத்தை இப்படி பயன்படுத்துவது ஒரு டெம்பரரி மிஸ்ஸப்பிரோபிரியேஷன் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, குறிப்பிட்ட டைரக்டர் ஆஃப் சுகர்ஸ் உடனடியாக பாக்கியை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் அவர்கள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்த மசோதாவை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக இன்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வரி விதிப்பு மசோதாவை கொள்கை அளவில் வரவேற்று, கரும்பு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் கிருஷ்ணமூர்த்தி அவர்களும், கோவை செழியன் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்ட கருத்துக்களில் சிலவற்றை நானும் ஆதரித்து, என்னுடைய கருத்துக்களையும் சொல்லிவிட விரும்புகிறேன்.

இந்த கரும்பு வரி விதிப்பு 7 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது 5 சதவிகிதம் இப்போது கூட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு மக்கள் எல்லாம் பாராட்டிப் போற்றக்கூடிய அளவுக்கு மதுவிலக்கை மறுபடியும் கொண்டுவந்திருப்பதற்காக நாங்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம். மதுவிலக்கைக் கொண்டு வருவதினால் ஏற்படுகின்ற இழப்பை சரிக்கட்டுவதற்காக இந்த கூடுதல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதால் இதை நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த நாட்டிலே 80 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்படக் கூடாது. நம்முடைய அரசாங்கம் கரும்பு விவசாயம் செய்வோருக்கு ஊக்கமளித்து வருகிறது. இந்த நேரத்தில் கரும்பு விவசாயத்தில் மத்திய அரசு சட்டம் குறுக்கிடுகிற காரணத்தால், அந்த சட்டத்தின்படி 70 சதவிகிதம் சர்க்கரையை மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டு, 165 ரூபாய்க்கு ஒரு டன் சர்க்கரை என்ற அளவில்

[திரு. கே. கந்தசாமி] [1974 ஆகஸ்டு 22

எடுத்துக்கொண்டு, நமக்கு மீதி 30 சதவிகிதத்தைக் கொடுக்கிறார்கள். அது நமக்குப் போதாது. அதனால் உற்பத்தி அதிகம் பண்ணினாலும் போதுமான அளவுக்கு சர்க்கரை கிடைக்காமல் கஷ்டப்படுகிறோம் என்பது உண்மை. அதற்காகத்தான் நாங்கள் கடந்த சட்டமன்றத் தொடரிலே கூட, அதை குறிப்பிட்டபோது மாநில மத்திய உறவுகளை பாதுகாக்கவேண்டுமென்று கருதினாலும்கூட, நடைமுறையில் இருக்கிற சிக்கல்களின் காரணத்தால் இந்த நாட்டிலே இருக்கிற 80 சதவிகித ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களை, இந்த ஜனநாயக நாட்டின் மெஜாரிட்டியாக இருக்கின்ற மக்களை பாதிக்கக் கூடிய சட்டம் எதுவாக இருந்தாலும், அது மத்திய அரசு சட்டமாக இருந்தாலும், மாநில அரசு சட்டமாக இருந்தாலும், அதைத் திருத்த வேண்டுமென்று சொல்வதில் தவறு இல்லை. நான் இப்படிச் சொல்வதால் அரசியல் கட்சி சாயம் பூசலாம். இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசு சட்டமோ மாநில அரசு சட்டமோ இந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான பாதுகாப்பு கொடுக்கவில்லை. மத்திய அரசு சொல்லலாம். அவசியம் ஏற்பட்டால் அதற்கு எதிரான முறைகளை கையாண்டு, பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால் தவிர்க்க முயல வேண்டுமென்ற கருத்தைச் சொல்லலாம். ஆனால் அந்தக் கருத்து நடைமுறைக்கு உகந்ததாக இல்லை.

இன்றைக்கு நாட்டிலே விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது என்றால் அது மத்திய அரசின் கொள்கையினால்தான். எல்லாப் பொருட்களுமே, உணவுப் பொருட்கள் உட்பட, விலை ஏறிவிட்டன. அதற்கு மத்திய அரசின் சட்டம்தான் காரணம் என்பதை உணர்கிறோம். மத்திய அரசின் கொள்கை காரணமாக, அதிகாரிகளும் மக்களும் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் விலைவாசி உயர்ந்துதான் இருக்கிறது. ஏறிய விலையை இறக்க முடியவில்லை. அப்படி இருக்கும் போது விவசாயப் பொருட்களுக்கு மட்டும் விலையை உயர்த்தாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

In proportion to the rise in prices of other commodities, the price of agricultural produce should also rise; that is reasonable and that is necessary and it is a necessary consequence of the rise in price of other commodities.

ஆகவே இந்த நிலை இருக்கும்போது, ஒரு தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டு விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு கரும்பு விலையில் ஏற்கெனவே உரிய வகையில்



1974 ஆகஸ்ட் 22] [திரு. கே. கந்தசாமி]

லாபம் இல்லை என்பதை பலமுறை விவசாயப் பிரதிநிதிகளும் என்னைப் போன்றவர்களும் நண்பர் கிருஷ்ணமூர்த்தி போன்றவர்களும் அமைச்சரிடம் முறையிட்டிருக்கிறோம். உதாரணமாக மதுரையில் அலங்காநல்லூரர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் விவசாயிகள் அங்கத்தினர்களாக எடுக்கப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் பிரதிநிதிகள்.

But we have no free access to see the records in the office. அந்த அதிகாரிகள் எப்போது வேண்டுமானாலும் உங்களை வரவேற்கிறோம் பார்க்கலாம் என்று சொல்கிறார்களே தவிர, சட்டமன்ற உறுப்பினர்கள் போனால்கூட அங்குள்ள விவரங்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. 60, 70 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு வந்திருக்கிறது. இப்போது விசேஷ அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். அங்கே அரசியல் கலப்படம் அற்ற, மனச்சாட்சியோடு செயல்படுகிற அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். அவர்கள் வந்த பிறகு அரைக்கும் சக்தியை—ஆயிரம் டன்னுக்கு மேல் இல்லை என்று சொல்லிவந்த நிலைமையை மாற்றி—1,500 டன்னாக ஆக்கி, 2,000 டன் அரைக்க முடியும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபட்டிருப்பதன் காரணமாக—அநாவசிய செலவுகளைக் குறைத்திருப்பதன் காரணமாக பல லட்ச ரூபாய் லாபத்தைக் காட்டியிருக்கிறார்கள். அந்த லாபத்தில் ஒரு பகுதியை—பங்குதாரர்களாகிய விவசாய பெருங்குடி மக்களுக்கு டிவிடெண்டாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டதற்கு சம்மதித்தார்கள். ஆனால் பின்னர் விவசாயத் சங்கத்தினர்களின் சார்பாக அவர்களிடம் சென்று கேட்டதற்கு—விலை நூறு ரூபாய் ஏற்கனவே கொடுத்திருக்கிறோம்..............

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கரும்பு விலைக்கும் இந்த மசோதாவுக்கும் சம்பந்தம் இல்லை. கரும்புக்கு டாக்ஸ் போடுவது பற்றித்தான் இந்த மசோதா. இந்த மசோதாவின்மீது மட்டும் பேசினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : கரும்புக்கு வரி போடுகிற இந்த மசோதா வந்திருக்கிறபோது—கரும்பு விலை அதிகப்படுத்தப்படாது இதைக் கொண்டு வந்திருப்பதன் காரணமாகத்தான் இதை எதிர்க்கவும், ஏற்கவும் துணிவு இல்லாமல் இக்கட்டான நிலையில் இருக்கிறோம். வரியைப் போடுங்கள், ஆதரிக்கிறோம். விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போனதாகக் கூடச் சொன்னார்கள்.

ராஜஸ்தான் போன்ற பல மாநிலங்களில் டன்னுக்கு 176 ரூபாய், 180 ரூபாய், 170 ரூபாய் என்கிற விகிதாசாரத்தில் கொடுக்கிறபோது, நம் மாநிலத்தில் மட்டும் உயர்த்தாது பாரபட்சம் இருக்குமானால் இதைத்தான் எதிர்க்கவேண்டியிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் படுகிற வேதனைகளைப் பார்த்துக் கொண்டு நாம் சும்மா இருப்போமானால் நாட்டுக்கு இதனால் தீமை விளையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரியைப் போடுங்கள்—நான் பாராட்டுகிறேன். அதேநிலையில் மாண்புமிகு கலைஞர் அவர்கள்—கரும்பின் விலையை உயர்த்திக் கொடுப்பதற்கும் தக்க பரிசீலனை செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டன்னுக்கு ரூ. 200 ஆவது நிர்ணயிக்கவேண்டும் என்று சொன்னார்கள். குறைந்த பட்சம் உடனடியாக டன்னுக்கு 150 ரூபாயாவது கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றவேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து—இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வருவதன் நோக்கம்—வருகிற செப்டம்பர் மாதம் முதல் மதுவிலக்கைக் கொண்டுவர இருப்பதால் ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்ட என்கிறார்கள்.

இதிலே குறிப்பாக கரும்புக்கு 7 சதவிகிதம் என்று இருந்ததை 12 சதவிகிதமாக விற்பனை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருந்தாலும்கூட—இது பர்சேஸ் டாக்ஸ்தான் என்று கூறினதை ஒப்புக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் கரும்பு சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. மற்ற மாநிலங்களில் எல்லாம் கரும்பு விலை டன்னுக்கு 130 ரூபாய், 140 ரூபாய் என்பதாக எல்லாம் இருக்கிறது. இதுவரை தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு கரும்பு விலையை நாம் கூட்டிக்கொடுக்கவில்லை. அதை உடனடியாக உயர்த்தித் தருவதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா... அதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் விவசாய அமைச்சர்



இங்கே இருக்கிறார். இதில் சற்று கவனம் செலுத்தி—இந்தக் கரும்பின் விலையை உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

வரிகள் விதிப்பதிலே—விற்பனை வரி, காலஞ்சென்ற மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களால் தம்பிடி வரி போட ஆரம்பித்து—இன்றைக்கு அதிக பர்செண்டேஜ் அளவில் வந்திருக்கிறது. அதுவும் எப்படி இந்த உயர்வு வருகிறது? இன்றைக்கு கரும்பின்மீது ஏற்கனவே இருந்த வரி 5 சதவிகிதம் உயர்த்தப்படுகிறது. வரி விதிப்பதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு வரி விதிப்பு தேவைப்படுகிறது. ஆனால் அவை 'not in an excessive and arbitrary manner என்பதாக போட வேண்டும். ஸேல்ஸ் டாக்ஸ் வரியைப் பொறுத்த வரையில்—மனச்சாட்சியோடு செயல்படுகிற அதிகாரிகளும் இருக்கிறார்கள்—மனசாட்சி இல்லாது செயல்படுகிற அதிகாரிகளும் இருக்கிறார்கள். பொதுவாக அதிகாரிகளிடம் நாம் அதிகாரத்தைக் கொடுக்கிறபோது பலர் அதை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இவர்களை நாம் எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இதிலே 3-வது ஷரத்து

Amendment of the third schedule to Tamil Nadu Act 1 of 1959.

என்று கூறப்பட்டிருக்கிறது. டெக்ஸ்டைல்களுக்கு மத்திய அரசாங்கம் எக்சைஸ் வரி என்று போட்டுவிடுவதனாலே—அதில் இருந்து ஒரு பங்கு மாநில அரசுக்கு வந்துவிடுவதனாலே நாம் வரி போடக் கூடாது என்றிருப்பதை இன்றைக்கு அதை மாற்றி அமைக்க அரசு முன் வந்திருக்கிறார்கள். அதிலும் It is now proposed to give retrospecive effect from 1st April 1974. என்பதாக ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்டும் கொடுத்தால் அதனால் பெரும் சங்கடங்கள் ஏற்படும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து அடுத்த பில்லில் வரும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்படிப்பட்ட அதிகாரத்தை அதிகாரிகளிடம் கொடுத்தால்—ஆட்டு மந்தையை மேய்க்க அதிகாரம் கொடுத்ததால் மந்தைக்கு ஒரு ஆடு கேட்பது போலாக இருக்கும்

ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதை எடுத்துவிடவேண்டும். அதை வெய்வ் செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இப்போதுகொண்டு வந்திருக்கிற மசோதா ஏற்கனவே 3½ சதவிகிதம் இருந்த விற்பனை வரியை 4 சதவிகிதம் ஆகவும், ஒரு முனை விற்பனை வரி 7 சதவிகிதம் என்று இருந்ததை 8 சதவிகிதம் ஆகவும், கரும்பைப் பொறுத்த வரையில் 7 சதவிகிதம் என்பதை 12 சதவிகிதம் ஆகவும்—கொஞ்சம் கரும்புக்குக் கூடுதலாகக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்த மசோதாவின் மூலமாக நாம் எதிர்பார்க்கிற வருமானம் சுமார் 10 கோடியாகும். சுமார் 10 கோடி எதிர்பார்த்து, இந்த மாற்றங்கள் இப்போது அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே பேசும்போது சொன்னார்கள், பைனான்ஷியல் க்ரைசிஸ் ஏற்பட்டுவிடும் என்று எச்சரித்திருக்கிறார்கள். பைனான் ஷியல் க்ரைசிஸ் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இந்த வரிப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவர் சொல்கிற படி பைனான்ஷியல் க்ரைசிஸ் வரக்கூடாது என்றால் அவரே இன்னும் அதிக வரி போடவேண்டுமென்று சொல்ல வேண்டும். 3½ சதவிகிதம் ஆக இருந்ததை 5 சதவிகிதம் ஆப் போடலாம் என்றுகூட வியா பாரிகள் சொன்னார்கள். நமது முதல்வர்தான் அதை 4 சதவிகிதம் என்று போட்டால் போதும் என்றார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய துணை சபாநாயகர் அவர்களே, "ஃபினான்ஷியல் கிரைசிஸ்" வரக் கூடாது என்பது என்னுடைய அக்கறை என்று சொன்னது உண்மை. ஆனால், அதிலே ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னும் ஜாஸ்தி வரி போடவேண்டும். இன்னும் ஜாஸ்தி வரி போடவில்லையென்றால், "ஃபினான்ஷியல் கிரைசிஸ்" வந்துவிடும் என்ற அச்சம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இன்றைக்கு இந்தியாவில் ஏதோ சில மாநிலங்களில் அப்படிப்பட்ட நிதி நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும், அந்த மாநிலங்கள் ஓவர் டிராஃப்டுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வந்துள்ளன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நிதி விவகாரத்தில் மிகச்



செம்மையாக இயங்குகிறது என்ற பாராட்டை மத்திய அரசிடம் இருந்தே நாம் பெற்றிருக்கிறோம். ஆகவே, எந்தவிதமான நிதி நெருக்கடியும் ஏற்படாது என்ற உறுதியை நான் தெரிவிக்கிறேன். வேண்டுமென்றே ஒரு தவறான பிரச்சாரம், இன்றைக்கு வெளியே மேடைகளில், ஏடுகளில், பத்திரிகைகளில் நடத்தப்படுகிறது. அப்படிப் பட்ட நிதி நெருக்கடி எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒருமுனை வரியைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு முனை வரி இருக்கவேண்டுமென்று ஆலோசனை சொன்னார்கள். அதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று சில வியாபாரிகளே அரசாங்கத் திற்குச் சில கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். ஒருமுனை வரி விதித்தால் கட்டாயமாக வரி விதித்தாக வேண்டும். சோடா உற்பத்தி செய்கின்ற வியாபாரிகள் ஒருமுனை வரி விதிப்பிலே விலக்குப் பெறமுடியாது. ஒரு முனை வரியாக இருப்பதாலே அவர்கள் கட்டி யாக வேண்டும். அந்தந்தப் பொருளைப் பார்த்து, எது எதில் சாத்திய மாக இருக்கிறதோ, அவைகளைப் பொறுத்து, அரசாங்கத்தினுடைய கொள்கை அமைகிறது, நாங்கள் முடிவு எடுக்கிறோம்.

கரும்புபற்றி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் மற்ற நண்பர்களும் பேசினார்கள். கரும்புக்கு அதிகமாக விலை கொடுக்கவேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லை. அவர்களுக்கு அதிக விலை கொடுத்தால், எங்களுக்கு அதிக வரி கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் போராடி அதிக விலை பெற்றுத் தருவாரானால் எங்களுக்கும் அதிக வரி கிடைக்குமென்ற வகையில் அதனை வரவேற்று; இதனை அனைவரும் ஏற்றுத் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இந்த வரி விதிப்புக்கு ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மினிஸ்டர் சப்போர்ட் பண்ணுவார் என்பதற்காகத்தான் கரும்புக்கு அதிகப் பணம் வாங்கித் தர வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் கரும்பு விலை அதிகரிக்க முயற்சிப்பார் என்பதற்காகத்தான் நான் ஆதரித்தேன்.

[1974 ஆகஸ்டு 22

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இச் சட்ட முன் வடிவை சட்டமாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (4) நடைமுறைக் கேள்விகள் (தொடர்ச்சி)

(ஆ) ஏற்கெனவே நடந்த விவாதத்தில் ஒரு குறிப்பிட்ட வார்த்தையை நீக்க உத்தரவிட்ட பின் ஒன்றரை மணி விவாதத்திற்குப் பிறகு குறிப்பிட்ட விவாதம் முழுமையும் மறுபடியும் நீக்க உத்தர விடுவது சரிதானா என்பது குறித்து.

DR. H. V. HANDE: Sir, I am raising a point of order. I
would like to know from the Hon. Deputy Speaker whether it will
be in order to come after an hour and a half and again expunge a
number of other discussions in which there is not even a single
expungable portion or material in the place of a word which he has
already expunged in the House. I would like to know whether it
is in order for the Hon. Deputy Speaker to once again expunge the
entire discussion. Originally, he has expunged a word. After
about an hour-and-a-half, is it in order for the Hon. Deputy
Speaker to come and sit in the Chair and then remove the entire
discussion? Is it proper according to the Parliamentary practice?



1974 ஆகஸ்ட் 22] [Dr. H. V. Hande]

If this is going to be the practice, how are we going to have discussion in this House? May I know whether is it in order or whether it is going to be the practice in future?

MR. DEPUTY SPEAKER: This is not going to be the practice. It is a consequential order pronounced, after going through the proceedings in order to see that no objectionable matter enters into the record of the proceedings. There is no point of order.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(ஊ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1974).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றுவது திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 40/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 3-வது விவர அட்டவணையில் 4-வது பதிவின் கீழ், அதில் விவரிக்கப்பட்டுள்ளவாறு எல்லா வகைத் துணிகளும் அச்சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்படுவதினின்றும் விலக்களிக்கப்பட்டன. பலவகைத் துணிகளுக்கும் பொருந்துகிற வகையில் "துணிகள்" என்னும் சொல் பயன்படுத்தப்படுவதால், பதனிட்ட துணி, ரப்பர் துணி, பி.வி.சி. துணி, ரெக்சின் துணி போன்ற சிலவகைத் துணிகளுக்கும் இதனைப் பொருத்தி பொருள் விளக்கம் காண்பதில் சில ஐயங்களும் இடர்ப்பாடுகளும் தோன்றியுள்ளன. 1957 ஆம் ஆண்டு கூடுதல் ஆயத் தீர்வைகள் (சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள்) சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 58/1957) துணிகளுக்கு கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கப்படுவதன் காரணமாக துணிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. கூடுதல் ஆயத் தீர்வையினால்

* 19—8—1974-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 22

கிடைக்கும் தொகையில் ஒரு பங்கு மாநிலங்களால் பகிர்ந்து கொள்ளப்படுவதால் மத்திய அரசினல் கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டுள்ள பொருள்களுக்கு, மாநிலங்கள் விற்பனை வரி விதிக்கக் கூடாது என்னும் பொது உடன்பாட்டைக் கருத்தில் கொண்டு துணிகளைப் பொறுத்தவரையில், விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டது. எனவே, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது விவர அட்டவணையில், 4-வது பதிவில் கண்டுள்ள பொருள்களின் பொருள் விளக்கம், 1944 ஆம் ஆண்டு மத்திய ஆயத் தீர்வைகள்—உப்புச் சட்டத்தில் (மத்தியச் சட்டம்) 1/1944 காணும் பொருள் விளக்கத்தை ஒத்திருக்க வேண்டியது அவசியம் என கருதப்பட்டுள்ளது. அரசு, அதற்கேற்ப தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது விவர அட்டவணையிலுள்ள 4-வது பதிவைத் திருத்த முடிவு செய்தது. இது, தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ், 1974 ஆம் ஆண்டு மே 16 ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிப்பின் மூலம் திருத்தப்பட்டது.

பி.வி.சி. துணி, ரெக்சின், பதனிட்ட துணி, ரப்பர் துணி ஆகியவற்றைப் பொறுத்தவரையில், முந்தைய வரி விதிப்புகளைத் திருத்தி அமைப்பது கைவிடப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே, வரி விதிக்கப்பட்டு விட்டிருந்தால், வணிகர்கள் வரியை வசூலித்திருக்காவிடில் வரி வசூலிப்பைத் தள்ளிவிட வேண்டுமென்றும் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் நாளன்று அரசு உத்தரவிட்டது. இவ்வாறு வரி வசூலிப்பைத் தள்ளிவிடுவது 1974 ஏப்ரல் 15 வரையில் செய்யப்பட்ட எல்லா விற்பனைகளுக்கும் பொருந்துகிறது. ஆனல் பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3-வது அட்டவணை, 4-வது பதிவின் பொருள் விளக்கம் 1944 ஆம் ஆண்டு மத்திய ஆயத் தீர்வைகள்—உப்புச் சட்டத்தில் கண்டுள்ள பொருள் விளக்கத்தை ஒத்திருக்கும் வகையில் அப்பதிவைத் திருத்தி 1974 மே 16 ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு 1974 ஆம் ஆண்டு மே 22 ஆம் நாளன்று வெளியிடப்பட்டது. எனவே, அது 1974 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் நாளன்றுதான் செயலுக்கு வந்தது. 1974 ஏப்ரல் 16-க்கும், 1974 மே 21-க்கும் இடைப்பட்ட கால அளவு இந்த அறிவிப்பின் கீழ் வராததால், அக்கால அளவுக்கான வரியை தள்ளிவிடுவது பற்றிய பிரச்சினை எழலாம். இதனல் வினை எழுத்துப் பணிகள் ஏற்படும். நிதியாண்டின் தொடக்கத்திலிருந்தே இத்திருத்தத்தைச் செயலுக்குக்



1974 ஆகஸ்ட் 22] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கொண்டுவருவதன் மூலம் இதைத் தவிர்க்கலாம். எனவே இத்திருத்தத்திற்கு 1974 ஏப்ரல் 1 ஆம் நாளிலிருந்தே செயல் வடிவம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 1-வது சட்டத்தைச் சேர்ந்த முதல் விவர அட்டவணையின் 40-வது இனத்தின் கீழ், 9 சதவீத உயர்ந்த வீத வரி விதிப்புக்குத் தற்போது உட்படுத்தப்படுகின்ற ரப்பர் பொருள்கள், நுரை ரப்பர் விரிப்புகள், நுரை ரப்பர் மெத்தைகள், நுரை ரப்பர் தலையணைகள் ஆகியவை, 5 சதவீதத்தில் வரி விதிக்கத் தக்க, 74-வது இனத்தில் "ரப்பர்" என்னும் பதிவின் கீழ் வருவதாகப் பொருள் விளக்கம் கொடுக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு 74-வது பதிவின் கீழ் "ரப்பர்" என்னும் சொல்லின் பொருள் வரம்பு, பக்குவப்படுத்தப்படாத நிலையில் அதாவது ரப்பர் பாலாக உழவர்களால் விற்கப்படுகின்ற ரப்பரை மட்டும் குறிக்கும் வண்ணம் வரையறுக்கப்பட வேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தின் 59 (1)-வது பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிப்பின் மூலம் இந்த முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு வெளியிடப்படுகின்ற நாளைத் தொடர்ந்து சட்டமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு 1-வது சட்டத்தின் 59 (2) பிரிவின் கீழ், மேற்படி அறிவிப்புகளை ரத்து செய்து, அவற்றிற்குப் பதிலாக சட்ட முன்வடிவு ஒன்று கொண்டு வரப்படவிருக்கிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவு அவை முன் கொண்டு வரப்பட்டுள்ளது.

இப் பிரேரணையை இம்மாமன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer a few remarks while making certain preliminary objections. This Bill seeks to give retrospective effect. By this amending Bill, it is deemed to have come into force from June onwards. My first objection is that in fiscal matters the retrospective operation should be avoided and that has been pointed out by the High Court as well as by the Supreme Court. So far as payment of revenue is concerned, it cannot have retrospective effect. By a new amendment, we cannot give retrospective effect. That is the first objection which I make so far as this Bill is concerned.

[Thiru R. Ponnappa Nadar] [1974 ஆகஸ்ட் 22

Then as regards raw rubber, namely, latex, it is being carried away from our area to the Kerala State for processing in smoke-houses so that the processed rubber may be sold to the traders. What happens is that there is a large number of petty owners who are having this latex and they cannot have their own smoke-houses and so much so, the latex is smuggled to the adjoining State. Consequently, we are losing a large chunk of revenue. So far as sales tax is concerned, I think most of the merchants in Kerala are flourishing on account of this malpractice and steps should be taken to see that it is avoided.

Another point with regard to the processing of latax is, why not process this latex and take it over to the Government Rubber Plantations which are in existence in our district? If that is done, all the latex that is available in our State could be processed with advantage and there would be no loss to the public exchequer.

Sir, another point which I want to stress is regarding certain malpractices in the administratioin of the sales tax. So far as sales tax is concerned, it is the "Khamadhenu" of our State and we are getting the largest revenue from the sales tax and whether our Government are getting all the revenue, is a matter which we will have to consider. There is a considerable amount of evasion on account of lack of supervision and in certain cases the supervisory authorities are not exercising adequate control and so much so, there is a loss in revenue.

Sir, it may be stated that we are losing a revenue of Rs. 56 crores consequent on the re-introduction of prohibition and that is not an excuse. We are just taxing in season and out of season and we have almost exhausted all sources of income. The rubber plantation industry is a good industry so far as our district is concerned. The proposed legislation will smother and throttle the small-holders who are unable to process it. So, at least in their case exemption should be given and the interest of the small-holders should be protected. I am sure this House and the Government will take note of this aspect of the matter. With these words, I conclude my speech.



1974 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசினார்கள். ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் என்பது வணிகர்களுக்குச் சாதகமானது.

On the 15th April 1974 the Government have ordered that in the case of P.V.C. Cloth Rexine, Processed Cloth, Rubberised cloth, etc., revision of past assessment be dropped and in cases where assessments have been made, the collection of tax be waived if the dealers have not collected the tax. The waiver in this case applies to all sales effected up to the 15th April 1974.

ஆகவே, past assessments ஓபன் செய்யக்கூடாது என்றும், வரி விலக்கு கூடாது என்றும் also for the purpose of the waiver of the tax, we have proposed provisions: retrospective effect வணிகர்களுக்குச் சாதகமான திருத்தம் கொண்டுவரப்படுகிறதே தவிர எந்தவிதமான கஷ்டமும் இதில் இல்லை என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரப்பரைப் பொறுத்தவரையில் The amending provision takes effect from the date of notification.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறிய ரப்பர் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படும் அளவில் இருப்பதாகச் சொன்னார்கள். "அன்ப்ராசஸ்டு ரப்பர்"-க்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்வது சில நிறுவனங்கள் திருவனந்தபுரத்தில் கம்பெனி வைத்துக்கொண்டு நேரடியாகக் கொண்டு போவது பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொண்டு இதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

[பேரவைத் துணைத் தலைவர்] [1974 ஆகஸ்ட் 22

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1974 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/74) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(எ) 1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/74).

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

@ 16—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 22]

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1974-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/74) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்தலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/74)

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்தலும் திருத்தமும்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 38/1974) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் எண் 10/1937), அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது விவர அட்டவணையின் மாநிலப் பட்டியலிலுள்ள 8, 51, 64, 65, 66 ஆகிய பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையும், அரசியலமைப்புச் சட்டத்தின் 246 (3) பிரிவின் கீழ் அது குறித்து சட்டமியற்ற மாநிலச் சட்ட

@ 17—8—1974-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 22

மன்றத்திற்குப் பிரத்தியேக அதிகாரம் உள்ளதுமான பொருள்களுக்குத் தொடர்புள்ள வரையில் அச்சட்டம் தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்குச் (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் எண் 33/1971) 2-வது பிரிவினால், 1971 ஆகஸ்ட் 30-ம் நாளிலிருந்து செல்திறனில் இருப்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவில் கூறப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாட்டின்படி இம்மாநிலத்தில் முழு மதுவிலக்கைப் படிப்படியாக மீண்டும் செயலுக்குக் கொண்டுவர இவ்வரசு முடிவு செய்தது. முதற்படியாக, 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டிலிருந்த கள்ளுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதற்கிணங்க, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டின் 10-வது சட்டம், கள்ளைப் பொறுத்த வரையில் மேற்சொன்ன நாளிலிருந்து மீண்டும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. கடைசிக் கட்டமாக 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் மீண்டும் முழு மதுவிலக்கைச் செயலுக்குக் கொண்டுவர தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன முடிவின் விளைவாக தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுவிலக்குச் (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் எண் 33/1971), தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தையும் (தமிழ்நாடு சட்டம் எண் 34/1971) ரத்து செய்ய வேண்டியதும் தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் எண் 10/1937) மீண்டும் செயலுக்குக் கொண்டு வர வேண்டியதும் அவசியமாகிறது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

இத்தீர்மானத்தை இம்மாமன்றம் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"That the Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill 1974 (L.A. Bill No. 38 of 1974) be referred to a Select Committee consisting of......members of the Assembly (names to be given later)."



1974 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய திருத்தத்தை யார் வழிமொழிகிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : I second the amendment.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே மதுவிலக்கை அமல் செய்தாலும் சரி, அமல் செய்யாவிட்டாலும் சரி . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தைத் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் செகண்ட் பண்ணியிருக்கிறார்கள். அவர்களுடைய கொள்கை அதுதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கொள்கை என்ன என்று கேட்கிறார்கள். அது வேறு. ஒரு திருத்தத்தை எதிர்க்கட்சியின் சார்பில் கொண்டு வந்ததை வழிமொழிய ஆள் இல்லை. இந்த மன்றத்தில் விவாதிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தால் வழிமொழிந்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் அதை வழிமொழியாமல் இருந்திருந்தால் செலக்ட் கமிட்டிக்குப் போக வேண்டுமென்று சொல்லக்கூடிய வாய்ப்பு இருந்திருக்காது. மிகப் புனிதமான கொள்கை, காந்தியடிகள் கொள்கை, இதற்காகப் போராட்டம் நடத்தியே தீருவோம் என்றவர்கள் செலக்ட் கமிட்டிக்குப் போக வேண்டுமென்று சொன்ன திருத்தத்தை வழிமொழிந்தது உள்ளபடியே வியப்பாக இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : புனிதமான கொள்கை என்பதை இன்றும் மறுக்கவில்லை. பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறோம். செலக்ட் கமிட்டிக்கு இதை விடப் போகிறார்கள் என்று நினைக்க முடியாது. மனப்பூர்வமாகச் சொன்னால் இதிலே பல தவறுகள் இருக்கின்றன. அதைப் பற்றியெல்லாம் செலக்ட் கமிட்டிக்கு விட்டு சுருக்கமாக ஆய்வது கூட பொருத்தமாக இருக்கும். அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: "குடி" முழுக வேண்டு மென்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் செலக்ட் கமிட்டிக்குப் போக வேண்டுமென்றே கூறிவிட்டார்கள்.

திரு. கோவை செழியன்: குடியில் முழுகுவதா?

திரு. என். கே. பழனிசாமி: மதுவை அருந்தக்கூடியவர்கள்கூட இன்றைக்கு ஒரு நாள் மட்டும் அருந்திவிட்டு நாளைக்கு அருந்தக் கூடாது என்று சொல்லுவார்கள். ஆனால் எந்த அளவுக்கு நடை முறைக்குக் கொண்டு வரமுடியும்? எந்த அளவுக்கு நடக்கும் என்பதுதான் பிரச்சினை.

மதுவிலக்குச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக் கிறது. உண்மையிலேயே மதுவிலக்கு தமிழ்நாட்டில் அமலாக்கப்பட வேண்டுமென்றுதான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதற் காகத்தான் இந்தத் திருத்தம்.

ஏற்கனவே மதுவிலக்கை நிறுத்தி வைக்கக்கூடிய காலத்தில் பல காரணங்கள் சொல்லப்பட்டன. அதற்கு முன்பு மத்திய என்குயரி கமிஷன், நாணாவதி கமிட்டி சிபாரிசு—மதுவிலக்கு அமலாகாமல் இருக்கக் காரணம், நாட்டுமக்கள் ஒத்துழைக்கவில்லை, போலீசில் இருக்கக்கூடிய கரப்ஷன், மதுவிலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டை, உடைசல்கள் என்ற முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவை எல்லாம் நீக்கப்பட்டு சரியான முறையில் அமல் செய்ய வேண்டுமென்ற முறையில் ஏதாவது மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படியேதான் இருக்கிறது.

என்னிடம் ஒரு மகஜர் இருக்கிறது. நானே எடுத்துக் கொண்டு போய் டெபுடி சூப்பரின்டென்டிடம் கொடுத்தேன். சாராயக் கடை வைத்திருப்பவர்கள் கள்ளையும் வைத்திருக்கிறார்கள். கள்ளுக் கடையை ஒழித்து ஒரு வருஷம் ஆகிறது. பெருந்துறைப் பகுதியில் 400 மரம்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது எனக்குத் தெரியும். கொஞ்சம் அதுபற்றிப் பேசாமல் இருந்தால் நல்லது. அதன் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீங்கள் அதுபற்றிப் பேசினால் அவர்களுக்கு தகவல் போய்விடும்.

திரு. என். கே. பழனிசாமி: மதுவிலக்கை போலீஸ் எப்படி அமல் செய்கிறது? போலீசுக்கு 10 ரூபாய்; சப்-இன்ஸ்பெக்டருக்கு 200 ரூபாய்; சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு 500 ரூபாய்; அந்த ஏரியா பூராவும் கள்ளாக இருக்கிறது. இந்த நிலையில் மதுவிலக்குச் சட்டத்தை எப்படி அமல்படுத்தப் போகிறார்கள்? இதுதான் முக்கியமான பிரச்சினை.

இப்போது முன்பு இருந்த நிலையிலேதான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. மதுவிலக்கை எடுத்த பின்னால் பல பேர் குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இளைஞர்கள் மத்தியில் பெரும்பகுதியினர் குடிக்கின்றார்கள். இருபது வருஷ காலம் அமலில் இருந்ததை எடுத்து விட்டதால் இப்போது எல்லோரும் குடிக்கப் பழகி விட்டார்கள். இந்த நிலையில் இனிமேல் எத்தனை காலம் கழித்து இதைக் கட்டுப்படுத்த முடியும்?

இதை எதிர்த்து ஜெயிலுக்கு 14,000 பேர் போனார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எல்லாம் சின்சியராகப் போனார்களா? பாண்டிச்சேரியில் கள்ளுக்கடை வைத்திருந்தவர்கள் 5 பேர் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டார்கள். மூன்று பேர் ஜெயித்தார்கள். இப்போது மதுவிலக்கை இந்தச் சர்க்கார் மறுபடியும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகச் சொன்னாலும் சின்சியரிடி கிடையாது. குடிப்பதை முழுவதும் நிறுத்த வேண்டும். யாருக்கும் பர்மிட் கொடுக்கக்கூடாது. மதுவே விற்கக்கூடாது. 24-ஏ-ல் என்ன போட்டிருக்கிறது? ரீசேல்; ரீ-ஆக்ஷன். பிராந்திக் கடைகளை மறு ஏலம் விடுவது பற்றிப் போடப்பட்டிருக்கிறது, என்ன அர்த்தம்? 250 ரூபாய் கட்டியவர்கள் குடிக்கலாமா? முன்பு 6,000 பேர் பர்மிட் வாங்கிக் குடித்தார்கள் என்றால் இப்போது 10,000 பேர் குடிக்கலாம். ஹெல்த் ரீசன் என்றால் அதற்கு ஹாஸ்பிடலுக்குப் போகலாம். அப்படி என்றால் வசதி இருக்கக்கூடியவர்கள் மட்டுந் தான் குடிக்க முடியும் என்ற நிலை ஏற்படும்.

11 ஆம் நாள் ஜுன் மாதம் 1974-ல் சர்க்கார் 113-ம் எண், ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். அதிலே டெபுடி தாசில்தார், தாசில்தார் இவர்கள் பார்த்து பர்மிட் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஒவ்வொரு பர்மிட்டுக்கும் 5 ரூபாய்; வயது 21-க்கு மேல் இருக்க வேண்டும். ஜுன் மாதம் சர்க்கார் போட்ட உத்தரவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த உத்தரவு எல்லாம் இப்போது அடிபட்டு விடும். இது வருவதற்கு முன்னால் போடப்பட்டது. இப்போது அது கிடையாது.

திரு. என். கே. பழனிசாமி: கள்ளுக்கடையை எடுக்கும்போதே படிப்படியாக மற்றவையும் எடுக்கப்படும் என்று உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. ஜுன் மாதத்தில் இம்மாதிரி உத்தரவு போட அவசியம் என்ன? ஒவ்வொரு கடைக்கும் ஐயாயிரம் முதல் 25,000 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லி இந்தியன் மேட் ஃபாரின் லிக்கர் கடைகள் 8 கோடி ரூபாய்க்கு மது வாங்கி அடுக்கி வைத்திருக்கிறார்கள். சர்க்கார் அவர்களிடமிருந்து 4 கோடி ரூபாய் எக்ஸைஸ் வரியாகவும், 2 கோடி ரூபாய் சேல்ஸ் டாக்சாகவும் வசூலித்திருக்கிறது. இதெல்லாம் என்ன ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1 ஆம் நாள் மார்ச் மாதம் 1974 வரை லைசென்ஸ் இருந்தது. 1 ஆம் நாள் ஆகஸ்ட் மாதம் 1974 வரை அனுமதி கொடுக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அதோடு கணக்கு தீர்ந்தது. அவர்கள் ஒன்றும் கேட்க முடியாது. எக்ஸைஸ் ட்யூடியாக இருந்தாலும், 1—8—1974 வரை அந்தக் காலம் நீட்டிக்கொடுக்கப்பட்டது. அதற்காக சில கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டணம் வசூலாகியிருக்கிறது. ஆகவே அந்தப் பணத்தைத் திருப்பிக் கேட்க நியாயம் கிடையாது. அவர்கள் அதைக் கேட்க முடியாது

திரு. என். கே. பழனிசாமி: அவர்கள் கேட்கமுடியாது என்பது வாஸ்தவம். இந்தச் சட்டம் அவர்களை கோர்ட்டுக்குப் போக தூண்டுகிறது. அவர்கள், ஐ.எம்.எப்.எல். காரர்கள். ஹைகோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கினால் மூன்று ஆண்டுகள் பிடிக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். கே. சாதிக் பாட்சா: அவர்கள் ஹைகோர்ட்டுக்கு போகமுடியாது. 1 ஆம் நாள் ஆகஸ்ட் 1974 வரையில் ஒத்துக் கொண்டுவிட்டார்கள். ஆகவே அவர்கள் எப்படி



கோர்ட்டுக்குப் போகமுடியும்? 1 ஆம் நாள் ஆகஸ்ட் 1974 வரையில் காலம் இருக்கிறது. அதற்குள் நடவடிக்கை எடுத்தால் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போகலாம். 1 ஆம் நாள் ஆகஸ்ட் 1974 வரையில் அனுமதி கொடுத்த பிறகு அதோடு முடிந்துவிட்டது. அதோடு கணக்கு செட்டிலாகிறது. ஐ.எம்.எப்.எல்.க்கு கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்க நியாயம் கிடையாது, சட்டமும் இல்லை. உங்கள் பேச்சின்மூலம் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போவார்களோ என்றுதான் பயமாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்காரிலிருந்தே அவர்களைக் கோர்ட்டுக்குப் போகும்படி செய்திருக்கிற ஏற்பாடு இது. கட்டாயம் அவர்கள் போகத்தான் போகிறார்கள். ஸ்டே வரப் போகிறது. மதுவிலக்கு எப்படி இருக்கப்போகிறதோ தெரியாது. 10,000 பேர்கள் லைசென்ஸ் ஹோல்டேர்ஸ் என்றால் ஒருவருக்கு மாக்ஸிமம் யூனிட்ஸ் நான்கு என்றால் ரூ. 60 வீதம் ஆண்டுக்கு ரூபாய் இருபது லட்சம் ஆயிற்று. எட்டு கோடி ரூபாய்க்கான சரக்கு இருக்கிறது. அது தீர எவ்வளவு வருடங்களாகும்? 10,000 பேர்கள்தான் லைசென்ஸ் ஹோல்டர்ஸ். அவர்கள் அதை ப்ளாக் மார்க்கெட்டில் விற்பார்களா? சரக்கு நஷ்டம். ஆகவே, அவர்கள் கோர்ட்டுக்கு போய்த்தான் தீருவார்கள் என்று நினைக்கிறேன். சர்க்கார் இதைக் கொண்டுவருவதில் ஸின்ஸியராக இல்லை என்று தான் நான் சொல்கிறேன். சரியான முறையில் மதுவிலக்கை அமல்படுத்தவேண்டும். பூராவாக குடிப்பதை தடை செய்திருக்க வேண்டும். ரீ-ஆக்ஷனை தடை செய்திருக்க வேண்டும். ஆகவே இந்த முறையை மாற்றியமைக்க திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

*THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Chairman, Sir. I rise to make a few comments on the Bill before us, namely the Prohibition Bill (Revial of Operaion.)

I would like to say at the outset that I feel that it is a very brave and bold step on the part of the Government. I do so because of certain observations that I have made during the past few months. In school work and in Church work one comes very close to families and homes and what we have seen there has not been a very happy matter to report. We have seen housewives, when liquor was sold freely, living with nothing at home to feed their families. When we think about middle class homes

Thirumathi Alda M. Fowler] 1974 August 22]

also, a very sad picture used to confront us. Children did not go to schools. They lost their education and there was no money for clothes, for nourishment and for so many things which a normal housewife requires. The tale was one of misery. Besides this, there were broken homes, reports of which used to come in and it was almost imposible to deal with these problems of society.

So, I feel, Sir that this move is a welcome one. But unfortunately the housewife, who did not have any money before, thought that with the introduction of prohibition, because of prohibition of sale of liquor, she could have some money. But what she actually finds is that there is no money left at all because of the runaway prices. She cannot do those things she expected to do. She cannot nourish her family as she would like to. She cannot fufill all those hopes that she thought revival of prohibition, would bring to her. So, Sir, my request is very simple. I do request Government to put their collective minds together and work out a solution so that these people do not feel frustrated and let down. They really hoped that by this new measure, there would be more money in their hands for their children. But in reality it is not so. That may be something outside what the: had anticipated.

But when it is so, ways and means must be found to make life really worth living for these people. Otherwise they will fee frustrated that their problems had not been solved and they ar exactly where they were before. So, my suggestion, my reques and my appeal, is that some method should be thought out to mak good this gap for these poor people who are going to be le frustrated and still in want. I have concentrated my attention on these poor people because I feel that the rich have their ow means and methods of solving their difficulties. The poor hous wife may feel that she had not been fairly dealt with. I am sur something has to be done to make their life better and happy. So Sir, my appeal this morning to Government is that measure should be thought of and in this connection we may think of som new approah, some curtailment and some economy which may b practised at various points so that this harm shall not happen t the ordinary middle class people. If there was a war on, it woul be a period of emergency and we would all put our minds an



*1974 ஆகஸ்ட் 22]* [Thirumathi Alda M. Fowler]

thoughts into it but at least there would be an end to it. But in regard to taxation it is not the same. In March or April next year, it will be higher and higher and so, Sir, some relief must be given to these people. That is my humble submission, Sir. Thank you.

திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றையதினம் அவை முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை நான் ஆதரித்துப் பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முதல்வர் அவர்கள்கூட நாங்கள் கொண்டுவருகிற பல்வேறு காரியங்களை, மசோதாக்களையெல்லாம் எடுக்கின்ற நடவடிக்கைகளையெல்லாம் எதிர்க்கிறவர்கள்தான் எதிர்கட்சியில் இருக்கிறார்களே தவிர ஒரு தரமாவது ஆதரித்திருக்கிறார்களா என்று பல்வேறு கட்டங்களில் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மனமகிழ்வு தரத்தக்கவிதத்தில் இன்றையதினம் வந்திருக்கிற இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம் என்ற நிலை மட்டுமில்லாமல் பொதுமக்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் நல்லது பயக்கிற வகையில் இந்த மசோதா இருக்கிற காரணத்தால் முழுமனதோடு இந்த மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம்.

[பிற்பகல் 1-00]

ஆனால் இந்த நேரத்தில் இந்த மசோதாவுக்கு ஏற்பட்டிருக்கிற தேவையை நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கை ரத்து செய்கிற நேரத்தில் என்னென்ன காரணங்களுக்காக ரத்து செய்ததோ அதே காரணங்களைக் காட்டி இன்றையதினம் அவர்கள் மீண்டும் அதைக் கொண்டு வரவில்லை. ரத்து செய்ததற்குப் பின்னாலே இந்த முடிவு ஏற்படுவதற்கு நிறைய பின்னணி இருக்கிறது. அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக்கழகம் பல்வேறு தேர்தல்களைச் சந்தித்து இருக்கிறது. 1973-ல் நடைபெற்ற பாராளுமன்ற இடைத்தேர்தலில், மதுவிலக்கை மறுபரிசீலனை செய்ய முடியாது என்று சொன்ன ஆளும் கட்சி திராவிட முன்னேற்றக்கழகம், திண்டுக்கல்லில் தோல்வி கண்டது. எம்.ஜி.ஆர். பின்னணியில் நின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுகிறது. உடனே அதை மறுபரிசீலனை செய்து கள்ளுக்கடைகள் மூடப்படுகின்றன. அடுத்து, கோவை மேற்குத் தொகுதி இடைத்தேர்தலிலும் திராவிட முன்னேற்றக்கழகம்

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 ஆகஸ்ட் 22

தோற்கடிக்கப்பட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி பெறுகிறது. உடனே மறுபரிசீலனை செய்யப்பட்டு சாராயக் கடைகள் மூடப்படும் என்று சொல்லப்பட்டு, பிறகு இப்போது எல்லாக்கடைகளும் மூடப்படும் என்று சொல்கிற நேரத்தில், நாங்கள் திண்டுக்கல்லில் பெற்ற வெற்றியை விட, கோவை மேற்குத் தொகுதியில் பெற்ற வெற்றியை விட, இதைப் பெரிய வெற்றியாக, எங்கள் கட்சி பெற்ற வெற்றியாக, எங்கள் தலைவர் பெற்ற வெற்றியாக கருதுகிறோம் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றையதினம் எந்தக் கரங்கள் மூடுகின்றதோ அதே கரங்கள் தான் திறந்தன என்பதை நினைக்கிற நேரத்தில் பாராட்டுவதற்கான சூழ்நிலை இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் மதுவிலக்கைக் கொண்டு வருகிற நேரத்தில் நாம் அடிப்படையான சில நிலைமைகளை உணர வேண்டும்.

மதுவிலக்கு தேவை என்று சொல்கிற நேரத்தில் இந்தப் புத்த கத்தில் இருக்கிறது ஆகவே ஏற்றுக்கொள்கிறோம், இந்தத் தலைவர் சொன்னார் ஆகவே ஏற்றுக்கொள்கிறோம், என்று ஏற்றுக்கொள்ள வில்லை. மதுவிலக்கு தேவை என்று சொல்கிற நேரத்தில் மதுவிலக்கு ரத்து செய்ததால் அழிந்து போன குடும்பங்கள், மக்கள் சந்தித்த கொடுமைகள் இவைகளை எண்ணிப் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் நாம் பார்த்து இருக்கலாம், கள்ளுக்கடைகள் முன்பு, சாராயக் கடைகள் முன்பு எவ்வளவு கூட்டம் இருந்தது. நாமும் கேரளா விற்குப் போய் இருக்கிறோம். அங்கேயும் பல்வேறு கடைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயிருக்கிற கூட்டம் மாதிரி அங்கே இல்லை. இதற்குப் பொதுவான காரணம், போதிய கட்டுப் பாடு, அறிவு வளர்ச்சி இல்லாத காரணத்தால் குடிக்கு அடிமையாகி குடும்பங்கள் அழியும் நிலை ஏற்படுகிறது. அந்த அடிப்படையில் தான் இங்கே இருக்கும் நடுத்தர வர்க்கத்தினர், ஏழை எளியவர்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்கள் குடும்பங்கள், இத்தகைய கேடுகளுக்கும், பொருளாதார சீர்குலைவிற்கும் ஆளாகாமல் இருப்ப தற்காகத்தான் நாம் இந்த மதுவிலக்கை மனப்பூர்வமாக ஆதரிக் கிறோம்.



1974 ஆகஸ்ட் 22] [திரு. செ. அரங்கநாயகம்]

அதற்கு மேலும் ஒரு காரணம் இருக்கிறது. இன்றையதினம் மதுவிலக்கைக் கொண்டு வருகிற நேரத்தில் ஏழை மக்களின் நன்மையை அடிப்படையாக வைத்து நாம் இதைக் கொண்டு வருகிறோம் என்ற உணர்வு ஏற்படவேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் 1967-ல் ஆட்சி பொறுப்பை ஏற்ற நேரத்தில், நாட்டில் இருக்கிற பல பேர் கருதினார்கள், காங்கிரஸ் கட்சி தோற்றுவிட்டது, திராவிட முன்னேற்றக்கழகம் . வெற்றி பெற்று இருக்கிறது, மதுவிலக்குக் கொள்கை மறுபரிசீலனை செய்யப்படும் என்று பலர் கருதினார்கள், பெரிய ஓட்டல்கள் கூட பல பேர் கட்டினார்கள், ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் முறையாக நீலகிரிக்கு வந்த நேரத்தில் குன்னூரில் நிருபர்கள் கேட்டார்கள் "நீங்கள் மதுவிலக்கை மறுபரிசீலனை செய்யப் போகிறீர்களா, மறுபடியும் கடைகளைத் திறக்கப் போகிறீர்களா என்று கேட்ட நேரத்தில், அண்ணா அவர்கள் சொன்ன பதில், "நிச்சயமாக அந்தக் கடைகளை நான் திறக்க மாட்டேன்" என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் சொன்னார்கள், குடிப்பவனுக்கும், குடிகாரனுக்கும் உள்ள வித்தியாசத்தை நாட்டு மக்கள் உணருகிற வரைக்கும் தான் இந்த நாட்டில் மதுவிலக்கு அமலில் இருக்கும் என்று சொன்னார்கள். அண்ணா அவர்களின் அந்தக் கருத்தை வைத்துக் கொண்டு, அந்த அடிப்படையில் இன்று இந்த மதுவிலக்கு மசோதா வந்திருக்கிற காரணத்தால் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன் என்று சொல்கிற நேரத்தில், அதை அமலாக்குகிற நேரத்தில் இருக்கிற குறைபாட்டையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது.

நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் வழக்கு மன்றத்தில் இருந்து கொண்டு இருப்பவன். 4 (1) (ஜே) பிரிவில் குற்றம் சாட்டப்பட்டு வழக்குபோடப்பட்டிருக்கிறவர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை இந்த மசோதாவில் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு டாக்டரிடம் சர்ட்டிபிகேட் வாங்கி "அராக்" என்று அதில் எழுதப்பட்டு இருக்குமானால் எந்தக் கோர்ட்டிலும் வக்கீல் வைத்து வாதம் செய்து அந்த கேசிலிருந்து யாரும் ஜெயித்துவிட முடியாது. உடனடியாக அவனை தண்டித்து விடுகிறார்கள். இந்தியாவில் இருக்கிற எவ்வளவு பெரிய வக்கீலை வைத்தும் அவன் அதில் ஜெயித்து விட முடியாது. ஒரு சாதாரண போலீஸ்காரர் ரோடில் போகிற எவ்வளவு பெரிய ஆளையும் பிடித்து வாயில் கொஞ்சம் சாராயம் ஊற்றிவிட்டு டாக்டரிடம் ஒரு

[திரு. செ. அரங்கநாயகம்] [1974 ஆகஸ்ட் 22

சர்டிபிகேட் வாங்கிவிட்டால் போதும், அந்த பொய் வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்ளவே முடியாது. இப்படிப்பட்ட பொய் வழக்குகளுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்களும் ஆளாக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் பெரிய ஆபத்தாக வரும் என்று நாங்கள் கருதுகிறோம். இது எல்லோருக்கும் ஏற்படக்கூடிய ஒரு நிலை தான்.

ஆகவே, நான் சொல்ல விரும்புவது எல்லாம் பல்வேறு சட்டங்களில் தந்து இருக்கும் வாய்ப்பு போல், ஒருவனை கைது செய்துவிட்டால், அவனுக்கு தண்டனை கொடுப்பதற்கு, அந்தக் குற்றத்தைச் செய்தான் என்று சொல்ல இரண்டு இன்டிபென்டன்ட் விட்னஸ் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. அந்த முறையைக் கொண்டு வந்தால் நிச்சயமாக பொய்வழக்கு போடமுடியாது என்று கருதுகிறேன். நீதி நிலைநாட்டப்படுமானால், நீதி நல்லமுறையில் செயல்படுமானால் the innocent should not be punished அந்த அடிப்படையில் சொல்லியிருக்கிறார்கள். எல்லா வழக்குகளிலும் இருப்பதைப்போன்ற ஒரு பாதுகாப்பு இதற்கும் இருக்கவேண்டும். இந்தச் சட்டத்தில் அது இல்லை என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை அமல்படுத்துகிறபோது பார்த்தாலும் கள்ளச் சாராயக் கடைகளை வைத்தவர்கள் நல்லமுறையில் சம்பாதித்து இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் அதை வாங்கிக்குடித்தவன் இதனால் பாதிக்கப்படுவதற்கான சூழ்நிலை இருக்கிறது. கடைகளை வைத்திருப்பவன் பாதுகாக்கப்படுகிற நிலையிலும் இருக்கிறது. இதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

ஆகவே, தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கும், இதைக் கொண்டு வந்திருக்கும் வருவாய்த் துறை அமைச்சருக்கும் நான் உங்கள் மூலமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் அப்படிப்பட்ட பொய் வழக்கிலே மக்கள் தங்களுடைய உரிமையை பாதுகாத்துக்கொள்வதற்கான நிலைமையை ஏற்படுத்தித் தர வேண்டும். மற்ற வழக்குகளாக இருந்தால், அவற்றிற்கு திறமையான வக்கீலை வைத்து தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால் "அராக்" என்று சர்டிபிகேட் இருந்தால் உடனே தண்டனை பெற வேண்டிய நிலைமை உருவாகி எத்தனை பெரிய வக்கீலாக வைத்து வாதாடினாலும் தப்பித்துக் கொள்ள முடியாது என்ற நிலைமை



1974 ஆகஸ்ட் 22] [திரு. செ. அரங்கநாயகம்]

இருக்குமானால், போலீஸ்காரர் பார்த்து எவ்வளவு பெரிய அரசியல் வாதியையும் கரைப்படுத்த முடியும். எவ்வளவு பெரிய நபரையும் கரைப்படுத்த முடியும். அவர்களிடமிருந்து தப்பிக்க முடியாத நிலைமை இருக்கிறது.

அது மட்டுமல்ல, இது வழக்கறிஞர் தொழிலுக்கே அவமானகரமாக இருக்கிறது. இதில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால் யாரும் வழக்கறிஞர்களை வைத்து வாதிடுவது இல்லை. இதற்கு "டவுட்ஸ்" இருக்கிறார்கள். அவர்கள் நான் இதை முடித்துத் தருகிறேன், குற்றத்தை ஒப்புக்கொள், நான் அபராதம் மட்டும் வாங்கிக்கொடுத்து விடுகிறேன் என்று எல்லாம் சொல்லி தவறான காரியங்களில் ஈடுபட்டு செய்கிறார்கள். இது பல ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. இப்படிப்பட்ட முறைகளை தடுத்து நிறுத்த வேண்டும், அந்த வகையில் திருத்தங்களைக்கொண்டு வந்து இந்தச் சட்டத்தை சீர்திருத்தவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, சரித்திரம் திரும்புகிறது என்று சொல்வார்கள். அந்தச் சரித்திரத்தை திருத்தி எழுதவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தார்களோ அந்த நினைப்பு சரியானதல்ல என்று அவர்களே தன்னுடைய திருக்கரத்தால் அந்தச் சரித்திரத்தை குறித்து இந்த நாட்டுமக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வந்திருப்பதற்கு இப்போது நாட்டிலுள்ள எல்லோரும் மகிழ்ச்சி அடைவதோடு இந்த மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்த முஸ்லீம் பெருங்குடி மக்களும் பெருமை அடைகிறோம், பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம் என்று கூறிக்கொள்ள பெருமைப்படுகிறோம்.

ஏனெனில் மதுவிலக்கை ஒத்தி வைக்கிறோம் என்று சொன்ன நேரத்தில் அதை வன்மையாக கண்டித்தோம். நாங்கள் உங்களுக்கு நண்பர்களாக இருந்தபோதிலும் அதை நாங்கள் கண்டித்தோம், காங்கிரஸ் கட்சியை விட கடுமையாகக் கண்டித்தோம். ஆனால் இன்று நாங்கள் பெருமைப்படுகிறோம்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

என்று வள்ளுவர் சொன்னதையெல்லாம் எடுத்துக்காட்டினோம். அதற்கு அந்த நேரத்தில் அவர்கள் எவ்வளவு இருந்தாலும் வருவாயை உத்தேசித்து செய்வதாகச் சொன்னார்கள்.

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்ட் 22

ஆனால் இன்றையதினம் அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி இன்று தமிழ் சமுதாயமே மகிழ்ச்சி அடையும் விதத்தில் இந்தப் பெரிய காரியத்தை துணிச்சலான காரியத்தைச் செய்து இருக்கிறார்கள் என்றால் அதற்கு இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல, இன்று நம்மை யெல்லாம் விட்டு விலகிச்சென்று விட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், மூதறிஞர் ராஜாஜி அவர்கள், எங்களுடைய அருமைத் தலைவர் காயிதே மில்லத் அவர்கள், அண்ணல் காந்தி அடிகள் ஆகியோரின் மானசிகமான ஆசி அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். இந்த மது விலக்கை அமல் செய்கிற நேரத்தில் எதிர்காலத்தில் வரும் இடர்பாடு களையெல்லாம் வழக்கறிஞர்கள் எடுத்துச்சொன்னார்கள். உண்மை யிலேயே பெரிய அபாயம் இருக்கிறது. இந்தக் கள்ளச்சாராயம் காய்ச்சுவதை குடிசைத்தொழிலாக வைத்துக்கொண்டு இருக்கிற நிலைமையில் எப்படி மதுவிலக்கை நாம் அமல் செய்ய முடியும். போலீஸ் இதில் எப்படி ஈடுபட்டு காரியம் செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

ஏனென்றால் இந்தக் கள்ளச்சாராயத்திற்கும் போலீசாருக்கும் தொடர்பு வைத்து, பல பிரச்சனைகளை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். போலீசார் தீவிரமாக ஈடுபட வேண்டிய கட்டத்தில் இருக்க வேண்டுமென்ற நிலைமையை உருவாக்க வேண்டும். போலீசாரிடம் குறைபாடு இருப்பது, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். ஆகவே, கடந்த காலத்தில் நடந்த தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு இந்த கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுப்பதற்காக வட்டார அளவில் கமிட்டிகள் அமைக்க வேண்டும். முன்பும் வட்டார கமிட்டிகள் இருந்தன. ஆனால் அந்தக் கமிட்டிகள் சரியாகச் செயல்படவில்லை; தக்க ஆலோசனைகளை வழங்கவில்லை. ஆகவே, வட்டார கமிட்டிகள் அமைத்து ஆங்காங்கே கள்ளச்சாராயம் காய்ச்சுவதை அல்லது திருட்டுத்தனமாக கள் இறக்குவதை கண் காணித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு போலீசாரின் ஒத்துழைப்பு முழு அளவில் தேவை. அதேநேரத்தில் அதற்கு வக்கீல்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.



1974 ஆகஸ்ட் 22] [திரு. கே. எ. வகாப்]

இப்போது வக்கீல்கள் எல்லாம் நல்ல வருவாய் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்று மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் நாட்டு மக்கள் மீது அவர்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் அவர்கள் தங்களிடம் வருகின்ற வழக்கு உண்மையான வழக்காக இருந்தால் அவர்களுக்கு வக்கீலாக இருந்து வாதாடக் கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்கீல்கள் எல்லாம் இந்த மசோதாவை வரவேற்பதற்குக் காரணம், அவர்களுக்கு இதனால் நல்ல வருவாய் கிடைக்கும் என்பதுதான் என்று கூறியது வக்கீல் சமுதாயத்தை இழிவுபடுத்துவதாகும். ஆகவே, அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: நான் வக்கீல் சமுதாயத்தை இழிபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்லவில்லை. அவர்கள் .........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வக்கீல்கள் இதிலே என்ன செய்வார்கள்? குற்றவாளி சாராயம் குடித்தேன் என்றால் கட்சிக்காரர் குடித்திருக்கிறார் என்று தெரிந்துகொள்வார்கள். குடிக்கவில்லை என்று சொன்னால், குடிக்கவில்லை என்று வாதாடுவார் கள். அவ்வளவுதான் அவர்கள் செய்வது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

திரு. கே. எ. வகாப்: வக்கீல்களாக இருந்தால், உண்மையான வழக்குகள் என்று தெரிந்தால், அந்த வழக்குகளை ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் வழக்குகள் குறையும் என்பதற்காகச் சொன்னேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். ஏதாவது கொலைக் குற்றம் புரிந்திருந்தாலும் மற்ற குற்றங்கள் புரிந்திருந்தாலும் வக்கீல் என்ற முறையிலே தங்களை அணுகி காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் சட்டபூர்வமாகச் செய்யவேண்டிய பணி அது என்று செய்வோம். அப்படித்தான் சட்டமும் இருக்கிறது. ஆகையால்தான் நாங்கள் எல்லோரும் இந்தக் கேஸ்களுக்கு வக்காலத்து போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உண்மையிலேயே குற்றம் செய்தவர்களுக்காக வாதாட மாட்டேன் என்று உத்தமர் காந்தி அடிகள் அந்தத் தொழிலேயே விட்டுவிட்டார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். குற்றம் செய்திருந்தாலும்கூட தனக்காக ஒரு வழக்கறிஞரை வைத்து வாதாட வழியில்லை என்றால் அவருக்கு அரசாங்கமே வழக்கறிஞரை நியமித்துக் கொடுக்கின்ற சட்ட அமைப்பு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வக்கீல்கள் வாதாடலாமா வேண்டாமா என்பதல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்ட ஒரு சரித்திர சம்பவத்தைச் சொன்னேன். காந்தி அடிகள் உண்மையான குற்றவாளிகளுக்காக வாதாட மாட்டேன் என்று சொன்ன சரித்திரத்தை நினைவுபடுத்தினேன். அவ்வளவுதான்.

திரு. கே. எ. வகாப்: வக்கீலாக இருந்தால் வழக்குகளைக் கொண்டு வரும்போது தவறு எப்படி இருக்கிறது என்று புரிந்துகொள்ளக் கூடிய வக்கீல்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த வகையில்தான் நான் சொன்னேன். அதல்லாமல் அந்த சமுதாயத்திற்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையிலே சொல்லவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் கட்சித் தலைவர்கள் சொன்ன கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் இபுனசகுந்தராக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். மது விலக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குதிரைப்பந்தயத்தை ஒழித்திருக்கிறார்கள். அதோடு நிற்காமல், மக்களுக்குக் கெடுதல் செய்கின்ற பயனளிக்காத சினிமாத் துறையில் வரியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி பெருமைப்படக் கூடிய காரியங்களை எல்லாம் செய்துகொண்டே இருக்கிறார்கள்.

திரு. கோவை செழியன்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். சினிமா தொழில் மக்களுக்குக் கெடுதல் செய்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்?

திரு. கே. எ. வகாப்: சில சினிமாக்கள் கெடுதலாக இருக்கின்றன. அதைப்பார்ப்பதற்குக் கூட மக்கள் போகிறார்கள். சமுதாயத்திற்குக் கேடு பயக்கும் சினிமாக்களும் இந்த நாட்டில் இருக்கின்றன என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். (கோவை செழியன் எழுந்தார்)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. எ. வகாப்: கேடு பயக்கும் சினிமாக்கள் சில இருக்கின்றன. ஆகவே, இந்தத் துறையிலே இருக்கின்ற வரியை அதிகப் படுத்தியதைப்பற்றி நாங்கள் பெருமைப்படுகிறோம் என்று எங்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றிரண்டு குறைகள் இருக்கின்றன. குறிப்பாக நம்முடைய அரசாங்கம் பரிசுச் சீட்டுத் திட்டத்தை நடத்தி வருகிறது. இதில் எவ்வளவு வருமானம் வந்துவிடப் போகிறது. இதுவும் ஒரு வகையில் "காம்ப்ளிங்" தான். ஆகவே, இதையும் நிறுத்திவிட வேண்டும். இதையெல்லாம் செய்தால் அவர்களுடைய நல்லெண்ணத்தை இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் பாராட்டிப் போற்றுவார்கள். அதற்கு வேண்டிய பரிசையும் நாட்டு மக்கள் நிச்சயம் கொடுப்பார்கள்.

மற்றவர்கள் நினைப்பது போல் ஏதோ ஒரு பெரிய புரளி ஏற்பட்டு, ஒரு பெரிய கபளீகரம் ஏற்பட்டு, ஒரு மாற்றம் ஏற்படும் என்று எண்ணக்கூடிய கருத்து நீங்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் மறைந்துவிடும், உங்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும் என்பதை நாங்கள் அறிவோம். குறிப்பாக எங்கள் சமுதாயம் போற்றி பாராட்டும். அதிலும் குறிப்பாக மதுவிலக்கை முழுக்க முழுக்க அமல் படுத்துவதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்களையும், இந்த அமைச்சரவையையும் நாங்கள் மனதார பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனென்றால் இந்தக் கொள்கைக்காகத்தான் எங்கள் கட்சியிலே ஒரு எதிர்ப்புணர்ச்சி எழ முனைந்தது. ஆனால் நிச்சயமாக கலைஞர் அவர்கள் தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. அந்த நம்பிக்கையினால் எதிர்ப்பைக் காட்டாமல் இருந்தோம். எங்களுடைய எண்ணங்களுக்கு நல்ல பரிசை கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக வாழ்த்துக் கூறி பாராட்டி, அமர்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மதுவிலக்குத் திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்திருந்து, மீண்டும் அமலுக்குக் கொண்டுவருகின்ற இந்த அமைச்சரவையை பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மனதார வரவேற்று, பாராட்டுகிறேன்.

எந்த ஏழை எளிய மக்களுக்காக இந்த அரசு இருக்கிறதோ, எந்த பிற்பட்ட மக்களுக்காக இந்த அரசு பாடுபடுகிறதோ அந்த ஏழை எளிய மக்களுக்காக சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக, அவர்கள் பாதிக்கப் படாமல் அவர்களுக்கெல்லாம் நன்மை பயக்கும் வகையில் தூய்மை யான தொண்டாற்றி வருகின்ற இந்த அரசு, பல அநீதிகள், அக்கிரமங் களுக்குக் காரணமாக இருந்த மதுவிலக்கு ஒத்திவைப்பை ரத்து செய்து, மீண்டும் மதுவிலக்கை அமலுக்கு கொண்டுவந்திருப்பதைப் பற்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செல்ஃப் பிரஸ்டிஜ்—சுய கௌரவம் என்று பார்க்காமல் சரியோ தவறோ ஒன்றைச் சொல்லிவிட்டோம்; கடைசிவரையில் அதையே செய்யவேண்டும்; அதற்காக வாதிட வேண்டும் என்ற எண்ணம், இல்லாமல் மனிதாபிமானத்தோடு சட்டரீதியாக ஒன்றைச் செய்தாலும், மக்களுக்குத் தீமை பயக்கிறது என்று மெஜாரிட்டி கருத்தைத் தெரிந்து பின்னால் அந்தச் சட்டத்தை மாற்றி, மறுபடியும் மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த திட்டமிட்டிருப்பதை மனப் பூர்வமாக பாராட்டுகிறோம். இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கக்கூடிய கலைஞர் அவர்கள் தனக்கென்று ஒரு கௌரவத்தைப் பார்க்காமல் மக்கள் நலனைக் கருதி மனிதாபிமானத்தோடு செய்திருக் கின்ற இந்த முடிவை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்தச் சட்டத்தினால் 56 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. அதை எப்படி ஈடுசெய்வது என்று ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பல உபரி வரிகளை விதித்திருக்கிறார்கள். வேறு வழியில்லாமல் அதைச் செய்திருக்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது). ஒரு கட்சியின் பிரதிநிதியாக நான் பேசிக்கொண்டிருக்கிறேன். பேசத் தொடங்கி இரண்டு நிமிடங்கள் ஆவதற்குள் மணியடித்தால் எப்படி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முடியும்? இன்னும் ஒரு 5 நிமிடங்களாவது கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: நீங்கள் 4 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். நேரம் இல்லை. அதனால் இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

<u>திரு. கே. கந்தசாமி</u>: ஒரு கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் இன்னும் கொஞ்சம் நேரம் கூடுதலாகக் கொடுங்கள். முக்கியமான ஒரு சட்டத்தைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. நீண்ட நாட்களாக



ஏழை எளிய மக்களுக்கு பாதகமாக இருந்துகொண்டிருந்த மதுப் பழக்கத்தை அடியோடு ரத்து செய்திருக்கிறார்கள் இந்தச் சட்டத்தின் மூலம். அதனால் கலைஞரின் பெருமை இன்னும் கூடியிருக்கிறது. இந்த மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்படும் இழப்பினை சரிக்கட்டவே உபரி வரி போட்டிருக்கிறார்கள், சில நல்ல காரியங்கள் செய்யும் போது இப்படிப்பட்ட சில தீமைகளும் வரத்தான் செய்யும். அதுதான் உபரி வரி. அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அடுத்தபடியாக போலீசாரைப்பற்றி, வழக்குகளைப்பற்றி சில குறிப்புகள் வந்தன. நான் க்ரிமினல் லாயர் என்ற முறையில் கண் கூடாகப் பார்க்கிறேன். கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகள் வழக்குகள் போடும்போது தவறு செய்கிறார்கள். ஆகவே மேலதி காரிகள்—எஸ். ஐ. லெவலில்தான் வழக்குகளை நேரடியாகப் பரிசீலனை செய்து பதிவு செய்ய வேண்டுமென்று போட்டால்—நியாயத்தின் அடிப்படையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தவறு செய்தவர்களுக்கும் உதவுவதுதான் அட்வகேட் தர்மம் என்ற நியதியை— No accused shall go undefended என்ற நியதியை இந்த அரசும் ஏற்றுக்கொண்டு, சட்டமும் இருப்பதால் குற்றம் புரிந்தவர்களுக்குக் கூட பாதுகாப்பற்ற நிலையில் தண்டனை அளிக்கக் கூடாது என்று இருக்கிற காரணத்தினால் வழக்கறிஞர்கள் சட்டத்தை ஒட்டி சேவை செய்கிறார்கள். அது நியாயத்திற்கு விரோதமானதல்ல.

பொதுவாக பொய்க் கேஸ்கள் இல்லாத அளவுக்கு முன் ஜாக்ரதையுடன் இந்த அரசு செயல்படச் செய்யவேண்டுமென்று கேட்டு, முழு மனதோடு இதை வரவேற்று என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

<u>திரு. கோவை செழியன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரிக்கின்ற வகையில் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி அமர்கிறேன்.

வருகின்ற செப்டம்பர் மாதத்தில் இருந்து மது விலக்கப்படுகிறது என்ற இந்தச் செய்தியைக் கேட்டு பல பேர் மகிழ்ச்சியோடு "கம் செப்டம்பர் கம் செப்டம்பர், என பாடுபவர்களும் உண்டு, இது ப்ளாக் செப்டம்பர்" என்று வேதனைப் பாட்டு பாடுகிறவர்களும் உண்டு.

பொருளாதார அடிப்படையில் இது நல்ல திட்டம் என்ற காரணத்தினால், இதை ஆதரிக்கின்றோம், முழு மனதோடு. இந்த மசோதாவை நிறைவேற்றி—மதுவை ஒழிக்கிற நேரத்தில் மது வேறு ரூபத்தில் வருகிற வாய்ப்பு இருக்கிறது. டானிக் என்றும், அரிஷ்டம் என்றும் வார்னிஷ் என்றும் வரலாம். அவைகளை எல்லாம் தடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

எனக்கு வந்த செய்தி கூட—சமீபத்தில் ஒருவருக்கு இருபதாயிரம் லிட்டர் டிநேச்சர்டு ஸ்பிரிட் தயார் செய்ய லைசென்சு—கதிரேசன் என்பவருக்குத் தரப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். இப்படிப் பட்ட லைசென்சுகளை தனிப்பட்டவர்களுக்குத் தராமல்—இவை எல்லாவற்றையும் அரசாங்கத் தொழிற்சாலையிலேயே உருவாக்கி தொழில்துறைக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்தால் பல தவறுகள் தடுக்கப்படும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> டிநேச்சர்டு ஸ்பிரிட்டுக்கு லைசென்சு—அவர்கள் செய்கிற தொழிலைக் காட்டித் தான் வாங்குகிறார்கள். அவர் சொன்னது ஏற்கனவே கொடுக்கப் பட்ட—அனுமதிக்கப்பட்ட லைசென்சாகும். அதிகாரிகள் பலவற்றையும் பரிசீலனை செய்தே கொடுக்கிறார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> பழைய காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே இப்படிப்பட்ட ஸ்பிரிட் தயாரிக்கப்படுவதற்கு தனியாருக்கு லைசென்சு தரப்பட்டிருக்கிறது. நாங்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்—தனிப்பட்டவருக்குத் தராமல் எந்த முறையில் இந்த ஸ்பிரிட்டை அரசாங்கமே தயாரித்து விநியோகிக்கலாம் என்பதுபற்றி. தனிப்பட்டவர்களுக்கு இந்த லைசென்சை வழங்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. நடைமுறையில் எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றிப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

<u>திரு. கோவை செழியன்:</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்து எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. காங்கிரஸ் காரர்கள் செய்த தவறை நாம் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த டிநேச்சர்டு ஸ்பிரிட்டை அரசாங்கத்தின் மூலமாகவே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை உருவாக்கினால் தனிப் பட்டவர்களுக்கு இந்த லைசென்சு தரவேண்டியதில்லை. அவர்களும் தவறாகப் பயன்படுத்தமாட்டார்கள் என்று தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.





<u>திரு. நா. வீராசாமி:</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மசோதாவை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கு ரத்து செய்யப்படுகிறது என்று அறிவித்த நேரத்தில் நமது முதல்வர் அவர்கள் இது ரத்து செய்யப்படவில்லை—ஒத்திவைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவர் அன்றைக்குச் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில் இந்த அருமையான சட்டத்தைக் கொண்டுவருகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து பிரிந்து எதிரிலே உட்கார்ந்திருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் இந்த மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டு மென்று கோவையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றப் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வந்திருந்து அதனை ஆதரித்தாரே, அன்றைக்கு இதைப்பற்றி அவர் ஆட்சேபணை எதுவும் எழுப்பவில்லை. அது மாத்திரமல்ல. ரத்துசெய்தாக வேண்டுமென்ற அடிப்படையில் அண்ணா தி.மு.க. தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் அங்கே பேசிய தோடு கூட—ஆனந்தவிகடன் பத்திரிகையில் அதற்கான விளக்கங் களையும் தந்தார்.

<u>திரு. செ. அரங்கநாயகம்:</u> கோயம்பத்தூர் பொதுக்குழுவில் எங்களுடைய கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அதை ஆதரித்ததற்குக் காரணம் மதுவிலக்கை ரத்து செய்யாவிட்டால் அரசாங்கம் திவாலாகப்போய்விடும் என்று சொன்ன காரணத்தினால்தான்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:</u> கோவையில் நடந்த பொதுக் குழுவில் இந்தத் தீர்மானம் வந்தபோது—முன்பு செழியன் இருந் தார்கள்—கோயம்பத்தூரில்தான் நடைபெற்றது பொதுக்குழு—அங்கே நண்பர் எம்.ஜி. ஆர். தான் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று 1½ மணி நேரம் பேசியது. பின்னர் கூட ஆனந்த விகடனில் "நான் ஏன் பிறந்தேன்" என்று எழுதிவந்த தொடர் கட்டுரையில் மதுவிலக்கை ஒத்திவைப்பதற்கான காரணங்களை எல்லாம் எழுதியிருக்கிறார். ஏற்கனவே ஒத்துக்கொண்டார்கள். இதை ஒத்திவைக்கும்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு

இந்தக் கொள்கைக்கு எதிரான முறையில் இதனை ஒத்திவைக்கவில்லை. நம்முடைய நிதி நிலைமைக்கேற்ப ஒத்திவைப்பதாகத் தான் சொன்னோம். ஒத்திவைக்கப்படுவது என்பதே மறுபடியும் கொண்டு வரப்படும் என்பதுதான் அர்த்தம். ஆகவே இப்போது கொண்டு வருகிறோம்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி அன்றைய நேரத்தில் எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழக பொருளாளராக இருந்தார். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோது எப்படி எதிர்க்க முடியும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விஷயம் தெரிந்த செழியன் இப்படிச் சொல்வது விந்தையாக இருக்கிறது. பொதுக் குழு தீர்மானம் வந்த பிறகுதான்—பொதுக்குழுத் தீர்மானத்தை அமைச்சரவை யோசித்தது—அதற்குப் பிறகு அரசாங்கம் கொண்டு வந்தது.

திரு. கோவை. செழியன் : பொதுக்குழுவில் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படவேண்டும் என்கிறபோது எப்படி எதிர்ப்பது?

திரு. நா. வீராசாமி : பொதுக்குழுவில் மதுவிலக்கை ரத்துசெய்ய வேண்டுமென்று அன்றைக்கு எம்.ஜி.ஆர். பேசியதுதான், திரு. அரங்கநாயகம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அரசாங்கம் திவாலாகிவிடும் என்று சொன்ன காரணத்தினால்தான் எம்.ஜி.ஆர். அப்படிப் பேசினார்கள் என்றார். இவர்கள் தப்பித்தவறி ஆட்சிக்கு வந்தால்—அன்றைக்கு அரசாங்கம் திவாலாகிவிடும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் அப்போது மதுவிலக்கை ரத்து செய்துவிடுவீர்களா? இந்தச் சட்டத்தை அப்போது என்ன செய்யப்போகிறீர்கள்? இந்தச் சட்டத்தை அப்போது என்ன செய்யப்போகிறீர்கள்? பாண்டிச்சேரியில் உங்கள் கொள்கை என்னவாயிற்று? நிருபர்கள் கேட்டார்களே, ஏன் பதிலளிக்கவில்லை? அங்கே மழுப்பி விட்டீர்களே.

எந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவராக இருந்தாலும் அவர்கள் கட்சியில் மதுவிலக்கை ரத்துசெய்யவேண்டுமென்று தீர்மானம் போட்டு, காஷ்மீரத்தில் இருந்து குமரி வரையில் மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கவேண்டும் என்று சொன்னால் அதை



அவர்கள் நிறைவேற்றியிருந்தால் அதற்குப் பிறகு குற்றம் சொல்லி யிருந்தால் என்றால் புரிந்துகொள்ள முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கக்கூடாது, இருந்தாலும் நல்லாட்சி நடக்கக் கூடாது—இதைத்தவிர எதிர்க்கட்சிகளுக்கு என்ன லட்சியம் இருக்கிறது?

திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட நிலைமைக்கு வந்த தற்குக் காரணம் இந்த அரசாங்கத்தில் வேலை செய்கிற ஊழியர் களுக்கு ஊதியத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்ற கட்டாயம் ஏற்பட்டது. உடனடியாக கமிஷன் வைத்தோம். 25 கோடி ரூபாய் தேவைப்பட்டது. நாட்டு மக்களுக்குத் தேவையில்லாத திட்டங்கள் எதற்காகவும் கொண்டுவரவில்லை.

இன்றைக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது—காந்தியடி களின் புனிதக் கொள்கையை பின்பற்றி மீண்டும் தலைநிமிர்ந்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகிற நம்மைப்பார்த்து மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்றாவிட்டாலும்—ஏறக்குறைய 60 கோடி வருமானத்தை இழந்திருக்கிற நமக்கு மத்திய அரசாங்கம் நிச்சயம் உதவிசெய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டரைப்பற்றிச் சொன்னார்கள். எல்லாக் கட்சியிலும் தவறு செய்கிறவர்கள் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலும் தவறு செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.விலும் தவறு செய்கிறவர்கள் இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1-30]

அண்ணா தி.மு.க.விலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கக்கூடிய அருமைத் தோழர் சீனிவாசன் அவர்கள் முன்னேற்றக் கழகத்திலே இருந்தபோது வெளிப்படையாகவே சொன்னார்கள். இந்த நாட்டிலே எல்லோரும் குடிக்கிறார்கள். ஏன் தண்டத்திற்கு இந்தச் சட்டத்தை வைத்திருக்கிறார்கள். மதுவைக் கொண்டு வாருங்கள் என்று சொன்னார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், அப்படிப்பட்ட எண்ணம் உள்ளவர்கள் எல்லா கட்சிகளிலும் இருக்கக் கூடும். நாம் இந்தப் பொன்னான சட்டத்தைக் கொண்டு வரும்போது மத்திய அரசு, இதனைப் பாராட்டி, மானியம் கொடுக்கவேண்டும்.

நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இந்தச் சட்டத்தில் 4 (1) (ஜே) பிரிவு இருக்கவேண்டும். ஏனென்றால், கழகத்தைப் பொறுத்த வரையிலே இருந்த அப்படிப்பட்ட கேஸ்கள் எல்லாம்

இப்பொழுது வெளியேறி இருக்கின்றன. அதற்காக மட்டும் சொல்ல வில்லை. அது இருந்தால், காவல் துறைக் கூடச் செம்மையாகச் செயல்பட முடியும். முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் வந்த பிறகு, டாக்டர் களுடைய சர்ட்டிபிகேட் வாங்கி குடிக்க வேண்டுமென்ற நிலைமை வருமானால், யார், யார் எந்த எந்தப் பெரிய மனிதர்கள் பர்மிட் வாங்குகிறார்கள் என்ற பட்டியலை அரசாங்க கெஸட்டில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த மசோதாவை முழு மனதோடு வரவேற்று, இந்த மசோதாவானது இன்றையதினமே நிறைவேற்றி, செயல்பட வேண்டுமென்று வலியுறுத்தி, சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மதுவிலக்கை ஒத்தி வைப்பதற்காக இந்த மன்றத்தில் மசோதா வைக்கப்பட்டபொழுது, எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் பலமாக அதனை எதிர்த்தோம். நண்பர் வகாப் அவர்கள் அதனை எதிர்த்திருந்தாலும் கூட, அன்றையதினம் அவர்கள் கட்சி, அந்த மசோதாவை எதிர்த்து வாக்களிக்கத் தயாராயில்லை என்பதை தலைவர் அவர்கள் மூலமாக நான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

இன்று, இந்த மசோதாவில் "ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸில்" இந்த மசோதா ஏன் கொண்டு வரப்படுகிறது என்று விளக்கம் கொடுக்கவேண்டும். ஆனால், இந்த மசோதாவைப் பொறுத்தமட்டில் ஏன் இந்த மசோதா இங்கு கொண்டுவரப்படுகிறது என்ற காரணத்தைக் கூறுவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இல்லை யென்று சொன்னால், இந்த மசோதா இங்கு வருகிறது என்று சொன்னால், இதற்கு முழுக் காரணம் ஸ்தாபனக் காங்கிரஸ் அன்று எதிர்த்ததுதான். மது விலக்கை ரத்து செய்யக் கூடாது என்று எதிர்த்ததும், மாநிலம் முழுவதும் ஒரு பெரும் போராட்டத்தை நடத்தி, பேரணி நடத்தி, மது விலக்கு வேண்டுமென்று, ஏறத்தாழ 50,000 காங்கிரஸ் தொண்டர்கள் சிறைசென்றதும், காங்கிரஸ் தாய் மார்கள் கண்ணீர் விட்டதும்தான் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அல்லவென்று சொன்னால், வேறு காரணம் இருக்குமானால், இந்த மசோதாவிலே கூறி இருப்பார்கள். மூன்று





ஆண்டுகள் கழித்தாவது இந்த அரசாங்கத்திற்கு புத்தி தெளிந்திருக் கிறது என்ற மகிழ்ச்சியை நான் அடைகிறேன். இதுவரையில் பல வேறு காரணங்களைக் கூறினார்கள். அந்தக் காரணங்களை எல்லாம் விட்டுவிட்டு, புத்தி தெளிந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். மது விலக்கை ரத்து செய்ததனால் இந்த நாட்டிற்கு இந்த அரசு எந்த அளவு தீங்கு செய்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நிச்சய மாக இந்த நாட்டு மக்கள் இந்த அரசை மன்னிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எத்தனையோ குடும்பங்கள் குடிப்பழக்கத்தால் கெட்டு அழிந்து கிடக்கின்றன. தமிழகத்தின் பொருளாதாரம் இன்று சிதைந்து போய் விட்டது என்று சொன்னால் அதற்கு முதல் காரணம் இந்த அரசாங்கம்தான். மது விலக்கை ஒத்தி வைத்ததன் காரணமாகத் தமிழகத்தின் பொருளாதாரம் சிதைந்திருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு செய்த குற்றத்திற்கு மன்னிப்பே கிடையாது. இந்த அரசை மக்கள் மன்னிக்கவேண்டு மென்றால், அழிபட்ட குடும்பங்களுக்கு இந்த அரசாங்கம் நஷ்ட ஈடு அளிக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, கடைசியாக.........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றால், யார் யாருக்கு என்று லிஸ்ட் கொடுக்க முடியுமா? நீங்கள் கொடுக்கிறீர்களா லிஸ்டை?

திரு. ஜே. ஜேம்ஸ்: அரசாங்கம் நினைத்தால் எத்தனை குடும்பங்கள் மது விலக்கை ஒத்தி வைத்ததனால் அழிக்கப்பட்டன என்பதைக் கணக்கு எடுப்பது சிரமமல்ல. தேவைப்பட்டால், நாங்கள் ஒத்துழைக்கக் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, செக்ஷன் 24-A Privilage of selling by retail to be auctioned படி பார்த்தால், மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டு வந்த பிறகு கூட, இந்த அனுமதி சிலருக்கு வழங்க வேண்டுமென்ற உள்நோக்கம் இந்த மசோதாவில் இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக அது வரவேற்கத்தக்கது அல்ல.........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதிலே உள் நோக்கம் ஒன்றும் கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு மனித னுக்கு ஹெல்த் ரீசன்ஸுக்கு டாக்டர் சர்ட்டிஃபிகேட் இருந்தால்,

அதற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று, சுப்ரீம் கோர்ட் முடிவு செய்திருக்கிறது. ஃப்ண்டமென்ட்டல் ரைட். குடிப்பதற்குக் கூட ஃபண்டமென்ட்டல் ரைட்.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ்—பழைய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்—என்ன சொல்கிறார்? இந்த மருத்துவ அடிப்படையில், நோய் அடிப் படையில் பர்மிட் வழங்கலாமா, கூடாதா? என்ன சொல்கிறார்? தெளிவாகச் சொல்ல வேண்டுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் இங்கே கூற வந்தது, விற்பனை செய்வதற்கு, லைசென்ஸ் வழங்குவதற்காக வகை செய்யப்பட்டிருக்கிறது. நாம் மது விலக்கை அமுல்படுத்த இருக்கின்றோம். ஆக, மதுவை விற்பதற்குள்ள உரிமையை இனிமேல் யாருக்கும் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஆனால், மது விற்கவேண்டிய தேவை ஏற்பட்டால், அரசாங்கமே வைத்து, யாருக்குத் தேவைப்படுகிறதோ, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூறியதைப் போல், ஒருவேளை, மது அருந்தாத காரணத்தால் உயிர் துறந்து போகும் என்ற அபாய நிலை ஏற்படும் என்றால், அந்தச் சூழ்நிலையில் உயிரைக் காக்க சமுதாயத்திற்கும், அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. அரசாங்கம் அக் கொள்கையைப் பின்படுத்த வேண்டுமானால், யார் யாருக்கோ கொடுத்து, இதைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடிய வாய்ப்பை, அரசாங்கம் தரக் கூடாது அதற்கான வழிவகைகளை இந்த மசோதாவில் தரக்கூடாது என்று கூறவிரும்புகிறேன்.

கடைசியாக, அரசாங்கத்திற்கு அனுகூலமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். நாம் மது விலக்கைக் கொண்டு வந்தாலும் கூட, இன்று இதுபோல் ஒரு தீய சக்தி இருக்கிறது; அரிஷ்டம் என்பதுதான் அது. ஒருவேளை மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென்று குறை பட்டுக்கொண்டாலும் இந்த அளவிற்கு அரிஷ்டத்தையும் எந்த மாநிலத்திலிருந்து அளிக்க முடியுமோ, அதற்கு அரசாங்கம் வழி செய்யவேண்டும். நாம் 30 சதவிகிதம் வரி போட்டிருக்கிறோம். அதனால் எல்லாம் அரிஷ்டம் நாட்டை விட்டு ஒழிவதாக இல்லை. மதுவிலக்கைக் கொண்டுவந்தால், அரிஷ்டத்துக்கு டிமாண்ட் அதிக மாக வரப்போகிறது. ஆகவே, அரிஷ்டமும் நமது நாட்டில் இருக்கக்கூடாது. அதற்கு மத்திய அரசாங்கம் சட்டத்தைத் திருத்த,



நமது மாநில அரசு தேவைப்பட்டால், அதற்கான தீர்மானத்தை இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்த மதுவிலக்கைக் கொண்டு வரக்கூடிய இந்த மசோதாவை வரவேற்பதைக் தவிர, வேறு வழி கிடையாது.

ஏனெனில் இது ஒரு அரசியல் ஆயுதமாக இன்றைக்கு நாட்டிலே பயன்படுத்தப்படுகிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. நாடு பூராவும் மது இருக்கும்போது, தமிழ் நாடு மட்டிலும் மது விலக்கை அமுல் செய்கிறது என்பது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்பதுதான். வருமானம் போகிறது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப் பிட்டது போல், கொழுந்து விட்டெரியும் வட்டத்தின் மத்தியில் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ் நாடு வைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்தும். இங்கு மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டுமென்று வாதாடும் அகில இந்திய கட்சிக்காரர் கள், ஏன் நாடு பூராவும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டுமென்று ஒரு கிளர்ச்சி செய்யக் கூடாது? இப்பொழுது, தமிழகத்தை எதிர்ப் பவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர எங்கும் இது இருக்கத் தான் போகிறது. இங்கில்லாவிட்டால் ஆந்திராவிற்குப் போய் குடிப்பார்கள், பாண்டிச்சேரிக்குப் போய் குடிப்பார்கள், கேரளா விற்குப் போய்குடிப்பார்கள் இங்கேயும் பலவிதமான ஒழுங்கீனங்கள் ஏற்படும். ஆகவே, இங்கு உஷார்படியான நடவடிக்கைகள் மிகவும் அதிகப்படியாக தேவையாக இருக்கும். அதை வைத்துக்கொண்டு ஆளுங்கட்சியை எதிர்ப்பதற்கான பல்வேறு விஷயங்கள் வரும். அரசியல்வாதிகளை பிடித்துக்கொண்டு போய், வாயிலே சாராயத்தைத் தெளித்து நிறுத்திவிடுவார்கள் என்று இங்கு சொன்னார்கள். ஆகவே, சற்று உஷார் தன்மையோடு இருக்க வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடிப்பதற்கு லைசென்ஸ் கொடுப்பதை கொடுத்துத்தான் ஆக வேண்டும், அதில் சந்தேகமில்லை. ஆனால் உண்மையிலேயே உடல் நலம் கெட்டிருக்கிறார்களா என்று பார்த்து சர்டிபிகேட் கொடுப்பதற்காக ஜில்லாவிற்கு ஒரு பேனல் ஆஃப் டாக்டர்ஸ் போட வேண்டும். டாக்டர்கள் கொடுப்பது என்றால்

எல்லா டாக்டர்களும் கொடுப்பது என்ற முறையில் இருக்கக் கூடாது. அந்த ஜில்லாவின் டி.எம்.ஓ., இன்னும் உள்ள பிரபல டாக்டர்களைக் கொண்ட குழு இம்மாதிரியான வியாதியஸ்தர்களைச் சந்தித்து பரிசோதனை செய்து அவர்கள் குடித்துத்தான் தீர வேண்டும் என்று சர்ட்டிபிகேட் கொடுக்கும் ஏற்பாட்டை செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். இல்லையென்றால் பலபேர் இதைச் சாக்காக வைத்துக்கொண்டு குடிப்பதற்கான நிலை ஏற்பட்டுவிடும். இந்த வார்த்தைகளோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நான் இந்த மசோதாவை மனப்பூர்வமாக ஆதரித்து ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இவ்வளவு காலந்தாழ்ந்தாவது நமது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டு வந்தார்களே என்று காணும்பொழுது உள்ளபடியே நாம் மகிழ்ச்சியுடையவர்களாக இருக்கிறோம். மகிழ்ச்சி ஒருபுறமிருந்தாலும் இது ஒரு தற்காலிகமான மகிழ்ச்சியாகத்தான் இருக்கப் போகிறதோ என்ற ஐயப்பாடும் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்தச் சட்டத்திலே ஒருசில புதிய ஷரத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள். 24 ஏ என்ற ஷரத்து புதியதாக இங்கே தோன்றியிருக்கிறது. இது உண்மையிலேயே இருக்கவேண்டுமா வேண்டாமா என்ற சர்ச்சை செய்ய நான் வரவில்லை. ஆனால் இம்மாதிரி மதுவை தனிப்பட்டவர்கள் விற்பதற்கு உரிமை கொடுக்காமல் அரசாங்கமே இலாக்காக்கள் மூலமாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். "மெடிசனல் பர்ப்பஸ்" அல்லது விஞ்ஞான துறைக்கோ அல்லது தொழில் துறைக்கோ தேவைப்படும் பொருளாக இருப்பதால் இதற்குச் சரியான கட்டுப்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டும். இல்லையென்றால் இதிலே ஈடுபட்டிருப்பவர்கள் வேண்டுமென்றே சில சிக்கல்களில் மாட்டிக் கொள்வார்கள்.

இந்த பர்மிட் முறையைப்பற்றி இதை எப்படி வழங்கலாம், வழங்குவது சரியா என்ற பிரச்னைகூட இங்கு கிளப்பப்பட்டிருக்கிறது. இந்த பர்மிட் கொடுப்பதிலே முன்பிருந்த முறைப்படி டாக்டர்கள் சர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டும், குறிப்பிட்ட வருவாய் இருக்க வேண்டுமென்று பல விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளையெல்லாம் அதேபோலவே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்வதற்



காக நான் வரவில்லை. மதுவை ஒழித்தே ஆகவேண்டும். அப்படி என்றால்தான் இந்தச் சட்டத்தினாலே ஏதாவது நன்மை ஏற்படும். காந்திஜி சொல்லியபடி, மூதறிஞர் இராஜாஜி சொல்லியபடி இந்தச் சட்டத்தை நாம் அமல் நடத்துகிறோம் என்று வாயளவில் பேசி விட்டு விடாமல் உண்மை செயல்வடிவத்திற்குக் கொண்டு வருவதற்கு திட்டவட்டமான காரியங்களில் எல்லா அரசியல் கட்சிகளும் முனைந்திருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தச் சட்டம் வெற்றி பெறும்.

இந்த மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகத் தனிப் பிரிவு போலீஸ் இருந்தால் பொருத்தமாக இருக்கும். குறிப்பாக மது அருந்தக் கூடியவர்கள் அந்தப் பிரிவில் இருக்கக் கூடாது. இன்றைக்கு போலீஸ் பிரிவில் இருக்கும் சிலர் மது அருந்துகிறார்கள். நான் இதைப் பொத்தாம்பொதுவாகக் குற்றம் சாட்டுகிறேன் என்று நினைக்கக் கூடாது. இம்மாதிரி நிகழ்ச்சி பலயிடங்களிலும் நடந்து கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் இந்த மதுவிலக்கு இல்லாத காரணத்தினால் தெருக்களில் நடமாடுகின்ற தன்மை இல்லாமல் இருக்கிறது. இரவு நேரங்களில் சாதாரணமாக நெரிசல் மிகுந்த பகுதிகளில் செல்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது. பெண்கள் சினிமா விட்டு வீட்டிற்கு வருவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. பிள்ளைகள் பள்ளிக்குச் செல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரும், அதிலும் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் இந்தச் சட்டத்தை அதிகமாக வரவேற்பார்கள். ஏனென்றால் அவர்களுக்குத்தான் தெரியும், வீட்டிலே ஆடவர்கள் நடத்தும் அட்டகாசங்களைப் பார்த்துக்கொண்டு அவர்கள் எவ்வளவு கஷ்டத்திலே இருக்கிறார்கள் என்பது கிராம மக்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இந்தக் குடி அரக்கனை ஒழிப்பதற்கு நாம் எல்லோரும் கட்சி வேறுபாடு இன்றி ஒத்துழைக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

எனக்கு முன்னால் பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். குறிப்பாக கேரளாவிலே இன்றைக்குப் பலரும் ஆயுர்வேத வைத்தியசாலை என்று சொல்லி வைத்திய சாலைகளை வைத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அது மருந்தாக இருக்கிறதா அல்லது போதைப்பொருளாக இருக்கிறதா என்ற ஆய்வு செய்வது பொருத்தமானதாக இருக்கும் என்றே கருதுகிறேன். நாகர்கோவிலில் ஒருசில பார்மசிகளின் கிளைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளிலே மதுக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 22

கஷாயம் விற்பனை ஆகும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு மொத்தமாக லைசென்ஸ் கொடுக்கிறார்கள். சில்லறை லைசென்ஸ் உள்ள அவர்கள் ஆட்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை ஏமாற்றுகின்ற தன்மை இருக்கிறது. அது மத்திய சர்க்காரின் அதிகார எல்லையில் இருந்தாலும் மாநில அரசாங்கங்களும் இதைக் கட்டுப் படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வைத்திய வசதிக்காக இதைச் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இதைப் போதைப் பொருளாகக் கொடுக்கக் கூடாது. மெடிசனல் டோசாக இருக்க வேண்டுமே தவிர இன்டாக்சிகேட்டிங் டோசாக இருக்கக் கூடாது. பலரும், மதுக் கஷாயத்தை இரண்டு அவுன்ஸ் குடிக்க வேண்டுமென்றால் 2 அல்லது 3 குப்பிகள் குடிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதை நிச்சயமாகத் தடை செய்வதற்கு விரைவில் சட்டம் கொண்டு வர வேண்டும். இந்தச் சட்டத்தை நாங்கள் எல்லோரும் ஆதரிக்கிறோம். அகில இந்திய ரீதியில் இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கு எல்லா அரசாங்கங்களும் முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியலமைப்பில் டைரக்டிவ் பிரின்ஸ்பிள்ஸில் இதுவொரு முக்கிய விஷயமாக இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு மதுவிலக்கு குஜராத் மாநிலத்தில் மட்டும் இருக்கிறது. ஏனைய மாநிலங்களில் இது தளர்த்தப்பட்டிருக்கிறது. இதை அகில இந்திய ரீதியில் கொண்டு வருவதுதான் சாலச்சிறந்ததாக இருக்கும், பொருத்தமுடையதாக இருக்கும். காந்திஜியைப்பற்றி நாம் பெருமையாகப் பேசுகிறோமே தவிர ககாந்திஜியின் கொள்கைகளை மறந்துவிடுகிறோம். மூதறிஞர் இராஜாஜியின் கொள்கைகளை மறந்து விடுகிறோம். எனவே பேச்சளவில் இல்லாமல் செயல் வடிவத்திற்குக் கொண்டு வந்து இதை அமல் நடத்துவதற்கு எல்லாக் கட்சிகளும் பாகுபாடு இன்றி ஒத்துழைக்க வேண்டும். நிச்சயமாக இந்தச் சட்டத்தை இப்பொழுதாவது அமலுக்குக் கொண்டு வந்தார்களே என்று காணும்பொழுது உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் முன்பு இந்தச் சட்டத்தை ஒத்தி வைத்தபொழுது நாங்களெல்லாம் அதை எதிர்த்தோம். சாதாரணமாக ஒத்தி வைப்பது என்ற முறையில் பல சட்டங்கள் வருகின்றன. படியரிசித் திட்டம் கைவிடப்பட்டபொழுது தற்காலிகமாக அதை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதேபோல் இந்த



1974 ஆகஸ்ட் 22] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறது என்று சொல்லி திராவிட முன்னேற்றக் கழக அரசு தப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அன்றையதினம் வாக்குப் பதிவு எப்படி நடந்தது என்பதை இந்த அவையிலே வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இன்றைக்கு மதுவிலக்கை ஆதரிப்பவர்களெல்லாம் அன்றையதினம் எந்த முறையிலே நடந்தார்கள் என்று கூறுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். அன்றைக்கு வாக்குப் பதிவு நடந்த பொழுது, "போல்" நடந்தபொழுது உயர்திரு. கோவை செழியன் அவர்கள், கதவைச் சாத்தியதற்குப் பிறகு உள்ளே நுழைந்தார்கள். நான் அதற்கு ஆட்சேபணை தெரிவித்தேன்.

" THIRU R. PONNAPPA NADAR : Now the doors are closed. How member Thiru Kovai Chezhian is entering ? He may be asked to go out. "

என்று சொல்லி அப்பொழுது பேரவைத் தலைவர் அவர்கள், வாக்கெடுப்பு துவங்கப்பட்டு விட்டதால் மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள சபையின் விதிகளின்படி உரிமையில்லை, ஆகவே, அவர்கள் இதிலே கலந்து கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன் என்ற கருத்தில் சொல்லியிருக்கிறார்கள். இவர்களெல்லாம் இன்றைக்கு மிகவும் தீவிரமாக வாதாடியதைக் காணும்பொழுது நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். நான் இதைக் குறைபாடாகக் கூறவில்லை. மதுவிலக்கைப் பற்றி ஆதரித்துப் பேசுபவர்களெல்லாம் பலரும் இருந்திருக்கிறார்கள். முன்பு இவர்களிலே கட்டாயமாக இந்த மதுவிலக்குச் சட்டம் தேவையில்லை என்று சொன்னவர்களும் இருக்கிறார்கள். இப்பொழுதாவது இந்த உணர்வுகளைக் கொண்டு இந்தச் சட்டம் இப்பொழுதாவது வந்திருக்கிறதே என்பதற்காக மறுபடியும் பாராட்டி நான் அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பொதுவாக இந்த மசோதாவை இந்த மாமன்றம் வரவேற்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை மதுவிலக்கை அமல் படுத்தும்பொழுது தவறுகள் ஏற்படாமல் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் . . .

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, அவர்கள் சொன்னார்கள், ரொம்ப நல்லமுறையில் இருந்தது. மதுவிலக்கை இந்தியா பூராவிலும் அமல் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இவ்வளவு தூரம் சொல்லும் அவர்கள், பாண்டிச்சேரியில் 5 கள்ளுக்கடைக்காரர்களைப் பிடித்து தேர்தலில் ஏன் நிறுத்தினார்கள்? கொள்கை ஒன்று, நடப்பது ஒன்று என்று இருப்பது சரியா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மதுவிலக்கைப் பொறுத்தவரை நம்முடைய அரசாங்கம் கண்டிப்பாக நிறைவேற்றி வைக்கும், அமல் நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் ஃபாரின் லிக்கர் ஷாப்ஸ் பற்றி ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 22 நாட்கள் பாண்டிச்சேரியில் ஆட்சி நடத்தினார்கள். கம்யூனிஸ்டு கட்சியும் சேர்ந்து நடத்தினார்கள். அவர்கள் ஏன் மது விலக்கைக் கொண்டு வரும் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை?

திரு. கோவை செழியன்: தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குள்ளாகவே ஆட்சியைக் கவிழ்த்து விட்டார்களே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலிலேயே பட்ஜட்டிலே ஏன் அறிவிக்கவில்லை? பட்ஜட் வந்து அதற்குப் பிறகுதான் ஆட்சி கவிழ்ந்தது? பாண்டிச்சேரி மக்கள், தமிழ் நாட்டு மக்கள் புரட்சிகரமான அந்தத் திட்டத்தினை புரட்சிகரமான அந்தத் தலைவரிடமிருந்து எதிர்பார்த்தனர்; ஆனால் அது பட்ஜட்டிலே வரவில்லை என்பதைத் தான் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

திரு. கோவை செழியன்: பட்ஜட் விவாதம் நடந்து கொண்டிருக்கும் போதும் கொண்டு வரலாம். அதற்குத்தான் சந்தர்ப்பம் ஏற்படவில்லையே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுவாக, பட்ஜட்டிலே தான் கொள்கைகளைச் சொல்வார்கள். அதற்குப் பிறகுதான் விவாதம் வரும்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஐ.எம்.எப்.எல். கடைகளுக்கு அரசாங்க அனுமதி 1—4—1974 முதல் 31—8—1974 வரை இருக்கிறது.

திரு. கோவை செழியன்: இப்போது இருக்கும் சாராயக் கடைகள், மதுக்கடைகளை 31-ம் தேதி மூடிவிடுகிறார்கள். மீதி இருப்பதை என்ன செய்வது? அரசாங்கமே கைப்பற்றப் போகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 31-ம் தேதிக்குப் பிறகு சாராயம் விற்றால் போலீஸ் நடவடிக்கை எடுக்கும். 31-ம் தேதி வரைதான் அனுமதி. அதற்குப் பிறகு சட்டம் அதன் வேலையைச் செய்யும்.

திரு. கோவை செழியன்: மீதி இருப்பதை டிஸ்போஸ் செய்ய வழிவகை இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 31-ம் தேதிக்குப் பிறகு விற்க முடியாது என்று தெரிந்து முன்கூட்டியே கொஞ்சங்கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். குடித்துப் பழக்கம் உள்ளவர்களும் குறைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு பேரும் சேர்ந்து குறைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அவர்கள் வழக்குத் தொடரலாம் என்று தெரிவிக்கப்பட்டது. முன்பு கள்ளுக்கடைகளை மூடியபோது சுப்ரீம்கோர்ட்டுக்குப் போனார்கள். அங்கு, அரசியல் சட்டப்படி மாநில அரசு அந்தச் சட்டத்தை நிறைவேற்றலாம், அதிகாரம் இருக்கிறது என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஐ.எம்.எப்.எல். கடைக்காரர்கள் கோர்ட்டுக்குப் போனால் கூட வெற்றி பெற முடியாது. ஆகவே, கோர்ட்டுக்குப் போய் செலவு செய்யாமல் இருக்கலாம். மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். இப்போது சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான தவறும் இல்லை.

வசதியானவர்கள் குடிக்க அனுமதி கொடுக்கலாமா என்று கேட்டார்கள். அன்று முதலமைச்சர் அவர்கள் திரு. ஜேம்ஸ் அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். வசதியானவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டு மது குடிக்க பர்மிட் கொடுக்காமல் இருக்க

லாம் என்று யோசனை சொல்லும்படி கேட்டார்கள். அதற்கு உறுப்பினர் அவர்கள் நேரடியாகப் பதில் சொல்லாமல் வளைத்து வளைத்துப் பேசினார்களே தவிர எந்தக் காரணத்தையும் சொல்லவில்லை. ஹெல்த் பர்மிட் என்று ஏன் கொடுக்கிறார்கள் என்றால்—சுப்ரீம் கோர்ட் வரை வழக்கு சென்று சுப்ரீம் கோர்ட்டில் அது ஃபண்டமென்டல் ரைட்ஸ் என்று சொல்லிவிட்டார்கள். நீதிபதி அடிப்படை உரிமை, என்று கூறிவிட்டார். ஆகவே, இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பொய் வழக்குகளைப் பற்றிப் பேசினார்கள். பொய் வழக்குகளை விட உண்மையான வழக்குகளே வாதத் திறமையால் போய்விடுகிறது. தவறான முறையில் வழக்குப் போட்டால் ஃபால்ஸ் அண்டு ஃபிரிவோலஸ் என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். வக்கீல்கள் திறமையாகப் பார்த்துக் கொள்ளுவார்கள். பொய் வழக்குகள் போடமாட்டார்கள். சாத்தியக்கூறு இல்லை. உண்மையான வழக்குகளிலேயே நம்முடைய வக்கீல்கள் திறமையாக வாதிட்டு அதிகமாக அரசாங்கத்திற்கு வெற்றி இல்லாமல் போகிறதே தவிர வேறல்ல.

திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது அவர்களுடைய தொகுதியின் நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். பெருந்துறைப் பகுதியில் முக்கியமான ஒரு நபர் கள் இறக்குகிறார். அதைப் பற்றிப் பேச வேண்டாம், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். 19-ஆம் நாள் ஆகஸ்ட் 1974 சோதனை போட்டு 11 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தென்னந் தோப்பு உரிமையாளர் ஸ்ரீரங்க கவுண்டர் தலைமறைவாகிவிட்டார். நடவடிக்கை எடுத்து வழக்கு பதிவு செய்யப்படும். தொடர்ந்து ஸ்ரீரங்க கவுண்டர் தோப்பு கண்காணிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அங்கு போனபோது சொன்னார்கள். குறிப்பிட்ட ஒருவர் எந்தக் கட்சி என்று சொல்லவில்லை, சொன்னால் அரசியலாகிவிடும்—இந்தக் காரியம் செய்கிறார். வழக்குகள் பதிவு செய்யப்பட்டால் கோர்ட்டில் வக்கீல்கள் வாதத் திறமை காரணமாக 100, 200 பைன் கட்டித் தப்பித்து விடுகிறார்கள் என்றார்கள். கண்டிப்பாக இதிலே மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி மந்திரியவர்களுக்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். சாராயம் காய்ச்சி விற்கின்ற இடத்தில் கள்ளையும் சேர்த்து ஓரிடத்தில் விற்கிறார்கள்



என்று சொன்னதற்காக அதிகாரியால் ஸ்டேஷனில் கை கால் முறிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறார். போலீஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரு அதிகாரி தவறாக நடந்து கொண்டார் என்றால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். கள்ளை இறக்கிற இடத்தில் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சிலபேர் மீது வழக்கு நடைபெறுகிறது. மேலதிகாரிகளால் 19-ம் தேதி நடவடிக்கை எடுக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரிஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மதுவிலக்கு வந்த பிறகு அரிஷ்டக்காரர்களுக்கு அதிர்ஷ்டம் வந்து விடக்கூடாது என்பது தான் அரசாங்கத்தின் கொள்கை. பெயர்களைப் பார்க்கும்போது, பாரதமாதா பார்மசி, கிருஷ்ணா பார்மசி, நேஷனல் பார்மசி என்ற இந்த அழகான பெயர்களை வைத்துக் கொண்டு இந்தக் காரியங்களைச் செய்வதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு மேல் அல்கஹால் இருந்தால் விற்பனை செய்யக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. நிலைமைகளைப் பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மதுவிலக்கைப் பொறுத்தவரை அதிகாரிகள் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் இதற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். இங்கே பாராட்டிப் பேசிவிட்டு வெளியே சென்று அதிகாரிகளுக்குத் தகவல்களைத் தராமல் இருக்கக்கூடாது. தவறு நடப்பதைத் தெரிந்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல் இருந்தால் சட்டத்தை நல்ல முறையில் அமல் நடத்த முடியாது. அவையில் இருக்கும் அத்தனை உறுப்பினர்களும் கட்சி வேறுபாடு இல்லாமல் ஒத்துழைப்புத் தருவார்களானால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்த மசோதா இந்த அவையில் நிறைவேறுகிற நேரத்தில் இந்த மசோதாவை ஆதரித்துப் பேசிய உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட போது அதற்கு எதிர்க் கட்சிகளின் சார்பில் பலமான மறுப்புகள் தெரிவிக்கப்பட்டன. தோழமைக் கட்சிகளின் சார்பிலும் நம்முடைய முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல்—

" நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு "

என்ற வகையில் இடித்துக் காட்டப்பட்டது.

ஆயினும் அன்றைக்கு இருந்த பல்வேறு நிலைமைகளை நான் இந்த மாமன்றத்தில் எடுத்து விளக்கி—" இப்போது மதுவிலக்கை ஒத்தி வைப்பது தவறு என்றாலும் வேறு வழி இல்லை " என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொண்டேன். பிறகும் நான் அன்று பேசிய பேச்சுக்களின் அவைக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால் எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி யோசனைகளுக்கு மதிப்பளித்த அதே நேரத்தில் அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிறோம் என்ற வார்த்தையைத் தெரிவித்து மதுவிலக்கை ஒத்தி வைத்தது முதல் இன்னாள் வரை—நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே குறிப்பிட்டதைப் போலவும், துணை மானியக் கோரிக்கையில் எடுத்துச் சொன்னது போலவும், அண்ணல் காந்தியடிகள் நெறி நின்ற அண்ணா அவர்கள் அமைத்த அரசு ஏதோ ஒரு முள் தன்னுடைய நெஞ்சில் குத்தியது போன்ற உணர்வோடுதான் இந்த மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைத்ததில் இருந்து இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

[பிற்பகல் 2-00]

அந்த முள் இன்றைக்கு அகற்றப்பட்டுவிட்டது என்பதில் நாங்கள் அனைவரும், நானும், ஆளுங்கட்சியும், அமைச்சரவையும், ஏன் இந்த மாமன்றத்திலே இருக்கிற அனைவருமே மகிழ்ச்சிக் கடலில் இன்று திளைத்திருக்கிறோம்.

இதில் நண்பர் திரு. பழனிசாமி அவர்கள் கொஞ்சம் மாறுபட்ட கருத்துக்களை இங்கு எடுத்துச் சொன்னார்கள். எனக்கு பெரிய வருத்தம்—இந்தக் கொள்கை அகில இந்திய அளவில் நிறைவேற்றப் பட வேண்டும் என்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொல்கிறது, அதை நமது பழைய காங்கிரஸ் கட்சி



சார்பிலும் இங்கு எடுத்துச் சொன்னார்கள், மற்றக் கட்சிகள் சார்பிலும், முஸ்லீம் லீக், பார்வேட் ப்ளாக் கட்சிகள் சார்பிலும் எடுத்துச்சொல்லப்பட்டது. ஆனால், அகில இந்திய அளவில் நிறைவேற்றி வைக்கவேண்டிய ஒன்றை, ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் யாருமே இந்த விவாதத்தில் கலந்துகொள்ளாததும் இந்த மசோதாவை நிறைவேற்றுகிற காலத்தில் இந்த அவையில் அவர்கள் இல்லாததும் உள்ளபடியே எனக்கு ஒரு பெரும் குறை, அவர்கள் இருந்திருந்தால் நமது கோரிக்கைகளைக் கேட்டு—நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தாலும் ஒரு மாநிலத்தை ஆளும்கட்சி—அவர்கள் இந்தியப் பேரரசை ஆளும் கட்சி அல்லவா? அவர்கள் நம் கோரிக்கைகளை டெல்லியில் இருக்கிற மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி அகில இந்திய அளவில் செயல்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை இழந்துவிட்டோமோ என்று கருதுகிறேன். அவர்கள் இன்று இங்கு இருந்திருந்து இந்த மதுவிலக்கு மசோதாவை, இந்தக் கொள்கையை நிறைவேற்றி வைத்திருப்பார்களானால் நான் மெத்தவும் மகிழ்ச்சி யடைந்திருப்பேன்.

ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பில் யாரும் இந்த மசோதாவின் மீது பேசவும் இல்லை, கலந்து கொள்ளவும் இல்லை என்பது உள்ள படியே வேதனைக்குரிய ஒரு விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் வழக்குமன்றத்திற்குச் செல்வார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். வழக்குமன்றத்திற்குச் சென்று அவர்கள் வெல்லமுடியாது என்று நம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வெல்வார்கள் என்று வைத்துக்கொள்வோம். சமுதாய நலனுக்காகச் செய்யப்படுகிற ஒரு காரியத்தை வழக்குமன்றத்திற்கு எடுத்துச் சென்று சட்டத்தில் இருக்கிற சந்துபொந்துகளில் நுழைந்து நான் வென்றுவிட்டேன் என்று கூறுவது சமுதாயத்திற்குச் செய்கிற நல்ல தொண்டாகாது என்பதை நான் வழக்குமன்றத்திற்குச் செல்கிற யாராயிருந்தாலும் அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களை சமுதாயம் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கும். வழக்கு மன்றத்திற்குச் சென்றவர்கள் யார், அவர்கள் உருவம் என்ன, அவர்களது முகவிலாசம் என்ன என்பதையெல்லாம் சமுதாயம்

பார்த்துக்கொண்டேயிருக்கும். என்ன காரணத்திற்காக அவர்கள் வழக்குமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை கவனித்துக் கொண்டே இருக்கும்.

நேற்றையதினம் கூடச் சொன்னார்கள், குதிரைப்பந்தயத்தை ஒழித்திருப்பது குறித்து வழக்குமன்றத்திற்குச் செல்லலாம் என்று. நாட்டில் தீமைகளை ஒழிப்பதற்காக, நல்ல நிலைமைகளை உருவாக்க எடுக்கப்படுகிற காரியங்களுக்கு சட்டத்தின் சந்துபொந்துகளில் நுழைந்து கொண்டு நாங்கள் வென்று விட்டோம் என்று சொல்வார் களானால் அது நல்லதல்ல, அது சமுதாயத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ இழைக்கப்படும் மாபெரும் துரோகம் என்பதை வழக்குமன்றத்தின் துணையை இந்தக் காரியத்திற்கு நாடுகிறவர்கள் உணரவேண்டும். நல்ல காரியங்களுக்காக், நியாயத்தைப் பெறுவ தற்காக வழக்குமன்றங்களுக்குச் செல்வதை நான் மறுக்கவில்லை. ஆனால் சமுதாயத்திற்குச் செய்யப்படுகிற நல்ல காரியங்களுக்கு குறுக்கே நிற்கிற வகையில் வழக்குமன்றத்திற்குச் செல்வது—அது மதுவிலக்குத் திட்டமானாலும் சரி அல்லது குதிரைப் பந்தய ஒழிப்புத் திட்டமானாலும் சரி—இப்படிப்பட்ட காரியங்களுக்காக வழக்கு மன்றத்திற்குச் செல்வார்களானால் அவர்கள் ஒரு வேளை வழக்கு மன்றத்தில் வெற்றிப்பெறக்கூடும், ஆனால் மக்கள் மன்றத்தில் அவர்கள் மதிப்பு வெகுவாகக் குறைந்துவிடும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் பேசிய உறுப்பி னர்கள் தேர்தல் முடிவிற்குப் பிறகு, திண்டுக்கல்லில் தோற்ற பிறகு, வேறுயிடங்களில் தோற்ற பிறகு, கோவையில் தோற்ற பிறகு இந்த முடிவிற்கு வந்தீர்கள் என்று சொன்னார்கள். அதை ஓரளவிற்கு வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். மக்கள் தெளிவாக இருந்து வாக்களித்தால் நல்லவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டபிறகு மக்கள் அனைவரும் தெளிவாக இருக்கவேண்டும் என்பதற்காக இந்தக் கொள்கையை நாங்கள் மறு பரிசிலனை செய்தோம் என்றால் அது தவறான காரியம் அல்ல. எந்த நேரத்திலும் மக்கள் தெளிவாக இருந்தால் மிகப் பெரும்பாலோர் ஆளும்கட்சிக்கு நல்லவர்கள் வரமுடியும் என்பதை இங்கு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பொதுவாக, இந்த மசோதாவை இதில் கட்சி மாச்சரியங்கள் இல்லாமல் இன்று எப்படி இதை ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்க அனைவரும் ஒத்துழைத்தீர்களோ அதேபோல் இந்தக் கொள்கை நல்லமுறையில் வெற்றிபெறவும், தமிழகத்தின் திட்டம், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக, அகில இந்திய அளவில் மகாத்மா காந்தி அடிகளின் கொள்கையை நிறைவேற்றுவதில் ஆங்காங்கு இருக்கிற பழைய காங்கிரஸ்காரர்கள்—தமிழ்நாடு மட்டும்தான் காங்கிரஸ்க்கு சொந்தம் என்றில்லாமல்—இன்று பாரதப் பெருந்தலைவர் என்று காமராஜரைப் போற்றிக் கொண்டிருக் கிறார்கள்—ஆகவே காமராஜர் அவர்களும் நாடாளுமன்றத்தில் இதைப்பற்றிப் பேசலாம், அவர்களும் இதுபற்றிய குறிப்புக்களைச் சொல்லலாம், இங்கிருக்கிறவர்களும் வாதாடலாம்.

ஆகவே, இதை அகில இந்திய அளவில் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்கவும், அகில இந்திய அனைத்துக் கட்சிகளும் இதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு வழிகாட்டியாக இந்த மசோதா இங்கு நிறைவேறுகிறது என்பதை மனநிறைவோடு, மனமகிழ்ச்சியோடு, இடையில் அண்ணாவினுடைய கொள்கையை நிறைவேற்றமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்றாலும் இன்று அந்த முள்ளை அகற்றிவிட்டோம் என்பதோடு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு நேராக, மகாத்மா காந்தி அடிகளின் திருவுருவப் படத்திற்கு நேராக, வள்ளுவரின் திருவுருவப் படத்திற்கு நேராக, இந்தக் கொள்கைக்காக அரும்பாடுபட்ட மூதறிஞர் ராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்திற்கு நேராக இந்த மசோதாவை காணிக்கையாக்க முன்வந்து மனமகிழ்ச்சியோடு இதை நிறைவேற்றுகிறோம் என்று கூறி அமைகிறேன், வணக்கம்.

திரு. கோவை செழியன்: இந்த நாட்டில் இருக்கிற மக்கள் அனைவருமே குடிகாரர்கள் என்கின்ற கருத்து தொனிக்கும் வகையில் மயங்கிய நிலையில் வோட்டு போட்டார்கள் என்ற முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை குறிப்பேட்டிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாட்டில் இருக்கிற மக்கள் குடிகாரர்கள் என்று சொல்லவில்லை. மக்கள் தெளிவாக இருந்து வாக்களிக்க வேண்டுமென்றுதான் சொன்னேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல் படுத்தலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல் படுத்தலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/74) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு ஒருமனதாக சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-06 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.



## 6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

94. Noticfiations issued with G.O. Ms. No. 2, Rural Development and Local Administration, dated 2nd January 1974, in regard to division of wards and reservation of two seats for Scheduled Castes and one seat for women in the Arni Municipal Council. [Laid on the table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

95, Order issued with G.O. Rt. No. 693, Revenue, dated 26th April 1974, in regard to exemption from liability to Entertainments tax, show tax and additional surcharge, one film show proposed to be held by the Principal, Breeks Memorial School, Ootacumund on 14th April 1974 at Liberty Theatre, Ooty. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

96. Order issued with G.O. Rt. No. 564, Revenue, dated 5th April 1974, in regard to exemption from liability to Entertainments tax, show tax and additional surcharge, one film show proposed to be held by the Mangayarkarasi Mahalir Mandram, Shastri Nagar, Madras-20 on 5th April 1974 at Devi Theatre, Mount Road, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

### B. *Reports, Notifications and Other Papers.*

74. Notification issued with G.O. Ms. No. 877, Revenue, dated 27th February 1974, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of a sale deed in favour of the Trustees of Gandhi Ashram, Tiruchengode taluk, Salem district.

@ 75. The Tamil Nadu Industrial Development (Acquisition and Disposal of Land) Bill, 1974 (L.A. Bill No. 37 of 1974).

@ 76. The Tamil Nadu Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 (L.A.Bill No. 38 of 1974).

---

@ Despatched to members on 21st August 1974.

@ 77. The Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 (L.A. Bill No. 39 of 1974.)

† 78. The Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974 (L.A. Bill No. 41 of 1974).

† 79. The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A.Bill No. 11 of 1973), as passed by the Legislature.

@ Despatched to Members on 21st August 1974.
† Despatched to Members on 20th August 1974.



## இணைப்பு. I

(389-ம் பக்கத்தில் 249-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட * வினாவிற்கான விடையைக் காண்க)

(அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டிற்குத் திங்களொன்றுக்குத் தோராயமாகத் தேவைப்படும் மண்ணெண்ணெய் அளவு 30,000 மெட்ரிக் டன்கள் அல்லது 38,000 கிலோ லிட்டர்கள் என்று கடந்த ஆண்டில் கணக்கிடப்பட்டது. சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் வரை சற்றேறக்குறைய 30,000 மெட்ரிக் டன்கள் மண்ணெண்ணெய் இம்மாநிலத்திற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்தது. உலகமெங்கும் பெட்ரோலியப் பொருட்கள் பற்றுக்குறை, விலையேற்றம் இவற்றின் விளைவாக சென்ற ஆண்டு நவம்பர் திங்களிலிருந்து இம் மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு அளவு கீழே குறிப்பிட்டபடி படிப்படியாகக் குறைக்கப்பட்டு விட்டது :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1973 நவம்பர் | ... | ... | ... | 27,716 டன்கள். |
| 1973 டிசம்பர் | ... | ... | ... | 24,995 டன்கள். |
| 1974 சனவரி | ... | ... | ... | 26,611 டன்கள். |

சென்ற பிப்ரவரி திங்கள் தொடக்கத்தில் இம் மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் 20,301 டன்கள்தான் ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு அறிவிப்பு செய்தது. 5-ஆம் நாள் பிப்ரவரி 1974-ல் நமது முதலமைச்சர் மத்திய பெட்ரோலிய ரசாயனத்துறை அமைச்சருடன் தந்தி மூலம் தொடர்புகொண்டு தமிழ்நாட்டிற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, அறிவிக்கப்பட்ட அளவைவிட பல மடங்குகள் அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறதெனவும், இதனால் மக்களுக்குப் பெரும் அளவில் பாதிப்பு ஏற்படுமென சுட்டிக் காட்டினார். இதன் விளைவாக பிப்ரவரி திங்கள் ஒதுக்கீடு 20,301 டன்களிலிருந்து 21,801 டன்களாக உயர்த்தப்பட்டது.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading " Bill(s) ".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., " Committee(s) ", " Council(s) ", " Corporation(s) ", etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the main heading " Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below:

| | | |
|---|---|---|
| A.M.\|Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a matter of Urgent Public Importance. |
| C.A. St. | .. | Calling Attention Statement. |
| Consid. | .. | Consideration stage of a Bill This stage includes—<br>(i) Motion to refer to Select\|Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select\|Joint Select Committee.<br>(iii) Amendment to circulate. |

(iv) Motion to consider as reported by Select| Joint Select Committee.

(v) Amendment to re-commit to Select| Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D | .. | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G.A. | .. | Governor's Address. |
| G.D. | .. | General Discussion. |
| H.A.H. Dis.\|H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int. | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R\|Res | .. | Resolution. |
| St. | .. | Statement. |

# INDEX TO TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

*Eleventh Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

19th to 22nd August 1974.

(Volume LVIII — Nos. 1 to 4)

PAGES.

## A.


ABDUL JABBAR, Thiru V. M.—

Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1975 ... ... ... 424—426

D.S.G. (First), 1974-75, G. D. ... ... ... 208—212

General Sales Tax (Second Amendment) Bill, 1974 448—449, 450, 451

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... 435—436

AGRICULTURE—

Engineering Workshop, Madras, expansion .. .. 274—275

Mechanical harvestors, introduction ... ... 274

Parasite Breeding Centres ... ... ... 276

ALAGARSAMY, Thiru S.—

Boat tragedy in Cooum River (A.M.) ... ... 291—292

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... 37

Kanmai (New), Kilavipatti, Kovilpatti Panchayat Union 384

Kanmai (Naw), Pazhankulam village, Nanguneri taluk ... ... ... ... 384

Old Age Pension ... ... ... ... ... 253—256

ALDA M. FOWLER, Thirumathi—

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... 477—479

A.—*cont.*

ANANDANAYAKI, Thirumathi T. N—
Ban on Getting up of Private Allopathic Medical Colleges and regulation of such colleges already set up ... ... ... ... ... ... 89—95, 105
D.S.G. (First) 1974-75, General discussion ... 184, 185, 224, 231—235
Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 .. .. .. .. .. 71—74

ANBAZHAGAN, Thiru K.—
Acute scarcity of essential drugs and the exhorbitant increase of prices of all drugs in the market (A.M.) 285—289
Ban of setting up of Private Allopathic Medical Colleges and regulation of such colleges already set up ... ... ... ... ... ... 84—86, 88, 90, 93, 94, 97, 98, 101—108
Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 ... ... ... 420
Scarcity of drinking water in Uppidamangalam Panchayat in Karur division (C.A.St.) .. .. 407—408
Scarcity of drinking water in villages in Muthurangampatti Panchayat, Kulithalai taluk (C.A.St.)... ... 406
Strike by students in Stanley Medical College and closure of College and Hostel (A.M.) ... ... 403—405

ARANGANAYAGAM, Thiru S.—
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... 479—483

ARUNA, Thiru Aladi V.—
D.S.G. (First) 1974-75, G.D. .. .. 223
Incorrect information given by Thiru Kovai Chezhian to the House (Point of Order) ... ... 163—164



A.—*cont.*

ARUNA, Thiru Aladi V.—*Cont.*
Katchathivu Accord—Reconsideration and modification (R) .. .. .. .. 311—320

B.

BALASUNDARAM, Thiru V.—
Master Plan, beautification of Mamallapuram .. 7—9

BILL(S)—
Appropriation (No. 3) Bill, 1974 Message from Governor ... ... ... ... 245
Int. 8 ... ... ... ... ... ... 245—246
Consid. Consid. cl. Motion to Pass Passed .. 303
305—306
Cultivating Tenants (Right to Purchase Land Owners' Right) Bill, 1973 Consid. ... ... ... 410—432
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974—Message from Governor ... 35
Consid. ... ... ... ... 36—49
Consid. Cl. ... ... ... 49—50
Motion to Pass ... ... ... ... ... 50
Passed ... 50
General Sales Tax (Second Amendment) Bill, 1974 :
Consid. ... ... ... ... 444—463
Consid. cl. ... ... ... ... ... 464
Motion to Pass ... ... ... 464
Passed ... .. ... ... 464
General Sales Tax (Third Amendment) Bill, 1974—Message from Governor ... ... 35
Int. ... ... ... ... 35
Consid. ... ... ... ... 465—469
Consid. cl. .. .. .. .. .. 469—470
Motion to Pass ... .. .. .. .. 470
Passed .. .. .. .. .. .. 470

PAGES.

B.—*cont.*

BILLS—*Cont.*

Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 :
- Consid. ... ... ... 83—84
- Consid. cl. ... ... ... 84
- Motion to pass ... ... ... 84
- Passed ... ... ... ... 84

Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 :
- Consid. ... ... ... 83
- Consid. cl. ... ... ... 83
- Motion to Pass ... ... ... 83
- Passed ... ... ... 83

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974:
- Consid. ... ... ... ... 50—82
- Consid. cl. ... ... ... 82
- Motion to pass ... ... ... 82
- Passed ... ... ... ... 82

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 :
- Consid. ... ... ... ... 470—471
- Consid. cl. ... ... ... 470—471
- Motion to pass ... ... ... 471
- Passed ... ... ... 471

Payment of Salaries (Amendment) Bill, 1974 Int. ... 409

Payment of Wages (Tamil Nadu Amendment) Bill, 1974, Int. ... ... ... 409—410



PAGES.

B.—*cont.*

BILLS—*cont.*

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974—
- Consid. ... ... ... 471—509
- Consid. cl. ... ... ... ... 510
- Motion to pass ... ... ... ... ... 510
- Passed ... ... ... ... 510

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974—
- Consid. ... ... ... 433—443
- Consid. cl. ... ... ... ... 444
- Motion to pass ... ... ... ... ... 444
- Passed ... ... ... ... 444

BOARD(S)—
- All-India Handloom Board, change of Headquarters 16

BOMMAN, Thiru K. H.—
- Hospital, Gudalore, Nilgiris district ... ... ... 380
- Stadium, Ootacamund ... ... ... 378—379

BOOKS AND PUBLICATIONS—
- Tamil Lexicon, compilation ... ... ... ... 259—260
- Tirukkural research ... ... ... ... ... 260—261

BRIDGE(S)—
- Across Alench Vaikal in Killivoor Panchayat Union 24—25
- Across Koothan Canal ... ... ... ... ... ... 130
- Across Marankarai river, Athoor constituency ... 142
- Across the river in Athoor constituency ... ... 140—142
- Ambur-Pernampet Road ... ... ... 270
- Causeway across Vaigai River, near Madurai-Sellur ... 277
- Causeway across Suga Nathi ... ... ... ... 277
- Overbridge near Madras Central Station ... ... 383

PAGES.

B—*cont.*

BROAD CASTING—
Radio Station (New), starting ... ... ... 9—10

BUILDINGS—
Commercial Tax Office, Tiruppur ... ... 388

BUSES—
Tickets, sale ... ... ... ... 143—144

C.

CALLING ATTENTION—
Scarcity of drinking water in Madras particularly in Saidapet area ... ... ... ... 298—301
Scarcity of drinking water in Uppidamangalam Panchayat in Karur Division ... ... ... 406—408
Scarcity of drinking water in villages in Muthurangampatti Panchayat, Kulithalai taluk .. .. 405—406

CANALS—
Mallasamudram channel, excavation work ... ... 127—128

CHAIR—
Rulings and Observations.
Adjournment Motions :
*Acute scarcity of essential drugs and the exorbitant increase of prices of all drugs—*
Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter in view of the explanation given by the Minister for Public Health ... 284—289
*Boat tragedy in the Cooum River—*
Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter in view of the explanation given by the Minister for Public Works ... 289—293
*Closure of Stanley Medical College and Hostel—*
Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter in view of the explanation given by the Minister for Public Health ... 402—405



PAGES.

C—*cont.*

CHAIR—*cont.*
Ruling and Observations—*cont.*
Adjournment Motions—*cont.*
*Failure to take steps for the early release of the Cauvery water from the Krishnarajasagar—*
Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter in view of the explanation given by the Minister for Public Works ... 400—402
*Strike by Technical employees and Junior Engineers of Neyveli Lignite Corporation—*
Consent was withheld as there was no need to adjourn the business of the House to discuss the matter in view of the explanation given by the Minister for Electricity and the Minister for Labour ... ... ... 293—298

BILLS—
*Appropriation Bill—*
On 21st August 1974, as soon as the Appropriation (No. 3) Bill, 1974 was passed, a Member rose on a point of order and stated that inasmuch as the Bill had been brought forward under Article 360 contrary to the usual procedure of bringing it under Articles 205 and 206, it was against the Constitution.
The Chair observed that such a point of order should have been raised when the Bill was first introduced and not at that stage when it had been passed. Any Bill which had been introduced would come up for discussion before the House and they could not refuse discussion on it. Hence, the Chair held that there was no point of order ... 306—308
*Discussion on Appropriation Bill—*
With reference to a point of order raised by a Member about holding a discussion on the Appropriation Bill, the Chair observed that it had been decided in the Business Advisory Committee in which all the leaders of parties were members that the Appropriation Bill could be passed without any discussion.

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

BILLS—*cont.*

*Discussion on Appropriation Bill*—cont.

On the Member remarking that the Business Advisory Committee had no jurisdiction to completely shut down discussion on the Appropriation Bill, especially when it was discussed in the Legislative Council, the Chair observed that it was a different matter and when all the leaders of parties had taken a decision in the Business Advisory Committee, it was not in order for the members who functioned under those leaders to strike a discordant note and raise a discussion on it in the House ... ... ... 303—305

*Return of a Bill by President or reconsideration.*—

On 22nd August 1974, in the course of the discussion on a Minister s motion to refer a Bill to a Joint Select Committee returned by the President for reconsideration, a Member of the Opposition expressed the view that the fact that the President had returned the Bill showed that representations had not been fully taken into consideration and that the Bill had been hastily passed without taking into account the various issues involved in it.

The Deputy Speaker observed that as per the provisions of the Constitution, the President was empowered to return a Bill passed by a Legislature for reconsideration. When it was thus returned, the Legislature must reconsider it. Within the powers given to them, they had to duly function. So, it was not in order for the Member to insinuate that the House did not properly consider the Bill 413—421

Call attention statements—

*Delay in the Minister's giving statement.*—

With reference to a point of order raised by a Member about the delay in the Minister's giving statement in response to Call Attention Notices, the Chair observed that the Minister's attention would be drawn to the



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Call attention statements—*cont.*

*Delay in the Minister's giving statement*—cont.

remarks made by the Member and that they would expedite their statements. If the statements were received when the House was in session, the matter would be brought before the House. If the statements were received after the House adjourned, they would be sent to the Members .. 302

*Debate*

*Reference to Courts*

With reference to a remark made by a Member that it was not known why those who were arrested in connection with the irregularities in the Madras Corporation were sent to Kashmir, the Deputy Speaker observed that it was done by a Court whose action they should not discuss .. .. .. 67

*Reference to Foreign Governments*

It was not in order to refer to foreign Governments in an undignified manner 339

*Speeches*

It was not in order to get emotional or to speak aloud ... ... ... ... ... 336, 337

*Decorum*

Members should not comment on the behaviour of the Chair ... ... ... ... 443

*Expressions used in the House*

*"Tragic" in the sentence*

"It is so tragic to find that my attempts have never succeeded."

Member was advised not to use such a strong expressions even though they might not be unparliamentary, as they had to maintain decency, decorum and the standard of debate 413

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Expunction

On 22nd August 1974, the Deputy Speaker announced that though he had earlier ordered the expunction of some words, he just then ordered the expunction of all the relevant arguments, remarks and interruptions in consequence of his earlier order and directed the Press also not to publish those expunged portions. A little later, a Member rose on a point of order and enquired whether it was in order to expunge the entire discussion after a lapse of an hour and a half while the Chair had earlier expunged only certain words, and whether it would be the practice in future too.

The Deputy Speaker holding that it was not a point of order observed that it was a consequential order pronounced after going through the proceedings in order to see that no objectionable matter entered into the record of the proceedings ... ... ... ... 421, 453—454, 464—465

Point of order

Under the pretext of point of order, members should not speak something other than a point of order ... ... ... ... 223

It was not in order to raise point of order without getting the permission of the Chair 336

Privilege Matter

*Alleged leakage of supplementary budget proposals*

On 20th August 1974, a member raised a matter of privilege against the Chief Minister alleging that certain taxation proposals and the Government's decision to abolish horse



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matter—*cont.*

*Alleged leakage of supplementary budget proposals*—cont.

racing referred to by the Chief Minister in his Supplementary Budget had been published in a paper 'Makkal Kural' prior to the announcement of those proposals in the House. He stated in support of his case that the paper had earlier published that the Budget would contain additional taxes on certain items and increased rates of taxes on certain other items. He also quoted a statement issued by Thiru M. A. Chidambaram of the Madras Race Club to the members of the Club and to the Press on 13th August 1974, a day prior to the presentation of the Supplementary Demands by the Chief Minister in which he has referred to the proposed abolition of horse racing in Madras. He, therefore contended that the Budget proposals which should be kept as a secret before they were actually announced in the House by the Finance Minister had been leaked out and hence there was a breach of privilege and the Chief Minister should, therefore, resign from his office.

The Speaker held that there was no breach of privilege on the following grounds:—

(i) All the taxes mentioned in the newspaper 'Makkal Kural' have not been included in the Supplementary Demands and certain taxes which were not mentioned in the paper have been proposed to be levied. The news published in the paper could be taken as a guess made by the paper and could not be construed as leakage of budget secrets;

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matter—*cont.*

*Alleged leakage of supplementary budget proposals*—cont.

(ii) It had already been ruled on 3rd July 1962 that such news, namely, there may be taxes or there will be taxes could not become the basis for bringing forward privilege motions;

(iii) There was no ground to come to the conclusion that the budget secrets had been leaked out merely on the basis of the news that had appeared in 'Makkal Kural'

(iv) As for the statement by Thiru M. A. Chidambaram about abolition of horse racing, he had made it clear in his letter to the Assembly Secretary that he had not issued any statement on 13th August 1974 but had issued the statement attributed to him only on the afternoon of 14th August 1974, that is, after the Chief Minister presented the Supplementary Budget. Hence, there was no basis to aver that the budget secret in this regard had leaked out before they were announced in the House on 14th August 1974.

The Speaker added that the British Parliament, the Indian Parliament and also the Tamil Nadu Legislature had already held on such occasions, that even if budget secrets had been leaked out they could not be considered as breach of privilege.

As a matter of fact, the member's raising a privilege matter on the basis of wrong information would constitute breach of privilege. It was not in order for Members to bring privilege matter based on information which was contrary to the true state of affairs. 151—160



PAGES

C—*Cont.*

CHAIR—*Cont.*

Rulings and Observations—*Cont.*

Questions and Answers

*Supplementary Questions*

During question hour, members could seek information but should not give suggestions and reasons .. .. .. 29

Members should only put questions and should not give an explanation to the answer gives by the Minister ... ... ... ... 13

Members should only put questions and should not give an explanation .. .. .. 393

Policy matters should not be raised in supplementaries. ... ... ... 13

*Relevancy*

A supplementary which did not relate to the main question was disallowed. ... ... 9

With reference to a point of order raised by a Member whether the Minister was in order in not answering the supplementary direct but straying away from it, the Deputy Speaker observed that as the members put questions which did not relate to the main questions, the Minister also was deviating from the question proper. Members should therefore, put supplementaries relating to the main question ... ... ... 394

Supplementaries should relate to the main question. ... ... ... 29

*Resolution*

*Propriety of considering the Government Resolution on 'Katcha Theevu'*

On 21st August 1974, a Member rose on a point of order and stated that the Resolution on 'Katcha Theevu' which was just then to be taken into consideration was

PAGES

C—cont.

CHAIR—Cont.

Resolution—cont.

*Propriety of considering the Government Resolution on 'Kacha Theevu'*—cont.

beyond the competence of the House as per the provisions of the Constitution. As the subject matter was strictly under the jurisdiction of the Central Government and Parliament, it was not in order to discuss it in a State Legislature. Moreover, the Resolution should have been brought forward before the agreement which was entered into by the Prime Minister, was ratified by Parliment.

The Chair held that inasmuch as the resolution only urged the Central Government to take steps to modify the agreement, there was no violation ; such agreements made by the Central Government with other Governments were revised from time to time. Therefore, the Resolution was in order. ... 308—310

CHEMICALS—

Dye Factory at Erode ... ... ... ... 135—137

CHEZHIYAN, Thiru Kovai—

Alleged leakage of Supplementary Budget proposals (Privilege Matter) ... ... ... ... ... 151—156, 160

Ban on setting up of Private Allopathic Medical Colleges and regulation of such Colleges already set up (R) ... ... ... ... ... ... 86—89, 96

Boat tragedy in Cooum River (A.M.) .. .. 289—290

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 185

Discussion on Appropriation Bill, 1974 (Point of order) ... ... ... ... ... ... 305



PAGES

C—cont.

CHEZHIYAN, Thiru Kovai—Cont.

Incorrect information given by Thiru Kovai Chezhian to the House (Point of order) .. .. .. 162

General Sales Tax (Second Amendment) Bill, 1974 ... 450

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 489—490, 490—491, 492—509

COLLEGE(S)—

Ban on setting up of private Allopathic Medical Colleges and regulation of such Colleges already set up (R) ... ... ... ... ... ... 84—109

Manaparai, Tiruchirappalli, starting of .. .. 373—376

Tiruvotriyur town, starting of ... ... ... 374—376

CONFERENCES—

Chief Ministers' Conference ... ... ... ... 391—394

CO-OPERATIVES—

Co-operative Milk Supply Society, Salem, assistance by Government ... ... ... ... ... 148—149

Tea Factories, details ... ... ... ... 130—132

COURTS—

Munsif Courts at Kuzhithurai, construction of additional buildings ... ... ... ... ... 387—388

Sub-Court at Tiruppathur, new building .. 387

D.

DAIRY—

Milk Project, Erode .. .. .. .. 28—30

Milk Project, Madurai ... ... ... ... 31—34

Mobile Milk Bar, Madras City .. .. .. 30—31

PAGES

D—*Cont.*

DAMS—

Anicut Senchikarai Scheme, Dharapuram taluk ... 385

Kundaru Reservoir Scheme, Commencement .. 269—270

DENNIS, THIRU N.—

Bus tickets, sale ... ... ... ... ... 143—144

Cancer and Leprosy, Survey on incidence in Kanyakumari district ... ... ... ... ... 1—2

Inam Estates, taking over ... ... ... ... 137—139

Leprosy Hospital, Colachal .. .. .. 2—4

Munsif Courts at Kuzhithurai, construction of additional buildings ... ... ... ... ... 387—388

Panchayat Union Council Members, increase in daily bata ... ... ... ... ... ... 22—23

Radio stations (New), starting ... ... ... 9—10

Tamil Nadu Chromates Company, Ranipet ... ... 386—387

DHARMALINGAM, THIRU A. P.—

Correction of answer to a supplementary question by the Local Administration Minister ... ... 302

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 186

Madurai City Municipal Corporation (Amendment and Extension of Term of Office) Second Amendment Bill, 1974 ... ... ... ... ... 83

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 .. 50—52, 77—82

Drinking water scarcity in Madras particularly in Saidapet area (C.A. St.) ... ... ... ... 298—301

DISEASES—

Cancer and Leprosy, Survey on incidence in Kanyakumari District ... ... ... ... ... 1—2



PAGES

D—*cont.*

DISTRICT ADMINISTRATION—

George Town, naming as V.O.C. Nagar ... ... 273—274

DORAISAMY, THIRU S.—

Bus service, Coimbatore-Tiruppur .. .. 146—147

Bus Service, Tiruppur-Karur ... ... ... ... 147—148

Children's Hospital, Madras, expansion ... ... 263—264

Commercial Tax Office, Tiruppur, construction of a separate building ... ... ... ... ... 388

Connemara Library, scarcity of accommodation ... 117—118

Milk project, Erode ... ... ... ... ... 28—30

E

EDMUND, THIRU G. R.—

Beedi workers, representation ... ... ... 25—28

Budget leakage, Pondicherry State (Point of order) ... 169, 170

Burma Bazaar, number of shops ... ... ... 280—282

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 183—184

Foreign trained Indian Scientists, appointment ... 371—373

Incorrect information given by Thiru Kovai Chezhian to the House, (Point of order) ... ... ... 161, 162, 163

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 440

Scarcity of drinking water in Uppidamangalam Panchayat in Karur Division (C.A.) ... ... ... 407

Scarcity of drinking water in villages in Muthurangampatti Panchayat, Kulithalai taluk (C.A.) ... 405—406

PAGES

E—*cont.*

EDUCATION—
Examinations in commercial subjects, details ... 121—127

EMPLOYEES—
Tamil Pandits serving as Village officers ... ... 18

ESTATES—
Inam, taking over ... ... ... ... ... 137—139

F

FACTORIES—
Co-operative Tea Factories, details ... ... ... 130—132
Dye Factory, Erode ... ... ... ... ... 135—137
Rayon Factory at Pudukkottai ... ... ... 15
Sugar Factory, Perambalur ... ... ... ... 385—386

FERTILIZERS—
Madras Fertilizers, assistance by Government ... 132—135

FINANCIAL BUSINESS—
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 171—238
D.S.G. (First), 1974-75, Voting :
239—242
Head of State, Ministers and Headquarters Staff
District Administration
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Administration of Justice
Fire Service
Education
Medical
Public Health
Agriculture
Community Development Projects, etc.
Labour including Factories
Welfare of the Scheduled Tribes and Castes, etc
Welfare of the Backward Classes, etc.
Urban Development



PAGES.

F—*cont.*

Financial Business—*cont.*
D.S.G. (First), 1974-75—Voting—*cont.*
Roads and Bridges
Road Transport Schemes
Relief on account of Natural Calamities
Pensions and other Retirement Benefits
Miscellaneous
Forest Department
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works—Buildings
Capital Outlay on Road Transport Schemes
Miscellaneous Capital Outlay
Loans and Advances by the State Government ...
242—245

FOOD—
Sago Research Laboratory, Salem, tests on sago and starch at Salem ... ... ... ... ... 135

H.

HANDE, DR. H. V.—
Acute scarcity of essential drugs and the exorbitant increase in prices of all drugs in the market (A.M.) 284—285, 288
Appropriation Bill, introduction (Point of order) ... 306, 307, 308
Ban on setting up of private Allopathic Medical Colleges and regulation of such colleges already setup (R) ... ... ... ... ... ... 96—99, 102
Budget leakage, Pondicherry State (Point of order) ... 171
Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1974 ... ... ... ... ... 413—416, 417, 418, 419, 420
Discussion on Appropriation Bill (Point of order) .. 303, 304, 305
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 179, 228
Estates (Abolition and conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 40—41

H—*cont.*

HANDE, DR. H. V.—*cont.*

Expunction of entire discussion after lapse of one-and-a-half hours contrary to the original ruling to expunge a word in that discussion (Point of order) ... ... ... ... ... ... ... 464—465

General Sales Tax (Second Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... ... 445—446, 462

Incorrect information given by Thiru Kovai Chezhian to the House (Point of order) ... ... ... 165—166, 167, 168

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of Term of Office) Third Amendment Bill, 1974 ... 52—55, 81

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 433—434, 441—442, 443

Scarcity of drinking water in Madras and particularly in Saidapet area (C.A.) ... ... ... ... 298

Strike by Technical employees and Junior Engineers of Neyveli Lignite Corporation (A.M.) ... ... 294—295

HANDICRAFTS—

Palmyra Products of Tamil Nadu ... ... ... 396—397

HARIJAN WELFARE—

Gift houses to Harijans in Dharmapuri District .. 282—283

House-sites for Harijans in Sendurai Union ... ... 283—284

Students Hostel, Andhiyoor ... ... ... ... 150

Students Hostel, Nallammalpuram ... ... ... 150

Students Hostels, Jolarpet and Natrampalli ... ... 149

Students Hostel, Tiruchirappalli ... ... ... 150—151





H —cont.

HIGHWAYS—

Road side trees on Kattuputhur-Sitaipillayarputhur road, utilisation by private parties ... ... 269

HISTORY—

Tamil Nadu, writing by a Committee ... ... 257—259

HOSPITALS AND DISPENSARIES—

Childrens' Hospital, Madras, expansion ... ... 263—264

Co-operative Dispensaries, aid to Medical Graduates 265—266

Gudalore, Nilgiris District ... ... ... ... 380

Leprosy Hospital, Colachel ... ... ... ... 2—4

Medical care for rural areas ... ... ... ... 266—268

Mental treatment Wings, opening in District Head-quarters Hospitals ... ... ... ... ... 113—116

Primary Health Centre, Edaicode, increase of bed-strength ... ... ... ... ... ... 264

Rural Dispensary, Sulagiri ... ... ... ... 379

Tiruvotriyur ... ... ... ... ... ... 113

HOUSING—

Price ceiling on Urban house-sites ... ... ... 277—280

I.

INDUSTRIES—

Fertilizer Plant, Tuticorin ... ... ... ... 10—14

Rural Industries Project, Chingleput district ... 395—396

Tamil Nadu Chromates Company, Ranipet ... ... 386—387

IRRIGATION—

Kanmoi (new), Pazhankulam village, Nanguneri taluk ... ... ... ... ... ... 384

PAGES

J.


JAMES, THIRU J.—
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 171—181
Ministers' responsibility to issue statements immediately for Call Attention Notices (Point of order) ... 301—302
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 494—497

JAYARAMAN, THIRU K.—
All India Handloom Board, change of headquarters 16
Co-operative Milk Supply Society, Salem, assistance by Government ... ... ... ... ... 148—149
Mineral Treatment Laboratary, Salem ... ... 273

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—
General Sales Tax (Second Amendment) Bill, 1974 460—462
Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 ... 64—66


K.


KADHER BATCHA *alias* VELLAICHAMY, THIRU—
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 190—194

KANDASAMY, THIRU K.—
Dairy Farm, Madurai, theft of articles ... ... 31—34
General Sales Tax (Second Amendment) Bill, 1974 457—460
Katchathivu, accord reconsideration and modification (R) .. .. .. .. .. 321—325
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 487—489
Strike by students in Stanley Medical College and closure of College and Hostel (A.M.) ... ... 402, 403

KANDASAMY, THIRU MANALI C.—
Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1975 ... ... ... ... ... 426




PAGES

K—*cont.*


KANDASAMY, THIRU MANALI C.—cont.
Katchathivu Accord, reconsideration and modification (R) ... ... ... ... ... 352—355
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 497—498

KANNAN, THIRU M. R.—
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 216—220

KANNAPPAN, THIRU M.—
Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 ... ... ... ... 83—84

KARIVENGADAM, THIRU M. V.—
Estates (Abolition and conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 43—45

KARUNANIDHI, DR. M.—
Alleged leakage of Supplementary Budget proposals (Privilege Matter) ... ... ... ... ... 152—153, 154—156
Appropriation (No. 3) Bill, 1974 ... ... ... 244—245, 303, 305—306
Budget leakage, Pondicherry State (Point of order) .. 170, 171
Discussion on Appropriation Bill (Point of order) ... 304—305
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 173, 177—178, 182, 184, 185—186, 198, 203, 222, 223, 224, 225, 226, 228, 229, 235—238
General Sales Tax (Second Amendment) Bill, 1974 462—463
Katchathivu Accord, reconsideration and modification (R) ... ... ... ... ... 310, 311,

PAGES

K—*cont.*


KARUNANIDHI, DR. M.—*cont.* ... 315, 316, 317, 318, 319, 334, 335, 345, 361—367

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... 473, 474, 486, 490, 491—492, 496, 502, 503, 505, 509

KEROSENE—

Allotment ... ... ... ... ... ... 389—390

KITTAPPA, THIRU N.—

Dye Factory at Erode ... ... ... ... 135—137

Mechanical harvestors, introduction ... ... ... 274

Rayon Factory at Pudukkottai ... ... ... 15

Roads, Grand Anicut-Kaveripoompattinam ... ... 382

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Rural dispensary, Sulagiri ... ... ... ... 379—380

KRISHNAMOORTHI, THIRU V. (Nellikuppam)—

Appropriation Bill, introduction (Point of order) ... 306, 308

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 227—228

General Sales Tax (Second Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 454—457, 463

Katchathivu Accord, reconsideration and modification (R) ... ... ... ... ... 337—342

KRISHNAN, THIRU N.—

Bridge on Ambur—Pernampet road ... ... ... 270

KUMARASAMI, THIRU K. N.—

Estates (Abolition and conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 41—42




PAGES

L


LABOUR—

Beedi workers, representation ... ... ... 25—28

LANDS—

Inam villages, collection of rent by Thiruvavaduthurai Adheenam ... ... ... ... ... 139—140

Journalists Association, Coimbatore, provision of house-site .. .. .. .. .. 388—389

LANGUAGE—

Tamil language and culture, funds for development ... 261—263

LIBRARIES—

Connemara, scarcity of accommodation ... ... 117—118

Grant from State funds, details ... ... ... 118—121


M.


MADHAVAN, THIRU S—

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 39, 44

Payment of Salaries (Amendment) Bill, 1974 ... 409

MARIMUTHU, THIRU A. R.—

Discussion on Appropriation Bill (Point of order) ... 304—305

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 45—46

Katchathivu Accord, reconsideration and modification (R) ... ... ... ... ... 329—337

Strike by Technical employees and Junior Engineers of Neyveli Lignite Corporation (A.M.) ... ... 295

MINES AND MINERALS—

Graphite deposits in Sivaganga taluk ... ... 271—272

Mineral deposits in Salem district ... ... ... 272

Mineral Treatment Laboratory, Salem ... ... 273

Occurrence of crude oil at Paravakkottai ... ... 270—271

PAGES

M—*cont.*


MOSQUES—
Renovation ... ... ... ... ... ... 18

MOTIONS—
*Adjournment Motions* :
Acute scarcity of essential drugs and exorbitant increase in prices of all drugs in the market ... 284—289
Boat tragedy in Cooum River ... ... ... 289—293
Failure to take steps for the early release of Cauvery water from Krishnarajasagar ... ... ... 400—402
Strike by students in Stanley Medical College and closure of College and Hostel ... ... ... 402—405
Strike by Technical employees and Junior Engineers of Neyveli Lignite Corporation ... ... ... 293—298

MUNICIPALITY—
Paramakudi, new building ... ... ... ... 276

MUNU ADHI, THIRU—
D.S.G. (First), 1974-75, G.D ... ... ... 181—183, 186—189

MUNUSAMI, THIRU R. R.—
George Town, naming as V.O.C. Nagar ... ... 273—274
Madras Fertilizers, assistance by Government ... 132—135
Mobile Milk Bar, Madras City ... ... ... 30—31
Mosques in Tamil Nadu, renovation ... ... ... 18

MUTHIAH, THIRU M.—
Harijans of O. Saravanapuram village, Tirunelveli District, provision of drinking water well ... ... 398—399
Hostel for High School students, Nallammalpuram ... 150
Mallasamudram channel, excavation work .. .. 127—128
Sub-Treasury, Ottapidaram ... ... ... ... 254
Water supply scheme, Kazhukumalai, Ettayapuram ... ... ... ... ... ... 4—7




PAGES

N


NACHIAPPAN, THIRU A. M. T.—
Bridge across Marankarai river, Athoor constituency 142
Bridge across river, Athoor constituency ... ... 140—142
Harijan Welfare School (Primary), starting at Athoor constituency ... ... ... ... ... 399

NARASIMHAN, THIRU A. C.—
Ban on setting up of Private Allopathic Medical Colleges and regulation of such Colleges already set up (R) ... ... ... ... ... ... 95—96

NARAYANASWAMY, THIRU M. V.—
College at Tiruvotriyur, starting ... ... ... 374—376
Hospital for Tiruvotriyur ... ... ... ... 113

NATARASAN, THIRU E. M.—
Harijan Students' Hostel, Andhiyoor ... ... 150

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
False information given by Thiru Kovai Chezhian to the House (Point of order) ... ... ... 164—165


O.


OFFICES—
State Transport Department, decentralisation ... 142—143


P.


PALANISAMY, THIRU N. K.—
Agricultural Engineering Workshop, Madras, expansion ... ... ... ... ... ... ... 274—275
Ban on setting up of Private Allopathic Medical Colleges and regulation of such Colleges already set up (R) ... ... ... ... ... ... 99—100
Bus tickets, sale ... ... ... ... ... 143—144
Chief Ministers' Conference ... ... ... ... 391—394

PAGES

P—*cont.*


Palanisamy, Thiru N. K.—*cont.*

Coimbatore Journalists' Association, provision of house-site ... ... ... ... ... ... 388—389
Co-operative dispensaries, aid to medical graduates .. 265—266
Co-operative Tea Factories, details ... ... 130—132
Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1975 ... ... ... ... ... 416, 421—423
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 194—199
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 48—49
Failure to take steps for the early release of Cauvery water from Krishnarajasagar (A.M.) ... ... 400
General Sales Tax (Second Amendment) Bill, 1974. .. 447—448, 450
Gift houses to Harijans in Dharmapuri district ... 282—283
Graphite deposits in Sivaganga taluk ... ... ... 271—272
History of Tamil Nadu, writing by a Committee .. 257—259
Katchathivu Accord, reconsideration and modification (R) ... ... ... ... ... 342—346
Kerosene, allotment ... ... ... ... ... 389—390
Libraries, grant from State funds, details ... ... 118—121
Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of Term of Office) Third Amendment Bill, 1974 ... 66—68
Medical care for rural areas ... ... ... ... 266—268
Mental treatment Wings, opening in District Headquarters Hospitals ... ... ... ... ... 113—116
Milk Project, Madurai ... ... ... ... 31—34
Occurrence of crude oil at Paravakkottai ... ... 270—271
Parasite breeding Centres ... ... ... ... 276
Private students, admission in recognised Schools ... 376—378
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... 472, 473, 474, 475, 476, 477




PAGES

P—*cont.*


PALANISAMY, THIRU N. K.—*cont.*

Sago Research Laboratory, Salem—Tests on Sago and Starch ... ... ... ... ... ... 135
Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... 435, 440
State Transport Department, decentralisation ... 142
Tamil Language and Culture, funds for development 261—263
Tamil Lexicon, compilation ... ... 259—260
Television Set for Madras General Hospital ... 111—112

PALANISAMY, Thiru M.—

Anicut, Sencherikarai Scheme, Dharapuram taluk ... 385

PANCHAYAT UNION(S)—

Bifurcation ... ... ... ... 19, 22
Council Members, increase in daily bata .. .. 22—29

PAPERS LAID ON THE TABLE—

Appropriation (No. 3) Bill, 1974 ... ... 512
Co-operative Societies Act, 1961, notification ... 368
Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 ... ... ... 512
District Municipalities Act, 1920, notification ... 511
Entertainments Tax Act, 1939, notification ... 511
Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 ... ... ... 369
Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... 247
General Sales Tax (Second Amendment) Bill, 1974 369
General Sales Tax (Third Amendment) Bill, 1974 Annexure ... ... ... 247
Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 ... ... ... 247
Indian Stamp Act, 1899—notification ... ... 110, 511

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Industrial Development. (Acquisition and Disposal of Land) Bill, 1974 ... ... ... ... 511

Local Authorities' Laws (Amendment) Bill, 1974 ... 368

Madras City Municipal Corporation Act, 1919, notification ... ... ... ... ... ... 109

Madras City Municipal Corporation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... 368

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Third Amendment Bill, 1974 ... 247

Madurai City Municipal Corporation (Amendment and Extension of term of office) Second Amendment Bill, 1974 ... ... ... ... .. 247

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 368

Motor Vehicles Taxation (Amendment) Bill, 1974 ... 369

Panchayats (Amendment and Validation) Bill, 1974 110, 512

Payment of Salaries Act, 1951, notification ... ... 367—368

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... 110, 511

Revenue Department, Notification, amendment .. 109

Rural Development and Local Administration Department, Memorandum, errata ... ... ... 246, 247

Rural Development and Local Administration Department Notification, errata ... ... ... ... 110, 368

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 369

Town and Country Planning Act, 1971, notification ... 109

PENSION

Old Age ... ... ... ... ... ... 253—256

PERUMAL, THIRU A. R.—

Katchathivu accord, reconsideration and modification (R) ... ... ... ... ... ... 355—357





P—*cont.*

POINTS OF ORDER

Budget leakage, Pondicherry State ... ... ... 169—171

Constitutional propriety of discussion on Katchathivu by a Government Resolution ... ... ... 308—310

Incorrect information given by Thiru Kovai Chezhian to the House ... ... ... ... ... 160—169

Ministers' making statements then and there in response to Call Attention Notices ... ... 301—302

Need for discussion on Appropriation Bill ... ... 303—305

Non-introduction of Appropriation Bill in a proper way ... ... ... ... ... ... 306—308

Non-submission of a file to Hon. Speaker by Hon. Chief Minister as promised during the discussion on Demands for Supplementary Grants ... ... 408—409

Propriety of expunction of entire discussion after a lapse of an hour and a half contrary to the earlier ruling to expunge only a word ... ... ... 464—465

PONNAPPA NADAR, THIRU R.—

Bridge across Alench Vaikal in Killiyoor Panchayat Union ... ... ... ... ... ... 24—25

Bye-pass road near Virudhunagar, formation ... 128—129

Cultivating Tenants (Right to Purchase Land Owner's Rights) Bill, 1975 ... ... ... ... 427—430

Discussion on Appropriation Bill (Point of Order) 304

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 38—40

General Sales Tax (Third Amendment) Bill, 1974 ... 467—468

Katchathivu accord, reconsideration and modification (R) ... ... ... ... ... ... 357—361

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of term of office) Third amendment Bill, 1974 ... 69, 75—77

PAGES

P—*cont.*

PONNAPPA NADAR, THIRU R.—*cont.*

Primary Health Centre, Edaicode, increase of bed-strength ... ... ... ... ... ... 264

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... 473, 498—501

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 437—438

Survey Training, candidates from Kanyakumari district 16—18

POULTRY DEVELOPMENT

Assistance to educated unemployed youths ... ... 275—276

PRIVILEGE

Alleged leakage of Supplementary Budget proposals ... 151—160

PUBLIC HEALTH

Drainage Scheme, Tirupathur ... ... ... 116—117

R

RAJA, THIRU A. M.

D.S.G. (First), 1974-75, G.D. .. .. .. 182

Katchathivu accord, reconsideration and modification (R) ... ... ... ... ... ... 346—349

RAJAMANICKAM, THIRU K.—

Tamil Pandits serving as Village Officers ... ... 18

RAJARAM, THIRU K.

Strike by Technical employees and Junior Engineers in Neyveli Lignite Corporation (A.M.) ... ... 297



PAGES

R—*cont.*

RAMAN, THIRU O. P.—

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 189—190

Strike by Technical employees and Junior Engineers in Neyveli Lignite Corporation (A.M.) ... ... 295—297

RAMA ARANGANNAL, THIRU.—

Cultivating Tenants (Right to purchase Land Owner's Rights) Bill, 1975 ... ... ... ... 417—418

RAMACHANDRAN, THIRU S.—

Cultivating Tenants (Right to purchase Land Owner's Rights) Bill, 1975 ... ... ... ... 421

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 206—207, 211

Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1974 470—471

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 441

RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.—

False information given by Thiru Kovai Chezhian to the House (Point of order) .. ... ... 168

RAMALINGAM, THIRU R.—

Salt production, Tuticorin ... ... ... ... 14

RAMASAMY, THIRU G.—

Drainage scheme, Tirupathur ... ... ... 116

Harijan Students Hostels, Jolarpet and Natrampalli 149

Sub-Court at Tiruppathur, New Building ... ... 387

RAMASWAMY, THIRU E.—

Water Supply Scheme, Valparai ... ... ... 381—382

REPATRIATES—

Burma Bazaar, number of shops ... ... ... 280—282

RESOLUTIONS—

Ban on setting up of private allopathic Medical Colleges and regulation of such Colleges already set up ... ... ... ... ... 84—109

PAGES

RESOLUTIONS—*cont.*

Katchathivu accord—plea to Central Government for reconsideration and modification ... ... 310—367

REVENUE—

Survey Training, candidates from Kanyakumari district ... ... ... ... ... ... 16—18

ROADS—

Bye-pass road near Virudhunagar, formation ... 128—129

Grand Anicut—Kaveripoompattinam ... ... 382

Mukkarampakkam, taking over by the Highways department ... ... ... ... ... 383—384

New road at Mandapam, formation ... ... 268—269

Paramakudi-Sayalkudi road, widening ... ... 129—130

## S

SADASIVAM, THIRU S.—

House-sites for Harijans in Sendurai Union ... ... 283—284

Water supply schemes, Ponparappi and Sirukalathoor 7

SADIQ PASHA, THIRU S. J.—

Cultivating Tenants (Right to purchase land owner's Rights) Bill, 1975 ... ... ... ... ... ... 410—412, 430—432

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 36—37, 46—48, 49, 50

General Sales Tax (Second Amendment) Bill, 1974 444—445, 450, 451, 455, 459, 461, 462, 463

General Sales Tax (Third Amendment) Bill, 1974 ... 35, 465—467 469—470



PAGES

S—*cont.*

SADIQ PASHA, THIRU S. J.—*cont.*

Payment of Wages (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 409—410

Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... 471—472 501, 502, 503, 504, 505—510

Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1974 ... ... ... ... ... ... 433, 442, 444

SALT—

Production at Tuticorin ... ... ... ... 14

SANGUMUTHU THEVAR, THIRU S.—

Inam Villages, collection of rent by Thiruvavaduthurai Adheenam ... ... ... ... ... 139—140

SATHIAVANIMUTHU, THIRUMATHI—

D.E.E. (First), 1974-75, G.D. ... ... ... 220—229

Katchathivu accord, reconsideration and modification (R) ... ... ... ... ... ... 349—352

Non-submission of a file to Hon. Speaker by Hon. Chief Minister as promised during the discussion on the Supplementary Demands for Grants (Point of order) ... ... ... ... ... 408—409

SCHOOLS—

Primary School under Harijan Welfare Department in Athoor Constituency ... ... ... ... 399

Private students, admission in recognised schools ... 376—378

SERVICES—

Foreign trained Indian Scientists, appointment of ... 371—373

SHANMUGAM, THIRU P. U.—

Boat tragedy in Cooum River (A.M.) ... ... 292—293

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 172

PAGES

S—*cont.*

SHANMUGAM, THIRU P. U:—*cont.*

Failure to take steps for the early release of Cauvery water from Krishnarajasagar (A.M.) ... ... 400—402

SIRAIMEETTAN, THIRU T. K.—

Bridge across Koothan canal ... ... ... ... 130

Paramakudi-Sayalkudi road, widening ... ... 129—130

SONIAH, THIRU T.—

Causeway across Vaigai River, near Madurai—Sellur 277

SOUNDARAPANDIAN, THIRU P.—

College at Manaparai, Tiruchirappalli, starting .. 373—376

Drinking water-supply, Coimbatore ... ... 380—381

Fertilizer Plant, Tuticorin ... ... ... ... 10—14

Harijan Students Hostels, Tiruchirappalli ... ... 150

Kundaru Reservoir Scheme, commencement .. 269—270

Mineral deposits in Salem District ... ... 272

Night bus services, Madras City ... ... ... 144—146

Occurrence of crude oil at Paravakkottai ... ... 270—271

Overbridge near Madras Central Station ... ... 383

Palmyra Products of Tamil Nadu ... ... ... 396—397

Panchayat Unions, bifurcation ... ... ... 19—22

Paramakudi Municipality, New building .. .. 276

Poultry Units, assistance to unemployed youths ... 275—276

Price-ceiling on urban house-sites ... ... 277—280

Sugar Factory, Perambalur ... ... ... 385—386

STADIUM—

Ootacamund ... ... ... ... ... 378—379



PAGES

S—*cont.*

SUBBIAH, Thiru A. K.

D.S.G. (First), 1974-75, G.D. ... .. ... 212—216

Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1974 ... ... ... ... 42—43

SUBRAMANIAM, THIRU A.—

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 201—206, 207—208

Propriety of discussion on Katchathivu by a Government Resolution (Point of Order) ... ... 308—310

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of Term of Office) Third Amendment Bill, 1974 ... 61—64

SUBRAMANIAM, Thiru K. M.

Cultivating Tenants (Right to purchase land owner's Rights) Bill, 1975 ... ... ... ... 416—417, 424

D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 230—231

General Sales Tax (Second Amendment) Bill, 1974 446—447

Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of Term of Office) Third Amendment Bill, 1974 56—60, 79

SUPPU, Thiru K.

New road at Mandapam, formation ... ... 268—269

SURENDRAN, Thiru M.

Boat tragedy in Cooum River (A.M.) ... ... 290—291

T

TANKS

Kanmoi (new) Kilavipatti, Koilpatti Panchayat Union ... ... ... ... ... ... 384

TELEVISION

Set for Madras General Hospital ... ... ... 111—112

PAGES

T—*cont.*

THIRUVENGADAM, Thiru Thoppur—
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 208

TOWN PLANNING
Beautification of Mamallapuram, Master plan ... 7—9

TRANSPORT
Bus Service, Coimbatore-Tiruppur ... ... ... 146—147
Bus Service, Tiruppur-Karur ... ... ... 147—148
Night bus service, Madras City ... ... ... 144—146

TREASURIES
Sub-Treasury, Ottapidaram ... ... ... 256

V

VADIVEL, Thiru S.
Madras City Municipal Corporation and Tamil Nadu Municipalities (Amendment and extension of term of office) Third Amendment Bill, 1974 ... 55—56

VADIVELU, Thiru S. K.
Road-side trees on Kattuputhur-Silaipillayarputhur road, utilisation by private parties .. .. 269

VEERASAMI, Thiru N.
Examinations in Commercial subjects, details ... 121—127
Incorrect information given by Thiru Kovai Chezhian to the House (Point of order) ... ... ... 160
Prohibition (Revival of operation and amendment) Bill, 1974 ... ... ... 491—494

VENKATASWAMY, Thiru B.
Boat tragedy in Cooum River (A.M.) ... ... ... 291
D.S.G. (First), 1974-75, G.D. ... ... ... 199—201
Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of term of office), Third amendment Bill, 1974 ... 70—71



PAGES

V—*cont.*

VEZHAVENDAN, THIRU K.—
Mukkarampakkam Road, taking over by the Highways Department ... ... ... ... ... 383—384
Panchayat Unions, bifurcation ... ... ... 19—22
Rural Industries Project, Chingleput district ... 395—396
Tirukkural research ... ... ... ... 260—261
Water-supply Scheme to Harijan Colonies in Gummidipoondi sub-taluk ... ... ... ... 397—398

W

WAHAB, Thiru K. A.
Ban on setting up of Private allopathic Medical Colleges and regulation of such Colleges already set up (R) ... ... ... ... ... ... 100—101
Causeway across Suga Nathi ... ... ... 277
Cultivating Tenants (Right to purchase Land Owner's Rights), Bill, 1975 ... ... ... ... 423
General Sales Tax (Second Amendment) Bill, 1974 ... 450
451—454
Katchathivu accord—Plea to Central Government for reconsideration and modification (R) ... 326—329
Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and extension of term of office) Third Amendment Bill, 1974 ... 68—70
Prohibition (Revival of Operation and Amendment) Bill, 1974 ... ... ... ... ... 483—487

WATER SUPPLY—
Coimbatore ... ... ... ... ... ... 380—381
Drinking water scarcity in Madras and particularly in Saidapet area (C.A.) ... ... ... 298—301
Harijan Colonies, Gummidipoondi sub-taluk ... 397—398
Harijans of O. Saravanapuram village, Tirunelveli district, provision of drinking water well ... 398—399

PAGES

W—*cont.*

WATER SUPPLY—*cont.*

Kazhukumalai and Ettayapuram Scheme ... ... 4—7

Ponparappi and Sirukalathoor Schemes ... ... 7

Scarcity of drinking water in villages in Muthurangampatti Panchayat, Kulithalai taluk (C.A.) ... 405—406

Scarcity of drinking water in Uppidamangalam Panchayat in Karur Division (C.A.) ... ... 406—408

Scheme at Thamaraipakkam Harijan Colony in Tiruvellore taluk ... ... ... ... ... 398—399

Scheme at Valparai ... ... ... ... 381—382

61673

Y211.31 N74
31N74..5832